தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக

முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக

அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

வீ.லெட்சுமி நாராயணி

பதிவு எண்: 4187

தமிழ்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி – 627 012.

பிப்ரவரி – 2018

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

பாளையங்கோட்டை
நாள்: 02.2018

சான்றிதழ்

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' என்னும் தலைப்பில் **வீ. லெட்சுமி நாராயணி** (பதிவு எண் 4187) என்னால் உருவாக்கப்பட்ட முனைவர்ப்பட்ட ஆய்வானது தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, தமிழ் ஆய்வு மையத்தில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்காக நிகழ்த்தப்பட்டது என்றும் இவ்வாய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளராகிய எனக்கு இதுவரை அளிக்கப்படவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

ஆய்வாளர்
வீ.லெட்சுமி நாராயணி

உறுதிக் கையொப்பம்

நெறியாளர்
முனைவர். இரா.பிரான்சிஸ் சேவியர்,
இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்,
தமிழ்த்துறை,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – 627 002.

நன்றியுரை

இந்த ஆய்வேடு உருவாக்கத்திற்குத் துணை நின்றோர் பலர்.

என்னை முனைவராக்க முப்பொழுதும் முனைப்போடு முயன்றவர்கள் என் பெற்றோர்கள். என் தந்தை **திரு.சு.வீரபாகு மூர்த்தி,** என் தாய் **திருமதி வீ.தேவகுஞ்சரி** இருவருக்கும் என் இதயம் நிறைந்த நன்றி!

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும் தலைப்பில் என் ஆய்வுச் சிந்தனை உயிரோட்டம் பெற உரமிட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு என் உளமார்ந்த நன்றி!

பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளராக என்னை ஏற்று, என் ஆய்வு முழுமைபெற நவீனச் சிந்தனைகளை நயமாக எடுத்தோதும் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரிக்கும் முதல்வர் **அருட்தந்தை வி. பிரிட்டோ வின்சென்ட், சே.ச.,** அவர்களுக்கும் என் கனிவான நன்றி!

இந்த ஆய்வேடு உயிர்கொள்ள ஆண்டுகள் கடந்தாலும் என் மீது அசையாத நம்பிக்கை கொண்டு என் ஆய்வுக்கும், என் முயற்சிக்கும் நல்வழிகாட்டியாக செயலாற்றி வரும் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர். இரா.பிரான்சிஸ் சேவியர்** அவர்களுக்கு என் முத்தாய்ப்பான நன்றி!

இந்த ஆய்விற்கான பல்வேறு தரவுகளையும், என் உள்ளத்தில் நாள்தோறும் புதுச்சிந்தனை வரவுகளையும் வழங்கி, எனக்கு நம்பிக்கை அளித்த பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் மு. அருணாசலம்** அவர்களுக்கு நன்றி நவில்வதில் மகிழ்கிறேன்.

அன்று மாணவியாய் நான் பயில இடம் கொடுத்து, இன்று பேராசிரியராய் நான் பணியாற்றவும் இடம் கொடுத்த எம் கோவிந்தம்மாள்

ஆதித்தனார் மகளிர் கல்லூரி நிறுவனர் **பத்மஸ்ரீ டாக்டர். சிவந்தி ஆதித்தன்** அவர்களுக்கும் மதிப்பிற்குரிய **திரு. பாலசுப்பிரமணிய ஆதித்தன்** அவர்களுக்கும், எப்பொழுதும் என்னை ஊக்குவிக்கும் செயல் ஊக்கியான எம் கல்லூரி முதல்வர் **முனைவர். பொ. ஜெயந்தி** அவர்களுக்கும் என் பணிவான நன்றி!

இன்முகத்தோடு இந்த ஆய்வேட்டினை ஆராய்ந்து துரிதமாக ஒற்றுப் பிழைகளை ஒற்றி எடுத்த எம் கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர். இரா.ஜான்ஸிராணி** அவர்களுக்கும், என்மீது மாறா அன்பு பாராட்டும் எம் துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் உளம் கனிந்த நன்றி!

அவ்வப்போது என் சிந்தையில் சிந்தனை விதைகளைத் தூவிய **முனைவர். வெ. முனிஷ், முனைவர். மு. இராமசுவாமி, முனைவர். ச. கந்தன், கவிஞர். சுரா, கவிஞர். பேரா, திரு.எஸ். அர்ஷியா, திரு. பொன்குமார், முனைவர். இரா. ஆண்டாள், முனைவர் கோ. ஜெயலெட்சுமி, திருமதி. ச. முத்துமாலா** ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி!

எந்நாளும் என் நலனில் அக்கறை கொள்ளும் **முனைவர் ச. ஸ்ரீமதி, சகோதரர்கள் மு. தியாகராஜன், சூ. இதயராஜா மற்றும் பாசமிகு திருமதி. ச. சாந்தி சந்திரசேகர்** ஆகியோருக்கு என் அன்பு நிறைந்த நன்றி!

நேரம் பாராது நல்லமுறையில் நேர்காணல் வழங்கிய **சகோதரி திருநங்கை எழுத்தாளர் ப்ரியாபாபு, திருநங்கை நடனக்கலைஞர் நர்த்தகி நடராஜ், திருநங்கை செய்தி வாசிப்பாளர் பத்மினி, திருநங்கை ப்ரீத்தி, திருநங்கை இரகசியா** ஆகியோருக்கும் என் ஆத்மார்த்தமான நன்றி!

எந்நாளும் என் வளர்ச்சியில் அளவில்லா மகிழ்ச்சி கொள்ளும் **திரு. எஸ்.ஆர்.சுப்பிரமணிய ஆதித்தன், அருட்தந்தை மா.அல்போன்ஸ் மாணிக்கம் சே.ச., முனைவர் இரா.சுதமதி, திருமதி வெ.சுபா, ச. கிருத்திபா, இரா.மங்களம், மு.திவ்யா, சே. சோபியா, தி. நந்தினி, பி.வசந்தி, ச.மனோ**

ஆகியோருக்கும் என்றும் என் நினைவில் வாழும் **செல்வி.அ. மார்ட்டிக்கும்** மற்றும் என் சக தோழமைகளுக்கும், உன்னத உறவுகளுக்கும் என் மனம் நிறைந்த நன்றி!

தயக்கமின்றித் தரவுகளைத் திரட்டிக் கொடுத்த பேராசிரியர் **முனைவர்.இரா.மங்களேஸ்வரி, முனைவர். ஜெ. ஆனந்தி பானு, என் அன்பு மாணவியர், ஜே.ஜோஸ்லின், ம.சித்ரலதா, ச.முத்து சுகன்யா, சு.முத்துப்பேச்சி, ந.வனச்செல்வி, லெ.புவனேஸ்வரி, பா.இராஜேஸ்வரி** ஆகியோருக்கு என் கனிவான நன்றி!

இந்த ஆய்வுக்காக எத்தனை முறை கேட்டாலும் அத்தனை நூல்களையும் பொறுப்பாகக் கொடுத்து உதவிய எம். கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி நூலக மேலாளர் **ச. உண்ணாமுலை,** நூலகப் பொறுப்பாளர் **சி.அனிதா** ஆகியோருக்கும் திருச்செந்தூர், காயல்பட்டணம், திருநெல்வேலி மாவட்ட நூலகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி!

உதிரியாக இருந்த என் ஆய்வுச் சிந்தனைகளை உரிய நேரத்தில் ஒருசேர நல்ஆய்வேடாக உருமாற்றிய **நான்சி** கணினி நிறுவனத்தாருக்கும் என் உளமார்ந்த நன்றி!

நிறைவாக என்றும் என் நன்றிக்கு உரியவர்கள் இவர்கள். தன் தாரத்தின் உயர்வைத் தன் உயர்வாகக் கொண்டாடும் என் அன்புக் கணவர் **கா.ராஜகணேஷ்** அவர்களுக்கும், நாள்தோறும் தன் மழலை மொழியில் நான் முனைவராக வேண்டும் என்று பிரார்த்திக்கும் என் அன்புச் செல்வங்கள் **ரா. ஸ்ரீநிதி, ரா.ஸ்ரீநிகேதன்** ஆகியோருக்கும் என் செல்ல மருமகள்கள் **மு.மித்ரா, மு. திரியம்பிகாவிற்கும்** என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி!

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

இ.ஆ.	– இதழ் ஆசிரியர்
இ.ப.	– இரண்டாம் பதிப்பு
உ.ஆ.	– உரை ஆசிரியர்
கு.அ.	– குறி அறுத்தேன்
த.மே.	– தமிழாக்க மேற்பார்வையாளர்
தொ.ஆ.	– தொகுப்பு ஆசிரியர்
நா.இ.நா.	– நானும் இன்னொரு நானும்
நூ.	– நூற்பா
ப.	– பக்கம்
பக்.	– பக்கங்கள்
ப.ஆ.	– பதிப்பு ஆசிரியர்
பொ.ஆ.	– பொறுப்பு ஆசிரியர்
மீ.ப.ஆ.	– மீன் பதிப்பு ஆசிரியர்
மு.கூ.இ.	– முற்கூறிய இதழ்
மு.கூ.நூ.	– முற்கூறிய நூல்
மு.ப.	– முதல் பதிப்பு
மேலது.	– மேற்சுட்டிய நூல்
வ.எ.	– வரிசை எண்
p.	- page

பொருளடக்கம்

	இயல்கள்	பக்கங்கள்
0.	ஆய்வு முன்னுரை	01 – 08
1.	தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்	09 – 105
2.	தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் வாழ்வியல்	106 – 176
3.	தமிழ்ச் சிறுகதை நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்	177 – 251
4.	இனவரைவியல் நோக்கில் திருநங்கையர் பதிவுகள்	252 – 354
0.	ஆய்வு முடிவுரை	355 – 362
	துணைநூற்பட்டியல்	363 – 380

பின்னிணைப்புகள்

1. புகைப்படங்கள்
2. நேர்காணல்கள் — v - xxxvii
3. நாளிதழ் செய்திகள்
4. ISBN எண்ணுடன் வெளிவந்த ஆய்வாளரின் கட்டுரைகள்
5. தன் ஆளுமைக் குறிப்பு

0. ஆய்வு முன்னுரை

0.0 முன்னுரை

0.2 ஆய்வுத் தலைப்பு

0.3 ஆய்வு நோக்கம்

0.4 முன் ஆய்வுகள்

0.5 முன்னோடி ஆய்வு நூல்கள்

0.6 ஆய்வு எல்லை

0.7 ஆய்வு வகை

0.8 ஆய்வுக் கருதுகோள்

0.9 ஆய்வு மூலங்கள்

0.10 ஆய்வு அணுகுமுறை

0.11 ஆய்வு பகுப்பு முறை

0.12 ஆய்வுப் பகுப்பு விளக்கம்

0.12.1 இயல் – 1

0.12.2 இயல் – 2

0.12.3 இயல் – 3

0.12.4 இயல் – 4

0.13 முடிவுரை

0.14 சான்றெண் விளக்கம்

0.15 துணைநூற்பட்டியல்

0.16 பின்னிணைப்புகள்

1. தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

1.0 முன்னுரை

1.1 புதுக்கவிஞர்களின் பார்வைப் போக்கு

1.1.1 மறுமலர்ச்சிக் கவிஞர்கள் பார்வையில் திருநங்கையர்

1.1.1.1 பாரதியார் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

1.1.1.1.1 அலி, பேடி – கருத்தாக்கம்

1.1.1.2 பாரதிதாசன் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

1.1.1.3 ச.து.சு. யோகியாரின் கவிதையில் திருநங்கையர்

1.1.1.4 கண்ணதாசன் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

1.1.2 புதுக்கவிஞர்கள் பார்வையில் திருநங்கையர்

1.1.2.1 திருநங்கையரும் மரபணு மாற்றமும்

1.1.2.1.1 பாலினத்தை நிர்ணயிக்கும் மரபணுக்கள்

1.1.2.1.2 ஆண் – பெண் மரபணுக்கள்

1.1.2.1.3 மரபணு மாற்றத்தின் விளைவுகள்

1.1.2.1.4 ஹார்மோன் குறைபாடு

1.1.2.1.5 திருநங்கையர் பிறப்பும் இயற்கையும்

1.1.2.1.6 திருநங்கையரும் இறைவன் படைப்பும்

1.1.2.2 திருநங்கையரும் குடும்பப் புறக்கணிப்புகளும்

1.1.2.3 திருங்கையரும் பெண்மை உணர்வுகளும்

1.1.2.3.1 புறத்தோற்றத்தில் வெளிப்படும் பெண்மையுணர்வு

1.1.2.3.2 அகத்தோற்றத்தில் வெளிப்படும் பெண்மை உணர்வு

1.1.2.4 திருநங்கையரும் சமுதாயப் பார்வைகளும்

1.1.2.4.1 சமூகம், சமுதாயம் – சொற்பொருள் விளக்கம்

1.1.2.4.2 உணர்விற்குத் திரையிடல்

1.1.2.4.3 சமூகக் கண்ணோட்டம்

1.1.2.4.4 மரித்துப்போன மனிதநேயம்

1.1.2.4.5 இழிசொற்களால் அழைத்தல்

1.1.2.4.6 திருநங்கையரைக் குறிக்கும் சொற்கள்

1.1.2.4.7 பெயர் மாற்றம்

1.1.2.5 திருநங்கையரும் ஆண்மையவாத எதிர்ப்பும்

1.1.2.5.1 திருநங்கையரின் மீதான வன்புணர்வு

1.1.2.5.2 ஆண்கள்மீது வன்மம்

1.1.2.5.3 ஆணுருவை வெறுத்தல்

1.1.2.6 திருநங்கையரும் வாழ்வியல் சிக்கல்களும்

1.1.1.2.6.1 திருநங்கையர் தனிமைப்படுத்தப்படுதல்

1.1.2.6.2 வலி நிறைந்த வாழ்க்கை

1.1.2.6.3 இருப்பும் எதிர்ப்பும்

1.1.2.6.4 திருநங்கையரும் குடியிருப்பின்மையும்

1.1.2.6.5 திருநங்கையரும் கல்வி மறுப்பும்

1.1.2.6.6 திருநங்கையர் உரிமைகளும் உரிமை மறுப்புகளும்

1.1.2.6.7 திருநங்கையரும் அரசின் பாராமுகமும்

1.1.2.6.8 திருநங்கையரும் அரசின் நலத்திட்டங்களும்

1.1.2.7 திருநங்கையரும் பாலுணர்வும்

1.1.2.8 திருநங்கையரும் சமத்துவமும்

1.1.2.8.1 சாதியப் பிரிவினையைச் சாடல்

1.1.2.8.2 சமுதாயச் சாடல்

1.1.2.8.3 தோழமையைப் போற்றல்

1.1.2.9 திருநங்கையரும் தன்னம்பிக்கையும்

1.1.2.10 திருநங்கையரும் பிறப்புப் பெருமைகளும்

1.1.2.10.1 படைப்பாளிகள் திருநங்கையரைப் போற்றல்

1.2 தொகுப்புரை

2. தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் வாழ்வியல்

2.0 முன்னுரை

2.1 திருநங்கையர் புதினங்களின் கதைச் சுருக்கம்

2.1.1 'வாடாமல்லி' புதினத்தின் கதை அமைப்பு

2.1.2 'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தின் கதையமைப்பு

2.1.3 'அவன் – அது = அவள்' புதினத்தின் கதை அமைப்பு

2.1.4 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தின் கதையமைப்பு

2.1.5 ' கமலி' புதினத்தின் கதையமைப்பு

2.1.6 'பூமி வசப்படுமே' புதினத்தின் கதையமைப்பு

2.1.7 'உன்னைவிட்டு விலகுவதில்லை' கதையமைப்பு

2.1.8 'மாலைகள்' புதினத்தின் கதையமைப்பு

2.2 அன்பும் ஆதரவும்

2.2.1 தாயன்பும் ஆதரவும்

2.2.2 சகோதர அன்பு

2.2.3 தோழமை அன்பு

2.2.4 குடும்ப ஆதரவு

2.2.5 சமூக ஆதரவு

2.3 சிக்கல்களும், எதிர்கொள்ளலும்

2.3.1 வாழிடச் சிக்கல்கள்

2.3.2 பொதுப் பயன்பாட்டுச் சிக்கல்கள்

2.3.3 கழிப்பறை உபயோகம்

2.3.4 திருமணச் சிக்கல்கள்

2.3.5 பணியிடச் சிக்கல்

2.3.6 உறவு நிலைக்குள் ஏற்படும் சிக்கல்

2.3.7 திருநங்கையர் சமூகத்துள் ஏற்படும் சிக்கல்கள்

2.4 உளநிலையும் உணர்வுகளும்

2.4.1 பெண்மை உணர்வுகள்

2.4.2 காதல் உணர்வுகள்

2.4.3 காதல் திருமண ஏமாற்றம்

2.4.4 தற்கொலை முயற்சியில் ஈடுபடல்

2.4.5 உணர்வுகளை மறுதலித்தல்

2.5 புறக்கணிப்புகளும் போராட்டங்களும்

2.5.1 குடும்பப் புறக்கணிப்பு

2.5.2 சமூகப் புறக்கணிப்பு

2.5.3 கேலியும் கிண்டலும்

2.5.4 பாலியல் சீண்டல்கள்

2.5.5 காவலர்களின் வன்முறை

2.6 திருநங்கையரும், சாதனைகளும்

2.6.1 கல்வியைத் தொடரல்

2.6.2 திருநங்கையர் சமூகத்தை நிலைநிறுத்தல்

2.6.3 மருத்துவச் சாதனை

2.7 தொகுப்புரை

3. தமிழ்ச் சிறுகதை, நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்

3.0 முன்னுரை

3.1 திருநங்கையர் சிறுகதைகளின் கதைச்சுருக்கம்

3.1.1 கோமதி

3.1.2 மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து

3.1.3 வக்கிரம்

3.1.4 இப்படியும்

3.1.5 கள்ளிப்பூ

3.1.6 தொலைந்த முகம்

3.1.10 ஒட்டம்

3.1.9 ஊர்களில் அரவாணி

3.1.12 நாயிவாயிச் சீல

3.1.13 பால்ஊனம்

3.1.15 துலாமுள் இச்சை

3.1.15 அகநங்கை

3.1.17 வனம்புகுதல்

3.1.19 தோழி

3.1.18 சாமியைக் காணவில்லை

3.1.20 தேடல்

3.1.7 கூத்தாண்டவன்

3.2.10 ஊமங்காடை

3.1.14 நீளும் கனவு

3.1.8 ஆச்சிமுத்து

3.2 திருநங்கையர் நாடகங்களின் கதைச் சுருக்கம்

3.2.1 மனசின் அழைப்பு

3.2.2 மாற்றம் நாடகத்தின் கதையமைப்பு

3.2.3 உறையாத நினைவுகள்

3.2.4 அரவான் நாடகத்தின் கதையமைப்பு

3.2.5 வலி அறுப்பு நாகடத்தின் கதையமைப்பு

3.3 உணர்வுப் போராட்டம்

3.3.1 பெண்மை உணர்வுப் போராட்டம்

3.3.2 பாலின மாற்ற உணர்வுப் போராட்டம்

3.3.3 காதலுணர்வுப் போராட்டம்

3.3.4 திருமண உணர்வுப் போராட்டம்

3.3.5 பாலுணர்வுப் போராட்டம்

3.3.6 தாய்மை உணர்வுப் போராட்டம்

3.3.7 தோழமை உணர்வுப் போராட்டம்

3.3.8 மனிதநேய உணர்வுப் போராட்டம்

3.3.9 தன்மான உணர்வுப் போராட்டம்

3.3.10 இயலாமை உணர்வுப் போராட்டம்

3.4 உரிமைப் போராட்டம்

3.4.1 வாழிட உரிமைப் போராட்டம்

3.4.2 கல்வி உரிமைப் போராட்டம்

3.4.3 அரசு நல உரிமைப் போராட்டம்

3.4.4 பணி உரிமைப் போராட்டம்

3.4.5 பயண உரிமைப் போராட்டம்

3.4.6 பொதுப் பயன்பாட்டு உரிமைப் போராட்டம்

3.4.7 சாதிய நிலை உரிமைப் போராட்டம்

3.4.8 இடுகாட்டு உரிமைப் போராட்டம்

3.4.9 வாழ்வுரிமைப் போராட்டம்

3.4.10 உரிமை மீட்புப் போராட்டம்

3.5 தொகுப்புரை

4. இனவரைவியல் நோக்கில்
திருநங்கையர் பதிவுகள்

4.0 முன்னுரை

4.1 இனவரைவியல் – கருத்தாக்கம்

4.2 தொன்மங்கள் – வரையறை

4.2.1 கிரேக்கத் தொன்மம்

4.2.2 திருமால் அவதாரத் தொன்மம்

4.2.3 அர்த்தநாரீசுவரர் தொன்மம்

4.2.4 மகாபாரதத் தொன்மம்

4.2.4.1 அர்ஜுனன் திருநங்கையாதல்

4.2.1.2 அம்பை சிகண்டியாதல்

4.2.5 இராமாயணத் தொன்மம்

4.2.5.1 கம்பராமாயணத்தில் திருநங்கையர்

4.2.6 வரலாற்றுப் பதிவுகளில் திருநங்கையர்

4.2.7 அரவான் தொன்மம்

4.2.8 பகுச்ராஜீ மாதா தொன்மம்

4.2.9 எல்லம்மா தொன்மம்

4.2.10 விவிலியத்தில் திருநங்கையர்

4.2.11 நபிமொழியில் திருநங்கையர்

4.2.12 இலக்கணங்களில் திருநங்கையர்

4.2.12.1 தொல்காப்பியம்

4.2.12.2 நன்னூல்

4.2.12.3 எழுத்துக்களில் மூன்றாம் பாலினம்

4.2.13 சங்க இலக்கியங்களில் திருநங்கையர்

4.2.13.1 அகநானூற்றில் திருநங்கையர்

4.2.14 நீதி இலக்கியங்களில் திருநங்கையர்

4.2.14.1 திருக்குறள்

4.2.14.2 நாலடியார்

4.2.15 காப்பியங்களில் திருநங்கையர்

4.2.15.1 சிலப்பதிகாரம்

4.2.15.2 மணிமேகலை

4.2.16 தனிப்பாடல் திரட்டு

4.2.17 சித்தர் பாடல்களில் திருநங்கையர்

4.3 சடங்குகள்

4.3.1 தத்துச் சடங்கு

4.3.2 அறுவை மருத்துவச் சடங்கு

4.3.2.1 தாயம்மா நிர்வாணம்

4.3.2.2 மருத்துவ நிர்வாணம்

4.3.3 பாலூற்றும் சடங்கு

4.3.4 தாலி கட்டும் சடங்கு

4.3.5 இறப்புச் சடங்கு

4.3.6 ரொட்டிச் சடங்கு

4.4 வழிபாடு

4.4.1 போத்திராஜீ மாதா

4.4.2 அரவான் வழிபாடு

4.5 பாடல்கள்

4.6 நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

4.6.1 வழிபாடுசார் நம்பிக்கை

4.6.2 அறுவை மருத்துவம்சார் நம்பிக்கை

4.6.3 ஆடைசார் பழக்க வழக்கம்

4.6.4 உணவுசார் பழக்கவழக்கம்

4.6.5 மரபுசார் பழக்கவழக்கம்

4.7 உறவு முறையும் குடும்ப அமைப்பும்

4.7.1 குடும்ப அமைப்பு

4.7.2 சமூக அமைப்பு

4.8 மொழி

4.8.1 சடங்கு முறை சார்ந்த கலைச் சொல்லாக்கம்

4.8.2 பாலியல் சார்ந்த கலைச் சொல்லாக்கம்

4.8.3 பொதுப் பயன்பாடு சார்ந்த கலைச் சொல்லாக்கம்

4.9 தொழில்கள்

4.9.1 முதன்மைத் தொழில்கள்

4.9.1.1 கடை கேட்டலும், பிச்சையெடுத்தலும்

4.9.1.2 பாலியல் தொழில்

4.9.2 துணைமைத் தொழில்கள்

4.9.2.1 பாடல்

4.9.2.2 நடனம்

4.9.2.3 நாடகம்

4.9.2.4 சமையல்

4.9.2.5 பூ கட்டுதல்

4.9.2.6 பல தொழில்

4.9.3 பிற தொழில்கள்

4.9.3.1 ஆசிரியப்பணி

4.9.3.2 வங்கிப் பணி

4.9.3.3 அரசியல் பணி

4.9.3.4 சமூகப்பணி

4.10 தொகுப்புரை

இயல் – 0

ஆய்வு முன்னுரை

இயல் – 1

தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 2

தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் வாழ்வியல்

இயல் – 3

தமிழ்ச் சிறுகதை நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 4

இனவரைவியல் நோக்கில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 0

ஆய்வு முடிவுரை

துணை நூற்பட்டியல்

பின்னிணைப்புகள்

1. புகைப்படங்கள்

2. நேர்காணல்கள்

3. நாளிதழ் செய்திகள்

4. ISBN எண்ணுடன் வெளிவந்த ஆய்வாளரின் கட்டுரைகள்

5. தன் ஆளுமைக் குறிப்பு

இயல் – 0
ஆய்வு முன்னுரை

0.0 முன்னுரை

தமிழ் நவீன இலக்கியங்கள் திருநங்கையர்களின் வாழ்வியல் சிக்கல்களில் கவனம் செலுத்தி படைப்பிலக்கியங்களில் பதிவு செய்து வருகின்றன. அதிகாரச் சமூக அமைப்பின் ஒடுக்குதல்களுக்கு ஆட்பட்ட விளிம்பு நிலை மக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் 'திருநங்கையர்'. ஆண், பெண் இனப்பாகுபாடு தோன்றிய நாள்முதலே திருநங்கையரும் ஒரு அங்கத்தினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழின் முதல் இலக்கண நூலான 'தொல்காப்பியம்' துவங்கி நவீன இலக்கியப் பதிவுகள்வரை திருநங்கையர்கள் குறித்து தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவாகி உள்ளன. மரபணு மாற்றமே இவர்களின் பாலின மாற்றத்திற்குக் காரணம் என்பதைக் கற்றோரும், பாமரரும் உணரத் தவறுகின்றனர். நம்மோடு பிறந்து நம்மோடு வளர்ந்தாலும் அவர்களை நாம் பார்க்கும் பார்வையும், அணுகும் முறையும் முரண் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. குடும்பத்தாலும், சமூகத்தாலும் புறக்கணிப்பு நிலைக்கு ஆளாகும் இவர்கள் வேறுவழியின்றி பிச்சையெடுத்தலுக்கும், பாலியல் தொழிலுக்கும் தள்ளப்படுகின்றனர். பெரும்பான்மையாக இவ்வாறு இருப்பினும் சிறுபான்மையாக தற்போது கல்வியறிவு பெற்று நன்னிலை எய்தியுள்ளனர். அடிப்படை உரிமைகள், அடையாள உரிமைகள் துவங்கி, வாழ்வில் எல்லா உரிமைகளையும் போராடியே பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். திருநங்கையர் படைப்பாளர்களும் திருநங்கையர் அல்லாத படைப்பாளர்களும் திருநங்கைகளை மையமிட்டு படைப்புகளை உருவாக்கி வருகின்றனர். புராணம், இதிகாசம், வரலாறு மரபிலக்கியங்கள் இவற்றில் திருநங்கையர் பற்றிய பதிவுகள் இருந்த போதிலும், தமிழ் நவீன இலக்கியங்கள், அவர்களின் வாழ்வியல்

சிக்கல்களை அதிகம் பேசுகின்றன. அவ்வகையில் தமிழ் நவீன இலக்கியங்களை மையமாக வைத்து திருநங்கையர் வாழ்வியல் சிக்கல்களை வெளிக்கொணர இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

0.2 ஆய்வுத் தலைப்பு

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' என்பது இவ்வாய்வின் தலைப்பு ஆகும்.

0.3 ஆய்வு நோக்கம்

ஒவ்வொரு ஆய்விற்குப் பின்னும் அதன் பின்புலம் குறித்தும் அதை மேற்கொள்ள வேண்டிய நோக்கம் குறித்தும் அறிவது அவசியம். 'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை' என்று கற்ற நாம் பிறப்பால் பிறழ்ந்தவர்களை வேறுபாடாகக் கருதுவது தவறாகும். 'திருநங்கையரும் நம்மில் ஒருவரே' என்று நாம் உணர வேண்டும். திருநங்கையரின் வெளி, இருப்பு, இயங்குதளம், வாழ்வியல் சிக்கல்கள் குறித்து அறிவது அவசியமானது. திருநங்கையருக்கென்று தனித்த உலகத்தை அவர்களே உருவாக்கிக் கொண்டு வாழ்கின்றனர். நவீன இலக்கிய வடிவங்களான புதுக்கவிதை, புதினம், சிறுகதை, நாடகங்களை மையமாகக் கொண்டு திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வுகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

0.4 முன் ஆய்வுகள்

திருநங்கையர் இனம் தனித்த விளிம்பு நிலை இனமாகவே பார்க்கப்பட்டு வருகின்றது. திருநங்கையர் குறித்து முன்னாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1) **ஆ.முருகன் - 'தமிழ்ப் புதினங்களில் திருநங்கையரின் வாழ்வியல்'**, முனைவர் பட்ட ஆய்வேடு, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை. ஏப்ரல் - 2014.

2) **கா.அழகிரிசாமி – 'தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அரவாணிகளின் வாழ்வியல் சிக்கல்கள்'**, பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி, ஆகஸ்ட்-2015.

3) **சு.சாந்தி, தமிழ்ச் சிறுகதைகளில் அரவாணிகளின் வாழ்வியல் சிக்கல்களும் தீர்வுகள்,** முனைவர் பட்ட ஆய்வேடு, பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி, ஜனவரி - 2017.

0.5 முன்னோடி ஆய்வு நூல்கள்

1. பிரியா பாபு, அரவாணிகள் சமூக வரைவியல் - அக்டோபர் - 2007.

2. மகராசன், (தொ.ஆ.), அரவாணிகள் - உடலியல் - உளவியல் - வாழ்வியல் - டிசம்பர் - 2007.

3. வெ. முனிஷ், தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள் -2008.

4. சூ.ம. ஜெயசீலன், திருநங்கையர் - வாழ்வியல் - இறையியல் - டிசம்பர் 2010.

5. கி அய்யப்பன், அரவாணியம், ஜூன்-2012.

6. பத்மபாரதி, திருநங்கையர் சமூக வரைவியல், டிசம்பர். 2013.

7. மு.அருணாசலம், அரவாணிகள் சங்ககாலம்முதல் நவீன இலக்கியங்கள் வரை - ஜனவரி. 2016

ஆகிய முன்னோடி நூல்கள் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

0.6 ஆய்வு எல்லை

திருநங்கையர் பற்றி எழுந்துள்ள கவிதை நூல்கள்,

1. ஆண்டாள் பிரியதர்ஷினி - நானும் இன்னொரு நானும்

2. கல்கி (திருநங்கை) - குறி அறுத்தேன்

திருநங்கையரை மையமாகக் கொண்டு எழுந்த புதினங்கள்,

1. சு. சமுத்திரம் - வாடாமல்லி

2. ஆண்டாள் பிரியதர்ஷினி - கனவுகள் கைப்பிடிக்குள்

3. யெஸ். பாலபாரதி - அவன் - அது = அவள்

4. பிரியா பாபு - மூன்றாம் பாலின் முகம்

5. அழகிரி விஸ்வநாதன் - கமலி

6. குமாரதேவி - பூமி வசப்படுமே

7. எஸ். செல்வசுந்தரி - உன்னை விட்டு விலகுவதில்லை

8. போந்தூர் கனகசுந்தரம் - மாலைகள்

மேலும் பல்வேறு காலகட்டங்களில் வெளிவந்த இருபது சிறுகதைகளும், ஐந்து நாடகங்களும் இவ்வாய்விற்கு உட்படுத்தப்படுள்ளன.

0.7 ஆய்வு வகை

இந்த ஆய்வு **'இருக்கை'** மற்றும் **'கள ஆய்வு'** வகைகளைச் சார்ந்ததாகும்.

0.8 ஆய்வுக் கருதுகோள்

*** திருநங்கையர் எனப்படும் தனித்த இனக்குழுவின் வாழ்வியல் வழக்காறுகள் சமூகத்தவரிடமிருந்து வேறுபட்டிருக்கிறது.**

*** திருநங்கையர் பற்றிய புரிதல்கள் சமூகத்தவரிடம் உரிய அளவு இல்லை ஆகியன இந்த ஆய்வின் கருதுகோள்கள் ஆகும்.**

*** தமிழ் நவீன இலக்கியங்கள் திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்களை உணர்வு சார்ந்து அணுகுகின்றன.**

0.9 ஆய்வு மூலங்கள்

திருநங்கையர் பற்றி வெளிவந்துள்ள கவிதை நூல்கள், புதினங்கள், சிறுகதைகள் மற்றும் நாடகங்கள் ஆகியன முதன்மை ஆய்வு மூலங்களாகவும், திருநங்கையர் பற்றிய திறனாய்வு நூல்கள், கட்டுரைகள், ஊடகச் செய்திகள் ஆகியன துணைமை ஆய்வு மூலங்களாகவும் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

0.10 ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வில் பகுப்பாய்வு, சமூகவியல் ஆய்வு மற்றும் இனவரைவியல் ஆகிய ஆய்வு அணுகுமுறைகளும், திருநங்கையர்களிடம் நேர்காணல்கள், திருநங்கையர் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்றதால் களஆய்வுகள் ஆகிய ஆய்வு அணுகுமுறைகள் இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளன.

0.11 ஆய்வு பகுப்பு முறை

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் – 1 தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 2 தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 3 தமிழ்ச் சிறுகதை நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்

இயல் – 4 இனவரைவியல் நோக்கில் திருநங்கையர் பதிவுகள்

0.12 ஆய்வுப் பகுப்பு விளக்கம்

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும் இவ்வாய்வின் முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், முன்

ஆய்வுகள், ஆய்வு எல்லை, கருதுகோள், ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்புமுறை, ஆய்வுப் பகுப்பு விளக்கம் போன்ற பகுதிகள் இடம்பெறுகின்றன.

0.12.1 இயல் – 1

'தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்' எனும் முதல் இயல் மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்களின் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பற்றிய பார்வைப் போக்குகள், அலி, பேடி குறித்த கருத்தாக்கங்கள், திருநங்கையரும் மரபணு மாற்றமும், மரபணு மாற்றத்தின் விளைவுகள், திருநங்கையரும் குடும்பப் புறக்கணிப்புகளும், பெண்ணுணர்வு வெளிப்பாடு, திருநங்கையர் மீதான சமுதாயப் பார்வைகள், திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்கள், பாலுணர்வுச் சிக்கல்கள், திருநங்கையர் சமத்துவம், திருநங்கையரின் தன்னம்பிக்கை வெளிப்பாடு, திருநங்கையரின் பிறப்பு, பெருமைகள் ஆகியவை தமிழ்ப் புதுக்கவிதைகளில் பதிவாகி உள்ளதை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

0.12.2 இயல் – 2

'தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும் இரண்டாவது இயல் திருநங்கையர் குறித்த புதினங்களின் கதைச் சுருக்கம், திருநங்கையர் மீதான அன்பு ஆதரவு, திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்கள், அவற்றை அவர்கள் எதிர்கொள்ளும் விதம், திருநங்கையருக்குள் இருக்கும் உளநிலை, உணர்வுகள், திருநங்கையரைப் புறக்கணிக்கும் போக்கு, அவர்களது போராட்டங்கள், திருநங்கையரின் சாதனைகள் போன்ற பல்வேறு பதிவுகள் திருநங்கையர் இனப் புதினங்களில் இடம் பெற்றுள்ளதை ஆராய்கின்றது.

0.12.3 இயல் – 3

'தமிழ்ச் சிறுகதை நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும்

மூன்றாவது இயல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சிறுகதை, நாடகங்களின் கதைச் சுருக்கம், திருநங்கையரின் பெண்மை உணர்வு, பாலின மாற்ற உணர்வு, காதலுணர்வு, திருமண உணர்வு, பாலுணர்வு, தாய்மை உணர்வு, தோழமை உணர்வு, மனிதநேய உணர்வு, தன்மான உணர்வு, இயலாமை உணர்வுப் போராட்டங்கள் மற்றும் வாழிட உரிமை, கல்வி உரிமை, அரசு நலஉரிமை, பணி உரிமை, வாழ்வுரிமை, உரிமை மீட்புப் போராட்டங்கள் ஆகியவை தமிழ்ச் சிறுகதை, நாடகங்களில் பதிவாகி உள்ளவற்றை எடுத்துரைக்கின்றது.

0.12.4 இயல் – 4

'இனவரைவியல் நோக்கில் திருநங்கையர் பதிவுகள்' எனும் நான்காவது இயல், திருநங்கையர் பற்றிய தொன்மக் கதைகள், அவர்கள் இனத்திலுள்ள சடங்கு முறைகள், வழிபாட்டு முறைகள், பாடல்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், அவர்களின் உறவு முறைகள், குடும்ப சமூக அமைப்பு, அவர்கள் பேசும் மொழி, அவர்களின் தொழில் நிலைகள் போன்ற திருநங்கையரின் இனவரைவியல் கூறுகள் பற்றி ஆராய்கின்றது.

0.13 முடிவுரை

ஆய்வேட்டில் பகுக்கப்பட்டுள்ள நான்கு இயல்களின் வாயிலாகப் பெறப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுக்கப்பட்டு ஆய்வு முடிவுரையில் மெய்மைகளாகத் தரப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் நிகழ்த்த வேண்டிய மேலாய்வுக் களங்கள் ஆய்வு முடிவுரைக்குப்பின் தரப்பட்டுள்ளன.

0.14 சான்றெண் விளக்கம்

ஆய்வேட்டில் கையாளப்பட்டுள்ள மேற்கோள்கள் குறித்த ஆசிரியர் பெயர், நூலின் பெயர், நாளிதழ் மற்றும் சிற்றிதழ் பெயர், பக்க எண் ஆகிய

வரிசையில் சான்றெண் விளக்கம் அனைத்து இயல்களின் முடிவிலும் தரப்பட்டுள்ளது.

0.15 துணைநூற்பட்டியல்

இந்த ஆய்விற்குத் துணைநின்ற திருநங்கையர் பற்றிய முதன்மை மற்றும் துணைமை நூல்கள், அகராதிகள், நாளிதழ்கள், சிற்றிதழ்கள், பருவ இதழ்கள், இணையத் தளங்கள் ஆகியன அகரநிரல் அடிப்படையில் துணைநூற்பட்டியலில் அமைகின்றன.

0.16 பின்னிணைப்புகள்

ஆய்விற்குத் துணை செய்த களஆய்வுகளான திருநங்கையர் மற்றும் படைப்பாளர்களுடனான நேர்காணல்கள், புகைப்படங்கள், ஆய்வாளரின் ஆய்வுக் கட்டுரைகள், நாளிதழ் செய்திகள் போன்றவை பின்னிணைப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இயல் – 1

தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

1.0 முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டில் புதுக்கவிதை வரலாற்றைத் துவங்கி வைத்த பாரதியார்முதல் இன்றைய புதுக்கவிஞர்கள்வரை அவர்தம் படைப்புகளில் சமுதாய மக்களின் வாழ்க்கைக்கான தேடல்கள், துயரங்கள், இன்ப துன்பங்கள், போராட்டங்கள் போன்றவற்றைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளனர். அடித்தட்டு மக்கள் துவங்கி அனைத்துத் தரப்பு மக்கள் பற்றியும் புதுக்கவிதைகள் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில் சமுதாயத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு இன்று மேலே வரத் துவங்கி இருக்கும் ஒரு சமூகம் திருநங்கையர் சமூகம். அவர்களின் வலி நிறைந்த வாழ்க்கையின் நீள அகலங்களைப் புதுக்கவிதைகள் முன்மொழிகின்றன. திருநங்கையர் குறித்த சொல்லாட்சிகள், திருங்கையாக மாறும் போக்குகள் அவர்களின் வாழ்வியல் நிலைகள் அதில் உள்ள சிக்கல்கள், அவர்களின் காதல் உணர்வுகள் எனப் பல பரிமாணங்களில் புதுக்கவிதைகள் அவர்களைப் பதிவாக்கி உள்ளன. அவ்வகையில் புதுக்கவிஞர்கள் அந்தந்தக் காலகட்டத்தில் எவ்வாறான சமூகப் புரிதல்களோடு இவர்களை அணுகி உள்ளனர் என்பதை அவர்தம் கவிதைத் தரவுகளோடு இவ்வியல் ஆராய்கின்றது.

1.1 புதுக்கவிஞர்களின் பார்வைப் போக்கு

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் திருநங்கையரைப் பார்க்கும் போக்கில் மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்களுக்கும், பிற்காலக் கவிஞர்களுக்கும் இடையே

குறிப்பிடத்தக்க மாறுபாடு உள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி இருபத்தியோராம் நூற்றாண்டு வரையிலான திருநங்கையரின் மீதான புதுக்கவிஞர்களின் பார்வை காலந்தோறும் வேறுபட்ட பார்வையாக இருந்து வருகின்றது. அவ்வகையில் புதுக்கவிஞர்களின் பன்முகப் போக்கினை இரண்டாகப் பிரித்து ஆராயலாம்.

1. மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்கள்

2. பிற்காலக் கவிஞர்கள்

என்று வகைப்படுத்தப்படுகின்றன.

1.1.1 மறுமலர்ச்சிக் கவிஞர்கள் பார்வையில் திருநங்கையர்

மரபுசார் கவிதைப் படைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்தவர்கள் மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்கள். கவிதைகளின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள். இம்மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்களுள் பாரதியார், பாரதிதாசன், ச.து.சு. யோகியார், கண்ணதாசன் ஆகியோரது கவிதைகளில் திருநங்கையர் குறித்த சொல்லாட்சிகளும், கருத்தாக்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.1.1.1 பாரதியார் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றின் துவக்கப் புள்ளியாக, பாரதியார் கவிதைகளைச் சுட்டலாம். பாரதியாரால் பாடப்பெற்ற விடுதலை பற்றிய பாடல்களில் திருநங்கையரைக் குறிக்கும் அலி, பேடி என்ற சொல்லாட்சிகள் மிகுதியாகப் பயின்று வருகின்றன. வெ. முனிஷ் அலி, பேடி சொல்லாட்சிகளைப் பாரதியார் தம் கவிதைகளில் கையாண்டுள்ள திறம் குறித்துக் கீழ்வருமாறு சுட்டுகின்றார்.

> **''பாரதியார் அரவாணிகளைக் குறிக்கக்கூடிய பெயர்ச் சொற்களை மட்டுமே கவிதைகளில் பயன்படுத்தியிருக்கிறார். அலி, பேடி என்ற சொற்களைத் தவிர்த்து கூடுதலாக எந்தவொரு செய்தியினையும் பதிவு செய்யவில்லை... பேடி, அலி என்ற சொற்களைப் பழிச்சொற்களாகவே கவிதை முழுவதும் பயன்படுத்தியிருக்கிறார்''**[1]

என்று பாரதியாரின் பார்வைப் போக்கினைப் பதிவு செய்கின்றார்.

1.1.1.1.1 அலி, பேடி – கருத்தாக்கம்

அலி எனப்படுவோர் ஆண் பெண் ஆகிய இரு பாலினத்திலும் சேராதவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். ஆண் தன்மை மிகுந்து பெண் தன்மை குறைந்து காணப்படுபவர்களை ஆணலி, என்றும், பெண் தன்மை மிகுந்து ஆண் தன்மை குறைந்து காணப்படுபவர்களைப் 'பெண்ணலி' என்றும் குறிப்பிடுவர். பெண் தன்மை மிகுந்துள்ள ஆணைப் 'பேடி' என்பர்.

பாரதியார் 'அலி, பேடி' என்ற இரு சொல்லாட்சிகளைத் தமது பாடல்களில் பதிவு செய்கிறார்.

> **''ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது**
> **யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே''**[2]

என்ற கவிதை அடிகளில் பயின்று வந்துள்ள 'அலி' எனும் சொல் தெய்வ நிலைக்கு உயர்த்திப் பேசப்படுகிறது.

> **''ஆணுருக் கொண்ட பெண்களும் அலிகளும்''**[3]
>
> **''பேடிமை அகற்று''**[4]
>
> **''பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே''**[5]
>
> **''சக்தியற்ற பேடிகளை யேசு''**[6]

“அலிகளுக் கின்பமுண்டோ?”[7]

“அடிமைப் பேடிகள்”[8]

“பேடிக் கல்வி”[9]

என்று பல இடங்களில் ‘அலி’, ‘பேடி’ எனும் சொல்லாட்சிகள் அடிமை, கோழை ஆகிய பொருள்களை உணர்த்துகின்றன. பாரதியார் ஆங்கிலக் கல்வி முறையினை, ‘பேடிக் கல்வி’ என்று இழித்துரைக்கும் வகையிலும் பதிவாக்குகிறார்.

1.1.1.2 பாரதிதாசன் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

பாரதிதாசனின் கருத்துச் செறிவும், உணர்ச்சி ஓட்டமும் மிகுந்த குறுங்காப்பியம் **‘தமிழச்சியின் கத்தி’.** செஞ்சிப் பாளையப்பட்டை ஆட்சி செய்த ராஜாதேசிங்கின் படைகளின் சுபேதாராக இருந்த சுதரிசன் சிங்கு, ‘திம்மன்’ என்பவனுக்கு சிப்பாய் வேலை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை காட்டி, செஞ்சிக் கோட்டைக்கு அழைத்து வருகிறான். அவன் மனைவி சுப்பம்மாவைத் தந்திரமாக மயக்கம் அடையச் செய்து அவளை அடைகிறான். சுப்பம்மா, ராஜா தேசிங்கிடம் முறையிடுகிறாள். நீதி கிடைக்கவில்லை. பின் சுதரிசன் சிங்கை வீரமுள்ள தமிழ்ப்பெண் சுப்பம்மாள் அஞ்சா நெஞ்சுடன் கத்தியால் குத்திக் கொலை செய்து விடுகிறாள். பின் யாருக்கும் அடிபணியாமல் தன் உயிரை மாய்த்துக் கொள்கின்றாள். இத்தமிழச்சியின் கத்தி எனும் குறுங்காப்பியத்தில் பாரதிதாசனால் ‘பேடி’ என்ற சொல்லாட்சி கையாளப்படுகிறது.

சுதரிசன் சிங்கை நோக்கி ‘என்னை மயக்கத்தில் இருக்கும்படி செய்துவிட்டு என் கற்பை அழித்து விட்டான் பேடியைப் போன்றவன்’ என்று சுப்பம்மா கூறுவதாக, பாரதிதாசன் எடுத்துரைத்துள்ளார்.

"என்னை மயக்கத்தில் ஆழ்த்திக் – கற்பை

ஈடழித் தான் வெறும் பேடி"[10]

என்று குறிப்பிடுகிறார். மேலும்,

". . . . . மறவர் தம்மைப்

பேடிகளாய்த் தேசிங்கன் நினைத்து விட்டான்"[11]

என்ற அடிகளில் தேசிங்கு மன்னன் தமிழ்நாட்டு வீரர்களைப் பேடிகள் என்று நினைத்து விட்டதாகக் கூறும் பாரதிதாசன், அவர்கள் வீரம் மிக்கவர்கள் என்று சுப்பம்மாவின் வாய்மொழியாகப் படைத்திருக்கிறார். இவ்விரு இடங்களிலும் 'பேடி' எனும் சொல்லாட்சி பாரதிதாசனால் 'கோழைகள்' என்னும் இழிவு நோக்கிலேயே பதிவு செய்யப்படுகிறது.

1.1.1.3 ச.து.சு. யோகியாரின் கவிதையில் திருநங்கையர்

ச.து.சு. யோகியாரின் **'தமிழ்க்குமரி'** எனும் நூலில் 'மேரிமக்தலேனா' எனும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள கதைக் கவிதையில் 'அலி', 'பேடி' எனும் சொல்லாட்சிகள் பயின்று வந்திருக்கின்றன. பணத்திற்காகத் தன் அழகினை விற்பவளாக வரும் பாத்திரமான மேரி மக்தலேனா தன்னை, தன் பிழையை நினைத்து வருந்தும் முகமாக இக்கவிதை அமைகிறது.

"ஆண்களிலே, பெண்களிலே,

அலிகளிலே, யாவரிலே

பேணும் இன்பப் பேரழகு

பெற்றதனைக் காசுக்காய்க்

காணுமவர் யாவருக்கும்

கைவசமாய்ச்செய் புன்மைப்

பூணுடையார் என்னைப் போல்

புவியின்மிசை வேறுளரோ?"[12]

மேற்சுட்டிய அடிகளில் 'ஆண், பெண், அலி' என்று எவரை விடவும் சிறந்த அழகுதனை காசுக்காய் விற்பவள் என்கின்றார்.

"ஆணுள்ளார் யாவரையும்
பேடியராய் ஆக்கிவிட்டேன்,
பேணும் இந்தப் பெரும் பாவப்
பிழைதீர்க்க வல்லேனோ?"[13]

என்ற அடிகளில் 'தன் அழகினால் ஆண்களை அடிமைப்படுத்தி விட்டேன், இந்தப் பாவத்தினைப் போக்க மாட்டேனோ?' என்று மேரிமக்தலேனாவின் வாய்மொழிதனை, ச.து.சு. யோகியார் பதிவு செய்திருக்கிறார். அலி என்ற சொல்லாட்சிதனைப் பொதுப்படையாகவும், 'பேடி' எனும் சொல்லாட்சிதனை 'அடிமை' எனும் பொருளிலேயும் யோகியார் படைத்துள்ளார்.

1.1.1.4 கண்ணதாசன் கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்

கண்ணதாசனின் கவிதைகளில் 'அலி', 'பேடி' எனும் சொல்லாட்சிகள் பயின்று வந்துள்ளன. **'திபெத்தில் சதியுடைமை'** எனும் கவிதையில், அதிகாரத்தை மட்டுமே குறிக்கோளாக எண்ணிக் கொண்டிருப்பவர்களை நோக்கிக் கூறுகிறார்.

".....சீச்சி!
அலிகளிலும் பேடிகள்இவ் வகிலக் கும்பல்!"[14]

என்று இடித்துரைக்கின்றார். 'எதிரொலி' எனும் கவிதையில் 'அரசாங்க மந்திரிகளுக்கு நாடி நரம்புகள் ஓய்ந்து இரத்தம் உறைந்து விட்டது' என்று கூறுகிறார்.

".....கொடும்
பேடிமை எண்ணம் குவிந்ததடா – ஒரு
பித்து பிடித்துக் குலுக்குதடா"[15]

என்று கூறுகிறார். ஆணாகப் பிறந்தாலும், வீரமற்ற கோழைகளாக அவர்கள் இருப்பதை விமர்சிக்கின்றார்.

“..... ஆண்
மங்கையராகப் பிறந்த அமைச்சர்கள்
வாழட்டும் நம் உயிர் மாண்புறட்டும்”[16]

என்று மந்திரிகளைச் சாடுகின்றார். ‘தமிழைக் காப்போம்’ எனும் கவிதையில் ‘இந்தி’ மொழியின் ஆதிக்கத்தால் அன்னைத் தமிழ் மொழியை அழிவு நிலைக்கு கொண்டுக் செல்வது பேடித் தன்மை என்கிறார்.

“புண்பட்ட மேனியிலே வேலும் பாய்ந்தால்
பொறுத்தருளல் சிறப் பல்ல பேடித்தன்மை”[17]

என்று வன்மையாகக் கண்டிக்கின்றார். ‘திருவண்ணாமலை முடிவு’ எனும் கவிதையில் தென்னாட்டின் பெருமையையும் வடநாட்டின் சிறுமையையும் கூறுகின்றார்.

“பேதையிற் பேதையர் ஆண்மையிற் பெண்மை
பேணி வளர்த்தது வடநாடு
நீதியைக் காத்திடப் பெண்மையில் ஆண்மை
நெறிகள் வளர்த்தது தென்னாடு”[18]

என்று ஆண்மையில் பெண்மை ஊட்டிய வடநாட்டையும், பெண்மையில் ஆண்மை ஊட்டிய தென்னாட்டையும் பறைசாற்றி உள்ளார். கண்ணதாசன் கவிதைகளில் பயின்று வந்துள்ள ‘அலி’, ‘பேடி’ எனும் சொல்லாட்சிகளின் பொருள் நிலைகள் வீரமற்ற இழிநிலையிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளன.

1.1.2 புதுக்கவிஞர்கள் பார்வையில் திருநங்கையர்

மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்களின் படைப்புகளில் திருநங்கையர் இழிவு

நோக்கிலேயே பெரும்பான்மையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையை மாற்றி திருநங்கையரின் உணர்வுகளையும், அவர்களின் உரிமைகளையும் உள்ளார்ந்து படைப்பாக்கியவர்கள் புதுக்கவிஞர்கள். திருநங்கையர் குறித்த புதுக்கவிதைப் பதிவுகள் கீழ்வரும் தலைப்புகளில் பிரித்து ஆராயப்படுகின்றன.

* **திருநங்கையரும் மரபணுமாற்றமும்**
* **திருநங்கையரும் குடும்பப் புறக்கணிப்புகளும்**
* **திருநங்கையரும் பெண்மை உணர்வுகளும்**
* **திருநங்கையரும் சமுதாயப் பார்வைகளும்**
* **திருநங்கையரும் ஆண்மையவாத எதிர்ப்பும்**
* **திருநங்கையரும் வாழ்வியல் சிக்கல்களும்**
* **திருநங்கையரும் பாலுணர்வும்**
* **திருநங்கையரும் சமத்துவமும்**
* **திருநங்கையரும் தன்னம்பிக்கையும்**
* **திருநங்கையரும் பிறப்புப் பெருமைகளும்**

என்று வகைப்படுத்தப்படுகின்றன.

1.1.2.1 திருநங்கையரும் மரபணு மாற்றமும்

மனிதர்களை இனம் பிரிப்பதுமுதல் உயிர்களை உற்பத்தி செய்வதுவரை அனைத்திற்கும் ஆதாரமாக அமைவது 'ஆண்', 'பெண்' என்ற பாலினப் பாகுபாடு ஆகும். இந்தப் பால்பாகுபாட்டில் திரிவு அடைந்தவர்களே மூன்றாம் பாலினத்தவராகக் கருதப்படுகின்றனர். இவ்வாறு பால்திரிவு அடைந்தவர்களிடம் உடல் அளவிலும் உள்ள அளவிலும் சில மாற்றங்கள் உருவாகின்றன.

இம்மாற்றத்தை அவர்கள் உணரும் உச்சநிலையே அவர்களைப் பாலினம் திரிந்தவர்களாக மாற்றுவதோடு சமுதாயத்தில் இருந்து புறந்தள்ளவும் காரணமாகின்றது.

திருநங்கையரின் பிறப்பு பற்றி திருமூலராகிய சித்தர் கீழ்வரும் பாடலில் தெளிவுறுத்துகின்றார்.

''குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது சிரகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்கால் ஒக்கிலே''[19]

என்கிறார். அதாவது, 'ஆணும், பெண்ணும் இணையும்போது, ஆணின் வலது மூக்கில் காற்று மிகுதியானால் ஆண் குழந்தை பிறக்கும் என்கின்றார். இடதுமூக்கில் காற்று மிகுதியானால் பெண் குழந்தை பிறக்கும் எனக் கூறுகின்றார். அதே நேரத்தில் இருவருக்கும் ஒரே துளையில் காற்று வந்தால் குழந்தை அலியாகப் பிறக்கும்' என்று பதிவு செய்கின்றார்.

உடல் அளவில் ஆணாக இருப்பவர்கள் உணர்வு அளவில் தன்னைப் பெண்ணாக உணர்ந்தால் அவர்கள் திருநங்கையராகக் கருதப்படுகின்றனர்.

''இப்பிறப்பு பற்றிய தெளிவு மருத்துவத் துறையில்கூட இன்னும் அறியப்படவில்லை என்பதுதான் நிதர்சன உண்மை. ஆங்கிலத்தில் 'ஹெர்மாபுராடைட்' (Hermaphrodite) என்று கூறுகின்றனர்''[20]

என்று திருநங்கைகள் பிறப்பு குறித்து பத்மபாரதி மொழிகிறார்.

1.1.2.1.1 பாலினத்தை நிர்ணயிக்கும் மரபணுக்கள்

ஆண், பெண் இனச்சேர்க்கையின்போது உருவாகும் கருவில் உள்ள

இனப்பெருக்க அணுக்களே, அக்கரு ஆணா பெண்ணா என்பதை நிர்ணயம் செய்கின்றன. பாலினத்தை நிர்ணயம் செய்யும் மரபணுக்கள் ஒவ்வொரு மனித செல்லிலும் 'நாற்பத்தி ஆறு' (46) உள்ளன. இவற்றில் 'நாற்பத்தி நான்கு' (44) பால்சாரா மரபணுக்கள் ஆகும். இதனை 'ஆட்டோசோம்கள்' என அழைப்பர். மீதம் உள்ள இரண்டே பாலினம் சார்ந்த மரபணுக்களாக இருக்கின்றன.

1.1.2.1.2 ஆண் – பெண் மரபணுக்கள்

ஆணினுடைய செல்லில் பாலினம் சார்ந்த மரபணுக்கள் 'xy' என்றும், பெண்ணினுடைய செல்லில் 'xx' என்றும் காணப்படுகின்றன. இதனை 'பெர்னிஸ் ஆனந்தராஜ்' கூறியுள்ளதாக அய்யப்பன் கீழ்வருமாறு சுட்டுகிறார்.

> " **'பெண்ணில் இருபால் குரோமோசோம்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவை xx என்று அழைக்கப்படுகின்றன. ஆண்களில் அவை வேறுபட்டு xy என்று அழைக்கப்படுகின்றன'** "[21]

என்று எடுத்துக்காட்டுகிறார். இதன்மூலம் ஆணின் மரபணு அமைப்பு 'நாற்பத்தி ஆறு xy' (46xy) என்பதையும், பெண்ணின் மரபணு அமைப்பு 'நாற்பத்தி ஆறு xx' (46xx) என்பதையும் அறிய முடிகின்றது.

1.1.2.1.3 மரபணு மாற்றத்தின் விளைவுகள்

ஆண், பெண் சேர்க்கையின்போது, ஆணின் விந்தில் உள்ள 'x' மரபணு பெண்ணின் அண்டத்தில் இணைந்தால் மரபணு அமைப்பு 'நாற்பத்தி ஆறு' xx ஆகி, 'பெண்கரு' உருவாகும். ஆணின் விந்தில் உள்ள 'y' மரபணு பெண்ணின் அண்டத்தில் இணைந்தால் மரபணு அமைப்பு 'நாற்பத்தி ஆறு' 'xy' ஆகி, 'ஆண்கரு' உருவாகும். இவ்வாறு கருவை நிர்ணயம் செய்யும் பால்சார்ந்த மரபணுக்களில் மாற்றம் ஏற்படும்போது, 'பால்பிறழ்ச்சி' உண்டாகிறது.

> ‘‘பெண்ணின் கருமுட்டை பெண்பால் தன்மைகளை ஏற்படுத்தக்கூடிய x குரோமோசோம் மட்டும் கொண்டுள்ளது. ஆணின் விந்து பெண்பால் தன்மையை ஏற்படுத்தக்கூடிய x குரோமோசோம் அல்லது ஆண்பால் தன்மையை ஏற்படுத்தக்கூடிய y குரோமோசோம் இரண்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டதாக இருக்கின்றது. மரபணு உருவாக்கத்தின் போது ஏற்படும் சில எதிர்பாராத மாற்றங்களால், பெண் கருமுட்டையிலேயே ஒரு x குரோமோசோம் அதிகமாகவோ அல்லது ஆணின் விந்திலிருந்து வரும் y குரோமோசோமுடன் மேலதிகமாக ஒரு x குரோமோசோமோ கருவில் இணைந்துவிட்டால் பிறக்கும் குழந்தை ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இல்லாமல் இரண்டுமில்லாமலும், இரண்டுமாகவும் அதாவது அலியாக (Hermaphrodite) பிறக்கும்’’[22]

என்று ‘அருணன்’ தனது கட்டுரையில் பதிவு செய்துள்ளார். இதிலிருந்து நாற்பத்தி ஆறு xy (46xy) என்ற ஆண் மரபணுக்களுடன் கூடுதலாக பெண் இனப்பெருக்க அணுவான x மரபணு சேரும்போது, உருவில் ஆண் தோற்றம் கொண்டு நாளடைவில் பெண்மை உணர்வு அதிகரித்து அவர்கள் திருநங்கையாக மாறுகின்றனர் என்பது தெரிய வருகின்றது.

மரபணு மாற்றத்தினால் திருநங்கையரின் மாறும் வாழ்வு நிலைகள் குறித்து புதுக்கவிதைகளில் பதிவு செய்யப்படுகின்றன.

> ‘‘நான்
> சந்திப் பிழையா
> சந்ததிப் பிழையா’’ **(நா.இ.நா. 5)**

இக்கவிதை அடிகளில் மரபணு மாற்றத்தால் உருவாகிய சந்ததிப்பிழையான திருநங்கையரே கேள்வி கேட்கும் முகமாக ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்துள்ளார்.

இழிவு நோக்கில் பெரும்பான்மையாகப் பார்க்கப்பட்டு வந்த திருநங்கையரை மாற்றுப் பார்வையில் உற்று நோக்கிய புதுக்கவிஞர் நா. காமராசன். 'கறுப்பு மலர்கள்' எனும் கவிதையில் 'மொழியில் ஏற்படும் சந்திப்பிழையைப் போன்று மரபணு மாற்றத்தால் உருவாகும் சந்ததிப் பிழைகளே திருநங்கையர்' என்கின்றார்.

''சந்திப்பிழை போன்ற
சந்ததிப்பிழை நாங்கள்!
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்!''[23]

திருநங்கையருக்கு இத்தகைய பிறப்பைக் கொடுத்த இறைவன் இவர்களது நிலையை மாற்றட்டும் என வேண்டுகின்றார்.

'மூன்றாம் இலை' எனும் கவிதையில் வே.நெடுஞ்செழியனின்

''காமத்துப்பால்
குட்டி போட்டது
மூன்றாம் பால்''[24]

என்ற அடிகளில் மூன்றாம் 'பாலினம்' உருவாகும் நிலை பதிவு செய்யப்படுகிறது. 'சந்திப்பிழை' எனும் கவிதையில் திருநங்கையரின் பிறப்பு பற்றிக் கூறப்படுகிறது.

''கர்ப்பப் பையே
செய்த
கலப்படம்''[25]

என்ற அடிகள் 'திருநங்கையரின் பிறப்பு தாய் வயிற்றிலேயே உருவாகிறது' என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

கவிஞர் நெல்லை ஜெயந்தா 'சந்திப்பிழை' என்னும் கவிதையில் பின்வருமாறு சுட்டுகின்றார்.

"பிடரி வளர்ந்த
பெண் மயில்கள்
தோகை முளைத்த
சிங்கங்கள்
விந்துக்களே
விளையாடிய
கண்ணாமூச்சி"[26]

என்று ஆணும், பெண்ணும் கலந்த முரணான திருநங்கையரின் படைப்பு இங்கு மொழியப்படுகிறது. மரபணு மாற்றமே திருநங்கையரின் பிறப்பிற்குக் காரணம் என்பதும் அவ்வாறு பாலினம் மாறுவதால் திருநங்கையரின் உள்ளம் அடையும் வேதனைகளும் 'பிறவிப் பெருங்கடல்' எனும் கவிதையில் பதிவு செய்யப்படுகிறது.

"ஆணுடலில் பெண்ணென
பெண்ணுடலில் ஆணென
குரோமோசோம்கள் பிறழ
இளமை அறைந்த ஆணியில்
மாட்டித் தொங்குகிறது
உள்ளீடற்ற ஆசைகளோடெனது உள்ளம்"[27]

என்று பொ. செந்திலரசு பதிவு செய்கிறார். பாலா, 'மூன்றாம் சாதி' எனும் கவிதையில் மரபணு மாற்றத்தால் திருநங்கையர் பிறப்பதாகச் சுட்டுகின்றார்.

"குலதெய்வத்தின் குளறுபடியோ
குரோமோசோம்களின் குளறுபடியோ

குலைந்து போனது

வாழ்க்கையும் தான்”[28]

எனும் கவிதை அடிகளில் வெளிப்படுத்துகிறார். இங்கு திருநங்கையர் பிறப்பு உருவாவதற்கான மரபணு சேர்க்கை பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது.

“ஆண் உடலில்

பெண் உணர்வுகள்

அறுபதும் நாற்பதும்

அழகிய விகிதம் கலந்த

அதிசய மானுடர்கள்”[29]

என்று ‘அரவாணிப் பூக்கள்’ எனும் கவிதைத் தொகுப்பில் மரபணுவின் சித்து விளையாட்டில் திருநங்கையர்கள் பிறப்பதாக த.ராகினிசந்திரன் பதிவு செய்கிறார். மரபணு மாற்றத்தால் உருவாகும் திருநங்கையர் பிறப்பினை முனைவென்றி நா.சுரேஷ்குமார் கீழ்வருமாறு கவிதையாக்குகிறார்.

“xx குரோமோசோம்களால்

பிறப்பது பெண்

xy குரோமோசோம்களால்

பிறப்பது ஆண்

xy குரோமோசோம்களின்

குளறுபடியால்

எங்களுக்குப் பெயர்

திருநங்கையர்”[30]

என்று ‘மூன்றாம் கோணம்’ எனும் கவிதை குரோமோசோம்கள் குளறுபடிகளால் திருநங்கையர் பிறப்பதாகப் பதிவு செய்கிறது.

குரோமோசோம் பிறழ்தலே திருநங்கையரின் பிறப்பிற்குக் காரணம் என்பதை பொ. செந்திலரசு, 'பிறவிப் பெருங்கடல்' என்னும் கவிதையில்,

''அடுத்த பிறவிக்கு
நானும் ஆசைப்படுவேன்
பிறழாத
குரோமோசோம்களோடு
பிறக்க''[31]

என்று குறிப்பிடுகிறார்.

1.1.2.1.4 ஹார்மோன் குறைபாடு

ஆணிற்கு வன்மைத் தன்மையையும், பெண்ணிற்கு மென்மைத் தன்மையையும் நிர்ணயிப்பது ஹார்மோன்கள்தான். இவ்வாறு இயற்கையாக உள்ள ஹார்மோன் குறைபாடு பால்பிறழ்விற்குக் காரணமாகிறது.

''சில பெற்றோருக்கு ஹார்மோன்கள் குறைபாடுகளால் இது போன்ற குழந்தைகள் பிறக்கும். இதுவே பின் அலியாகவும் பேடியாகவும் மாறும்''[32]

என்று கி. அய்யப்பன் குறிப்பிடுகிறார். இந்நிலையில் திருநங்கையரின் பிறப்பு நிலை குறித்து 'கோபால்தாசன்' கீழ்வரும் கவிதையில் தெளிவாக்குகின்றார்.

''நாங்கள்
எங்களுக்கே தெரியாமல்
பிறப்பாலோ வளர்ப்பாலோ
பாலினம் மாற்றப்பட்டோம்
எங்களுறுப்புகள்
முக மாற்றமடைகின்ற போழ்தினில்
நாங்கள் பட்ட அவஸ்தைகள்

வெந்த வேதனைகளை

யாரிடம் சொல்லி அழுவதற்கு”[33]

என்ற கவிதை அடிகள் திருநங்கையரின் மனவேதனைகளை மெய்ப்பிக்கின்றன.

1.1.2.1.5 திருநங்கையர் பிறப்பும் இயற்கையும்

திருநங்கையரின் பிறப்பு என்பது இயல்பான, இயற்கையான ஒன்றாகும். இதனை,

“மானுடத்தின் மூன்றாவது பரிமாணம் என்று அழைக்கப்படும் அலி இனம் பெண் உடம்பில் ஆணும் ஆண் உடம்பில் பெண்ணுமாக இருப்பது இயற்கை”[34]

என்று ‘பத்மபாரதி’ வரையறை செய்கின்றார். மனித வாழ்க்கையானது இருநிலைகளில் இயங்கி வருகின்றது. மூன்றாவதாய், திருநங்கையராகப் பிறப்பது என்பது இயல்பானதே. இதனை நாஞ்சில் நாடன்,

“ஆணாய் பெண்ணாய் அலியாய்

இருத்தல்

இருதுடை நடுவின் இயல்பு”[35]

என்கிறார். இரு பாலினரிடத்தும், முரண்பட்டு திருநங்கையாகப் பிறப்பது என்பதும் இயல்பானது ஆகும். வாழ்க்கை என்பது முரண்களினால் இயங்கக் கூடிய ஒன்று. அவ்வாறு முரண்களினால் உருவான வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதே மானுடம் என்பதையும் நாஞ்சில்நாடன் சுட்டுகின்றார். இதனை,

“ஆணாய் பெண்ணாய் அலியாய்

வாழ்தல்

நேர்தல் அல்ல

மானுடம் என்பது

நேர்தலில் இல்லை

வாழ்தலில் துளிர்க்கும்”[36]

என்ற அடிகள் சித்திரிக்கின்றன. ந.பிச்சமூர்த்தி ‘ஆண், பெண் போன்று மூன்றாம் பாலினரும் மனிதப் பிறவியே’ என்கிறார்.

“உயிரின் கதை பலவாறாகத்

தரணியில் வளரக் கண்டும்

கல் மண்ணாய், புல்லும் பூண்டாய்

புழுவாய் பெருவிலங்காய்

சுக்ரீவ சேனையாக

மனிதனாய், ஆணாய்ப் பெண்ணாய்

இரண்டற்ற அலியுமாக

தரணியில் தளிரக் கண்டும்”[37]

என்ற அடிகளின்மூலம் தெரிவிக்கின்றார். சமூகப் பார்வையில் ஆண், பெண் போன்றே அலியாகிய திருநங்கையர் மூவரும் சமம். ‘எப்பிறவியும் வெறுத்து ஒதுக்கத்தக்கது அல்ல’ என்பதனை மேற்சுட்டிய அடிகள் தெரிவிக்கின்றன.

1.1.2.1.6 திருநங்கையரும் இறைவன் படைப்பும்

திருநங்கையர் வாழ்வில் தங்கள் குடும்பத்தாலும் சமூகத்தாலும் பழிச்சொற்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும் ஆளாகின்றனர். தங்களுடைய இந்நிலைக்குக் காரணம் ‘இறைவனின் படைப்பே’ எனவும் எண்ணுகின்றனர்.

ஆண்டாள் பிரியதர்ஷினியின் ‘நானும் இன்னொரு நானும்’ எனும் கவிதைத் தொகுதியில்,

“வச்ச குறி தப்பும்

இறைவன்

எனக்கு

வச்ச குறியும்'' (நா.இ.நா., 15)

என்று கூறுகிறார். 'உணர்வில் பெண்ணாக வாழும் திருநங்கையருக்கு இறைவன் வைத்த ஆண்குறி பிழையானது' என்பதை இக்கவிதை வரிகள் சுட்டிக் காட்டுகின்றன. கடவுள்மேல் திருநங்கையருக்கு உள்ள தீராக் கோபத்தினைக் கீழ்வரும் கவிதை அடிகள் தெரிவிக்கின்றன.

''கடவுளின் குழந்தையாம்

நான்

அரக்கி இல்லை

கடவுளைப் போல்'' (நா.இ.நா., 59)

என்று வெளிப்படுத்துகிறார். ஆண்டாள் பிரியதர்ஷினி கடவுள் படைப்பிலும் தவறு நேரும் என்பதை விமர்சனமாகப் பதிவாக்குகின்றார்.

''யானைக்கும்

அடி சறுக்கும்

சறுக்கியது

கடவுளுக்கும்

படைத்தான்

என்னை'' (நா.இ.நா., 26)

என்ற கவிதை அடிகளில் இறைவன் விமர்சனம் செய்யப்படுகின்றார். 'திருநங்கையர் பிரம்மன் போட்ட தப்புக் கணக்குகள்' என்று த. ராகினிசந்திரன் தனது கவிதையில் சித்திரிக்கின்றார்.

''பிரம்மன் போட்ட

தப்புக் கணக்குகளா?

பிரம்மக் குயவனின்

ஆச்சரியப் படைப்பு

அரவானிப் பூ

எல்லாப் பூக்களும்

இறைவனுக்காக

இந்தப் பூக்கள்

யாருக்காக?''[38]

என்று சுட்டுகின்றார். எல்லா உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டவை என்ற கருத்து மக்களிடையே நம்பப்படுகின்றது. இது குறித்து லி.நௌஷாத்,

''ஆண்டவனின்

அதிசயப் படைப்பு

அரவாணிகள்''[39]

என்று பதிவு செய்துகிறார். திருநங்கையரைப் படைத்த பிரம்மனை நோக்கிக் கேள்வி எழுப்புகின்றார் அமீர்.

''பிரம்மா,

இனி நீ இரவில்

அதிக நேரம்

கண் விழித்து

கூடுதல் பணி பார்க்காதே

பார்...

உன்

பணிச் சுமையால்

நீ செய்திருக்கும் குழப்பத்தை!''[40]

என்று 'ஓரினம்' கவிதையில் இறைவனின் படைப்பாற்றலை விமர்சிக்கின்றார்.

1.1.2.2 திருநங்கையரும் குடும்பப் புறக்கணிப்புகளும்

நம் சமுதாயத்தில் என்றுமே ஆண் குழந்தைப் பிறப்பிற்கு வரவேற்பும், பெண் குழந்தைப் பிறப்பிற்கு எதிர்ப்பும் காலம்காலமாக இருந்துகொண்டே வருகின்றது. குடும்பத்தில் பெற்றோர் தங்களுடைய வம்ச விருத்திக்கும் தங்களுடைய சொத்திற்கு வாரிசாகவும், தங்கள் இறப்பிற்குக் கொள்ளி வைக்கும் உரிமையும் உடையவர்களாக ஆண்குழந்தைகளைக் கருதுவதால் அவர்கள்மீது தனிக்கவனம் செலுத்தி வளர்த்து வருகின்றனர். ஆண் பிள்ளைகளுக்கு வழங்கும் உணவிலிருந்து உடைவரை அனைத்தும் அதிகமாகவும் சிறப்பானவைகளாகவும் இருப்பது நம் தமிழ்ச் சமூகத்தில் எழுதப்படாத நியதியாகவே உள்ளது. அப்படி குடும்பம் முழுவதும் கொண்டாடும் ஆண்மகன் நாளடைவில் பெண்மை உணர்வுகள் மிகுந்து பெண்ணாக மாறினால் அம்மாற்றத்தை அக்குடும்பத்தினால் ஏற்றுக்கொள்ள இயலுவதில்லை. ஊராரின் கேலிப் பேச்சுக்களுக்கு அஞ்சி இத்தகைய குழந்தைகளை வெறுத்து ஒதுக்கி விடுகின்றனர். இதனால் ஒட்டுமொத்த குடும்பமும் அப்பிள்ளையைப் புறக்கணிக்கும் சூழல் உண்டாகிறது.

> **‘‘குடும்ப அமைப்பில் ஆணாகப் பிறந்தும் வளரிளம் பருவத்தில் பெண்மை உணர்வு தலையெடுக்கும் போது, அரவாணிகள் குடும்ப உறுப்பினர்களின் வெறுப்பிற்கு ஆளாகின்றனர். தந்தை, தாய், தமையன் முதற்கொண்டு அவர்கள்மீது சுமத்தும் வலிகளும், காயங்களும் அளப்பரியது. பெண்மை சார்ந்த, பெண்களுக்கே உரிய செயல்களில் அரவாணித்தன்மை உள்ளவர்கள் ஈடுபடும்போது பொறுத்துக் கொள்ள முடியாத குடும்ப உறுப்பினர்கள் கொடுஞ்செயல் புரிகின்றனர்’’**[41]

என்று மு. அருணாசலம் தனது நூலில் பதிவு செய்கிறார். இந்நிலையை ஆண்டாள் பிரியதர்ஷினி,

''கைகழுவி அனுப்புகிறது

குடும்பம் கல்லறைக்கு

கையேந்த வைக்கிறது சமூகம்

சில்லறைக்கு'' (நா.இ.நா.: 10)

என்று குறிப்பிடுகிறார். குடும்பப் புறக்கணிப்புகளால் சமுதாயத்தில் திருநங்கையர் கீழான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தன்னைப் புறக்கணிக்கும் குடும்பத்தார்மீதும் திருநங்கையர் மாறாத பாசம் வைத்துள்ளனர் என்பதும் பதிவு செய்யப்படுகின்றது.

''எனக்குக் குறி

அம்மா அப்பா

உடன்பிறந்தோர்

குடும்பத்தாருக்குக் குறி

என் குறி

மட்டும்'' (நா.இ.நா., 27)

என்ற இக்கவிதை அடிகள் அதனை நிரூபிக்கின்றன. குடும்பம் திருநங்கையரைப் புறந்தள்ளுவதாலேயே அவர்களின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகிறது.

''கை கழுவுகிறது குடும்பம்

கை நழுவுகிறது வாழ்க்கை'' (நா.இ.நா., 44)

என்ற அடிகள் இதனைப் புலப்படுத்துகின்றன. 'திருநங்கையரை எதிர்க்கும் சமூகத்தை எதிர்நோக்க அம்மாவின் அரவணைப்பு வேண்டும்' என்பதும் கவிதையில் உணர்த்தப்படுகின்றது.

''பழுதாகுமா

கருப்பை

என்னைச் சுமந்தால்

சுலபமாகும்

எதிர் நீச்சல்

அரவாணியை

அம்மா சுமந்தால்'' (நா.இ.நா., 44)

என்ற அடிகள்வழி தெரிவிக்கப்படுகின்றது. இன்றுவரை நம் சமூகத்தில் பெற்றோர் இறந்தால் ஆண்கள்தான், அவர்களுக்குக் கொள்ளி போடும் மரபான சூழல் உள்ளது. குடும்பக் கடமைகளுக்கு அஞ்சி, தன் பெண்மை உணர்வினை வெளிக்காட்டாது இருப்பது. திருநங்கையரின் இறப்பிற்குச் சமம் என்பது சித்திரிக்கப்படுகின்றது.

''பெண்ணாகாமல்

உயிரோடு நான்

சாக வேண்டுமா

உனக்குக் கொள்ளி போடும்

கடமைக்காக?'' (தா.இ.நா. 62)

என்று கேட்கப்படுகின்றது.

''பெண் போட்டால்

எரியாதா கொள்ளி'' (நா.இ.நா. 62)

என்று திருநங்கையரின் ஆழ்மனதில் உள்ள தார்மீகக் கோபத்தினையும் ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்திருக்கிறார். தன் இரத்தத்தில் உருவான பிள்ளையே ஆயினும், பால்திரிபு அடைந்தவர்கள் என்பதினால் பெற்ற தாய்தந்தையே நிராகரிக்கும் அவலநிலை திருநங்கையருக்கு நேரிடுகிறது. பெற்ற தாயிடம் மன்றாடும் திருநங்கையரின் அவலநிலையைத் திருநங்கை கல்கி கீழ்வருமாறு காட்டுகின்றார்.

“என்னை

நிராகரிக்காதே அம்மா

ஆணாயினும் பெண்ணாயினும்

அதுவாயினும் எதுவாயினும்

நான் உன் பிள்ளைதானே

அம்மா....?” **(கு.அ. 55)**

என்று உருக்கத்தோடு தன் கவிதையில் பதிவு செய்கிறார். மேலும், தன் தாயிடம் ‘நீ நிராகரித்தால் வேறு வழியின்றி கடைகேட்டலுக்கும், பாலியல் தொழிலுக்கும் நான் தள்ளப்படுவேன்’ என்று திருநங்கையர் உள்ள உணர்வினைப் பதிவு செய்கிறார்.

“ஐயோ

அழாதே அம்மா

நீ என்னை

நிராகரித்தால்

சுயத்தை இழந்து

கைதட்டி காசுகேட்டு

கையேந்துவேனே அம்மா . . .” **(கு.அ. 55)**

என்ற அடிகள் ‘கடை கேட்டல்’ நிலையையும்,

“ஐயோ

கதவுகளை மூடாதே அம்மா

நீ என்னை

நிராகரித்தால்

என்

பசியாற்ற

ஆடைகளைந்து

ஆண்களுக்கு

விருந்தாக

அம்மணமாவேனே அம்மா'' (கு.அ. 55)

என்ற அடிகளில் பாலியல் தொழில் செய்ய நேரிடும் அவலத்தையும் குறிப்பிடுகிறார். திருநங்கையரைக் குடும்பம் புறக்கணித்தால் இது போன்ற இழிநிலைகளுக்கு அவர்கள் தள்ளப்படுவர் என்பதைக் கல்கி முன்வைக்கிறார். குடும்பப் புறக்கணிப்புகளால் திருநங்கையரின் வாழ்வு தனிமைப்படுத்தப்படுவதையும் சுட்டுகின்றார்.

திருநங்கையர்களின் வாழ்வு தனிமைப்படுத்தப்படும் சூழலைத் தமிழ்ப் புதுக்கவிதைகள் பதிவு செய்துகின்றன.

''நாங்கள் எங்கள்

பெற்றோராலும் உறவினர்களாலும்

புறக்கணிக்கப்படுவதால்

எங்கள் வாழ்வு

ஒரு மலைப்பிரதேசத்தில்

நகர்ந்து கொண்டிருப்பதாய் . . .''[42]

என்ற கோபால்தாசனின் கவிதை அடிகள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றன. 'காகித மலர்கள்' எனும் கவிதை, ஒரு ஆண் திருநங்கையாய்த் தன்னை உணரும் வேளையில் அரவணைப்பிற்குப் பதிலாக, குடும்பத்தாரின் புறக்கணிப்பினைப் பெறுவதைச் சுட்டிக் காட்டுகிறது.

''விடலைப் பருவத்தில் தெரிந்த

குரோமோசோம் மாற்றத்தில்

அன்பு கதகதப்பு

காட்டுத்தீயாய் சுட்டெரிக்க...

என்னைக் காய்க்காத மரமென

வெட்டி வீதியில் எறிந்து விட்டனரே''[43]

என்று தன் கவிதை அடிகளில் 'மதுரா' வெளிப்படுத்துகிறார். 'மூன்றாம் சாதி' எனும் கவிதையில்,

''ஆண் என்றால் – விலை பேசலாம்

பெண் என்றால் – விற்று விடலாம்

வியாபாரத்திற்கு ஆக மாட்டோம்

என்றே வீட்டை விட்டு

விரட்டப்பட்டவர்கள் நாங்கள்''[44]

என்று திருநங்கையரை வீட்டைவிட்டுத் துரத்திடும் அவல நிலையைக் கவிஞர் பாலா பதிவு செய்கிறார். த. ராகினிசந்திரனும் குடும்பத்தாரால் திருநங்கையர் புறக்கணிக்கப்படும் அவல நிலையினைச் சுட்டுகின்றார்.

''அன்னை தந்தையால்

புறக்கணிக்கப்பட்ட

அந்த புல்லாங்குழல்கள்''[45]

என்று 'அரவாணிப் பூக்கள்' எனும் கவிதையில் திருநங்கையரைக் குறிப்பிட்டுகிறார். குடும்ப உறுப்பினர்கள் திருநங்கையரைப் புரிந்து கொள்ளாததே அவர்கள் வீட்டை விட்டு வெளியேறக் காரணம் என்பதும் தெரிவிக்கப்படுகின்றது.

''அலிகளே வீட்டுறவை அற்றதாய் ஆக்கி

வெளியேறும் காரணங்கள் வேறாம் – தெளிவில்லா

மக்கள் மனப்பாங்கே மண்மேடாய் ஆனதனால்

எக்காலும் கண்டோர் இடர்''[46]

என்று ஆ. குமாரசாமி தன் கவிதையில் பதிவு செய்கிறார். திருநங்கையாக மாறியவுடன் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளையே புறக்கணிக்கின்றனர்.

''பேர் சொல்லப்
பிள்ளையொன்று
பிறந்துவிட்டதெனப்
பிரியமாய்க் கொஞ்சிய
பெற்றோர் –
திருநங்கை எனத்
தெரிந்த போது
தீண்டவில்லையே
அரவணைத்து எங்களை
அவனியில் உயர்ந்திடத்
தூண்டவில்லையே''[47]

என்று 'திருநங்கை' எனும் கவிதையில் சுரா, திருநங்கையரின் ஆதரவற்ற நிலையினைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். 'பெற்றெடுத்த அன்னையே வெறுப்பதால் தன்னுடைய பிறப்பு ஏன்?' என்று ஒரு திருநங்கை கேள்வி எழுப்புவதாக, கானமஞ்சரி தன் கவிதையில் பதிவு செய்கிறார்.

''பட்ட தாரியாகும் முன்னே
பாவிநான் மாறிப்போனேன் – என்
ஆவிசோர அழுதழுது
தனிமரமாகிப் போனேன்
அம்மா நான் அலியாம்
இந்த அகிலம் வெறுக்கலாம்
அம்மா நீ என்னை வெறுக்கலாமா?
ஏன் பிறந்தேன் இவ்வுலகில்?''[48]

என்ற கவிதை அடிகள் திருநங்கையின் பாசப்போராட்டத்தினைத் தெரிவிக்கின்றன.

1.1.2.3 திருங்கையரும் பெண்மை உணர்வுகளும்

திருநங்கையரின் வாழ்வில் ஒட்டுமொத்தச் சிக்கல்களின் துவக்கப் புள்ளியே அவர்களுக்குள் துளிர்விடும் பெண்மை உணர்வுகள் ஆகும். விடைகாண முடியாத வினாவாக இருப்பவை அவர்களின் பெண்மை உணர்வுகள். எத்தகைய இடர்கள் வரினும், தன்னை முழுமையாகப் பெண்ணாக மாற்றுவதில் எந்த ஒரு திருநங்கையும் அங்குலமும் பின்வாங்குவதில்லை. பெண் உடை உடுத்துவதிலும், பெண்ணைப்போலத் தங்களை அலங்கரித்துக் கொள்வதிலும் பெண்பாற் பெயர்களைச் சூட்டிக் கொள்வதிலும் நாட்டம் உடையவர்களாய் இருக்கின்றனர். இதனால் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அவர்களின் பெண்மை உணர்வுகள் அதிகரிக்கின்றன. தாங்கள் 'பெண்' என்பதை உணர்த்த முடியாமல், அவதியுறுகின்றனர். மறைவாகத் தனக்குள் இருக்கும் பெண்மை உணர்வுகளை நீண்ட நாட்கள் சமூகத்திடமும், குடும்பத்திடமும் மறைக்கும் முயற்சிகளில் திருங்கையர் தோற்றுவிடுகின்றனர். திருநங்கையரைப் பற்றிக் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தெரியவரும்போது, அவர்கள் பல விதமான அடக்கு முறைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகின்றனர். திருநங்கையரின் பெண் தன்மைக்கு அறிவியல் ரீதியாக 'ந.அறிவுராஜ்' வரையறை தருகின்றார்.

> **''ஆண்களில் சிலருக்கு ஈஸ்ட்ரோஜன் என்ற சுரப்பி அதிகம் சுரப்பதால் நடையில் நளினம், ஆண்களைக் கண்டால் வெட்கம் போன்ற பெண் தன்மைகள் வந்துவிடுகின்றன.''**[49]

என்று பதிவு செய்கிறார். திருநங்கையர்கள் பெண்கள் குடும்பத்தில் செய்யும் இல்லறப் பணிகளைப் போலத் தாங்களும் சமையல் செய்தல், பாத்திரம் கழுவுதல் போன்ற பணிகளை ஆர்வத்துடன் செய்கின்றனர். அ. மங்கை இதனை,

> **''இவர்களில் பலர் ஏழு அல்லது எட்டாவது வயதில் இருந்தே குடும்பத்தில் பெண்கள் வேலை எனக் கருதப்படும் சமையல், கோலம், பாத்திரம் கழுவுதல் போன்றவற்றில் ஈடுபாடு ஏற்பட்டதைக் குறிக்கின்றனர். மஞ்சள் பூசிக் கொள்வது, தலை சீவிப் பின்னுவது, பூச்சூடிக் கொள்ளுதல், புடவை பாவாடை தாவணி அணிதல் ஆகியவற்றில் ஈர்ப்புக் கொள்கின்றனர்.''**[50]

என்று குறிப்பிட்டுகிறார்.

1.1.2.3.1 புறத்தோற்றத்தில் வெளிப்படும் பெண்மையுணர்வு

திருநங்கையருக்குப் பெண்மை உணர்வின் மேலீட்டால் ஆண் உடையின் மீது வெறுப்பு ஏற்படுகின்றது.

''ஆண் உடை
வசதி நங்கைக்கு
சதி திருநங்கைக்கு'' (நா.இ.நா., 17)

எனும் கவிதை அடிகள் இக்கருத்தினை உணர்த்துகின்றன. ஆடை, அணிகள், பூக்கள் மீது பெண்களுக்கு ஏற்படும் ஈர்ப்பினைப் போன்று, திருநங்கையருக்கும் ஈர்ப்பு ஏற்படுகின்றது.

''புடவையை
சுற்றிக் கொண்டு
புதிய பெயர்
வைத்துக் கொண்டு
பூக்களை

தலையில் சுமந்து

ஜிமிக்கித்தோடும்

வளையல்களும் ஆட” (கு.அ. 52)

என்று திருநங்கை கல்கி பதிவு செய்கிறார். ‘வித்யா எனும் ஓர் தேவதை’ என்னும் கவிதையில் திருநங்கையருக்கான உடல் மாற்றத்தினை இளங்கோ கிருஷ்ணன்,

“அவளும் அறியாமல் அவளுடலில்

சேவலின் சிறகுகள் வளரத்துவங்கின

மூங்கில் இலைகளில் பனித்துளி திரள்வதுபோல்

மெல்ல வளரத்துவங்கிய அச்சிறகுகளால்

அவள் வானத்தில் பறந்தபோது

அவளின் வானம் கூரையோடு முடிந்து போனது”[51]

என்று குறிப்பிடுகிறார். பெண்களின் ஆடை, அணிகலன்மீதான ஈர்ப்பினை ஜீவி படம் பிடித்துக் காட்டுகின்றார்.

“பேண்ட் சட்டையை விட

பாவாடை தாவணி மேல்

விருப்பம் அதிகரித்தது

தோடு ஜிமிக்கியும்

ஒற்றைக்கல் மூக்குத்தியும்

நட்சத்திரங்களாய்க்

கனவில்

ஜொலிக்க ஆரம்பித்தன

பூக்கடை வழியாய்ப்

போய் வருகையில்

ஜடை அலங்காரப் பூவைக்

கண்கள் வண்டுகளாய்

மொய்த்துக் கிடந்தன”[52]

என்று தன் கவிதை அடிகளில் பதிவு செய்கிறார்.

வே. நெடுஞ்செழியன் ‘மூன்றாம் இலை’ எனும் கவிதையில் திருநங்கையர் தனக்குள் இருக்கும் பெண்மை உணர்வினை உணர்ந்து ஆணுடையை வெறுப்பதனைத் தெரிவிக்கின்றார்.

“**பருவநீர் மடைநீர் பாய**

உயிருக்குள் ஊற்றெடுக்கும் பெண்மை

இருப்பை வெறுத்து

உடைக்குள் உருமாற்றம்”[53]

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார்.

ரமேஷ் - பிரேம்.. ‘ஆணாகிய தனிமை’ எனும் கவிதையில்,

“**தனியே இருக்கும் பொழுதெல்லாம் சித்திகளும் அத்தைகளும் அணிவித்த பாவாடையும் சட்டையும் இன்பமான மாறுவேடமாயின. பொட்டும் கண்மையும் சடையும் என் கனவு நேரத்து ஒப்பனை ஆயின**”[54]

என்ற பதிவிலிருந்து குழந்தைப் பருவத்திலேயே எதிர்ப்பாலின் புறத்தோற்றத்தின்மீதான ஈர்ப்பு உணர்த்தப்படுகின்றது. ‘மூன்றாம் இனம்’ எனும் கவிதையில் பெண் உடை அணிய வேண்டும் என்ற ஆசை மேலீட்டைத் தெரிவிக்கின்றார்.

“**பதின் வயதில் பாவாடைக்கட்டி**

பறவையாய் பறக்கவும்”[55]

என்ற கவிதை அடிகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

திருநங்கையர் தனக்கு உணர்வளவில் பொருந்தாத ஆண் உடலினை நீக்கி, பெண்ணாய்த் தன்னை உணர்கின்றனர்.

“ ‘உடுக்கையாய் இடுப்புச் சிறுத்திருக்க – இந்த

உருவத்தை நானே உருவாக்க

ஓடும் இரத்தத்தில் தோன்றியதோ?

உணர்வில் பொருந்தாத உடல்களைந்தேன்–பெண்

உடம்பில் இயல்பாய் நான் உணர்ந்தேன்’ ”[56]

என்று ‘புலி நகச் சுவடுகள்’ எனும் கவிதையில் திருநங்கையர் தன்னை உணர்விலும், உடலிலும் பெண்ணாய் உணர்வதாக இன்குலாப் கூறுவதை அருணாசலம் தனது நூலில் சித்திரிக்கிறார்.

1.1.2.3.2 அகத்தோற்றத்தில் வெளிப்படும் பெண்மை உணர்வு

திருநங்கையர் தன்னுடைய பெண்மை உணர்வின் மேலீட்டை வெளிப்படுத்த இயலாது தவிக்கின்றனர். உடலளவில் ஆண் என்றாலும், உணர்வளவில் தன்னைப் பெண்ணாக எண்ணுகின்றனர். இதனை ஆண்டாள் பிரியதர்ஷினி,

“பெண்ணைக்

கர்ப்பம் சுமக்கும்

ஆண் நான்” (நா.இ.நா. 6)

என்று திருநங்கையரின் உணர்வு முழுவதும் வியாபித்திருக்கும் பெண்மையினைப் பதிவு செய்கிறார்.

உடல் கூறில் ஆணாக இருப்பதை நிழல் என்றும், உணர்வளவில் பெண்ணாக இருப்பதே நிஜம் என்றும் குறிப்பிடுகின்றார்.

“உருவத்தில் ஆண்

உள்ளத்தில் பெண்

நிழலே நிஜம்

நிஜமே நிழல்” **(நா.இ.நா., 11)**

என்ற கவிதையின்வழி திருநங்கையரின் பெண்மைத்தன்மை உணர்த்தப்படுகின்றது.

திருநங்கையர் தனக்குள் இருக்கும் பெண்மை அழகினைத் தாங்களே இரசிப்பதை,

“சுத்திகரிக்கப்பட்ட

என் உடல்

பெண்மைப் பெருங்கோயில்

சுகிப்பேன் என் அழகை

எனக்கு நானே படையல்” **(நா.இ.நா. 50)**

என்ற அடிகள் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. தனக்குள் இருக்கும் பெண்மைக்கான மன உணர்வினை ஓர் ஆண் உணர்வதை,

“கூத்தாண்டவருக்கு முன்

எரியும் கற்பூர ஒளியில்

தெரியும்

அவனுக்குள்ளிருக்கும்

அவள் முகம்”[57]

என்ற ‘புலன் வேட்டை’ எனும் கவிதை அடிகள் உணர்த்துகின்றன. மதுரா, ‘காகித மலர்கள்’ எனும் கவிதையில் திருநங்கையர் பெண்மை உணர்வில் இயங்குதலைத் தெரிவிக்கின்றார்.

“ஆணின் உடலில்

பெண்ணின் உணர்வுகள்

யார் விதைத்தது இதை?

தாவணியும் வளையல்களும்

போடத் தூண்டுவது எது?”[58]

என்ற அடிகளில் பெண்மைக்கான மனஉணர்வில் சிக்கித் தவிக்கும் ஆணின் இயலாமை நிலை வெளிப்படுகிறது. ‘குறி’ எனும் கவிதையில் ‘இயல்பாகப் பிறக்கும் பெண்களுக்கு வரும் மாதவிலக்குப் போலத் தனக்கு வரவில்லையே’ என்று வருந்தும் திருநங்கையரின் ஆற்றாமை உணர்வுக் கவிதையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

“அவளின் யோனியில்

வேதனையும் அவமானமும் மட்டுமே

சுரந்து கொண்டிருந்தன

பெண்ணின் மாத தீட்டு

சுரக்கவில்லை என

அன்பு கவலைப்பட்டாள்”[59]

என்ற கவிதை அடிகள் இதனைத் தெரிவிக்கின்றன. திருநங்கையர் பெண்ணாக மாறுவதின் முதல் அடையாளமாகத் தன் பெயரினை மாற்றம் செய்து கொள்கின்றனர். இதனால் தன் பெண்மைத் தன்மையை நிலைநிறுத்துவதாக அவர்கள் எண்ணுகின்றனர். திருநங்கையராக மாறிய எவரும் பெண்பால் பெயர்களை வைக்கத் தவறுவதில்லை. இதனை,

“உன்

பெயர் மாற்றம்

மூட நம்பிக்கைக்காக

என்

பெயர் மாற்றம்

பெண்மை நிலைநிறுத்தும்'' (நா.இ.நா. 43)

என்ற கவிதை அடிகள் தெரிவிக்கின்றன. இக்கவிதை அடிகளில் சமூகத்தில் உள்ள மக்கள் தங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று இராசிக்கு ஏற்றபடி பெயர் மாற்றம் செய்யும் மூடநம்பிக்கை விமர்சனம் செய்யப்படுகின்றது. மேலும், மற்றுமொரு கவிதையில்,

''என் பெயரில் பாதியைக் குறைத்து பெண்ணாக்கிக் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் எனக்குள் படிந்து போனது ஒரு மர்மமான உள் உருவம். ஆண்பிள்ளை விளையாட்டுக்கள் பிடிக்காமல் தொடர்ந்தன. பெண்பிள்ளை விளையாட்டுக்கள் என் உடம்புக்கு இணங்கிட வந்தன''[60]

எனும் கவிதை அடிகள் வழி, திருநங்கையருக்குப் பெண்பாற் பெயர்மீதும், பெண்பிள்ளை விளையாட்டுக்கள் மீதும் இயல்பாகவே உண்டாகும் ஆசையினையும் ஈடுபாட்டினையும் அறிய முடிகின்றது. குழந்தைப் பருவத்தில் பெண் குழந்தைகளோடு விளையாட எழும் ஆசைதனை,

''சிறுமிகளோடு

விளையாட ஆசை

விளையாடினால் பூசை'' (நா.இ.நா. 8)

என்ற கவிதை அடிகளிலும்,

''பள்ளிப் பருவம்

சிறுமிகளோடு

விளையாட விருப்பம்

குடும்ப கௌரவம்

டிரவுசரில் இருக்கும்'' (நா.இ.நா. 45)

என்ற கவிதை அடிகளிலும் திருநங்கையரின் வளரிளம் பருவத்தின் மனநிலை பதிவு செய்யப்படுகிறது.

1.1.2.4 திருநங்கையரும் சமுதாயப் பார்வைகளும்

மக்கள் ஒன்றுகூடி வாழும் அமைப்பு 'சமுதாயம்' எனப்படும். ஆண்கள், பெண்கள் கூடி வாழும் சமுதாயத்தில் திருநங்கையர் மட்டும் இதுவரை புறக்கணிப்புப் பார்வைகளுக்கே ஆளாகி வருகின்றனர். மாற்றுத் திறனாளிகளை இரக்கத்தோடு பார்க்கும் நம் சமுதாயத்தின் பார்வையில் திருநங்கையர் இழிவு நிலையிலேயே பார்க்கப்பட்டு வருகின்றனர். சமுதாய மக்கள் விளிம்பு நிலையில் வாழும் திருநங்கையரை வெறுப்பவர்களாகவும் உதாசீனப்படுத்துபவர்களாகவும் உள்ளனர். மனிதர்களாய்ப் பிறப்பெடுத்த ஆண்கள் பெண்கள் உயர்திணைகளாய் கருதப்படுமிடத்து திருநங்கையர் அஃறிணை உயிர்களாய்ப் பார்க்கப்படுகின்றனர்.

1.1.2.4.1 சமூகம், சமுதாயம் – சொற்பொருள் விளக்கம்

மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழும் அமைப்பே 'சமுதாயம்' ஆகும். சமுதாயம் என்பதற்கு,

> **''சமூகம் என்பது இணைந்து வாழும் மக்கள் தொகுதியைக் குறிக்கும். தனிமனிதர், குடும்பங்களாக, குழுமங்களாக, குழுக்களாக, குடிகளாகச் சேர்ந்து, ஒருவரையொருவர் வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும், பெருக்கத்திற்காகவும் சார்ந்தும் சேர்ந்தும் வாழும்போது சமுதாயம் உருவாகிறது''**[61]

என அன்னிதாமசு 'தமிழர் சமூகவியல்' நூலில் விளக்கம் தருகிறார். ஒட்டுமொத்த உறவுகள் கூடி வாழும் இத்தகைய சமுதாயத்தில் திருநங்கையர் கேலிப் பொருளாக

இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்தின் கீழான பார்வைக்கு அஞ்சி, தனக்குள் மையமிட்ட பெண்மை உணர்வினை மறைத்து வாழ்கின்றனர்.

1.1.2.4.2 உணர்விற்குத் திரையிடல்

ஆண் உருவிலிருந்துகொண்டு, பெண்ணாக மாறத்துடிக்கும் தங்களின் மனஉணர்வினையும், நடத்தை முறையினையும் சமுதாயத்தின் கேலி கிண்டலுக்கு அஞ்சி, திருநங்கையர் மறைக்கின்றனர். இதனால் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர்.

‘‘பூட்டிய அறைக்குள்
தனிமை நடனம்
ரகசியப் பெண்மை
அவஸ்தை உண்மை’’ (நா.இ.நா. 9)

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார். ‘அர்த்தநாரி’ எனும் கவிதையில்,

‘‘முலைப்பகுதியை
சட்டைக்குள்
மூடிக் கொள்ளலாம் . . .
ஒருபக்க முகநாணத்தை
தீவிரமாய் அடக்கி
கல் உணர்ச்சி முகமுழுக்கக்
காட்டிக் கொள்ளலாம்’’[62]

என்ற கவிதை அடிகளில் உடல் மாற்றத்தினையும், உணர்வு மாற்றத்தினையும் ஊராருக்கு அஞ்சி மறைக்கும் போக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

‘‘பார்வை உறுத்தல்

அதிகம் ஆனால்

முரணிப் போனதை

இசைத்துக் காட்டி

சிலையாப் போகலாம்

ஒரு நாள்

தேவன் ஆகலாம்’’[63]

என்று ‘சமுதாயத்தின் சொற்தாக்குதலுக்கு அஞ்சி, தன் உடலினையும், உணர்வினையும், வெளிக்காட்டாது ஒரு நாள் தேவ நிலைக்கு தன் நிலை மாறிப்போகலாம்’ என்று திருநங்கையரின் மனப்பதிவினை ந.ஜெயபாஸ்கரன் வெளிப்படுத்துகிறார்.

1.1.2.4.3 சமூகக் கண்ணோட்டம்

திருநங்கையர் சமூகத்தால் இழிவு நிலையில் பார்க்கப்பட்டு வருகின்றனர்.

‘‘இன்றைய சமுதாயத்தில் அவர்களை வேண்டத்தகாத பிறவிகளைப்போல நினைத்து வெறுத்து ஒதுக்குகின்றோம். அவர்களுக்கு உயிர், உணர்வுகள் இருக்கின்றன. அவர்களும் மனிதப் பிறவிகளே என்பதை மறந்து விடுகிறோம்’’[64]

என்று மு. அருணாசலம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். திருநங்கையர் சமுதாயத்தின் கேலிப் பேச்சுக்களுக்கு உள்ளாகி வருந்துவது சித்திரிக்கப்படுகின்றது.

‘‘வாழ்க்கையில்

உத்திரவாதமில்லை எதுவுமே

கிண்டல் தவிர’’ (நா.இ.நா. 13)

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார்.

திருநங்கையர் தன் வாயால் வாழ்த்துவதை ஏற்கும் சமூகம் அவர்களை ஏற்கவில்லை என்பதும் சித்திரிக்கப்படுகின்றது.

''நல்லது
நான் வாழ்த்துவது
நல்லதா
நீ தாழ்த்துவது'' **(நா.இ.நா. 31)**

என்ற அடிகள் மெய்ப்பிக்கின்றன.

தன் ஆண்குறி களைந்து மறுபிறப்பு எடுத்தபின்னும் தன்னைப் பெண்ணாகப் பார்க்க மறுக்கும் சமூகத்தினைச் சுட்டிக்காட்டுகின்றார் திருநங்கை கல்கி.

''மாதவம் ஏதும்
செய்யவில்லை நான்
குறி அறுத்து
குருதியில் நனைந்து
மரணம் கடந்து
மங்கையானேன்
கருவறை உனக்கில்லை
நீ பெண்ணில்லை
என்றீர்கள்'' **(கு.அ. 37)**

என்று தன் கவிதை அடிகளில் சமூகத்தின் மனநிலையைப் பதிவு செய்கிறார். திருநங்கையர் என்றாலே, முற்றிலும் தவறானவர்கள், பாலியல் தொழில் செய்பவர்கள் என்று கருதி வரும் சமூக மக்களைச் சிந்திக்க வைக்கும் கவிதை பின்வருமாறு அமைகின்றது.

‘‘நடுச்சாமம்

நகரின் ஒதுக்கமான வீதி

ஒப்பனைகளுடன் தோன்றிய அரவாணி

என்னைத் தயங்கி அணுகுகிறாள்

‘வர்ரியா’ என்று வினைவுமென

புணர்ச்சிக் குறுகுறுப்பில்

நின்றிருந்தேன்

மிக இயல்பாகக் கேட்டாள்

சார்.... ஈரோட்டுக்கு

இனிபஸ் இருக்குங்களா. . .?’’[65]

என்று மகுடேசுவரன் சமுதாய மக்களிடம் இருக்கும் திருநங்கையர் குறித்த தவறான பார்வையைப் பதிவு செய்கிறார் தபசி. ‘சுற்றம் சூழ’ எனும் கவிதையில் உறவினர்கள் மற்றும் சுற்றத்தினரோடு திருநங்கையரை இழிவான பார்வையில் ஒப்பீடு செய்கின்றார்.

‘‘உறவினர்களின் தொல்லை தாளவில்லை

எதிர்பாராத ஓர் இடத்தில்

ஐந்தாறு அலிகளுக்கு நடுவில்

மாட்டிக் கொண்ட

நிலையாகிவிட்டது நம்நிலை’’[66]

இக்கவிதையில் திருநங்கையர் மீதான இழிவான பார்வை உணர்த்தப்படுகின்றது. சமுதாயத்தில் உள்ள ஆண்களும் பெண்களும் திருநங்கையரைப் புறக்கணிக்கும் வகையில் நோக்குவதைக் கவிஞர் பாலா,

‘‘ஆண்கள்

பார்வையில் நாங்கள்

ஆபாசப் பொருட்கள்

பெண்கள் பார்வையில்

நாங்கள் ஒரு

பொருட்டே அல்ல''[67]

என்று தனது 'மூன்றாம் சாதி' எனும் கவிதையில் எடுத்துக்காட்டுகின்றார். திருநங்கையர் இச்சமூக மக்களிடம் கோரிக்கை வைப்பதாக மு. துர்காதேவி பட்டியல் இடுகின்றார்.

''எங்களை

ஏற்றுக் கொள்ள வேண்டாம்

உங்கள் கண்களின்

கேளிக்கை பார்வையையும்

உங்கள் இதழ்களின்

ஏளனப் புன்னகையையும்

நிறுத்தினால் போதும்

நாங்கள்

கடந்து செல்லும்

தருணங்களில்''[68]

என்று சமூகப் பார்வை மாறிட, குரல் கொடுக்கின்றார். சமூக அங்கீகாரம் திருநங்கையருக்கு இல்லாததை, முனைவென்றி நா. சுரேஷ்குமார்,

''எங்கு போனாலும்

அங்கீகாரம் பெற முடியாத

அனாதைகள்

நாங்கள்''[69]

என்று 'மூன்றாம் கோணம்' எனும் கவிதையில் சுட்டுகின்றார்.

1.1.2.4.4 மரித்துப்போன மனிதநேயம்

அஃறிணை உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ளும் சமுதாயத்தவர் உயர்திணை ஆயினும், 'திருநங்கையர்' மாறிய பாலினர் என்பதால் மனிதநேயமின்றி அவர்களிடம் நடந்து கொள்கின்றனர். இதனைத் திருநங்கையரே கேள்வி எழுப்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

''எங்களின் மலட்டுத்தன்மை
உங்களுக்கு வேடிக்கையென்றால்
நீங்கள் தொழுகின்ற
மனிதநேயமும் வேடிக்கையா?''[70]

என்று சமுதாயத்தில் மனிதம் மறக்கடிக்கப்பட்டுள்ளதைத் திருநங்கையரே விமர்சனம் செய்வதை கீழ்வரும் கவிதை உணர்த்துகின்றது.

''சாத்திரங்கள் சொல்வதில்லை
வேதங்கள் சொல்வதில்லை
எங்களை இழித்துரைக்க
மனிதாபிமானம் மறைந்ததா – இல்லை
மனிதம்தான் மறக்கடிக்கப்பட்டதா
துணையாய் இருக்க வேண்டாம்
துன்புறுத்தாது இருக்கலாமே''[71]

என்ற அடிகள் திருநங்கையர் துன்புறுத்துப்படுவதை உணர்த்துகின்றன. 'திருநங்கையரும் மனிதப் பிறவிகளே! அவர்களிடம் மனிதநேயமின்றி நடப்பது தவறு' என்பதைச் சுட்டுகிறார் கோபால்தாசன்.

''வேறுபடுத்திப் பார்க்கும் எங்களை
உங்களைப் போலொரு

மனிதப் பிறவிகள்தான் என்பதை

ஏன் மறந்து போனீர்கள்?''[72]

என்று இக்கவிதைமூலம் வலியுறுத்துகிறார். மதுரா 'காகித மலர்கள்' எனும் கவிதையில்,

''மனிதம் மலர்ந்த மாநிலத்தில்

கருணைக்குப் பஞ்சமா?

நாங்கள் கடவுளின் சந்நிதியில்

மலர்ந்த காகித மலர்கள்''[73]

என்று மனிதத்தை மலரச் செய்த இம்மாநிலத்தில் இப்போது கருணைக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதை விமர்சனமாகப் பதிவாக்குகின்றார்.

1.1.2.4.5 இழிசொற்களால் அழைத்தல்

இலக்கணம், இலக்கியம், இதிகாசம், நிகண்டு என எல்லாப் பனுவல்களிலும் திருநங்கையரைக் குறித்து ஏதாவது சொல்லாக்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் அவை இழிவுநிலைச் சொற்களாகவே உள்ளன. 'திருநங்கை' என்ற சொல்லாட்சி அங்கீகாரம் பெற்ற பொதுப்பெயராக திருநங்கையருக்கு வழங்கப்பட்டபோதிலும், அவர்கள் 'அலி', 'அஜக்', 'பொட்டை', 'ஒன்பது', 'உஷ்' போன்ற பலவாறான இழிசொற்களிலேயே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

1.1.2.4.6 திருநங்கையரைக் குறிக்கும் சொற்கள்

திருநங்கையரைக் குறிக்கும் பால்மருள் சொற்களாக,

''அண்ணகன், அண்ணாளன், அல்லி, அலி, அழிதூஉ, ஆண் பெண்ணல்லாதவன், ஆணலி, இடபி, இப்பந்தி, கிலீபம், கிலீவம், கோஷா, சண்டம், சண்டன், சிகண்டி, தூவரன், நபுங்கிஷம், நபுஞ்சகம், நபுஞ்சகன்,

நபுஞ்சம், நம்புஸகம், நாமர்தா, பண்டகன், பெட்டையன், பெண்டகம், பெண்டகர், பெண்டகன், பெண்டர், பெண்டு, பெண்ணலி, பெண்ணைவாயன், பேடர், பேடர்கள், பேடன், பேடி, பேடியர், பேடு, பேடுகள், பேதை, மகண்மா, மருள், வசங்கெட்டவன், வண்டரன், வருடவரன், வறடன்''[74]

முதலிய 'நாற்பத்தி ஐந்து' சொற்களை 'அன்னிதாமசு' பதிவு செய்கிறார். மு.அருணாசலம் தனது நூலில்,

''பால்மாறிகள், பொட்டைமாறிகள், கோத்தி, ஒம்பது, பொட்டை, அலி, பேடு, பொட்டையன், ரெண்டுங் கெட்டான், கீரவடை, பேடி, பொம்பளச்சட்டி, கொச்சவாடு, நெளிவுக்காரிகள், குஸ்கா போன்ற பெயர்களைச் சுட்டி அழைத்து அவர்களின் மனம் புண்படும்படி செய்யும் நிலையினை இந்தியா மற்றும் தமிழ்ச் சமூகங்களில் காணமுடிகின்றது''[75]

என்று கூறுவதிலிருந்து சமூகத் தளத்தில் திருநங்கையரை மிகக் கீழான பெயர்களில் அழைக்கும் போக்கினை அறிய முடிகின்றது.

'அரவாணி' என்ற பெயரும் ஆன்மீகம் நிறைந்த பெயராகக் கூறப்படுகிறது.

''அரவாணிகள் என்னும் பெயர் அருவெறுக்கத்தக்க பெயர் அல்ல. இது ஆன்மீகம் நிறைந்த பெயர் ஆகும். 'அரவான்' என்றால் பாம்பு, வாணி என்றால் கன்னி, ஒரு நாகக்கன்னிக்கும் அர்ஜுனனுக்கும் ஆணும் இல்லாமல், பெண்ணும் இல்லாமல் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு 'அரவான்' என்று பெயர். அந்தப் பெயரே எங்களுக்கு வந்துவிட்டது''[76]

என்று 'நாங்களும் மனிதர்கள்தான்' என்ற கட்டுரையில் திருநங்கையர் குறிப்பிட்டுள்ளனர்.

> ‘‘ஹிஜ்ரா/ அரவானி / திருநங்கை – இவர்கள் உடல்ரீதியாக ஆண்களாகப் பிறப்பவர்கள். எனினும் மனரீதியாகத் தங்களைப் பெண்களாகவே உணர்பவர்கள். பின் தங்களது வாழ்வில் ஒரு சமயத்தில் அந்த ஆண் பாலடையாளத்தை நிராகரித்து பெண்ணாகவோ அல்லது மூன்றாம் பாலினமாகவோ தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஹிஜ்ரா என்ற சொல் வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அரவாணி மற்றும் திருநங்கை என்ற பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.’’[77]

என்று ‘பாலியல்சார் சொற்களஞ்சியம்’ கட்டுரையில் திருநங்கையர் குறித்த விளிப்பெயர்களுக்கு விளக்கம் தரப்படுகிறது.

1.1.2.4.7 பெயர் மாற்றம்

இழிசொற்களில் சுட்டப்பட்டு வந்த திருநங்கையருக்கு முதன்முதலில் ‘அரவாணி’ என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

> ‘‘1997 –ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் கூவாகம் திருவிழாவிலிருந்து ‘அரவாணி’ என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றனர். விழுப்புரம் மாவட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆர். இரவி ஐ.பி. எஸ். அவர்கள் இப்பெயரைச் சூட்டினார்’’[78]

என்று கி. அய்யப்பன் பதிவு செய்துகிறார்.

> ‘‘திருநங்கை என்னும் பெயரை வைத்தவர் நர்த்தகி நடராஜ். இவர் ஒரு திருநங்கை என்பது குறிப்பிடத்தக்கது’’[79]

என்றும் கி.அய்யப்பன் குறிப்பிடுகிறார். ‘திருநங்கை’ என்ற வார்த்தையை உருவாக்கியதன் காரணத்தை ‘திருநங்கை நர்த்தகி நடராஜ்’ தெரிவிக்கின்றார்.

''சங்க இலக்கியங்கள் நங்கை என்று குறிப்பிட்ட பெண், எப்படி இருப்பாள் என்று ஒவ்வொரு அவயங்களாக வர்ணித்துள்ளார்கள். அவளின் உதடு, கன்னம், கண், மார்பு உட்பட பல அவயங்களை வர்ணித்துள்ள அழகை படித்து ரசித்த நான், அதை அப்படியே என்னுடன் ஒப்பிட்டு பார்த்தேன். நான் நங்கை என்றே உணர்ந்தேன். நங்கைக்கு பெருமை சேர்க்கும் வகையில் 'திரு' என்ற அடைமொழியைச் சேர்த்து 'திருநங்கை' என்று என்னை அடையாளப்படுத்திக் கொண்டேன்''[80]

என்று ஒரு நேர்காணலில் கூறியிருக்கிறார். மேலும், அவர், 'மற்ற மொழிகளில் திருநங்கையரை அவர்களின் உடல் மொழியால்தான் அழைக்கின்றனர். தமிழில் மட்டும்தான் 'திருநங்கை' என்று அழைப்பதாக பெருமைபடக் கூறுகிறார். இன்றைய காலத்தில் 'திருநர்' என்று சொல்லாட்சியும் திருநங்கையரைக் குறிக்கின்றது. 'திருநங்கை' எனும் சொல்லிற்கு,

''திரு + நங்கை = திருநங்கை. 'திரு' என்பது ஆண் பாலினத்திற்கு மரியாதையின் நிமித்தம் சேர்க்கப்படும் முன்னொட்டு. அவற்றுடன் பெண்பாலைக் குறிக்கக்கூடிய சொல் 'நங்கை' இணைந்து வந்து திருநங்கையாகச் சிறப்புத் தருகிறது''[81]

என்று மு.அருணாசலம் விளக்கம் தருகிறார்.

எது எவ்வாறாயினும் திருநங்கையரை இழிசொற்களால் அழைக்கும் நிலை மாறவில்லை என்பதனைப் புதுக்கவிதைகள் முன்மொழிகின்றன.

''தண்டனைச் சிலுவை
நிச்சயம்
பறையன்
என அழைத்தால்

ஒம்போது

என அழைத்தால்?'' (நா.இ.நா. 47)

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி தம் கவிதை வாயிலாக நெறிப்படுத்துகிறார். திருநங்கையரை அவதூறாகப் பேசுவோருக்கு அரசு தகுந்த தண்டனைகளைக் கொடுத்தால் இந்நிலை மாறும். 'பொட்டை' என்ற சொல்லால் திருநங்கையரை அவமதிப்பதைத் திருநங்கை கல்கி தெரிவிக்கின்றார்.

''போகிறது பார்

'பொட்டை' என்று

நகைத்துச் சிரித்தார்கள்

ஆண்மையை

தொங்கவிட்டுக் கொண்டிருப்பவர்கள்'' (கு.அ. 58)

என்ற கவிதை அடிகளில் தங்களைச் சமூகம் அழைக்கும் அவப்பெயரினையும் அவ்வாறு அழைத்து அவமதிப்போரை இடித்துரைக்கும் போக்கினையும் பதிவு செய்கிறார். சமூக மக்களின் பார்வையில் திருநங்கையரை இழிவாக 'ஒன்பது' என அழைக்கும் போக்கினை பொ.செந்திலரசு பதிவு செய்கிறார்.

''ஒவ்வொரு பார்வையும்

ஒம்போதென

விளிக்கும் போதெல்லாம்

இயலாமையில் வீழ்ந்து

புள்ளியாய்ச் சுருங்கிறதென் வாழ்வு''[82]

'பிறவிப் பெருங்கடல்' எனும் கவிதையில் கீழான வார்த்தையால் திருநங்கையரை இச்சமூக மக்கள் அழைப்பதினால் அவர்களுக்கு ஏற்படும் மனவலி குறித்துப் பதிவு செய்யப்படுகிறது. திருநங்கையர் எவ்வளவு திறமை,

அறிவு, படைத்தவர்களாக இருப்பினும் அவர்களைச் சமுதாயம் பார்க்கும் பார்வை என்பது இன்றளவும் மாறிவிடவில்லை.

“பெற்ற டிப்ளமோ
கற்ற நடனம்
எழுதிய கவிதைகள்
எல்லாம்
ஒற்றை வார்த்தையில்
பொசுங்கிப் போனது
பொட்டை”[83]

என்ற ஜீவியின் அடிகள் மெய்ப்பிக்கின்றன. இன்குலாப்பின் ‘ஆண்மையோ ஆண்மை’ எனும் கவிதை,

“இழிசொல்லாக நானும் என் உடலும்
இல்லாத என்தமிழ் கேட்பேனோ”[84]

என்று திருநங்கையரை இச்சமூகம் இழிசொல்லால் அவமதிக்கும் போக்கு தெரிவிக்கப்படுகிறது. அதிலிருந்து தங்களுக்கு மாற்றுநிலை அமைய வேண்டும் என்ற திருநங்கையரின் ஏக்க உணர்வினையும் அறிய முடிகின்றது.

1.1.2.5 திருநங்கையரும் ஆண்மையவாத எதிர்ப்பும்

பிறப்பாலும் வளர்ப்பாலும் ஆணாக இருந்த போதிலும் உளவியல் சார்ந்து தன்னைப் பெண்ணாக உணரும் திருநங்கையர் ஆணுருவை வெறுத்து ஒதுக்குகின்றனர். புறத்தோற்றத்தில் ஆண் என தங்களைச் சமூகம் அடையாளப்படுத்துவதைத் திருநங்கையர் அறவே வெறுக்கின்றனர். தங்களை உடல் இன்பத்திற்காக மட்டுமே நாடும் ஆண்கள்மீது வன்மம் உடையவர்களாகத் திருநங்கையர் இருக்கின்றனர். சமூகக் கட்டுக்குள் வைக்க எண்ணுகின்ற ஆண்

சமூகத்தின் ஆதிக்கப்பிடியிலிருந்து தங்களைத் தளர்த்திக்கொள்ளத் திருநங்கையர் முன்வருகின்றனர். பிறப்பால் பெண்ணாக இருப்போருக்கு 'ஆண் சமூகம்' கொடுக்கும் இன்னல்கள் ஏராளம். முற்போக்குப் பார்வையில் நோக்கும் போது திருநங்கையருக்கு 'கருப்பை' இல்லாததே அவர்களுக்கான மிகப்பெரிய விடுதலை என்று கூற வேண்டும். தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையரின் ஆண்மையவாத எதிர்ப்பு அழுத்தமாகப் பதிவு செய்யப்படுகிறது.

1.1.2.5.1 திருநங்கையரின் மீதான வன்புணர்வு

ஆண்கள், பெண்களைத் தம் சுய இச்சைக்காக வன்புணர்வுக்கு ஆட்படுத்துகின்றனர். அவ்வகையில், திருநங்கையராய்ப் பிறப்பெடுப்பவர்கள் கேட்பாரின்றி, ஆதரவின்றி இருப்பதால், அவர்கள்மீது இன்னும் அதிகமாகவே தம் ஆதிக்கத்தினைச் செலுத்தி அவர்களை வன்புணர்வுக்கு உட்படுத்துகின்றனர். இதனை ஆண்டாள் பிரியதர்ஷினி,

"சிங்கம் புலி தெய்வம்
எனது சதைக்கு
அலையும்
உன்னை விட" (நா.இ.நா., 30)

என்று கூறுகிறார். இக்கவிதையில் 'திருநங்கையரை வன்புணர்ச்சிக்கு உட்படுத்த எண்ணும் ஆண்களை விட, காட்டு மிருகங்கள் மேலானவை' என்ற கருத்து பெறப்படுகிறது. மேலும், கைதட்டிக் கடைகேட்டு வாழ்க்கை நடத்தும் திருநங்கையரைப் பாலியல் கண்ணோட்டத்துடனேயே அணுகும் ஆண்கள் விமர்சனம் செய்யப்படுகின்றனர்.

"கைதட்டிப்
பிச்சை கேட்கிறேன்

நான்

இச்சை கேட்கிறாய்

நீ . . .'' (நா.இ.நா. 41)

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி தன் கவிதையில் பதிவு செய்கிறார். திருநங்கையரின் விருப்பம் இன்றி அவர்களைக் கட்டாயமாக 'வன்புணர்வு' செய்யும் ஆண்களைச் சாடுகின்றார் திருநங்கை கல்கி.

''என் உணர்வு குறித்து

எவ்வித கேள்வியுமின்றி

புணர்வு ஒன்றே

புரிதலான

உன்னைப் போன்றவர்கள்

வல்லூறுகளை விடவும்

கொடிய

பிணந்தின்னிகள்'' (கு.அ. 102 – 103)

என்று பதிவு செய்கிறார். திருநங்கையரின் உணர்விற்கு மதிப்பளிக்காது, அவர்களை வன்புணர்வுக்கு உட்படுத்தும் சமூக ஆண்களைப் 'பிணந்தின்னிகள்' என்று வன்மையாகக் கண்டிக்கின்றார்.

''பிள்ளைப்பாசம் காமமாய் பெருகி சுரமேந்த

காது மூக்கு கொங்கை கொண்டை

முன்னும் பின்னும் கொய்துச் சூறையீட்டீர்''

என்ற தவசிக் கருப்பசாமியின் 'அழிபசி' கவிதை அடிகளின்வழி, திருநங்கையரை முழுவதுமாய்ச் சூறையாடும் ஆண்களின் கீழ்மனம், புத்தி வெளிப்படுத்தப்படுகின்றன.

1.1.2.5.2 ஆண்கள்மீது வன்மம்

திருநங்கையர்மீது சமூக ஆண்களின் கண்ணோட்டம் பாலியல் சார்ந்த ஒன்றாக இருந்து வருகின்றது. திணிப்புகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் திருநங்கையர் பெருமளவில் ஆளாகின்றனர். இதனால் அவர்களின் மனஉணர்வு ஆண்கள்மீது வன்மமாக மாறுகின்றது. இதனைத் திருநங்கை கல்கி பெருமளவில் தன் கவிதைத் தொகுப்பான 'குறி அறுத்தேனில்' பதிவாக்கியிருக்கிறார்.

''எனக்கு முன்பும்
அதற்கு முன்பும்
எம்மை
சூறையாட விழைந்த
கயவர்களின்
கைகளை
கதறக்கதற
அறுப்பேன்'' (கு.அ. 22)

என்று திருநங்கையர் இனத்தைத் தம் சுய இச்சைக்கு உட்படுத்திய ஆண்களின் மீதான வன்மத்தை வெளிப்படுத்துகின்றார். அண்டை நாடான இலங்கையில் தமிழ்ப் பெண்களின்மீதும், சிறார்கள்மீதும் வன்புணர்வுகள் நிகழ்த்தப்படுகின்றன.

''ஒண்டியிருக்கும் குடிசைக்குள்
ஓலம் இடும் சத்தம்
இலங்கை ராணுவத்திற்கு
இனவெறி மட்டும் இல்லையாம்
தமிழ்ப் பெண்கள் மீது
காம வெறியும் உண்டாம்''[86]

என்ற த.சுமித்ராவின் கவிதை பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்திய அவல நிலையைத் தெரிவிக்கின்றது. இவ்வாறு வன்புணர்வுக்கு ஆளாகும் ஈழத்துப் பெண்களைத் தன்னுடைய சகோதரியாகக் கல்கி பாவிக்கின்றார்.

''இப்போதெல்லாம்
வடுக்களை நான்
தொடும்போது
ஐயோ
வயிறு கிழிந்து
யோனி பிளந்து
இறந்து போன
என் ஈழத்துச் சகோதரியின்
நினைவுகள்
நெருப்பாய் தகிக்கிறதே
அவளைப் பிளந்து
கொன்ற மிருகங்கள்
அத்தோடு விடவில்லையே
அவள் பெற்ற
நன் மக்களையும்
தரையில்
தலையடித்துக்
கொன்றனரே'' (கு.அ. 32–34)

என்று தன்னுடைய அறுவைச் சிகிச்சைக்குப்பின் உள்ள உடல்நிலையை ஈழத் தமிழ்ப் பெண்களின் இரங்கத்தக்க நிலையோடு ஒப்பிடுகிறார் திருநங்கை கல்கி.

திருநங்கையரை அவமதிக்கும் நோக்கில் ஆண்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதிலடி கொடுக்கும் முகமாக 'முன்குறிப்பு' எனும் கவிதையில் உரையாடல் முறையில் பதிவு செய்யப்படுகின்றது.

''தோழி?

சொல்லுங்கள் தோழர்,

தவறாக நினைக்கவில்லையெனில்

ஒன்று கேட்கட்டுமா?

கேளுங்கள் தவறாக நினைக்கமாட்டேன்

உங்கள் மார்பு உண்மையா?

ம்.

ஓ.

தவறாக நினைக்கவில்லையெனில்

இன்னொரு கேள்வி

ம்...

உங்களுக்கு பெண்குறி உண்டா? பெண்ணைப் போலவா?

ம்.... தோழர்..?

சொல்லுங்கள் தோழி...

தவறாக நினைக்கவில்லெயெனில்

ஒன்று கேட்கட்டுமா?

தயங்காமல் கேளுங்கள் தோழி

தவறாக நினைக்க மாட்டேன்,

உங்களுக்கு ஆண்குறி உண்டா?'' (கு.அ. 63–64)

என்ற அடிகள் ஆதிக்க எண்ணம் மிகுந்த ஆண்களின் வன்மப் பார்வையினை வெளிப்படுத்துகிறது.

1.1.2.5.3 ஆணுருவை வெறுத்தல்

தன்னை முழுவதுமாகவே ஒரு பெண்ணாக உணரும் திருநங்கையர் அதற்கு முழுத்தடையாக இருக்கும் ஆண் உடலினை அறவே வெறுக்கின்றனர். அவ்வுடலில் இருந்து தன்னை மீட்டெடுக்க விரும்புகின்றனர். இதனை சுகந்த லெட்சுமி,

> **''மனதிற்கேற்ப உடலைச் செதுக்கினால் அது பாவமா? என்பதற்கிணங்க, ஆணின் அடையாளமாகிய திருவை வெட்டி விடுவதே இவர்களின் தீர்ந்து போன வலி''**[87]

என்று தமது கட்டுரையில் பதிவு செய்கிறார். ஆணுருவை வெறுக்கும் திருநங்கையரின் மனப்போக்கினையும் தமிழ்ப் புதுக்கவிதைகள் பதிவாக்கி இருக்கின்றன.

'தன்னுடம்பில் இருக்கும் ஆணுறுப்பை நீக்கியே தீர வேண்டும். இல்லையெனில், இறந்து எரிந்தாலும் பரவாயில்லை' என்ற திருநங்கையரின் மனப்போக்கும் தெரிவிக்கப்படுகின்றது. இதனை,

> **''வெட்டி**
> **எறிய வேண்டும்**
> **அல்லது**
> **செத்து**
> **எரிய வேண்டும்'' (அ.நா.இ.நா. 8)**

என்ற கவிதை அடிகள்மூலம் உணர முடிகின்றது. அவ்வாறு ஆண் உறுப்பினை வெட்டி எறிந்தாலும், தன் ஆண், பெண் அல்லாத பிறப்பினை மாற்ற இயலாத நிலையில் திருநங்கையர் இருக்கின்றனர்.

“வெட்டி எறிவது

உறுப்பையா?

ரெண்டுங் கெட்ட

பிறப்பையா?” **(நா.இ.நா. 18)**

என்ற கவிதை அடிகளில் திருநங்கையரின் பிறப்பு குறித்த அவர்களின் ஆதங்கம் வெளிப்படுகின்றது.

இன்றுவரை, பெண்பிள்ளை என்றால் முகம் சுழிக்கும் நம் சமூகத்தில் ‘பெண்சிசுக் கொலை’ நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றது.

“பெண் சிசுவை பெற்றெடுக்கும் தாயே, தன் கையால் பாலூட்டிச் சீராட்டி வளர்க்க வேண்டிய பெண் குழந்தையை, எருக்கம் பாலூட்டி, நெல்மணி புகட்டி அழித்துவிடும் அவலத்திற்கு தள்ளப்பட்டு விட்டாள் என்பது நிதர்சனமான உண்மையாகும்”[88]

என்ற ‘ஷ்யாமாவின்’ கருத்து சிந்தித்தற்குரியது. திருநங்கையர் ஆணுருவை வெறுப்பதை ஆண்டாள் பிரியதர்ஷினி கீழ்வருமாறு தெரிவிக்கின்றார்.

“நீ வெறுப்பது

பெண் கருவை

நான் வெறுப்பது

ஆண் உருவை

எனக்கு மட்டும்

ஏன் சிலுவை” **(நா.இ.நா. 28)**

என்ற அடிகளில் ‘வயிற்றுக்குள் இருக்கும் கரு, பெண்ணாக இருந்தால் அதை வெறுக்கும் சமூக மக்களுக்குத் தண்டனை கிடைப்பதில்லை. ஆனால் ஆணுருவை வெறுக்கும் எனக்கு மட்டும் ஏன் தண்டனை?’ என்று திருநங்கையர் சமூக மக்களிடம் வினா தொடுப்பதாக இக்கவிதை அமைகின்றது.

“கை பரபரக்கும்

முறுக்கிச் சிதைத்துப்

பிய்த்துப் போட

ஆண் உடம்பு வெறுப்பு

பெண் உடம்பே சிலிர்ப்பு” (நா.இ.நா. 34)

என்ற கவிதைவழி, ஆணுடம்பில் திருநங்கையருக்குள்ள வெறுப்பையும், பெண்ணுடம்பின் மீதான ஈர்ப்பையும் அறிய முடிகின்றது.

1.1.2.6 திருநங்கையரும் வாழ்வியல் சிக்கல்களும்

மாறிய பாலினர் என்பதால் சமுதாயத்தில் திருநங்கையர் நாள்தோறும் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஏராளம். திருநங்கையரின் வாழ்வு, குடும்பம், சமூகம் என இருமுனை சார்ந்த போராட்டக் களமாக அமைகின்றது. மனிதர்களுக்கு அடிப்படை உரிமைகளாகக் கிடைக்கக் கூடியவை கூட, திருநங்கையருக்கு மறுக்கப்பட்டவையாக இருந்து வருகின்றன. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, அங்கீகாரம் என அனைத்தையும் போராடியே பெற வேண்டிய சூழ்நிலைக்குத் திருநங்கையர் தள்ளப்படுகின்றனர். அவ்வாறு அவர்கள் போராடினாலும் கிடைக்கப் பெறாதவைகளும் இருக்கவே செய்கின்றன. அவை ஆராயப்படுகின்றன.

1.1.1.2.6.1 திருநங்கையர் தனிமைப்படுத்தப்படுதல்

திருநங்கையரின் பாலின மாற்றத்தைக் குடும்பமும், சமூகமும் அறியத் துவங்கும்போதே அவர்கள் தனிமைப்படுத்தப்படுதலும் துவங்கி விடுகின்றது.

“ஆண்களாலும், பெண்களாலும், உற்றார் உறவினர்களாலும், குடும்பத்தாலும், ஒட்டுமொத்தச் சமூகத்தாலும் துரத்தியடிக்கப்பட்டு அகதிகளாகச் சொந்த

நாட்டில் வாழும் சூழ்நிலையில் திருநங்கையர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்''[89]

என்று த. திருமால் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். திருநங்கையராகிய தாங்களும் மனிதர்களே என்ற அவர்களின் ஆற்றாமையின் வெளிப்பாட்டினை ஆண்டாள் பிரியதர்ஷினி,

''சுவாசிக்க விடு
எனக்கும் பங்குண்டு
பூமிக்காற்றில்'' (நா.இ.நா. 10)

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார். சமூக மக்கள் திருநங்கையரை உயிர் வாழ விடாது புறந்தள்ளும் போக்கு புலனாகிறது. மாறுபட்ட கண்ணோட்டத்தோடு தங்களை அணுகும் சமூக மக்களிடம், திருநங்கையர் தாங்களும் சாதாரண மனிதர்களே! என்று கூறும் போக்கினையும் உணர முடிகின்றது. இதனை,

''நான் யார்?
நீ யாரோ
அதேதான்'' (நா.இ.நா.10)

என்ற அடிகளின்மூலம் அறிய முடிகின்றது.

1.1.2.6.2 வலி நிறைந்த வாழ்க்கை

'திருநங்கையரின் வாழ்க்கை வலி மிகுந்த வாழ்க்கை' என்பதும் கவிதைகளில் பதிவாகி இருக்கிறது.

''உனக்கு நூறுவலி
எனக்கு ஒரேவலி
அரவாணியாக இருப்பது'' (நா.இ.நா. 11)

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி திருநங்கைகளுக்கு இருக்கும் தீராத வலியாக அவர்களது பிறப்பு அமைந்திருப்பதை உணர்த்துகின்றார்.

திருநங்கையரின் உடலும், மனமும் காயப்படும் வாழ்நிலையையும் அதிலிருந்து மீள வேண்டும் என்ற வேட்கையினையும் உணர்த்துகின்றார்.

''மனம் கொத்தாத
மனிதரைத் தேடு
உடல் கொத்தாத
உன்னதம் தேடு'' (கு.அ. 31)

என்று திருநங்கை கல்கி கூறுகிறார். 'மூன்றாம் சாதி' எனும் கவிதையில், திருநங்கையரின் வாழ்வு வலி நிறைந்ததாக இருப்பதையும் அவ்வலியினை இச்சமூக மக்கள் அனுபவித்தால்தான், அவர்களால் அதை உணர முடியும் என்பதையும் திருநங்கையரின் வாய்மொழியாகத் தெரிவிக்கின்றார்.

''எங்களின் நிர்வாணம் – எங்கள்
திணிக்கப்பட்ட ஆயுதம்
பிச்சை சமூகம் தந்த பாத்திரம்
புறக்கணிக்கப்பட்டவர்களிடம்
தர்மம் பார்ப்பவர்களே வாழ்ந்து
பாருங்கள் வலி தெரியும்''[90]

என்று கவிஞர் பாலா குறிப்பிடுகிறார். 'கறுப்பு மலர்கள்' எனும் கவிதைத் தொகுதியில் திருநங்கயரை நா.காமராசன் 'காகிதப் பூக்கள்' எனக் குறிப்பிடுகிறார்.

''தாய்ப்பெண்ணோ முல்லைப்பூ
தனிமலடி தாழம்பூ
வாய்ப்பந்தல் போடுகின்ற நாங்கள்
காகிதப் பூக்கள்''[91]

என்று 'தாய்மை உடைய பெண்ணையும் மலட்டுத் தன்மை உடைய பெண்ணையும் மலர்களாக ஒப்பிடுகின்றார். ஆனால் திருநங்கையரோ, மணமில்லா காகித மலர்கள்' என்று திருநங்கையரின் மனவலியினை அடையாளப்படுத்துகின்றார். சமுதாய மக்களின் கேலிக்கும், கிண்டலுக்கும், சீண்டலுக்கும் பயந்து திருநங்கையர் ஓடுவது காட்டப்படுகின்றது.

''மண்ணெண்ணையைத்
தலையில் ஊற்றிக் கொண்டு
ஒரு தீக்குச்சிக்குப் பயந்து
வீதியில் ஓடுவது போன்றிருக்கிறதே''[92]

என்று கூறுகிறார் கோபால்தாசன். திருநங்கையரைப் போராளியாகப் பதிவு செய்கின்றதையும் சஷ்மி, ஸ்ரீதர் சதாசிவன்,

''நான்
ஒரு போராளி உங்களைப் போலவே
இயற்கையின் சீற்றத்தையும் மனிதனால்
நடத்தப்படும் பேரழிவுகளையும் சந்திக்கும்
ஒரு போராளி''[93]

என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறு பிற மனிதர்களாலும் திருநங்கையர் போராட்டங்களுக்கு உள்ளாகின்றனர்.

1.1.2.6.3 இருப்பும் எதிர்ப்பும்

திருநங்கையர் அன்றாடம் சந்திக்கும் போராட்டங்கள் அளவிடற்கரியன.

''பெண்ணினம் குறித்தும் ஆணினம் குறித்தும் புரிந்து கொள்ள மெனக்கிடும் மனிதர்கள் தம்மோடு சக மனிதர்களாய் பிறந்திட்ட அரவாணிகள் குறித்து

புரிந்து கொள்வதற்கு ஏன் மறுக்கிறார்கள் என்பதை எண்ணும்பொழுது வேதனை அளிக்கிறது''[94]

என்று தம் கட்டுரையில் 'பூங்குழலி' குறிப்பிடுகிறார். சமூக மக்களின் புரிதலின்மையே திருநங்கையரின் வாழ்வைச் சிக்கல்களுக்கு உரியதாய் மாற்றுகின்றது. திருநங்கையருக்கு கௌரவமான இருப்பும், இறப்பும் அமைவதில்லை என்பதும் கவிதையில் தெரிவிக்கப்படுகின்றது.

''கிடைக்குமா?
கௌரவமான
இருப்பும்
இறப்பும்
யார் பொறுப்பு அது?'' (நா.இ.நா. 58)

என்கின்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி. திருநங்கையரின் இறப்பு யாருக்கும் தெரியாமல் மறைந்து, மறைத்து எடுத்துச் செல்லப்படும் அவல நிலை கீழ்வருமாறு சித்திரிக்கப்படுகின்றது.

''அலிகள் பாடும் பாடலில்
நடுத்தெருவில் மயானமென்று
மறைந்து
மறைத்துச் செல்கிறது''[95]

என்று பழனிவேல் தமது 'பால்மாறிகள்' எனும் கவிதையில் பதிவு செய்கிறார். பேருந்துப் பயணம் என்றாலே இருக்கைகள் இன்றித் தவிப்போர் ஏராளம். அவ்விடத்து திருநங்கையர் அமர்ந்த இருக்கையில், கூட்ட நெரிசலில் தவித்தாலும், யாரும் அமர முன்வருவதில்லை. இத்தகு போக்கினை 'மூன்றாம் பாலினம்' எனும் கவிதையில் பதிவு செய்கிறார் ஆ.ஆறுமுகம்.

“பேருந்துப் பயணத்தில்

பெருங்கூட்ட நெரிசலில்

தாய்மார்களும் தங்கைகளும்

நின்று சலிக்கையில்

என்னருகே இருக்கை காலியாய்”[96]

என்ற அடிகளில் திருநங்கையரைச் சக மனிதர்களாக ஏற்க மறுக்கும் சமூக மக்களின் மனநிலை சித்திரிக்கப்படுகின்றது.

1.1.2.6.4 திருநங்கையரும் குடியிருப்பின்மையும்

கிராமத்திலும், நகரத்திலும், பெற்றோராலும், ஊராராலும் துரத்தியடிக்கப்பட்டு நிற்கதியாய் நிற்கும் திருநங்கையருக்கு வீடு வாடகைக்குத் தர யாரும் முன்வருவதில்லை. ஒரு சில இடங்களில் கொடுக்க முன்வரினும், இரட்டிப்பான வாடகையை வசூலிக்கின்றனர். அவ்வகையில் திருநங்கையருக்கு இன்றுவரை சரியான இருப்பிடம் என்பது இல்லாமலேயே இருந்து வருகின்றது.

“இன்றுவரை முறையான குடிமக்களாக அங்கீகரிக்கப்படாமல் தாய்நாட்டு அகதிகளாக அடையாளம் இன்றி வாழும் மனிதர்களான திருநங்கைளுக்கு கல்வி, வேலை வாய்ப்பைவிட பிராதன சவால் வாடகைக்கு வீடு கிடைப்பதே”[97]

என்று லிவிங் ஸ்மைல் வித்யா கூறுவதிலிருந்து அறியலாம்.

ஆந்திராவில் அரசு வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கும் முதல் திருநங்கை என்ற சிறப்பைப் பெற்றிருப்பவர் ஜானகி. இவர் நாளிதழ் பதிவொன்றில்,

“5 ஆண்டுகளாக இரவில் பொது இடங்களிலும், கோவிலிலும் தங்கியிருக்கிறார்.”[98]

என்று கூறுவதிலிருந்து திருநங்கையருக்கான குடியிருப்புப் போராட்டம் குறித்து அறிய முடிகின்றது.

‘‘குடியிருக்கிறேன்
மண் தரையில்
தகரக் குடிசையில்
மாடுகளுக்குக் கூட கிடைக்கும்
வசதியான கொட்டகை’’ (நா.இ.நா. 39)

என்ற ஆண்டாள் பிரியதர்ஷினி வரிகளின்வழி, அஃறிணை உயிர்களின் வசிப்பிடத்தைவிட, திருநங்கையரின் வசிப்பிட நிலை மோசமானதாக இருப்பதனை அறிய முடிகின்றது.

‘‘தரமறுப்பதேன்
வாடகை வீடு
நீ வசிப்பதும்
வாடகை வீடுதானே
சாஸ்வதமா
உன் உடம்பு’’ (நா.இ.நா. 42)

என்று ‘வாடகை வீடு தர மறுக்கும் சமூக மக்களும், நிலையற்ற ‘உடல்’ எனும் வாடகை வீட்டில்தானே வசிக்கின்றனர்’ என்று ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

1.1.2.6.5 திருநங்கையரும் கல்வி மறுப்பும்

ஒரு மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடத்தை அடுத்து உரிமைகளில் ஒன்றாய் இருப்பது ‘கல்வி’. மனித வாழ்க்கையை நெறிமுறைப்படுத்துவதில் கல்வி முக்கியப் பங்கு ஆற்றுகின்றது. ‘ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி அவனது ஏழு பிறவியிலும் உடனிருந்து உதவும்’ என்பதைத் திருவள்ளுவர்,

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து” (குறள்: 398)

என்கிறார். ஔவையாரோ,

“கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே”[99]

என்று கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். அறியாமையைப் போக்கும் அருமருந்தான இத்தகைய கல்வியை, அரசாங்கத்தின் ஆணைப்படி ‘கட்டாயக் கல்வியாக’ அனைவரும் பயில வேண்டும் என்பதனைப் புலவர் த. வேலு,

“அனைவருக்கும் கல்வி என்ற

அவசியத்தை உணரனும்

அரசுபோடும் ஆணை ஏற்று

அதன்படியே நடக்கணும்”[100]

என்று தன் கவிதையில் குறிப்பிடுகிறார். இத்தகு சிறப்பு மிகுந்த கல்வியானது பெரும்பான்மையாக திருநங்கையருக்கு மறுக்கப்பட்டே வருகின்றது.

“சரஸ்வதி சொன்னாளா

பள்ளிக் கல்லூரியில்

நானும் படித்தால்

அவளுக்குத் தீட்டு என” (நா.இ.நா. 21)

என்ற கவிதையில் ஆண்டாள் பிரியதர்ஷினி குறிப்பிடுகின்றார். கல்லூரிகளில் வழங்கப்படும் விண்ணப்பங்களில், இன்று ‘மாற்றுப் பாலினர்’ என்று திருநங்கையரைக் குறிக்கும் பாலினமும் சேர்க்கப்பட்டுள்ள நிலை வரவேற்கத்தக்கதாகும்.

திருநங்கையருக்கு மறுக்கப்படும் கல்வியை அவர்கள் பெறல் வேண்டும்; அவர்களின் வாழ்நிலை மாற வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார் திருநங்கை கல்கி.

‘‘இதுவரை

கைதட்டி

நமக்காக

கையேந்திய

இக்கைகள் . . .

மகிழ்ச்சியிலும்

குலவியிலும்

கூப்பாடு போட்ட

இக்கைகள்

இனி

புத்தகங்கள்

திறந்து

புதுவுலகம்

சமைக்கட்டும்’’ (கு.அ. 46–47)

என்று ‘ஓங்கிக் கைத்தட்டு’ எனும் கவிதையில் குறிப்பிடுகிறார். ‘வீதிகள்தோறும் கடை, கேட்டலுக்கும், மகிழ்ச்சிக்காகவும், குலவியின் போதும், கைதட்டிய இக்கைகள் இனியேனும் கல்வி பயிலட்டும்’ எனும் நோக்கில் தன் திருநங்கையர் குழுமத்திற்கு அறைகூவல் விடுக்கின்றார்.

திருநங்கையர், கல்வி அறிவு பெற வேண்டும் என்ற உயர் நோக்கத்தில் அவர்களுக்கு, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இலவசக் கல்வி வழங்குவதாக அறிவித்து உள்ளது.

‘‘நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநங்கை மாணவர்களுக்கு கட்டணம் இல்லா கல்வியை வழங்க முன்வந்து உள்ளது. மறுக்க மற்றும் ஒடுக்கப்பட்ட இச்சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு

இலவச உயர்கல்வி வழங்க இப்பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது. இது போன்று சலுகை இந்தியாவிலேயே முதன் முறையாக வழங்குவதில் இப்பல்கலைக் கழகம் பெருமை கொள்கிறது.''[101]

என்ற இணையச் செய்தி இதனை உறுதிப்படுத்துகிறது. இந்நிலை அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும், அரசுக் கல்லூரிகளிலும் ஏற்பட வேண்டும். பாளையங்கோட்டையைச் சேர்ந்த திருநங்கை சுவாதி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பி.எஸ்.சி. விலங்கியல் துறை படித்து 2013-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றிருக்கிறார்.

''உயர்கல்வி கற்க ஆர்வம் இருந்தாலும் எனக்கு பணவசதி கிடையாது. இதனால் கற்காமல் இருந்தேன். இதனால் நடனத் தொழில் செய்து பிழைத்து வருகிறேன். இப்போது நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் இலவசமாக உயர் கல்வி கற்க வாய்ப்பு அளித்துள்ளதால் அதனை பயன்படுத்திக் கொள்வேன்''[102]

என்று அவர் கூறிய நாளிதழ் செய்திவழி திருநங்கையரின் கல்வி உரிமைகள் மீட்கப்பட்டு வருவதை அறிய முடிகின்றது.

1.1.2.6.6 திருநங்கையர் உரிமைகளும் உரிமை மறுப்புகளும்

இவ்வுலகில் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும், பிறக்கும் நாள் துவங்கி இறக்கும் தருவாய்வரை உரிமைகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு அனைத்து மக்களுக்கும் இருக்க வேண்டிய உரிமைகள் திருநங்கையருக்கு மட்டும் மறுக்கப்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் குறித்து 17-ஆம் நூற்றாண்டில் 'இமானுவேல் காண்ட்' என்ற அரசியல் தத்துவ மேதை,

''சமூக அமைப்பின் பல வர்க்கங்களிடையே தோன்றும் சிக்கல்களைக் களையவும், ஒருவரையொருவரை பாதுகாத்துக் கொள்ளத் தோன்றியதே மனித உரிமைகள்''[103]

என்று கூறுவதாக வ.நா. விஸ்வநாதன் தனது நூலில் பதிவு செய்துள்ளார். அரசியல் சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்திய அரசியல் சட்டம் ஷரத்து பதினைந்து(15),

> **''அரசு எந்தக் குடிமகனையும் அவனுடைய மதம், இனம், சாதி, பால் பிறப்பிடம் ஆகியவற்றில் எதனையாவது காரணமாகக் காண்பித்து அவனை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது''**[104]

என்று கூறுகின்றது. ஆனால் திருநங்கையருக்கு அடிப்படை உரிமைகள் இருந்தும், அவை பெரும்பாலும் மறுக்கப்பட்டவையாகவே உள்ளன. சமூக அங்கீகாரம் இல்லாத திருநங்கையர் பெறவேண்டிய மனித உரிமைகளை,

> **''குடும்ப அட்டையும்**
> **குடியிருப்பு உரிமையும்**
> **இடும்பை தீர்ந்திடக்**
> **கேட்பது தவறா?**
> **பதினெட்டுக்கெல்லாம்**
> **வாக்குரிமை வளர்ந்தும்**
> **ஒன்பது என்றே**
> **ஒதுக்கப்பட்ட**
> **அரவாணிகள் மட்டும்**
> **பான்சாய் மரங்களா?''**[105]

என்ற த. ராகினிசந்திரன் கவிதை வழி அறிய இயலுகின்றது.

> **''அஃறிணைகள்**
> **அது இது என்ற**
> **சுட்டுப் பெயர்களால்**
> **அறியப்படுபவை**

அவற்றின் குரல்கள்

மனித சப்தங்களுக்கு

பொருளற்றவை . . .

அவற்றின் காதற் பண்புகள்

காயடிக்கத்தக்கவை

நல்ல பொழுது போக்கிற்கும் உதவினாலும்

ரேசன் ஒதுக்குவதற்கோ

இது போதுமான காரணமில்லையே . . .''[106]

என்று லிவிங் ஸ்மைல் வித்யா 'அவள்' எனும் கவிதையில் திருநங்கையரின் காதல் மறுப்பு குறித்தும், அஃறிணைகளாகத் திருநங்கையரைக் கருதும் போக்கு குறித்தும், குடும்ப அட்டை மறுப்பு குறித்தும் பதிவு செய்துள்ளமை சிந்திக்கத்தக்கது. திருநங்கையருக்கான வாழ்வியல் போராட்டங்களையும் வேலைவாய்பின்மையையும் குறித்து, லிவிங் ஸ்மைல் வித்யா,

''வீட்டின் எதிர்ப்புகளைக் கடந்து என் உணர்வுகளுக்கு நேர்மையாக வீதியில் இறங்கினேன். வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு என பல போராட்டங்களைக் கடக்க வேண்டியதாக இருந்தது. பொதுவாக திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பு என்பது குதிரைக் கொம்பு''[107]

என்று ஒரு நேர்காணலில் கூறியுள்ளார். நமது சமூகத்தில் ஒதுக்கியே பார்க்கப்பட்டு வருகிற திருநங்கையருக்கு இந்தச் சமூகம் தரவேண்டிய உரிமைகளாக மு.அருணாசலம்,

''நாங்க மூன்றாம் பாலின இனக்குழுக்கள்

எங்களுக்கு வேண்டும்

கல்வி உரிமை

சொத்துரிமை

இடஒதுக்கீடு உரிமை

பாலியல் உரிமை

வேலை உரிமை

எல்லாவற்றிற்கும் மேலாக

மனித பிறவி என்னும்

சமூக அங்கீகாரம்''[108]

என தனது கவிதையில் பதிவு செய்கிறார். திருநங்கையருக்கான கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் குறித்து ரஷ்மி, ஸ்ரீதர் சதாசிவன்,

''ஆக்கப்பூர்வமான அறிவும், அளவற்ற

நம்பிக்கையும் கொண்ட எனக்கு

கல்வியறிவும் வேலைவாய்ப்பும் பெற

இருக்கிறது உரிமை''[109]

என்ற இக்கவிதையில் பதிவு செய்கின்றனர்.

1.1.2.6.7 திருநங்கையரும் அரசின் பாராமுகமும்

சாதாரண குடிமக்களையே ஏமாற்றும் அரசியல்வாதிகள் மிக எளிதாக திருநங்கையர்களை மறந்துவிடுகின்றனர். அவர்களுக்கு வாக்குறுதிகள் கொடுத்து நம்ப வைத்துப் பின் ஏமாற்றி விடுகின்றனர்.

''அரசியல் புரள்கிறது

கோடியில்

நான் புரள்கிறேன்

தெருக் கோடியில்

வோட்டு கேட்டுவா

செருப்பு பிஞ்சிடும்'' (நா.இ.நா. 37)

என்று இன்றைய அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டுமே தன் தொகுதி மக்களைப் பார்க்கும் மனநிலையை இக்கவிதையில் ஆண்டாள் பிரியதர்ஷினி படைத்துள்ளார். திருநங்கையருக்கான வேலைவாய்ப்பினைக் கொடுப்பதில் அரசாங்கத்தினுடைய ஏமாற்றும் போக்கினை தோலுரித்துக் காட்டுகின்றார். இதனை,

''என் தேவை
வேலைவாய்ப்பு
அரசின் சேவை
நம்பிக்கை ஏய்ப்பு'' (நா.இ.நா. 45)

என்ற இக்கவிதை அடிகள் முன்மொழிகின்றன. மேலும், சமூகம் தங்களை ஒதுக்க வேண்டாம் என்றும், சட்டத்தில் இடஒதுக்கீடு வேண்டும் என்றும் குரல் எழுப்பி வருகின்றனர்.

''வேண்டும்
இட ஒதுக்கீடு
வேண்டாம்
சமூக ஒதுக்கீடு'' (நா.இ.நா. 60)

என்ற கவிதை அடிகள் இக்கருத்தினை வெளிப்படுத்துகின்றன. கவிஞர் முருகு சுந்தரம், 'அரண்மனை அலிகள்' எனும் கவிதையில் மொகலாயப் பேரரசின் ஆட்சியில் அரண்மனை அந்தப்புரக் காவலில், திருநங்கையர் இருந்ததைக் குறிப்பிட்டு இன்றைய அரசியல்வாதிகளை இவர்களோடு ஒப்பிடுகிறார்.

''மொகல் பேரரசில்
அரண்மனையையே
ஆட்டிப் படைத்த
அலிகள் பலரிருந்தனர் . . .

இன்று

ஆளும் வர்க்கத்தின்

அந்தரங்கச் செயலாளர்களாகவும்

அமைச்சர்களாகவும்

ஏன்

தளபதிகளாகவும் கூட

இடம்பெற்று விட்டனர்"[110]

என்ற அடிகளில் மொகலாயப் பேரரசில் அன்று இருந்த அலிகளைப் போல இன்றைய அரசியலில் அரசு அதிகாரிகள் மாற்றமும் ஏற்றமும் பெறுவதை விமர்சனப்படுத்துகின்றார்.

"**. . . ஆனால்**

பிள்ளை பெற்றுக் கொடுப்பதாக

அடிக்கடி சொல்கிறார்களே . . . "[111]

என்று அரசியல்வாதிகள் நாங்கள் செய்யாத ஒன்றை மக்களுக்குத் தருவதாக வாக்குறுதி கொடுப்பது என்பது, திருநங்கையர் பிள்ளை பெற்றுக் கொடுப்பது இயலாது என்பதைப் போன்றது என்று கூறுகிறார். இக்கவிதையில் இன்றைய அரசியல் சீரழிவுப் போக்கினைத் திருநங்கையர் வாழ்வியல் நிலையோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

1.1.2.6.8 திருநங்கையரும் அரசின் நலத்திட்டங்களும்

திருநங்கையருக்கான உரிமைக்குரல் மேலெழும்பி சட்டமாக வரத் துவங்கியிருக்கின்றது. திருநங்கையருக்குக் 'குடும்ப அட்டை' வழங்கப்பட்டு அவர்களை குடிமக்கள் நிலைக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உயர்த்தியது.

> **“குடும்ப அட்டையில் ஆண்/ பெண் Trans Gender எனக் குறிப்பிட்டுக் குடிமக்கள் நிலைக்கு உயர்த்தியிருக்கிறார்கள்”**[112]

என்றும், தமிழக சமூக நலத்துறை 2006-ஆம் ஆண்டு, கல்வி நிலையங்களில் சேர்க்கைப் பாலின அடிப்படையில் தடை செய்யக்கூடாது என்றும் அறிவித்திருக்கிறது.

> **“2008, மே, 24 தினமலர் தகவல்படி கல்லூரிச் சேர்க்கை விண்ணப்பத்தில் ஆண்/ பெண் / திருநங்கை எனக் குறிப்பிட்டு அதனைச் செயல்படுத்தியும் உள்ளனர்”**[113]

என்று கூறப்படுகிறது. இந்திய அரசு கடவுச் சீட்டு பெறுவதிலும் மாற்றுப்பாலினருக்கு, இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

> **“கடவுச்சீட்டு பெறும் போது ஆண்/ பெண் / திருநங்கை** (Male - Female - Eunuch) **என மூன்று பிரிவுகளுக்கு ஒப்புதல் தந்தது. ஆனால்** Eunuch **என்பது விரைகளையப்பட்டவரையே குறிக்கும் என போராடியதால்** TG (Trans Gender) **மாறிய பாலினம்) என குறிப்பிட்டிருக்கிறது”**[114]

என்று சூ.ம. செயசீலன் கூறுவதிலிருந்து அரசு தளத்தில் திருநங்கையர் போராடி பெற்றிருக்கும் உரிமைகளை அறிய முடிகின்றது. ஆணுறுப்பை நீக்குவது சட்டவிரோதமாகக் கருதப்படுகின்றது. தற்போது சட்டபூர்வமாக ஆணுறுப்புகளையும் அறுவை மருத்துவத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

ஆணுறுப்பை நீக்குவது சட்டவிரோதம் ஆயினும், அதைச் சுமந்து திரிவதைப் பெரும் வலியாகக் கருதும் திருநங்கையரின் மனப்போக்கினையும் தன் விருப்பப்படி வாழ நினைக்கும் அவர்களின் மன நிலையையும் பதிவு செய்கின்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

‘‘சட்ட விரோதம்

ஆண்குறி நீக்குவது

போடா நாயே

என் வலி தெரியுமா

சட்டத்துக்கு

வாழ்வேன்

என் இஷ்டத்துக்கு’’ (நா.இ.நா. 25)

என்ற கவிதை திருநங்கைகளுக்குச் சட்டபூர்வமான உரிமை வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. இத்தனை வருடப் போராட்டங்களுக்குப் பின் சேலம் மாவட்டத்தில் ஆண்கள், பெண்களுக்கு இருப்பதைப் போல திருநங்கைகளுக்கும் ‘கழிப்பிட வசதி’ ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

‘‘ஓமலூர் பஸ் நிலையத்தில் திருநங்கைகளுக்கான கழிப்பிட வசதி, குளியல் அறையைக் கட்டி இருக்கிறோம். கட்டி முடித்த பிறகு தான் இந்தியாவிலேயே இங்கு கட்டப்பட்டதுதான், திருநங்கைகளுக்கான முதல் கழிப்பறை என்று தெரிந்தது. இது மகிழ்ச்சியான விஷயம் அல்ல. இந்தியா போன்றதொரு மிகப் பெரிய நாட்டில் இயற்கை உபாதையைக் கழிப்பதற்கு மனிதர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் அல்லாடிக் கொண்டிருப்பது எத்தனை வேதனையான விஷயம்’’[115]

என்று ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் உமாராணி கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது. இந்தியாவின் தலைநகர் டெல்லியிலும், மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களிலும் தமிழ்நாட்டிலும், கூத்தாண்டவர் கோவிலிலும்கூட, திருநங்கையருக்கெனத் தனிக் கழிப்பறை வசதி இல்லாதது வருந்தத் தகுந்த ஒன்று.

ஓமலூர் பேருந்து நிலையத்தில் திருநங்கையருக்கான கழிப்பிடம் அமைந்திருப்பது ஒரு திருப்புமுனை என்றாலும், இந்த ஒரு கழிப்பிடக் கட்டடம்

அத்தனை திருநங்கையருக்குமான அடிப்படை வாழ்வியல் சிக்கல்களைத் தீர்த்துவிடாது. எத்தனையோ திருநங்கையர் இன்றும் பொது இடங்களில் ஆண்கள் கழிப்பறைக்குச் செல்வதா? இல்லை பெண்கள் கழிப்பறைக்குச் செல்வதா? என்று திண்டாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். எங்கு சென்றாலும் அவர்களைச் இச்சமூக மக்கள் விரட்டியடித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

“ . . . ஆண்கள் கழிவறை

நோக்கி ஓடினாள்.

. . . . இங்கே

வராதே அந்த டாய்லெட்டுக்குப்

போ . . .

எதிரே பெண்கள் டாய்லெட்

இருந்தது . . .

இங்கே வராதே

ஆண்கள் டாய்லெட்டுக்குப்

போ . . .

அரவாணி எங்கே போவாள்?

. . . . . .

ஒரு பேருந்து

நிறைய பயணிகளுடன்

புறப்பட்டு

வந்து கொண்டிருந்தது

அதற்கு முன்

விழுந்துவிட்டாள்

அரவாணி

தவறுதலாக,

சதக்,, சதக். இரத்த

வெள்ளத்தில் அரவாணி

அவள் செத்துப்போய்விட்டாள்

இனி அவளுக்கு

டாய்லெட்

தேவையில்லை”[116]

என்று ‘அவலம்’ எனும் கவிதையில் திருநங்கையரின் இருப்பு கேள்விக்கு உள்ளாவதை அழகிரி விஸ்வநாதன் பதிவு செய்கிறார். இனியாகிலும் மூன்றாம் பாலினத்தவருக்கென ஒவ்வொரு ஊரிலும் பேருந்து நிலையங்களில், பொது இடங்களில் ‘கழிப்பிட வசதி’ ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும்.

1.1.2.7 திருநங்கையரும் பாலுணர்வும்

ஒவ்வொரு உயிருக்கும் தன் எதிர்ப்பாலினம் மீது ஈர்ப்பு இருப்பது இயற்கையாகும். திருநங்கையர் தன்னைப் பெண்ணாக உணர்வதினால் ஆண்பால் மீது அவர்களுக்கு இயல்பாகவே ஈர்ப்பானது அதிகம் எழுகின்றது. திருநங்கையருக்கும் ஆண், பெண் என்ற இரு பாலினத்தவரைப் போலவே காதல் உணர்வு உள்ளத்தில் இயல்பான ஒன்றாகவே எழுகின்றது. அந்தக் காதல் உணர்வால் ஏற்படும் ஏக்கம் பெரும்பான்மையாக ஆற்றாமையிலேயே முடிகின்றது. இந்நிலை, புதுக்கவிதைகளில் பதிவாகியிருக்கிறது.

“**மூச்சு முட்ட முட்டக்**

காதலிக்க வேண்டும்

காதலிக்கப்பட வேண்டும்

அழகானது தானே

அரவாணி ஆன்மா” **(நா.இ.நா. 46)**

என்று ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார். திருநங்கை கல்கியின் 'குறி அறுத்தேன்' கவிதைத் தொகுதியில் திருநங்கையரின் மனதில் ஏற்படும் காதல் உணர்வின் மிகுதி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

"ஒரு கவிதைக் காதலன்
காதல் கவிஞன்
வாழ்க்கைத் தோழனாய்
வேண்டும் எனக்கு
என் இதயத்தையும்
அதில் நிறைந்த
காதலையும்
என் கவிஞனுக்கே
கொடுப்பேன்" (கு.அ. 73)

என்று திருநங்கையருக்குள் இருக்கும் காதல் உணர்வினை எடுத்துக்காட்டுகின்றார். தான் நேசித்தவனிடம் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கத் துடிக்கும் திருநங்கையரின் மன உணர்வினைத் தெளிவுபடுத்துகின்றார்.

"என்னை உனக்கு
தந்துவிடச் சொல்லி
என் ஆறாம் அறிவை
ஐந்தறிவும்
நச்சரிக்கின்றன" (கு.அ. 79)

என்ற கல்கியின் அடிகள்வழி அறியலாம். தன் காதலன் மீதான தொடு உணர்வினை திருநங்கை கல்கி வெளிப்படுத்துகிறார். திருநங்கையரைத் திருமணம் செய்ய ஆண்கள் பெரும்பாலும் முன்வருவதில்லை. இதனை, திருநங்கை பிரியா பாபு,

''அரவாணிகள் திருமணம் சட்டரீதியாக இல்லாததால் பெரும்பாலான நேரங்களில் ஆண் துணையுடனான உறவு துயரத்தின் முடிந்து விடுகின்றது. ஒரு சிலர் அரவாணிகளிடம் உடல் சுகத்திற்காகவும், அவர்களிடம் உள்ள பணத்திற்காகவும் மட்டுமே இவர்களை திருமணம் புரிவதோ, வெளி உலகத்துக்கு தெரியாத உறவாகவோ இருக்கின்றனர்''[117]

என்று கூறுவது சிந்திக்கத்தக்கது. திருநங்கையரை விரும்பும் ஆண்கள் உண்மையானவர்களாக அன்றி, அவர்களின் உடல் இன்பத்திற்காகவே பெரும்பாலும் பழகுவது விமர்சிக்கப்படுகிறது.

''அவனுக்கு
நான் என்பது
என் உடல் மட்டுமே'' (கு.அ. 92)

என்ற அடிகளின்வழி அறியலாம். 'தான் விரும்பும் ஆடவன் தன் உடலை மட்டுமே நேசிக்கின்றான்' என்பதை அறிந்த திருநங்கை தனக்குள்ளேயே அக்காதலை அழித்து விடுவதை,

''நேற்றிரவு
என் காதலின்
சூது அறிந்து
கொன்று விட்டேன்'' (கு.அ. 93)

என்று காதலின் மரணம் குறித்து திருநங்கை 'கல்கி' பதிவு செய்கிறார். அவ்வாறு தனக்குள் அழித்துவிட்ட காதலில் இருந்து மீண்டெழ முடியாத ஆற்றாமை நிலையையும் கல்கி தன் கவிதையில் பதிவு செய்கிறார்.

ஆண்கள் மீதான பாலுணர்வு ஈர்ப்பினை,

‘‘பருவத்தில் தாவணி புடவையில்

காளையரைக் கவர்ந்து

இமைமூடி இதழ்களின் உரசலில்

உடலெங்கும் மின்சாரம் பாயவும்’’[118]

எனும் கவிதை அடிகளில் மு.கீதா காட்டுகின்றார். ஆண்களால் தீண்டப்படாத திருநங்கையரை,

‘‘வண்டுகள் தேன் பருகாத

மலர்கள்

நாங்கள்’’[119]

என்று முனைவென்றி நா. சுரேஷ்குமார் பதிவு செய்கிறார். ஆண்கள் தொடும்போது திருநங்கைகளுக்கு ஏற்படும் மன உணர்வினை ஜீவி பதிவு செய்கிறார்.

‘‘பழகிய சினேகிதன்

தொட்டுப் பேசுகையில்

படபடத்தது மனசு’’[120]

என்ற அடிகளில் திருநங்கைகளுக்குள் எழும் பாலுணர்வு மிகுதியை அறிய முடிகின்றது.

‘முலையில்லாதவளின் காமம்’ எனும் கருத்தாடலில் வள்ளுவரும்,

‘‘கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்

இல்லாதாள் பெண்காமுற் றற்று’’ (குறள். 402)

என்று குறிப்பிடுகின்றார் ‘கற்றோர் நிறைந்த அவையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல் முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது’ என்பது இக்குறளின் கருத்தாகும்.

திருநங்கையருக்கு உரித்தான இயல்பான எதிர்ப்பாலின ஈர்ப்பு பற்றி ந.ஜயபாஸ்கரன் எடுத்துரைக்கின்றார்.

“ ‘முலையிலாள் காம’ மாய்
அவன் மீதான
கானல் வேட்கை
உயிரைச் சுடும்
மீட்சியே
அற்று”[121]

எனும் கவிதை அடிகளில் முலைகள் இன்றி இருக்கும் திருநங்கையருக்குள் இருக்கும் காம உணர்வு சுட்டிக் காட்டப்படுகின்றது.

‘காகித மலர்கள்’ எனும் கவிதையில் ஆணாய்ப் பிறந்து ஆணின்மீதே திருநங்கையருக்கு ஈர்ப்பு ஏற்படுவது குறித்து பதிவு செய்யப்படுகிறது.

“ஆணாய் பிறந்த என்னில்
பெண்ணைக் கண்டால்
துளிரும் மோகத்தின் தாகம்
ஆணைக் கண்டதும் வந்ததே
யார் தந்தது அதை?”[122]

என்று திருநங்கையர் வினா தொடுப்பதாகப் பதிவு செய்யப்படுகிறது.

1.1.2.8 திருநங்கையரும் சமத்துவமும்

திருநங்கையர் மாறிய பாலினர் ஆயினும் மாறாத சகோதரத்துவத்தோடு வாழ்கின்றனர். அவர்களிடம் நம் சமுதாய மக்களிடம் காணப்படும் பிரிவினையைப் போல எந்தவிதப் பிரிவினைகளும் காணப்படுவதில்லை. சாதி, இன, மதம் கடந்த நிலையில் திருநங்கையர் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இதனை,

''அரவாணிகளிடம் சாதி, மதம், கடவுள்என்ற பாகுபாடுகள் இல்லை. எல்லா சாதி மதத்தைச் சேர்ந்தவர்களும் அரவாணிகளாக இருக்கின்றார்கள் ஏழை, பணக்காரர் என்று எல்லா பிரிவிலிருந்தும் அரவாணிகள் வருகின்றனர்.''[123]

என்று மு. அருணாசலம் திருநங்கையருக்குள் இருக்கும் சமத்துவப் பாங்கினை மொழிகிறார்.

1.1.2.8.1 சாதியப் பிரிவினையைச் சாடல்

இச்சமுதாயம் இன்றளவும் சாதியின் பெயராலேயே இயங்கி வருகின்றது. சாதிய ஏற்றத்தாழ்வு என்பது தொன்றுதொட்டு நம் சமூகத்தில் ஊடாடி வருகின்றது. மனித இனம் சாதி, மதம் ஆகியவற்றால் பிளவுபட்டு வாழும் அவலநிலையில் இயங்குகின்றது. இத்தகைய ஏற்றத் தாழ்வு திருநங்கையர் சமூகத்திடம் இல்லை.

''இசுலாம் குடும்பத்தில் பிறந்த அரவாணி இந்துக் கோயிலுக்கும், கிறிஸ்தவ, இந்து மத அரவாணிகள் தர்காவிற்கும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கும் சென்று வழிபடும் நிகழ்வினையும் காணமுடிகின்றது. மதத்தைப் பார்க்காமல், மனதைப் பார்க்கும் நிகழ்வு அவாணிகளிடம் காணப்படுவது பதிவு செய்யத்தக்க ஒன்றாகும்''[124]

என்று மு. அருணாசலம் திருநங்கையரின் மதம் கடந்த மனிதத்தைப் பாராட்டுகிறார். திருநங்கை கல்கி இத்தகைய சாதியப்பிரிவு திருநங்கையரிடத்துக் காணப்படுவதில்லை என்கின்றார்.

இத்தகைய சாதியின்மை இன்றைய மனித சமூகத்தில் காணப்படுவதில்லை. காதல், திருமணம் என இவற்றில் சாதி பார்க்கும் பெரும்பான்மையான ஆண்கள் ஏனோ, காமத்தில் மட்டும் சாதி பார்ப்பதில்லை.

''என்ன சாதி

நானென்று

தெரியாமலேயே

எப்படியடா என் மடியில்

கிடக்கிறாய்?

நல்ல வேளை

நாங்கள் அறுத்தெறிந்தது

ஆண்மையை மட்டுமல்ல

அயோக்கியத்தனத்தையும் தான்'' (கு.அ. 99)

என்று வன்மையாகக் கண்டிக்கிறார் திருநங்கை கல்கி.

1.1.2.8.2 சமுதாயச் சாடல்

மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழும் சமுதாயத்தில் திருநங்கையர் விளிம்பு நிலையில் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு இரங்குதலுக்குரிய நிலையில் வாழும் திருநங்கையரிடம் சமுதாய மக்கள் மனிதாபிமானமின்றி நடந்து கொள்கின்றனர். அம்மக்களைச் சாடும் விதமாகப் பல கவிதைகள் அமைகின்றன. அக்கவிதைகளின் அடித்தளம் யாதெனில் எல்லாச் சமுதாயத்தவரும் தங்களை வேறுபாடின்றி ஏற்று சமத்துவநிலை எய்த வேண்டும் என்பதாகும். திருநங்கையரின் மனது மென்மையானது அதை மாற்றுவது சமூகமே என்பதை,

''அல்லிப்பூ

நான்

கொள்ளிப்பூவாக

மாற்றுவது நீ'' (நா.இ.நா. 14)

என்று திருநங்கையரின் மனக்குமுறலை ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார்.

தங்களுடைய அவல நிலைக்குக் குரல் கொடுக்க ஆளில்லையா? என்று சமூகத்திடம் திருநங்கையர் கேள்வி எழுப்புகின்றனர்.

‘‘யாருமே இல்லையா
குரல் கேட்கவும்
குரல் கொடுக்கவும்
செவிட்டு ஊமையா
உலகம்’’ (நா.இ.நா. 19)

என்று கவிதை அமைகிறது.

திருநங்கையரை ‘ஒன்பது’ என விளிக்கும் சமூக மக்களின் இழிவான பேச்சிற்கு முடங்கிப் போகாமல், அவ்வாறு அழைக்கும் மக்கள் பூஜ்ஜியத்திற்கும் கீழான மதிப்பற்றவர்கள் என்கின்றார். இதனை,

‘‘என் இருப்பு
எட்டுக்கும்
பத்துக்கும் நடுவே
உன் இருப்பு
பூஜ்ஜியத்துக்கும் கீழே’’ (நா.இ.நா. 23)

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

மனிதத் தன்மையே இல்லாது நடக்கும் சமூகத்தை விமர்சனம் செய்கின்றார்.

‘‘பால்மாற்று அறுவை
அவசியம்
பெண்ணாக மாற
எனக்கு
மனிதனாக மாற
உனக்கு’’ (நா.இ.நா. 29)

என்று வினா எழுப்புகிறார். திருநங்கையருக்கு உடல் அளவில் மட்டுமே குறைபாடு உள்ளதாகவும், பிற மக்களுக்கோ உள்ளமே குறைபாடு உள்ளதாகவும் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

'அறுவைச் சிகிச்சையால் ஏற்படும் வலியைவிட, திருநங்கையருக்கு அடிக்கடி வலியை ஏற்படுத்துவது சமூகம் தரும் பிரச்சனைகளே' என்கிறார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

''பால்மாற்று
அறுவை ரணம்
சாதாரணம்
சமூக ரணம்
சதா ரணம்'' (நா.இ.நா. 48)

என்ற அடிகள் காட்டுகின்றன.

திருநங்கை கல்கி, 'திருநங்கையாக மாற அச்சப்படுகிறோம்' என்று கூறுகிறார்.

''திருநங்கைகளை பெண்களாக அங்கீகரியுங்கள் என்று இதுவரை சொல்லி வந்தோம். தயவு செய்து எங்களை பெண்களாக ஏற்றுக் கொள்ளாதீர்கள். எங்களை திருநங்கைகளாகவே வாழ விடுங்கள். ஏனெனில் இங்கு பெண்கள் படுகிற பாலியல் வன்கொடுமை, அடிமைப்பட்ட சிறை வாழ்க்கை, சுதந்திரமின்மை, குடும்ப அளவிலும் சமூக அளவிலும் உழைப்பாலும், மனதாலும் சுரண்டப்படுகிறார்கள். இந்நிலையில் நாங்கள் பெண்களாக மாற அச்சப்படுகிறோம். இந்த வாழ்க்கையே எங்களுக்கு சுதந்திரமானதாக இருக்கிறது''[125]

என்று அவர் மொழிந்திருப்பதன் வாயிலாகச் சமுதாயத்தில் பெண்களின் இருப்பு பற்றி அறியலாகிறது.

திருநங்கையரைச் சமூகம் பெண்ணாக ஏற்க மறுப்பதை முற்போக்குப் பார்வையுடன் தனது கவிதையில் பதிவு செய்கிறார் திருநங்கை கல்கி. பெண்மையை ஆதிக்கக் கட்டுக்குள் வைத்திருக்கும் சமூகத்தைச் சாடுகின்றார்.

''நல்ல வேளை
பிறப்பால்
நான் பெண்ணில்லை
என்னை பெண்ணாக
நீங்கள்
ஏற்க மறுத்ததே
எனக்குக் கிடைத்த விடுதலை
பெண்மைக்கு
நீங்கள் வகுத்துள்ள
அடிமை இலக்கணங்களை
நான் வாசிப்பதில்லை'' (கு.அ. 39)

என்று பெண்மைக்கான இலக்கணங்களைச் சமூகம் வகுத்துள்ளதாக சமூகத்தை விமர்சனம் செய்கின்றார். மேலும் திருநங்கையரைப் பெண்ணில்லை என்று கூறும் ஆண் சமூகத்தை நோக்கி கேள்வி எழுப்புகின்றார்.

''உங்களின் ஆணாதிக்க
குறியை அறுத்துக் கொள்ளுங்கள்
நீங்கள் யார் என்பதை
அப்போது
நீங்கள் அறிவீர்கள்

பிறகு சொல்லுங்கள்

நான் பெண்ணில்லை

என்று'' (கு.அ. 40)

என்று விமர்சனப்படுத்துகின்றார். திருநங்கையரின் போராட்டம் நிறைந்த வாழ்வியல் நிலை தெரியாத சமூக மக்களை நோக்கி,

''எங்கள் அலங்காரம் அதிகம்

தெரியும் அளவிற்கு

எங்கள் அவலங்கள் தெரியுமா

உங்களுக்கு''[126]

என்று வினா எழுப்புகிறார் கவிஞர் பாலா. ஆணாகப் பிறந்ததால் பெண் சிசுக் கொலையில் இருந்து அன்று தப்பினாலும், இன்று பெண்ணாக மாறிய உடல் மாற்றத்தால் அடையும் வேதனையைப் பதிவு செய்கிறார் ஆ. ஆறுமுகம்.

''அன்றிருந்த உடல் மாற்றத்தால்

உயிர் தப்பினோம் சிசுக் கொலையிலிருந்து

இன்றிருக்கும் உடல் மாற்றத்தால்

உயிர் போய் வருகிறது

அப்பப்போ!''[127]

என்று தனது கவிதையில் சமூகத்தைச் சாடுகின்றார். திருநங்கையர்களைச் சக மனிதர்களாக ஏற்காதவர்களை 'நான் ஒரு திருநங்கையின் குரல்' எனும் கவிதையில்,

''சிரிப்பு, அழுகை, கோபம்

தாபம், மலர்ச்சி, மருட்சி

என்று உங்கள் உணர்வுகளும்

என் உணர்வுகளும் ஒன்று

மானமும் மரியாதையும்

எனக்கு உண்டு.

என்னையும் கௌரவத்துடன்

நியாயமாய் நடத்துவது நன்று''[128]

எனத் திருநங்கையருக்குள் இருக்கும் உணர்வு நிலை பற்றி ரஷ்மி, ஸ்ரீதர் சதாசிவன் திருநங்கையரிடம் இருக்கும் வேறுபாடற்ற ஒருங்கிணைந்த வாழ்வு நிலை சமுதாயத்தவரிடம் இல்லை என்பதை மு. அருணாசலம்,

''எங்களிடம்

தாய்க்குணம் உண்டு

நாய்க்குணம் மட்டும் இல்லை

வள்ளி ஜென்ஸி அஸ்மா

இப்படிக்கு ரோஸ், ப்ரியாபாபு, ரேவதி

என்று நீளும் அரவாணிகள் பட்டியல்

ஒரே வீட்டில்

ஒரே தட்டில்

உண்ணும் நல்லிணக்கம்

எங்களிடம் உண்டு

உங்களிடம் நல்லிணக்கம்

உண்டா?''[129]

என்று திருநங்கையருக்குள் இருக்கும் இணக்கத்தினைச் சுட்டிக் காட்டுகின்றார்.

1.1.2.8.3 தோழமையைப் போற்றல்

குடும்பத்தாலும், சமூகத்தாலும் விரட்டப்பட்டு வரும் திருநங்கையரை அவர்களது தோழமை வட்டமே விரும்பி வரவேற்கின்றது.

‘‘அரவாணிகள் சேர்ந்து வாழும்போது தனிப்படுக்கை, தனி உணவு, தனி தட்டு என்று இல்லை’’[130]

என்று மு. அருணாசலம் குறிப்பிடுகிறார். அறுவைச் சிகிச்சைக்குப்பின் ஆணுறுப்பு அகற்றப்பட்ட பின் அந்த வலியிலும் வேதனையிலும் இருக்கும் திருநங்கையருக்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருப்பது அவர்களின் தோழமை வட்டம் மட்டுமே ஆகும்.

‘‘குழாயில்
வெளியேறிய
என் மூத்திரம்
அள்ளிக் கழுவிக் கொண்டிருந்தான்
என் தோழன்
படுக்கையை
நனைத்த
என் குருதிக் கறைகளை
துடைத்த பின்
என் முகத்தையும்
ஈரத்துவாலையால்
துடைத்தாள்
என் தோழி’’ (கு.அ. 50)

என்று கூறும் திருநங்கை கல்கி, அந்தத் தோழமை உறவைத் தாயாகவும், தந்தையாகவும் பார்க்கிறார்.

‘‘தோழமை
தாய்மையானதன்
உன்னதத்தையும்

தந்தைமையானதன்

கண்ணியத்தையும்

அறுபட்டுக் கிடந்த

அவ்வேளையில்

கண்ணாரக் கண்டேன்'' (கு.அ. 50)

என்று தோழமையின் சிறப்பைப் பெருமைபட எடுத்துக்காட்டுகிறார்.

1.1.2.9 திருநங்கையரும் தன்னம்பிக்கையும்

மனிதர்கள் தங்கள் வாழ்வில் எத்துணை இடர்வரினும் தன்னம்பிக்கையோடு போராடுவது அவசியம். தன்னம்பிக்கை குறித்து,

> **''வெற்றிக்கு அடிப்படை தன்னம்பிக்கை. சாதனையாளரின் வரலாறு இதைத்தான் புலப்படுத்துகிறது. ஆயிரமாயிரம் இடையூறுகள் வந்தபோதும் நெஞ்சம் கலங்காமல், தன்னம்பிக்கை குலையாமல், முயற்சியை விடாமல் எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பவரே மனித வரலாற்றில் இமயம் என உயர்ந்து நிற்கின்றனர்.''**[131]

என்று ஜெ.ஸ்ரீசந்திரன் கூறுகிறார். அதிலும் விளிம்பு நிலை மாந்தர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிய ஆயுதம் அவர்கள் கைக்கொண்டிருக்கும் தன்னம்பிக்கையே ஆகும். இன்று பல திருநங்கையர் அவர்களுக்கும், அவர்களைப் போன்றோருக்கும் தனித்த வாழ்வாதாரங்களை முயன்று அடைந்து வருகின்றனர்.

> **''சென்னை, கோயம்பேட்டைச் சேர்ந்த ஸ்வேதா, சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற அமைப்பை நடத்துகிறார். அரசிடமும் சமூகத்திடமும் கையேந்தி நிற்காமல், தங்கள் திறமைகளைக் கூர்தீட்டி, அதன் மூலம் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை திருநங்கைகளுக்கு உருவாக்கித் தருகிறார்.**

விளிம்பில் தவிக்கும் பல திருநங்கைகளுக்கு நற்பாதையை உருவாக்கித் தருகிறார்.”[132]

என்று வெ.நீலகண்டன் ‘சாதிக்கப் பிறந்தவர்கள் கையேந்த வேண்டியதில்லை’ எனும் கட்டுரையில் பதிவு செய்கிறார்.

திருநங்கையருக்குள் இருக்கும் தன்னம்பிக்கைதனைப் புதுக்கவிதைகள் முன்வைக்கின்றன. திருநங்கையர் தங்களைச் சமுதாய மக்கள் அனுதாப நோக்குடன் பார்ப்பதை விரும்பவில்லை.

“அனுதாபம்
தேவையில்லை
சாதனையும்
தூரமில்லை” (நா.இ.நா. 49)

என்று திருநங்கையர் அவர்கள் மீது வைத்திருக்கும் தன்னம்பிக்கையை ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார். திருநங்கையருடைய தன்னம்பிக்கை ஒருநாள் இயற்கையை மீறி, விஞ்ஞானத்தை வெல்ல வைக்கும் என்கிறார்.

“கர்ப்பம் தரிக்கும்
குழந்தை பிறக்கும்
தாய்ப்பால் சுரக்கும்
தாய்மை கிடைக்கும்
விஞ்ஞானம் ஜெயிக்கும்
ஒருநாள்” (நா.இ.நா. 63)

என்று இக்கவிதை வாயிலாக ஆண்டாள் பிரியதர்ஷினி வெளிப்படுத்துகிறார். ‘குறி அறுத்தேன்’ கவிதைத் தொகுப்பில் திருநங்கை கல்கி, தான் சார்ந்த திருநங்கை சமூகத்தில் தற்கொலைக்கு முற்படுவோருக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்.

''அனைத்தையும்

இழந்தாய்

தற்கொலைகளில்

உயிர் முடிக்க

எத்தனித்த

எம்மக்கள்

விதிகளை மாற்றி

வாழ்வைத் தழுவும்

வழிகளைக் காட்டுவேன்'' (கு.அ. 22–24)

என்று தன் திருநங்கையர் குழுமத்திற்கு நம்பிக்கை மொழிகளைத் தன் கவிதையின் ஊடாகப் பதிவு செய்கிறார். சமூகத்தின் கேலி, கிண்டல்களுக்கும், புறக்கணிப்புகளுக்கும் திருநங்கையர் ஆளாக்கப்பட்டாலும், அவர்கள் அதற்கு அஞ்சவில்லை. தன்னம்பிகையோடு போராடத் துணிகின்றனர்.

''உதாசீனங்களுக்கும்

கேலி கிண்டல்களுக்கும்

அஞ்சி நொறுங்கி விடுவதில்லை''[133]

என்று திருநங்கையரின் உறுதி வாய்ந்த நெஞ்சம் குறித்து 'பால் பிழை' எனும் கவிதையில் பொன். இரவீந்திரன் பதிவு செய்கிறார். 'சமுதாயம் மாறும், தங்களை ஏற்கும்' என்ற திருநங்கையரின் அசையாத நம்பிக்கைதனைச் சுட்டுகின்றனர் ரஷ்மி, ஸ்ரீதர் சதாசிவன்.

''நான்

இத்தனை போராட்டங்களிலும், மனம்

தளருவதில்லை இவையெல்லாம்

இன்றைய கஷ்டங்கள் நாளைய சமுதாயம்

அன்பும் அரவணைப்பும் நிறைந்தது என்பது

என் நம்பிக்கை”[134]

என்று ‘நான் ஒரு திருநங்கையின் குரல்’ எனும் கவிதையில் அவர்களின் தன்னம்பிக்கை பதிவு செய்யப்படுகிறது.

1.1.2.10 திருநங்கையரும் பிறப்புப் பெருமைகளும்

மூன்றாம் பாலினராக மாறும் திருநங்கையரை இச்சமுதாயத்தவர் ஏற்கவில்லை என்றாலும், அவர்களைத் தெய்வப் பிறவிகளாக நம்புகின்றனர். அவர்களின் வாய்மொழிகள் மெய்யாகும் என நம்புகின்றனர். திருநங்கையரே தங்களைப் பெருமையாக எண்ணிக் கொள்கின்றனர்.

1.1.2.10.1 படைப்பாளிகள் திருநங்கையரைப் போற்றல்

‘திருநங்கையரும் போற்றுதலுக்கு உரியவர்களே’ என்பதைச் சில கவிஞர்கள் தம் கவிதைப் படைப்புகளில் பதிவு செய்கின்றனர். திருநங்கையர் தான் ஆணாகவும் அல்லாமல் பெண்ணாகவும் அல்லாமல், பிறந்திருப்பதை எண்ணி வருத்தமடைந்தாலும் தங்களை ‘மாறிய பாலினம்’ என்று கூறிப் பெருமையே கொள்கின்றனர்.

“**ஆண்பால்**

பெண்பால்

நான்

அதற்கும் அப்பால்

மூன்றாம் பால்” **(நா.இ.நா. 4)**

என்று தங்களை ‘மூன்றாம் பாலினத்தவர்’ என மேன்மைபடக் கூறுவதாய் ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார். மற்றொரு கவிதையில்,

‘‘நீ

சாம்பலாவாய்

உன் மரணத்திற்குப் பின்

நீடுழி வாழ்கிறேன்

எனது

ஆண் மரணத்துக்குப் பின்

மரணம் தோற்கிறது

அரவாணிகளிடம்’’ (நா.இ.நா. 54)

என்று அடிகளில் ‘இறந்த பின் சாம்பலாவது மனிதன் மட்டுமே. திருநங்கையரோ மரணத்தையே தோற்கடித்து வாழ்கின்றனர்’ என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

திருநங்கையர் ஆணாகப் பிறந்த தங்களைப் பெண்ணாக உருமாற்றியதால், உயர்வு பெறுவதாகக் காட்டுகின்றார்.

‘‘சுயம்பு நான்

என்னைப் படைத்தேன்

கடவுளை ஜெயித்தேன்’’ (நா.இ.நா. 61)

என்று திருநங்கை பெருமைப்படுமாறு ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்கிறார். இறைவன் திருநங்கையருக்குக் ‘கருப்பை’ கொடுக்காதிருப்பினும் அவர்களால் தாயாக முடியும் என்றுரைக்கின்றார்.

‘‘கருவில்

சுமக்காமலேயே

தாயாக முடியுமா

உங்களால்?

மார்முட்டி பசியாறாமலேயே

மகளாக முடியுமா

உங்களால்?

என்னால் முடியும்'' (நா.இ.நா. 40)

என்ற கவிதை அடிகளில் அறியலாம். இதன்வழி திருநங்கையர் தங்களைத் தாயாகவும் மகளாகவும் கருதும் மனப்போக்கினை அறிய முடிகிறது. வடநாடுகளில் குழந்தை பிறந்த வீடுகளில் திருநங்கையர்களை அழைத்து வந்து பாடச் செய்வது வழக்கம். அப்பழக்கத்தினை 'அலிகள்' எனும் கவிதையில் க.நா. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

''பிள்ளை உற்பத்தி செய்ய

முடியாதவர்கள் பிள்ளை

பிறந்தது கேட்டு குதுகலிப்பது

நல்ல பழக்கம் என்றுதான்

எனக்குத் தோன்றுகிறது''[135]

என்று கூறும் அடிகளில் திருநங்கையருக்குக் குழந்தைப் பிறப்பு இல்லை என்றாலும் தன்னைச் சார்ந்த சமுதாய மக்களுக்குக் குழந்தை பிறந்ததைக் கொண்டாடும் நிலையைப் பெருமைபடக் கூறுகிறார். சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில்,

''பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்

ஒருமுலை இழந்த நங்கைக்குப்

'பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்க' எனவே''[136]

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். 'பல வகையான மலர்களைத் தூவி வழிபடுங்கள். ஒரு முலையினை இழந்தவளான நங்கைக்கு இப்பெரிய மலை நாடானது ஓயாது வளஞ்சுரக்க அருள்வாய் தாயே என்று அனைவரும் வந்து அவளைப் போற்றுங்கள்' என்று கண்ணகியை இளங்கோவடிகள் போற்றுகிறார். இதனை கா.நா. சு. தனது கவிதையில் குறிப்பிடுகிறார்.

''வடநாட்டு அலிகள் பற்றியும்,

அவர்களுடைய பொய்முலைகளைப் பற்றியும்

எழுதிய கவிஞர் இளங்கோ அடிகள்

அவர்களுடைய இந்தப் பழக்கம் பற்றி

எழுதவில்லையே என்று எனக்கு வருத்தம்தான்''[137]

என்று இடித்துரைக்கின்றார். மேலும், உலகமே அலிகளாகி விட்டால் யாருக்குக் குழந்தை பிறக்கும்? யார் காசு கேட்பது? என்று அவர் சமூகத்திடம் கேள்வியை முன்வைப்பதிலிருந்து திருநங்கையரைப் பற்றிய மாற்றுப்பார்வை சமூகத்திடம் வர வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

'நிழல் முகங்கள்' எனும் நூலில் குமாரசாமி 'திருநங்கையருக்கு மட்டும் ஏன் தனி உலகம்?' அவர்கள் ஒருதாய் வயிற்று மக்களே! என்கிறார்.

''கல்லை நிறுத்திக் கடவுளெனச் சொன்னாலும்,

இல்லையெனச் சொல்லாமல் ஏற்கின்றார் தொல்லுலகில்

ஒன்றாய்ப் பிறந்த உயிராம் அலிகளுக்(கு)

ஒன்றா உலகமெதற்(கு), ஓர்!''[138]

என்ற அடிகளில் 'கல்லைக் கடவுளாக நம்பி வழிபடும் உலகம், ஆண் பெண்ணோடு ஒன்றாய்ப் பிறந்த உயிரான திருநங்கையரை மட்டும் ஏற்க மறுப்பது ஏன்?' என்று சகோதரத்துவத்தோடு கேள்வி கேட்கிறார்.

1.2 தொகுப்புரை

* இவ்வியலில் திருநங்கையரின் மரபணு மாற்றம், குடும்ப புறக்கணிப்புகள், பெண்மை உணர்வுகள், சமுதாயப் பார்வைகள், ஆண்மையவாத எதிர்ப்புணர்வு, வாழ்வியல் சிக்கல்கள், பாலுணர்வு, சமத்துவப் பாங்கு, தன்னம்பிக்கை வெளிப்பாடு பிறப்புப் பெருமைகள் குறித்துப் பல்வேறு வகைமைகளில் தமிழ்ப் புதுக்கவிதைகளில் பகுத்து ஆராயப்படுகின்றன.

* மறுமலர்ச்சிக்காலக் கவிஞர்களின் பதிவுகளில் அலி, பேடி எனும் சொல்லாட்சிகளைக் காண முடிகின்றன. பெரும்பாலும் இழிவு நோக்கிலேயே அச்சொல்லாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

* புதுக்கவிஞர்களின் படைப்புகளில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தினைக் காண முடிகின்றது.

* புதுக்கவிதைகளின் படைப்புகள் விளிம்பு நிலை மாந்தர்களாக இருக்கும் திருநங்கையரை உணர்வுகள் தளத்தில் வைத்து உற்று நோக்குகின்றன.

* திருநங்கையர் குறித்த மரபுசார் பார்வையினையும், புரிதல்களையும் உடைத்தெறியும் முகமாக புதுக்கவிதைகள் திகழ்கின்றன என்பதைப் புதுக்கவிதைத் தரவுகள் நிருபிக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. வெ. முனிஷ், அரவாணிகளின் பன்முக அடையாளங்கள், பக்.51-52.
2. வெற்றியழகன், (தொ.ஆ.), பாரதியார் கவிதைகள், (விநாயகர் நான்மணிமாலை) பா.எ.20, ப.84.
3. மேலது. (தேசிய கீதங்கள், சத்திரபதி சிவாஜி தன் சைனியத்திற்கு கூறியது) பா.எ.99,ப.45.
4. மேலது., பா.வ.172, ப.47.
5. மேலது, (ஆரிய தரிசனம் ஒரு கனவு) பா.வ.26, ப.159.
6. மேலது., (ஸ்தோத்திர பாடல்கள் (சிவசக்தி புகழ்), பா.எ. 4, ப.116.
7. மேலது., (நடிப்பு சுதேசிகள், பழித்தறிவுறுத்தல்) பா.எ.3, ப.54.
8. மேலது., (வெள்ளைக்கார விஞ்ச்துரை கூற்று), பா.எ.4, ப.52.
9. மேலது., (சுயசரிதை, ஆங்கில பயிற்சி), பா.எ. 26, ப.243.
10. கமலா முருகன், (உ.ஆ), தமிழச்சியின் கத்தி, ப. 83.
11. மேலது., ப.95.
12. ச.து. சு. யோகியார், தமிழ்க்குமரி, பா.எ.40,ப. 64.
13. மேலது., பா.எ.43, ப.64.
14. காந்தி கண்ணதாசன், (ப.ஆ), (தொகுதி-2,) ப.258.
15. மேலது., ப.223.
16. மேலது., ப. 223.
17. மேலது., ப.118.
18. மேலது., ப. 141.
19. எம்.நாராயணவேலுப்பிள்ளை, (உ.ஆ), பன்னிரு திருமுறைகள், பத்தாம் திருமுறை (திருமந்திரம்), பா.எ.482,ப.197.
20. பத்மபாரதி, திருநங்கையர் சமூக வரைவியல், ப. 33.
21. கி.அய்யப்பன், அரவாணியம், ப.57.
22. அ.மார்க்ஸ், பொ. வேல்சாமி, (தொ.ஆ), விளிம்புநிலை ஆய்வுகளும், தமிழ்க் கதையாடல்களும், ப. 91.
23. நா. காமராசன், கறுப்பு மலர்கள், ப. 15.
24. வே. நெடுஞ்செழியன், கண்ணாடி உலகம், ப. 19.
25. நெல்லை ஜெயந்தா, திணை மயக்கம், ப. 44.
26. மேலது., ப. 44.
27. நக்கீரன் கோபல், (இ.ஆ), இனிய உதயம், ஆகஸ்ட், 2004, ப.128.
28. பாலா. முனியமரம்,ப.40.
29. த. ராகினிச்சந்திரன், அரவானிப்பூக்கள், ப. 4.
30. http:moonramkonam.com/tamil.kavithai.thiruranga
31. நக்கீரன் கோபால், (இ.ஆ), மு.கூ.இ, ப.128.
32. கி. அய்யப்பன், அரவாணிகள் அன்றும் இன்றும், ப. 16.
33. கோபால்தாசன். புலரி, ப.48.
34. பத்மபாரதி, மு.கூ.நூ., ப. 33.

35. நாஞ்சில்நாடன், மண்ணுளிப் பாம்பு, ப. 61.
36. மேலது., ப. 61.
37. ந. பிச்சமூர்த்தி, பிச்சமூர்த்தி கவிதைகள், ப. 59.
38. த. ராகினிசந்திரன், மு.கூ.நூ., ப. 3.
39. லி. நௌஷாத், என் மனசுக்குள் எப்படி வந்தாய். ப.123.
40. www.orinam.netta/kavithai.nann.oru.thirunangaiyinkural
41. மு. அருணாசலம், அரவாணிகள் சங்ககாலம் முதல் நவீன இலக்கியம் வரை, பக்.104-105.
42. கோபால்தாசன், மு.கூ.நூ.,ப. 49.
43. ஆர். வெங்கடேஷ் (பொ.ஆ), கல்கி, 01-01-2017. ப.19.
44. பாலா. மு.கூ.நூ., ப. 41.
45. த. ராகினிச்சந்திரன், மு.கூ.நூ., ப. 5.
46. ஆ.குமாரசாமி, நிழல் முகங்கள், ப. 152.
47. கவிஞர் சுரா, கற்பனை வரங்கள், ப.144.
48. கானமஞ்சரி, அரவாணிகள் வரலாறு, ப.206.
49. ந. அறிவுராஜ், மூன்றாம் பாலினம், ஒரு சமூக இனவரைவியல், ப. 37.
50. அ. மங்கை, எதிரொலிக்கும் கரவொலிகள், ப.8.
51. இளங்கோ கிருஷ்ணன், காய சண்டிகை, ப. 46.
52. ஜீவி, அஞ்சறைப்பெட்டி, ப. 38.
53. வே. நெடுஞ்செழியன், மு.கூ.நூ., ப.19.
54. ரமேஷ்- பிரேம், நாவற்கொம்பு, ப.35.
55. மு. கீதா, ஒரு கோப்பை மனிதம், ப. 25.
56. மு. அருணாசலம், மு.கூ.நூ., ப. 98.
57. கரிகாலன், கரிகாலன் கவிதைகள், ப.23.
58. ஆர். வெங்கடேஷ் (பொ. ஆ), கல்வி, 1-1-2017,ப. 19.
59. யோகி, யட்சி, ப.17.
60. ரமேஷ்-பிரேம், மு.கூ.நூ., ப.35.
61. அன்னிதாமசு, தமிழர் சமூகவியல், ப. 1.
62. ந. ஜயபாஸ்கரன், அர்த்தநாரி அவன் அவள், ப. 23.
63. மேலது., 23.
64. மு. அருணாசலம், மு.கூ.நூ.,ப. 38.
65. மகுடேசுவரன், காமக்கடும்புனல், ப.198.
66. தபசி, குறுவாளால் எழுதியவன், ப. 86.
67. பாலா, மு.கூ.நூ., ப. 41.
68. மு. துர்காதேவி, இமைமூடி ஒருநொடி, ப. 33.
69. http://moonramkonam.com/tamil.kavithai.thiruranga
70. கோபால்தாசன், மு.கூ.நூ.,ப. 48.
71. http://eluthu.com/display-tanglish/149842

72. கோபால்தாசன். மு.கூ.நூ., ப. 49.
73. ஆர். வெங்கடேஷ் (பொ.ஆ), கல்கி, 1-1-2017, ப. 19.
74. அன்னிதாமசு, தமிழ் இலக்கியத்தில் ஊனமுற்றோர், ப. 117.
75. மு. அருணாசலம், மு.கூ.நூ., ப. 34.
76. தினத்தந்தி, (நாளிதழ்), 7.8.2004,
77. மாற்றுவெளி, (ஆய்விதழ்), ஜனவரி, 2011, ப. 124.
78. கி. அய்யப்பன், அரவாணியம், ப 15.
79. மேலது., ப. 15.
80. பா. கருணாகரன், (பொ.ஆ), ஜன்னல், 15-30- 11-2016, ப. 39.
81. மு. அருணாசலம், மு.கூ.நூ.,ப. 39.
82. நக்கீரன் கோபால், (ஆ), இனிய உதயம், ஆகஸ்ட்-2006, ப. 128.
83. ஜீவி, மு.கூ.நூ., ப. 38.
84. இன்குலாப், காந்தள் நாட்கள், ப. 142.
85. தவசிக் கருப்பசாமி அழிபசி, ப. 16.
86. த.சுமித்ரா, விழிபேசும் மொழி, ப. 26.
87. முகிலை இராசபாண்டியன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.173..
88. ஷ்யாமா, தமிழக கிராமங்களில் பெண்சிசுக் கொலைகள் தீர்வுகள், ப. 68.
89. முகிலை இராசபாண்டியன். (தொ.ஆ). மு.கூ.நூ., ப. 185.
90. பாலா, மு.கூ.நூ., ப.41.
91. நா. காமராசன், மு.கூ.நூ., ப. 15.
92. கோபால்தாசன், மு.கூ.நூ., ப. 49.
93. orinam.net/ta/kavitha:nann-oru-thirunangaiyin-kural.
94. முகிலை இராசபாண்டியன், (தொ.ஆ), மு.கூ.நூ., ப. 240.
95. பழனிவேல், தவளை வீடு, ப. 33.
96. தங்கமங்கை (சிற்றிதழ்), ஆகஸ்ட்-2016, ப. 4.
97. ஆனந்தவிகடன் (சிற்றிதழ்), 07-12-2016, ப. 47.
98. தினத்தந்தி (குடும்ப மலர்), 14-01-2018, ப.3.
99. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ), நீதிநூல்கள் (நறுந்தொகை) பா.எ. 35.ப.91.
100. த. வேலு, ஏழைகள், சிரிப்பதெப்போ, ப.180.
101. www.dailythanthi.com/news/districts/2017/04/04194706/transgender-studensfeefree-education offered.vpf.
102. தினகரன் (நாளிதழ்), 06-04-2017,
103. விஸ்வநாதன், மனித உரிமைகள், ப.8.
104. பி.ஆர். ஜெயராமன், அரசியலரமைப்புச் சட்டம், ப. 41.
105. த. ராகினிசந்திரன், மு.கூ.நூ.,ப. 7.
106. வீ. அரசு (சி.ஆ), மாற்றுவெளி (ஆய்விதழ்), ப.93.
107. ஆனந்த விகடன், (சிற்றிதழ்), 07-12-2-16, ப. 45.

108. மு. அருணாசலம், மு.கூ.நூ.,ப. 102.
109. orinam.net/ta/kavitha.nanoruthirunangaiyin kural.
110. கு.கணேசன் (தொ.ஆ), கவிஞர் முருகுசுந்தரம் கவிதைகள், ப. 147.
111. மேலது., ப. 148.
112. சூ.ம. ஜெயசீலன், திருநங்கைகள், வாழ்வியல், இறையியல், ப. 54.
113. மேலது., ப. 54.
114. மேலது., ப. 54.
115. http://www.vikatan.com/news/india/68883.india'sfirst.transgender.toilet.now.in
116. அழகிரி விஸ்வநாதன், இந்த எறும்புகள், பக். 19-20.
117. பிரியா பாபு, அரவானிகள் சமூக வரைவியல், ப. 77.
118. மு.கீதா, மு.கூ.நூ., ப. 25.
119. http://moonramkonam.com/tamil.kavithai.thiruranga
120. ஜீவி, அஞ்சறைப்பெட்டி., ப.38.
121. ந.ஜயபாஸ்கரன், அவன், ப.21.
122. கல்கி, 1.1.2017,ப. 19.
123. மு.அருணாசலம், மு.கூ.நூ., ப. 30.
124. மேலது.,ப. 31.
125. தமிழ் முரசு, மார்ச் 10-3-2016,ப.
126. பாலா, மு.கூ.நூ., ப. 41.
127. தங்க மங்கை (சிற்றிதழ்) ஆகஸ்ட் 2016, ப. 4.
128. orinam.net/ta/kavitha.nanoruthirunangaiyin kural.
129. மு.அருணாசலம், மு.கூ.நூ., பக்.101-102.
130. மேலது., ப.30.
131. ஜெ.ஸ்ரீசந்திரன், சிகரத்தைத் தொடுவோம், ப. 26.
132. அவள் விகடன், (சிற்றிதழ்) 27.12.2016, பக்.64-65.
133. பொன். இரவீந்திரன், காகங்கள் நிறைந்த ஜன்னல், ப. 73.
134. orinam.net/ta/kavitha.nanoruthirunangaiyin kural.
135. க. நா.சுப்பிரமணியம், க.ந.சு. கவிதைகள், ப. 122.
136. புலியூர் கேசிகன் (உ.ஆ.), சிலப்பதிகாரம் (வஞ்சிக்காண்டம்) பக்.363-364.
137. க. நா. சுப்பிரமணியன், மு.கூ.நூ., ப. 122.
138. ஆ. குமாரசாமி, மு.கூ.நூ., ப. 154.

இயல் – 2

தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் வாழ்வியல்

2.0 முன்னுரை

நவீன இலக்கிய வகைமைகளுள் 'புதினம்' முக்கிய இடத்தைப் பெறுகிறது. புதினங்கள் சமூக மக்களின் வாழ்வியல் நிலைகளைச் சித்தரிப்பன. கதை மாந்தர்களின் கூற்றுகள் வாயிலாக, சமுதாய நிகழ்வுகள் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. படைப்பாசிரியர்கள் தம் உணர்வுத் திறத்தையும், கற்பனைத் திறத்தையும் இணைத்து புதினத்தின் கதைக் கட்டமைப்பை உருவாக்குகின்றனர். சிக்கல்களை முன்னிறுத்தி அச்சிக்கல்களுக்கான தீர்வு நிலைகளையும் படைப்புகளில் முன்வைக்கின்றனர். படைப்பு உருவாக்கத்திற்கான சிக்கல்களின் மையம் ஒன்றுபடினும், கதைகூறும் முறைமையும், கதை அமைப்பும் படைப்பாளிகளுக்குள் வேறுபடுகின்றன. வாழ்க்கையில் சிக்கல்கள் இயல்பாகும். திருநங்கையர் சமூகத்திற்குச் சிக்கல்களே வாழ்க்கை ஆகின்றன. திருநங்கையர் வாழ்வு நிலையை முதலில் புதினமாகப் படைத்தவர் சு. சமுத்திரம். அவரைத் தொடர்ந்து இன்று பல புதினங்கள் திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்களைப் பற்றிப் பேசுகின்றன. குடும்பமும் சமூகமும் நிராகரிப்பதின் விளைவாகத் திருநங்கையரின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகின்றது. பிறப்பின் பிறழ்வால் அவர்களின் வாழ்க்கையும் பிறழ்கிறது. மனஉணர்வு தொடங்கி கல்வி, இருப்பிடம், வேலை, காதல், திருமணம் என எல்லாத் தரப்பிலும் திருநங்கையரின் இருப்பை மறுதலிக்கும் போக்கே அதிகரித்து வருகின்றது. பிச்சையெடுத்தல், பாலியல் தொழில் செய்தல் போன்ற இழிநிலைகளுக்குச் செல்லாது தம் கல்வித் திறத்தால் தமது வாழ்வியலை உயர்த்திய திருநங்கையர் பாத்திரப்படைப்பையும் புதினங்கள் பதிவாக்கி இருக்கின்றன. கீழ்வரும் தலைப்புகளின் வழி புதினங்களில் பதிவாகியுள்ள திருநங்கையரின் வாழ்வியல் நிலைகளைப் பகுத்தாராயலாம்.

*** அன்பும் ஆதரவும்**

*** சிக்கல்களும் எதிர்கொள்ளலும்**

*** உளநிலையும் உணர்வுகளும்**

*** புறக்கணிப்புகளும் போராட்டங்களும்**

*** திருநங்கையரும் சாதனைகளும்**

ஆகிய தலைப்புகளின்கீழ் ஆராயப்படுகின்றன.

2.1 திருநங்கையர் புதினங்களின் கதைச் சுருக்கம்

இவ்வாய்விற்குத் திருநங்கையர் குறித்த எட்டுப் புதினங்கள் உட்படுத்தப்பட்டுகின்றன.

வ. எண்	புதினம்	ஆசிரியர்	ஆண்டு
I.	வாடாமல்லி	சு.சமுத்திரம்	1996
II.	கனவுகள் கைப்பிடிக்குள்	ஆண்டாள் பிரியதர்ஷினி	2000
III.	அவன் – அது = அவள்	எஸ்.பாலபாரதி	2008
IV.	மூன்றாம் பாலின் முகம்	பிரியா பாபு	2008
V.	கமலி	அழகிரி விஸ்வநாதன்	2009
VI.	பூமி வசப்படுமே	குமார தேவி	2011
VII.	உன்னை விட்டு விலகுவதில்லை	எஸ்.செல்வ சுந்தரி	2016
VIII.	மாலைகள்	போந்தூர் கனகசுந்தரம்	2017

மேற்சுட்டிய புதினங்களைப் பின்வரும் நிலைகளில் ஆராயலாம்.

2.1.1 'வாடாமல்லி' புதினத்தின் கதை அமைப்பு

கல்லூரியில் பயிலும் ஒரு இளைஞனின் உடல், மன மாற்றத்தால் அவன் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றமே 'வாடாமல்லி' புதினத்தின் கதையமைப்பு ஆகும். திருநங்கையர் பற்றிய முதல் புதினம் இதுவாகும்.

பிள்ளையார் - வெள்ளையம்மாவிற்கு மகனாகப் பிறந்தவன் 'சுயம்பு'. அவனது அக்கா மரகதம், தங்கை மோகனா, அண்ணன் ஆறுமுகப்பாண்டி, அண்ணி கோமளம்.

படிப்பில் முதன்மையாய் விளங்கும் சுயம்புவிற்குப் பொறியியல் கல்லூரியில் பயிலும்போது உடல், மனதளவில் மாற்றம் ஏற்படுகின்றது. அவனுக்குள் ஏன் பெண்மை உணர்வின் மேலீடு என்பது அவனுக்கே புரியவில்லை. குழப்ப நிலையில் பரிதவிக்கின்றான்.

தன்னைப் பெண்ணாகச் சுயம்பு உணர்கிறான். இதனால் தன்னுடன் விடுதியில் ஒரே அறையில் தங்கி இருக்கும் முத்து, மூர்த்தியிடம் நெருங்கிப் பழக அவனால் இயலவில்லை. தனக்குள் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, கல்லூரியில் படிக்க மனமின்றி விடுதியிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வருகிறான். பேருந்தில் பெண்கள் இருக்கையில் அமர்ந்து அடி வாங்குகிறான். வீட்டினர் அறிவுரையால் மீண்டும் கல்லூரிக்கே வருகிறான். அங்கு 'டேவிட்' என்ற மருத்துவக் கல்லூரி மாணவனைச் சந்திக்கிறான். அவனை நேசிக்கிறான்.

தன்னைப் பெண்ணாகவே உணரும் சுயம்பு கல்லூரியில் ஒரு பெண்ணிடம் இயல்பாகப் பேசுகிறான். ஆனால், அவனைத் தவறாக எண்ணி மற்ற மாணவர்கள் தாக்குகின்றனர். இது போன்று மாணவப் பிரநிதிதி தேர்தலின்போது ஓட்டு போடச் செல்ல, ஒரு பெண்ணின் இரு சக்கர வாகனத்தில் அமர்கிறான். இதனால் சிக்கல் பெரிதாகின்றது. மருத்துவ, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கிடையில் மோதல் ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து கல்லூரிப் படிப்பிலிருந்து இடையிலேயே சுயம்பு விலக்கப்படுகிறான்.

மோகனாவின் தோழி மலர்க்கொடி சுயம்புவின் உண்மை நிலை அறியாது அவனை நேசிக்கிறாள். ஒரு நாள் வீட்டில் சுயம்பு தனித்திருக்கும்போது சேலை கட்டி,

பெண்ணாக மாறுகிறான். வெளியில் இருந்து வந்த வெள்ளையம்மாவும், மரகதமும் இதைப் பார்த்து விடுகின்றனர். சுயம்புவைக் கண்டிக்கின்றனர். சுயம்புவிற்குப் பேய் பிடித்து விட்டது எனப் பேயோட்டும் முயற்சியில் வெள்ளையம்மா ஈடுபடுகிறாள்.

சுயம்பு பெண்ணுடை உடுத்துவது ஊருக்குத் தெரிய வருகின்றது. குடும்ப கௌரவம் கருதி சுயம்புவின் அப்பாவும், அண்ணனும் எவ்வளவு அடித்தும், சூடு போட்டும் சுயம்பு சேலையை அவிழ்த்து, தன்னிலை திரும்ப மறுக்கிறான்.

சுயம்புவை மருத்துவமனையில் சேர்க்கின்றனர். சுயம்பு அங்கு தன்னைப் போன்ற 'பச்சையம்மாள்' என்ற திருநங்கையைச் சந்திக்கின்றான். மரகதத்தின் திருமணம் சுயம்புவால் தடைபடுகிறது. மிகுந்த அன்பைக் காட்டும் மரகதமே சுயம்புவைத் திட்டுகிறாள். சுயம்புவால் அவன் தங்கை மோகனாவின் காதலும் கை நழுவுகின்றது.

மனம் உடைந்த சுயம்பு வீட்டை விட்டு வெளியேறுகிறான். பச்சையம்மாவோடு சென்னை வருகிறான். அங்கு காவல் நிலையத்தில் காவலர்களால் தாக்கப்படுகிறான். அங்கிருந்து தப்பித்து புகைவண்டியில் 'தில்லி' செல்கிறான். அங்கு சில திருநங்கையரைச் சந்திக்கிறான். அவர்களோடு இணைகிறான். சுயம்புவின் நண்பர்கள் அவனின் நிலைக்குக் காரணமான 'குரோமோசோம் மாற்றம்' குறித்து அவனது குடும்பத்தினருக்கு விளக்கிக் கூறுகின்றனர்.

தில்லியில் உள்ள ஒரு தமிழ்க் குடும்பத்தின் குழந்தையைக் காப்பாற்றுகிறான். தொலைக்காட்சியில் பணிபுரியும் அக்குழந்தையின் தந்தையால் சுயம்பு உள்ளிட்ட திருநங்கையரின் வாழ்வியல் நிலை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின்றது.

இதில் நெகிழ்ந்துபோன திருநங்கையரின் குருவான காங்காதேவி சுயம்புவை மகளாகத் தத்தெடுக்கிறாள். தாயம்மா நிர்வாணம் சுயம்புவிற்குச் செய்யப்படுகிறது. பின் 'பாலூட்டும் சடங்கு' நடைபெற்று சுயம்பு 'மேகலை' ஆகிறாள்.

அப்போது பிரதமர் இந்திரா காந்தி இறப்பினால் அப்பகுதி கலவரத்திற்கு உள்ளாகிறது. அக்கலவரத்தில் 'சர்தாஜி' ஒருவரின் உயிரை மேகலை காப்பாற்றுகிறாள். இதனால் அவரின் மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமாகிறாள். குருவான கங்காதேவி இறந்தவுடன் திருநங்கையர் குழுமத்தை வழிநடத்தும் பொறுப்பினை மேகலை ஏற்கிறாள்.

கூவாகம் கூத்தாண்டவர் திருவிழாவிற்கு மேகலை தனது தோழிகளுடன் செல்கிறாள். அங்கிருந்து பத்து வருடங்களுக்குப்பின் தனது ஊருக்குத் திரும்புகிறாள். மரகதம் அக்காவின் இறப்பினைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறாள்.

ஊரிலிருந்து திரும்பி, சென்னை சென்று பச்சையம்மாவைச் சந்திக்கிறாள். அங்கு காவலர்களோடு சண்டை ஏற்படுகின்றது. பத்திரிகைவரை திருநங்கையர் சமூகப் பிரச்சனைகளைக் கொண்டு செல்கிறாள். பின் பச்சையம்மாவை தில்லிக்கு அழைத்துச் செல்கின்றாள். தனது குடும்பத்திற்குத் தேவையான பணத்தைத் தில்லியிலிருந்து அனுப்புகிறாள். சென்னையில் நடந்த அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மீண்டும் திருநங்கையர் தாக்கப்படுவதினை அறிந்து அங்கே சென்று அவர்களை மீட்டெடுக்க விரைகிறாள்.

திருநங்கையர்களைச் சுட்ட இப்புதினத்தில் சு. சமுத்திரம் 'அலி' எனும் சொல்லாடலைக் கையாண்டுள்ளார்.

2.1.2 'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தின் கதையமைப்பு

தன்னை விரும்பும் ஆடவனை ஏற்க முடியாது தவிக்கும் ஒரு திருநங்கையின் உளப்போராட்டத்தையும், வாழ்வியல் போராட்டத்தையும் உள்ளடக்கியது 'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினமாகும். திருநங்கை தீபாவின் உளப்போராட்டத்தை எதார்த்த உணர்வோடு இப்புதினம் சித்திரிக்கின்றது.

‘தீபா’ ஒரு கணினி நிறுவனத்தில் பணிபுரிகிறாள். மகளிர் விடுதி ஒன்றில் தங்கி இருக்கிறாள். அங்குள்ள பெண்கள் பொறாமைப்படும் அளவிற்கு தீபா அழகாக இருக்கிறாள். இயற்கையை நேசிக்கும் தீபா ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவள் என்பது விடுதிக் காப்பாளருக்கு மட்டுமே தெரிந்த உண்மையாகும்.

தீபாவின் நெருங்கிய தோழி மீனா தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணிபுரிகிறாள். அதே நிறுவனத்தின் ஒளிப்பதிவாளரும், மீனாவின் முறை மாப்பிள்ளையுமானவன் ரவி ஷங்கர். தீபாவை ஒருதலையாகக் காதலிக்கிறான். தீபா அக்காதலை ஏற்க முடியாமற் தவிக்கிறாள். ‘நாம் நண்பர்களாக இருந்தால் போதும்’ எனக் கூறுகிறாள்.

தீபாவின் பாலின மாற்றத்தால் அவள் தங்கையின் திருமணம் தடைபட்டுப் போகிறது. மாப்பிள்ளை வீட்டாரைச் சந்தித்து விளக்கம் கூறியும், அவர்கள் அதை ஏற்க மறுக்கின்றனர். பின் தனது சொந்த ஊருக்கே தீபா வருகிறாள். அங்கு ஊராரின் கேலிப் பேச்சுகளுக்கு ஆளாகிறாள். அன்னையும், தங்கையும் ஆறுதல் கூறுகின்றனர். மீண்டும் சென்னைக்கு வருகிறாள்.

மீனாவின் தந்தை ரவிஷங்கருக்கும், மீனாவிற்கும் திருமண ஏற்பாடுகள் செய்கிறார். மீனா அவள் பணியின் மேல் உள்ள காதலாலும், ரவிஷங்கர் தீபாவின் மேல் உள்ள காதலாலும், திருமணத்திற்கு உடன்பட மறுக்கின்றனர்.

ரவி ஷங்கர் மீண்டும் தன் காதலை ஏற்கும்படி கேட்கிறான். தீபா மீண்டும் மறுக்கிறான். தன் தோழி மீனாவிடம் உண்மை நிலையை எடுத்துக் கூறுகிறாள். ரவி ஷங்கர் தீபாவின் மனதை மாற்ற முடியாததால் தற்கொலைக்கு முற்பட்டு உணர்ச்சியற்ற நினைவிழப்பு (கோமா) நிலைக்குச் சென்றுவிடுகின்றான். மனமுடைந்த தீபா மனதளவில் ரவிஷங்கரின் மனைவியாக அவனைக் கவனித்துக் கொள்வதையே தன் வாழ்நாள் கடமையாகக் கொண்டு வாழ்கிறாள்.

2.1.3 அவன் – அது = அவள் புதினத்தின் கதை அமைப்பு

குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட திருநங்கையரை அவர்களின் சமூகம் ஆதரிக்கின்றது. திருநங்கையரைக் 'காதல்' எனும் பெயரில் நம்பவைத்து ஏமாற்றும் சராசரி ஆணின் வக்கிரமனம் குறித்து இப்புதினத்தில் பதிவு செய்யப்படுகிறது.

துரைப்பாண்டி - மங்களத்தின் ஆறாவது பிள்ளை 'கோபி'. அவனின் நண்பன் சரவணன். ஒரு வாகன விபத்தில் கோபியின் தந்தையும், அண்ணனும் இறந்து விடுகின்றனர். கோபிக்குப் பெண்மை உணர்வு மேலிடுகின்றது. அக்காவின் உடைகளை அணிந்து அழகு பார்க்கிறான்.

பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரியில் சேர்கிறான். பள்ளித் தோழனான சரவணன், கல்லூரியிலும் விடுதித் தோழன் ஆகிறான். கல்லூரியில் சக மாணவர்களால் கேலி, கிண்டல்களுக்கும், பேராசிரியர்களால் பாலியல் சீண்டல்களுக்கும் ஆளாகிறான்.

கோபி, பெண்ணுடை அணிவது குடும்பத்தினருக்குத் தெரிய வருகின்றது. கோபிக்குப் பேய் பிடித்து விட்டது என்று பேயோட்டுகின்றனர். தனக்குள் பேய் இருப்பதாகக் காட்டி பூசாரியிடம் பெண் உடைகளைக் கேட்டு அணிந்து கொள்கிறான். தன்னைப் போன்ற திருநங்கையரைக் கோபி சந்திக்கிறான். தனக்கான இந்நிலைபற்றி அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்கிறான். அவர்களோடு நன்கு பழகுகிறான்.

சரவணனின் ஆலோசனையால் கூவாகம் செல்கிறான். அங்கு மூன்று ஆண்களால் பாலியல் வன்புணர்விற்கு ஆளாகிறான். அவனை 'தனம்' என்ற திருநங்கை மருத்துவமனையில் சேர்க்கிறாள். அங்கு அவனுக்குப் பெண்ணுடை கொடுத்து 'கோமதி' என்று பெண் பெயர் சூட்டுகிறாள்.

'கோமதி' மும்பை செல்கிறாள். அங்கு கடைகேட்ட ராணி என்ற திருநங்கையைக் கடைக்காரன் தாக்கியத்தை அறிகிறாள். ராணியை அடித்தவர் பற்றிக்

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்கின்றனர். அங்கு கோமதி உட்பட அனைவரும் காவலர்களின் இழிசொல்லால் அவமதிக்கப்பட்டும், நிர்வாணமாக்கப்பட்டும் துன்புறுத்தப்படுகின்றனர். அங்கிருந்து வெளியேறி மும்பை செல்கின்றனர். புகைவண்டிப் பயணத்தில் ஒரு பெண்மணி இவர்களைத் தரக்குறைவாகப் பேசுகிறாள். தான் வீட்டை விட்டு வெளியே வந்ததை நினைத்து கோமதி வருந்துகிறாள்.

மும்பையில் மற்ற திருநங்கையரைப் போல தான் பிச்சையெடுக்க விரும்பவில்லை என கோமதி தனலெட்சுமியிடம் கூறுகிறாள். பல இடங்களில் வேலை தேடுகிறாள். வேலை கொடுக்க எவரும் முன் வராததால் கடை கேட்பதற்கே செல்கிறாள்.

பத்திரிகையாளரான அன்பரசனைச் சந்திக்கிறாள். மும்பையில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்கின்றது. அதில் உயிருக்குப் போராடும் ஒருவருக்கு யாரும் உதவ முன்வராத நேரத்தில் கோமதி தண்ணீர் கொடுக்கிறாள். அதை அன்பரசன் பார்க்கிறான். இருவருக்கும் காதல் ஏற்படுகின்றது. இதை அறிந்த தனலெட்சுமி கோமதியைக் கண்டிக்கிறாள். திருநங்கை நதியாவிற்குத் திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறக்கிறாள். முப்பதாவது நாள் இறப்புச் சடங்கு நடத்தப்படுகிறது. அங்கு சுந்தரி என்ற திருநங்கையை, சுசீலா தனலெட்சுமிக்குத் தெரியாமல் சந்திக்கிறாள். கோமதி சுந்தரியைப் பற்றி விசாரிக்கிறாள். தனலெட்சுமியின் மகள் சுந்தரி என்றும், இவளின் காதல் திருமணத்தால் குருசேலா உறவு முறிந்தது பற்றியும் சுசீலா கூறக் கேட்கிறாள்.

கோமதிக்குத் 'தாயம்மா நிர்வாணம்' செய்யப்படுகிறது. சுந்தரி தீக்குளித்து தற்கொலை செய்கிறாள். சுந்தரியின் திருமணம் குறித்தும், அவள் கணவனின் கொடுமையால் இறந்தது குறித்தும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறாள் தனம். ஆனால், சுந்தரி 'மாறிய பாலினம்' என்பதால் திருமணம் சட்டப்படி

செல்லுபடியாகாது எனக்கூறி புகார் மனு நிராகரிக்கப்படுகின்றது. இருப்பினும் புகார் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கோமதிக்கும் அன்பரசனுக்கும் இடையேயான காதலை சுசீலா தனத்திடம் கூறுகிறாள்.

தனம் ஏற்க மறுப்பினும் கோமதி அன்பரசனைத் திருமணம் செய்து கொள்வதில் உறுதியாக நிற்கிறாள். இதனால் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். ஒரு வருடம் கழித்து சுசீலா கோமதியைச் சந்திக்கிறாள். பழைய வனப்பு அவளிடம் இல்லை. கோமதி, அன்பரசன் தன்னை ஏமாற்றியதாகக் கூறுகிறாள். குடித்துவிட்டு அடிப்பதாகவும், கடை கேட்க அனுப்புவதாகவும் கூறுகிறாள். சுசீலா அவனை விட்டுப் பிரிந்து வருமாறு கோமதியிடம் கூறுகிறாள். ஆனால் கோமதி 'வாழும் வரை அவனோடு வாழ்ந்துவிட்டு, வாழ முடியாத நிலையில் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்' என்று வருத்தத்துடன் கூறுவதுடன் புதினம் நிறைவுறுகிறது.

திருநங்கையர் சமூகத்தில் பயன்படுத்தும் 'கவுடி' மொழி இப்புதினத்தில் அதிகமாகக் கையாளப்பட்டுள்ளது.

2.1.4 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தின் கதையமைப்பு

தாயின் அரவணைப்பாலும், சமூக மக்களின் ஆதரவாலும் தானும் உயர்ந்து திருநங்கையர் சமூகத்தையும் உயர்த்தப் பாடுபடும் ஒரு திருநங்கையின் போராட்டச் சிந்தனையை இப்புதினம் முன் வைக்கிறது. ஒரு திருநங்கையால் எழுதப்பட்ட முதல் புதினமாகும்.

ராஜவேல் - பார்வதி தம்பதியினரின் மூன்றாவது குழந்தை ரமேஷ். கல்லூரியில் முதலாமாண்டு படிக்கிறான். தாய் வெளியில் சென்றிருக்கும் நேரத்தில் தன்னைப் பெண்ணாக நினைத்து அலங்கரித்துக் கொண்டு, பாடி ஆடுகிறான். வீட்டிற்குத் திரும்பும் தாய், அவனது கோலத்தைச் சாளரம் வழியே காண்கிறாள். அதிர்ச்சியும், திகைப்பும் அடைகிறாள்.

வீட்டிற்குள் சென்றதும் அவனை அழைத்து அறிவுரை கூறுகிறாள். ரமேஷ் தெரியாததுபோல் தாயைச் சமாளிக்கிறான். சந்தையில் சில திருநங்கையரைக் கண்ட பார்வதி அவர்களோடு தன் மகனை ஒப்பிட்டுப் பார்க்கிறாள். அவர்களின் இந்நிலைக்குக் காரணம் என்ன என்று சிந்திக்கிறாள். தன்மகன் இவர்களைப்போல் கையேந்தும் நிலைக்கு ஆளாகக் கூடாது என்றும் நினைக்கிறாள்.

ரமேஷின் நண்பன் 'விவேக்' மூலமாக அவனுக்குத் திருநங்கையரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஜானகியம்மாள் என்ற மூத்த திருநங்கை அவர்கள் அடையும் இன்னல்களைக் கூறி அவனுக்கு அறிவுரை வழங்குகிறாள்.

ரமேஷின் தாய் அவனது நடவடிக்கைகள் குறித்து வெளிப்படையாக அவனிடம் பேசுகிறாள். முதலில் ரமேஷ் மறுக்கிறான். பின்னர் ஒப்புக் கொள்கிறான். தனக்குள் பெண்மை உணர்வு வியாபித்திருப்பதைத் தாயிடம் பகிர்கிறான். பார்வதியால்தான், தான் வீட்டைவிட்டு வெளியேறாமல் இருப்பதாகவும் தெரிவிக்கிறான்.

கல்லூரியிலும், சமூகத்திலும் அவனைச் சுற்றிக் கிண்டல்களும், சீண்டல்களும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. தன்னைக் கிண்டல் செய்வாரோடு சண்டை போடுகிறான். புகைவண்டியில் பார்வதி ஒருநாள் சில திருநங்கையரைப் பார்க்கிறாள். அவர்கள் 'கண்மணி' என்ற பெண்ணோடு சிநேகமாய்ப் பேசுவதையும் ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்.

கண்மணியோடு நட்பு கொள்கிறாள். கண்மணி ஒரு சமூகசேவகி என்பதைப் பார்வதி அறிகிறாள். அவள் மூலம் திருநங்கையரைப் பற்றிப் புரிந்து கொள்வதோடு தன் மகன் பற்றிய நிலையையும் பகிர்ந்து கொள்கிறாள்.

கல்லூரியிலிருந்து சுற்றுலா செல்வதாக வீட்டில் பொய்யுரைத்துவிட்டு ரமேஷ், ஜானகியம்மாவோடு கூத்தாண்டவர் திருவிழாவிற்குச் செல்கிறான். அங்கு தினந்தினம் இச்சமுதாயத்தோடு போராடும் திருநங்கையரின் நிலைகண்டு வருத்தம் கொள்கிறான்.

ரமேஷின் தாய் ஜானகியம்மாளையும் மற்ற திருநங்கையரையும் சந்திக்கிறாள். அவர்களின் அன்பைக் கண்டு நெகிழ்ந்து போகிறாள். எல்லாவற்றையும் உணர்ந்த பார்வதி, ரமேஷிடம் 'நான் உனக்கு ஆதரவாக இருப்பேன்' என்று கூறுகிறாள். அவளின் அந்தச் சொல் ரமேஷிற்கு ஆறுதலையும், தேறுதலையும் அளிக்கிறது. தன்னம்பிக்கை ஊட்டுகிறது. திருநங்கையரின் வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய எண்ணம் துளிர்க்கின்றது.

ரமேஷ் கல்லூரிப் படிப்பை முடிக்கின்றான். கண்மணி உதவியுடன் 'மாதா, மலர்' என்ற பெயரில் சுயஉதவிக் குழுக்களைத் துவங்குகிறான். திருநங்கையரின் வாழ்வில் மலர்ச்சியை உண்டாக்குகிறான். பின் அறுவைச் சிகிச்சை செய்து 'பாரதி'யாக மாறுகிறாள். வீட்டிற்கு வருகிறாள். தந்தை, சகோதரன் எதிர்ப்பிற்கு ஆளாகிறாள். பின் 'ஒருநாள் திருநங்கையர் சமூகத்தை உலகறியச் செய்வேன்' என்று கூறிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள். திருநங்கையர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறாள்.

இப்புதினத்தில் திருநங்கையரைக் குறித்திட 'அரவாணி' எனும் சொல் கையாளப்படுகின்றது.

2.1.5 'கமலி' புதினத்தின் கதையமைப்பு

சமூக மக்களின் ஆதரவு இருந்தால் திருநங்கையரும் கல்வி கற்று உயர்ந்து நன்னிலை எய்த முடியும் என்பதை இப்புதினம் கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

பேருந்தில் ஓட்டுநராக ராஜேந்திரனும், நடத்துனராக முரளியும் பணி செய்கின்றனர். அப்பேருந்தில் நான்கு திருநங்கைகள் ஏறுகின்றனர். பேருந்தில்

ஏற்பட்ட தகராறில் ஒரு 'ரவுடி' நடத்துனர் முரளியைக் கத்தியால் தாக்குகிறான். இதனை அந்தத் திருநங்கையர் கூட்டத்தில் ஒருத்தியான ராஜாத்தி தடுக்கிறாள். பின் நடத்துனரைக் குத்தியதற்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல அந்தத் திருநங்கைகள் முன்வருகின்றனர். முரளிக்கு, திருநங்கையர் பற்றிய சந்தேகங்களுக்கு ராஜேந்திரன் விளக்கம் தருகிறார்.

ராஜாத்திக்கு ராஜதுரை என்ற 'மிராசு' அடைக்கலம் தருகிறார். சில நாட்களில் கூத்தாண்டவர் திருவிழா வருகிறது. அதற்கு ராஜேந்திரனும், முரளியும் செல்கின்றனர். ராஜாத்திக்குத் திடீரென வயிற்றுவலி ஏற்படுகிறது. ராஜதுரையின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கின்றனர். அவள் குணமாகிறாள். ராஜாத்தியுடன் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று முரளிக்கு ஓர் எண்ணம் எழுகின்றது.

அவனின் நோக்கம் அறிந்த ராஜாத்தி, தனக்கு 'பட்டியம்' கட்டி விட்டதாகவும், ராஜதுரைக்குத் தான் பாத்தியப்பட்டவள் என்றும் கூறுகிறாள். அவள் பதில் அவனுக்கு எரிச்சலூட்டினாலும், அவளின் உறுதிப்பாட்டினை எண்ணி வியக்கிறான். ஒரு வாகன விபத்தில் ராஜதுரை இறந்து போகிறார். அதைக் கேள்விப்பட்டு ராஜாத்தியும் மாரடைப்பால் உயிர் விடுகிறாள். ராஜாத்தியின் சடலத்தை ஏற்றிச் செல்ல பஞ்சாயத்து (முனிசிபாலிட்டி) வண்டியை மாவட்ட ஆட்சியர் தர மறுக்கிறார். திருநங்கையர் ஒன்றுகூடி ஆட்சியர் அலுவலத்தில் முன்நின்று போராடி வண்டியைப் பெற்று அதில் ஏற்றிச் செல்கின்றனர்.

ரத்னா என்ற திருநங்கை மும்பையிலிருந்து கடிதம் எழுதுகிறாள். அதன் பேரில் பங்காரு, கமலி, ராஜி, சரோஜா ஆகியோர் மும்பை செல்கின்றனர். சிறிது நாட்களிலேயே ரத்னா அவர்களைக் கொடுமைப்படுத்துகிறாள். பின் காவல் துறையின் உதவியுடன் புகைவண்டி ஏறி பரமக்குடியை அடைகின்றனர். 'திருநங்கையர் நலவாழ்வு சங்கம்' துவங்குவதைப் பற்றி ராஜாத்தி முன்னரே கூறியதை முரளியிடம் எடுத்துரைக்கின்றனர். முரளியின் உதவியால் மருத்துவர் மல்லிகாவைச்

சந்திக்கின்றனர். மல்லிகா மாதர் சங்கத் தலைவியும்கூட. அவளது கணவர் வழக்கறிஞர். அவர்களிடம் முரளி, திருநங்கையரின் சிக்கல்களையும், திட்டங்களையும் எடுத்துக் கூறுகிறான். அதுபற்றி ஆலோசிக்கப்படுகின்றது. முதல்வர் முக்கண்ணனுக்கு மனு கொடுக்கப்படுகிறது. நீண்ட போராட்டங்களுக்குப்பின் 'கடவுளின் குழந்தைகள் முன்னேற்றச் சங்கம்' துவங்கப்படுகின்றது.

முதலமைச்சரின் நிவாரண நிதியில் பங்காருவிற்குப் பால்மாற்று அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது. மருத்துவர் மல்லிகாவால் முழுப்பெண்ணாக மாறியபின், அவள் ஒரு வழக்கறிஞர் வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிடப்படுகிறாள். அங்கு அவள் மீது திருட்டுப்பட்டம் சுமத்தப்படுகிறது. பின் பங்காரு குற்றவாளி அல்ல என்பது நிரூபணம் ஆகிறது. பிறகு அங்கு வேலைக்குச் செல்வதை நிறுத்துகிறாள். கல்வியறிவு இல்லாத திருநங்கையருக்குக் கல்வி புகட்டப்படுகிறது. பிறகு வங்கிக்கடன் உதவியோடு கைத்தொழில்கள் செய்யத் துவங்குகின்றனர். 'கடவுளின் குழந்தைகள் கூட்டுறவு பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனம்' துவங்கப்படுகிறது. பங்காருவிற்குப் பார்த்திபன் என்பவனைத் திருமணம் செய்து வைக்கின்றனர். பங்காருவின் வாழ்க்கை இனிதே நடக்கிறது.

கமலி, ராஜி இவர்களோடு தீபா, அலமேலு என்ற இரு திருநங்கையர் இணைகின்றனர். அரசு உதவிகள் இவர்களுக்குக் கிடைக்கின்றன. தனியார் பயிற்சிப் பள்ளியில் ராஜி, கமலி இருவரும் பாதியில் நிறுத்திய பள்ளிப்படிப்பைத் தொடர்கின்றனர். தேர்வில் தேர்ச்சியும் அடைகின்றனர். 'கடவுளின் குழந்தை ராஜாத்தி' எனும் பெயரில் பத்திரிகை ஒன்றும் துவங்கப்படுகிறது. சங்கத்தைக் கலைக்கும்படி மிரட்டல் வருகிறது. கமலியின் அக்கா துர்காவால் ராஜி, கமலி, சரோஜா மூவரும் கடத்தப்படுகின்றனர்.

மருத்துவர் மல்லிகா காவல் துறையிடம் புகார் கொடுக்கிறாள். தீபா, அலமேலு கூறிய தகவலால் காவலர் உதவியுடன் அம்மூவரும் விடுவிக்கப்படுகின்றனர்.

அலமேலு தற்கொலை செய்ய முற்படுகிறாள். பின் அவள் காப்பாற்றப்படுகிறாள். தான் ஆணாகவோ, பெண்ணாகவோ மாற விரும்புவதைத் தெரிவிக்கிறாள். அவளை மருத்துவர் குழு பரிசோதிக்கிறது. அவளை ஆணாக மாற்றி விடலாம் என்று கூறுகின்றது. அலமேலு ஆணாக மாறுவதற்குச் சம்மதிக்கிறாள். அறுவை சிகிச்சைக்குப்பின் அலமேலு 'அழகேசன்' ஆகிறான். அழகேசன் பூரணி என்ற பூக்காரப் பெண்ணை விரும்பி மணக்கிறான். அவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கின்றது.

கமலியும், ராஜியும் சட்டமன்றத் தேர்தலில் போட்டி இடுகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பின்னர் முதலமைச்சரால் கமலி சமூக நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கிறாள். திருநங்கையருக்குத் தேவையான பல நல்ல திட்டங்களை முதலமைச்சர் முக்கண்ணன் அனுமதியுடன் சட்டமாக்குகிறாள். கொடை வள்ளல் ஒருவரால் வழங்கப்பட்ட ஆறு ஏக்கர் நிலத்தில் ஓலைப் பொருட்கள் நிறுவனத்தை மாற்றத் திட்டமிடப்படுகின்றது. அங்கு ஒரு வியாபாரியால் தகராறு ஏற்படுகின்றது. அது தீர்க்கப்பட்டு அவ்விடத்தில் புதிய கட்டடம் முதலமைச்சர் தலைமையில் திறக்கப்படுகிறது. கமலியிடம் வருவாய்த்துறை அமைச்சர் வைரலிங்கம் தவறாகப் பேசுகிறார். கமலி அதனை முதல்வரிடம் தெரிவிக்கின்றாள். வைரலிங்கம் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுகின்றார். மருத்துவர் மல்லிகா, கமலியை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுமாறு அழைக்கிறார். கமலியோ பெண்ணாக மாறினால், 'குடும்பம் என்ற வட்டத்துள் முடங்கிப் போய்விடக்கூடும்' என்பதால் மறுக்கிறாள். திருநங்கையாகவே இருந்து திருநங்கையர்க்குத் தொண்டு செய்ய விரும்புவதாகத் தெரிவிக்கிறாள். தனது தோழி ராஜிக்கு பால்மாற்று அறுவைச் சிகிச்சை செய்யுமாறு வேண்டுவதோடு புதினம் நிறைவுறுகிறது.

திருநங்கையரைக் குறித்திட 'கடவுளின் குழந்தைகள்' எனும் சொல்லாடல் இப்புதினத்தில் சுட்டப்படுகின்றது.

2.1.6 'பூமி வசப்படுமே' புதினத்தின் கதையமைப்பு

திருநங்கையர் இழிதொழில் செய்யாது சுயமாக உழைத்து முன்னேற வேண்டும் என்ற உயர் சிந்தனையை இப்புதினம் கதைக்கருவாகக் கொண்டிருக்கிறது.

நல்லக்கண்ணு ஆதிலெட்சுமியின் இரண்டாவது பிள்ளை மாசிலாமணி. நல்லக்கண்ணுவின் அண்ணனுக்கும், அக்காவிற்கும் பெண் குழந்தைகள் மட்டுமே என்பதால் மாசிலாமணியை அனைவரும் செல்லப்பிள்ளையாக வளர்க்கின்றனர். பள்ளிப்பருவத்திலேயே மாசிலாமணியின் உடலில் மற்றம் ஏற்படுகிறது. தனக்கு ஏற்படும் மாற்றத்தின் காரணம் தெரியாமல் மாசிலாமணி குழம்புகிறான். செண்பக அக்காவின் உடைகளைப் போட்டு அழகு பார்க்கிறான். ஒரு சூழ்நிலையில் வீட்டிற்குத் தெரிய வருகிறது. அவனின் அப்பா அடிக்கிறார். மாமா, அத்தை அனைவரும் அறிவுரை கூறுகின்றனர். பள்ளியில் நண்பர்களின் கேலி கிண்டலுக்கு ஆளாகிறான். அவனது நிலையை வெளியில் கூறிவிடுவோம் என மிரட்டி அவனிடமிருந்து பணம் பறிக்கின்றனர். மாசிலாமணிக்கு, சுடலைமுத்து ஆதரவாக இருக்கிறான். சுடலைமுத்துவின்மேல் மாசிலாமணிக்கு ஈர்ப்பு ஏற்படுகின்றது.

இந்நிலையில் மளிகைக் கடையில் வேலை பார்க்கும் தன்னைப்போல் உள்ள இராமசுப்பிரமணியம் என்ற திருநங்கையைச் சந்திக்கிறான். வீட்டை விட்டு வெளியேறுகிறான். பின் இரண்டு நாட்களில் வெளியுலகிலும் அவமானப்படுத்தப்படுகிறான். பிறகு வீட்டிற்கு வருகிறான். குடும்ப கௌரவம் போய்விட்டதே எனக்கூறி மாசிலாமணியின் அப்பா அவனைச் செருப்பால் அடிக்கிறார். தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறான். வீட்டைவிட்டு வெளியேறுகிறான். ராமசுப்பிரமணியத்துடன் வந்து தங்குகிறான். மாசிலாமணியை அவன் தாய்மாமா பார்க்க வருகிறார். மாமாவின் நல்ல மனதினைப் புரிந்து கொள்கிறான். மாமாவிடம் தன்னை அழைத்துச் செல்லும்படி வேண்டுகிறான். மாமா மனைவிக்குத் தெரியாமல் வந்திருப்பதாகக் கூறி மறுத்துவிடுகிறார். அவர்கள் இருவரும் தங்குவதற்கான ஒரு

வீட்டினை ஏற்பாடு செய்து கொடுக்கிறார். மணியின் அக்காவும் அவனைப் பார்த்துவிட்டுச் செல்கிறாள்.

ஒருநாள் மணியை ராமு கூத்தாண்டவர் திருவிழாவிற்கு அழைத்துச் செல்கிறான். ராமுவுடன் தனிமையில் இருக்கப் பிடிக்காமல், சில திருநங்கையரோடு சென்னை சென்று விடுகிறான். அங்கு பாட்டி (மரகதவல்லி), அத்தை (சுமதி), அம்மா (விஷ்ணு பிரியா), அக்காக்கள் (வள்ளி, பானு, காமாட்சி) என்று பல புது உறவுகள் அவனுக்குக் கிடைக்கின்றன. தனக்கு விருப்பமானபடி தன்னைப் பெண்ணாக அலங்கரித்துக் கொள்கிறான். மணி விருப்பமின்றி அவர்களோடு புகைவண்டியில் பிச்சை எடுக்கச் செல்கிறான். மணியை விஷ்ணுபிரியா தத்தெடுத்துக் கொள்கிறாள். ஒருநாள் மணியின் மாமா அவன் புகைவண்டியில் பிச்சை எடுப்பதைப் பார்த்து விடுகிறார். மணி ஓடி ஒளிந்து கொள்கிறான். சக தோழியரிடம் கூறுகின்றான். பின் வீடு வந்து சேருகின்றனர். வீட்டிற்கே மாமா பின் தொடர்ந்து வந்து விடுகிறார். மணி மாமாவிடம் மன்னிப்பு கேட்கிறான்.

மணியின் அக்கா செண்பத்திற்குத் திருமணம் என்று மாமா அழைப்பிதழைக் கொடுக்கிறார். மேலும் திருநங்கை வள்ளிக்கு ஒரு வீட்டில் வேலை வாங்கிக் கொடுக்கிறார். மணி, அக்காவின் திருமணத்திற்குச் செல்கிறான். ஆனால் அக்காவின் திருமணம் தன்னால் நின்றுவிடக்கூடாது என நினைத்து மீண்டும் சென்னைக்கே வந்து விடுகிறான். பின் பிச்சையெடுக்கக்கூடாது எனக்கூறி ஒரு தேநீர்க் கடை துவங்குகின்றனர். வியாபாரம் நல்லபடியாக நடக்கிறது. பாட்டி மரகதவல்லி நாடக நிறுவனத்தில் நடிகையாக இருந்தவள். அவளது வளர்ப்புத் தந்தை அவளைத் தாயம்மா நிர்வாணம் பண்ணச் செய்கிறார். ஊர்ப் பெரியவர்களிடம் போய்வரச் சொல்கிறார். பிரியாவும், மரகதவல்லியோடு இணைகிறாள். பிரியாவையும் அதைப்போல் செய்யச் சொல்கின்றனர். பிரியா மறுத்து விடுகிறாள். இருவரும் தகாத வார்த்தைகளால் இழிவாகத் திட்டு வாங்குகின்றனர். மரகதவல்லியும், விஷ்ணு

பிரியாவும் குடும்பத்தை விட்டுத் தனியாகப் பிரிந்து சென்னை வந்து விடுகின்றனர். இவ்வாறு தங்கள் பழைய வாழ்க்கை பற்றிக் கூறுகின்றனர்.

வள்ளி அக்காவின் வேலை போய்விடுகிறது. மாமா கொடுத்த பணத்தில் காமாட்சியை அழகுப் பயிற்சிக்காகப் படிக்க அனுப்புகின்றனர். பானு, ரமேஷ் என்ற ஆடவனை விரும்புகிறாள். ஒருநாள் சுந்தரேசன் என்பவன் அடைக்கலம் தேடி வருகிறான். அவன், திருநங்கை என்பதைப் புரிந்துகொண்டு 'சுந்தரி' என்ற பெயரோடு வள்ளி தத்தெடுக்கிறாள். அழகு நிலையத் திறப்பு விழா நடைபெறுகிறது. மணி, அக்கா செண்பகம் கருவுற்றிருப்பதை அறிந்து அவளை மறைமுகமாகச் சந்திக்கிறான். இவர்களின் முன்னேற்றத்தைப் பார்த்து மேலும் இரண்டு திருநங்கையர் வேலை கேட்டு வருகின்றனர். மணி மகிழ்ச்சி அடைகிறான். மணி கைபேசி மூலம் தன் அம்மா ஆதிலெட்சுமியிடம் பேசுகிறான். நடன வகுப்புகளும் துவங்கப்பட்டு நடைபெறுகின்றன. பானு கவிதை எழுதும் ஆற்றல் வாய்ந்தவள். அதைப் புத்தகமாக வெளியிட மணி எண்ணுகின்றான். காமாட்சியும், பானுவும் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொள்கின்றனர். மணியின் அம்மாவைச் சந்திக்கும்போது தன் பழைய தோழியான ராமுவைச் சந்திக்கின்றாள். தான் உழைத்து வாழ்வதையும், மணியின் மாமா ராமுவுக்கு உதவியதையும் ராமு கூறுகிறான். மணி மகிழ்கிறான்.

செய்தித்தாளில் விளம்பரம் கொடுக்கப்பட்டு சுந்தரியின் தாய் கண்டறியப்படுகிறாள். மணிக்கும், சுந்தரிக்கும் அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது. பின் சுடலைமுத்து மணியைப் பார்க்க வருகிறான். மேலும் இரண்டு திருநங்கையருக்கு தானியங்கி முவுருளி உந்து (ஆட்டோ) ஓட்டும் உரிமமும், தானியங்கி முவுருளி உந்துவும் (ஆட்டோவும்) வாங்கிக் கொடுக்கின்றனர். முதியோர் இல்லம் ஒன்றைத் துவங்கத் திட்டமிடுகின்றனர். மேலும் இரண்டு திருநங்கையருக்கு வண்டி வைத்து வியாபாரம் செய்வதற்குப் பணமும் கொடுக்கின்றனர். காமாட்சிக்கும்,

அரவிந்தனுக்கும் திருமணம் நடைபெறுகிறது. மரகதவல்லியும் பிரியாவும் சொந்த ஊருக்கு அவர்களின் பெற்றோரைப் பார்ப்பதற்குச் செல்கின்றனர்.

மணியும் சுடலை முத்துவும் திருமணம் செய்து ஒரு குழந்தையைத் தத்தெடுக்கின்றனர். மணியைப் பள்ளிப் பருவத்தில் கிண்டல் செய்த ரங்கன் பின்னாளில் நல்ல நண்பன் ஆகிறான். பானுவின் 'அம்மா நீயே சொல்லு' எனும் கவிதைப் புத்தகம் வெளியாகிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இவர்களைப் பற்றிய நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு, சொந்தங்கள் வந்து சேருகின்றனர். தேநீர்க் கடை, அழகு நிலையம், முதியோர் இல்லம் சிறப்பாக நடைபெறுகின்றன. வைரவன் மாமாவின் பெயரில் ஒரு சேவை மையம் துவங்கப்பட்டு அனைத்துத் திருநங்கையருக்கும் உதவிகள் செய்கின்றனர்.

மாறிய பாலினத்தார் என்றாலும், தன்மானத்தோடு சுயமாக உழைத்து முன்னேற வேண்டும் என்பது இப்புதினத்தின் மையச்சாரமாக இழையோடுகின்றது. 'திருநங்கையர்' என்ற சொல்லாட்சி இப்புதினத்தில் கையாளப்பட்டுள்ளது.

2.1.7 'உன்னைவிட்டு விலகுவதில்லை' கதையமைப்பு

பள்ளித் தோழன் தன் சகதோழன் திருநங்கை என்பதை அறிந்து, அவளது முடங்கிய வாழ்க்கையை முன்னேறச் செய்து திருமணம் செய்ய எண்ணும் முற்போக்குச் சிந்தனையை இப்புதினம் கதைக்கருவாகக் கொண்டுள்ளது.

கந்தர்வனும், அர்ச்சுணனும் சிறுவயதில் இருந்தே நல்ல நண்பர்கள். ஒரே பள்ளியில் பயில்கின்றனர். அர்ச்சுணனுக்கு இரண்டு தம்பியர், ஒரு தங்கை. அப்பா கோபக்காரர். பெரும்பான்மையான நேரத்தை அர்ச்சுணன் கந்தர்வன் வீட்டிலேயே செலவிடுகின்றான். பல வேளைகளில் அர்ச்சுணன், கந்தர்வனின் அம்மா சாந்தியின் கையால் சாப்பிடுகிறான். கந்தர்வனின் அக்கா வயதிற்கு வருகிறாள். அங்கு வந்த உறவினர்களையும், மகிழ்ச்சியான சூழலையும் காண்கிறான். அர்ச்சுணன் தன் தாயிடம்

சென்று 'நான் எப்போது பெண்ணாவேன்', 'பெரிய மனுஷி ஆவேன்?' என்று கேட்கிறான். அர்ச்சுணன் நடத்தையில் மாற்றம் தெரிகிறது. பள்ளி நண்பர்கள் கேலி செய்கின்றனர். பள்ளியின் கலை நிகழ்ச்சி ஒன்றில் நடனத்தில் கந்தர்வன் ஆணாவும், அர்ச்சுணன் பெண்ணாகவும் வேடம் போட்டு ஆடுகின்றனர். இவனின் மாற்றம் கந்தர்வனுக்குத் தெரியவில்லை. தன் தங்கையின் அணிகளையும் அம்மாவின் உடைகளையும் அர்ச்சுணன் அணிகிறான். தந்தை அவனை அடிக்கிறார். பள்ளி செல்வது நிறுத்தப்படுகின்றது. கந்தர்வன் தேடி வருகின்றான். அச்சுணனின் தந்தை அவன் வெளியூரில் படிக்கிறான் என்றும், இனி தேடி வரக்கூடாது என்றும் கூறிவிடுகிறார். அர்ச்சுணனை அவமானமாகக் கருதும் குடும்பத்தார் அவனைப் புறக்கணிக்கின்றனர்.

வீட்டைவிட்டு வெளியேறும் அர்ச்சுணன் திருநங்கையர் இனத்தவரோடு சேர்கிறான். கல்பனா என்று பெயர் மாற்றம் பெறுகின்றாள். பின் பல ஆண்டு கழித்து கந்தர்வன் கல்பனாவைச் சந்திக்கிறான். அர்ச்சுணன் என்பதை உணர்கிறான். அவளைத் தேடி அவளின் இருப்பிடம் செல்கிறான். பின் தன்னோடு அழைத்து வருகிறான். கந்தர்வன் அரசாங்க வேலை பார்க்கிறான். கல்பனா திருநங்கையர் சமூகத்தோடு இணைந்தது பற்றியும், விஜயா என்ற திருநங்கைக்குத் தான் மகளாக இருப்பது பற்றியும் கூறுகிறாள். அவளின் தங்கை முறையான பத்மினி என்ற திருநங்கைக்கு 'ஹல்தி மெஹந்தி சடங்கு' நடைபெறுகிறது. அதில் இருவரும் கலந்து கொள்கிறாள். பின் சித்தி முறையான கோமதி என்ற திருநங்கை காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொள்கிறாள். இறப்புச் சடங்கில் கந்தர்வனும் கலந்து கொள்கிறான்.

கூத்தாண்டவர் திருவிழாவிற்குக் கல்பனாவுடன் கந்தர்வன் செல்கிறான். அங்கு ஆடவர்கள் திருநங்கையர்மீது நிகழ்த்தும் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டு வருத்தம் அடைகிறான். தேர்தல் வருகிறது. திருநங்கையர்களுக்கு வாக்களிக்க உரிமை கிடைத்தது பற்றிக் கல்பனா கந்தர்வனிடம் கூறி மகிழ்கிறாள்.

கல்பனா தன் குடும்பத்தைக் காண ஊருக்குச் செல்கிறாள். அங்கு அவளது தந்தை இறந்து விடுகிறார். ஊரார் அடையாளம் காணாத போதிலும், தாய் அடையாளம் காண்கிறாள். அவளைப் போய்விடுமாறு வற்புறுத்துகிறாள். காதல் தோல்வியால் சத்யா எனும் திருநங்கை தீக்குளித்து இறக்கிறாள். அவளின் அம்மாவான வசந்தாவும் பாலியல் தொழிலால் எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகி இறந்து விடுகிறாள்.

கந்தர்வன் கல்பனாவிற்கு இருசக்கர வாகனம் வாங்கிக் கொடுக்கிறான். நடன வகுப்பிற்கும் சேர்த்து விடுகின்றான். ஒரு வருட காலத்திற்குப்பின் அரங்கேற்றம் செய்கிறான். பின் கல்பனா, பட்டிமன்றம், தொலைக்காட்சி நேரலை ஒளிபரப்பு, தொலைக்காட்சித் தொடர்கள் எனப் பல பரிமாணங்களில் தன் திறன்களை வெளிப்படுத்துகிறாள். கல்பனா மீது தனக்கு இருக்கும் காதலை கந்தர்வன் கூறுகின்றான். தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்கிறான். பல காரணங்கள் கூறித் திருமணத்தைத் தவிர்க்கின்றாள். தான் சார்ந்த சமூகத்திற்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் எனக் கூறுகிறாள். பின் அவனின்றி வாழமுடியாது என்பதை உணர்ந்து திருமணம் செய்ய ஒப்புதல் கொடுக்கிறாள்.

பள்ளி வகுப்புத் தோழன் திருநங்கையாக ஆன பின்னும் அவளை நல்வழி நடத்தித் திருமணம் செய்ய எண்ணும் ஒரு இளைஞனின் புரட்சிகரமான சிந்தனை இப்புதினத்தில் பதிவு செய்யப்படுகிறது. புதின ஆசிரியரால் 'திருநங்கை' என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது.

2.1.8 'மாலைகள்' புதினத்தின் கதையமைப்பு

'திருநங்கை' என்பதை அறிந்தும், அவளின் அறிவையும், குணத்தையும் பெரிதாகப் போற்றி அவளையே மணந்து கொள்ள முன்வரும் ஒரு ஆணைப்பற்றிய புதினம் இது.

அஞ்சலகம் ஒன்றில் அருணும், வெற்றிச் செல்வியும் சந்திக்கின்றனர். முதல் சந்திப்பிலேயே இருவரும் நட்புணர்வோடு பேசிப் பழகுகின்றனர். வெற்றிச் செல்வி ஒரு பள்ளியில் ஆங்கில ஆசிரியர். அருண் தமிழ் இலக்கியம் படித்திருப்பினும் வங்கியில் கணக்கராகப் (அக்கவுண்டர்) பணிபுரிகிறான். சீத்தா என்பவள் அவனோடு ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவள். அருணைத் திருமணம் செய்ய விரும்பிப் பலமுறை கேட்டும் அருண் மறுத்துவிடுகின்றான். அருண், வெற்றிச் செல்வியை விரும்புகிறான். அவளை 'மாலை' எனும் பெயரிட்டு அழைக்கின்றான். வெற்றிச் செல்வியும் அருணின் தமிழ்ப் பேச்சைக் கண்டு இரசிக்கின்றாள். அருண் திருநங்கையைப் பற்றி ஒரு கவிதை எழுதுகிறான். அதை மாலை, படித்துவிட்டு மிகுதியாகப் பாராட்டுகிறாள். அதிலிருந்து அருணைக் 'கவி' என அழைக்கிறாள்.

ஒருநாள் அருணை அழைத்துக் கொண்டு மாலை 'கருணாலயம்' செல்கிறாள். அங்கு அவளின் இரக்க குணத்தைக் கண்டு அருண் மெய்சிலிர்க்கிறான். பிறகு 'ஊன்றுகோல்' என்ற அமைப்பினைப் பற்றிக் கூறுகிறாள். மாலையின் அறிவு நுட்பத்தைப் பல வேளைகளில் கண்டு வியக்கிறான். தன்னுடைய நண்பர்களுக்கு நீண்ட நாள்களுக்குபின் வெற்றிச் செல்வியை அறிமுகப்படுத்துகிறான். மாலை ஒரு திருநங்கை என்பதால் நண்பர்கள் உதாசீனப்படுத்துகின்றனர்.

பின் அவளின் நண்பர்கள் அருணைச் சந்தித்து ஒரு திருநங்கையைக் காதலிப்பது ஏன் என்று தரக்குறைவாகப் பேசுகின்றனர். மாலை தான் திருநங்கை என்பதால் தன்னைச் சமூகம் ஏற்றுக்கொள்ளாது எனக்கூறி திருமணம் செய்ய மறுக்கிறாள். அருண் அவளைத் தேற்றுகிறான். பின் தன் தாயைச் சந்திக்க ஊருக்குச் செல்வதாகக் கூறுகின்றான். அவன் புகைவண்டி ஏறும் சமயத்தில் வெற்றிச் செல்வியைத் தத்தெடுத்த திருநங்கையர் சமூகத்தில் உள்ள அம்மாவிடம் அலைபேசியில் அருண் பேசுகிறான். அந்த அம்மா திருநங்கையர் சமூகத்தின் வரலாற்றுச் சிறப்பு பற்றியும், தற்போதுள்ள திருநங்கைகளின் நிலை பற்றியும்

கூறுகிறாள். பின் வண்டி புறப்படத் தயாரான நிலையில் தன் முந்தைய வாழ்க்கை பற்றி ஒரு கடிதத்தில் எழுதி அக்கடிதத்தை வெற்றிச் செல்வி அருணிடம் கொடுக்கிறாள்.

அருண் புகைவண்டியில் செல்லும்போது அதைப் படிக்கிறான். வெற்றிச் செல்வி அம்மா அப்பாவின் கடைசிப் பிள்ளை செல்வக்குமார் ஆவாள். செல்வகுமார் படிப்பில் முதன்மையாகத் திகழ்கிறான். தன்னுடைய பாலின மாற்றத்தைப் பதினைந்தாவது வயதில் உணர்கிறான். நண்பர்கள் மத்தியில் கேலி, கிண்டலுக்கு உள்ளாகிறான். பத்தாம் வகுப்புத் தேர்வு நெருங்கும் வேளையில் பெண்ணுக்கான உள்ளாடைகளை வாங்கி அணிந்து கொள்கிறான். இது அவன் அண்ணனின் மச்சானுக்குத் தெரிய வருகிறது.

அண்ணனுக்கு நடைபெற இருந்த திருமணம் இந்நிகழ்ச்சியால் நின்றுவிடுகிறது. அப்பாவும், அம்மாவும் அவளைத் திட்டி அடிக்கின்றனர். பத்தாயிரம் ரூபாய் கொடுத்து அவனை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்கின்றனர். ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு அப்பா கொடுத்த பத்தாயிரம் ரூபாயை எடுக்காமல் வைத்து விடுகிறான். செல்வகுமார் வகுப்புப் பிரதிநிதி என்பதால் பள்ளி மாணவர்களின் ஆண்டு விழாவிற்கான தொகை அவன் கையில் இருக்கிறது. அதிலிருந்து முந்நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு சென்னைக்குச் செல்கின்றான்.

அங்கு இரண்டு திருநங்கையரைச் சந்திக்கிறான். அவர்கள் தன்னுடன் வருமாறு அழைக்கின்றனர். நேர்மையான வேலை வேண்டும் என்று பிச்சை எடுத்தலை விரும்பாததால் அவர்களோடு செல்ல மறுத்து விடுகிறான். பின் ஒரு உணவகத்தில் வேலை கேட்கிறான். அங்கு பாத்திரம் கழுவுகிறான். அங்குள்ள அனைவரின் நன்மதிப்பிற்கும் ஆளாகின்றான். ஒருவாரச் சம்பளம் கிடைத்ததால் பள்ளி முகவரிக்கு முந்நூறு ரூபாயை அனுப்பி வைக்கிறான். மீதிப் பணத்திற்கு, பத்தாம் வகுப்பிற்கான பாடப் புத்தகங்களை வாங்கி வருகிறான். இதை அறிந்த அனைவரும் படிப்பில் அவனுக்கு இருக்கும் ஆர்வத்தை முதலாளியிடம்

கூறுகின்றனர். 'ஊன்றுகோல்' அமைப்பின் உதவியால் படித்து முன்னேறி பள்ளியில் ஆங்கில ஆசிரியர் ஆகிறாள், செல்வகுமாராய் பிறந்த வெற்றிச் செல்வி. அறிவு, நேர்மை, மனிதாபிமானம், அழகு என அனைத்திலும் சிறந்தவளாய் உருமாறுகின்றாள். தனது அம்மாவிடம் வெற்றிச் செல்வியைப் பற்றி அருண் கூறி, திருமணத்திற்குச் சம்மதம் கேட்கிறான். அம்மா மறுத்து விடுகிறாள். பின் சென்னை திரும்புகிறான். நடந்தவற்றை 'மாலையிடம்' கூறுகிறான். அலைபேசியில் மாலை அருணின் அம்மாவிடம் பேசுகிறாள். அருணின் அம்மா அவளை அளவுக்கு மீறித் திட்டியும் மாலை பொறுமை காக்கிறாள். மாலையின் பொறுமையைச் சோதித்த அருணின் அம்மா, அருண்-வெற்றிச் செல்வியின் திருமணத்திற்குச் சம்மதிக்கிறாள்.

இப்புதினத்தில் 'திருநங்கை' என்ற சொல்லாடல் ஆசிரியரால் கையாளப்பட்டுகிறது.

2.2 அன்பும் ஆதரவும்

ஒரு மனிதனை வளப்படுத்தவும், பலப்படுத்தவும் அன்பும் ஆதரவும் தேவைப்படுகிறது. குடும்ப, சமூக நிறுவனங்களின் அரவணைப்பு மனித குலத்தை உயர்த்துகின்றன. ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறும் திருநங்கையருக்கும், அவர்கள் சார்ந்த சமூகமே அன்பையும், ஆதரவையும் தருகின்றது. தாய், சகோதரர்கள், தோழமை வட்டம் முதலிய தரப்பிலிருந்து திருநங்கையர்கள் ஆதரிக்கப்படுகின்றனர்.

2.2.1 தாயன்பும் ஆதரவும்

அஃறிணைமுதல் உயர்திணைவரை அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையாகக் கிடைப்பது 'தாயன்பு'. எந்த உறவுகள் மாறிப்போயினும் தாயின் உறவும், அன்பும் என்றும் மாறாத ஒன்றாகும்.

திருநங்கை பிரியாபாபு தன் தாயோடு நேர்காணல் ஒன்றில் தாயன்பின் முக்கியத்துவம் பற்றிப் பேசி இருக்கிறார். 'வழிகாட்டும் தாய்மை' எனும் கட்டுரையில்,

''பெத்தவங்களே புள்ளைங்களை ஏத்துக்கலைன்னா, அப்புறம் சமுதாயம் எப்படி ஏத்துக்கும்?''[1]

என்று பிரியாபாபுவின் தாயார் கேட்கிறார். பிரியா பாபுவும்,

''ஊர், உலகம், உறவினர்கள் சமுதாயம்னு யார் எங்களை ஏத்துக்கலைன்னாலும் போகட்டும். பெத்த அம்மாவால் மகளா ஏத்துக்கற அந்த அங்கீகாரம் ஒண்ணே போதும்... வாழ்க்கையை ஜெயிக்க வச்சிடும்.... அம்மாங்கிற அந்த உறவு அத்தனை சக்தி வாய்ந்தது...''[2]

என்று தாய் உறவின் மேன்மையைப் பதிவாக்குகின்றார்.

'வாடாமல்லி' எனும் புதினத்தில் சுயம்பு பெண்ணுடையைக் கழற்ற வேண்டும் என்று அவனது அப்பாவும் அண்ணனும் அவனை அடித்து, சூடு போடுகின்றனர். அதைப் பார்த்த அவனது தாய் வெள்ளையம்மா,

''நீ எப்படி இருந்தாலும் நான் உனக்கு தாய்தானடா... என் வயித்துல பொறந்தது எப்படியும் இருந்துட்டுப் போகட்டுமே... ஒங்களுக்குஎன்ன வந்துட்டு. என் ராசா.... என் சீமைத்துரையே... என் செவ்வரளிப் பூவே... ஒன்னைக் கொல்லு கொல்லுன்னு கொன்னுட்டானுவளே... நீ பிழைப்பியாடா..''[3]

என்று கூறுவதிலிருந்து பாலினம் மாறினாலும் தாய்ப்பாசம் மாறாது என்பது உணர்த்தப்படுகின்றது.

'கனவுகள் கைப்பிடிக்குள்' என்ற புதினத்தில் தீபா பாலினம் மாறியபோது, ஊரார் பேசிய இழிசொற்களால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றாள். அவளைக் காப்பாற்றிய தாய்,

''இதோ பாரு– ஊரு நாலும் பேசட்டும். காறித் துப்பட்டும் கேவலப்படுத்தட்டும், கவலையில்லை. ஆனா நீ எப்பவுமே எங்களுக்கு வேணும், தற்கொலை பண்ணிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணித்தா''[4]

என்று கேட்பதிலிருந்து தாய்ப்பாசத்தின் மேன்மையை அறிய முடிகின்றது.

'மூன்றாம் பாலின் முகம்' எனும் புதினத்தில் பெண்ணுணர்வில் சிக்குண்டு தவிக்கும் ரமேஷிற்கு அவனது தாய் பார்வதி ஆதரவு கொடுக்கிறாள்.

''ரமேஷ் உன்னோட மனது, எண்ணம் எல்லாம் நியாயமானது, இயற்கையானது ஒத்துக்குறேன். எனக்கும் புரியுதப்பா... உன்னோட இந்தப் பொறப்புக்கு நானுந்தான் காரணம். நீ குடும்பத்த காப்பாத்துவன்னு பாத்தா நீ ஒரு சமுதாயத்த காப்பாத்த போறேன்றப்பா. உன்ன நா தடுக்கல... கடைசி வரைக்கும் உனக்கு நா துணையா இருப்பேன்''[5]

என்று ஆதரவாக நம்பிக்கை மொழிகளைக் கூறுகிறாள். தாயன்பு இங்குத் திருநங்கை சமூகத்தின் மீதான அன்பாகப் பரிணாமம் பெறுகின்றது.

2.2.2 சகோதர அன்பு

பாலினம் மாறினாலும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்ததால் திருநங்கையரை அவர்களின் உடன்பிறந்தோர் அன்போடு ஆதரிக்கும் போக்கும், புதினங்களில் சுட்டப்படுகிறது. 'வாடாமல்லி' புதினத்தில் சுயம்புமீது அளவு கடந்த அன்பை அவன் அக்கா மரகதம் வைத்திருக்கிறாள். அவன் மூர்ச்சையற்று இருக்கும் நிலையைக் கண்டு, பரிதவிக்கிறாள்.

''என் உடன்பிறப்பு வாயில நுரைதள்ளுதே கையும் காலும் கிடக்குதே! அடிச்சுக் கொன்னுட்டியளே''[6]

என்று புலம்புகிறாள். தன் தம்பிக்கு, சூடுபோட்ட கம்பியைப் பறித்துத் தனக்குத் தானே சூடு வைத்துகொள்கிறாள்.

''சதை சதையாய்த் தன்னைத்தானே பொசுக்கினாள். புகை புகையாய்ச் சுட்டாள்''[7]

என்ற புதின வரிகள் சகோதர பாசத்தைப் பறைசாற்றுகின்றன. சுயம்பு பெண்ணாக மாறியதும் பல ஆண்டுகளுக்குப்பின் அவனுடைய இல்லத்திற்கு வருகிறான்.

''தம்பி.... எங்கள மறந்துட்டியேடா... தம்பி என் உடன்பிறப்பே. பத்தாண்டுக்குப் பிறகு பழையபடி கிடைச்ச என் செல்வமே.... ஒன்னை விட மாட்டேண்டா.. இனிமேல் விடவே மாட்டேன்டா...''[8]

என்று சுயம்புவின் அண்ணன் ஆறுமுகப் பாண்டி தனது சகோதர பாசத்தை வெளிப்படுத்துகிறான்.

'கனவுகள் கைப்பிடிக்குள்' எனும் புதினத்தில் தீபாவின் சகோதர பாசத்தைவிட, திருமணம் முக்கியம் அல்ல என்று கூறுகிறாள் ராஜாத்தி.

''அக்கா, இத்தோட விட்டுரலாம் உலகத்தோட எந்த மூலைக்கும் போனாலும், சந்தேகம் நம்மளைத் துரத்தும்னு நினைக்கேன்.... வேணாம்க்கா, தாலி வாங்கிக்கிறதுதான் வாழ்க்கையிலே ரொம்ப உசத்தியான விஷயமா?''[9]

என்று வினவுவதிலிருந்து தன்னலம் இல்லாத சகோதர அன்பு வெளிப்படுகின்றது.

'அவன் - அது = அவள்' புதினத்தில் கோபியின் செயல்பாடுகள் வீட்டாருக்குத் தெரிய வருகின்றன. கோபி தனது அக்கா கல்யாணியின் மடியில் படுத்திருக்கிறான். அழுத அவனது கண்களைக் கல்யாணி துடைக்கிறாள்.

''அவள் தன் தாவணியின் தலைப்பால் அவனின் கண்ணீரைத் துடைத்து விட்டபடியே இருந்தாள்''[10]

என்ற கூற்றின்வழி சகோதர உணர்வின் ஆழம் புரிகிறது. திருநங்கைகளுக்கு உடன்பிறந்தவர்கள் சகோதரத்துவ அன்பினைக் காட்டுகின்றனர். தாயன்பிற்கு அடுத்த நிலையில் இந்த அன்பு அமைந்திருக்கின்றது. தந்தையன்பு என்பது திருநங்கைகளுக்குக் கிடைப்பதாக 'வாடாமல்லி' என்ற புதினம்தவிர மற்றப் புதினங்கள் பதிவு செய்யவில்லை.

2.2.3 தோழமை அன்பு

உறவுகளிடம் பகிர முடியாத உணர்வுகளைக்கூடத் தோழமை உறவுகளிடம் நாம் பகிர்ந்துகொள்கின்றோம். நம் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாக, தோழமையிடத்துக் கூறும்போது அவர்கள் கூறும் ஆறுதல் மொழிகள் நம்மைத் தேறுதல் அடையச் செய்யும். அவ்வகையில் குடும்பமும் சமூகமும் வெறுத்து ஒதுக்கிய நிலையில் திருநங்கையருக்குத் தோழர்கள் கைகொடுத்து வழி நடத்துகின்றனர். 'வாடாமல்லி' புதினத்தில் மருத்துவக் கல்லூரி மாணவியிடம் சுயம்பு தவறாக நடந்துகொள்ள முயற்சித்தான் என அங்கு சண்டை ஏற்படுகிறது. சுயம்புவின் தோழர்கள் அவனை விட்டுக்கொடுக்காது ஆதரவு காட்டுகின்றனர்.

> **''இவன் எங்க கிளாஸ்மேட்... அதோட ரூம்மேட்... கொஞ்ச நாளாவே மனசு சரியில்ல... வேணுமுன்னு செய்திருக்க மாட்டான். இந்தத் தடவை விட்டுடுங்க...''**[11]

என்று மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் தன் நண்பனுக்காக மன்னிப்பு கேட்டு அச்சிக்கலில் இருந்து சுயம்புவைக் காப்பாற்றுகின்றனர். 'அவன் - அது = அவள்' புதினத்தில் கோபியின் நிலை அறிந்து அவன் தோழன் சரவணன் அவனுக்கு ஆறுதலாக இருக்கிறான்.

> **''சரவணனின் அனுசரணையான போக்கும், அன்பான பேச்சும் இவனுக்கு மிகவும் பிடித்துப் போனது. அவன் மற்ற மாணவர்களைப் போல இவனிடம் நடந்து**

கொள்ளவில்லை. ஒரு தேர்ந்த ஆசிரியனைப் போல, பாசமிகு தாயைப் போல, அன்பான தந்தையாக நடந்து கொண்டான்.''[12]

இவ்வாறு குடும்ப உறவுகள் தராத ஒரு பாதுகாப்பினைத் தோழர்கள் தருவதாகவே திருநங்கையர் எண்ணுகின்றனர். 'உன்னைவிட்டு விலகுவதில்லை' புதினத்தில் கல்பனா என்ற திருநங்கையை அவள் பள்ளி வகுப்புத் தோழன் கந்தர்வன் அன்போடும் அரவணைப்போடும் கவனித்துக் கொள்கிறான்.

''நீ வாழ்றதுக்கு பொறந்தவ, வாழ்க்கையை கடத்துவதற்கு பொறக்கல. உன்னை எந்த உலகம் வஞ்சித்துச்சோ... அந்த உலகமே உன்னை பாராட்டணும். பிரெண்டுங்கறவங்க சும்மா ஜாலியா பேசி, அரட்டை அடிச்சு, ஒண்ணா சினிமாவுக்கு போயி, ஒருத்தன் அடிச்ச தம்மை இன்னொருத்தன் அடிச்சிட்டு பொழுதை போக்க உதவுறங்க கெடையாது. ஒரு உண்மையான நண்பனோட இலக்கணம் என்னான்னு தெரியுமா? அம்மா மாதிரி அன்பா கவனிச்சுக்கணும். அப்பா மாதிரி கண்டிக்கனும், அக்கா, தங்கச்சி நம்மள கலாய்கிற மாதிரி கலாய்க்கணும். அண்ணன் தம்பி மாதிரி அப்பப்ப வெறுப்பேத்தணும். மனைவி மாதிரி அன்பா அனுசரணையா இருக்கணும். ஒரு காதலன் மாதிரி காதலோடும் இருக்கணும். இப்ப உன்னைப் பொறுத்த வரைக்கும் நான் ஒரு நல்ல நண்பனா இருக்கணும்னு ஆசப்படுதேன்.''

என்று கந்தர்வன் கூறுவதாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

பாலினம் மாறுவதால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் புறந்தள்ளுகின்றனர். ஆனால் தோழர்கள், தம் சக திருநங்கை நண்பனின் வாழ்க்கையைச் சீர்படுத்த விழைவதை மேற்சுட்டிய அடிகள் தெளிவுறுத்துகின்றன. 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் ரமேஷின் நண்பன் செல்வகுமார்,

''இதோ பார் ரமேஷ் உனக்கு நா இருக்குறேன். இங்க பாருநம்ம சமூகம் ஒரு பிராணி மாதிரி. அதுக்கு சுயமா சிந்திக்கிற அறிவு கம்மி. மத்தவங்க என்ன செய்யுறாங்களோ அதத்தான் தானும் செய்யணும்னு நினைக்கும். நீ சமூகத்தைப் பத்தி கவலைப்படாத. உன் மனசுக்கு எது சரின்னுபடுதோ அதை செய்''[14]

என்று கூறுகிறான். சக தோழர்களின் துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வது உண்மையான நட்பாகும்.

மேற்சுட்டிய புதினங்களின்வழி ஆண் தோழர்களே பெரும்பாலும் திருநங்கைகளுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றனர் என்பது புலனாகின்றது.

2.2.4 குடும்ப ஆதரவு

பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கும் பிள்ளை ஆணாக இருப்பின் அக்குடும்பமே அக்குழந்தையைக் கொண்டாடுகின்றது. ஆனால், அக்குழந்தை பாலினம் மாறுவதை அவர்களால் எக்காலத்தும் ஏற்றுக்கொள்ள இயலுவதில்லை. பல உறவுகள் திருநங்கையரைப் புறந்தள்ளினாலும், சில உறவுகள் ஆதரவு தருகின்ற போக்கையும் புதினங்களிடையே காண முடிகின்றது.

'பூமி வசப்படுமே' புதினத்தில் வைரவன் மாமாவின் பாத்திரப்படைப்பு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது. மணியைப் பெற்றெடுத்த தாய் தந்தையரே வீட்டைவிட்டு வெளியேற்றும் சூழலில், தாய்மாமா அன்போடு ஆதரித்தும், கைகொடுத்தும் வாழ்வில் உயர்ந்திட வழி காட்டுகின்றார்.

''மணி நீ ஆம்பளப்புள்ளயா? பொம்பளப்புள்ளயா? எதுவா இல்லாமப் போனாலும், நீ என் அக்கா வயத்துல பொறந்தவன். உனக்கு ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை கொடுக்க வேண்டியது என் கடமை''[15]

என்ற கூற்று குடும்பத்தின் பிற உறவுகளும் திருநங்கையர்களுக்கு உதவுவதைத் தெரிவிக்கிறது.

மேலும் மணி, பெண்ணாக மாறியதும், அழகு நிலையம் தொடங்க மணியின் அம்மா தன் நகையைக் கொடுக்கிறாள்.

> **''இம்முறை அம்மா தன் சங்கிலியைக் கொடுத்து அனுப்பியிருந்தாள். மாமா நகையை விற்றுப் பணமாக்கினார். அழகு நிலையம் வைக்க சரியான இடமாகப் பார்த்துக் கொடுத்தார்''**[16]

என்ற வரிகள் திருநங்கையரின் மேம்பட்ட வாழ்விற்கு குடும்பத்தார் ஆதரவு தருவதைக் காட்டுகின்றன.

'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் தனது மகன் ரமேஷ் பாலினம் மாற விரும்புவதை அவன் தாய் பார்வதி அறிகிறான். திருநங்கையரின் வாழ்வியல் சூழலை நன்கு அறிந்த அவனது தாய் அவனின் எண்ணத்திற்கு மதிப்பு கொடுத்து ஆதரவு கொடுக்கிறாள்.

> **''உனக்கே தெரியும் நா ஹார்மோன் ஊசியெல்லாம் போட்டுக்குறேன். ஆனாலும் நா முழுப்பொம்பளையா என்ன உணரனுமுன்னா... தயங்கினான். சொல்லுப்பா நீ முழுப்பொம்பளையா உணரனுமுன்னா ஆப்ரேஷன் பண்ணிக்கணும் அதானே?''**[17]

எனும் பார்வதியின் வாய்மொழி ஒரு புரட்சிகரமான தாயாக அவளைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. திருநங்கையருக்கு ஆதரவு காட்டும் உறவாக பார்வதியின் பாத்திரப்படைப்பு அமைந்திருக்கின்றது.

குடும்பத்தார் சிலரின் வெறுப்புக்கு ஆளானாலும் அதன் உறுப்பினர் யாராவது ஒருவர் திருநங்கையரை ஆதரிக்க முன்வருவதைப் புதினங்கள் சித்திரிக்கின்றன.

2.2.5 சமூக ஆதரவு

குடும்பத்தினரின் வெறுப்புக்கு ஆளாகும் திருநங்கையரை, சமூக மக்களில் முற்போக்கு சிந்தனை உடையோர் ஆதரிக்க முன்வருகின்றனர். வாழ்க்கையில் ஒருவர் உயிர்வாழவும், உயர்நிலை செல்லவும் சமூக உறுப்பினர் ஆதரவு தேவைப்படுகின்றது. பாலினம் மாற்றச் சிக்கலால் அஃறிணை உயிர்களுக்கும் கீழாக திருநங்கையர் பார்க்கப்படுகின்றனர். திருநங்கையரும் இரத்தமும் சதையும் உள்ள மனிதர்கள் என்பதால் மனிதநேயத்துடன் சமூக உறுப்பினர்கள் இவர்களை ஆதரிக்கின்றனர். திருநங்கையரை இச்சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

> **''சமூகத்தில் எந்த இனமும் பிற இனங்களால் தாழ்த்தப்படக் கூடாது. எவரும் எவரையும் விட உயர்ந்தவரும் இல்லை, தாழ்ந்தவருமில்லை. சமமான ஒரு சமூக ஒட்டம்தான் மனித குலத்திற்கு நன்மை செய்யும். இவர்களையும் பிறருக்குச் சமமான நிலைக்குக் கொண்டு வருவது ஒவ்வொரு குடிமகளின் கடமை''**[18]

என்ற வி.கே.டி. பாலனின் கூற்று திருநங்கையர்களுக்கு முற்றிலும் பொருந்தும்.

ஆபத்திற்கு உதவிய திருநங்கையருக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்குச் சமுதாயத்தவர் தவறுவதில்லை. 'வாடாமல்லி' புதினத்தில் கலவரத்தில் சர்தாஜியின் உயிரைக் காப்பாற்றிய மேகலைக்கு அவர் எச்சமயமும் உதவக் காத்திருக்கிறார்.

> **''உனக்கு இல்லாத பணமா?.... இந்திரபுரியில் உன் பேர்ல ஒரு வீட்டை எழுதி வச்சுட்டேன். மாதம் வெறும் பத்தாயிரம் ரூபாதான் வாடகை வரும். அதோட ரெண்டு லட்சத்தை உன்பேர்ல போட்டுட்டேன்''**[19]

என்ற கூற்றுவழி தானே முன்வந்து திருநங்கையரை ஆதரிக்கும் சமூக மக்களின் மனநிலையை அறிய முடிகிறது.

'மூன்றாம் பாலின் முகம்' என்ற புதினத்தில், சமூக சேவகியான கண்மணி ரமேஷின் நிலையை அவனின் தாய்க்குப், புரிய வைப்பதோடு, அவனுக்குத் தக்க

ஆதரவையும், கொடுக்கிறாள். அவனை நல்ல நிலைக்குக் கொண்டுவரவும் பாடுபடுகிறாள்.

> **''கண்மணியின் சேவை அமைப்பில் ரமேஷும் உறுப்பினராகி அரவாணிகள் மேம்பாடிற்காக பாடுபடத் துவங்கினான். ஜானகியம்மாள் ஏரியா அரவாணிகளை ஒருங்கிணைத்து 'மாதா அரவாணிகள் சுயஉதவிக் குழு', 'மலர் அரவாணிகள் சுய உதவிக் குழு' என்ற பெயரில் இரண்டு அரவாணிகள் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொடுத்தான்.''**[20]

என்ற புதின வரிகள் ரமேஷின் முன்னேற்றத்திற்கும், ஒட்டுமொத்த திருநங்கையர் சமூக முன்னேற்றத்திற்கும் கண்மணி முயற்சிப்பதைக் காட்டுகின்றன. ரமேஷ் சட்டப்படி அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கும், பெயர் மாற்றம் செய்வதற்கும் கண்மணி உதவுகின்றாள். கண்மணி பாத்திரம் முற்போக்கு மனம் உடைய பாத்திரமாக இப்புதினத்தில் படைக்கப்பட்டு இருக்கிறது.

'கமலி' புதினத்தில் திருநங்கை ராஜாத்தி குழுவினருக்கு, ஒட்டுநர் ராஜேந்திரனும், நடத்துனர் முரளியும் பல வகைகளில் உதவி புரிகின்றனர். மருத்துவர் மல்லிகாவின் உதவி அளவிடற்கரியது. அரசு உதவிகள் கிடைக்கச் செய்வதுமுதல் திருநங்கையருக்கு அறுவை சிகிச்சை எனப் பல்வேறு உதவிகளை மல்லிகா செய்கிறாள்.

> **''நீங்கள் உங்கள் சொந்த கால்களில் சுதந்திரமாக நிற்க வேண்டும். உணவு, உடை, உறைவிடத்திற்கு நீங்கள் பிறரை எதிர்பார்க்கக் கூடாது, நேர்மையான வழியில் பணம் சம்பாதிக்க நீங்கள் தொழில்கள் தொடங்க வேண்டும்''**

என்று நம்பிக்கை மொழிகளைக் கூறி, கமலி குழுவினரைத் தக்க முறையில் வழி நடத்துகிறாள். பங்காரு என்ற திருநங்கைக்கு, பார்த்திபனை மணம் முடித்து வைத்து அவளுக்கு நல்வாழ்வைச் சமூகத்தில் ஏற்படுத்திக் கொடுக்கிறாள்.

திருநங்கையரின் நேர்மைக்கு சமூகத்தில் ஓரளவு மதிப்பு இருந்து வருகின்றது. 'மாலைகள்' புதினத்தில் வெற்றிச் செல்விக்குரிய ஆதரவினை அவள் வேலை செய்த உணவக உரிமையாளர் கொடுக்கிறார்.

> **''நாலு கடையில ஏறி இறங்கி பிச்ச எடுத்தா வயிறு கழுவலாம். ஒழைச்சி வாழனும்னு நெனக்கிதே...''**[22]

என்று கூறி வேலை கொடுக்கிறார். அடுத்த வேளை உணவிற்குக் கையேந்துவர் என்று தெரிந்தும் திருநங்கையர்களைப் பெற்றோர்களே விரட்டுகின்றனர். வெற்றிச் செல்விக்கு அவ்வுணவக உரிமையாளர் உணவு கொடுக்கச் சொல்கிறார். வேலையும் கொடுத்து புதிய வாழ்வுத் தேடலைத் துவக்கியும் வைக்கின்றார். இதனை இப்புதின அடிகள்வழி அறியலாம்.

> **''பாப்பா இங்க வா... 'சாப்டியா?' இரண்டு நாள் பட்டினி வயிறு. என் அம்மாவும், அப்பாவும் கேட்காத கேள்வி. நான் திகைத்து நின்றேன். கண்கள் பொசுக்கென்றுநீர் சேர்த்துக் கொண்டது...**
>
> **'ஜெயராமா'... 'அண்ணே' ஓடி வந்தார். 'அதுக்கு சாப்ட டிபன் குடு'. அப்றமா வேலயச் சொல்லிக்குடு''**[23]

என்ற அடிகளின்வழி திருநங்கையரை முற்போக்கும், மனித நேயமும் உள்ள உறுப்பினர்கள் ஆதரிக்க முன்வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

2.3 சிக்கல்களும், எதிர்கொள்ளலும்

திருநங்கையராய் மாறுவதால் வாழிடம் தொடங்கி, கல்வி, வேலைவாய்ப்பு, காதல், திருமணம் எனப் பல களங்களில் அவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒருவர் பாலினம் மாறுவதால் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் பல்வேறு முகமாக சிக்கல்கள் எழுகின்றன.

2.3.1 வாழிடச் சிக்கல்கள்

திருநங்கையராக மாறுவோர், குடும்பத்தை விட்டு வெளியேறுகின்றனர், அல்லது வெளியேற்றப்படுகின்றனர். திருநங்கையர் சமூகத்திற்கு யாரும் வீடு கொடுக்க இன்றளவும் முன்வருவதில்லை. வசதி குறைந்த, சுகாதாரம் இல்லாத அபாயகரமான குடியிருப்புகளில் அவர்கள் வாழ வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

இதனை லிவிங் ஸ்மையல் வித்யா,

''திருநங்கைகள், தேர்தலில் நின்னுகூட ஜெயிச்சுடலாம் போல... ஆனா, ஒரு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்குறது பெரும் போராட்டமா இருக்கு. யாரும் எங்களுக்கு வீடு கொடுக்கத் தயாரா இல்லை''[24]

என்று கூறுவதிலிருந்து, வாழிட உரிமைகள்கூட திருநங்கையர்களுக்கு மறுக்கப்பட்டு வருவதை அறிய முடிகின்றது.

'வாடாமல்லி' என்ற புதினத்தில் திருநங்கையர் குடியிருக்கும் குடியிருப்புகள் குறித்தும் பதிவு செய்யப்படுகின்றன.

''சேரிக்குள்ளேயே ஒரு சேரி மாதிரியான பகுதி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில், தமிழன் எப்போது பிறந்தானோ அப்போதே தோண்டப்பட்டது போன்ற ஊத்தக் குட்டை, அதன் மேல் வாசம் செய்த கொசுக்கள்... மரப்பலகையில் சுவர்க் குடிசைகள் தகர நெளிவுகளில் வாழும் இடர்கள். .. குழந்தைகளின் அசிங்கங்கள்''[25]

என்ற அடிகள் சுகாதாரமற்ற வசதியில்லாத குடியிருப்புகள் பற்றி எடுத்துரைக்கின்றன. 'கமலி' எனும் புதினத்தில்,

''பேசாம வீட்டைக் காலி செய்துவிட்டு மறு வேலை பாருங்க... அதற்கு பிறகு ஒரு மாதத்திற்குள் கணக்குப்பிள்ளை இரண்டு முறை வந்து காலி செய்ய

சொல்லிவிட்டுப் போய்விட்டார். கமலி குழுவினர் சில இடங்களில் வீடு பார்த்தார்கள். ஒன்றும் கிடைக்கவில்லை என்பதைவிட யாரும் கொடுக்கவில்லை என்பதே சரி''[26]

என்ற புதின வரிகள் திருநங்கையருக்கு வாழிடம் என்பது சவாலாக இருப்பதைக் காட்டுகின்றன. 'பூமி வசப்படுமே' என்ற புதினத்தில் திருநங்கையர் குடியிருப்பு பற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

''மணி அலறிய அலறலில் அம்மாவும், அத்தையும் ஓடி வந்தார்கள். விளக்கைப் போட்டார்கள். ஒரு கருந்தேள் ஓடியது. வழக்கம்போல் அம்மா துணியைக் கிழித்து கொட்டிய இடத்திற்கு மேல் கட்டினாள்.''[27]

இவ்வாறு அபாயகரமான சூழலில் வாழவேண்டிய கட்டாய நிலைக்குத் திருநங்கையர்கள் தள்ளப்படுகின்றனர்.

2.3.2 பொதுப் பயன்பாட்டுச் சிக்கல்கள்

சமூகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உரியவற்றைப் பயன்படுத்துவதில் திருநங்கையருக்குப் பல சிக்கல்கள் நேரிடுகின்றன. கழிப்பறை பயன்பாட்டிலும், பேருந்து, புகைவண்டி போன்றவற்றின் ஒதுக்கீட்டிலும் மிகுந்த மனவேதனைகளுக்கு திருநங்கையர்கள் ஆளாகின்றனர். 'வாடாமல்லி' புதினத்தில் சுயம்பு பேருந்தில் ஏறுகிறான்.

''அந்தப் பேருந்துக்குள், பயணிகள் ஆண்வாரியாகவும், பெண்வாரியாகவும் அர்த்த நாரீஸ்வரவாரியாகவும் மண்டிக் கிடந்தார்கள். மூன்று ஆண்வரிசை இருக்கைகளில் ஆண் பெண் ஜோடிகள்.... மகளிர் பகுதியிலும் இதே விகிதாச்சாரம்... ஆண் வரிசையில், அவன் கண் போகவில்லை. தாய்குலத்தின் வரிசையையே மாறி மாறிப் பார்த்தான்''[28]

என்ற புதின வரிகள் பேருந்தில் திருநங்கையருக்குத் தனி இருக்கை இல்லை என்பதைக் காட்டுகின்றன. 'அவன் – அது = அவள்' புதினத்தில்,

''பெருவாரியான இருக்கைகளில் ஆட்கள் இருந்தார்கள். மொத்தமே மூன்று இடங்கள் மட்டுமே காலியாக இருந்தது. பெண்களுக்கு அருகில் இருக்கும் இரண்டு சீட்டில் உட்கார்ந்து விடலாம்... ஆனால் ஏற்கனவே வாங்கிக்கட்டிய அனுபவம் மனதில் தோன்ற சத்தமில்லாமல்.. காலியாக இருந்த ஆண்கள் இருக்கையில் அமர்ந்தான்''[24]

என்னும் அடிகள் கோபி பெண் இருக்கையில் அமர்ந்ததால் அவமானத்திற்கு உள்ளான நிலையைச் சித்திரிக்கின்றன.

புகைவண்டிப் பயணத்திலும், திருநங்கையருக்கு உரிய இடம் கிடைப்பதில்லை. 'அவன் – அது = அவள்' புதினத்தில், கோமதியைச் சகபெண் பயணி இழிவாகப் பேசுகிறாள்.

''உங்களையெல்லாம் இந்த டப்பால உட்டது யாரு.... அடிசெருப்பால நாயே... எதுத்தா பேசுற... ஓடற வண்டியிலிருந்து தள்ளி விட்டுடுவேன்... இல்லாட்டி அடுத்த ஸ்டேசன்ல போலீஸ்கிட்ட புடுச்சு குடுத்துடுவேன்...''[30]

என்று பொதுமக்கள் திருநங்கையரைத் தரக் குறைவாகப் பேசும்நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு திருநங்கைகள் பேருந்து, புகைவண்டிகளில் பயணம் செய்வதில் சந்திக்கும் இடர்பாடுகள் புதினங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

2.3.3 கழிப்பறை உபயோகம்

பொதுக் கழிப்பறையைப் பயன்படுத்துவதிலும், திருநங்கையர் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

''தங்கச்சீ சீக்கிரம் எழும்பு, பல்லைத் தேச்சு, டீ குடிச்சிட்டு போய் வேலையை முடி என்றாள் ராமு... பளபளனு விடியும் போதே... நம்ம வேலையை முடிக்கணும்.... அப்புறம் நம்மை உள்ளே விடமாட்டான் என்றான் ராமு படபடப்பாக பொதுக் கழிப்பறையைக் காட்டி''[31]

என்ற 'பூமி வசப்படுமே' புதினத்தின் அடிகள், திருநங்கையருக்கு அன்றாடம் எழும் கழிப்பறை பற்றிய பொதுப்பயன்பாட்டுச் சிக்கல்களை உணர்த்துகின்றன.

'பூமி வசப்படுமே' புதினத்தில் மணி அவனது வீட்டில் உள்ள கழிப்பறையைப் பயன்படுத்துவதிலேயே சிக்கல் ஏற்படுகின்றது.

''வீட்டிற்குள் இருக்கும் கழிப்பறையை உபயோகிக்கக் கூட, அவன் அப்பா உறங்கும் வரை காத்திருக்க ஆரம்பித்தான்... தோட்டத்தில் போக கூச்சமாக இருக்கிறது என்று சொல்ல அவனால் முடியவில்லை''[32]

என்ற கூற்றுகள் இதனை உணர்த்துகின்றன. பள்ளியிலும் தனது நண்பர்களால் மன உளைச்சலுக்கு மணி ஆளாகிறான்.

''வருட ஆரம்பத்தில் ஒருநாள், மணி கழிப்பறையில் உட்கார்ந்து ஒன்றுக்கு போவதை ரங்கன், சோமு, சத்யா மூவரும் பார்த்து விட்டனர். அதில் இருந்து பொட்டை என்றனர்''[33]

என்ற கூற்றின்வழி நண்பர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகும் நிலையினையும் அறிய முடிகின்றது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில் கல்பனா கழிப்பறை பயன்பாட்டுச் சிக்கல் பற்றிக் கூறுகிறாள்.

''நான் எங்கேப் போனாலும் டிரெயினில்தான் போவேன். ஏன்னா அங்க உள்ள டாய்லட்டைத்தான் ஆண்கள், பெண்கள் என்று பிரிச்சு வைக்காம காமனா வச்சிருக்காங்க''[34]

என்பதன்மூலம் திருநங்கைகளுக்கு ஏற்படும் கழிப்பறைச் சிக்கல்கள் புலனாகின்றன. மேற்சுட்டிய புதினங்களில் ஆண், பெண் பாலினருக்குத் தனித்தனியாக கழிப்பறை இருப்பது போல, திருநங்கைகளுக்கும் தனியாகக் கழிப்பறை வேண்டுமென்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

2.3.4 திருமணச் சிக்கல்கள்

திருநங்கையரைத் திருமணம் செய்ய யாரும் முன்வருவதும் இல்லை. அப்படியே முன்வரினும் அந்த ஆண்மகன் வீட்டார் அதனை ஏற்றுக் கொள்வதும் இல்லை. இதனால் அவர்கள் திருமணம் செய்து கொள்வதில் தடைகள் ஏற்படுகின்றன. இத்தகைய தடைகளை மீறித் திருமணம் செய்யினும் அத்திருமணத்தைச் சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பதும் இல்லை. 'அவன் – அது = அவள்' என்ற புதினத்தில் சுந்தரி எனும் பெண்ணை, கங்காராம் என்பவன் திருமணம் செய்கிறான். கங்காராமின் கொடுமை தாங்காமல் சுந்தரி தீக்குளித்து இறக்கிறாள். காவல் நிலையத்தில் இது பற்றிப் புகார் கொடுக்க ஏனைய திருநங்கைகள் செல்லுகின்றனர்.

> **''எல்லாம் சரிதான். ஆனா... நீங்க சொல்லுற மாதிரி இந்த போட்டோல இருக்கிறவனும், இறந்துபோன சுந்தரியும் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள்னு கேஸ் எழுத முடியாது. இங்கே இஜடாக்களை (திருநங்கையரை) இன்னும் முழு பொண்ணா பாக்குற நிலை வரலை. அதனால இந்த கல்யாணம் செல்லுபடியாகாது''**[35]

என்று கூறுவதிலிருந்து திருநங்கையரின் திருமணம் முறையாக அங்கீகரிக்கப்படாத நிலையை அறிய முடிகிறது. 'பூமி வசப்படுமே' புதினத்தில் காமாட்சி எனும் திருநங்கையை அரவிந்தன் என்பவன் மணக்கிறான். தனது தாயிடம் தன் மனைவி ஒரு திருநங்கை என்பதை மறைக்கிறான். அவன் மனைவி குரலால் வெளிப்பட்டுவிடக்கூடாது என்பதால் ஊமையாக நடிக்கிறாள்.

''முதலில் காமாட்சி தாம் தூம் என்று குதித்தாள். ஊமையாக நடிக்க முடியாது என்றாள். மாமா பேசி சம்மதிக்க வைத்தார்''[36]

என்பதன்மூலம் குடும்பத்தாரின் நிராகரிப்பு படம்பிடித்துக் காட்டப்படுகிறது. திருநங்கையரின் பாலின மாற்றத்தால் அவர்களோடு பிறந்த உடன்பிறப்புகளுக்கும் திருமணம் நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

'வாடாமல்லி' புதினத்தில் சுயம்புவின் அக்கா மரகதத்திற்குத் திருமணம் தடைபடுகிறது.

''என் மகன் போட்ட கோலத்தை பாத்துட்டு எதையோ கோணச் சத்திரத்தில் வச்சிட்டு வந்ததாய் ஏமாத்தி வேனுக்குள்ளே ஏறிப் பறந்து, வழியில் வந்த மாப்பிள்ளை காரையும் மடக்கி திருப்பி கரிச்சான்குருவி பறந்தது மாதிரி பறந்துட்டாளுவ பாரு. அப்படியும் ரோட்டுல ஒருத்தன்கிட்ட 'பொண்ணோட குடும்பம் பொட்டக் குடும்பம், பிடிக்காம போறோம்னு' சொல்லிட்டுப் போயிருக்காளுவ பாரு! தந்திரக்காரப் பய மவளுவ''[37]

என்ற புதின வரிகள் மரகதத்தின் திருமணம் கேள்விக்குறி ஆனதை தெரிவிக்கின்றன.

'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தில் தீபாவின் தங்கை ராஜாத்தியின் திருமணத்திலும் சிக்கல் ஏற்படுகின்றது.

''தங்கை ராஜாத்திக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர வேண்டும் அதற்காக யார் காலில் வேண்டுமானாலும் விழத் தயார்... இப்படித்தான் நினைத்து மாப்பிள்ளை வீட்டாரைப் போய்ப் பார்த்தாள் தீபா. ம்ஹீம் பிரயோஜனமில்லை தீபா சொன்னதையெல்லாம் நம்பவுமில்லை அவர்களும் நம்பிக்கைத் தரும்படிப் பேசவில்லை. அலட்சியமாய் உதட்டைப் பிதுக்கினார்கள்''[38]

என்னும் புதின வரிகள் திருநங்கையின் தங்கையை யாரும் திருமணம் செய்ய முன்வருவதில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.

'மாலைகள்' புதினத்தில் வெற்றிச் செல்வி என்ற திருநங்கையின் செயல்பாடுகளால் அவள் அண்ணனின் திருமணம் தடைபடுகிறது.

''நாளைக்கு கல்யாணம் ஆயிட்டப்புறம் உம் பெரிய புள்ளையும் இந்த மாதிரி ஆயிட்டான்னா? நாங்க என்ன பண்றது? மொதல்ல அவனையும் எங்காவது டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போயி, அவனாது ஆம்பிளதானான்னு செக் பண்ணுங்க. தூ... த் தெறி... நல்ல குடும்பம்''[39]

என்று மணப்பெண்ணின் அண்ணன், வெற்றிச் செல்வியின் அண்ணனின் தன்மானத்தையும் அக்குடும்பத்தின் மானத்தையும் இழிவுபடுத்துகிறான்.

திருநங்கைகளுக்கு மட்டுமில்லாமல் அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் திருமணம் நடைபெறுவதில் இவ்வாறு சிக்கல்கள் உண்டாவதை ஆய்வுப் புதினங்கள் பதிவு செய்கின்றன.

2.3.5 பணியிடச் சிக்கல்

திருநங்கையருக்கு 'வேலை கிடைப்பது' என்பதே குதிரைக் கொம்பாக இருக்கின்றது. அவ்வாறு வேலை கிடைத்தாலும் அவர்களைக் கிண்டல் செய்வதும், பணியிடத்தில் அவர்கள்மீது வீண் பழி சுமத்துவதும் காணப்படுகின்றது.

லிவிங் ஸ்மைல் வித்யா 'திருநங்கைகள் உலகம்' எனும் கட்டுரையில், ஒரு திருநங்கை தான் பிச்சையெடுத்த அதே புகைவண்டியில் கௌரவமாக வாழ எண்ணி விற்பனையில் இறங்கியதைப் பதிவு செய்கிறார்.

''அன்று அவர் வியாபாரம் செய்தார். பிச்சையெடுத்த போது கேலி கிண்டல்கள் கடந்து குறைந்தபட்சம் வருமானமாவது கிடைத்த அவருக்கு . . . நாள் முழுக்க

வியாபாரம் செய்தபோது மிஞ்சியது வெறும் அருவருப்பான கேலிச் சிரிப்புகள் மட்டுமே. ஒருவரும் அவரிடம் இருந்து சின்ன கீ செயின் வாங்கக்கூட முன்வரவில்லை.''[40]

என்ற கட்டுரை வரிகள் திருநங்கையர்மீது இச்சமூக மக்கள் மாற்றுக் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றன.

ஆய்வுத் தரவுகளில் 'கமலி' புதினத்தில் பங்காரு என்ற திருநங்கை அவள் வேலை பார்க்கும் வீட்டினரால் திருட்டுப் பட்டம் சுமத்தப்படுகிறாள்.

''திருட்டு நாய்கள் இருக்கின்ற இடத்தில் நாம்தானே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? என்று ஓரக் கண்ணால் பங்காருவை பார்த்துக் கொண்டே சொன்னாள்.. உன்ன வேலைக்காரியா ஏத்துக்கிட்டதுதான் எங்க தப்பா போச்சு''[41]

என்று கூறுவதிலிருந்து பணியிடத்தில் திருநங்கையருக்கு எழும் குற்றப் பட்டம் அறிய வருகிறது.

2.3.6 உறவு நிலைக்குள் ஏற்படும் சிக்கல்

திருநங்கையராக மாறுவதால் அவர்களுக்கு மட்டுமின்றி அவர்களின் குடும்பத்தாருக்குள்ளும் சிக்கல்கள் எழுகின்றன. 'வாடாமல்லி' புதினத்தில் சுயம்புவால் வெளிப்படுத்தப்பட்ட பெண்மைக்கான உணர்வுகள் அவனது அண்ணனின் ஆண்மையையும், சந்தேகிக்க வைக்கின்றன.

''மைத்துனனுக்கு வந்தது மணவாளனிடமும் இருக்குமோ என்ற சந்தேகம். இல்லற வாழ்க்கையில் ஏக்கங்கள் இல்லையானாலும், அழுத்தமான தாம்பத்திய உறவு கிடைக்காமல் போயிருக்குமோ என்ற கேள்வி. முதலிரவில் கூட, இந்த ஆறுமுகப்பாண்டி சினிமா கதாநாயகன்போல் தன்னைக் கைகளில் ஏந்திக்

கொள்ளாமல் துண்டைக் கடித்துக் கொண்டு நின்றது கூட ஓரளவு பொட்டைச் செயலோ என்ற விரசமான சிந்தனை''[42]

என்ற புதின அடிகள் ஆறுமுகப்பாண்டிக்கும், கோமளத்திற்கும் இடையிலான தாம்பத்ய உறவில் விரிசல் ஏற்படுவதைச் சுட்டுகின்றன.

'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் ரமேஷின் மாற்றத்தால் அவனுக்கும் அவன் அண்ணனுக்கும் இடையே விரிசல் ஏற்படுகிறது.

''விடுமா இவனால பெரிய அவமானமா இருக்கு, செத்து தொலைய மாட்டேங்குறானே''[43]

என்று ரகு, ரமேஷின்மீது தன் வெறுப்பைக் காட்டுகிறான். திருநங்கையரால் உறவு நிலைக்குள் ஏற்படும் இத்தகைய சிக்கல்களை வாடாமல்லி, மூன்றாம் பாலின் முகம் ஆகிய புதினங்கள் சித்திரிக்கின்றன.

2.3.7 திருநங்கையர் சமூகத்துள் ஏற்படும் சிக்கல்கள்

திருநங்கையருக்குக் குடும்பமும், சமூகமும் ஒரு பக்கம் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. மறுபக்கம் திருநங்கையர்கள் சார்ந்த சமூகத்துக்குள்ளேயே பல சிக்கல்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். திருநங்கையர் சமூகத்தில் உள்ள மூத்த திருநங்கையர் அவர்களுக்குக்கீழ் இருக்கும் திருநங்கையரைப் பலவித கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றனர்.

''முதியோர்களுக்குச் சம்பாதித்து தரவேண்டும், சோறு போட வேண்டும் என்பதால் இளையோர் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகக் கூறுகின்றனர் . . . சமைத்தல், பரிமாறுதல், துணி துவைத்தல் ஆகிய பணிவிடைகளைப் பெரியவர்களுக்குச் செய்ய வேண்டும். பெரியவர்களுக்கு எடுபிடிகளாக இருக்க வேண்டும். பெரியோர் சொல்வதைக் கேட்காமல் இருந்தால் அடிப்பார்களாம்.''[44]

என்னும் கூற்றில், திருநங்கையர்களை அவர்களது சமூகமே பணத்தாசை காரணமாகக் கொடுமைப்படுத்துவதை பத்மபாரதி கூறுகிறார்.

'கமலி' புதினத்தில் ரத்னா என்ற திருநங்கை எழுதிய கடிதம் காரணமாக கமலி மற்ற திருநங்கையரோடு மும்பை செல்கிறாள். அங்கு அவர்கள் கொடுமைக்கு உள்ளாகின்றனர்.

''உங்கள் நாலு பேரையும் பத்தாயிரம் ரூபாய் விலை கொடுத்து வாங்கியிருக்கேன். அதைக் கொடுத்துவிட்டு நீங்கள் தாராளமாகப் போகலாம்''[45]

என்று ரத்னா திருநங்கை கூறுகிறாள். இதிலிருந்து திருநங்கையர் சமூகத்திற்குள்ளேயே திருநங்கையருக்குச் சிக்கல்கள் எழுவதை அறிய முடிகிறது. 'கமலி' புதினத்தில், திருநங்கையர் முன்னேற்றச் சங்கத்தைக் கலைக்க கமலியின் அக்கா துர்கா அவளை மிரட்டுகிறாள். கமலியைக் கடத்துகிறாள்.

''உங்களுக்கு ஏண்டி இந்த வேண்டாத வேலையெல்லாம், எவனாவது எங்காவது போறான். எவளாவது எப்படியாவது போறா... உங்களுக்கு என்ன நஷ்டம்? சங்கம் வச்சு எங்க பிழைப்பிலே மண்ணைப் போட்டு விட்டீங்களேடி...''[46]

என்று துர்கா அவர்களை ஏசுகிறாள். இவ்வாறு தொழில் பாதிப்பால் திருநங்கையராலேயே திருநங்கையருக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

2.4 உளநிலையும் உணர்வுகளும்

ஒவ்வொரு மனிதனுக்கும், உணர்வுகள் என்பது உளநிலை சார்ந்து அமைகின்றன. மனிதர்கள் அனைவரும் தம் வாழ்க்கைமீது தீராத காதலைக் கொண்டுள்ளனர். மனிதர்களின் உணர்வுநிலை வெறுப்பிற்கு உள்ளாகும்போது தங்கள் வாழ்க்கையினை முடித்துக் கொள்ள விழைகின்றனர். ஒரு குறிப்பிட்ட பருவ வயதில் திருநங்கையருக்குள் எழும் பெண்மை சார்ந்த உணர்வுகளை அவர்களால் புறந்தள்ள

இயலுவதில்லை. திருநங்கையர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உளநிலை உணர்வுகளும் புதினங்களில் பதிவாகியிருக்கின்றன.

2.4.1 பெண்மை உணர்வுகள்

ஓர் ஆணுக்குள் ததும்பி வழியும் பெண்மை உணர்வுகள் அவனைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திவிடுகின்றன. திருநங்கையர் பெரும்பாலும் பதின்மூன்று, பதினான்காம் வயதில் தங்களைப் பெண்களாக எண்ணத் தொடங்குகின்றனர். திருநங்கையரின் உடைமுதல் உணர்வுஈறாக அனைத்திலும் பெண்மைத் தன்மையே நிரம்பி வழிகின்றது. குடும்ப உறுப்பினர்களின் கொடுமைகளுக்கு ஆளாகினும் பெண்ணுடை அணியவே திருநங்கையர்கள் தலைப்படுகின்றனர்.

> **''டேய் சுயம்பு, இனிமேல் சேல கட்டுவியா... ஆமான்னா தலையாட்டுற.... அண்ணன்காரன், கால்களை இறுக்கிப் பிடித்த மரகதத்தின் கைகளை மிதித்துக் கொண்டே முன்னேறினான். கையிலுள்ள இரும்பு முனையை சுயம்புவின் காலில் வைத்தான். புடவை மூடிய முட்டியில் வைத்தான். அங்குமிங்குமாய் நெளிந்த இடுப்பின் இரு பக்கமும் வைத்தான். ரிப்பன்கள் கட்டிய பிடரியில் வைத்தான். பொசுங்கிய வாடையோடு பட்ட இடமெல்லாம் பொசுங்கியது. ஒவ்வொரு சூட்டுக்கும் ஒரு கேள்வி டேய் சேல கட்டமாட்டியே... ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு பதில்! கட்டுவேன், கட்டுவேன் என்பது மாதிரி தலையாட்டும் பதில்!''**[47]

என்ற 'வாடாமல்லி' புதின வரிகள் எத்தகைய சூழலிலும் திருநங்கையரின் உறுதிப்பாட்டினைச் சுட்டுகின்றன.

'அவன் - அது = அவள்' புதினத்தில் கோபிக்குப் பேய் பிடித்துள்ளது என்று அவன் குடும்பத்தார் பேய் விரட்டுகின்றனர். அதைப் பயன்படுத்தி, கோபி பெண் உடை மற்றும் அவர்கள் அணிந்திடும் அணிகலன்களையும் அணிந்து கொள்கின்றான்.

''சொல்லு... என்ன வேணும்னு சொல்லிடு? செகப்பு கலர்ல ஜாக்கெட்டும், பாவாடையும் வேணும்... போதுமா? மஞ்சள் கலர்ல தாவணி... ரெண்டு டஜன் கண்ணாடி வளையல்.... ம் தாரேன். ஒரு ஜிமிக்கி, வெள்ளிக் கொலுசு....''[48]

என உடைகள்முதல் அணிகலன்கள்வரை பெண்மை உணர்வுடன் கேட்பது பதிவு செய்யப்படுகின்றது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில் அர்ச்சுணனுக்குப் பெண்மை உணர்வு மேலிடுகின்றது. இதனால் பெண் உடைகள்மேல் ஆர்வம் கொள்கின்றான்.

''பேண்ட், சர்ட் போட வெறுப்பாக இருந்தது. அம்மாவின் சேலையை கட்டிப் பார்ப்பது ஆனந்தமாக இருந்தது. தங்கைகளுக்கு தெரியாமல் தங்கைகள் வாங்கி வைத்திருந்த கம்மல், பாசிகளை, கண்ணுக்கு மை போட்டு, நெற்றியில் பொட்டு வைத்து, பவுடர் தூக்கலாக போட்டு அடிக்கடி கண்ணாடியில் தன்னை அழகு பார்க்கத் தோன்றியது.''[49]

என்று பெண்மைக் கோலத்துடன் திகழ்வதையே அவர்கள் மனம் விரும்புவது எடுத்துரைக்கப்படுகின்றது. திருநங்கையர் பெண்களைப் போலவே பூச்சூடவும் விரும்புகின்றனர்.

''சுயம்பு அந்த இரண்டு முழம் பூவையும் பிடரியில் சுற்றிக் கொண்டதைப் பார்த்து, மலர்க்கொடி வயிறு குலுங்கச் சிரித்தாள்... சுயம்பு பிடரியில் கட்டிய மல்லிகைப் பூவை வருடி விட்டபடியே கீழே சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு நடந்தான்''[50]

தன்னைப் பெண்ணாக உருமாற்றிக் கொள்ளத் திருநங்கையருக்குப் பெண்ணுடைகள் அணிவதும், அணிகலன்கள் அணிவதும், பெண்கள் சார்ந்த வேலைகளைச் செய்வதும் இன்றியமையாததாக இருப்பதைப் புதினங்கள் தெரிவிக்கின்றன.

2.4.2 காதல் உணர்வுகள்

திருநங்கையர்கள் தங்களைப் பெண்ணாக உணர்வதினால் ஆண்கள்மீது இயல்பாகவே காதல் உணர்வுடன் இருக்கின்றனர். பெரும்பாலும் தான் விரும்பிய ஆடவனைத் தவிர, வேறு ஆடவனைத் திருநங்கையர் தன்மனத்தாலும் ஏற்க மறுக்கின்றனர். ஆனால் இவர்களின் உண்மைக் காதலைப் பெரும்பான்மையான ஆடவர்கள் பாலியல் மற்றும் பொருளாதாரச் சுரண்டலுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்கின்றனர்.

> **''தன்னால் அன்பு கொண்டவனாக நாடகமாடிய ஆணை நம்பி, ஆண்டாண்டு காலமாகச் சேர்த்த பணத்தையெல்லாம் இழந்துவிட்டு வந்த திருநங்கைகளும் நிறைய இருக்கிறார்கள்''**[51]

என்ற வெ. நீலகண்டனின் கூற்றிலிருந்து 'காதல்' உணர்வால் இன்னல்களை அனுபவிக்கும் திருநங்கையரின் வாழ்வுநிலை அறியப்படுகின்றது.

'வாடாமல்லி' புதினத்தில் கூத்தாண்டவருக்குத் தாலி கட்டிய மேகலை தன் மனத்துள் காதலன் டேவிட்டை நினைக்கிறாள்.

> **''அதே மர உருவம் மனிதனாகிறது. கையில் பிடித்துள்ள சூலாயுதம் ஸ்டெதஸ்கோப்பாகிறது. டேவிட் அவளைப் பார்த்துச் சிரிக்கிறான். மேகலை கழுத்தில் தொங்கிய மஞ்சள் துண்டு தாலியை கண்களுக்குக் கொண்டு போய் ஒற்றிக் கொண்டாள். மனத்திற்குள் டேவிட், டேவிட் என்றாள்''**[52]

என்ற அடிகள் ஆண்டுகள் பல கழிந்தும் காதலனாக நினைத்தவனையே கணவனாக நினைக்கும் திருநங்கையரின் மனப்போக்கினைச் சித்திரிக்கின்றன.

'கமலி' புதினத்தில் ராஜாத்தியின் மன உறுதிப்பாடு குறித்து பதிவு செய்யப்படுகிறது.

''ஐயோ பஸ்காரரே, என்னைத் தொடாதே, அரவாண்சாமி மேலே சத்தியம் என்னைத் தொடாதே . . . நான் ராஜதுரை அய்யாகிட்ட 'பட்டியம்' வாங்கி ஒரு மாசமாகுது.... ராஜதுரை ஐயாதானே எனக்கு ஆபரேஷனுக்கெல்லாம் ஏற்பாடு செய்தாரு. நான் இப்ப ராஜதுரை ஐயாவுக்கு மட்டும்தான் சொந்தம். எங்களுக்கும் கற்பு இருக்குல்லே''[53]

என்ற கூற்று திருநங்கையர் ஒழுக்க நெறியுடன் வாழ எண்ணுகின்றனர் என்பதை நிலைநிறுத்துகின்றது. 'பூமி வசப்படுமே' புதினத்தில் மணி, சுடலை முத்துவை முழுமனதாக நேசிக்கிறான்.

''நீ மட்டும் பொம்பளப்புள்ளாயா இருந்தா... ஐ லவ் யூ சொல்லீருவேண்டா என்றான். மணிக்கு என்ன ஆயிற்று என்று அவனுக்கே தெரியவில்லை. இப்ப மட்டும் என்ன ஐ லவ் யூ சொல்லுடா என்றான்''[54]

தனக்குள் இருந்த பெண் தன்மையின் வெளிப்பாடே மணியை இவ்வாறு சுடலைமுத்துவிடம் கேட்கத் தூண்டுகின்றது. திருநங்கையருக்குள் எழுந்திடும் காதல் உணர்வுகள் மணிமூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில் கல்பனாவிற்குக் கந்தர்வன் மேல் உள்ள காதலின் உறுதிப்பாடு பதிவு செய்யப்படுகிறது.

''அவளுடன் இருந்த மற்ற திருநங்கைகள் பாலியல் தொழில் பண்ணினாலும், இவளால் அதில் ஈடுபட முடியவில்லை. மனசு முழுக்க கந்தர்வனை நினைச்சிட்டு, இன்னொருத்தன் வந்து தன்னோட உடம்பைத் தொடுவதை மனசு ஏத்துக்கலை''[55]

என்ற வரிகள் மாறிய பாலினரான திருநங்கையரின் மாறாத காதலை வெளிப்படுத்துகின்றன. காதல் உணர்வு எழுந்தால் எந்த உயிரும் அதனை மறைப்பது

எளிதல்ல. அதில் திருநங்கையரும் விதிவிலக்கல்ல என்பதை மேற்சுட்டிய புதினப் பகுதிகள் எடுத்துரைக்கின்றன.

2.4.3 காதல் திருமண ஏமாற்றம்

காதலில் ஏமாறுவதும், ஏமாற்றப்படுவதும் அன்றாட சமூகத்தின் இயல்பாகவே உள்ளது. 'காதல்' என்பது ஒருவர்மீது ஒருவருக்கு ஒருமுறை மட்டுமே வருவதல்ல. புரிந்து கொள்ளும் துணை அமையும்வரை அது மாறிக்கொண்டே இருக்கும். பெண்களையே ஆண்கள் கைவிடும்போது திருநங்கையரை மிகச் சாதாரணமாக ஏமாற்றி விடுகின்றனர். உடல் இன்பத்திற்காகவும், பணத்திற்காகவும் பெரும்பாலும் திருநங்கையரை ஆண்கள் நாடுகின்றனர். அவன் – அது = அவள் புதினத்தில் 'சுந்தரி' என்ற திருநங்கை தன் காதலனால் பணத்திற்காகக் கொடுமைப்படுத்தப்படுகிறாள்.

> **''ஆரம்பத்தில் அமைதியாக இருந்த அவன் இப்ப கொஞ்ச நாளா இவளை அடிக்கிறதும் உதைக்கிறதுமா இருக்கானாம். பணம் பணம்னு இவளைப் போட்டு தொல்லை கொடுக்குறானாம். கொஞ்ச காலம் சும்மா இருந்தவ இப்ப கடை கேட்டுகிட்டு இருக்கா''**[56]

என்ற சுசீலாவின் விடை திருநங்கையரைப் பணத்திற்காக மட்டுமே நாடும் மனப்போக்கினை எடுத்துக்காட்டுகிறது. இதனால் திருநங்கையர் பிச்சை எடுக்க வேண்டிய நிர்பந்தமும் உருவாகின்றது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில் ஆண்கள் காதல் எனும் பெயரால் திருநங்கையரின் வாழ்க்கையை அழிப்பதனை, கல்பனா வழியாக எடுத்துரைக்கப்படுகின்றது.

> **''காதல்ங்கிற உணர்வு உண்மையிலே இருந்தா... பொண்ணுங்கள ஏமாத்த மனசு வருமா? ..., காதலிக்கிறது எல்லாம் நடிப்பு. அந்த நடிப்புல மயங்குற விட்டில் பூச்சியாய் வாழ்க்கையை தொலைக்கிறாங்க திருநங்கைகள்.''**[57]

என்ற வரிகளில் ஆண்களின் ஏமாற்றும் குணம் பதிவு செய்யப்படுகிறது. திருநங்கையரை ஏமாற்றும் ஆண்களின் செயல்கள் அவர்களின் மனிதாபிமானமற்ற மனத்தையே படம்பிடித்துக் காட்டுகின்றன.

2.4.4 தற்கொலை முயற்சியில் ஈடுபடல்

குடும்பமும், சமூகமும் புறக்கணிக்கும் சூழலில் வாழ்க்கையின் மீதுள்ள வெறுப்பின் காரணமாகத் திருநங்கையர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

> **''வாழ்வியலின் நெருக்கடிகள் தரும் அபத்தத் தன்மைகளும், குடும்பமும், சமூகமும் ஏற்றுக் கொள்ளாத நிலைகளும் அரவாணிகளை வீட்டை விட்டு வெளியேறத் தூண்டுகிறது. தற்கொலைகளுக்கும் ஆளாக்குகின்றது.''**[58]

என்று மு.அருணாசலம் 'தமிழ்ச் சிறுகதைகளில் அரவாணிகள்' நூலில் திருநங்கையரின் தற்கொலைக்கான தூண்டுதல் குறித்துக் கூறியுள்ளார்.

மேலும், தன்னை நிராகரிக்கும் ஆண்களை மறக்க முடியாமலும், அவர்கள் மேல் உள்ளக் காதலை மறுதலிக்க முடியாமலும் திருநங்கையர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். 'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தில் மன உளைச்சலின் காரணமாக தீபா தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறாள்.

திருநங்கையர், உள்ளன்போடு தாம் காதலித்த ஆணைக் கணவனாக எண்ணி வாழும் வாழ்க்கையில் காதல் கணவன் இறந்துபடும் சூழலில் இறக்கவும் செய்கின்றனர்.

நிவேதா எனும் திருநங்கை மகராஜன் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துள்ளார். மகராஜன் மாரடைப்பால் இறந்துவிட நிவேதாவும் உயிர் துறந்த நிகழ்ச்சி நாளிதழ் பதிவொன்றில் வெளியாகி உள்ளது.

''இறுதி சடங்கில் நிவேதா கலந்து கொள்வதற்கு மகராஜனின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் வாழ்க்கையில் வெறுப்பு அடைந்த நிவேதா நரசிங்கநல்லூரில் உள்ள தனது வீட்டுக்கு வந்து அங்கு மின் விசிறியில் தூக்கு போட்டுக் கொண்டார்''[59]

திருநங்கையரின் மெய்ம்மைக் காதல் பிரிவானது அவர்களை உயிர் துறக்கும் நிலைக்குத் தள்ளி விடுகிறது. ஆய்வுப் புதினங்களிலும் திருநங்கையர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது குறித்து பதிவு செய்யப்படுகிறது.

''எத்தனை போராட்டம்? வலி? வேதனை? இனம்புரியாத பாதுகாப்பின்மை, ஒரு தரம் அரளி விதையை விழுதாய் அரைத்ததை முழுங்கி வாயில் நுரைதள்ளி விழுந்தபோது, கிராமத்து மருத்துவச்சி கூட சிகிச்சைக்கு வரத் தயங்கினாளே''[60]

என்ற தீபாவின் கூற்று, திருநங்கையரின் வாழ்வை மட்டுமல்ல, இறப்பைக் கூட எவரும் பெரிதாகப் பொருட்படுத்தாத நிலையே சமூகத்தில் நிலவி வருகின்றது என்பதைக் காட்டுகிறது.

'பூமி வசப்படுமே' புதினத்தில் தன்னுடைய பெண்மை மாற்றத்தின் காரணமாய் எழும் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாமல் மணி தற்கொலை செய்ய முற்படுகின்றான்.

''அப்பா அடுத்த ஜென்மத்திலாவது உனக்கு மகனாகப் பிறந்து மகனாகவே வாழ்ந்து உன்னைச் சந்தோஷப்படுத்தணும் என்று எண்ணி... கிணற்றை நோக்கி ஓடினான். பாய்ந்தான்.''[61]

என்று இச்சூழல் காட்டப்படுகிறது.

திருநங்கையருக்குப் பதின்பருவத்திலேயே உடல் மாற்றங்கள் காரணமாகத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. காதல்

தோல்வியாலும், தற்கொலை செய்து கொள்வதினை ஆய்வின் புதினங்கள் சித்திரிக்கின்றன.

'அவன் - அது = அவள்' புதினத்திலும் கணவனின் கொடுமை தாங்காது, சுந்தரி எனும் திருநங்கை தற்கொலை செய்து கொள்கிறாள்.

''சுந்தரி தீதி... நம்பளை விட்டு போய்டிச்சி.... மம்மி மண்ணெண்ணை ஊத்தி... தற்கொலை பண்ணிகிச்சாம்''[62]

என்ற அடிகள்வழி விலைமதிப்பில்லா உயிரினை விடும் திருநங்கையரின் வாழ்வியல் அவலங்கள் சுட்டப்படுகின்றன.

'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில் கல்பனாவின் சோட்டா குரு, (சித்தி,) கோமதி தற்கொலை செய்து கொள்கிறாள்.

''எங்க சோட்டா குரு கோமதி மாதிரி ஆட்கள், அதிகமாக பாசத்தை வச்சிக்கிட்டு, காதலன் ஏமாத்திட்டுப் போவதை தாங்க முடியாம இப்படி தற்கொலை பண்ணியிருக்காங்க...''[63]

என்று கந்தர்வனிடம் கல்பனா கூறுகிறாள்.

பாலின உடல் மாற்றத்தால், குடும்ப வாழ்வில் ஏற்படும் தோல்வியாலும், காதல் தோல்வியாலும் திருநங்கையர்கள் பெரும்பாலும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

காவல் துறையினர் தவறாகப் பேசியதால் மனமுடைந்த திருநங்கை தாரா தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட மெய்ம்மை நிகழ்வும் இன்றைய சமுதாயத்தில் காணப்படுகிறது.

''மனமுடைந்த தாரா அருகில் உள்ள பங்க்கிற்கு சென்று, பெட்ரோல் வாங்கி வந்து, பாண்டி பஜார் காவல்நிலையம் முன் தீக்குளித்தார்... காலை 10.30 மணியளவில் தாரா உயிரிழந்தார்''[64]

என்ற நாளிதழ் செய்தியின்வழி திருநங்கையரின் இரக்கத்தக்க துன்ப நிலையினை அறிய முடிகின்றது. சமூகமும், குடும்பமும் திருநங்கையர்களைத் தொடர்ந்து புறக்கணிப்பிற்கும், வெறுப்பிற்கும் ஆளாக்கிடும் போது தற்கொலை நிகழ்வுகள் உருவெடுக்கின்றன.

2.4.5 உணர்வுகளை மறுதலித்தல்

எந்த ஓர் உயிருக்கும் இயல்பாகத் தன்னுள் எழும் உணர்வுகளை மறைத்தல், மறுதலித்தல் இயலாத ஒன்றாகும். திருநங்கையர் தன்னுள் எழும் காதல் உணர்வுகளை மறுதலிக்கும் போக்கு அதிகமாகவே உள்ளதெனலாம்.

'கனவுகள் கைப்பிடிக்குள்', 'உன்னைவிட்டு விலகுவதில்லை', 'மாலைகள்' ஆகிய மூன்று புதினங்களிலும் திருநங்கையரை மனதார விரும்பும் ஆண்களை அவர்கள் மறுதலிக்கின்றனர். தங்களுக்குக் குழந்தைப் பேறு இல்லாததையும் குடும்பத்தில் வரும் சிக்கல்களையும் எண்ணி காதலைப் புறக்கணிக்கின்றனர்.

'கனவுகள் கைப்பிடிக்குள்' புதினத்தில் தீபாவை ரவிஷங்கர் தீவிரமாக நேசிக்கிறான். தான் திருநங்கை என்பதால் ரவிஷங்கர்மேல் உள்ள காதலை வெளிப்படுத்தாது 'தீபா' தவிக்கிறாள்.

> **''எனக்கும் இதெல்லாம் சொல்லனும்னு ஆசை இல்லியா ஷங்கர்? உங்களை வேதனைப்படுத்தறது எனக்கும் வேதனைதான். உங்க நேசத்தை மறுக்கிறது என்ன நானே சித்ரவதை செய்யற மாதிரி இருக்கு... உங்களுக்கு 'நோ'ன்னு சொல்லறதை விடவும் தற்கொலை செய்யலாமான்னு வேகம் வருது. ஆனாலும் தவிர்க்க முடியாது ஷங்கர், என்ன விடச் சிறந்த பெண்தான் உங்களுக்கு மனைவியாகத் தகுதி படைச்சவள்''**[65]

என்று கூறி ஷங்கரின் காதலைப் புறக்கணிக்கிறாள்.

தான் திருநங்கை என்பது தெரியவரின், விரும்பியவனும் வெறுக்கும் சூழல் உருவாகி விடுமோ? என்ற அச்சம் காரணமாகத் திருமண உறவை வேண்டாமென்கின்றாள்.

'உன்னைவிட்டு விலகுவதில்லை' புதினத்தில் கல்பனா கந்தர்வனின் காதலை மறுதலிக்கும் போக்கு காணப்படுகின்றது.

''என்னை நீ கல்யாணம் பண்ணினா இந்த சமுதாயம் உன்னை எள்ளி நகையாடும் அது மட்டுமில்லாம உன்கிட்ட வேலப்பாக்குறவங்க கூட உன்னை மதிக்க மாட்டாங்க. என்னைக் கல்யாணம் பண்ணுனா உனக்கு கெடைக்கிற சந்தோஷத்தைவிட சங்கடங்கள்தான் ஜாஸ்தியா இருக்கும்''[66]

'தன் காதலால் தன்னை விரும்பும் ஆணுக்கு எவ்விதத் துன்பமும் நேரிடக் கூடாது' என்று திருநங்கையர் கருதுகின்றனர். ஒரு ஆண் மனமுவந்து திருநங்கையைத் திருமணம் செய்ய முன்வந்தாலும், இந்தச் சமூகம் அவன் ஆண்மையைச் சந்தேகிக்கிறது. இதனால் அந்த ஆணுக்கு அவப்பெயர் வந்துவிடக் கூடாதென்று திருநங்கையர் திருமணம் செய்திட தயங்குகின்றனர்.

''சாதி ... மதம்.. காசு... நிறம்... வயது... ன்னு கல்யாணத்துல அசல் பொண்ணுங்களுக்கே ஆயிரத்தெட்டு பிரச்சனையிருக்கு கவி... நாங்களோ போலி...''[67]

'மாலைகள்' புதினத்தில் வெற்றிச் செல்வியின் இக்கூற்றில் திருநங்கையர் தங்களைப் பெண்ணாக நினைத்திடினும் இச்சமூகம் அவர்களைப் பெண்ணாக ஏற்க மறுக்கும் போக்கு உணர்த்தப்படுகின்றது. இதனால் இயல்பாகத் தமக்குள் எழும் பாலுணர்வுகளைத் திருநங்கையர்கள் மறுதலிக்கின்றனர். சமூகம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் கேலி, கிண்டல்களுக்குப் பயந்து திருமண உறவுகளை மறுக்கும் போக்கினை மேற்சுட்டிய புதினங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

2.5 புறக்கணிப்புகளும் போராட்டங்களும்

திருநங்கையர் தங்களை மாறிய பாலினராக உணரும் தருணத்திலிருந்தே சமூகம் அவர்களைப் புறக்கணிக்கும் நிலையும் துவங்கி விடுகின்றது. தினம் தினம் திருநங்கையர் பல போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். பருவ வயதுமுதல் இறக்கும் நாள்வரை போராட்டங்கள் இவர்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

2.5.1 குடும்பப் புறக்கணிப்பு

எந்த ஒரு மனிதனும் குடும்ப உறுப்பினர்களால் புறக்கணிக்கப்பட்டால் செயலற்ற நிலைக்கு ஆளாகிவிடுகின்றான். திருநங்கையரைக் குடும்பம் புறக்கணிக்கும் சூழல் ஏற்படும்போது அவர்கள் தற்கொலை செய்யத் தலைப்படுகின்றனர். இந்தியாவில் காவல்துறையில் முதல் திருநங்கை துணை ஆய்வாளர் என்ற பெருமையைப் பெற்றவர் பிரித்திகா யாஷினி. குடும்பப் புறக்கணிப்புகளுக்கு ஆளான பிரித்திகா வீட்டைவிட்டு வெளியேறி மிகுந்த போராட்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார். இது குறித்து,

> **‘‘பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மாற்றங்கள் காரணமாக அவர்களை புறக்கணிக்கக் கூடாது. மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். புரிதலை வளர்த்துக் கொள்ள வேண்டும்’’**[68]

என்று பெற்றோருக்கு அறிவுறுத்துகிறார். குடும்பப் புறக்கணிப்புகள் திருநங்கையர்களின் வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கும் போக்கினைச் சுட்டுகின்றன. ஆய்வுப் புதினங்களும் இதனையே வழிமொழிகின்றன.

‘வாடாமல்லி’ புதினத்தில் சுயம்புவின் அக்கா மரகதம் அவளின் திருமணம் தடைபட்டதால் அவனைத் திட்டுகின்றாள்.

''சீ... யாருடா உனக்கு அக்கா... என் வாழ்க்கையை கெடுக்கறதுக்குன்னே உடன் பிறந்தே கொல்லும் நோயுடா, நீ! இப்ப உனக்கு சந்தோஷம்தானேடா.... சுயம்பு அக்காவைப் பார்த்தான். அவளோ எங்கயோ நிற்பதுபோல் நின்றாள். அவன் வெளியே ஓடினான். திக்கறியா, திசையறியா இடத்துக்கு... மனித வாடையே இல்லாத காட்டுக்கு?''[69]

என்ற இவ்வரிகள் குடும்பப் புறக்கணிப்பால் திருநங்கையர் வீட்டைவிட்டு வெளியறும் சூழலைத் தெரிவிக்கின்றன.

'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில் கல்பனாவின் பெற்றோர் அவளை வெறுத்து ஒதுக்குகின்றனர்.

''இந்த மாதிரி ஒரு பால் ஊனத்தோட பொறந்துட்டேன். இன்னும் இங்கேயே இருந்து எனக்கு பால் கொடுத்து வளத்த கையினாலே விஷம் வச்சி கொலை செய்ய வைக்கிற பாவத்துக்கோ, அல்லது என்னைப் பெத்த பாவத்துக்கு என்னைப் பெத்தவங்களும், எங்கூட பொறந்த பாவத்துக்கு எம்தம்பி, தங்கச்சிகளோ சாவதற்கு நான் காரணமாக இருக்கக் கூடாது. அதுக்கு பதிலா நான் எங்காவது போய் வாழ முடிஞ்சா வாழலாம். இல்லாட்டி சாகலாம்.. நெனச்சி வீட்டு செலவுக்கு வச்சிருந்த காச எடுத்துகிட்டு வீட்டை விட்டு கிளம்பிட்டேன்''[70]

என்று கல்பனா கூறுவதிலிருந்து பெற்றோரின் புறக்கணிப்பே திருநங்கையர் வீட்டை விட்டு வெளியேற முதன்மையான காரணமாகிறது என்பதை அறிய முடிகின்றது. பெற்றோரே திருநங்கையரை வீட்டை விட்டு வெளியேறுமாறு தூண்டுகின்றனர்.

''இந்தா இதுல பத்தாயிரம் ரூபா இருக்கு. வாங்கிட்டு எங்காவது கண்காணாம ஓடிப் போயிடு. இத வச்சு ஏதாவது வேல செஞ்சி பொழச்சிக்கோ. வழி தெரியலியா,

ரயில்ல, பஸ்ஸில, கொளம் குட்டையில வுழுந்து செத்துடு, விடியறப்போ எங்க மொகத்துல முழிக்கக் கூடாது''[71]

என்று கூறி வெற்றிச் செல்வியின் பெற்றோர் அவளைப் புறக்கணிக்கின்றனர். எந்த ஒரு மனிதனையும் சக மனிதர்கள் புறக்கணிப்பதைவிட அவர்களின் குடும்பமே புறக்கணிக்கும் நிலை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். திருநங்கை பிறப்பினர்க்கு முதன்மைப் புறக்கணிப்புக் களமாக அவர்களது குடும்பங்களே அமைகின்றன.

2.5.2 சமூகப் புறக்கணிப்பு

குடும்பம் புறக்கணிக்கும் சூழலில் மனிதர்களுக்குக் கை கொடுப்பது சமூகமாகும். திருநங்கையருக்குச் சமூகமும், கை கொடுக்க மறுத்துவிடுகின்றது. சமூகப் புறக்கணிப்பின் உச்சத்தால் திருநங்கையர்கள் வாழ்வில் அவலமே மிஞ்சுகின்றது.

இந்தியாவின் காவல்துறைத் துணை ஆய்வாளரான பிரித்திகா யாஷினி தன்னை இச்சமூகம் புறக்கணிப்பதைப் பற்றிக் கூறியிருப்பது அவர்களது உண்மை நிலையினை வெளிப்படுத்துகிறது.

''என் தோழி பானு இந்தச் சமூகம் அவ்வளவு சாதாரணமா நம்மை வாழவிடாது என்று சொன்னாள்... அந்த வரியிலிருந்து எனக்குள் பெருங்கோபம் பிறந்தது. இந்தச் சமூகம் என்னை வாழவிடாதா? அதையும் பார்க்கிறேன். நான் வாழ்ந்து காட்டுவேன் என வெறியோடு போராட ஆரம்பித்தேன்... வாழ்ந்து காட்டுவேன் எனப் போராடாமல் இருந்தால் இந்தச் சமூகம் அவ்வளவு சாதாரணமாக நம்மை வாழவிடாது''[72]

என்ற யாஷினியின் கூற்று சமூகப் புறக்கணிப்பின் வலிகளையும், வேதனைகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது. திருநங்கையர்கள் சமூகத்தை எதிர்த்துப் போராட வேண்டியிருப்பதை ஆய்வுப் புதினங்கள் தெரிவிக்கின்றன.

''எங்கள மாதிரிப் பொட்டைகளை யாரும் வீட்டு வேலைக்குச் சேர்க்க மறுக்காங்க.. சில்லறை வியாபாரம் செய்தால், பொறுக்கிப் பசங்க கிண்டல் பண்றாங்க...''[73]

என்ற 'வாடாமல்லி' புதினம் திருநங்கையரின் மனவலியினை சுட்டிக் காட்டுகின்றது. கைகளில் பணம் இருந்தும் உணவகங்களில் திருநங்கையரை அனுமதிக்க மனம் இருப்பதில்லை என்பதைக் கீழ்வரும் புதின அடிகள் தெரிவிக்கின்றன.

''ஹோட்டல் வந்து விட்டது அக்கா சொன்னா, 'ஏய் நீ தான் இன்னைக்கு பெரிய வீட்டுப் பிள்ளை மாதிரி இருக்கே! நீ போய் மீல்ஸ் எவ்வளவுனு கேட்டுட்டு வா' என்றாள் மணியிடம். அப்படியே நம்மளை உள்ளே விடுவாங்களானு நோட்டம் பாரு''[74]

என்று 'பூமி வசப்படுமே' புதினம் சராசரி மனிதராகக் கூட திருநங்கையரை ஏற்கும் போக்கு இச்சமூகத்தில் இல்லை என்பதை மெய்ப்பிக்கிறது. திருநங்கையர் உழைத்து முன்னேறி வாழ நினைப்பினும் இச்சமூகத்தவர் அவர்களுக்குத் தகுந்த ஆதரவைத் தர முன்வருவதில்லை. அவர்களைச் சந்தேகக்கண் கொண்டு நோக்குகின்றனர்.

''கண்ணு உன்ன மாதிரி நெனச்சிதான் சிவனாண்டிங்குற ஒரு போலீஸ் ஆபிசரு நம்ம ஆளுங்க 8 பேத்துக்கு அமஞ்சிக்கிர மார்கட்டுல காய்கறி கடை போட்டுக் கொடுத்தாரு என்ன ஆச்சி... பக்கத்து கடைக்காரங்க ஒம்போது கடைன்னு கேலி பண்ணினாங்க. ஜனங்க யாரும் காய்கறி வாங்க வரல...''[75]

என்று 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தின்வழி பதிவு செய்யப்படுகிறது. திருநங்கையரை இச்சமூகம் புறக்கணிக்காது ஏற்றுக் கொள்ளும்போதே அவர்கள் வாழ்வில் மாற்றமும், ஏற்றமும் உருவெடுக்கும்.

2.5.3 கேலியும் கிண்டலும்

திருநங்கையரின் நடை, உடை செயல்பாடுகளை இச்சமூகம் இன்றளவும் எள்ளி நகையாடுகின்றது. பள்ளி துவங்கி கல்லூரி, சாலைகள், பொது இடங்கள் என அனைத்து இடங்களிலும் இவர்களைக் கேலி செய்யும் போக்கு நிலவுகின்றது. திருநங்கை குணவதி நேர்காணல் ஒன்றில், சமூகத்தின் ஏளனப் பேச்சுக்களுக்கு ஆளானதைக் கூறியிருக்கிறார்.

> **''எனது உடலில் 13 வயதில் திருநங்கையாக மாறுவதற்கான அறிகுறி தெரிந்தது. உறவினர்களும், நண்பர்களும் கேலி கிண்டல் செய்தனர். நான் கல்லூரியில் படிக்கும் போது பலவித பட்டப் பெயர்களால் என்னை அழைத்தனர். அவமானம் செய்தனர்''**[76]

என்ற அவரது கருத்து சிந்திக்கத்தக்கது. தமிழ்ப் புதினங்களிலும் திருநங்கையரை அவமதிக்கும் போக்குகள் பதிவாகியிருக்கின்றன.

> **''ஏய் பொட்டைங்களா... ரேட்டைக் கூட்டிட்டிங்களாமே.. பொட்டைங்களா... ஏய் பொட்டை, ஒன்னத்தான்... கொஞ்சம் போஸ் கொடுமே... இதுகளுக்கு இன்னிக்கு இன்னடா வந்திட்டு''**[77]

என்ற வாடாமல்லி புதின வரிகளின்வழி திருநங்கையரை இழிவு செய்யும் போக்கு தெரிய வருகின்றது. 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் ரமேஷை சாலையில் இழிவாகப் பேசுகின்றனர்.

> **''டேய் ரம்யா திரும்பிடுச்சிடா... என்னம்மா கண்ணு சவுக்கியமா? ஊரோரம் புளிய மரம்... கைத்தட்டலும், கேலியும், சிரிப்பும் அலை பாய்ந்தது''**[78]

என்று இச்சூழல் எடுத்துரைக்கப்படுகிறது.

ஊடகங்களில், திரைப்படங்களில் திருநங்கையரை இழிவாகச் சித்திரிப்பதால் சமூகத்தவரும் அவ்வாறே இழிவாகப் பேசுகின்றனர். 'அவன் - அது = அவள்' புதினத்தில் கோபி கல்லூரியில் சக மாணவர்களால் கேலிக்கு உள்ளாகிறான்.

''டேய்... எட்டுக்கும் பத்துக்கும் நடுவுல என்னடா? பத்துக்கு தங்கச்சி, எட்டுக்கு அக்கா யாருடா அது? விதவிதமான கேலிப் பேச்சுக்கள், திரைப்பட பாடல்களின் அணி வகுப்புகள் என்று கோபியின் தனிமைக்குள் கல்லூரி மாணவர்கள் அத்துமீறி பிரவேசித்தார்கள்....''[79]

இவ்வாறாக கேலிப் பேச்சுக்களுக்கு ஆளாகும் திருநங்கையர்கள் படிப்பு, வேலை, நிம்மதி, மன அமைதி என அனைத்தையும் இழந்தவர்களாகி விடுகின்றனர்.

2.5.4 பாலியல் சீண்டல்கள்

பெண்களை மட்டுமின்றி திருநங்கையரையும் பாலியல் சீண்டல்களுக்கு ஆண்கள் ஆளாக்குகின்றனர்.

''ஒன்று அவர்களை காட்சிப் பொருள்களாக பார்வை நுகர்ச்சிக்குரியவர்களாக (Voyeuristic) கண்ணோட்டத்தில் பார்ப்பது கூவாகம் கிராமத் திருவிழாவிலும், வருடத்தின் பிற நாட்களில் மற்ற இடங்களிலும் பல ஆண்கள் இத்தகைய கண்ணோட்டத்துடன்தான் அலிகளை கேலி செய்கின்றனர்''[80]

என்ற 'அருணன்' கூற்றிலிருந்து திருநங்கையரைத் தொடரும் பாலியல் சீண்டல்கள் குறித்து அறிய முடிகின்றது.

'அவன் - அது = அவள்' புதினத்தில் கோபி பேராசிரியர்களால் பாலியல் சீண்டலுக்கு ஆளாகிறான்.

''கல்லூரி மாணவர்களின் தொல்லை ஒரு பக்கம், என்றால், பேராசிரியர்களைச் சமாளிப்பது இன்னும் கஷ்டம். ஒரு பேராசிரியர் இவனைக் கண்டாலே அசடு

வழிவதும் . . . அன்பாக நடந்து கொள்கிறேன் என்று இவனை இடித்தபடி நிற்பது, தடவுவது போன்ற தொல்லைகளைக் கொடுத்து வந்தார்''[81]

இவ்வாறான நிகழ்வுகளால் திருநங்கையர்கள் படிப்பையே பாதியில் நிறுத்தி விடுகின்றனர். 'கமலி' புதினத்தில் அமைச்சர் பணியில் இருப்பவரே தவறாக நடந்துகொள்ளும் போக்கும் பதிவு செய்யப்படுகிறது.

''இன்னைக்கு ஓட்டல் சவேராவிலே ரூம் புக் பண்றேன். ராத்திரி பத்து மணிக்கு வந்துட முடியுமா? என்றார் தணிந்த குரலில் வைரலிங்கம்''[82]

நல்ல பதவியில் இருப்பவர்களும் இவ்வாறாகப் பாலினம் மாறியவர்களிடத்து வக்கிரமாக நடந்து கொள்வது, கண்டித்தலுக்கும், தண்டித்தலுக்கும் உரியது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்திலும் கல்பனாவை ரவுடி கும்பல் வக்கிரமான வார்த்தைகளால் காயப்படுத்துகின்றது.

''இது உண்மையா... இல்லே பஞ்சு வச்சிருக்காளா? இவ்வளவு பெரிசா இருக்கே... நல்ல பவர்புல் ஹார்மோன் ஊசி போட்டிருப்பா போலிருக்கு...''[83]

என்ற புதின வரிகள் திருநங்கையர்களை இச்சமூக மக்கள் எத்துணை இழிவாகப் பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தி வருகின்றனர் என்பதை தெளிவுறுத்துகின்றன.

2.5.5 காவலர்களின் வன்முறை

பாதுகாப்பைத் தரவேண்டிய காவலர்களே திருநங்கையரிடத்து இழிவாக நடந்து கொள்ளும் போக்கினையும் புதினங்கள் காட்டுகின்றன. நீதி கேட்டுச் செல்லும் திருநங்கையரைக் காவல் நிலையத்தில் கேள்வி கேட்பாரின்றிக் களங்கப்படுத்துகின்றனர்.

‘வெள்ளை மொழி’ எனும் தன்வரலாற்று நூலில் ரேவதி தன் வாழ்வியல் அனுபவத்தைப் பதிவு செய்கிறார். காவலர்களின் வன்முறைச் செயல்களால் தற்கொலை செய்துகொள்ள எண்ணியதைப் பின்வருமாறு கூறுகின்றார்.

‘‘ஒருவருக்கு கூட என்மீது கருணை வரவில்லை. என் மனமோ அவமானம் தாங்க முடியாமல் மனம் கொந்தளித்தது. அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுத்துச் சுட்டுக் கொண்டு இறந்து விடலாம் என்றெல்லாம் தோன்றியது’’[84]

என்ற கூற்றில் காவலரின் வன்முறையும், திருநங்கையின் மனநிலையும் புலப்படுகின்றது.

‘வாடாமல்லி’ புதினத்தில் சுயம்புவையும், ஏனைய திருநங்கையரையும் காவல் நிலையத்தில் அசிங்கப்படுத்துகின்றனர்.

‘‘ஒரு போலீஸ் சுயம்புவின் சேலையை அவிழ்த்தார். ஜாக்கெட்டைக் கிழித்தார். பிறகு அவனை உற்றுப் பார்த்து பூ, ... இதுக்குத்தான் இவ்வளவு அமர்க்களமா... பாவாடையைக் கீழே கொண்டு வந்தார்... அவருக்கும் பொட்டைக எப்படி இருக்கும் என்று பார்க்க ஒரு ஆசை.’’[85]

இப்புதினம் திருநங்கையருக்கும் தன்மானம் உண்டென்பதை மறந்துவிட்ட காவலர்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. ‘அவன் – அது = அவள்’ புதினத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்லும் திருநங்கையரைக் காவலர்கள் கீழ்த்தரமாக நடத்துகின்றனர்.

‘‘ஏன்டீ... பொட்டகளுத.. என்னையவே மெரட்டிப் பாக்கறயா... யோவ், இவளுகள லாக்கப்புல தள்ளி, டிரஸ்ஸ அவுருங்க.’’[86]

என்று பதிவாகியிருக்கிறது. மேலும் ‘உன்னை விட்டு விலகுவதில்லை’ புதினத்தில் சத்யா என்ற திருநங்கையைக் காவலர்கள் இழிவாக நடத்துகின்றனர்.

''ஏய் ஒம்போது... உன்னைப் பாத்தா ஒம்போது போலவே இல்லையே... அழகா தகதகன்னு இருக்கியே.... இன்னைக்கு ராத்திரி முழுக்க என்கூட தங்கு... ஆமா பெரிய பத்தினிமாரிபேச வந்துட்டுதுக..''[87]

என்று காவலர்கள் திருநங்கையர்களை ஏளனமாகவும், இழிவாகவும் பேசுவதை மேற்சுட்டிய வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. திருநங்கையர் என்றாலே பொதுமக்கள்முதல் பொறுப்புள்ள அதிகாரிகள் வரை பெரும்பாலானோர் இழிவாக நடத்துவது சமூகத்தின் பார்வைக் கோணல்களே ஆகும். இத்தகைய கோணல் பார்வை மாறிடல் வேண்டுமென்பதைப் புதினங்கள் தெளிவுறுத்துகின்றன.

2.6 திருநங்கையரும், சாதனைகளும்

திருநங்கையர்கள் தங்கள் குடும்பத்தாலும், சமூகத்தாலும் விரட்டியடிக்கப்பட்டாலும், தனக்கு வரும் சோதனைகளைக் கடந்து சாதனைகள் படைக்கின்றனர். திருநங்கையர் தன்னம்பிக்கையைத் துணையாகக் கொண்டு தம் வாழ்வில் எதிர்வரும் துன்பங்களைத் தாண்டிச் செல்லப் புதினங்களில் வரும் பாத்திரங்களும், முன்மாதிரியாகப் படைக்கப்படுகின்றன.

2.6.1 கல்வியைத் தொடரல்

பதின் பருவத்தில் ஏற்படும் உடல், மன மாற்றங்களாலும், பள்ளி, கல்லூரிகளில் மாணவர், ஆசிரியர் கொடுக்கும் மன உளைச்சல்களாலும், திருநங்கையர் பள்ளிப் படிப்பையோ அல்லது கல்லூரிப் படிப்பையோ பாதியிலேயே விட்டுவிடும் நிலை ஏற்படுகிறது. தற்காலத்தில் திருநங்கையரின் எழுச்சி நிலையினை அவர்கள் வகிக்கும் பதவியிலிருந்து அறிய முடிகின்றது. உடலியல் கோளாறால் திருநங்கையாக மாறிய பத்மினி தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணிபுரிகிறார்.

''அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து போன்ற நாடுகள் உலகின் முதல் திருநங்கை செய்தி வாசிப்பாளர்''[88]

என்ற நாளிதழ் செய்தி இதனை உறுதிப்படுத்துகின்றது. ஆய்வுப் புதினங்களிலும் திருநங்கையரின் கல்வி பாதிக்கப்படுதலும், திருநங்கையரின் முன்னேற்ற நிலைகளும் பதிவாகியிருக்கின்றன. பின் அப்படிப்பைத் தொடர்ந்து முடித்தல் பற்றிய நிகழ்வுகள் புதினங்களில் காணப்படுகின்றன.

'பூமி வசப்படுமே' புதினத்தில் மணி பாதியில் விட்ட பள்ளிப் படிப்பைப் பின்னாளில் அவனின் நண்பன் ரங்கனின் தூண்டுதலால் தொடர்ந்து முடிக்கின்றான்.

> **''நான் பத்தாம் வகுப்பு முடிக்க வேண்டும் என்று வெறியாக இருந்தவர் அப்பா. முடிக்காமல் போனதற்கு முக்கிய காரணம் ரங்கன். இன்னைக்கு அதே ரங்கன் என்னை பத்தாம் வகுப்பு பாஸ் பண்ண வைத்திருக்கிறான்''**[89]

பெரும்பாலான திருநங்கையர்கள் பள்ளிப்படிப்பைத் தவற விடுவதற்கு அவர்களின் பாலினமாற்றம் மட்டுமின்றி பள்ளி நண்பர்களும் காரணமாவதை இவ்வரிகள்வழி அறிய முடிகின்றது. 'மாலைகள்' புதினத்தில் வெற்றிச்செல்வி பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதித் தேர்ச்சி அடைகிறாள்.

> **''தேர்வில் நான் ஐநூறுக்கு நானூற்றி எழுபது மதிப்பெண் வாங்கி அசத்தினேன்''**[90]

என்று வெற்றிச்செல்வி கூறுகிறாள்.

திருநங்கையர் அறிவுத்திறன் படைத்திருப்பினும் அவர்களைச் சுற்றியுள்ள சூழல்கள் அவர்களை முன்னேற விடாமல் தடுக்கின்றன. வீட்டை விட்டு வெளியேறி, பாதியில் விட்ட பள்ளிப் படிப்பையும், தேர்வையும் வெற்றிச் செல்வி முயன்று முடிக்கின்றாள்.

திருநங்கையர் பள்ளி, கல்லூரிக் கல்வியினைத் தொடர்ந்து முடித்து நல்ல பணியில் அமர்ந்து சாதனைகள் புரிந்து வருகின்றனர். 'கமலி' புதினத்தில் எட்டாம் வகுப்பு மட்டுமே முடித்த கமலியும், ராஜியும் முயன்று பத்தாம் வகுப்புத் தேர்வு

எழுதித் தேர்ச்சி அடைகின்றனர். பின் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சர் பதவியில் அமர்கின்றனர்.

> **''கமலியும் ராஜியும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியடைந்ததைக் கேட்டு மாற்றுக்கட்சி வேட்பாளர்கள் ஆடிப் போனார்கள்... அலிகள் எம்.எல்.ஏ. வா? என்று வடநாட்டினர் வியந்து போனார்கள்''**[91]

மேலும் கமலி மந்திரி பதவியிலும் அமர்கிறாள். 'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில்,

> **''பட்டிமன்றம், டிவி, ரியலிட்டி ஷோ, சீரியல் என்று எல்லாவற்றிலும் கல்பனாவின் முகம் வர ஆரம்பித்தது. அதுவும் பட்டிமன்றங்களில் பேசும்போது, கல்பனாவின் அழுத்த திருத்தமான தமிழ் உச்சரிப்பு அனைவரையும் கவர ஆரம்பித்தது.... அவளை டி.வி. சேனல் தொடர்ந்து செய்தி வாசிக்க ஒப்பந்தம் செய்தது''**[92]

எனும் புதின வரிகளில் கல்பனாவின் தனித்தன்மை வெளிப்படுகின்றது. 'மாலைகள்' புதினத்தில் வெற்றிச்செல்வி ஆங்கில ஆசிரியராகப் பணி அமர்கிறாள்.

> **''பன்னிரெண்டாம் வகுப்பிலும் ஆயிரத்து நூற்று அறுபது மதிப்பெண்கள், கல்லூரியில் ஆங்கிலப் பாடப்பிரிவில் சேர்ந்தேன். ஊன்றுகோல் என்னைத் தாங்கிப் பிடித்தது. அவர்களுடைய உதவியால் க்ரெசண்ட் ஹையர் செகண்டரி ஸ்கூல் டீச்சர் வேலை''**[93]

என்ற புதின வரிகள் தொடர் முயற்சியும், ஆதரவும் இருந்தால் திருநங்கையரும் நல்ல நிலைக்கு வர இயலும் என்பதை எடுத்துக் கூறுகின்றன.

2.6.2 திருநங்கையர் சமூகத்தை நிலைநிறுத்தல்

திருநங்கையர் தம்மை நிலைநிறுத்துவதோடு அல்லாமல் தாம் சார்ந்த திருநங்கை சமூகத்தையும், நிலைநிறுத்துவதற்கு மிகுந்த பாடுபடுகின்றனர் என்பதைப்

புதினங்கள் முன்மொழிகின்றன. 'வாடாமல்லி' புதினத்தில் மேகலை திருநங்கையர் சமூகத்திற்காகப் பாடுபட முற்படுகிறாள்.

''வெட்ட வெளியாய் இருக்கிற இந்த இடத்துல அலிகளுக்காக ஒரு தர்மஸ்தலா கட்டணும் என்கிறது எங்க அம்மாவோட ஆக்ஞை''[94]

என்று மேகலை தன் அம்மாவான கங்காதேவியின் ஆசை பற்றிக் கூறுகிறாள். திருநங்கையருக்கு எழும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதே தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு செயலாற்றுகிறாள்.

'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் ரமேஷ் திருநங்கையர் சமூகம் உயரப் பாடுபடுகிறான். இதனை ஜானகியம்மாள் என்ற திருநங்கை பாராட்டுகிறாள்.

''ஏதோ கடை கேக்குறது, தந்தான்னு இருந்தவங்கள திருத்தி மீட்டிங்கு, பயிற்சின்னு மாத்திட்டியே நீ நெனச்சத சாதிச்சிட்டப்பா''[95]

என்ற கூற்று, தான் சார்ந்த திருநங்கையர் சமூகத்தை முன்னேற்றுவதில் ரமேஷிற்கு இருந்த அக்கறையை விளக்கிக் காட்டுகின்றன.

'கமலி' புதினத்தில் திருநங்கையர் முன்னேற்றத்திற்கும் கமலியும் மற்ற திருநங்கையரும் தொடர்ந்து போராடுகின்றனர்.

''ஆபரேஷன் செய்து கொண்டு பெண்ணாக மாறிவிட்டால் என் குணமே மாறிவிடும் என்று பயப்படுகிறேன். பொதுநலம் போய் தன்நலம் வந்துவிடும். ஆகையினால் நான், கடவுளின் குழந்தையாகவே இருந்து இந்த சமூகத்துக்குத் தொண்டு செய்யத் தீர்மானித்து விட்டேன்.''[96]

என்று புதினம் கமலியின் தன்னலமற்ற தொண்டுள்ளத்தையும், திருநங்கையரை நிலைநிறுத்தும் முனைப்பினையும் வெளிப்படுத்துகிறது.

'பூமி வசப்படுமே' எனும் புதினத்தில் மணி மற்றும் மற்றவரின் கூட்டு முயற்சியால் பல திருநங்கையர் நன்னிலை அடைகின்றனர்.

> **''ஒவ்வொரு ஞாயிறும் உதவி கேட்டு, திருநங்கையர் வருகின்றனர். மணிக்கு சந்தோஷமாக இருந்தது... வள்ளி இதுவரை, பலருக்கு முதியோர் இல்லத்தில் வேலை வாங்கிக் கொடுத்து விட்டாள். அமிர்தவல்லி அத்தை இரயில் நிலைய உணவகங்களில் பல பேருக்கு வேலை வாங்கிக் கொடுத்தாள். செண்பகம் கூட பள்ளிக்கூடத்தில் துப்புரவுப் பணியை இருவருக்கு வாங்கிக் கொடுத்தாள்''**[97]

என்ற புதின வரிகள் திருநங்கையருக்குத் தகுந்த வேலை கொடுத்தால் அவர்களும் சமூகத்தில் நன்மதிப்பைப் பெறுவர் என்பதை மெய்ப்பிக்கின்றன.

2.6.3 மருத்துவச் சாதனை

திருநங்கையருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தி மருத்துவர்களும் சாதனை புரிகின்றனர். ஆணாகப் பிறந்து பெண்ணாக வாழ்பவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களை முழுமையான ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ மாற்றி வருகின்றனர்.

இங்கிலாந்தில் 'ஹைடன் கிராஸ்' பிறக்கும்போது, பெண்ணாகப் பிறந்து வளரும் பருவத்தில் ஆணாக உணர்ந்து பிரிட்டிஷ் அரசு நிதியுதவியுடன் தன்னை முழுமையான ஆணாக, சிகிச்சைமூலம் மாற்றிக் கொண்டிருக்கிறார். தனது கருமுட்டைகளைப் பாதுகாத்து, வலைதளத்தில் நண்பரின் விந்தணுவைத் தானமாகப் பெற்று, குழந்தை பெற்றிருக்கிறார்.

> **''கடந்த ஜூன் மாதம், 16–ஆம் தேதி கிளாஸ்டர் ஷையர் ராயல் மருத்துவமனையில் ஹைடன் கிராஸுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு 'டிரினிட்டி லெய்க்' என்று பெயர் சூட்டியுள்ளார்.''**[98]

என்ற நாளிதழ் செய்தியின்வழி ஆணாக மாறியும் குழந்தை பெறும் மருத்துவச் சாதனையை அறிய முடிகின்றது.

'கமலி' புதினத்தில் பங்காரு என்ற திருநங்கையை, மருத்துவப் பரிசோதனை செய்து பெண்ணாக மாற்றுகின்றனர்.

> **''ஆபரேஷன் ஆறு மணி நேரம் தொடர்ந்து நடந்தது. டாக்டர்கள் இயற்கையை எதிர்த்து வீரமுடன் போராடினார்கள். இறுதியில் வெற்றியடைந்தார்கள்... பங்காருவின் உடல் நலம் நன்றாகத் தேறிவிட்டது. பார்ப்பதற்கு அசல் பெண் மாதிரியே இருந்தாள். புதிதாகப் பார்ப்பவர்கள் அவள் முன்பு கடவுளின் குழந்தையாக இருந்தவள் என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மாறி இருந்தாள்''**[99]

என்ற வரிகள் பெண்ணாக மாறிய நிலையைச் சுட்டுகின்றன. அலமேலு என்ற திருநங்கை அழகேசனாக மாறுகிறான்.

> **''அலமேலுவுக்கு ஆணாக மாறும் அறுவை சிகிச்சை நடந்தது. அழகேசனுக்கு நார்மல் ஆடவர்களுக்கு உள்ளதைப் போல விந்தில் உயிரணுக்கள் போதுமான அளவு இருந்ததாகப் பரிசோதனையில் தெரிய வந்தது''**[100]

என்ற புதினப் பகுதி, திருநங்கையருக்கு ஆண் தன்மையை அறுவை சிகிச்சையின்மூலம் அதிகரிப்பதை உணர்த்துகின்றது.

இன்று திருநங்கையர் சிக்கல்கள் பல எதிர்கொண்டாலும் சாதனைகள் படைக்கத் தவறுவதில்லை.

2.7 தொகுப்புரை

'தமிழ்ப் புதினங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும் இயலின்கண் அமையும் முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

பல்வேறு புறக்கணிப்புகளுக்கு ஆளாகும் திருநங்கையருக்கு அவர்களின் தோழமை வட்டமும் குடும்ப சமூக உறுப்பினர்களில் சிலரும் அன்பையும், ஆதரவையும் கொடுக்கின்றனர்.

திருநங்கையருக்கு வாழிடச் சிக்கல்கள் துவங்கி பணியிடங்கள், பயணங்கள் போன்றவற்றிலும், உறவு நிலைகளுக்குள்ளும் பல சிக்கல்கள் நேர்கின்றன.

திருநங்கையர் காதல், திருமணம் என இருவேறு தளத்திலும் ஏமாற்றம் அடைகின்றனர். இதனால் அவர்கள் தங்கள் உணர்வுகளை மறுதலிக்கும் போக்குகள் புதினங்களில் காணப்படுகின்றன.

குடும்பமும், சமூகமும் புறக்கணிப்பதால் போராட்டங்களை எதிர்கொள்வதே திருநங்கையரின் வாழ்வாகின்றது.

பல போராட்டங்களைத் தாண்டி சாதிக்கும் திருநங்கையரின் போக்குகள் குறித்தும் புதினங்களில் பதிவாகியிருக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. தோழி (சிற்றிதழ்), 1-5-2015, ப. 77.
2. மேலது., ப. 77.
3. சு.சமுத்திரம், வாடாமல்லி, ப. 121.
4. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள், ப. 125.
5. பிரியாபாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 100.
6. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 121.
7. மேலது., ப. 121.
8. மேலது., ப. 276.
9. ஆண்டாள் பிரியதர்ஷினி, பக்.121-122.
10. எஸ். பாலபாரதி, அவன் - அது = அவள், ப. 41.
11. சு. சமுத்திரம், மு.கூ.நூ.,ப. 43.
12. எஸ்.பாலபாரதி, மு.கூ.நூ.,ப. 73.
13. எஸ்.செல்வசுந்தரி, உன்னை விட்டு விலகுவதில்லை, பக்.75-76.
14. பிரியா பாபு, மு.கூ.நூ.,ப. 87.
15. குமாரதேவி, பூமி வசப்படுமே, ப. 71.
16. மேலது., பக்.222-223.
17. பிரியா பாபு, மு.கூ.நூ., ப. 102.
18. வி.கே.டி. பாலன், சொல்ல துடிக்குது மனசு, ப.13.
19. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப.259.
20. பிரியாபாபு, மு.கூ.நூ., பக்.100-101.
21. அழகிரி விஸ்வநாதன், கமலி, ப.77.
22. போந்தூர், கனகசுந்தரம், மாலைகள், ப. 177.
23. மேலது., பக்.178-179.
24. ஆனந்த விகடன், (சிற்றிதழ்) 8-5-201, ப. 18.
25. சு.சமுத்திரம், மு.கூ.நூ., ப. 152.
26. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப. 48.
27. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 187.
28. சு.சமுத்திரம், மு.கூ.நூ., பக்.3-4.
29. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ.,ப. 11.
30. மேலது., ப. 88.
31. குமாரதேவி, மு.கூ.நூ., பக்.69-73.
32. மேலது., ப. 36.
33. மேலது., ப. 28.

34. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.149-150.
35. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., பக்.171-172.
36. குமாரதேவி, மு.கூ.நூ., ப.325.
37. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 138.
38. ஆண்டாள் பிரியதர்ஷினி, மு.கூ.நூ., பக்.119-120.
39. போந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப.162.
40. ஆனந்தவிகடன், (சிற்றிதழ்), 20-04-2011, ப. 96.
41. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப. 74.
42. சு. சமுத்திரம், மு.கூ.நூ., பக்.124-125.
43. பிரியாபாபு, மு.கூ.நூ., ப. 38.
44. பத்மபாரதி, திருநங்கையர் சமூக வரைவியல், ப. 64.
45. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப. 55.
46. மேலது., ப. 97.
47. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 120.
48. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 50.
49. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 68.
50. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 34.
51. வெ. நீலகண்டன், மு.கூ.நூ., ப. 62.
52. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 267.
53. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப. 37.
54. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 32.
55. செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 69.
56. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 152.
57. எஸ்.செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.88-89.
58. மு. அருணாசலம், தமிழ்ச் சிறுகதைகளில் அரவாணிகள், ப. 70.
59. தினத்தந்தி, (நாளிதழ்) 31.10.2017, ப. 4.
60. ஆண்டாள் பிரியதர்ஷினி, மு.கூ.நூ., ப.125.
61. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 61.
62. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 169.
63. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 88.
64. தினகரன், (நாளிதழ்) 10.11.2016, ப.4.
65. ஆண்டாள் பிரியதர்ஷினி, மு.கூ.நூ., ப. 99.
66. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.142-143.
67. போந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப.140.

68. குங்குமம், (சிற்றிதழ்), ஏப்ரல், 2017, ப.19.
69. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 139.
70. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 52.
71. போந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப. 167.
72. ஜூனியர் விகடன் (சிற்றிதழ்) 3.5.2017, ப.23.
73. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 188.
74. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 129.
75. பிரியாபாபு, மு.கூ.நூ., ப. 90.
76. தினமலர் (நாளிதழ்) 21.02.2016, ப.
77. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 176.
78. பிரியாபாபு, மு.கூ.நூ., ப. 22.
79. எஸ்.பாலபாரதி, மு.கூ.நூ., ப. 72.
80. போ. வேல்சாமி (தொ. ஆ), விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், ப.94.
81. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 74.
82. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப. 148.
83. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.101-102.
84. ரேவதி, வெள்ளைமொழி, ப.182.
85. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 185.
86. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 79.
87. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.128-129.
88. தினமலர், (நாளிதழ்) 04.06.2017.
89. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 380.
90. போந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப. 195.
91. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., பக்.121-122.
92. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., பக்.125-126.
93. போந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப.196.
94. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப.259.
95. பிரியாபாபு, மு.கூ.நூ., பக்.100-101.
96. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப.160.
97. குமாரதேவி, மு.கூ.நூ., ப.243.
98. தி.இந்து (நாளிதழ்) 10.07.2017, ப. 12.
99. அழகிரி விஸ்வநாதன், மு.கூ.நூ., ப.72.
100. மேலது., பக்.108-109.

இயல் – 3

தமிழ்ச் சிறுகதை, நாடகங்களில் திருநங்கையர் பதிவுகள்

3.0 முன்னுரை

திருநங்கையரை மையமிட்டு தமிழ்ச் சிறுகதை மற்றும் நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. திருநங்கையரின் மனஉணர்வுகள் குறித்தும், அவர்களின் உரிமைகள் குறித்தும் இப்படைப்புகள் உருவெடுத்துள்ளன. இப்படைப்புகளில் இடம்பெறும் பாத்திரங்களின் கூற்றுமுறைகள் வாயிலாக, திருநங்கையரின் வாழ்வியல் சூழல்களும் அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களும் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. திருநங்கையர் இச்சமூகத்தில் புறந்தள்ளப்படும் நிலையின் சித்திரிப்புகளாகப் படைக்கப்படுகின்றனர். திருநங்கையர் மனதின் அவலக் குரல்களையும் ஓங்கி ஒலிக்கும் அவர்களின் கலகக் குரல்களையும் ஆய்விற்கான சிறுகதை நாடகங்களில் பரவலாகக் காண முடிகின்றன. திருநங்கையரைத் தவறான பார்வையிலேயே கட்டமைக்கும் சமூகக் கருத்தியலை முறியடிக்கும் பணியினை ஆய்வுப்படைப்புகள் செவ்வனே செய்கின்றன. திருநங்கையரின் வாழ்வியல் போராட்டத்தினை அவர்களின் உணர்வுகள் சார்ந்தும், உரிமைகள் சார்ந்தும் என இருவேறு தளங்களில் பகுத்து, சிறுகதை நாடகத் தரவுகள்வழி இவ்வியல் ஆராய்கின்றது.

3.1 திருநங்கையர் சிறுகதைகளின் கதைச்சுருக்கம்

இவ்வாய்விற்குத் திருநங்கையர் குறித்த இருபது சிறுகதை, ஐந்து நாடகம் உட்படுத்தப்படுகின்றன.

வ. எண்	சிறுகதை	ஆசிரியர்	வெளி வந்த ஆண்டு
1.	கோமதி	கி.ராஜநாராயணன்	1960
2.	மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து	இரா.நடராசன்	1996
3.	வக்கிரம்	பாவண்ணன்	1997
4.	இப்படியும்	சுதா	2003
5.	கள்ளிப்பூ	அருணா	2003
6.	தொலைந்த முகம்	ஆஷா பாரதி	2004
7.	கூத்தாண்டவன்	ரமேஷ் பிரேம்	2006
8.	ஆச்சிமுத்து	திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்	2008
9.	ஊர்களில் அரவாணி	ம.தவசி	2008
10.	ஓட்டம்	கி.ராஜ நாராயணன்	2008
11.	ஊமங்காடை	இலட்சுமணப் பெருமாள்	2009
12.	நாயிவாயிச்சீல	மு.ஹரிகிருஷ்ணன்	2010
13.	பால் ஊனம்	த.சுபத்ரா	2011
14.	நீளும் கனவு	கவின்மலர்	2011
15.	துலாமுள் இச்சை	ராஜசுந்தரராஜன்	2012
16.	அகநங்கை	ஆசு	2013
17.	வனம்புகுதல்	எஸ்.அர்ஷியா	2014
18.	சாமியைக் காணவில்லை	பரிக்கல் ந.சந்திரன்	2016
19.	தோழி	கு.கார்க்கி	2016
20.	தேடல்	என்.ஸ்ரீதரன்	2017

3.1.1 கோமதி

கோமதி ஆணாக இருந்தாலும், பெண்களின் கூட்டத்தோடும், அவர்களின் இயல்புகளோடும் காணப்படுகிறான். நன்றாகப் பாடுவான். சமையல் செய்வான். பெண்களும் அவனை வித்தியாசம் பாராது நன்றாகப் பழகுகின்றனர். ரகுபதி நாயக்கர் வீட்டிற்குச் சமையல் வேலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அங்கு சுலோவோடும் மற்ற பெண்களோடும் கலந்துரையாடுகின்றான். சுலோவின் அண்ணன்

ரகு ஊரிலிருந்து வருகிறான் என்பதைக் கேள்வியுற்று அவனுக்குப் பிடித்தமானதைச் சமைத்து அளிக்கின்றான். கோமதியின் செயல்பாடுகள் ரகுவிற்கு வெறுப்பை ஏற்படுத்த, கன்னத்தில் அறைந்து விடுகிறான். கோமதி மனமுடைந்து தன் அறைக்குச் சென்று விடுகிறான். பின் ஊருக்குச் செல்லும் வேளையில் ரகு கோமதிக்கு பூக்களையும், கருப்பு வளையல்களையும் பரிசாகக் கொடுக்கிறான். அன்று இரவு சுலோ, கோமதி அறையை எட்டிப் பார்க்கிறாள். அங்குச் சேலையுடுத்தி பூக்களைச் சூடி, வளையல்களை அணிந்து அழுது கொண்டிருக்கும் ஒரு பெண்ணாகக் கோமதியை காண்கிறாள். அது கோமதி என்று தெரிந்து திகைப்பு அடைகின்றாள்.

ஒரு திருநங்கைக்குள் இருக்கும் பாலுணர்வின் வெளிப்பாடும், கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பெண்மை உணர்வின் ஊற்றும் இக்கதையின் மையமாகப் பதிவாகி இருக்கிறது.

3.1.2 மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து

கடித உத்தி நடையில் இக்கதை படைக்கப்படுகிறது. மதி என்னும் திருநங்கையின் இறப்பு குறித்து இக்கதை பேசுகின்றது. மதியின் தாய் இறந்தவுடன் மதியின் தந்தை கனகராசு மறுமணம் செய்கிறார். மதிக்குத் தம்பி தங்கை பிறக்கின்றனர். சித்தியின் கொடுமைக்கு உள்ளாகும் மதியைத் தந்தையும் துன்புறுத்துகிறார். உறவினர்களின் வருகையால் பல மணி நேரம் மதி கழிப்பறைக்குள் அடைத்து வைக்கப்படுகிறான். பத்து ரூபாய் கொடுத்து அச்சகம் அழைத்துச் செல்லப்படுகின்றான். அங்குள்ளோரால் பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகி அவமானப்படுத்தப்படுகின்றான். மதியின் தந்தை ஒப்புதலோடு மதி பிற திருநங்கையர்களோடு கடை கேட்கச் செல்கின்றான். சித்தி அந்தப் பணத்தை வாங்கிக் கொள்கிறாள். இத்துடன் அடி உதையும் சூடும் வைத்து கொடுமைப்படுத்துகின்றான்.

கல்லூரியிலும் பலவித இன்னல்களுக்கு மதி ஆளாகிறான். லிங்கத்தானக் கோயிலில் திருநங்கையருக்கான திருவிழாவில் ஆண்களால் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகிறான். ஒரு ஜோதிடனின் பேச்சைக் கேட்டு மதியின் தந்தைக்கு ஆயுள் கூட வேண்டும் என்று மதியை பலியிடத் துணிகின்றனர். மதியின் உடல் உழைப்பை முழுவதுமாய் சுரண்டியவர்கள் அவனுக்கு இனிப்பில் விஷம் கலந்து கொடுக்கின்றனர். உண்மை அறியாத மதி அதைச் சாப்பிடுகின்றான். இறக்கும் தருவாயில் குடும்ப உறவுகள் அவனைச் சுற்றி அழுது போலிநாடகம் ஆடுகின்றனர். ஆனால் மதிக்கு ஒருநாள் உடல்நிலை சரியில்லாதபோது, அவனது தோழிகளான வசுதாவும், காஞ்சனையும் அழுது கதறுகின்றனர். திருநங்கையர் சமூகத்துக்குள் இருக்கும் உண்மை உறவும், பாசமும் அவர்களைப் பெற்ற குடும்பத்தினருக்கு இருப்பதில்லை. மதி இறக்கிறான். இடுகாட்டிலும் ஒரு ஆணை எரித்த பின்பே திருநங்கையான மதியை இடுகாட்டின் ஒரு மூலையில் எரிக்கின்றனர். இறுதியில் மருத்துவர் கொடுக்கும் இறப்புச் சான்றிதழில் விஷம் அருந்தி சுயநினைவு இழந்து மதி இறந்துவிட்டான் என்று எழுதப்பட்டிருக்கிறது. மதியின் ஆன்மா இறுதியில் அவனின் தாயின் ஆன்மாவுடன் பேசுவதாகக் கதை முடிகிறது.

திருநங்கையரின் உடல் உழைப்பைச் சுரண்டும் குடும்பம் குறித்தும்,சமூக விளிம்பில் போராடும் திருநங்கையரின் அவல வாழ்வு பற்றியும், ஆயுள் அதிகரிக்க வேண்டுமென்ற மூடநம்பிக்கையின் உச்சக்கட்டமாக திருநங்கையின் உயிர் பறிக்கப்படுவதையும் இக்கதை சித்திரிக்கின்றது.

3.1.3 வக்கிரம்

‘சந்தத் தோப்பு’ எனும் இடத்தில் திருநங்கையர் மேடையில் நடனம் ஆடி காசு கேட்கின்றனர். அவர்களை அங்கிருக்கும் ஆண்களில் சிலர் வக்கிர புத்தியோடு

அணுகி பாலியல் சீண்டல் செய்கின்றனர். இதைப் பார்க்கும் மோர் விற்கும் முதிய பெண்மணி திருநங்கையரிடம் தவறாக நடந்து கொள்ளும் ஆண்களைக் கடுமையான சொற்களால் சுடுகின்றார். திருநங்கையர்கள் அம்மூதாட்டிக்குத் தங்கள் கண்களால் நன்றி கூறுகின்றனர். வக்கிரபுத்தி ஆண்கள் அவ்விடத்தைவிட்டு செல்வதோடு கதை நிறைவுகிறது.

'மாறிய பாலினர்' என்பதால் ஆண்கள் வக்கிர புத்தியோடு திருநங்கையரை அணுகுவதும், அவர்களை இழிவாக நோக்குவதும் பாலியல் சீண்டல்கள் புரிவதும் இக்கதையின் மையமாக பதிவாகியிருக்கிறது.

3.1.4 இப்படியும்

இருபத்து ஆறு வயதான திருநங்கை பாபு, இயந்திர வாகனங்களைப் பழுது நீக்கிடும் வேலை செய்கிறான். அவன் வேலை பார்க்கும் கடை எதிரே மளிகைக்கடை வைத்திருக்கும் கதிர்மீது காதல் கொள்கிறான். கதிருடன் பேசும் வாய்ப்பிற்காகக் காத்திருக்கிறான். கதிர், பாபுவிடம் ஒருநாள் பேசுகிறான். பின் மாலை ஆறு மணிக்கு, கடற்கரைக்கு வா, பேச வேண்டும் எனப் பாபுவிடம் கூறுகிறான். மாலை இருவரும் சந்தித்துப் பேசுகின்றனர். பாபு கதிரை விரும்புகின்றான். கதிர் ஒரு மாதம் கழித்து பாபுவிடம் வந்து தனக்குத் திருமணம் என்று அழைப்பிதழையும் அத்துடன் கடிதமொன்றையும் கொடுக்கிறான். இக்கடிதத்தை என் திருமணத்தன்றுதான் நிச்சயம் படிக்க வேண்டும் என்று கண்டிப்புடன் கூறிச் சென்று விடுகிறான். பாபு அழைப்பிதழைக் கண்டு வருத்தமுற்று கதிரைத் திட்ட முயல்கிறான். திருமணநாளன்று பாபு ஒரு பரிசுப் பொருளோடு கதிரின் திருமணத்திற்குச் செல்லத் தயாராகும் போது கதிர் தற்கொலை செய்து கொண்ட செய்தி தெரிய வருகிறது. கதிர் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கிறான். கதிர் பாபுவின் மேல் உள்ள காதலாலும், கதிரின்

பணக்காரத் தந்தை ஏற்கமாட்டார் என்பதாலும், தற்கொலை செய்து கொண்டதைக் கடிதம் வழியாக உணர்த்துவதுடன் கதை முடிகிறது.

ஒரு திருநங்கைமீது கொண்ட காதலால் உயிர்விடும் ஒரு ஆணின் உண்மை உள்ளத்தை இக்கதை படம்பிடித்துக் காட்டுகின்றது.

3.1.5 கள்ளிப்பூ

திருச்செங்கோட்டிற்குத் தெற்கே 'சுள்ளிக்காடு' எனும் வறட்சி மிகுந்த கிராமத்தில் பெற்றோருக்கு மூன்றாவது மகனாகக் கள்ளி பிறக்கிறான். பத்தாம் வகுப்பில் முதலிடம் பெறுகிறான். தான் அவன் அல்ல, அவள் என்பதை கள்ளி உணர்கிறான். பதினொன்றாம் வகுப்பில் வேதியியல் ஆசிரியர் உலோகம் அலோகம் பற்றிப் பேசிய பேச்சினால் மனம் பாதிக்கப்படுகிறாள். தன் பதினைந்து வயதுவரை குடும்பத்துடனும் பள்ளியுடனும் இணைந்திருந்த கள்ளி அதைவிட்டு வெளியேறுகிறாள். கள்ளியைப் போல் உள்ள திருநங்கையருடன் சென்னை செல்கிறாள். பின் மும்பைக்குச் செல்கிறாள். அங்கு பாலியல் தொழில் செய்கிறாள். அது பிடிக்கவில்லை எனக்கூற, அங்குள்ள திருநங்கையரின் அடி,உதை, சூடு, மிரட்டல், ஆபாச வார்த்தைகளுக்கு அஞ்சி பூனே செல்கிறாள். அங்கும் பாலியல் தொழில் புரிகிறாள். அவள் சக தோழியர் இருவருக்கும் பால்வினை நோய் வர, விடுதியில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். அவர்களுக்காகத் தானும் அந்தத் தொழிலைவிட்டு வெளியேறுகிறாள். பின் கள்ளி, கள்ளிப் பூக்களான திருநங்கையர் சமூகத்திற்காகப் பாடுபடுவதுடன் கதை முடிவுறுகிறது.

திருநங்கையர் செய்யும் பாலியல் தொழிலால் பால்வினை நோய்க்கு ஆளாகி, வருந்தி உயர்விடுவது குறித்தும், பாலியல் தொழிலில் ஈடுபடுவோரை மீட்டெடுக்கவும்,

திருநங்கையர் சமூகத்தை நல்வழியில் நிலைநாட்டவும் போராடும் 'கள்ளியின் வாழ்வியல் போராட்டம்' குறித்தும் இக்கதையின் மையம் அமைந்திருக்கின்றது.

3.1.6 தொலைந்த முகம்

சக தோழி செல்வியின் இறப்பு பற்றியும் செல்விக்கும் தனக்குமான தோழமை உறவு பற்றியும் திருநங்கையான ஆஷா பாரதியின் கூற்றாக இக்கதை விரிகின்றது. திருநங்கை பெற்றோருக்கு ஆறாவது பிள்ளை. தாய் இறந்ததும் சித்தியின் கொடுமைகளுக்கு ஆளாகிறாள். அக்காவைப் பெண் பார்க்க வருமிடத்தில் கழிப்பறைக்குப் பக்கத்தில் அடைத்து வைக்கப்படுகிறாள். அவளின் உண்மைநிலை அறிந்து அக்காவின் திருமணம் தடைப்படுகிறது. இதனால் சித்தி சூடு போடுகிறாள். பின் வீட்டைவிட்டு வெளியேறி தேநீர்க் கடைக்கு வேலைக்குச் செல்கின்றாள். அங்கும் ஆண்களாலும் பெண்களாலும் அவமானங்களுக்கும் பாலியல் சீண்டலுக்கும் உள்ளாக்கப்படுகின்றாள். பின் செல்வியைச் சந்திக்கிறாள். இருவரும் ஒரே கடையில் வேலை செய்கின்றனர். அங்கு வரும் ஆண்களின் கொச்சைப் பேச்சிற்கு, செல்வி ஆளாகிறாள். அந்தத் தேநீர்க் கடையின் பொருள் வழங்குபவரால் (சரக்கு மாஸ்டரால்) வன்புணர்வுக்கு ஆட்படுத்தப்படுகின்றாள்.

பின் முதலாளியால் கடையை விட்டு இருவரும் வெளியேற்றப்படுகின்றனர். பின் இருவரும் திருநங்கையர் சிலரைச் சந்தித்து அவர்களின் இருப்பிடம் அடைகின்றனர். லட்சுமி என்ற மூத்த திருநங்கை இருவரையும் ஆதரிக்கின்றாள். வேலையின்மையின் காரணமாகக் கைதட்டி கடைகேட்டுப் பிழைக்கின்றனர். லட்சுமி அம்மாவிடம் நிர்வாணம் செய்திடக் கோரிக்கை வைக்கின்றனர். அவள் ஓராண்டு போகட்டும் என்கிறாள். செல்வி முன்கோபம் கொள்கிறாள். மும்பையிலிருந்து வந்த தீபாவின் வார்த்தைகளால் கவரப்பட்டு இருவரும் அவளுடன் மும்பை செல்கின்றனர்.

அங்கு ஆண்களின் பாலியல் வக்கிர உணர்வுகளுக்கு வடிகாலாய் மாறுகின்றனர். செல்விக்குப் பால்வினை நோய் வருகின்றது. அங்கு அவர்களது சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, பின் லெட்சுமியை நாடி வருகின்றனர். சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் செல்வி இறக்கிறாள். அவளது சடலத்தை இடுகாட்டில் தூக்க மறுத்ததால் சடலத்தைக் கொண்டு சென்ற தொண்டு நிறுவன ஊழியர்களே எரித்து விடுகின்றனர். கண்ணீருடன் அவள் தோழி நிற்பதுடன் கதை முடிவுறுகிறது.

திருநங்கையர் பால்வினை நோயால், அவதியுறுவதும், அவர்கள் இறந்தபின் சடலத்தைக் கூட பிறர் தொட மறுப்பதுமான அவல நிலையினை இச்சிறுகதை எதார்த்த உணர்வோடு கூறுகின்றது.

3.1.10 ஓட்டம்

வேம்புலுவிற்குக் குறிப்பிட்ட பருவத்தில் பெண்மை உணர்வுகள் மேலிடுகின்றன. உடலில் மாறுபாடுகள் தெரியத் துவங்குகின்றன. வீட்டின் நிலைக்கண்ணாடியில் தன் அழகைக் கண்டு இரசிக்கிறான். அவனின் உடல் மாற்றத்தால் வேம்புலுவின்மீது அவனின் அப்பா எரிச்சலுறுகிறார். அவனது அண்ணனும் தங்கையும் பேச்சிலும் விளையாட்டிலும் அவனைச் சேர்த்துக் கொள்வதில்லை. வேம்புலு தன் நண்பனைப் பார்க்கச் செல்கிறான். அங்கு அவன் இல்லாது திரும்புகிறான். தன் பெண்மை உணர்வால் குடும்ப உறவுகளைத் துண்டித்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறுகிறான். கோவில்பட்டி தீர்த்தத் திருவிழாவிற்குச் செல்கிறான். அவன் தேடிவந்த வீட்டு முகவரி மறந்துபோக அங்கிருக்கும் இளைஞர்களின் உதவியால் வேம்புலு அவ்வீட்டைக் கண்டுபிடிப்பதுடன் கதை முடிகிறது.

பாலின மாறுபாட்டின் காரணமாகத் தன் வீட்டை விட்டும், ஊரை விட்டும் வெளியேறும் திருநங்கையர் வாழ்வும், குடும்பத்தினர் திருநங்கையரின் உடல் மாற்றத்தினை விரும்பாத போக்கும் இச்சிறுகதையில் குறியீடாக்கப்படுகின்றன.

3.1.9 ஊர்களில் அரவாணி

வில்வநாதன் – குஞ்சரத்திற்குப் பிறந்த நான்கு ஆண்மகன்களில் மூன்றாவது குழந்தை லிங்கம். லிங்கம் பள்ளிப்படிப்பு வராததால் மாடு மேய்க்கச் செல்கிறான். லிங்கத்திற்குப் பெண்மை உணர்வுகள் அதிகரிக்கின்றன. பெண்களோடு விளையாடுகிறான். ஒருநாள் தன் அம்மாவின் உடைகளை அணிந்து அழகு பார்ப்பதை அம்மா பார்த்து விடுகிறாள். அவன் அப்பாவாலும், அண்ணன் சேதுவாலும் கொடுமைகளுக்கும், கண்டிப்பிற்கும் ஆளாகிறான். குடும்பம் வெறுக்கிறது. லிங்கம் ஆடு, மாடு, பறவைகளுடன் நேசம் கொள்கிறான். அவனுக்குப் பொண்டுகச் சட்டி என்று அழைக்கப்படும் திருநங்கை பாலுவின் நட்பு கிடைக்கிறது. அவர் மூலம் கோபால் என்ற திருநங்கையின் உறவும் கிடைக்கிறது. மூவரும் சந்தைக்குச் செல்கின்றனர். லிங்கத்திற்குப் பவுடர், பொட்டு, ரிப்பன் என, பெண்கள் பயன்படுத்தும் அலங்காரப் பொருட்களை வாங்கிக் கொடுக்கின்றனர். பின் கோபாலுடன் கூவாகத் திருவிழாவிற்கு லிங்கம் செல்கிறான். அங்கு அரவானுக்குத் தாலிக்கட்டிக் கொள்கிறான். முதலிரவு சடங்குமூலம் கன்னிமை கழிகிறான். மறுநாள் நடக்கும் தாலி அறுப்பு நிகழ்விலும் கலந்து கொள்கிறான். அரவான் பற்றிய கதைகளை ஏற்கனவே கோபால் கூற அறிந்து கொள்கிறான். கூவாகத் திருவிழாவில் ஆண்கள் திருநங்கையர்மீது நடத்தும் பாலியல் வன்புணர்வுகளையும் சீண்டல்களையும் கண்டு மனம் நோகிறான். கூவாகத் திருவிழா முடிந்ததும் கோபாலுடன் வீட்டிற்குத் திரும்புகிறான். அவனது அண்ணன் சேது, லிங்கத்தின் மண்டையை உடைக்கிறான்.

தந்தையாலும், அண்ணனாலும் தாக்கப்பட்டு, குடும்பத்தைவிட்டு வெளியேற்றப்படுகிறான். அவனது அம்மா அழுகிறாள். பின் பாலு, கோபால் இருவருடன் இணைந்து லிங்கம் ஊரை விட்டுச் செல்கின்றான்.

பாலின மாற்றத்தால் வீட்டை விட்டு வெளியேற்றப்படும் திருநங்கையின் வாழ்வியல் பதிவுகளும், கூத்தாண்டவர் திருவிழா பற்றிய விரிவான கூறுகளும் இச்சிறுகதையின் மையமாக அமைந்திருக்கின்றன.

3.1.12 நாயிவாயிச் சீல

அபிராமி, துளசி என்னும் இரு திருநங்கையரின் வாழ்வியல் போராட்ட நிலைகளை எடுத்துக்கூறுவதாக இக்கதை அமைகிறது. அபிராமியின் வாழ்வு நிலையைத் துளசி கதைப்போக்காக எடுத்துரைக்கிறாள். அபிராமி தாயாம்மா நிர்வாணம் செய்தவள். அழகும் திறமையும் பெற்றவள். அபிராமியும் துளசியும் ஒரு சாமியாரிடம் கூத்துப்படித்து ஊர் ஊராக ஆடிப்பாடி சம்பாதிக்கின்றனர். கவுண்டர் வீட்டுப் பையனை அபிராமி திருமணம் செய்து, அவன் வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு அவள் கணவனின் அம்மாவின் இடித்துரைக்கும் பேச்சினால் இருவரும் பிரிகின்றனர். அபிராமி ஒருநாள் தன் கணவன், பெற்ற தாயுடன் உறவு கொள்வதைப் பார்த்து விடுகிறாள். அவனின் தாயைப் பழிக்கிறாள். மறுநாள் அவனின் தாய் விஷம் கலந்த பன்றிக்கறி உணவைக் கொடுத்து அபிராமியைக் கொன்றுவிடுகிறாள். அபிராமி ஊராருக்குத் தெரியாமல் சிதையூட்டப்படுகிறாள். அபிராமியின் இரங்கத்தக்க இந்நிலையினைத் துளசி கூறிச் செல்கிறாள். துளசி கூத்திற்கான முன்பணத்தை வாங்கிக் கொண்டு 'தாயம்மா நிர்வாணம்' செய்யச் செல்கிறாள். அங்கு சக கலைஞர்கள் சென்றுவிட்டமையால் செய்வதறியாது நிற்கிறாள். காவல்துறை ஏட்டு இவளைப் பாலியல் உறவு வைத்துக் கொள்ள அழைக்க அங்கு அவனோடு உணவு

உண்டு, மது அருந்துகிறாள். ஏட்டு துளசியைப் புணரும் போது அவள் 'திருநங்கை' என்பதை அறிந்து கொண்டு அடித்து உதைத்து ஆண் குறியிலேயே தாக்குகின்றான். பின் துளசி, மருத்துவரிடம் சென்று தனக்கு ஒவ்வாத ஆணுறுப்பை அறுவை மருத்துவம் மூலம் நீக்குவதுடன் கதை நிறைவுறுகிறது.

திருநங்கையின் நிச்சயமற்ற திருமண வாழ்வு குறித்தும், அவர்கள் ஆணுறுப்பை நீக்க மேற்கொள்ளும் மருத்துவ முறைகளின் துன்பங்கள் குறித்தும் இக்கதை முன்மொழிகின்றது. திருநங்கையரின் வாய்மொழி வழக்குச் சொற்கள் (கவுடி மொழிச் சொற்கள்) இக்கதையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

3.1.13 பால்ஊனம்

ரவி, வினயா இருவரும் வேலைக்குச் செல்லும் தம்பதியினர். வினயா கருவுறுகிறாள். கருவைக் கலைக்க எண்ணுகிறாள். ரவி அவள் குழந்தைக்குத் தாயாக வேண்டும் என எண்ணுகிறான். அவளின் சம்மதத்துடன் பத்மினி என்ற மனநல ஆலோசகரிடம் ஆட்படுத்துதலுக்கு (கவுன்சிலிங்கிற்கு) அவளை அழைத்துச் செல்கிறான். மருத்துவர் பத்மினி ஒரு திருநங்கை. தாய்மையின் மகத்துவத்தை வினயாவிற்கு உணர வைத்து குழந்தையைப் பெற்றெடுக்க வினயாவை வழிப்படுத்துகிறாள். தாய்மையின் சிறப்பைத் தாய்மைக்காக ஏங்கும் ஒரு திருநங்கையின் வாய்மொழி வார்த்தைகள் மூலம் இக்கதை எடுத்துரைக்கின்றது.

திருநங்கையர்கள் கல்வி கற்று உயர்ந்த பதவிகளுக்கு வரவேண்டுமென்பதும் குழந்தைப் பேறுக்காக ஏங்கிடும் அவர்களின் ஏக்க உணர்வுகளும் இக்கதையில் பத்மினிமூலம் தெரிவிக்கப்படுகின்றன.

3.1.15 துலாமுள் இச்சை

வடிவேலு என்ற வடிவு சுரேஷிடம் பழகுகிறான். உடல் அளவில் அவனுடன் இணைகிறான். தான் திருநங்கை என்ற போதும் தன் பெற்றோருக்காக அமுதாதவைத் திருணம் செய்கிறான். பின் சன்னியாசம் மேற்கொள்கிறான். அமுதா பின் சுரேஷோடு வாழ்கிறாள். இருவரும் குழந்தை வேண்டி கருக்காத்தம்மன் கோவிலுக்குச் செல்கின்றனர். அங்குப் பூசாரியாக வடிவேலுவைச் சந்திக்கின்றனர். அமுதா வடிவேலுவை வெறுக்கிறாள். வடிவேலு ஒரு வருடத்தில் குழந்தை பாக்கியம் வரும் என்று கூறிச் செல்கிறான். குழந்தை பிறக்கிறது. வடிவேலு இறந்துவிட, சுரேஷ் அமுதாவின் ஒப்புதலோடு ஈமச்சடங்கினைத் தன் மகனை வைத்து நிறைவேற்றுகிறான். சுரேஷ் தன் வாழ்க்கை நினைவோட்டமாக திருநங்கை மோகன் என்ற மோகனாவிடம் கூறுவதாக இக்கதை அமைகிறது. ஒரு திருநங்கையின் காதல் உணர்வும், இயலாமை நிலையும் திருநங்கைக்காக மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்கும் இக்கதையின் மையமாக அமைந்திருக்கின்றது.

3.1.15 அகநங்கை

மலர் அமுதன் சிறுவயதிலிருந்தே தன்னைப் பெண்ணாக உணர்கிறான். அக்காவின் உடைகளை அணிந்து அழகு பார்க்கிறான். அம்மாவுடன் சேர்ந்து வீட்டு வேலைகளைச் செய்கிறான். அக்காவின் திருமணத்திற்கு இடையூறு ஏற்படுமோ என அஞ்சி அவனின் அம்மாவே அவனை வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள். சென்னை வந்து தன்னைப் போன்ற திருநங்கைகளைச் சந்திக்கிறான். மலர் அமுதன் 'மலர் அமுதா'வாகிறாள். பிச்சையெடுப்பதை விரும்பாது பூ வியாபாரம் செய்கிறாள். ஒரு இளைஞன்மேல் காதலுறுகிறாள். தன் உள்ளுணர்வை வெளிப்படுத்த இயலாது தவிக்கிறாள். ஒரு நாள் அந்த இளைஞன் தன் புது மனைவியுடன் இருப்பதைக் கண்டு மனம் உடைகிறாள். அப்போது தன்னை 'அம்மா' என்றழைத்து கால்களைத் தழுவி

நிற்கும் முன்பின் அறியாத குழந்தையைப் பாசத்தின் மேலீட்டால் தூக்கித் தழுவுகிறாள்.

ஒரு திருநங்கையின் பெண்மை மற்றும் காதல் உணர்வுகள் குழந்தைப் பாசம் ஆகியன அகநங்கை சிறுகதையில் மலர்அமுதா மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.1.17 வனம்புகுதல்

அர்ஜுன் தன் பாலின மாற்றத்தைப் பள்ளிப்பருவத்தில் உணர்கிறான். அஞ்சுமனாக மாறுகிறாள். பெண்கள் உடை அணிந்து அழகு பார்க்கிறாள். அவளது பெற்றோரின் கண்டிப்பிற்கும் அடி உதைகளுக்கும் ஆளாகிறாள். வீட்டை விட்டு வெளியேறி பல வருடங்களுக்குப்பின் நன்னிலை எய்தி, திருநங்கையருக்கும் மற்றச் சமூக மக்களுக்கும் உதவுகிறாள்.

ஒரு திருநங்கை தன் பாலின மாறுபாட்டால் வீட்டைவிட்டு வெளியேறுவதும் திருநங்கையர் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகக் கல்வி கற்று நன்னிலை எய்திப் பாடுபடுவதும் இக்கதையில் புதுமையான கண்ணோட்டத்தோடு கூறப்படுகின்றன.

3.1.19 தோழி

காயத்ரி அந்தணர் வீட்டுப் பெண். அவளுக்குப் போலியோவால் இளம்வயதில் கால்கள் செயல்தன்மை இழந்துவிடுகின்றன. காயத்ரியின் தந்தை சுவாமிநாதன், ஆச்சாரமானவர். தாய் புவனேஸ்வரி காயத்ரி ஒரே மகள். கண்டிப்பானவள். காயத்ரிக்கு இருபத்து ஏழு வயதாகிறது. வங்கியில் பணிபுரிகின்றாள். ஒருநாள் அவள் வீட்டிற்குத் தாய்மாமா சங்கர்ராமன் அவர் மனைவி கமலாம்பாளுடன் வருகிறார். அவரால் பி.இ. படித்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் ரகுராமனுக்கும் காயத்ரிக்கும் திருமணம் நடைபெறுகிறது. ரகுராமன் காயத்ரியை

உடல்ரீதியாக அணுகிட முதலில் மறுக்கிறான். குடிப்பதும் காயத்ரியை அடிப்பதுமாக அவனது வாழ்க்கை கழிகிறது. தனித்தொழில் துவங்குவதற்குக் காயத்ரியின் நகைகளைக் கேட்கிறான். காயத்ரி தர மறுத்ததால் ரகுராமன் எட்டி உதைக்கிறான். அவளது மூன்று மாத கரு கலைகிறது. மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுகிறாள். காயத்ரியின் உண்மை நிலை அவளது பெற்றோருக்குத் தெரியவருகிறது. சில நாட்கள் சென்றபின் காயத்ரி வேலைக்குச் சென்றிருக்கும் வேளையில் அவள் நகைகளை ரகுராமன் எடுத்துச் செல்கிறான்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் விவாகரத்து கிடைக்கிறது. காயத்ரி வேலை பார்க்கும் அரசு வங்கியில் திருநங்கை ஷர்மிளா பணி அமர்கிறாள். ஷர்மிளா காயத்ரி வீட்டிற்கு வருகிறாள். இருவரும் தோழமை உணர்வுடன் பழகுகின்றனர். பின் இருவரும் தம் வாழ்க்கையினைப் பற்றிப் பகிர்ந்து கொள்கின்றனர். ஷர்மிளா எட்டாம் வகுப்பில் தனக்குப் பாலின மாற்றம் ஏற்பட்டதையும், பெற்றோரால் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதையும், அவளின் நண்பன் கதிரேசன் பணம் கொடுத்து சென்னைக்கு அனுப்பி வைத்ததையும் கூறுகிறாள். பின் சுலக்க்ஷனா என்ற திருநங்கையால் மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டு நிர்வாணம் செய்ததையும் கூறுகிறாள். ‘நீ பெண்ணாக மாறாவிட்டால் எனக்கு ஒரு நல்ல தோழி கிடைத்திருக்கமாட்டாள்’ என்று காயத்ரி கூறியதும் ஷர்மிளா ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறாள். பின் தனக்கு அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவரால் தத்தெடுக்கப்பட்டு, படித்து வங்கித் தேர்வில் வெற்றி பெற்று இந்த ஊருக்குப் பணிக்கு வந்ததாகக் கூறுகிறாள். மும்பையில் கிருஷ்ணகுமாரை விரும்பியதையும், அவனின் பெற்றோரின் கண்டிப்பால் காதலில் பிளவு நேர்ந்ததையும் கூறி வேதனைப்படுகின்றாள். காயத்ரியின் தந்தை மாரடைப்பால் இறந்து விடுகிறார். காயத்ரியின் அம்மாவிற்கு இரத்தக்கொதிப்பு

ஏற்பட்டு படுக்கையில் கிடக்கும் வேளையில் ஷர்மியிடம் காயத்ரியைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு உயிர் துறக்கிறாள். ஊரும் உறவினர்களும் காயத்ரியையும், ஷர்மிளாவையும் தவறாகப் பேசுகின்றனர். ஆண்துணை இல்லாமல் வாழமுடியும் என்ற நம்பிக்கையுடன் காயத்ரி வீட்டில் இருவரும் சேர்ந்து வாழ்ந்து காட்டுகின்றனர்.

ஒரு திருநங்கைக்கும் மாற்றுத்திறனாளிப் பெண்ணிற்கும் இடையேயான ஆழமான ஆத்மார்த்தமான நட்பை இச்சிறுகதை மாறுபட்ட கோணத்தில் வெளிப்படுத்துகின்றது.

3.1.18 சாமியைக் காணவில்லை

மாதவன் நாற்பது வயது தொட்ட திருநங்கை. குடும்பப்பிரச்சனை தீர வேண்டும் என்பதற்காகக் கால்பவுன் தாலியைக் கூத்தாண்டவர் கோவில் உண்டியலில் போட வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றான். கூத்தாண்டவர் கோயிலில் தாலி திருடு போய்விடுகின்றது. மாதவன் கடவுளின்மேல் கோபம் கொண்டு காவலர்களிடம் 'சாமியைக் காணவில்லை' என்று புகார் கொடுக்கிறான். திருநங்கைகளைக் குற்றம் சாட்டுகிறான். இறுதியில் ஒரு திருநங்கைதான் தாலியைக் கண்டெடுத்து காவலரிடம் ஒப்படைக்கின்றாள். மாதவனின் மனசாட்சி அவனைக் கேள்வி கேட்பதோடு கதை நிறைவுறுகிறது. திருநங்கையரின் நேர்மை உள்ளம் இக்கதையில் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. திருநங்கையர் குறித்த சமூகத்தின் இழிவான கண்ணோட்டம் இக்கதையினால் மாற்றப்படுகின்றது.

3.1.20 தேடல்

சுதா தன் கணவனுக்குப் பிறந்தநாள் என்பதால் பாயாசத்துடன் கூடிய உணவை 'டப்பர் வேர்' பாத்திரத்தில் வைத்துக் கொடுக்கிறாள். உணவுப்பை

‘பாத்திரம் பத்திரம்’ என்றும் கூறுகிறாள். பையை வாங்கிக் கொண்டு சுதாவின் கணவன் புகைவண்டியில் வேலைக்குச் செல்கிறான். அங்கு ஒரு பெண்ணின் அழகைக் கண்டு இரசித்து உணவுப்பையை மறந்து விடுகிறான். அங்கு ஒரு திருநங்கை கைதட்டி காசு கேட்கிறாள். அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும் உணவுப்பையை மறந்துவிட்டு இறங்கி விடுகிறான். பின் மனைவியின் வார்த்தைகள் நினைவிற்கு வரவே உணவுப்பையை எடுக்க பிறிதொரு புகைவண்டியில் ஏறிச்சென்று தான்வந்த புகைவண்டியை அடைகிறான். அவசரத்தில் பெண்களுக்குரிய பெட்டியில் ஏறி விடுகிறான். உணவுப்பை அவன் எங்கு தேடியும் கிடைக்கவிலை. முன் சந்தித்த திருநங்கையைச் சந்திக்கிறான். அவள் கைகளில் அவனது பையைக் காண்கிறான். அவன் தனது பை எனக்கேட்டும் கொடுக்க மறுக்கிறாள். பின் தனக்குப் பிறந்தநாள் என்றும், தன் மனைவி சமைத்த உணவு உள்ளே இருக்கிறது என்றும் கூறுகிறான். பின் பையை அவனிடம் கொடுத்துவிடுகிறாள். உடனே அவன் அதில் உள்ள உணவை அவளை உண்ணச் சொல்கிறான். அவள் உண்டுவிட்டு, தன்னைப் புறக்கணிக்கும் இச்சமூகத்தில் தனக்கு உணவு கொடுத்ததற்கு நன்றி கூறித் தன் பெயர் ரேவதி என்று அறிமுகம் செய்துவிட்டுச் சென்றுவிடுகிறாள். தொலைந்த பொருள் கிடைத்த மகிழ்ச்சியிலும் திருநங்கைக்கு உணவிட்ட நிறைவிலும் அவன் செல்கிறான்.

திருநங்கையரை சக மனிதராக ஏற்கும் சமூகத்தினரின் மனநிலையும், அன்பிற்கு ஏங்கும் திருநங்கையரின் உள்ளத் துடிப்புகளையும் இக்கதை எடுத்துரைக்கின்றது.

3.1.7 கூத்தாண்டவன்

பொதுக்கழிப்பறையில் தூக்கில் தொங்க இருக்கும் மணிகண்டனைத் தடுத்து நிறுத்துகிறார் உயர்நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர் ஒருவர். தன்னைக் காவலர்

எனக்கூறி அவனைப் பற்றிய விவரம் கேட்கிறார். தனது ஊர் திருக்கோவிலூர் என்றும் தனக்கு இருபத்து இரண்டு வயது என்றும் தனக்கு அம்மா மற்றும் தங்கை இருப்பதாகவும் கூறுகிறான். மணிகண்டன் தன்னுடைய அப்பா வருடாவருடம் கூத்தாண்டவர் கோவிலுக்குப் பெண் வேடமிட்டு நேர்த்திக்கடன் செலுத்துபவர் என்கின்றான். ஒருமுறை அவ்வாறு சென்றவர் திரும்பி வரவேயில்லை, அங்கு வந்த திருநங்கை ஒருத்தியின் அழகில் மயங்கி அவளுடன் மும்பை சென்றுவிட்டதாகத் தகவல் வந்ததைக் கூறுகிறான். அப்பா செய்த பூ வியாபாரத்தை அம்மா செய்து வருவதாகக் கூறுகிறான். மணிகண்டன் பத்தாம் வகுப்புத் தேர்வில் தோல்வியுற்று, கட்டிட வேலை செய்கிறான். அவன் தங்கை எட்டாம் வகுப்புத் தேர்வில் தோல்வியுற்றவள். மணிக்குக் கட்டிட வேலை பார்க்கும் இடத்தில் ஒரு நண்பன் கிடைக்கிறான். அவனை மணிகண்டன் குடும்பத்திற்குப் பிடித்துவிட அவனின் தங்கைக்குத் திருமணம் செய்ய எண்ணுகின்றனர். மணிகண்டனின் நண்பனும் அவனின் தாயும் முறையற்ற உறவினை மேற்கொள்கின்றனர். இதை அறிந்த மணி பதற்றம் அடைகிறான். மணியின் தாய் அவனிடம் மன்னிப்பு கேட்டுக் கதறி அழுகின்றாள். இவ்வாறு மணி கூற, மணியின் வாழ்க்கைக் கதையினைக் கேட்ட மனிதர் தான் ஒரு பள்ளி ஆசிரியர் எனக் கூறுகிறார். மேலும், மணிகண்டன் தன்னைப் பெண்ணாக உணர்ந்ததால் தானும் நண்பனுடன் உடல் உறவு வைத்ததை அவரிடம் கூறுகிறான். தன் தந்தையைப் போல மும்பைக்கு ஓடிவிட முடியாது, ஊர் உலகம் 'தந்தையைப் போல் பிள்ளை' என்று கேலி பேசும் என்ற அச்சத்தால் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் கூறுகின்றான். தன் முடிவில் மாற்றம் வராது எனவும் மொழிகின்றான். ஆசிரியர் தன் கையில் இருக்கும் நூறு ரூபாயை மணிகண்டனிடம் கொடுக்கின்றார். உன் மனம் மாறும். இதை வைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பிப்

போய்விடு என்றுரைத்துவிட்டுச் செல்கின்றார். மீண்டும் அந்தப் பள்ளி ஆசிரியர் பொதுக்கழிப்பறைக்கு வரும்போது தற்கொலை செய்து கொண்ட மணிகண்டனின் சடலத்தைக் காவல் துறையினர் தூக்கி வருவதைக் காண்கின்றார். சடலத்தின் முகத்தைப் பார்த்து இறந்தது மணிகண்டன்தான் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

ஒரு திருநங்கையாக தன்னை உணர்ந்த மனிதனுக்கு எழும் மனஉளைச்சல் போராட்டத்தின் விளைவால் அவன் தற்கொலை செய்துகொண்டு இறப்பது இக்கதையின் மையமாகும்.

3.2.10 ஊமங்காடை

பொன்ராசுவிற்குத் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது. அவன் தனக்குள் இருக்கும் பெண்மை உணர்வால் உந்தப்பட்டு தன்னை மணமகளைப் போல அலங்கரித்துக் கொள்கிறான். அவனது தாயும், தாய்மாமாவும் ஒருவாறாக அவனைத் தங்கக்கிளி எனும் பெண்ணிற்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். தங்கக்கிளிக்கு, சமையல் செய்வதுமுதல் அனைத்து வேலைகளையும் செய்து கொடுக்கிறான். தங்கக்கிளி ஊர்ப்பஞ்சாயத்துக் கூட்டி அவனிடமிருந்து மணவிலக்கு கேட்கிறாள். அவன், தான் நன்றாக தங்கக்கிளியைப் பார்த்துக் கொண்டதாகக் கூறுகிறான். ஆனால் தங்கக்கிளி அவன் 'ஆண்மை அற்றவன்' எனக் கூறுகிறாள். பின் மணவிலக்குப் பெற்று மறுமணம் செய்து கொள்கிறாள். ஒரு ஆண் குழந்தைக்குத் தாய் ஆகிறாள். அதன் பின்னும் தங்கக்கிளிக்குப் பொன்ராசு வீட்டு வேலைகள் செய்து கொடுத்து அவள் குழந்தையையும் கவனித்துக் கொள்கிறான். ஒருநாள் குழந்தை பாலுக்கு அழ, குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடிச்சென்று தங்கக்கிளியிடம் கொடுக்கிறான். தங்கக்கிளி குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள். பொன்ராசு தனது மார்பினைத் தன்

இரண்டு கைகளாலும் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறான். அவனது செயலைக் கண்டு தங்கக்கிளி கண்ணீர் சிந்துவதோடு கதை நிறைவுபெறுகிறது.

ஒரு திருநங்கைக்குள் இருக்கும் தாய்மை உணர்வின் போராட்ட வெளிப்பாடு இக்கதையின் மையமாக அமைகின்றது.

3.1.14 நீளும் கனவு

சின்னு என்ற பெண்ணும் அனு என்ற திருநங்கையும் நல்ல தோழிகள். அனு, சின்னுவிற்கு மீன் குழம்பு வைத்துப் பரிமாறுகிறாள். சின்னு விரும்பி உண்டு பாயை விரித்துப் படுக்கிறாள். உறக்கத்தில் அனுவிற்கு அவளது இளம்வயது பால்ய நிகழ்ச்சிகள் கனவாக நீளுகின்றன. அனுவின் சிறுவயது பெயர் செந்தில். செந்தில் என்பவன் பள்ளிப்பருத்தில் நண்பர்கள் புகழும் அளவிற்கு அழகானவன். அப்பா, அம்மா, தம்பி என்று மனதிற்கு இணக்கமாகச் சென்ற வாழ்க்கையில் செந்திலின் பெண்மை உணர்வுகள் குறுக்கிட்டுச் சிக்கலை உருவாக்குகின்றன. செந்தில் தன் அப்பாவின் வெறுப்பைப் பெறுகிறான். விழித்தபின் கனவென உணர்கிறாள். மீண்டும் உறக்கத்தில் கனவு காண்கிறாள். பள்ளிப்பருவ வகுப்புத்தோழி பெண்பாலான செல்வி மீதே செந்திலுக்கு நாட்டம் ஏற்படுகின்றது. வகுப்புத் தோழன் சீனு அவளது மாற்றத்தை அறிகிறான். கனவில் சீனு அவனது கைகளைத் தொட, திடுக்கிட்டு விழிக்கின்றாள். தன் பாலியல் விழைவுகளைப் பெண்களைப் போல அடக்கக் கற்றுக் கொள்கின்றாள். செந்திலினின் மனம்விரும்பிய தோழனாக, ஜேம்ஸ் வருகிறான். செந்திலுக்குள் உறைந்திருக்கும் பெண்மையை அறிகிறான். ஜேம்ஸின் மனிதம் அவனை அரவணைக்கின்றது. ஜேம்ஸ் செந்திலுக்கு ஆதரவாக இருக்கிறான். அனு விழிக்கிறாள். சின்னு, அனுவின் கல்லூரிப் புகைப்படத்தைப் பார்க்கிறாள். அதில் அனு தன் முகத்தை மையால் அடித்து வைத்திருக்கிறாள். ஏன்? என்று சின்னு கேட்கிறாள்.

பழையதை நினைவுபடுத்த வேண்டாம் என்பதால் அவ்வாறு தான் செய்ததாகக் கூறுகிறாள். மீண்டும் உறங்குகிறாள். கனவில் மீண்டும் நண்பர்களையும் பெற்றோரையும் சந்திப்பதோடு கனவு நீள்வதாக கதை நிறைவுறுகிறது.

திருநங்கையரைக் குடும்பம் புறக்கணிப்பது குறித்தும், அவர்களுக்குள் கட்டுப்படுத்தியும் மட்டுப்படுத்தியும் வைக்கப்பட்டிருக்கும் பாலுணர்வு குறித்தும் இக்கதை மொழிந்திருக்கின்றது.

3.1.8 ஆச்சிமுத்து

ஆச்சிமுத்துவை ஊரே தேடுவதாகக் கதை தொடங்குகிறது. ஆச்சிமுத்துவின் அண்ணனும் அவனது நண்பர்களும் ஆச்சிமுத்து செய்த செயலுக்காகக் கொலை வெறியுடன் அவனைத் தேடுகின்றனர். ஆச்சிமுத்துவோ தன் வீட்டில் யாருக்கும் தெரியாமல் தாயைக் காண வருகிறான். தாய் அவனது நிலை கண்டு இரங்கி வருந்துகிறாள். ஆச்சிமுத்துவின் உடலின் மாற்றத்தால் அவனின் அண்ணனின் திருமணம் தடைபடுகின்றது. அவனது தந்தைக்கும் அவமானம் ஏற்படுகிறது. பள்ளிப்பருவத்தில் ஆச்சிமுத்து தன் சகதோழர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆட்படுகின்றான். வளர்ந்த பின் ஊராரின் பாலியல் சீண்டலுக்கும் உட்படுத்தப்படுகின்றான். ஆச்சிமுத்துவின் ஊரில் மேல்தட்டுக் குடியானவர்களின் ஆதிக்கமும், பாகுபாடும் நிறைந்திருக்கிறது. மேல்தட்டுக் குடியானவர்கள் சாதிநிலையில் கீழ்நிலைப் பிரிவில் இருக்கும் பெண்களிடம் தவறாக நடந்து கொள்வதுமுதல், உயிர்ப்பறிப்பு ஈறாக அனைத்தையும் செய்கின்றனர். ஆச்சிமுத்துவை மேல்தட்டுக் குடியானவரில் ஒருவன் பாலியல் உறவுக்கு அழைக்கிறான். கோபமுற்ற ஆச்சிமுத்து அவனது ஆண் குறியைக் கடித்துத் துப்புகின்றான். ஆச்சிமுத்துவின் இந்தச் செயலுக்காக அவனது அண்ணனும் ஊராரும்

கொலை வெறியோடு தேடுகின்றனர். பின் ஆச்சிமுத்து ஊரைவிட்டு வெளியேறி புகைவண்டி ஏறுகிறான். அங்கு நல்ல நிலையில் பணியாற்றும் சந்தியா, ரோசி, ரசிகா ஆகிய திருநங்கையர்களைச் சந்திக்கிறான். திருநங்கையர்கள் சமூகத்திற்கும், சமுதாயத்தவர்க்கும் விழிப்புணர்வு கொடுக்க வேண்டும் என்ற அவர்களது கொள்கைகளைக் கேட்கிறான். அவர்களோடு தன் ஊருக்குச் செல்கிறான். ஆச்சிமுத்து தரப்பு நியாயத்தைக் காவலரின்முன் ஊராருக்குத் திருநங்கையர்கள் எடுத்துக் கூறுகின்றனர். ஆச்சிமுத்துவிற்கு ஊர்ப் பெண்கள் ஆதரவு தருகின்றனர். திருநங்கை சந்தியா மக்களுக்கு விழிப்புணர்வு தருகிறாள். ஆச்சிமுத்து விடியலுக்கான பாதையில் திருநங்கைகளோடு செல்கின்றான்.

சாதி ஏற்றத் தாழ்வுகளினூடே திருநங்கையரின் வாழ்வியல் போராட்ட நிலையையும் எடுத்துரைப்பது இக்கதையின் மையமாகும்.

3.2 திருநங்கையர் நாடகங்களின் கதைச் சுருக்கம்

இவ்வாய்விற்கு ஐந்து நாடகங்கள் உட்படுத்தப்படுகின்றன.

வ. எண்	நாடகம்	ஆசிரியர்	ஆண்டு
1.	மனசின் அழைப்பு	அ.மங்கை, மீனா சுவாமிநாதன் (கண்ணாடிக் கலைக்குழு)	2004
2.	மாற்றம்	கே.ஏ.குணசேகரன்	2004
3.	உறையாத நினைவுகள்	அ.மங்கை, மீனா சுவாமிநாதன் (கண்ணாடிக் கலைக்குழு)	2005
4.	அரவான்	எஸ்.ராமகிருஷ்ணன்	2006
5.	வலி அறுப்பு	மு.இராமசுவாமி	2015

3.2.1 மனசின் அழைப்பு

மகராணி நாட்டு மக்களின் சேமநலன்களை விசாரிப்பதாக நாடகம் துவங்குகிறது. மகராணியைத் திருநங்கையர் சந்திக்கின்றனர். தங்களது வாழ்வியல் போராட்டங்களை எடுத்துரைக்கின்றனர். அடிப்படை உரிமைகள் இல்லாத நிலை குறித்துக் கூறுகின்றனர். வீட்டை விட்டு வெளியே வந்தது குறித்தும், சமூகம் அவர்களை நடத்தும் நிலை குறித்தும் எடுத்துரைக்கின்றனர். மகாபாரதம், இராமாயணம், இதிகாசங்களிலும் வேத ஆகமத்திலும், மொகலாயர் ஆட்சிக் காலத்திலும் தங்களுக்கான வரலாறு குறித்து சொல்கின்றனர். பின்னர் கடை கேட்கச் செல்கின்றனர். அங்கு ஒவ்வொருவரும் கேலி செய்வது பற்றியும், இழிசொற்கள் கூறிப் புறக்கணிப்பது பற்றியும், ஆண்கள் கொடுக்கின்ற பாலியல் தொந்தரவுகள் பற்றியும் நடித்துக் காட்டுகின்றனர். பின் திருநங்கையர் 'ஆட்டம்' ஆடுகின்றனர். அங்கும் அவர்களுக்குப் பாலியல் சீண்டல்கள் நடக்கின்றன. திருநங்கையர் ஒன்று கூடி வாடகைக்கு வீடு தேடுகின்றனர். யாரும் வீடு கொடுக்காதபோது, ஒருவர் வீடு வாடகைக்குக் கொடுக்க முன்வருகிறார். திருநங்கையர் என்பதால் வாடகை இருமடங்காகவும், முன்பணம் அதிகமாகவும் கேட்கின்றனர். இறுதியாகப் புகைவண்டியில் பெண்கள் பெட்டியில் திருநங்கையர் இருக்க, பயணச்சீட்டு பரிசோதகர் ஆண்கள் பெட்டிக்குச் செல்லச் சொல்கின்றார். நாங்கள் பெண்கள் எனக் கூறியும் ஏற்க மறுப்பதால் ஆடை களைந்து நிர்வாணமாய் நிற்கின்றனர். 'உறுப்பால் வளர்ந்ததே உங்கள் பண்பாடெனில் நிர்வாணமாய் அதன் நெஞ்சில் நடக்கின்றோம்' என்று திருநங்கையருக்குச் சிறுமை செய்யும் மனிதர்களை எதிர்ப்பதாய் இந்நாடகம் நிறைவுறுகிறது.

திருநங்கையரை இழிவுபடுத்தும் சமூக நிலைப்பாட்டினையும், திருநங்கையரின் எதிர்ப்புக் குரலினையும் இந்நாடகம் பதிவு செய்கின்றது.

3.2.2 மாற்றம் நாடகத்தின் கதையமைப்பு

திருநங்கையான ஒருவர் தம் வாழ்வியல் கதை கூறுவதாக நாடகம் தொடங்குகின்றது.

ராஜுவின் குடும்பத்தில் அவனது உடல் மாற்றத்தால் சிக்கல் ஏற்படுகிறது. அவனது அண்ணன் அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறான். அவன் மறுப்பதால் அடித்து உதைக்கிறான். ராஜு வீட்டைவிட்டு வெளியேறுகிறான். உடலில் காயத்தோடு இருக்கும் ராஜு தேவியாக மாறி திருநங்கையர் கூட்டத்தோடு சேர்ந்து விடுகின்றாள். ஒரு திருநங்கை கடைகேட்கச் செல்கிறாள். அவளிடம் கடை முதலாளி தவறாகப் பேசுகிறார். அது தெரியாமல் பக்கத்துக் கடைக்காரர் வந்து அந்தத் திருநங்கையின் நடத்தையே தவறு என்று கூறி இருவரும் திருநங்கையைத் தாக்குகின்றனர். அடுத்த காட்சியில் குடும்ப அட்டை வழங்கும் அதிகாரி, நீலு, தேவி, அஞ்சலி ஆகிய திருநங்கையரான மூவரும் சேர்ந்து வாழும் வீட்டிற்கு வருகிறார். அதிகாரி திருநங்கையருக்கு விண்ணப்பப் படிவத்தில் தனிக்கட்டம் இல்லை என்று கூறிப் பெயர்களைப் பதிவு செய்ய மறுக்கிறார். அங்கு திருநங்கையர் இயக்கத் தலைவி வருகிறார். அவளும் அதிகாரியுடன் வாக்குவாதம் செய்கிறாள். அடுத்தகாட்சியில் திருநங்கை ஒருத்திக்கு வயிற்றுவலி ஏற்படுகிறது. பொதுமருத்துவமனைக்கு வருகிறாள். அங்கு ஆண்கள் பிரிவிற்கும், பெண்கள் பிரிவிற்கும் மாறி மாறி அலைக்கழிக்கப்படுகிறாள். அவமானமும், புறக்கணிப்புமே மிஞ்சுகிறது. அடுத்தகாட்சியில் திருநங்கையருக்கான சங்கக்கூட்டம் நடைபெறுகிறது. அதில் திருநங்கையருக்குப் பொது இடங்களிலும், கல்விக் கூடங்களிலும் அரசு தரப்பிலும்

ஏற்படும் சிக்கல்கள் குறித்து விவாதிக்கப்படுகின்றன. பின் மாவட்ட ஆட்சியரைச் சந்தித்துத் தங்கள் சிக்கல்களை எடுத்துக்கூற வேண்டும் என்று முடிவெடுக்கப்படுகின்றது. பெண்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுத்தது போல் திருநங்கையரும் ஒன்று கூடித் தங்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்று கூறுவதுடன் நாடகம் நிறைவடைகின்றது.

திருநங்கையர் தேவையற்ற மரபுகளைக் கைக்கொண்டு கடை கேட்டலிலும், பாலியல் தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலை மாறி அனைத்து உரிமைகளும் திருநங்கையர் பெறுவதற்கு அவர்கள் பாடுபட வேண்டும் என்பதை எடுத்துரைப்பது இந்நாடகத்தில் மையம். திருநங்கையர்கள் பெற வேண்டிய உரிமைகள் சார்ந்து இந்நாடகம் படைக்கப்படுகிறது.

3.2.3 உறையாத நினைவுகள்

நல்ல குடும்பத்தைக் கண்டெடுக்கும் போட்டிக்கான விளம்பரத்தை எடுத்துக் கொண்டு ஈஸ்வரி என்ற திருநங்கை ஓடிவருவது நாடகத்தின் துவக்கமாக அமைகிறது. திருநங்கையர் ஒவ்வொருவரும் தங்களது குடும்பப் புகைப்படத்தினைக் காட்டி தங்களது குடும்ப வாழ்க்கையினை நடித்துக் காட்டுகின்றனர். காட்சி ஒன்றில் கவிதாவின் குடும்பச் சூழல் காட்டப்படுகின்றது. கவிதாவிற்கு அம்மா, அண்ணன் இருவர், தம்பி ஒருவர். கவிதா, வீட்டு வேலைகளில் அம்மாவிற்கு உதவி செய்து கொடுக்கிறாள். படிக்கும் பருவத்தில் பேருந்து நிலையத்தில் ஒரு ஆணுடன் பழகுவது வீட்டிற்குத் தெரிய வருகிறது. அண்ணன்கள் அடிக்கின்றனர். பெண்ணாக மாறிவருவது கண்டு அம்மா வருந்துகிறாள். ஒருநாள் தன் தம்பியைத் திருத்த வேண்டும் என்ற நோக்கில் அண்ணன் இருவரும் கவிதாவை விலைமாதரிடம் அழைத்துச் செல்வதோடு, வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

காட்சி இரண்டில் மாலதியின் குடும்பச்சூழல் காட்டப்படுகின்றது. அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, மாமன்கள், அவர்களுடன் மாலதியை விரும்பும் கர்ணன். மாலதியைக் கர்ணன் விரும்புவதாகக் கூறி அவளுடன் உறவு கொண்டு இறுதியில் தன் நண்பர்கள் முன்னிலையில் அவளை 'நீ பெண்ணில்லை' என்று கூறி, தரக்குறைவாகக் பேசுகின்றான். மாலதியோ தனக்குள் இருக்கும் பெண்மை உணர்வினை பாலியல் இச்சைகளைக் கூறி அழுவதோடு திரை விழுகின்றது.

காட்சி மூன்றில் செல்வத்தின் வீட்டுச் சூழல் காட்டப்படுகின்றது. செல்வத்திற்கு அம்மா, அப்பா, ஒரு தங்கை என்று குடும்பம் இருக்கின்றது. பெண்ணாக இருந்து ஆணாக மாறிய திருநம்பியின் வாழ்வியல் கதை கூறப்படுகின்றது. 'பெண்ணுடை போடு' என்று குடும்பத்தினர் செல்வத்தைத் தொந்தரவு செய்கின்றனர். செல்வத்திற்கோ கட்டான மீசை வைக்கவும், குறுந்தாடி வைக்கவும், ஆணாக மாறவுமே மனதில் ஆசை ஏற்படுகின்றது. பின் திருநங்கையர் வாழும் இடத்திற்குப் பிரியாபாபுவாக வந்து சேர்கிறாள்.

காட்சி நான்கில் பிரியாபாபு, மாலதி, குரு, மேரி பேசிக்கொண்டு தாயம் ஆடுகின்றனர். அப்போது பிரியதர்ஷினியும் தேவியும் வந்து குருபாய்க்கு மரியாதை செலுத்துகின்றனர். தேவி தன் குடும்பத்தில் ஏற்பட்ட சண்டையால் மூன்றாவது முறையாக அங்கு வருகிறாள். அவளைப் பிரியதர்ஷினி தன் மகளாகத் தத்தெடுக்கிறாள். தேவி மற்றவர்களைப் போல் கடை கேட்கச் செல்லாமல் ஒரு நிறுவனத்தில் வேலைக்குப் போவதாகக் கூறுகிறாள். வேலைக்குச் செல்லும்போது தெருவில் உள்ள ஆண்களால் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆட்படுகிறாள். திரை விழுகுகிறது.

காட்சி ஐந்தில் மாலதி, ஈஸ்வரி திருநங்கையர் வாழும் குடும்பச்சூழல் காட்டப்படுகிறது. மாலதி கணவரோடு வாழ்கிறாள். அவன்மீது அளவில்லா அன்பு வைத்திருக்கிறாள். அவனோ, மாலதியிடம் உள்ள பணத்தைப் பறிப்பதிலேயே குறியாக இருக்கிறான். மாலதி தன்கால் கொலுசினை அடகுவைத்து, அந்தப் பணத்தை அவளது அம்மாவின் மருத்துவச் செலவிற்குக் கொடுக்கிறாள். இறுதியில் அவன் அவளைவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்ய முற்படுகிறான். மாலதி ஏமாற்றத்தால் தன் தோழியிடம் அழுது புலம்புகிறாள்.

காட்சி ஆறில் ஈஸ்வரியின் குடும்பச் சூழல் காட்டப்படுகின்றது. அம்மா, அப்பா, மூன்று தங்கைகள். ஈஸ்வரி திருநங்கையாக வீட்டை விட்டு வெளியேறியதும், அவளைப் பார்க்க அப்பா, அம்மா வருகின்றனர். அப்பா துரை குடிகாரர். அம்மா, தன் கணவனது நிலை சரியில்லை என்பதாலும், தனது மற்றப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதாலும், ஈஸ்வரியை அழைக்கிறாள். ஈஸ்வரி மறுத்து, தன் கையில் உள்ள பணத்தையும், பின் பணம் அனுப்பி வைப்பதாகவும் கூறி அவர்களை அனுப்பி வைக்கிறாள். இறுதியில் திருநங்கையர் கூடி வாழும் தற்போதுள்ள குடும்பப் புகைப்படுத்தினை அனுப்ப முடிவு எடுத்து அனுப்பி வைக்கின்றனர்.

திருநங்கையர் அவரவர் குடும்பத்தில் சந்தித்த சிக்கல்களையும், திருநங்கையருக்குத் திருமணத்தில் ஏற்படும் ஏமாற்றங்களையும் முன்மொழிகின்றது இந்நாடகம்.

3.2.4 அரவான் நாடகத்தின் கதையமைப்பு

மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்காய், பலியிடப்பட்ட அரவானின் மனவோட்டங்களாகக் கதை விவரிக்கப்படுகின்றது. பாண்டவர்களின் சுயநலத்திற்கும்

கண்ணனின் தந்திரத்திற்கும் பலியான அரவான் பேசுகிறான். அர்ஜீனனுக்கும் நாககன்னி உலூபிக்கும் பிறந்த மகன் 'அரவான்'. கண்ணனைப் போல, சாமுத்திரிகா லட்சணம் பொருந்தியவன். அதனாலேயே பாண்டவர்கள் அவனைப் பலியிட விழைகின்றனர். கானகவாசியாக ஒதுக்கி வைக்கப்பட்ட அரவான் பாண்டவர்களின் வெற்றிக்காய் வரவேற்றப்பட்டு, உயிர் பறிக்கப்படுவதை வர்க்கப் பிரிவினையின் குறியீடாக இந்நாடகம் முன்மொழிகிறது. அரவானின் ஆசைக்காய், கிருஷ்ணர் பெண்ணாய் மாறி அவனோடு உறவு கொள்கிறார். அரவான் தலைஅறுபட்டதும் யுத்தக்களத்தில் அரவான் உடல்மீது அரவாணியான கிருஷ்ணர் அழுது புரள்வதாகக் கதை கூறப்படுகின்றது. கிருஷ்ணனின் சூதினாலேயே தான் பலியிடப்பட்டதாக அரவான் எண்ணுகின்றான். ஆதிக்கக் குரல்கள் ஓங்கி ஒலிக்க, தாழ்குலத்தோர் என்றுமே அவர்களுக்கு கட்டுப்பட்டு காலங்காலமாக தங்கள் உரிமைகளையும், உயிரினையும் இழக்கும் போக்கு 'அரவான்' நாடகத்தில் பதிவு செய்யப்படுகிறது. சூரியனைப் போல அவர்கள் மௌனமாய் நகர்வதாக நாடகம் முடிகின்றது.

விளிம்புநிலை மக்களின் உயிருக்கு மதிப்பற்ற நிலை இருப்பதனை அரவானின் மனஓட்டமாகக் கூறுவது இந்நாடகத்தின் கருவாக அமைந்திருக்கின்றது.

3.2.5 வலி அறுப்பு நாகடத்தின் கதையமைப்பு

அரவானின் தலை அறுபட்டு, திருநங்கையர் ஒப்பாரிப் பாடும் பாடல் ஒலிக்க, அரங்கின்முன் பாட்டுக்காரனின் குரல் எழ நாடகம் தொடங்குகின்றது. 'தாலி கட்டிய அன்றே தாலியை அறுக்கும் சோகத்தின் உருவாய் வீற்றிருக்கும் இவர்கள் யார்?' என்று கேள்வி எழுப்பப்படுகின்றது. 'மாறிய பாலினர்' குறித்துத் தொல்காப்பியர் கூற்று துவங்கி அறிவியல் வரையிலான விளக்கங்கள்வரை முன்வைக்கப்படுகின்றன. திருநங்கையரின் வாழ்வியல் வலிகளை தீராதவலி, தீர்ந்துபோன வலி, தீர்க்கப்பட

வேண்டிய வலி என மூன்றாகப் பகுத்துக் கூறுகிறது. பெண்மை உணர்வின் மேலீட்டால் தன்னைப் பெண்ணாய் உணர்ந்து உருமாறிய போது பெற்றோர் அடித்து உதைத்து வீட்டைவிட்டு, திருநங்கையரை வெளியேற்றியதைத் 'தீராதவலி' என்று நாடகம் முன்மொழிகிறது. சமூகத்தினரான நாடகப் பாத்திரங்கள் இவர்களின் வலிகளைப் புரிந்து கொண்டு, தீர்ந்துபோன வலியாது? என வினவுகின்றனர். ஆணுறுப்பைக் களைந்ததைத் தீர்ந்துபோன வலியாகத் திருநங்கையர் கூறுகின்றனர். தொடர்ந்து தீர்க்கப்பட வேண்டிய வலியாது? என்று கேட்கும்போது சமூகம் தன்னை அவமதிக்கும் போக்குகள் மாற வேண்டும் என்பதைத் தீர்க்கப்பட வேண்டிய வலியாகக் கூறுகின்றனர். பாலின சமத்துவதையும், திருநங்கையருக்கான அனைத்துவிதமான உரிமைகளையும் கொடுக்க முன்வர வேண்டும் எனும் கருத்தையும் இந்நாடகம் முன் வைத்திருக்கின்றது.

திருநங்கையரின் உளப்போராட்டங்களையும் வாழ்வியல் போராட்டங்களையும் எடுத்துரைத்து, பேதம் ஒழிந்த சமத்துவ சமுதாயம் உருவாக்க மனிதர்கள் ஒன்றுகூட வேண்டும் என்று மொழிவது இந்நாடகத்தின் மையம்.

3.3 உணர்வுப் போராட்டம்

உணர்வுகள் இல்லாது மானுட இனம் இருப்பதில்லை. உணர்வுகள் இல்லையெனில் அவன் மனிதனும் இல்லை. ஒரு மனிதன் பிறப்பது முதல் இறப்பதுவரையிலும் பல்வேறு விதமான உணர்வுகள் அவனை ஆக்கிரமிக்கின்றன. அவ்வாறு எழும் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை எல்லா மனிதர்களுக்கும் சமமாகக் கிட்டுவதில்லை. வர்க்கப் பாடுபாட்டாலும், சாதியப் படிநிலைகளாலும் உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் அரசியல் உருவெடுக்கின்றன. மூன்றாம் பாலினரான திருநங்கையரும் சமூகத்தின் அங்கமான

மானுடங்களே. ஆனால் அவர்களுக்குள் எழும் இயல்பான மனஉணர்வுகளை வெளிப்படுத்துவதில் உரிய சூழல்களை அவர்களுக்கு இச்சமூகம் வழங்குவதில்லை. இச்சமூகத்தினரின் ஒட்டுமொத்த பொதுப்புத்தியின் காரணமாகத் திருநங்கையரின் மனஉணர்வுகளின் வெளிப்பாடு என்பது பெரும் போராட்டமாகவே அமைகிறது.

3.3.1 பெண்மை உணர்வுப் போராட்டம்

தன்னுள் எழுந்திடும் பெண்மை உணர்வுகளுக்கான அடிப்படைக் காரணங்கள் கூடத் திருநங்கையருக்குத் தெரிவதில்லை. பதின்வயதில் ஏற்படும் மாறுபாடுகள் குறித்து திருநங்கையர் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். இயல்பாக எழும் பெண்மை உணர்வுகளைக் குடும்பத்தினரிடமோ வேறு எவரிடமோ கூறுவதற்குத் தயங்கி அஞ்சுகின்றனர். கட்டுப்படுத்த முடியாத பெண்மை உணர்வுகளை அடக்குவதிலும், வெளிப்படுத்துவதிலும் பெரும் போராட்டங்களைச் சந்திக்கின்றனர்.

> **‘‘ஆணாகப் பிறந்து பெண் சார்ந்த அடையாளங்களை இவர்கள் விரும்புகின்றனர் (எ.கா) வளையல் போடுவது, பெண் உடைகளை அணிவது, பூ வைப்பது, நீண்ட முடியுடன் இருப்பது போன்ற செய்கைகளினால் தங்கள் இருப்பிற்கு அடையாளங்களைத் தேடுகின்றனர். சிறுவயதில் ஆண்களிடம் இருக்கும் பெண் அடையாளங்களை ஏற்றுக் கொள்கின்ற சமூகம், பதின்பருத்தில் இவர்கள் ஆண்கள் அல்ல என்று வெளிப்படுத்தும்போது சமூகம் அவர்களைப் புறக்கணித்து இழிவுபடுத்துகிறது. ஆண்களாக வாழமுடியாது என்பதை உணர்ந்து பெண்களாக வாழ முடிவு செய்கின்றனர். உடலளவில், உடையளவில் ஆணாகவும், மனதளவில் பெண்ணாகவும் வாழுகின்ற போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தங்களை அரவாணியர்கள் என்று அறிவித்துக் கொள்கின்றனர்’’**[1]

என்ற ஜெயசீலியின் கூற்று சிந்திக்கத்தக்கது.

ஆய்விற்கான சிறுகதைகளில் அகநங்கை, ஓட்டம், ஊர்களில் அரவாணி, கோமதி, தொலைந்த முகம், வனம்புகுதல் போன்ற சிறுகதைகளிலும் உறையாத நினைவுகள், வலி அறுப்பு ஆகிய நாடகங்களிலும் திருநங்கையருக்குள் எழும் பெண்மை உணர்வுகள் அழுத்தமாகப் பதிவு செய்யப்படுகின்றன.

'அகநங்கை' எனும் சிறுகதையில் அமுதன் மலர் உள்ளத்தில் பெண்மை உணர்வுகள் இயல்பாக மேலிடுகின்றன.

> **''நான் இப்போது ஆணில்லை என்று மன உணர்வில் கிளர்ந்து மகிழ்ச்சியின் கரையில் நின்று எக்காளமிட்டா(ன்) அமுதன் மலர். அவன் பெண்மைக்குரிய உணர்வை கண்டெடுத்த தருணம் அது. எல்லோரும் கிண்டலும் எள்ளலுமாக அவனைத் தூஷித்த போதும், பெண்மைக்குரிய மனஉணர்வுகள் மேலும் மேலும் கிளர்ந்து எழத்தான் செய்தது''**[2]

எனும் சிறுகதை அடிகளில் சமூகம் தன்னை எள்ளி நகையாடும் நிலை அறிந்தும் திருநங்கை உணர்வு சார்ந்த மனப்போராட்டத்தில் சிக்கித் தவிப்பது எடுத்துரைக்கப்படுகின்றது.

ம. தவசி 'ஊர்களில் அரவாணி' சிறுகதையில் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

> **''திரும்ப திரும்ப மார்பை தடவியவன் ஏனோ பெண்கள் மாதிரி தனக்கு அந்த இடத்தில் சதை வளரவில்லையென நினைத்தான்''**[3]

என்னும் அடிகள் திருநங்கையர் விரும்பும் பெண்ணுடலின் ஏக்க நிலையைத் தெரிவிக்கின்றன. உறவுக்காகவும், ஊருக்காகவும் திருநங்கையர் பெண்மை உணர்வுகளை அடக்கி வைத்திருப்பினும், வெளிப்படுத்துவதையே விரும்புகின்றனர்.

''முதல் முதலாக காதில் கம்மல் போட்டு, கையில் கண்ணாடி வளையல்கள் குலுங்க, இருக்கின்ற முடியில் சவுரி வைத்து பின்னி, பூ வைத்து பொட்டிட்டு, புடவைகட்டி, முழுப்பெண்ணாக நின்ற போது சிலிர்த்துப் போனது''[4]

என்ற ஆஷாபாரதியின் 'தொலைந்த முகம்' சிறுகதை அடிகள் பெண்மை உணர்வின் வெளிப்பாட்டுத்தன்மையைக் காட்டுகின்றன. திருநங்கையருக்குள் எழும் மனமகிழ்ச்சி கீழ்வருமாறு தெரிவிக்கப்படுகின்றது.

''இந்தப் பிராயம் அவனைக் குடும்பத்திலிருந்தும், சூழலிருந்தும் ஒரு அந்நியம் ஆக்கிவிட்டது போல உணர்வு நிலைக்கண்ணாடிக்கு முன் போய் நிற்க ஆரம்பித்தால், அங்கிருந்து வசவு வாங்காமல் மீள முடியாது''[5]

'ஓட்டம்' எனும் இச்சிறுகதை வரிகள் குறிப்பிட்ட பருவம் அடையும்போது திருநங்கையருக்கு உண்டாகும் பெண் உடல்மாறுபாட்டின் காரணம் இன்னவென்று அறியாத மனப் போராட்டத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

''வெங்காயத்தை உரிப்பது போல ஏதோ ஒன்று, என்னிடமிருந்து உரிகிறது. உரிய உரிய அப்படியே பெண்ணாக உருமாறுகிறேன். என்னை என்னாலேயே நம்ப முடியவில்லை. அதிர்ச்சியாகவும் இருக்கிறது. ஆனந்தமாகவும் இருக்கிறது. அதிர்ச்சியையும், ஆனந்தத்தையும் கண்ணாடியில் தெரிந்த பெண்ணும் அப்படியே பிரதிபலிக்கிறாள் நீ பெண்ணாக்கும்! என்று அவன் உத்தரவாதப்படுத்தியதும் மழைக்காலத்து வைகை வெள்ளமாய் சந்தோஷம் ஊற்றெடுக்கிறது.''[6]

என்று 'வனம்புகுதல்' சிறுகதை பெண்ணுணர்வின் உச்சநிலையில் சிக்கித் தவிக்கும் திருநங்கையின் மனஉணர்வினைத் தெளிவாக்குகிறது.

'மனசின் அழைப்பு' நாடகத்தில் திருநங்கையருக்கு ஆண் உடைகளில் மனம் ஒட்டாத நிலை பதிவு செய்யப்படுகின்றது.

''டிரவுசருக்கு பதிலா கவுனுவேணும். சட்டைக்குப் பதிலா சுடிதார் வேணும். மேச்சட்டை இல்லாமல் திரிய அய்யய்யோ சீச்சி.... பாவாடை தாவணியில் சிட்டாகப் பறந்து''[7]

எனும் நாடக வரிகளில் திருநங்கையர்கள் ஆணுடைகளைக் களைவதிலும், பெண்ணுடை தரிப்பதிலும் உள்ள போராட்ட நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

தனிமையில் மட்டுமே திருநங்கையருக்குப் பெண்மை உணர்வுகள் சிறகு விரிக்கத் துவங்குகின்றன. இதனை 'வலி அறுப்பு' நாடக வரிகள் மெய்ப்பிக்கின்றன.

''அப்பா அம்மா அன்று வீட்டிலில்லை. கதவைத் தாளிட்டேன்... என் பெண்மையை விரித்துப் பார்க்க போதிய அவகாசம் அன்று கிடைத்ததாய் உணர்ந்தேன். கண்ணாடி என் கவலைக்கு மருந்தானது. அலமாரியில் இருந்த அம்மா புடவையோ பாசத்தால் வாரி என்னைக் கட்டிக் கொண்டது. என்னுலகம் உருவானது..... என்னையே நான் மறந்தேன்... அப்பொழுதான் அப்பா அம்மா கதவைத் தட்டும் சத்தம் இடிபோல என் தலையில் இறங்கியது. என் உலகத்தை அந்த ஒரு நொடிக்குள் பக்குவமாய்ச் சுருட்டி வைக்கத் தெரியாமல் மாட்டிக் கொண்டேன்''[8]

ஒரு பெண்ணோ அல்லது ஆணோ குறிப்பிட்ட பருவ வயதில் அவரவர்களுக்கான உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறு வெளிப்படுத்துவதில் மன மகிழ்ச்சியை அடைகின்றனர். திருநங்கையர் மட்டுமே அவர்களுக்கான பெண்மை உணர்வினை வெளிப்படுத்த இயலுவதில்லை. அவ்வாறு வெளிப்படுத்தினால் அவர்களின் வாழ்க்கைநிலை மிகுந்த போராட்டக்களமாக அமைந்திடும் சூழலும் உருவாகின்றது.

3.3.2 பாலின மாற்ற உணர்வுப் போராட்டம்

திருநங்கையர்கள் தங்களைப் பெண்ணாக முழுமையாக எந்தத் தருணத்தில் உணர்கிறார்களோ அது முதல் அவர்கள் சுமந்திருக்கும் ஆணுடம்பைச் சிறையாகவே எண்ணுகின்றனர். அச்சிறையிலிருந்து தங்களை மீட்பதற்கு உடல் மற்றும் உளரீதியான போராட்டங்களைச் சந்திக்கின்றனர். ஆணுறுப்பைக் களைவதே அவர்களை முழுப்பெண்ணாக மாற்றுகின்றது என எண்ணுகின்றனர். தாயம்மா நிர்வாணத்திற்குப்பின் சீதா எனும் திருநங்கையின் வாய்மொழிக் கூற்று இதனை உணர்த்துகின்றது.

> **''ஆண் உறுப்பு துண்டானதால் கிடைச்ச நிம்மதி எனக்கு ஏற்பட்ட வலியையெல்லாம் காணாம ஆக்கிடுச்சி.... அதோட, மனசுக்குள்ள உறுத்திக்கிட்டிருந்த ஏதோ ஒன்னு என்னை விட்டுப் போயிடுச்சு இப்போ நான் பரிபூரணமா திருநங்கை ஆயிட்டேன்''**[9]

என்று கூறுவதிலிருந்து திருநங்கையர் பாலின மாற்ற உணர்விற்கான போராட்டத்தை எதிர்கொள்வதின் வலிகள் பதிவு செய்யப்படுகின்றன. திருநங்கையர்களுக்குப் பல்வேறு விதமான சிக்கல்கள் வாழ்வில் உருவெடுக்கக் காரணமே அவர்களுள் எழும் பாலின உணர்வுப் போராட்டங்களே! இதனை ஆய்வுத் தரவுகளும் மெய்ப்பிக்கின்றன.

> **''தாயப் பழிச்சமா? தண்ணிய தடுத்தமா? ஏழய அடிச்சமா? எளஞ்சாதம் உண்டமா? எனத்துக்கிந்த ஆண்டவனுக்கு எங்கமேலே இத்தன கூரியம்? கூனுக் குருடு, மொண்டி, மொடம் இப்படி ஒடம்புலவொரு ஒச்சமின்னாக்கூட மயிராச்சி, அதப்பத்தி காரியமில்ல. பாழாப்போன பொறப்புல கோளாறு பண்டி வேடிக்கப் பாக்குதேயந்த நொள்ளக்கண்ணுச்சாமி..... அன்னைக்கியெழுதன எழுத்த பிரம்மன் அழிச்சி எழுதப்போறானா?..''**[10]

என்ற 'நாயிவாயிச் சீல' சிறுகதை வரிகள் தங்கள் படைப்பில் உள்ள குறைபாட்டினை, பால்பிறழ்வினை மாற்றி அமைக்கும் வழியறியாத திருநங்கையர்களின் ஆற்றாமை நிலையினைப் புலப்படுத்துகின்றன.

> **''விடலைப் பருவம் ... அடங்க மறுக்கும் காளையின் பெருமூச்சாய்க் காமம் சீறிக் கிளம்பும் பருவம்! எங்கள் உடலின் தோலுரித்து, உள்ளே பொதிந்து வைத்த ரகசியத்தை அவசரமாய் அம்பலப்படுத்தத் துடிக்கும் பருவம்! எங்கள் ஆணுடலிலிருந்து பெண்மை அத்துமீறிப் போக்கிடம் தேடும் புது உலகில் நாங்கள் புதைந்து போன நேரம்! ஆணுடல் சிறை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தோம்! சிறைக் கம்பிகளை உடைத்தெறிந்து சுதந்திரப் பெண்மையாயப் பறந்து செல்ல போர்த்திய போர்வையை உதறியெறிவது அவசியம் என்பதாய் உடம்பும் மனசும் பாடு பேசின''**[11]

எனும் 'வலி அறுப்பு' நாடக வரிகள் திருநங்கையருக்குள் எழும் பாலின மாற்ற உணர்வால் இறப்பே எதிர்வரினும் அதனைத் துணிச்சலாக எதிர்கொள்ளும் அவர்களின் போராட்ட மனநிலையைத் தெளிவுப்படுத்துகின்றன.

3.3.3 காதலுணர்வுப் போராட்டம்

மானுட பரிணாம காலத்தில் பெண்கள் தங்களுடைய காதல் உணர்வுகளை வெளிப்படையாகத் தெரிவித்தனர். நவீன சமூகம் வளர வளர காதல் உணர்வுகளுக்குக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் தோன்றின. பெண் இனத்திற்கே இச்சிக்கல் எனும் பொழுது திருநங்கையர்கள் பெரும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. அவ்வாறு இருக்க உடலளவில் ஆணாகவும், மனத்தளவில் பெண்ணாகவும் வாழும் திருநங்கையர் தங்கள் காதல் உணர்வை வெளிப்படுத்த முடியாத சூழலே சமூகத்தில் நிலவுகின்றது. திருநங்கையரை விரும்பும் ஆண்கள்

இருப்பதும் அரிதான ஒன்றாகும். திருநங்கை பிரியாபாபு தனக்கான காதல் அனுபவத்தைப் பற்றிக் கீழ்வருமாறு சுட்டுகின்றார்.

> **''ஒரு பையனோடு காதல், கணவன் மனைவி மாதிரியே வாழ்ந்தோம். 'கல்யாணம் பண்ணிக்கோன்'னு கேட்டேன். 'நீ பெண்ணா இருந்தா சொல்லு. நான் தாலி கட்றேன்'னு கழட்டி விட்டுட்டான். வெறுத்துப்போய் மும்பை போயிட்டேன். அங்குதான் நான்இரண்டாவதாகப் பிறந்தேன். அறுவை சிகிச்சை மூலம் பத்மநாபனான நான் முழுமையான பிரியாவானேன்''**[12]

என்று பிரியாபாபு கூறுகிறார். திருநங்கையருக்கு மாறாத காதலும், நிலையான குடும்பமும் கிட்டுவதில்லை. ஆனால் திருநங்கையர் மாறாத காதலையே கொண்டுள்ளனர். பத்மநாபனான, பிரியா தான் காதலித்த ஆணின் பெயரையே தன் பெயரோடு சேர்த்து 'பிரியா பாபு' என்று அழைப்பது குறிப்பிடத்தக்கது.

திருநங்கையர்களுக்கு இயல்பாக எழும் காதல் உணர்வுகள் பெரும் மனப்போராட்டங்களையே உருவாக்குகின்றன. 'அகநங்கை' சிறுகதையில் மலர் அமுதாவின் காதல் போராட்டம் கீழ்வருமாறு அமைந்திருக்கின்றது.

> **''ஆணுக்கும் பெண்ணுக்கும் அடுத்து மூன்றாவது மனுஷிக்கும் அந்த உணர்வுகள் அதாவது காதல் உணர்வுகள் இருக்கத்தான் செய்கிறது. அதில் வயப்பட்டு விட்டால் மீண்டு வருவது எளிதான விஷயமில்லை. பாலைவனத்தில் பூக்கும் பூக்கள் எவ்வளவு அபூர்வமானவை. அந்த அபூர்வமான தருணத்தை உணர்ந்தவர்கள் மட்டுமே அறிவார்கள்''**[13]

என்ற சிறுகதை வரிகள் ஆண், பெண்ணைப் போலவே திருநங்கையருக்கும் இயல்பான, இயற்கையான காதல் உணர்வுகள் எழும் என்பதை நிரூபிக்கின்றன.

‘துலாமுள் இச்சை’ எனும் சிறுகதையில் வடிவேல் எனும் வடிவு சுரேஷ்மீது காதல் கொள்கின்றாள்.

> **‘‘அன்றும் அவனது தகரக்குரல் வேண்டுகை ஆவி மூச்சேறித் தாக்கியது என்னை . . . ‘ஒரு கொழந்தெ தருவீங்கதானே?’ இப்படித்தான் ஒரு மாத காலமாக இவ் வேண்டுதல் கொடுத்து என்னை அனல் மூட்டித் தகர்க்கிறான்’’**[4]

என்ற சுரேஷின் கூற்றுவழி வடிவு, சுரேஷ்மீது கொண்டுள்ள ஆழமான காதல் நிலை வெளிப்படுகின்றது.

‘இப்படியும்‘ சிறுகதையில் திருநங்கைமீது ஆண் ஒருவனுக்கு காதல் ஏற்படுகின்றது.

> **‘‘பாபு உனக்கும் ஒரு பெண்ணுக்கும் துரோகம் செய்ய விரும்பவில்லை. எனக்கும் சகோதரிகள் உண்டு. நானும் சாகும்வரை மனதளவில் மாறப் போவதில்லை. இதையெல்லாம் எடுத்துச் சொல்லி கல்யாணத்தை நிறுத்த நான் சாதாரண பாபு இல்லை. பல லட்சத்திற்கு ஒரே வாரிசான காசிநாடார் மகன்’’**[15]

என்ற சிறுகதை வரிகள் பாபுவைக் காதல் செய்த கதிர் தனக்கு ஏற்பாடு செய்த திருமணத்தில் விருப்பம் இன்றித் தற்கொலை செய்யும் முடிவினைத் தெரிவிக்கின்றன. திருநங்கையரை மனிதராகவே ஏற்றுக்கொள்ளத் தயங்கும் சமூகத்தில் அவர்களைத் திருமணம் புரிந்திடும் ஆண்கள் அரிதாகவே உள்ளனர். திருநங்கையரைத் திருமணம் புரிவற்கு வரும் ஆண்கள் சமூகத்தின் விமர்சனங்களுக்கு அஞ்சித் தங்கள் காதல் உணர்வினை வெளிப்படுத்த முன்வருவதில்லை என்பதையே ஆய்வின் தரவுகள் காட்டுகின்றன.

3.3.4 திருமண உணர்வுப் போராட்டம்

திருநங்கையரை முழுமனதாக ஏற்கும் ஆண்கள் குறைவே ஆகும். திருநங்கையரைத் திருமணம் செய்யும் ஆண்கள் அவர்களின் மனத்தை விரும்பாமல் பணத்தையும், உடலையுமே பெரிதும் நேசிக்கின்றனர். திருநங்கையருக்குத் திருமண வாழ்வு என்பது கானல் நீராகவே உள்ளது. இதனை மகராசன் கூற்றுவழி அறியலாம்.

> **"திருமணம் என்கிற ஒன்று இவர்களுக்கு அமைவதில்லை. பெரும்பாலான ஆண்கள் பாலியல் ஊடகமாகத்தான் அரவாணியை அணுகுகின்றனர். மனைவியாக, துணைவியாக வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளும் பங்காளராக ஏற்றுக் கொள்வதில்லை."**[16]

இவ்வரிகள் 'திருமணவாழ்வு' என்பது திருநங்கையருக்குப் பெரும்பாலும் எட்டாக் கனியாகவே இருந்து வருவதைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அப்படிப்பட்ட ஆண்களுக்காகத் திருநங்கையர் தனக்குப் பிடித்த எல்லாவற்றையும் துறப்பதற்குக் கூடத் தயாராக இருக்கின்றனர்.

> **"அவரு என்னை, அதிகமா மேக்கப் பண்ணிக்கக் கூடாதுன்னு சொல்லுவாரு. அதனாலேயே, என் மேக்கப்ப அவருக்காக விட்டுட்டேன். லிப்ஸ்டிக் போடக்கூடாது, அதிகமா முடி அலங்காரம் பண்ணக் கூடாதுன்னு சொல்லுவாரு. அதையும் விட்டுட்டேன். செக்ஸ் தொழில் பண்றதையும் விட்டுட்டேன்"**[17]

என்று கூறும் அருணாவை அந்த ஆண்மகன் விட்டுவிட்டதையும், 'உணர்வும் உருவமும்' என்ற நூலில் ரேவதி குறிப்பிட்டுள்ளார்.

ஆய்விற்கான தரவுகளும் இதனையே சித்தரிக்கின்றன. 'நாயிவாயிச் சீல' எனும் சிறுகதையில் அபிராமி என்னும் திருநங்கை விஷம் வைத்துக் கொல்லப்படுகிறாள்.

''அவ்வளதான் மக்யாவது வாரமெல்லாம், பன்னிக்கறிய வறுத்து அதுல பாசானத்த கலந்துக் குடுத்து அபிராமிய கொன்னுப்புட்டா அவிங்கம்மாக்காரி''[18]

என்ற வரிகள் இச்செயலை உணர்த்துகின்றன.

திருநங்கையை மணந்த ஆடவனே அவளை ஏமாற்றும் நிலையையும், அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்கும் திருநங்கையருக்கு இறப்பு மட்டுமே பரிசாக மிஞ்சுகின்றது என்பதையும் சிறுகதைத் தரவுகள் காட்டுகின்றன.

திருநங்கையரைப் பணம் காய்க்கும் மரமாகவே ஆண்கள் கருதுகின்றனர். 'உறையாத நினைவுகள்' நாடகத்தில் மாலதி என்ற திருநங்கையை அவளது கணவன் பணத்திற்காகவே திருமணம் செய்கிறான்.

''ரொம்பதான் புலம்பாத, உங்கிட்ட காசு புரளாமதான் சேலைக்கும் பவுடருக்கும் காசு இருக்கோ? எல்லாந் தெரியுண்டீ உங்கள பத்தி''[19]

என்று கூறி, பணத்திற்காக அவளை அவமதிப்பதுடன் தான் வேறொரு பெண்ணை மணக்கப் போவதாகவும் கூறுகிறான். திருமணம் என்ற பெயரில் திருநங்கையரை ஆண்கள் நம்ப வைத்து இழிவாகப் பேசுகின்றனர்.

''என்னடா? தப்பா கேட்டுட்டாங்க, நீ பொம்பளயா? பொம்பளயாடா? சொல்லு நா இப்பவே தாலிகட்டி குடித்தனம் பண்றேன்''[20]

என்று மாலதி என்ற திருநங்கையைக் கர்ணன் தன் நண்பர்கள் முன்னிலையில் அவமதிக்கிறான். குடும்பமாக வாழ எண்ணும் திருநங்கையரின் பலவீனத்தைப் பல ஆண்கள் தங்களுக்குச் சாதகமாக மாற்றி, சுரண்டிக் கொழுக்கின்றனர். சமூகத்தில் திருநங்கைகளின் திருமண உறவுநிலைகள் சிக்கல்கள் நிறைந்தவையாகவே அமைகின்றன.

3.3.5 பாலுணர்வுப் போராட்டம்

பாலுணர்வு இயல்பான ஒன்றாகும். உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவானதாகும். ஆணும் பெண்ணும் குறிப்பிட்ட பருவ வயதில் 'திருமணம்' என்னும் சடங்குமுறை மூலம் இணைந்து, தங்கள் பாலுணர்வுக்கு வடிகாலை ஏற்படுத்திக் கொள்வதுடன் தங்களுக்கான வாரிசுகளை உருவாக்குகின்றனர். திருநங்கையர்களுக்குத் தங்கள் பாலுணர்வை வெளிப்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுகின்றன. கருப்பை இன்றி இருப்பதால் பிள்ளைப்பேறு வாய்ப்பின்மை நேரிடுகிறது.

> **''ஆணின் அன்புணர்ச்சிக்கு ஏங்கும் ஒரு அலிக்கு உரிய வடிகால் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அந்த அலியின் நிலைதான் என்ன? அவரும் மானிடப்பிறவிதானே?... அவர்கள் ஆணை ஏக்கத்தோடு பார்ப்பது தவறு அல்ல என்று புரிந்துவிடும் .... சமுதாய அங்கீகாரம் மிக்க வாழ்க்கைத்துணை பெற அவர்களுக்கு வழியே இல்லையே''**[21]

என்று ஆர். நூருல்லா 'அலிகள் வாழ்க்கை' எனும் நூலில் குறிப்பிடுவது உண்மையாகும். திருநங்கையருக்கான பாலுணர்வு வெளிப்பாட்டு நிலை என்பது அவர்களுக்குப் பெரும்பாலும் சாத்தியம் இல்லை. ஆய்வுத் தரவுகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

'கோமதி' சிறுகதையில் கோமதிக்குப் பாலுணர்வை வெளிப்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது.

> **''ஆண் பெண் சம்பந்தமான பால் உணர்ச்சி கதைகளைச் சொல்லி அவர்களை மகிழ்விப்பான்''**[22]

எனும் சிறுகதை அடிகள் திருநங்கையர் தன்னுள் எழும் இயல்பான பாலுணர்வை வெளிப்படுத்த இயலாத சூழலில் தன்னைச் சுற்றி உள்ளவர்களிடம் இவ்வாறாகக் கதைகள் கூறி மடைமாற்றம் செய்திடும் மனநிலை புலப்படுத்தப்படுகின்றது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் வாய்ப்பு திருநங்கைகளுக்கு அமைவதில்லை.

> **''ஆம்பள தெரண்டு ஆளானா, ஒடனே கண்ணாலங்கார்த்தி அவனுக்குண்டான குடும்பங்குட்டி உற்பத்தி ஆவுது.... பொம்பள சமஞ்சா பெத்தவிங்க கடம்பட்டு, ஒடம்பட்டு ஒருத்தங்கையில புடிச்சிக் குடுக்குறாங்க... இந்த திக்கத்த ஆத்துமாவுக்கு ஊத்த ஒடம்புல பிப்பு எடுத்தா அதைக்கண்டு ஆத்த மருந்துண்டா? நம்மள அரிசின்னு அள்ளிப்பாப்பாருமில்ல. உமின்னு ஊதிப் பாப்பாருமில்ல''**[23]

என்று 'நாயிவாயிச் சீல' சிறுகதை திக்கற்று நிற்கும் திருநங்கையருக்குள் எழும் பாலுணர்வு இச்சைப் போராட்டத்தை உணர்த்துகின்றது. தன்னுள் எழும் பாலியல் உணர்வுகளைத் திருநங்கையர் அடக்கிக் கொள்ளும் சூழலிலேயே சமூகத்தில் வாழ்கின்றனர்.

> **''என் ஆசை, காதல், காமம், உடல் குறித்த பிரக்ஞையற்ற ஒரு வெளிக்குள் என்னை திணிப்பாயா?.... என்றும் அழகான ஆண்களை நிரம்பப் பிடித்தது. தன் பாலியல் விளைவுகளை சமூகத்தில் உள்ள மற்ற பெண்களைப் போலவே அடக்கக் கற்றுக் கொண்டான்''**[24]

என்று பதிவாகி இருக்கும் 'நீளும் கனவு' சிறுகதையின் வரிகள் பாலியல் விழைவுகளை வெளிப்படுத்துவதில் திருநங்கையருக்குச் சிக்கல்கள் இருப்பதைக் காட்டுகின்றன.

‘‘சுரக்கிற பால் இல்ல... கசியற உதிரம் இல்ல. எனக்குத் தெரியும் உனக்குத் தெரியும். அதனால், என் மயிர்க்கண் ஒவ்வொன்றிலும் இச்சை சுரக்காதா? ஆசை இருக்காதா? எனக்குள்ளே பெண்மை சிறகு விரிக்காதா?’’[25]

‘உறையாத நினைவுகள்’ நாடகத்தில் மாலதி என்ற திருநங்கையின் கூற்று, திருநங்கையர் பெண்ணாகப் பிறப்பெடுக்கவில்லை என்றாலும், அவர்களுக்குள் பெண்மைக்கான பாலியல் உணர்வுகளின் பிரவாகம் பெருக்கெடுக்கும் என்பதைத் தெரிவிக்கின்றன.

3.3.6 தாய்மை உணர்வுப் போராட்டம்

பெண்ணாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தையைப் பெற்றெடுக்கும்போது தாய்மை உணர்வினைப் பெறுவர். அவ்வாறு தாய்மை அடைய முடியாத பெண்களுக்குள்ளும் தாய்மை உணர்வின் கூறுகள் இருப்பது இயற்கை. மனத்தளவில் தன்னைப் பெண்ணாக உணரும் திருநங்கையர் எந்நிலையிலும் தாய்மைப் பேற்றினை அடைய இயலாது. இந்நிலையில் அவர்கள் மனதுள் தாய்மைக்கான உணர்வுகள் போராட்டமாகக் கிளர்கின்றன. திருநங்கை குணவதியின் நேர்காணல்வழி அவர்களின் தாயுள்ளத்தை அறிய இயலுகின்றது.

‘‘அவமானம் செய்தனர். பொறுத்துக் கொண்டேன். பார் போற்றும் உத்தமியாக மிளிர வேண்டும் என்பதற்காக பேச்சு, ஏச்சுக்களை தூக்கி எறிந்தேன்... மனைவியை இழந்தவர், குழந்தைகளை வளர்க்க முடியாமல் கஷ்டப்படும் ஒருவரை திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளேன். நான் நினைத்து இந்த பிறவி எனக்கு கிடைக்கவில்லை. பிறப்பும் இறப்பும் நமது கையில் இல்லையே’’[26]

என்ற பதிவிலிருந்த திருநங்கையருக்குள் இருக்கும் தாய்மைக்குணமும், தன்னம்பிக்கையும் குறித்து அறிய இயலுகின்றது. தற்போது குணவதி அரசு

மருத்துவமனையில் 'தாய் சேய்' நலப்பிரிவு பணியில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'ஊமங்காடை', 'பால் ஊனம்' என்ற இரண்டு சிறுகதைகளிலும் தாய்மை உணர்வு வெளிப்படும் திருநங்கையரின் மனநிலை படம்பிடித்துக் காட்டப்படுகின்றது.

> **''குழந்தை முட்டி முட்டி சிணுங்கலும் அழுகையுமா வாயாலே தேடித்தேடி ஆவல் ஆவலா சுவைச்சது பார்த்துக்கிட்டே நின்ன பொன்ராசு அவன் நெஞ்சு இரண்டு கையாலயும் தடவித் தடவிப் பார்த்தான்''**[27]

என்ற 'ஊமங்காடை' சிறுகதை அடிகள் குழந்தைப் பேற்றிற்கும், தாய்மை உணர்வுக்கும் ஏங்கும் திருநங்கையின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துகின்றன.

> **''எங்களால் முடியாத நாங்க ஏங்கித் தவிக்கிற ஒரு விஷயம் என்ன தெரியுமா? 'தாய்மை' ஆமாம்மா, நாங்க எவ்வளவு முயற்சி பண்ணினாலும் எங்களால் ஒரு பெண்ணாக முடியுமே தவிர, ஒரு தாயாக முடியாது''**[28]

என்ற 'பால் ஊனம்' சிறுகதை அடிகள் ஒரு ஆணைப் பெண்ணாக மாற்றும் அளவு மருத்துவத்துறையில் அளப்பரிய சாதனைகள் பல நிகழ்ந்தாலும், திருநங்கையரை இதுநாள் வரையிலும் தாய்மை அடையச் செய்வது என்பது இயலாத ஒன்றாகவே இருப்பதைச் சித்திரிக்கின்றது. தாய்மை உணர்வோடு திருநங்கையர் நடத்தும் போராட்டம் உயிர்ப்பும் நேயமும் மிக்கதாக அமைந்திருக்கின்றது.

3.3.7 தோழமை உணர்வுப் போராட்டம்

திருநங்கையர் இளம்பருவத்திலேயே ஆணுடனும், பெண்ணுடனும் நட்புணர்வு பாராட்ட இயலாது தவிக்கின்றனர். தனிமை உணர்வு அவர்களுக்குச் சுமையாக மாறுகின்றது. குடும்பத்திற்குத் தெரியாமல் தன்னைப் போன்ற

திருநங்கையிடம் நட்பு பாராட்டுவதும் அவர்களுக்குப் போராட்டமாகவே அமைகின்றது.

> **''குடும்பத்லோர்ந்து வெளிய வர எங்களுக்கு ஆறுதல் சொல்லவோ, தாங்கிப் பிடிக்கவோ, ஆளே இல்லீங்க. எங்கள மாதிரி மாறினவங்களோட நாங்க பழகறதும் குடும்பத்துக்கும், ஊருக்கும் பயந்து பயந்துதான். நாங்க பாசத்தோடு பழகினா கூட அதயும் இந்த மக்கள் தப்பாதான் பேசுறாங்க. நட்புக்கும், உறவுக்கும் நாங்க ஏங்கறோம்னு யாரும் புரிஞ்சுக்கவே இல்ல. இதான் அக்கா உண்மை... உங்கள அக்கானு நான் கூப்பிடலாம்தான?''**[29]

என்ற ப்ரீத்தியின் வாய்மொழிப் பதிவிலிருந்து திருநங்கையர் நட்பிற்காக ஏங்கும் நிலையும், சகமனிதர்களின் புரிதல்கள் இல்லாத அவர்களின் வாழ்நிலையும் தெரிய வருகின்றது.

'ஊர்களில் அரவாணி' சிறுகதையில், லிங்கம் அவனைப் போன்ற திருநங்கை பொண்டுகச் சட்டி பாலுவை யாருக்கும் தெரியாமல் மறைவாகச் சந்திக்கின்றான்.

> **''இருவரும் குருக்காத்தி வந்து பஸ்சுக்காக காத்திருந்தனர். லிங்கம் கடை மறைவில் பதுங்கி நின்றான்''**[30]

திருநங்கை லிங்கம் அவனது ஊருக்குத் தெரியாமலேயே பாலுவுடன் நட்புணர்வு பூணுகிறான். 'கூத்தாண்டவன்' சிறுகதையில் மணியின் நண்பன் மணியின் தாயோடு தகாத உறவில் ஈடுபடுகிறான். மணியின் தங்கையைத் திருமணம் செய்ய ஒப்புதல் கொடுக்கிறான். மணியோடும் உடல் உறவு கொள்கின்றான்.

> **''என் நண்பனை மறுபடியும் சந்திக்கும் அவலம் எனக்கு நேரக்கூடாது. அவன் நல்லவன். என்னுடையவனும் கூட... இது இரண்டு ஆண்களுக்கும் இரண்டு**

பெண்களுக்குமான உறவுச்சிக்கல் கிடையாது. ஒரு ஆணுக்கும் மூன்று பெண்களுக்குமான சிக்கல். நான் மூன்றாவது பெண்ணா, மூன்றாவது பாலா என சொல்லத் தெரியவில்லை''[31]

என்ற சிறுகதை வரிகள் திருநங்கையருக்குத் தோழமை உறவும்கூட பொய்த்துப் போகும் சூழல் இருப்பதை உணர்த்துகின்றன. 'தோழி' சிறுகதையில் ஒரு திருநங்கை ஒரு மாற்றுத்திறனாளியுடன் கொண்டிருக்கும் நட்பை இச்சமூகம் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதை மையப்படுத்துகின்றது.

''காயத்ரியின் உறவினர்களும் ஊரும் சேர்ந்து காயத்ரியையும் அவளது உயிரித்தோழி ஷர்மிளாவைப் பற்றியும் நாக்கூசும் அளவிற்கு அநாகரீகமாய் பேசித் தீர்த்து விட்டார்கள்.. ஒரு ஆணும் பெண்ணும் பழகினாலே அதற்கு ஆயிரம் கதைகள் சொல்வார்கள். ஆனால் இவர்களில் ஒருவர் பெண் மற்றொருவர் திருநங்கை அல்லவா''[32]

என்ற சிறுகதை அடிகள் திருநங்கையர் பெண்பாலினரோடு நட்பு பூண்டாலும், அதையும் சமூகத்தவர் தவறாகவே எண்ணுகின்றனர். இதனால் திருநங்கையருக்கு நட்புறவு என்பதும் பெரிய போராட்டக்களமாகவே அமைந்திருக்கின்றது. இதைத்தாண்டி குடும்ப, சமூக சூழலிலிருந்து புறந்தள்ளி அவர்கள் திருநங்கையர் சமூகத்தவரோடு கொண்டிருக்கும் இணக்கமே அவர்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் கொடுக்கின்றது.

3.3.8 மனிதநேய உணர்வுப் போராட்டம்

மனிதன் மனிதனோடு கொண்டிருக்கும் நேச உணர்வுகள் மனிதச் சங்கிலியை உறுதிப்படுத்துகின்றன. எந்த ஒரு மனிதனும் சமூகத்தோடு உறவாடவே விரும்புவான். அன்பு, கருணை, நேசம், பாசம் இவையெல்லாம் எல்லா உயிரிடத்தும் காணப்படும்

குணநலன்கள்; விளிம்புநிலை மக்களான திருநங்கையர்கள்மீது இச்சமூகம் மனிதநேயத்தைக் காட்டத் தவறி விடுகின்றது. திருநங்கைகள் இச்சமூகத்தின்மீது மாறாக்காதலைக் கொண்டுள்ளனர். ஓடும் புகைவண்டியில் ஒரு பெண்ணிற்குத் திருநங்கையர் பிரசவம் பார்த்ததனைக் கீழ்வரும் நாளிதழ் செய்தி தெரிவிக்கின்றது.

> **''இக்கட்டான சூழலில் இருந்த செரினாவுக்கு லாவகமான பிரசவ வழிமுறைகளை அரவாணிகள் மேற்கொண்டனர். இதையடுத்து 7.40 மணிக்கு செரினாவுக்கு அழகான ஆண்குழந்தை பிறந்தது... பொதுவாக ரயில் பெட்டிகளில் அரவாணிகள் அட்டகாசம் தாங்க முடியாது என்றுதான் பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர். இந்நிலையில் ஓடும் ரயிலில் இளம்பெண்ணுக்கு அரவாணிகள் பிரசவம் பார்த்து உதவிய சம்பவம். ரயில் பயணிகளை நெகிழச் செய்தது''**[33]

இப்படிப்பட்ட மனிதநேயம் மிக்கத் திருநங்கையரை இச்சமூகம் சகமனிதராக ஏற்கவும் பார்க்கவும் மறுக்கின்றது. 'தேடல்' சிறுகதையில் ஒரு திருநங்கைக்கு உணவு கொடுக்கும் மனிதரை நோக்கி,

> **''நாங்களும் மனுஷங்கடா.. எங்களிடத்தில் யாரும் கருணை காட்டுவதில்லை கேவலமாய்ப் பார்க்கிறார்கள். நீ சாப்பாடு கொடுத்ததற்கு நன்றி''**[34]

என்று கூறும் வரிகள் மனிதநேயம் மறந்த மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்மட்டி அடியாகும். 'மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து' எனும் சிறுகதை 'திருநங்கையரும் மனிதர்களே' என்பதை வலியுறுத்துகின்றது.

> **''உலகத்தீரே! துருப்பிடித்த வேட்டைத் துப்பாக்கியாளர்களே பாருங்கள், எங்கள் முகமும் மனித முகம்தான். உங்கள் மாற்று உடலாளர்களான நாங்கள் உங்களை வெறுப்பதே இல்லை. நீங்கள் அருவறுப்பான செயல் செய்பவர்களாக..., பயன்படுத்தித் தூக்கியெறிந்து விடுகிற ஆணுறையாக எங்களைப்**

பயன்படுத்தினாலும்... உடல் அறுக்க வலிக்கப் பிழிந்தாலும், நாங்கள் உங்கள் மீதான நேசத்தை விட்டொழிக்க முடியாதவர்கள். ஒரு முனையாளர்களான ஆண்களே... பன்முனைச் சிந்தனைவாதிகளான பெண்களே... முனையற்ற, முனைப்பற்ற நாங்களும் மனித சமூகத்தில் அடக்கம்தான்''[35]

என்ற சிறுகதை வரிகள் திருநங்கையர் மீது சமூக மக்கள் மனிதநேயத்தைக் காட்டத் தவறினாலும், ஒருபோதும் திருநங்கையர்கள் அவர்களை வெறுப்பதில்லை என்பதைக் காட்டுகின்றன. திருநங்கையர்களும் மனித சமூகத்தில் ஓர் அங்கம் என்பதை இச்சிறுகதை வலியுறுத்துகின்றது.

'உறையாத நினைவுகள்' நாடகத்தில் கவிதா என்ற திருநங்கையை அவளின் சகோதர்களே உண்மைநிலை அறியாது மனிதநேயமின்றி விலைமகளிடம் அழைத்துச் செல்கின்றனர்.

''இதெல்லாம் பரவால்லீங்க ஆனால்... ஒருமுறை பொம்பள சொகம் தெரிஞ்சா ஆணாய் ஒழுங்காய் இருப்பேனாம். கூடப்பொறந்த பிறவிகளே விலைமகளிடம் கூட்டிட்டுப் போனதை என்ன சொல்வேன்? எப்படி சொல்வேன்?''[36]

என்று நாடக வரிகள் சமூகத்தவராயினும், சகோதரர்கள் ஆயினும் திருநங்கையரை மனித இனமாகவே பார்க்க மறுக்கின்றனர். அவர்களுக்குள்ளும் மனிதநேய உள்ளம் இருக்கின்றது என்பதை உணரத் தவறுகின்றனர் என்பதை உணர்த்துகின்றன. திருநங்கையர்கள் தங்கள்மீதான மனிதநேய உணர்வினைச் சமூகத்தவரிடம் இருந்து பெறுவதென்பது பெரும் போராட்டமாகவே அமைகின்றது.

3.3.9 தன்மான உணர்வுப் போராட்டம்

பொருளாதார நிலையில் தாழ்ந்த நிலையில் உள்ளோரும், உயர்ந்த நிலையில் உள்ளோரும் தன்மானத்தோடு வாழ்வதையே பெரிதாக எண்ணுகின்றனர்.

''மானம் இழந்தபின் வாழாமை முன் இனிதே''[37]

என்கிறது 'இனியவை நாற்பது' திருநங்கையர் தங்கள் தன்மான உணர்வைக் காப்பதற்கு, சமூகத்தில் போராட வேண்டிய இரங்கத்தக்க நிலை நிலவுகின்றது.

''அரவாணிகளின் கோபத்தையும், ஆபாசத்தையும் பெரிதாகப் பேசுபவர்கள் அவர்களது நொந்த மனதைப் பற்றிப் பேசுவதில்லை. அவர்களும் மனிதர்கள் எனக் கருதுவதில்லை. பாலியல் தொழிலாளியோ, பளபள உடை உடுத்தி, அதீத முகப்பூச்சு பூசி இருப்பவரோ எவராக இருந்தாலும் அத்துமீறி அவரைச் சீண்டுவது அநாகரீகம் என்ற நோக்கு இல்லாத நமது சமூகந்தான் மிருகப்பண்ணை. அதிலும், சமீபகாலமாக கல்வியைத் தொடர்வது மதிப்பான வேலை செய்வது, நாகரீகமாகத் தோற்றம் அளிப்பது, சமூகத்தில் அங்கீகரிக்கும்படி நடந்து கொள்வது போன்றவை குறித்த கருத்துக்கள் அரவாணிகள் மத்தியில் பேசப்படுகின்றன. சகதியில் இருந்து மீளவிரும்பும் அவர்களை மீண்டும் மீண்டும் சேறு பூசுவது மனிதத் தன்மைக்கு எதிரானது''[38]

என்ற மங்கையின் கருத்து எண்ணத்தக்கது. திருநங்கையரின் தன்மானத்தை யாரும் பெரிதாக நினைப்பதில்லை. 'ஊர்களில் அரவாணி' எனும் சிறுகதையில் பொண்டுக சட்டி பாலுவை அவனது மகனே தரக்குறைவாகப் பேசுகின்றான்.

''அப்பா...என்று கூட கூப்பிடுவதில்லை. அவன் கெடக்கான்.. உன்னை மாதிரி என்னையும் பொம்பளயா...ஆக்க வேஷம் போடுதீயா....?''[39]

என்ற கூற்று அடிகள் திருநங்கையரின் தன்மானத்தை, சமூகத்தவர் இழிவுபடுத்துவதோடு, இரத்த பந்தங்களே இழிவுபடுத்துவது வருந்தத்தக்க நிலையாகும். தங்கள் தன்மானத்தைக் காக்க வழியின்றி, சமூகத்தோடு போராடிப் போராடி சமூகத்தின் விளிம்பு நிலைக்கும், இழிவு நிலைக்கும் திருநங்கையர்கள் தள்ளப்படுகின்றனர். 'தொலைந்த முகம்' சிறுகதை பெண்களும் திருநங்கையரைத் தரக்குறைவாகப் பேசுவதைச் சித்திரிக்கின்றது.

> **"டேய் பொட்டை என்னடா அவசரம் தள்ளிநில்லுடா" என்று விரட்டுவார்கள். இல்லக்கா, கடையில வேலை நிறைய இருக்கு . . அக்காவாமே, அடி செருப்பால. இப்படி எத்தனையோ அவமானங்கள்"**[40]

'சாமியைக் காணவில்லை' சிறுகதையில் மாதவன் தொலைக்கும் தாலியைக் கூத்தாண்டவர் கோயிலில் திருநங்கையர் திருடியதாக பழி சுமத்தப்படுகின்றது.

> **"ஐயா திருநங்கைகள் இங்க கூத்தாண்டவர வழிபட வரல. கூத்தடிக்கவும், கும்மாளம் போடவும் வந்துட்டுப் போறாங்க. அவங்க மனித குலத்தையே இழிவுபடுத்தும் பிறவிங்க. இந்தப் பூமியின் கேவலமே அவங்கதான். அவங்கதான் என் தாலியத் திருடியிருக்கணும்"**[41]

என்று கூற, தாலியைக் கண்டெடுத்து அவரிடம் ஒப்படைப்பது ஒரு திருநங்கையே ஆவாள். திருநங்கையரின் நேர்மை உணர்வை, இச் சமூகம் சந்தேகிக்கும் போக்கு இருப்பதை இச்சிறுகதை பதிவு செய்கிறது. 'மதி எனும் ஒரு மனிதனின் மரணம் குறித்து' எனும் சிறுகதையில் அச்சகத்தில் பணி செய்வோர் மதியின் தன்மானத்தை விலைபேசுகின்றனர்.

> **"பத்து ரூபாய் கொடுத்து உள்ளே அழைத்து அச்சாபீஸ் நாய்கள் உன்னைப்படுத்தியபாடு. 'எப்படி இருக்கும்னு.. பாத்திரலாம்'. சரி உனக்கும்**

புரிகிறது.. 'ஏய்.. காட்றா.. இன்னொரு பத்து ரூபா... தாரேன்...' அப்யோ மதி... நீ எப்படி அவமானப்பட்டாய்''[42]

என்ற கூற்று திருநங்கையர்களின் பாலியல் உறுப்புகள் சமூகத்தவர் பார்வையில் கேலிப்பொருளாகப் பார்க்கப்படும் சூழலை எடுத்துரைக்கின்றது.

'வலி அறுப்பு' நாடகத்தில் காவலர் முன்னிலையிலேயே திருநங்கையரின் மானம் காட்சிப் பொருளாக மாறுகின்றது.

''சேலையை இழுத்தான்... திமிறினேன். பாஞ்சாலியாய்க் காவலரே கதியென்று கதறினேன்... காவலரின் காதுகள் இரும்பாயிருந்திருக்க வேண்டும். சேலைக்கு வேலையின்றி போனது.. பெண்மையின் வரைபடத்தை ஊருக்கே விருந்தாக்கத் துடித்தான்.. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ஊர், காவலரிடம் ஓடினேன். ஒட்டுத்துணியாய் என்னை அலட்சியப்படுத்தினார்''[43]

என்ற கூற்றின் வழி திருநங்கையரின் மானத்திற்கும் மதிப்பு உண்டு என்பதைக் காவலர்கள் கண்டு கொள்வதில்லை என்பதனையும், காவல் வேலிகளே கறுப்பு ஆடுகளாகத் திருநங்கையர்களை அவமதிப்பு செய்கின்றனர் என்பதையும் அறியலாம்.

3.3.10 இயலாமை உணர்வுப் போராட்டம்

திருநங்கையருக்குள் இருக்கும் இயலாமை உணர்வுகள் அவர்களுக்கு மனச்சிக்கல்களை உருவாக்குகின்றன. ஆணாகப் பிறந்தும் ஆண்தன்மை இல்லாத நிலையுடன் போராடுகின்றனர். பெண்ணாகத் தன்னை உணர்ந்தும் தன் பெண்மைத் தன்மையை வெளியிட இயலாது போராடுகின்றனர். திருநங்கையருக்கு ஏற்படும்

இயலாமை உணர்வுப் போராட்டம் குறித்த மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற திருநங்கை 'அக்கை பத்மாஷிலி'யின் நேர்காணல் பதிவு இதனைச் சுட்டுகின்றது.

> **''வைஷ்ணவி என்ற திருநங்கைக்கு பெண் பார்க்க அழைத்து சென்று இருக்கிறார்கள். பெண்ணோட தகப்பனாரிடம் பேச ஆரம்பித்தார். நான் திருநங்கை என்னால் உங்க பெண்ணோட சேர்ந்து வாழ முடியாது என்னால் அவளுக்கு எவ்வித சந்தோஷத்தையும் தர இயலாது என்று கூறினார். அதனை ஏற்க ஒரு போராட்டமே நடந்து விட்டது. பிறகு அந்த திருநங்கையின் தாய் சரி. திருமணம் செய்தால் சரியாபோகும் என்றாள்... இல்லம்மா என்னால் பெண்ணோட குடும்பம் பண்ண முடியாது புரிந்து கொள்ளுங்கள்''**[44]

என்று கூறுவது திருநங்கையர்கள் தங்கள் இயலாமை நிலையினைப் புரிய வைப்பதில் குடும்பத்தாருடனேயே முரண்படுவதை அறிய முடிகின்றது. 'ஊமங்காடை' சிறுகதையில் பொன்ராசுவை அவனது மனைவி ஆண் தன்மை அற்றவன் என, பஞ்சாயத்தார் முன்னிலையில் கூறுகின்றாள்.

> **''ஐயா இவன் இதுநா வரைக்கும் ராப்பட்டு ஒண்ணா படுத்தது இல்லயாமுய்யா ஒண்ணா படுக்குறதென்ன ஒண்ணாப்படுக்கிறது ஆண் தத்துவமே இல்லேனுட்டா போ . . பொன்ராசு மூச்சு பேச்சிலாம தலய தொங்கப்போட்ட மட்டுல இருந்தான்''**[45]

என்று சிறுகதை திருநங்கையர் தன் பாலியல் உறவு இயலாமை உணர்வால் ஊராரின் முன்பு தலைகுனிய வேண்டிய நிலைக்கு ஆளாவதை வெளிப்படுத்துகிறது. 'துலாமுள் இச்சை' எனும் சிறுகதையில் வடிவேலு என்ற திருநங்கையைத் திருமணம் செய்து அவனைவிட்டுப் பிரிந்த அமுதா மீண்டும் ஒருமுறை சந்திக்கும்போது அவனை அவமானப்படுத்துகின்றாள்.

> **''தாடி வளர்த்திட்டாத் தெரியாதாக்கும் பொண்டுக சட்டியெ?''**[46]

என்று கூறும் அமுதாவிடம் சாமியாராய் இருக்கும் வடிவேலு,

> **''என்னை மன்னிச்சிடு, அம்மா, நான் ஊர்சுத்திப் பொறுக்கித் திரியணும்கிற சுயநலத்துல, எங்க அம்மா அப்பாவுக்குக் காவலாஒன்னெக் கட்டிட்டு வந்து வைச்சது தப்புதான் மன்னிச்சிடு''**[47]

என்று மன்னிப்பு கோருகிறான். தன்னுடைய இயலாமை உணர்வின் போராட்ட வெளிப்பாடே வடிவேலுவைச் சாமியாராய் மாற்றுகின்றது. திருநங்கையர்கள் தம் இயலாமை உணர்வால் குடும்பத்தோடும் சமூகத்தோடும் போராட வேண்டிய சூழல் சமூகத்தில் நிலவி வருகின்றது.

திருநங்கையர் பிறப்பால் பிறழ்ந்தவர்கள் என்றாலும், குணத்தாலும் மனத்தாலும் பிறழ்ந்தவர்கள் அல்லர். பல இடங்களில் அவர்கள் அவமானப்படுத்தப்படும் பொழுதும், பழி சுமத்தப்படும் பொழுதும் உளச்சார்புப் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

3.4 உரிமைப் போராட்டம்

உரிமைகள் என்பவை மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவானவை. எங்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றதோ, பறிக்கப்படுகின்றதோ அங்கு போராட்டங்கள் கிளர்கின்றன. எந்த ஒரு தனி மனிதனின் அடிப்படை உரிமைகளைத் தட்டிப்பறிப்பது என்பது சட்ட ரீதியாகத் தண்டனைக்குரிய ஒன்றாகும். அவ்வகையில் திருநங்கையர் வாழிடம் துவங்கி கல்வி, வேலை வாய்ப்பு, இறப்பு, உயிர்வாழ்தல் ஆகிய அனைத்திலும் தங்களுக்கான எல்லா உரிமைகளையும் போராடியே பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். அவ்வாறு போராடினாலும் அவர்களின் போராட்டத்திற்கான வெற்றி என்பது முழுமைத்துவம் பெறாத ஒன்றாகவே அமைகின்றது.

3.4.1 வாழிட உரிமைப் போராட்டம்

திருநங்கையர் தங்கள் வாழ்க்கையில் இருப்பிற்கு மட்டும் அல்லாது வாழிட இருப்பிற்கும் போராட வேண்டிய நிலைகள் சமூகக் கட்டமைப்பில் நிலவுகின்றன.

சமூக அமைப்பில் ஆரோக்கியமான வாழிடச் சூழல் திருநங்கையருக்கு அமைவது இல்லை என்பதை, 'தொலைந்த முகம்' சிறுகதை எடுத்துரைக்கின்றது.

> **''ஊரின் தெற்குக் கடைசிக்குச் சற்று முன்பாக ஒரு பெரிய சேரிப்பகுதி. கிழக்கு மேற்காக ஓடிய பெரிய கழிவுநீர் சாக்கடை அந்தச் சேரியை இரண்டாகப் பிரித்தது. சாக்கடை ஓரத்தில், மாலை நேரத்தில் சுறுசுறுப்பாய் நடக்கும் சாராய வியாபாரம், அருகிலேயே கிடக்கும் ஒன்றிரண்டு குடிமகன்கள்''**[48]

என்ற கருத்து பிறப்பால் ஒதுக்கப்படும் திருநங்கையர்கள், வாழிடத்திலும் ஊருக்கு வெளியே ஓரங்கட்டப்பட்டு தீண்டாமைக் கொடுமையுடன் வாழ்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. 'மனசின் அழைப்பு' நாடகத்தில் திருநங்கையர்கள் என்பதால் அவர்களிடம் இரட்டிப்பு வாடகை கேட்கப்படும் சூழல் பதிவாகி இருக்கிறது.

> **''வீடெல்லாம் இருக்கு ஆனா... உங்கள மாதிரி ஆளுகளுக்குத் தர முடியாது...''**[49]

என்று வீட்டு உரிமையைக் கூற, அவரது மனைவி,

> **''வாடகை 400 ரூபாய் வந்திச்சில்ல முன்னாடி, 800 ரூபாய் கேளுங்க. அவங்களுக்கு என்ன ஒட்டா? உறவா? பகல்லேயும் சம்பாதிக்குதுங்க ராத்திரியும் சம்பாதிக்குதுங்க. அட்வான்ஸ் கூட கூட்டிக் கேளுங்க''**[50]

என்று கூறும் செய்திகள் திருநங்கையர்களுக்கு நிரந்தரமான வாழிடங்கள் இல்லாவிட்டாலும் நியாயமான விலையில் வாடகை வீடுகள்கூட, கிடைப்பது இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

3.4.2 கல்வி உரிமைப் போராட்டம்

அனைவரும் 'கல்வி அறிவு பெற வேண்டும்' என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையிலேயே கட்டாயக் கல்வித்திட்டம் அரசினால் கொண்டு வரப்பட்டது. கல்விக் கூடங்களில் திருநங்கையர்கள் மீது பாலியல் தொந்தரவுகள் நிகழ்த்தப்படுகின்றன. திருநங்கையர் என்பதால் அவர்களுக்குக் கல்விக்கூடங்களில் இடம்தர மறுக்கின்றனர். இக்காரணங்கள் அவர்களது கல்வி தடைபட ஏதுவாகின்றன. திருநங்கையர்கள், சமூகத்தில் கல்வி கற்று உயர வேண்டுமென்பதற்குப் பல தடைக்கற்கள் எழுப்பப்படுகின்றன. பள்ளிக் கல்வி முதல் உயர்கல்விவரை போராடி பெற வேண்டிய நிலையிலே வாழ்கின்றனர்.

> **''பொதுவாக குழந்தைப் பருவத்திலேயே ஏற்படும் வேற்றுமையுணர்வினால் பள்ளிச்சூழலில் தங்களது சகவயது மாணவர்களின் கேலியையும், கிண்டலையும் ஓரளவுக்குத் தாக்குப் பிடித்துக் கொள்கிறார்கள். ஆனால் பெற்றோர்களுக்கு அடுத்த நிலையிலிருக்கும் ஆசிரியர்களே தங்களை இழிவுபடுத்தும் கொடுமையைத் தாக்குப் பிடிக்க முடியாத நிலை, தங்களின் பள்ளி இடைவிலகலுக்கு முக்கிய காரணமாக அமைவதாக, பல சூழல்களில் இவர்கள் பதிவு செய்துள்ளதை நாம் அக்கறையுடன் கவனித்தல் அவசியம்''**[51]

என்ற கருத்து திருநங்கையரின் கல்வி தடைபடுவதில் சமூகத்திற்கும் பங்கு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. 'கள்ளிப்பூ' எனும் சிறுகதை படிப்பில் முதலிடம் பெற்ற கள்ளி தனது பாலின மாற்றத்தால் கல்வியை முழுமையாகத் தொடர இயலாத நிலையினைச் சித்திரிக்கின்றது.

> **''+1–இல் வேதியியல் ஆசிரியர் நடத்திய பாடமான உலோகம், அலோகம் சம்பந்தப்பட்ட பாடக்கருத்து கள்ளியின் நெஞ்சில் உயிரியல் மாற்றத்தைக்**

கொண்டு வந்தது. 15 வயது வரை பாடம், பள்ளி, பெற்றோர், உடன்பிறந்தோர் என்ற வாழ்ந்த கள்ளி வேதியியல் ஆசிரியரின் அலோகப் பண்புகளின் கருத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் மனவேதனைக்கு ஆளானாள். பாடம் பாகற்காயானது. பள்ளி வேப்ப எண்ணையானது''[52]

என்ற சிறுகதை சுட்டும் கருத்துக்கள் திருநங்கையருக்குள் ஏற்படும் உடல் மாற்றத்தால் அவர்கள் கல்வியைத் தொடர இயலாத சூழல் உருவெடுப்பதைத் தெரிவிக்கின்றன.

3.4.3 அரசு நல உரிமைப் போராட்டம்

மக்கள் நலன் காத்திடுவதே அரசாகும். இதற்காகவே அரசு மக்கள் நலத்திட்டங்களைக் கொண்டு வருகின்றது. அந்நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்லை என்பதே உண்மையாகும். அதிலும் பாலினம் மாற்றம் அடைந்தவர்கள் இருப்பின் அரசினர் பாரமுகமாகவே இருக்கின்றனர். குடும்ப அட்டை பெறுவது துவங்கி கடவுச்சீட்டு என எல்லா நிலைகளிலும் அவர்களின் உரிமைகள் போராட்டமாகவே அமைகின்றன.

''திருநங்கையர்களின் திருமணம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும்; ஏனைய மனிதர்கள் பெறுகிற இட ஒதுக்கீடு, இவர்களுக்குக் கட்டாயம் வேண்டும். கல்வி, தங்கிப் பயிலும் பள்ளி, கல்லூரிகள், உடன் வேலை வாய்ப்பு, வேலை பெறும் வரை பண உதவி, குடி இருப்பு, ஏனைய மக்கள் அடைகிற ஆதார், வாக்கு அட்டை, வாகன லைசென்ஸ் இன்ன பிற; ஊருக்கு ஊர் இலவச சட்ட உதவி இவர்களின் முதல் தேவை. பாலினம் தொடர்பான சட்டங்கள், அரவாணிகள் எந்த வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்களோ அந்த வீட்டு (வசதி இருக்குமானால்) சொத்து உரிமை; இலவச பாலின மாற்று சிகிச்சை; இவர்களுக்கு என்று தனி வாரியம்.

கட்சிகளுடன் இணைந்து போட்டியிடாமல் சட்டப் பேரவை உறுப்பினராவது; ராஜ்ய சபாவிலும், நாடாளுமன்றத்திலும் அவர்களுக்குரிய இடம்; அவர்கள் விவகாரத்தைக் கவனிக்கத் தனி அமைச்சகம் போன்றவைதான் அவர்களுக்கான உடனடித் தேவைகளாகும்.''[53]

என்ற பிரபஞ்சனின் கூற்று திருநங்கையரின் போராட்டக் களங்கள் குறித்து அமைகின்றது.

'மாற்றம்' எனும் நாடகத்தில் திருநங்கைகளுக்குக் குடும்ப அட்டை வழங்க உரிமை மறுக்கப்படுகின்றது.

''குடும்ப அட்டை வழங்கும் அதிகாரி: அரவாணிங்களா.... அதுக்கு கட்டமே இல்லியேம்மா. எங்க எழுதறது?

தேவி அரவாணி: கட்டம் இல்லயா? ஏன் எங்களுக்கு வயறில்ல? சமுதாயத்தில் எல்லோருக்கும் கார்டு குடுப்பீங்க. அரவாணிகளுக்கு மட்டும் இல்லையா? ஏன்? நாங்க மனுசங்க இல்ல...''[54]

என்ற நாடகக் கூற்று திருநங்கையருக்கு முறையான அங்கீகாரம் இன்மையால் அவர்களின் வாழ்க்கை முரண்பட்ட நிலையிலேயே அமைவதை உணர்த்துகின்றது. 'மனசின் அழைப்பு' எனும் நாடகத்தில் நாட்டின் குடிமக்களான திருநங்கையருக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பது சுட்டிக் காட்டப்படுகிறது.

''ரேஷன் கார்டு இருக்கா?

இல்லீங்க

லைசென்ஸ்?

இல்லீங்க

பேங்க் பாஸ்புக்?

இல்லீக

டெலிபோன் பில்?

இல்லீங்க

பாஸ்போர்ட்டு?

இல்லீங்க

பிறந்ததுக்கு சான்றிதழாவது இருக்கா?''[55]

என்று மகாராணி கேட்கும்போது தன் ஆண் பெயர் பதிந்த சான்றிதழ் கொடுக்க அனைவரும் சிரிக்கின்றனர்.

''நாங்களும் குடிமக்கள்ங்கறதுக்கான அடையாள அட்டை கொடுங்க. மரியாதையா பொழைக்க வழிகாட்டுங்க. எல்லோரையும் போல வாழனுங்க. எந்த வேலை வேணுன்னாலும் செய்யறோங்க''[56]

திருநங்கையர் அரசிடம் தங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அரசே அவர்களைப் புறக்கணிப்பதை மேற்சுட்டிய பகுதிகள் எடுத்துரைக்கின்றன. தற்போதைய சூழலில் அரசு ஒருசில மாற்றங்களையும், நலத்திட்ட உதவிகளையும் திருநங்கையர்களுக்குக் கொண்டுவரினும், அது முழுமையாகச் சென்றடையவில்லை என்பதே உண்மையாகும்.

3.4.4 பணி உரிமைப் போராட்டம்

தனக்கான பொருளாதாரத் தேவையினை நிறைவு செய்ய எந்தவொரு மனிதனுக்கும் பணி அவசியம். விளிம்புநிலை மாந்தர்களான திருநங்கையருக்கு உரிய பணியினைத் தர சமூகத்தில் எவரும் முன்வருவதில்லை. அவர்களாக முனைந்து செய்யும் பணிகளிலும் மக்களால் அவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன.

''திருநங்கை என்ற காரணத்துக்காக அரசு மற்றும் தனியார் பணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ஏராளம். சக ஊழியர்களின் கேலி, கிண்டலை சகிக்காமல் பணியை உதறிவிட்டு வந்தவர்களும் உண்டு''[57]

என்ற வெ.நீலகண்டனின் கூற்று இக்கருத்தினைச் சுட்டுகிறது.

நிறுவனங்களில் வேலை பார்க்கும் திருநங்கைகள் மட்டும் அல்ல, கைதட்டிக் கடைகடையாகச் சென்று கடைகேட்கும் திருநங்கையர்களையும் இந்தச்சமூகம் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாக்குகின்றது. 'வக்கிரம்' சிறுகதையில் நடனம் ஆடி, பிழைப்பு நடத்தும் திருநங்கையர்களைப் பணி செய்ய விடாமல் இடைமறித்து, சில ஆண்கள் துன்புறுத்துகின்றனர்.

''இதெல்லாம் நல்லா இல்லிங்க விட்ருங்க... என்னடி நல்லா இல்ல... ம் என்னடி நல்லா இல்ல? என்று லுங்கிக்காரன் கேட்கிறான். நோட்ட வாங்கிச் சொருவிக்கும் போது வலிக்கலியா? ஆடுன்னு சொன்னா மட்டும் வலிக்குதா? என்று திரும்பத் திரும்பச் சொல்லி கத்துகிறான் 'அட ஆடுங்கடீன்னா சும்மா அலட்டிக்கறிங்களே' என்று இளையவளின் நெஞ்சைத் தொட்டு அழுத்திப் பணத்தைச் செருகிறான். கைதட்டலும் விசிலும் உச்சத்தை அடைகிறது''[58]

என்ற சிறுகதைப் பதிவு வக்கிர எண்ணம் உள்ள ஆண்கள் திருநங்கையர்களைப் பிழைக்கவிடாமல் பாலியல் துன்புறுத்துவதைக் காட்டுகிறது.

'உறையாத நினைவுகள்' நாடகத்தில் தன் படிப்பிற்கேற்ற வேலைக்குச் சென்று பிழைக்க எண்ணும் திருநங்கை தேவியை, சில ரவுடிகள் தொந்தரவு செய்கின்றனர்.

''நபர்: 1 எங்க? பேக் (Bag) மாட்டிக்கிட்டு ஆட்டி ஆட்டிட்டு கிளம்பிட்ட?

நபர்: 2. பத்துக்குள்ள நம்பர் ஒண்ணு சொல்லு

நபர்: 3. டோப்பா டோப்பா முடிடா...

தேவி: நாங்க இப்பதான் வேலைக்குப் போய் எங்கள் வாழ்க்கையில ஏதாவது சாதிக்கணுமுன்னு நினைக்குறோம். ஏண்டா எங்களை வாழவிட மாட்டேங்கிறீங்க''[59]

என்ற உரையாடல்கள் நேர்மையாக வாழ எண்ணும் திருநங்கையரை இச்சமூகம் வாழ விடாமல் செய்வதைச் சித்திரிக்கின்றன. 'மனசின் அழைப்பு' நாடகத்தில் கடை கேட்டலுக்கும், நடனத்திற்கும் செல்லும் திருநங்கையர்களைப் பாலியல் சீண்டல்களுக்கு ஆளாக்குகின்றனர்.

''கடைக்காரர்: நல்லா அழகா சிம்ரன் மாதிரி இருக்கிற இதெல்லாம் என்ன ஒரிஜினலா? (மார்பைத் தொட முயச்சித்தல்) ....

நபர் 3: இப்ப பாரு நான் காட்டுறேன் ஷோக்கு. இந்தா பாத்தியா 500 ரூபா நோட்டு உனக்குத்தான் என்ன ஒண்ணு... கண்ணால எடுக்கணும் முழுக்க உனக்குத்தான் குனிம்மா குனி... (எடுத்தல்)

நபர் 3: (குனிந்து பார்த்தல்) என்ன மச்சி ஒண்ணுந் தெரியல.

நபர் 2: ஒரிஜினலா? இல்ல கொட்டங்குச்சியா?''[60]

என்ற நிகழ்ச்சி வலிகளே வாழ்க்கையாகிப்போன திருநங்கையர்களின் உள்ளங்களைக் காயப்படுத்தும் நிலையைச் சித்திரிக்கிறது. 'மாற்றம்' நாடகத்திலும் கடைகேட்கச் செல்லும் திருநங்கையிடம் கடைக்காரர் தவறாக நடந்துகொள்கிறார்.

''கடைக்காரர்; சரி, சரி நான் அஞ்சு ரூபா குடுக்குறேன். உள்ள வா... கொஞ்சம் பேசலாம் (கையைப் பிடித்து இழுக்கிறார்)

கடைக்காரர் (தொடர்ந்து): என்னடி, பெரிய பத்தினியா நீ, நீங்கல்லாம்....''[61]

என்ற நாடக உரையாடல் தொழில் செய்யும் இடத்தில் திருநங்கையர்களுக்கு ஆண்களால் எத்தகைய இடர்கள் நேர்கின்றன என்பதைப் புலப்படுத்துகிறது. இந்நிலையை எதிர்கொள்வது திருநங்கையருக்குப் பெரிய போராட்டமாக அமைந்திருக்கிறது.

3.4.5 பயண உரிமைப் போராட்டம்

திருநங்கையர்கள் பயணம் மேற்கொள்ளும் இடங்களிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். பயணங்களின்போதும், சாதகமான சூழல் அவர்களுக்கு அமைவதில்லை. திருநங்கை பிரியா புகைவண்டி பயணத்தின்போது அனுபவித்த இன்னல்களை அ. மங்கை தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

> **''எனது தோழி பிரியா என்ற அரவாணி தன் தோழியரோடு தஞ்சைக்கு இரயிலில் பயணம் செய்தபோது பெண்கள் பெட்டியில் இருக்கக்கூடாது என்று பயணச்சீட்டு பரிசோதகரால் விரட்டப்பட்டுள்ளனர். ஆண்களோடு பயணம் செய்வதில் உள்ள இடையூறுகளைக் கூறி வாதிட்டபோது உங்களைப் பெண்கள் எனக்கருத முடியாது, புடவை கட்டினால் பொம்பள ஆயிடுவீர்களா? நீங்க ஆம்பிளதான் என்று அவர் மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். வேறுவழியில்லாமல் ஆம்பிளை அடையாளம் ஏதாவது இருக்கா? பாருங்கடா? என்று உடை களைந்து அம்மணமாக இரயில் பிளாட்பாரத்தில் நின்றிருக்கின்றேன்''**[62]

என்று அவரது அனுபவத்தினை எடுத்துரைக்கிறார். இவ்வாறான பயணப் போராட்டங்கள் திருநங்கையருக்கு இருப்பதை ஆய்வுத் தரவுகளும் நிரூபணம் செய்கின்றன. 'மனசின் அழைப்பு' நாடகத்தில் திருநங்கையரைப் பயணத்தின்போது நிர்வாணமாக நிற்க வைக்கின்றனர்.

''இதே மாதிரி ரயில்லே நாங்க அரவாணிங்க போய்கிட்டு இருந்தோம். அந்த டிக்கெட் செக்கிங் வரவரு ஒவ்வொரு ஸ்டேஷன்லயும் எங்கள வேற பெட்டிக்குப் போகச் சொன்னாரு. நாங்க மறுத்தோம். ஒரு ஸ்டேஷன்ல மறுபடி மறுபடி நீங்க ஆம்பளங்கன்னாரு. தாங்க முடியாம ஒடம்புல ஆம்பள அடையாளம் ஏதாவது இருக்கா பாருங்கடான்னு அம்மணமா நின்னோம்''[63]

என்ற மகராசனின் கூற்று தன்னைத்தானே நிர்வாணப்படுத்தும் அளவிற்குத் திருநங்கையர்கள் வஞ்சிக்கப்படும் சூழலை வெளிப்படுத்துகிறது. பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் ஆண், பெண், மாற்றுத்திறனாளிகள், முதியோர் என இருக்கைப் பிரிவுகள் இருந்தாலும், திருநங்கையருக்கென எந்த ஒரு தனிஇடமும் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் பெண்கள் இருக்கைகளில் அமர்வதும், ஏற்கப்படுவது இல்லை. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மற்ற சிறுகதை, நாடகங்களில் பயண உரிமைப் பேராட்டம் குறித்து வேறு அழுத்தமானப் பதிவுகள் காணப்படவில்லை.

கேரள அரசு 'ஷி' டாக்சி சேவையைப் பெண்களால் பெண்களுக்காக துவக்கியது. அதைத் தொடர்ந்து 'ஜி' டாக்சி சேவை திருநங்கையருக்காக அறிமுகப்படுத்த உள்ளது என்று நாளிதழில் செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

''திருநங்கையரைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்த தற்போது துவக்கப்படும் 'ஜி' டாக்சியில் (ஜென்டர் டாக்சி) பாலின பாகுபாடின்றி யாரும் பயணிக்கலாம். எனவே இது சமத்துவ டாக்சி திட்டமாக கருதப்படுகின்றது.''[64]

என்ற செய்தியின்வழி அனைத்து மாநிலங்களிலும் இது மாதிரியான திட்டங்களை அறிமுகப்படுத்தினால் திருநங்கையரின் பயணப் போராட்டத்திற்கு நல்ல முடிவு வரும் என்பதில் ஐயமில்லை.

3.4.6 பொதுப் பயன்பாட்டு உரிமைப் போராட்டம்

பொதுப் பயன்பாட்டு உரிமை என்ற வார்த்தையில் உள்ள 'பொது' எனும் சொல் வார்த்தை அளவிலேயே உள்ளது. திருநங்கையரைப் பொறுத்தமட்டில் அது செயல்வடிவம் பெறாத நிலையில் இருக்கிறது. ரோஜா என்ற திருநங்கைக்கு உரிய நேரத்தில் மருத்துவச் சிகிச்சை கிடைக்காதது பற்றி, ரேவதி 'உணர்வும் உருவமும்' நூலில் கூறியுள்ளார்.

> **''ஒருமுறை நான் அமாமுல குளிச்சிக்கிட்டு இருந்தப்போ வலிப்பு வந்து விழுந்துட்டேன். 'குளிக்கப் போனவள இன்னும் காணோமே'ன்னு என்னை வந்து பார்த்துட்டு நிமான்ஸ் ஆஸ்பிட்டலுக்குத் தூக்கிக்கிட்டுப் போயிருக்காங்க. அங்க என்ன அட்மிட் பண்ணல... அங்க இருக்கிற டாக்டர்ங்க நர்சுங்க எல்லாரும் என்னை வேடிக்கை பார்த்தாங்க. அவங்க பாக்கறது என்னை ஒரு மனுஷனைப் பாக்கிற மாதிரியே இல்லைன்னு மட்டும் எனக்குத் தெரிஞ்சது''**[65]

பொது இடமான மருத்துவமனையிலும்கூட திருநங்கையர்கள் புறந்தள்ளியே ஒதுக்கப்பட்டு வருகின்றனர். இதன்வழி ஆய்வுத் தரவுகளில் 'மாற்றம்' நாடகம் இதனையே முன் மொழிகின்றது.

> **''கதைசொல்லி:** அரசாங்கம் தர்ம ஆஸ்பத்திரியை அந்தக்காலத்தில்
> இருந்து வச்சு நடத்துது. ஏழை எளியவுங்களுக்கு இது
> தோதா இருக்கு. எங்களைப்போல அரவணிகளுக்கு
> மருத்துவமனையே இல்லே. ஆம்பளங்க வார்டு,
> பொம்பளங்க வார்டுன்னு தனித்தனியா இருக்கையிலே
> எங்களுக்கு எந்த வார்டு இருக்கு? அரசங்க
> மருத்துவமனை அத்தனை பேருக்கும் பொதுவானது

தானே? ஆனா எங்களுக்கு மட்டும் ஏன் தனி வார்டு இல்லே''[66]

என்ற வினாக்கள் பொதுப் பயன்பாட்டு இடமான மருத்துவமனையில் திருநங்கையர்களை ஏதோ தீண்டத்தகாதவர்களாக நினைக்கும் போக்கு சமூகத்தில் இருப்பதை உறுதி செய்கின்றன.

கேரள மாநிலத்தில் திருநங்கையர்களுக்குத் தனியாக மருத்துவச் சிகிச்சைப் பிரிவு துவங்கப்பட்டுள்ளது.

''மே மாதத்திலிருந்து கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருநங்கைகளுக்கான சிகிச்சைப் பிரிவு மாதந்தோறும் செவ்வாய்கிழமை மட்டும் இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்கள் ஐந்து பேர் உளவியல், ஹார்மோன் உள்ளிட்ட ஐந்து பிரிவுகளில் திருநங்கையர்களுக்குச் சிகிச்சையளிக்கின்றனர்.''[67]

'தி இந்து' நாளிதழின் இச்செய்தி இது போன்று அனைத்து மாநிலங்களிலும் துவங்க தூண்டுதலை உருவாக்குகிறது.

3.4.7 சாதிய நிலை உரிமைப் போராட்டம்

பிறப்பால் புறந்தள்ளப்படும் சாதியப்படி நிலையின் நீட்சி என்பது இன்றும் இருந்து கொண்டுதான் வருகின்றது. ஆதிக்க வர்க்கத்தின் மூர்க்கமான சாதியப் பிடிகளில் விளிம்புநிலை மக்கள் இழிவாகப் பார்க்கப்படும் நிலை துயர நிலையிலே தொடர்கிறது. விளிம்புநிலை மக்கள் குறித்த பார்வை மாறும்போதே மனித நேயம் தழைத்தோங்கும்.

''சாதியின் பெயரால் மக்களைப் பிரித்து, அவர்களின் ஒருசாரரை இழிந்தவர் என்றும் பிறிதொரு பிரிவினரை உயர்ந்தோர் என்றும் பிறப்பின் அடிப்படையில்

கட்டாயமாக வகைப்படுத்தும் கொடியமுறை இந்தியாவில் மட்டுமே உள்ளது. உலகின் எப்பகுதியிலும் இது இல்லை''[68]

என்ற வெ.கண்ணுப்பிள்ளையின் கூற்று சிந்தனைக்குரியது. சாதியப் பாகுபாட்டினுள் சிக்கி உழலும் மனித சமூகத்திற்குள் திருநங்கையரும் துயர்நிலைக்கு ஆளாகின்றனர். 'ஆச்சிமுத்து' சிறுகதையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த ஆச்சிமுத்துவை மிகவும் இழிவாகக் குடியானத் தெருவினர் நடத்துகின்றனர்.

''அப்புறம்... உன்னோட உள்நாக்குகிட்ட நட்டக்குத்தலா ஒரு முடி வளரும்முல்ல. அதுக்கு எந்த தண்ணியோ குடிச்சா மடங்கிக்குமாமுல்ல... அத தேடித்தான் நீ தெனம் ஒத்தயில தோப்பு பக்கம் அலையிராயமுல்ல... என்ன வர்வியா...''[69]

என்று திருநங்கையர்மீது வன்புணர்வுக்கும் மேலான வலியினை பாலியல் சொல்லாடல்கள்மூலம் தருகின்றனர். 'அரவான்' நாடகத்தில் வேடவனான அரவான், பாண்டவர்களுக்காகப் பலியாகப் போகும் இதிகாசத் தொன்மம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பழங்குடியினத்தைச் சேர்ந்த அரவானின் மனக்குரல் கேள்வி எழுப்புவதாக 'அரவான்' நாடகத்தில் வருகின்றது.

''நான் எதற்காகப் பலியாக வேண்டும்? இந்த தேசத்தை யார் ஆண்ட போதும், நான் வனவாசி, நாகரெனும் வனகுடி. அர்ச்சுனனின் மகனாகப் பிறந்தும் நான் அரச வம்சமல்ல. நான் வேடுவன், வில்லாளி, நேற்றுவரை ஒதுக்கி வைக்கப்பட்டவன் இன்று யுத்த பலிக்காக நேசிக்கப்படுகிறேன்''[70]

என்ற கூற்று தன்னுடைய இந்நிலைக்காகத் தானே இரங்கும் அரவானின் மனநிலையினைப் படம்பிடித்துக் காட்டுகிறது. சாதியப் படிநிலைகளில் சிக்குண்டு கிடக்கும் மக்கள் எவராயினும் ஆதிக்க வர்க்கத்தினரால் வஞ்சிக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக, திருநங்கையர்களாக மாறும்போது, அவர்களின் இருத்தல்

நிலைப்பாடு ஒடுக்கப்பட்டு உரிமைக்காகப் போராட வேண்டிய நிலையிலே அமைந்திருக்கிறது.

3.4.8 இடுகாட்டு உரிமைப் போராட்டம்

வாழும்போது வெறுக்கப்படும் திருநங்கையர்கள், இறப்பிலும்கூட ஒதுக்கப்பட்டு வருகின்றனர். உயிருடன் அவர்கள் இருக்கும்போதே தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். இறந்தபின் அவர்களின் சடலத்தை எரியூட்டுவதற்கும்கூட இச்சமூகம் அனுமதி வழங்க மறுக்கின்றது. 'ப்ரீத்தி' எனும் திருநங்கை ஆய்வாளருக்குக் கொடுத்த நேர்காணல் இதனை உறுதிப்படுத்துகின்றது.

> **''என்னுடைய தோழி தேன்மொழி இறந்து 7 வருஷம் ஆச்சு. பொணமான பிறகும் கூட எங்கள எங்கள் குடும்பம் ஏற்க மறுக்குது. தேன்மொழிய பாக்க அவங்க குடும்பத்திலேர்ந்து யாருமே வர்ல. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு மாதிரி. சில ஊர்ல எங்கள எரிக்க அனுமதிக்க மாட்டாங்க. நல்ல வேளையா இப்போ 'மின்மயானம்' இருக்கு மிஷினு எங்கள பாகுபாடு பாக்காது பாருங்க''**[71]

என்று கூறியிருப்பதிலிருந்து இறப்பிலும்கூட திருநங்கையர் தீண்டத்தகாதவர்களாகவே கருதப்படுவதனை அறிய முடிகிறது. ஆய்வுத் தரவுகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

'தொலைந்த முகம்' எனும் சிறுகதையில் இறந்த திருநங்கையரின் உடல் எரியூட்டப்பட மறுக்கப்படுகின்றது.

> **''எல்லாம் முடிந்தபின் தலையோடு கால், வெளியே தெரியாதபடி மருந்து இட்டு, பாக்கிங் செய்து மருத்துவமனை ஊழியர்கள் கொடுத்த உன் உடலை, அந்தத் தொண்டு நிறுவன ஊழியர்கள் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றபோது, அங்கு**

அதைத் தூக்க மறுத்துவிட்டனர். பிறகு தொண்டு நிறுவன ஊழியர்களே தூக்கி வைத்து எரியூட்டினர்''[72]

என்பது திருநங்கையர்கள் இறப்பில் சந்திக்கும் துயரமான சூழலைக் காட்டுகின்றது.

''தெருவோர நாய்கள்கூட கிடைத்ததைத் தின்றுவிட்டு, நிம்மதியாக ஒரு மரத்தடியில் படுத்துறங்கும். ஆனால் நம் நிலைமை? வாழ்நாள் முழுவதும் ஓட ஓட விரட்டப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்டு கடைசியில சுடுகாட்டிலும் வேற்றுமை''[73]

எனும் கூற்றும் 'மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து' எனும் சிறுகதையில்,

''ஆணை எரித்த பின்தான் அந்தச் சுடுகாட்டில் வேறொரு மூலையில் அலியை எரிக்கலாமென்று எதிர்ப்பு கிளம்பியது... மதி..வாழ்க்கையிலேயே முதன் முறையாக அலியாகப் பிறந்ததற்காக நாம் கண் கலங்கிப் போனோம்''[74]

என்ற சிறுகதைக் கூற்றும் இதனைத் தெளிவாக்குகின்றன. 'மனிதன் நிம்மதியாக இறுதியில் உறங்கும் இடம் இடுகாடு' என்பார்கள். இடுகாட்டிலும் கூட திருநங்கையராய்ப் பிறப்பெடுத்தோருக்கு உரிமை கிடைப்பது போராட்டமாக அமைவதை மேற்சுட்டிய சிறுகதை அடிகள் மெய்ப்பிக்கின்றன

3.4.9 வாழ்வுரிமைப் போராட்டம்

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்வைத் தகவமைத்துக் கொள்ளும் உரிமை உண்டு. மற்றொருவரின் வாழ்வுரிமையைத் தட்டிப் பறிப்பது இயற்கைக்கு முரணானது. திருநங்கையரின் வாழ்வுரிமையை இச்சமூகம் மட்டுமின்றி அவர்களது குடும்பமும் பறித்துக் கொள்வது அவலநிலையேயாம்.

''இன்றைக்கு மூன்றாம் பாலினம் என்று சொல்லக்கூடிய திருநங்கைகளின் வாழ்க்கையும் மிக அவலமான நிலையில் இருக்கிறது. பெற்றவர்களாலும்,

உடன்பிறந்தவர்களாலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு மனித அங்கீகாரமே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும் போல சாதாரண வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசையும் ஏக்கமும் அவர்களுக்கு இருந்தாலும் இந்தச் சமூகம் விடுவதில்லை''[75]

என்று ராமசாமி கூறியுள்ள கருத்து 'வாழ்வுரிமை' என்பது திருநங்கையருக்கும் உண்டு என்பதை நிறுவுகிறது. 'ஊர்களில் அரவாணி' சிறுகதையில் லிங்கத்தை அவனது அப்பா எரித்துக் கொல்ல முயற்சிக்கிறார்.

''பொண்டுகப் பயலே... என்ன செய்யிறேன் பாரு.. என வீட்டில் இருந்த மண்ணெண்ணெய்யை எடுத்து வந்து இவன்மீது ஊற்றினார்''[76]

என்ற நிகழ்ச்சி திருநங்கையருக்குக் குடும்பத்திற்கூட உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை இருப்பதை அடையாளப்படுத்துகிறது. 'கூத்தாண்டவன்' சிறுகதையில் 'மணிகண்டன்' என்ற திருநங்கை வாழ வழியின்றி இறந்தே விடுகின்றான்.

''இரண்டு பேர் ஸ்டெரக்சரில் கிடத்தி அவனைத் தூக்கி வந்தார்கள். என்மனம் கனத்தது. வண்டியில் ஏற்றும்போது தலை கீழ் நோக்கித் தொங்கியது''[77]

என்ற கதைச்சூழல் திருநங்கையருக்கு இறுதியில் மரணமே சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்குத் தீர்வாக அமைகின்றது என்பதை நிறுவுகின்றன. குடும்பத்தினரே திருநங்கையரை அவமானச் சின்னமாகக் கருதுவதை 'தொலைந்த முகம்' சிறுகதை பதிவாக்குகிறது.

''கழிவறைக்குப் பக்கத்தில் தட்டுமுட்டுச் சாமான்களும், சுடுதண்ணீர் காயவைக்க என்று சுள்ளிக் கட்டுகளும் போட்டு வைத்திருக்கின்ற அறையில் எனக்கு

தற்காலிக சிறைவாசம்... அறையிருட்டில் சுள்ளிக்கட்டில் இருந்த தேள் ஒன்று என் கைவிரலின் மீது கோபத்தைக் காட்ட, நான் வலியில் கத்த...''[78]

என்ற நிகழ்ச்சி கழிப்பறைக்குள் இருக்கும் கழிவுக்கும் கீழாகவே திருநங்கையர் நடத்தப்படும் நிலைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. 'நாயிவாயிச் சீல' எனும் சிறுகதையில் திருநங்கைக்கு விஷம் கலந்த உணவு கொடுக்கப்பட்டு, கேட்பாரின்றி உயிர்விடும் அவலம் பதிவாகி இருக்கிறது.

''பன்னிக்கறிய வறுத்து அதுல பாசானத்த கலந்துக் குடுத்து அபிராமிய கொன்னுப்புட்டா''[79]

எனும் கூற்று கேள்விக்குறியாக இருக்கும் திருநங்கையரின் இறப்பினைப் பதிவாக்குகிறது. 'மதி எனும் ஒரு மனிதனின் குறித்து' எனும் சிறுகதையில் மதி அவனது குடும்பத்தினராலேயே விஷம் வைத்துக் கொல்லப்படுகின்றான்.

''புதியவர்கள் வருகைக்காக உன்னை எத்தனையோ நாட்கள் பலமணி நேரங்கள் கழிவறையில் அடைத்தவர்கள்.. லிங்கத்தான கோவிலிலிருந்து நீ திரும்புவதற்குள் உருவாகி இருந்தது ஒரு திட்டம். அய்யோ மதி... காணச்சிகிக்காது தனக்கு ஊரை விட்டுப்போன அப்பா இனிப்பான உணவில் கலக்க வேண்டியதைக் கலந்து பொறுப்பான தாய்போல உனக்குத் தந்த சித்திக்காரி''[80]

என்ற கூற்று உயிருக்கு உத்தரவாதம் அற்ற திருநங்கையரின் வாழ்வுரிமைப் போராட்டம் எத்ததகைய வலி நிறைந்தது என்பதைத் தெளிவாக்குகிறது. 'உறையாத நினைவுகள்' நாடகத்தில் திருநங்கையரைக் குடும்பம் புறக்கணிக்கும் நிலை பற்றிக் குறிப்பிட்டுகிறது.

''தீராத வலி... தீராத வலி... நெஞ்சில் மாறாத வடுவாய் இன்னமும் பதிந்திருப்பது... அர்த்தநாரியாய் ஆணுக்குள் பெண்ணாய் நாங்கள் அலைக்கழித்த அந்த வயதில் எங்கள் பெற்றோர் எங்களை ஏறெடுத்துப் பாராததுதான். விளக்குமாறெடுத்துத் துரத்தியதுதான். பிறப்பே பகையாச்சு... இருப்பே நெருப்பாச்சு''[81]

என்ற நாடகக் கூற்று திருநங்கையர் வாழ்வதற்கான சாதகமான சூழலை அவர்களது குடும்பமே வழங்க மறுக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் சமூகக் கட்டுமானங்களின் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையிலே திருநங்கையர் இருக்கின்றனர். திருநங்கையர் தங்களது வாழ்வுரிமைக்காகக் குடும்பத்தோடும், சமூகத்தோடும் போராடும் போராட்டமே அவர்கள் வாழ்வை வலுவிழக்கச் செய்கின்றது.

3.4.10 உரிமை மீட்புப் போராட்டம்

எங்கே உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ அங்கே புரட்சிகள் வெடிக்கின்றன. பெண்கள் தங்களுக்கான உரிமை மீட்புப் போராட்டத்திற்கு அமைப்புகளை உருவாக்கியது போல, திருநங்கையர்கள் விழிப்புணர்வு பெற்று அவர்களுக்கான உரிமைகளை மீட்க வாதாடியும் போராடியும் வருகின்றனர்.

''மனிதகுல வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை இடைவிடாத போராட்டத்தில் இன்னலுற்ற திருநங்கையர் வாழ்வில் மெல்ல மெல்ல ஒளிவிடத் தொடங்கிய காலம் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் எனலாம். எனினும் இன்னும் எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை புரிந்து கொள்ளவில்லை எனும்போது தான் நெஞ்சம் நெகிழ்கிறது''[82]

என்று கூறிய திருநங்கை 'அக்கைபத்மாஷிலி' முதல் முறையாகக் கவுரவ முனைவர் பட்டம் பெற்றவர்.

> **''அமைதி மற்றும் கல்விக்கான இந்திய மெய்நிகர் பல்கலைக்கழகம் கடந்த 31–ஆம் தேதி திருநங்கை அக்கை பத்மாயீஷிலிக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கியது. திருநங்கைகள் நலனுக்காவும், உரிமைகளுக்காகவும் பாதுகாப்புக்காகவும் தொடர்ந்து போராடி வருவதால் இந்த உயரிய அங்கீகாரம்''**[83]

என்ற நாளிதழ் செய்தியின்வழி திருநங்கையரின் உரிமைகளை அவர்களே முனைந்து மீட்டெடுக்கும் நிலை உருவாகி உள்ளதை அறிய முடிகிறது. ஆய்வுத் தரவுகளில் 'கள்ளிப்பூ' எனும் சிறுகதையில் ஒரு முன்மாதிரி கதாப்பாத்திரமாகக் கள்ளி எனும் திருநங்கையின் கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

> **''கள்ளி சமுதாயத்தில் கள்ளியரின் உரிமையான அங்கீகாரத்தைப் பெறத் துடிக்கிறாள். அதற்கான முயற்சிகளை கள்ளி அனுதினமும் யோசிக்கிறாள். கள்ளியின் நினைவு கள்ளியரின் சமுதாயத்தை மேம்படுத்தும் நிலையிலேயே இருக்கிறது. கள்ளியரின் வாழ்க்கை... ஒளியுள்ள வீடாக, உயிருள்ள உடலாக, களை இல்லாத பயிராக, கவினுள்ள மலராக . . இந்த கள்ளிப்பூ சமுதாயத்தில் மனித இனத்தால் அங்கீகாரம் தரப்பட வேண்டும் என்று துடிக்கிறாள். இந்த கள்ளியும் ஒரு புரட்சிப்பெண்தான்''**[84]

என்ற கருத்து, திருநங்கையர் விழிப்புணர்வு பெற்று, சமூகத்தின் போராடி வருவதை உள்ளிடாகக் காட்டுகிறது. 'வனம் புகுதல்' என்ற சிறுகதையில் அர்ஜுனனாகப் பிறந்து அஞ்சுமனாக மாறிய ஒரு திருநங்கை, முயன்று முன்னேறி ஒட்டுமொத்தத் திருநங்கைகள் குழுமத்திற்கான உரிமைகளை மீட்டெடுக்க முனைகிறாள்.

> **''இப்போதைக்கு நூறு பேர் இந்தத் தொழிற்சாலைல வேலை செய்யப் போறாங்க. அதுல அறுபது பேர் மட்டுந்தான் மூன்றாம் பாலினத்தவர். உங்க லாங்க்வேஜ்ல சொல்லணும்னா, அரவாணிகள் மீதி நாற்பது பேரு பெண்கள். நீங்க எங்களுக்கு**

இட ஒதுக்கீடு தரவேணாம். நாங்க ஒங்களுக்குத் தாரோம். அப்புறம் ஒரு பள்ளிக்கூடம்.... அப்புறம் ஒரு இரு பாலர் முதியோர் இல்லம்... எங்க உணர்வுகளை மத்தவங்க மதிக்காவிட்டாலும், மத்தவங்க உணர்வை நாங்க மதிக்கிறோம்... அப்பவாவது மக்களுக்கு விழிப்புணர்வு வரட்டும், இவர்களும் மனுஷங்கதான்னு''[85]

என்ற கூற்று, மக்களின் புறக்கணிப்பிற்கு அஞ்சாத திருநங்கையின் உறுதிபடைத்த நெஞ்சத்தை எடுத்துக்காட்டுகிறது. 'மாற்றம்' எனும் நாடகத்தில் திருநங்கையர்கள் தங்களது உரிமைகளைத் தாங்களே மீட்க வேண்டும் எனக் கருதி, போராடத் துணிகின்றனர்.

''தலைவி: காலம் பூராவும் கூவாகத்துக்குப் போறோம், தாலி கட்டுனோம், தாலி அறுத்தோம்.. என்னதான் நடந்துச்சு நம்ம வாழ்க்கையில... ஏம்மா, கூவாகம் போன நமக்கு ரேஷன் கார்டு கெடச்சதா... இல்ல நம்ம வாழ்க்கைதான் சீர்ப்பட்டுச்சா.... அதெல்லாம் ஒரு பக்கம் வச்சிட்டு நம்ம வாழ்க்கை முன்னேற்றத்துக்கு முயற்சி பண்ணுவோம்.''[86]

என்ற கூற்று முன்னேற்றப் பாதையில் திருநங்கையர் செல்வதைக் காட்டுகிறது. இன்று தங்களுக்கான கல்வி துவங்கி அரசின் இட ஒதுக்கீட்டில் இரண்டிலிருந்து மூன்று சதவீதம் வேண்டும் என்று கேட்பது வரையிலும் திருநங்கையரின் போராட்டம் நீட்சி அடைந்துள்ளது. மேலும் திருநங்கையர் போராட்டத்தால் தங்களது உரிமைகளை மீட்பதன் பொருட்டு அவர்களது போராட்டம் வலுப்பெற்று வருகிறது.

3.5 தொகுப்புரை

திருநங்கையருக்கு அவர்களின் உணர்வு சார்ந்த தளத்திலும், உரிமை சார்ந்த தளத்திலும் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழல் அமைகிறது.

காதல், திருமணம் என இரண்டிலுமே திருநங்கையர் ஆண்களால் பெரும்பாலும் ஏமாற்றமே அடைகின்றனர் என்பதை ஆய்வுத் தரவுகள் மெய்ப்பிக்கின்றன. திருநங்கையர், ஆண்களால் பாலியல் சீண்டலுக்கும், சுரண்டலுக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

திருநங்கையருக்கான நிச்சயமற்ற பாலின அடையாளம் உரிய அங்கீகாரம் பெறவில்லை.

தவறான கற்பிதங்களுக்கு உள்ளாகும் அவர்களின் பாலியல் உணர்வு விமர்சனங்களுக்கும் முரணான கண்ணோட்டத்திற்கும் உள்ளாகும் நிலையே காணப்படுகிறது.

திருநங்கையரைச் சக மனிதர்களாக ஏற்கும் சமூகமே அவர்களின் உணர்விற்கு உகந்த வடிகாலாக அமைந்திடும்.

பிறப்பு முதல் இறப்பு வரையிலும் திருநங்கையின் இருப்பும் உரிமையும் புறந்தள்ளப்பட்டே வருகிறது என்பதை ஆய்வுத்தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

அரசின் நலத்திட்டங்களும் பொதுப்பயன்பாடுகளில் திருநங்கையருக்கான உரிமைகளும் அவர்களை முழுமையாகச் சென்று அடைவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களை ஆய்வுத் தரவுகள் முன்வைக்கின்றன.

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் திருநங்கையருக்குரிய அங்கீரம் இல்லாமையே அவர்களை இழிநிலைக்கும் விளிம்பு நிலைக்கும் தள்ளுகின்றது.

தங்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் சூழலில் தாங்களே முன்வந்து அதை மீட்டெடுக்க முயலும் ஆய்வுத் தரவுகளின் கதை மாந்தர்கள், சமூகத்தில் நன்னிலை எய்தி இருக்கும், திருநங்கையர்களின் மாற்றுப் பாத்திரப் படைப்புகளே ஆகும்.

திருநங்கையரின் அவலக்குரலும், போராட்டங்களை எதிர்கொள்ளும் உரிமைக்குரலும் எழுத்தின்வழி ஆய்விற்குத் தேர்வு செய்யப்பட்ட சிறுகதைகள் நாடகங்களில் ஒலிக்கின்றன.

சான்றெண் விளக்கம்

1. ஜெயசீலி, நவீன இலக்கியத்தில் மனித உரிமைச் சிந்தனைகள், பக்.182-183.
2. ஆசு, நாட்குறிப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், ப.20.
3. ம. தவசி, ஊர்களில் அரவாணி, ப.155.
4. மகராசன் (தொ.ஆ), அரவாணிகள், உடலியல் உளவியல் வாழ்வியல்,ப. 242.
5. கி. ராஜநாராயணன், கி.ரா. கதைகள்.ப.280.
6. எஸ்.அர்ஷியா, மரணத்தில் மிதக்கும் சொற்கள், ப. 93.
7. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப. 323.
8. மு.இராமசாமி, ரௌத்திரம் பழகு, பக்.53-54.
9. வெ. நீலகண்டன், ஊர்க்கதைகள், பக்.59-60.
10. மு. ஹரிகிருஷ்ணன், நாயிவாயிச்சீல, ப. 103.
11. மு. இராமசுவாமி, மு.கூ.நூ.,ப. 56.
12. ஆனந்தவிகடன், (சிற்றிதழ்), 16-04-2008, ப. 43.
13. ஆசு, மு.கூ.நூ., பக். 30-31.
14. கார்த்திகை பாண்டியன், (தொ.ஆ.), வலசை (காலாண்டு இதழ்) ப. 137.
15. லிவிங் ஸ்மைல் வித்யா, மெல்ல விலகும் பனித்திரை, ப. 53.
16. மகராசன், (தொ.ஆ), மு.கூ.நூ.,ப. 15.
17. ரேவதி, உணர்வும் உருவமும், ப. 74.
18. ம. ஹரிகிருஷ்ணன், மு.கூ.நூ.,ப. 102.
19. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.334.
20. மேலது., ப. 337.
21. ஆர். நூருல்லா, அலிகள் வாழ்க்கை, ப.25.
22. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., பக். 10-11.
23. மு. ஹரிகிருஷ்ணன், மு.கூ.நூ.,ப. 105.
24. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., பக்.177-179.
25. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.338.
26. தினமலர், (நாளிதழ்), 2-2-2016,ப. 9.
27. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.42.
28. தினமலர், (வாரமலர்), 16-11-2011, ப.9.
29. திருநங்கை ப்ரீத்தி, நேர்காணல், 14.11.17.
30. ம. தவசி, மு.கூ.நூ.,ப. 145.
31. ரமேஷ் பிரேம், குருவிக்காரச் சீமாட்டி, ப. 63.
32. கு. கார்க்கி, தோழி, ப.134.
33. தினமலர், (நாளிதழ்), 21-07-2016,

34. இலக்கியவேல், (சிற்றிதழ்), பிப்ரவரி, 2017, ப. 33.
35. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., பக்.23-24.
36. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.335.
37. துரை. இராசாராம், (உ.ஆ), பதினெண்கீழ்க்கணக்கு, இனியவை நாற்பது, பாகம்-1, ப.ா..எ.13, ப.72.
38. அ. மங்கை, எதிரொலிக்கும் கரவொலிகள், பக். 24-25.
39. ம. தவசி, மு.கூ.நூ., ப. 146.
40. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.257.
41. புதிய கோடாங்கி (சிற்றிதழ்), செப்டம்பர் 2016, ப. 45.
42. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., பக்.20-21.
43. மு. இராமசுவாமி, மு.கூ.நூ., ப. 58.
44. புதிய தென்றல், (சிற்றிதழ்), அக்டோபர்-2016, ப. 31.
45. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.4.
46. கார்த்திகைப் பாண்டியன், மு.கூ.நூ., ப.141.
47. மேலது., ப. 143.
48. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.241.
49. மேலது., ப. 328.
50. மேலது., ப. 329.
51. பாடம் (சிற்றிதழ்), டிசம்பர்-2016,ப.21.
52. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., பக்.215-215.
53. தி. இந்து(நாளிதழ்), 3-10-2018, ப. 11.
54. கே.ஏ. குணசேகரன், தொடு, ப. 22.
55. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.22.
56. மேலது., ப. 322.
57. வெ. நீலகண்டன், மு.கூ.நூ.,ப. 61.
58. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.33.
59. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.343.
60. மேலது.,பக்.326-328.
61. கே.ஏ. குணசேகரன், தொடு, ப. 19.
62. அ. மங்கை, மு.கூ.நூ.,ப.56.
63. மகராசன் (தொ.ஆ), மு.கூ.நூ., ப.330.
64. தினமலர் (நாளிதழ்), 1-02-2016,
65. ரேவதி, உணர்வும் உருவமும், ப.43.
66. கே.ஏ. குணசேகரன், தொடு, ப.23.

67. தி. இந்து, (நாளிதழ்), 17-10-2017.
68. வெ. கண்ணுப்பிள்ளை, சமுதாய மக்களாட்சி வழிமுறைகள், ப1.
69. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.62.
70. எஸ். இராமகிருஷ்ணன், அரவான், ப. 13.
71. திருநங்கை ப்ரீத்தி, நேர்காணல், நாள்: 14.11.2017.
72. மகாராசன், (தொ.ஆ), மு.கூ.நூ., ப. 245.
73. மேலது., ப. 245.
74. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.26.
75. தினமலர் (நாளிதழ்), 20-06-2016.
76. ம. தவசி, மு.கூ.நூ., ப. 139.
77. ரமேஷ் பிரேம், மு.கூ.நூ., ப. 65.
78. மகாராசன், (தொ.ஆ), மு.கூ.நூ., ப.238.
79. மு. ஹரிகிருஷ்ணன், மு.கூ.நூ., ப. 102.
80. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.24.
81. இராமசுவாமி, மு.கூ.நூ.,ப . 53.
82. புதிய தென்றல், (சிற்றிதழ்), அக்டோபர் -2016, ப. 33.
83. தி. இந்து, (நாளிதழ்), 6-03-2016.
84. மகாராசன், (தொ.ஆ), மு.கூ.நூ., ப.217.
85. எஸ். அர்ஷியா, மு.கூ.நூ., பக்.111-112.
86. கே.ஏ. குணசேகரன், மு.கூ.நூ., ப. 27.

இயல் – 4

இனவரைவியல் நோக்கில் திருநங்கையர் பதிவுகள்

4.0 முன்னுரை

இனக்குழு சமுதாயக் கருத்தியல் பழங்காலந்தொட்டே எழுந்ததாகும். மனிதன் பரிணாமம் அடைந்தபின் தனித்தனி குழுவாக வாழும்போதே தங்கள் வாழ்வியல் நிலைகளை, ஒரு குறிப்பிட்ட வடிவத்திற்குள் கொணர்ந்து தங்களை அடையாளப்படுத்தினான். பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்கு முறைகள் சார்ந்த வாழ்க்கை முறைகள் ஒவ்வொரு குழுவுக்குள்ளும் வேறுபடுகின்றன. சாதி, மதம் இவற்றைத் தாண்டி திருநங்கையர்கள் சமூக மக்களிடம் வேறுபட்டு ஒரு தனித்த குழுவாகவே வாழ்கின்றனர். குடும்ப நிறுவனங்களிலும், சமுதாயத்திலும் பின்பற்றும் இனவரைவியல் கூறுகளிலிருந்து திருநங்கையர்களுக்கான இனவரைவியல் கூறுகள் முற்றிலும் வேறுபடுகின்றன. திருநங்கையர் குறித்த தொன்மங்கள், வரலாற்றுப் பதிவுகள், இலக்கண, இலக்கியப் பதிவுகள், இதிகாசப் புராணப் பதிவுகள் அவர்களின் சடங்கு முறைகள், வழிபாட்டு முறைகள், பாடல்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், குடும்ப சமூக அமைப்புகள், உறவு முறைகள், மொழி, தொழில்கள் போன்றவற்றை ஆய்வுத் தரவுகளில் உள்ள பதிவுகளின்வழி வெளிக் கொணர்வதை இவ்வியல் ஆராய்கின்றது.

4.1 இனவரைவியல் – கருத்தாக்கம்

குறிப்பிட்ட இனக்குழுவின் வாழ்வியலையும், வழக்காறுகளையும் அறிவது 'இனவரைவியல்' ஆகும்.

''சமுதாயப் பண்பாடு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய 'Ethnography'

> என்னும் ஆங்கிலச் சொல் 'Ethnos', 'Graphein' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. 'Ethros' என்பதற்கு இனம் (Rare), இனக்குழு (Ethrie group), மக்கள் (People) என்பது பொருள். Graphein என்பதற்கு 'எழுதுவது' அல்லது 'வரைதல்' (to write) என்பது பொருள். ஆகவே, இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை 'இனக்குழுவியல்' என்றும் கூறலாம்."[1]

என பக்தவத்சலபாரதி 'பண்பாட்டு மானிடவியல்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

> "ஒரு பண்பாடு வரி வடிவத்தில் விளக்கப்படுவதே இனவரைவியல் என்று அழைக்கப்படுகின்றது. இது பண்பாட்டை எழுதுதல் (Writing Culture) என்றும் குறிக்கப்படுகின்றது. அது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்கள் குழுவின் பண்பாட்டை முழுமையாக எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு குறிப்பிட்ட இனக்குழு அல்லது பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியலாகும்"[2]

என்று ஞா.ஸ்டீபன் இனவரைவியலுக்கு விளக்கம் அளிக்கின்றார்.

4.2 தொன்மங்கள் – வரையறை

திறனாய்வு அணுகுமுறைகளில் குறிப்பிடத்தகுந்த உத்திமுறை 'தொன்மம்' ஆகும். நிகழ்கால நிகழ்வுகளோடு அது குறித்த முந்தைய வரலாற்றுப் பதிவினை ஏற்றி உரைத்திட தொன்மங்களைப் படைப்பாளிகள் கையாள்கின்றனர்.

திருநங்கையரைக் குறித்த தொன்மப் பதிவுகள் அண்மைக் காலங்களில் மட்டும் எழுந்த ஒன்று அன்று. புராண, இதிகாச, வரலாறுகளிலேயே திருநங்கையர் குறித்த

பதிவுகள் இருக்கின்றன. திருநங்கையர் குறித்தும், திருநங்கையர் வழிபடும் தெய்வங்கள் குறித்தும் தொன்மங்கள் பல உலகம் முழுவதும் நிலவி வருகின்றன.

> **''புராணக் கதையை ஆங்கிலத்தில் 'Myth' என்றும் புராணவியலை 'Mythology' என்றும் வழங்குவர். 'Myth' என்பது 'Mythis' என்ற கிரேக்கச் சொல்லினின்று உருவானதாகும். Myth என்ற சொல்லுக்கு இணையாகப் புராணம், புராணக் கதை, தொன்மம், புனைகதை, புராண மரபுக் கதை, தொல் கதை எனத் தமிழில் வழங்குவர். Myth என்ற சொல்லிற்கு இணையாக 'தொன்மம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.''**[3]

என்று சு.சக்திவேல் 'நாட்டுப்புற இயல் ஆய்வு' எனும் நூலில் குறிப்பிடுகிறார். திருநங்கையர் பற்றிய விரிவான புரிதல்களுக்குத் தொன்மங்கள் குறித்து ஆராய்வது முக்கியமாகும்.

4.2.1 கிரேக்கத் தொன்மம்

கிரேக்கத் தொன்மத்தில் திருநங்கையர் பற்றிய பதிவுகள் உள்ளன. 'தெய்ரிசியாஸ்' ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவன்.

> **''தெய்ரிசியாஸ் ஓர் ஆணாகப் பிறந்து வளர்ந்து மற்றவர்களைப் போலப் பெண்களிடம் இன்பம் துய்த்து வந்தான். ஆனால் தன் நடு வயது பருவத்தில் கடவுளர்க்கு அபவாதம் செய்த குற்றத்திற்காக, ஏழு வருடத்திற்குப் பெண்ணாக மாற்றப்பட்டு, ஆண்களிடம் சுகித்து வந்தான். பிறகு எட்டாவது ஆண்டில், குற்றம் மன்னிக்கப்பட்டுத் திரும்பவும் ஆணாக மாறிவிட்டான். ஒருநாள் ஹெரா பெண்ணானவள் தனக்குத் துரோகம் செய்வதாகச் சர்வ வல்லமை பொருந்திய ஜீவஸைக் குற்றம் சாட்டினாள். அதற்கு ஜீவஸ், காம விளையாட்டில் ஆண்களை விட பெண்கள் அதிக இன்பம் பெறுவதால், அதை ஈடுகட்ட ஆண்கள் வேறு**

பெண்களிடம் உறவு கொள்கிறார்கள் என்று பதிலுரைத்தார். மற்றும் ஹெராவுக்கு இதிலுள்ள நன்மை என்னவெனில் ஒவ்வொரு முறையும் அவர் அவளுடன் சேரும்போதும், அவள் கணக்கிலுள்ள சுகத்தின் அளவு கூடிக்கொண்டே போகிறது. ஆனால், ஹெராவோ அவர் சொன்னது சாத்தியமே கிடையாது என்று வாதித்தாள். காம விளையாட்டின் மூலம் அறிவது என்னவெனில் பெண்களைவிட ஆண்கள்தான் அதிகச் சுகத்தைப் பெறுகிறார்கள் என்று வாதித்தாள். இந்தச் சச்சரவை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஆணாகவும், பெண்ணாகவும் இருந்த அனுபவம் பெற்றவன் வாயிலாகச் சரியாகத் தீர்ப்பு சொல்லும் திறமை படைத்த தெய்ரிசியாசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த விஷயத்தில் தான் சொல்லப் போவது என்னவென்பதை நன்றாகவே உணர்ந்திருந்த தெய்ரிசியாஸ் சொன்னான். காம விளையாட்டில் பத்துப் பாகம் உள்ளது என்று கொண்டால் அதில் ஒன்பது பாகத்தைப் பெண் அனுபவிக்கின்றாள். மீதமுள்ள ஒரு பாகத்தை மட்டுமே ஆண் அனுபவிக்கின்றான். இதை நான் உறுதியாக அறிவேன் என்று தீர்ப்பு சொன்னான். மகா பெருமை வாய்ந்த ஹெரா ஜீவஸிடம் தோற்றுப் போனதைத் தாங்க முடியாமல் அதே இடத்தில் தெய்ரிசியாஸைக் குருடாக்கிவிட்டு உடலை ஆட்டிக் கொண்டே போய்விட்டாள். ஆனால் ஜீவஸோ தெய்ரிசியாஸின் இழப்பிற்கு ஈடாக, எதிர்காலத்தைக் கணிக்கும் ஞானப் பார்வையை அளித்துவிட்டார். மற்றும் ஹெரா பெண்ணை வெற்றி கொள்ள ஜீவஸிற்கு உதவியதால் அவன் வாழ்நாளை ஏழு பிறவிக்கு நீட்டித்து அருள் செய்தார்”[4]

என்று ‘கிரேக்கத் தொன்மம்’ குறித்து ‘பள்ளியறை ஒடிஸி’ எனும் நூலில் பெரு. முருகன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறிய தெய்ரிசியாஸ் தொன்மம் சுட்டப்படுகின்றது.

4.2.2 திருமால் அவதாரத் தொன்மம்

அ) பாற்கடலைக் கடையும் போது கிடைத்த அமிர்தத்தை அசுரர்களை ஏமாற்றித் தேவர்களுக்கு வழங்க பிரம்மாதி தேவர்கள் ஸ்ரீஹரியிடம் சென்று தங்களுக்கு உதவுமாறு வேண்டினர்.

> **''எல்லோரும் கடற்கரையில் கூடி அமிர்தம் பெறக் காத்திருந்தனர். அப்போது அவர்கள் காதில் ஓர் இனிய கானம் வந்து விழுந்தது. கானம் வந்த திசையில் எல்லாரும் வியப்புற்று பார்க்க ஓர் அழகு சுந்தரி தாங்கள் இருக்குமிடத்திற்கு வருவதைக் கண்டனர். இவ்வாறு மகாவிஷ்ணு ஜகன்மோஹினி வடிவில் வந்து கொண்டிருந்தார்''**[5]

என்று திருமாலின் பெண் அவதாரம் குறித்து கூறப்படுகிறது.

ஆ) புராணங்களில் கடவுளர்கள் பெண்ணாக மாறிய தொன்மங்கள் பதிவாகி உள்ளன. 'பஸ்மாசுரன்' என்ற அரக்கன் முனிவருக்கும், தேவர்களுக்கும் பல தொல்லைகள் கொடுத்து வருகின்றான். சிவபெருமானை நோக்கி அவன் தவமிருந்து, 'தான், யார் தலையில் கை வைத்தாலும் அவர் எரிந்து சாம்பாலாகும்'படி வரம் பெற்றான். சிவபெருமான் தலையிலேயே கை வைக்க முயன்றான். நாரதரின் வேண்டுகைப்படி பரந்தாமன் மோகினி வடிவம் எடுத்தார். அசுரன் அவள் அழகில் மயங்கினான்.

> **''மோகினியும் அதற்குச் சம்மதித்து அவனை நீரில் மூழ்கித் தூய்மையாகி வருமாறு கூற அவன் தன் கையை நீராடும் போது தலை மீது அறியாமலேயே வைத்துக் கொள்ள எரிந்து சாம்பலானான். பின்னர் மோகினி வடிவில் இருந்த நாராயணன் ஈசன் ஒளிந்திருந்த ஐவேல மரத்திற்கு வந்து நடந்ததைக் கூற, ஈசன் வெளியே வந்தவர் மோகினியின் அழகில் மயங்கி தன்னை இழந்து கட்டித் தழுவ அதன் பலனாய் ஹரிஹர புத்திரனான ஐயப்பன் தோன்றினான்.''**[6]

என்று புராணப் பதிவுகள் கூறுகின்றன. இதன்வழி திருமால் ஆணாக இருந்து பெண்ணாக மாறிய மோகினி அவதாரச் செயல் குறிப்பிடப்படுகின்றது.

4.2.3 அர்த்தநாரீசுவரர் தொன்மம்

வலப்பாதி சிவவடிவாகவும், இடப்பாதி உமையாகவும் இருக்கும் கோலம் 'அர்த்தநாரீசுவரர்' தோற்றமாகும். இத்தோற்றத்தை மணிவாசகர் 'தொன்மைக் கோலம்' என்று குறிப்பிடுகிறார்.

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து உளதாய் கோத்தும்

என்கிறார்.

(வலம்) சிவபாகத்தில்	**(இடம்) உமைபாகத்தில்**
தோலாடை	**துகில் ஆடை**
காதில் குழை	**சுருள் தோடு**
பால்வெண்ணீறு	**பசுஞ்சாந்து**
கையில் சூலம்	**கிளி, கையில் வளை**

இக்கோல வடிவு நான்கு திருக்கரங்களுடனும் மூன்று திருக்கரங்களுடனும் இடபத்தின் அருகில் நிற்கும் நிலையிலும் பலவிதமாகக் காணப்படும்''[7]

என்று சிவபெருமானின் அர்த்தநாரீசுவரத் தோற்றம் எடுத்துரைக்கப்படுகின்றது. இதனைச் சம்பந்தர், தேவாரத்தில் பாடியதை, சிவகுருநாதப்பிள்ளை எடுத்துக்காட்டுகிறார். மேலும்,

''பார்வதி பிராட்டி கௌதமர்

ஆச்சிரமத்தில் தவஞ்செய்து சிவமூர்த்தியின்

திருவுருவில் பாதியுருப் பெற்றனள்

அன்றுமுதல் அர்த்தநாரீபாகன் ஆயினன்''[8]

என்று அபிதான சிந்தாமணி அர்த்தநாரீசுவரர் தோற்றத்திற்கு விளக்கம் தருகிறது.

ஆணும் பெண்ணும் கலந்த உருவமாக, கடவுள் உருவத்தில் 'அர்த்த நாரீசுவரர்' காணப்படுகிறார். இதனைப் போலவே ஆணும் பெண்ணும் கலந்த படைப்பாக இருக்கும் திருநங்கையர் படைப்பையும் அர்த்தநாரீசுவர உருவமாகவே பக்திப் பனுவல்களில் பதிவு செய்யப்படுகிறது. இவ்வகையில் அர்த்தநாரீசுவரர் தொன்மம் பற்றி ஆண்டாள் பிரியதர்ஷினி 'நானும் இன்னொரு நானும்' எனும் கவிதைத் தொகுப்பில்,

''எய்ட்ஸ் வரம்

உன்குற்றம்

அர்த்தநாரீஸ்வரம்

என் குற்றமா?'' (நா.இ.நா. 12)

என்று பதிவு செய்கிறார்.

4.2.4 மகாபாரதத் தொன்மம்

4.2.4.1 அர்ஜுனன் திருநங்கையாதல்

அர்ஜுனனை இந்திரன் சபையில் உள்ள ஊர்வசி விரும்புகிறாள். ஊர்வசி அர்ஜுனனை நாடி வந்து தன் விருப்பத்தைக் கூறும்போது, அர்ஜுனன் அதனை ஏற்க மறுக்கிறான். ஊர்வசி சபிக்கிறாள்.

''அர்ச்சுனா! நானே உன்னை நாடி வந்தும் என்னை ஏற்காது அவமதித்து விட்டாய். எனவே பேடியாகி, பெண்களின் மத்தியில் திரிவாயாக''[9]

என்று ஊர்வசி கொடுத்த இந்தச் சாபத்தை அர்ஜுனன் அஞ்ஞாதவாசத்தில் பயன்படுத்திக் கொள்கிறான். தருமர் அர்ஜுனனிடம், 'ஊரில் மறைந்து வாழ என்ன உருவம் எடுத்திடப் போகின்றாய்' என்கின்றார்.

> **''உருப்பசி (ஊர்வசி) எனக்குச் சாபமாகக் கொடுத்த பேடியுருவத்தை இந்த ஓர் ஆண்டிற்குப் பயன்படுத்திக் கொள்வேன். திரௌபதிக்குத் துணையாக இருந்தேன் என்று சொல்லிக் கொள்வேன். என் பெயர் 'பிருகந்தளை' விராட மன்னன் மகள் உத்தரை முதலாக உள்ள பெண்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்து ஓர் ஆண்டு காலத்தைக் கழிப்பேன்.''**[10]

என்று அர்ஜுனன் கூறுகிறான். அர்ஜுனன் ஓராண்டு பெண்ணுருக் கோலம் பூண்டது. இதன்வழி அறிய முடிகின்றது.

4.2.1.2 அம்பை சிகண்டியாதல்

மகாபாரதத்தில் 'அம்பை' பாத்திரம் பெண்ணாக இருந்து ஆணாக மாறும் பாத்திரம். 'பீஷ்மர்' தனது சகோதரன் விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்ய, காசி மன்னன் புதல்விகளான அம்பை, அம்பாலிகை, அம்பிகை எனும் மூவரையும் மணமுடிக்க விரும்புகிறார். அதில் அம்பை, தான் பிரமதத்தனை மணக்க விரும்புவதாகக் கூறுகிறாள். பிரமதத்தன் அவளை ஏற்க மறுக்கிறான். பின் அம்பை பீஷ்மர் தன்னைத் திருமணம் செய்ய வேண்டுகிறாள். பீஷ்மரும் மறுக்க, சிவனை நோக்கித் தவம் இருந்து அடுத்த பிறவியில் பீஷ்மரை அழிக்க வரம் வாங்குகிறாள். அடுத்த பிறவியில் துருபதனின் மகள் 'சிகண்டியாகப்' பிறக்கிறாள். துருபதன், பீஷ்மரின் எதிர்ப்பை ஏற்க அஞ்சி, சிகண்டியைக் கானகம் அனுப்புகிறான். சிகண்டி 'இஹீகர்' எனும் முனிவருக்குப் பணிவிடை செய்கிறாள். பின் அவரின் ஆணைப்படி கங்கோத்ரிக்குச் செல்கிறாள். அங்கு ஒரு கந்தர்வனைச் சந்திக்கிறாள்.

''அவன், அம்பை என்ற அப்பெண்ணைக் கண்டு, பெண்ணே! நான் பெண்ணாக மாற விரும்புகிறேன். அதனால் என் வடிவத்தை எடுத்துக் கொள். உன் பெண் வடிவத்தை எனக்குக் கொடு என்று கேட்டுக் கொண்டான். அம்பையும் அதற்குச் சம்மதித்தாள். இருவரும் தத்தம் உருவங்களை மாற்றிக் கொண்டனர். அந்தக் கந்தர்வன் பெண்ணாக மாறி மகிழ்வுடன் சென்றான். பெண்ணாக இருந்த அம்பை ஆணாக மாறி, சிகண்டி என்ற பெயர் பெற்று பாஞ்சால நாடு சென்று பற்பல படைக்கலப் பயிற்சிகளைப் பெற்றான். பின் தந்தை துருபதனிடம் சென்றான். 'அப்பா, நான்தான் அம்பை என்கிற சிகண்டி. இனி நான் ஆண்மகன். பீஷ்மரின் மரணத்தைக் காட்டும் இந்தத் தாமரை மலர் மாலையைக் கண்டு நீங்கள் அஞ்ச வேண்டாம். எப்படியும் நான் அவரைக் கொல்வேன்' என்று வணங்கிக் கூறினான்.''[11]

என்ற மகாபாரதக் கதை அடிகளின்வழி பெண்ணாய் இருந்து ஆணாய் மாறிய 'சிகண்டி' என்ற பாத்திரத்தின் தொன்மம் பதிவு செய்யப்படுகின்றது.

'அழிபசி' எனும் கவிதையில் தவசிக் கருப்பசாமி ஆண்களால் வன்புணர்வுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட திருநங்கை மேற்கொள்ளும் சபதமாய்,

''அங்கம் அறுபத்தி நான்கும் வங்கம் திறந்து
தானாய் சூல்கொள்ளுமொரு வன்மம் பெறுவேனொரு
திருநங்கையை – பெற்று வளர்ப்பேன் நின் வஞ்சகஞ் சொல்லி
அயோக்கிரமா சிரம் அறுப்பாள் சிகண்டி
கொதிப்படங்க உதிரங்குடிப்போம் யாம்''[12]

என்ற கவிதை அடிகளில் மகாபாரதத்தில் வரும் சிகண்டியைப் போன்று பிள்ளை பெற்று, தன் சபதத்தை நிறைவேற்ற காத்திருக்கும் பெண்ணின் மனநிலை படம் பிடித்துக் காட்டப்படுகிறது. திருநங்கை தோற்றத்தில் சிகண்டி ஆணாதிக்கத்தை அழித்திடும் வீரமிக்க பாத்திரமாக இக்கவிதையில் பதிவு செய்யப்படுகின்றது.

4.2.5 இராமாயணத் தொன்மம்

இராமாயணக் காலத்தில் தந்தையின் கட்டளைக்கு இணங்கி, இராமன் காட்டுக்குச் செல்லும் வேளையில் இராமனோடு உடன் வந்த ஊர் மக்களை நோக்கி, 'ஆண்களும் பெண்களும் இல்லம் திரும்புங்கள்' எனக் கூறி இராமன் காடு சென்றார். பதினான்கு ஆண்டு வனவாசம் முடிந்து இராமன் அயோத்தி திரும்பும் வேளையில் சிற்சில மணற் குன்றுகளையும் அவற்றிலிருந்து வெளிவரும் மின்னல் போன்ற ஒளிக்கற்றையையும் கண்டு அவற்றைத் தொட, அக்குன்றுகள் உதிர்ந்தன. அதில் எலும்புக் கூடுகள் கண்களில் ஜீவனுடன் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் அவற்றிற்கு உயிர் அளித்தார். அவைகள் புத்துயிர் பெற்று இராமனை வணங்கின. அவர்கள்தான் திருநங்கையர் எனப் பிரியா பாபு தனது 'வெற்றிப் பாதையில் திருநங்கையர்' எனும் நூலில் பதிவு செய்திருக்கிறார். இராமன் அவர்களிடம் 'எதற்கு இப்படி ஆனீர்கள்' எனக் கேட்க,

> **''சுவாமி தாங்கள் அன்னை சீதாதேவியுடன் வனம் செல்ல . . . நாங்களும் வந்திருந்தோம். நீங்கள் ஆண், பெண்களே வீடு திரும்புங்கள் என்று மட்டுமே கூறினீர்கள். ஆனால் எங்களைக் குறித்து எதுவும் கூறவில்லை. ஆகையால் தங்களின் சொல்லுக்காகக் காத்துள்ளோம்''**[13]

என்று கூறிய பதிவின்வழி திருநங்கையரின் உறுதிப்பாடும், சொல்லுக்குக் கட்டுப்படும் தன்மையும் புலனாகிறது. இத்தொன்மத்தை ஆங்கில நாடக ஆசிரியரும் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

மகேஷ் தத்தானி எனும் நாடக ஆசிரியர் தமது கலெக்டடு ப்ளேஸ் (Collected Plays) எனும் ஆங்கில நூலில் 'செவன் ஸ்டெப் அரவுண்ட் தி ஃபயர்' (Seven Step Around the Fire) எனும் நாடகத்தில் இராமாயணத் தொன்மத்தைப் பதிவு செய்கிறார்.

> "Another legend traces their ancestry to the Ramayana. The legend has it that God Rama was going to cross the river and go into exile in the forest. All the people of the city wanted to follow him. He said, 'Men and women, turn back'. Some of his male followers did not know what to do. They could not disobey him. So they sacrificed their masculinity, to become neither men nor women, and followed him to the forest. Rama was pleased with their devotion and blessed them"[14]

இங்கு ஆண்களையும் பெண்களையும் இராமர் திரும்பச் செல்லக் கூறுவதால், சில ஆண்கள் செய்வதறியாது நிற்கின்றனர். எனவே, அவ்வாண்கள் தங்கள் ஆணுறுப்பைக் களைந்து இராமனுடன் செல்ல முற்பட்டுள்ளதாக இப்பதிவின் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு சிற்சில மாறுதல்களுடன் செவி வழி இராமாயணக் கதைகள் நூல்களில் பதிவாகியிருக்கின்றன.

4.2.5.1 கம்பராமாயணத்தில் திருநங்கையர்

கம்பர் போற்றத்தக்க இடத்தில் திருநங்கையர்களை வைத்துப் பாடவில்லை. கம்பராமாயணத்தில் யுத்த காண்டத்தில் இரணியன் வதைப்படலத்தில், 'இரணியன் பெண், ஆண், அலி என எவராலும் இறக்க மாட்டான்' என அவனது நிலை பற்றிக் கூறப்படுகிறது.

"பெண்ணில் பேர்எழில் ஆணினில் அலியினில்

உள்நிற் கும்உயிர் உள்ளத்தில், பிறிதும் இல்லத்தில் உலவான்"[15]

எனும் இவ்வடிகளில் 'அலி' எனும் சொல்லாட்சி பயின்று வந்துள்ளதை அறியலாம். யுத்த காண்டத்தில், முதற் போர்புரி படலத்தில், அனுமனின் வீரம் பற்றி இராவணன் கூறுகிறான்.

"வலிஎன்பதும் உளதேஅது நின்பாலது மறவோய்!

அலிஎன்பவள் புறம்நின்றவர், உலகுஏழையும் அடர்த்தாய்''[16]

'வீரனே! வலிமை என்பது ஒன்று உண்டாயின் அது உன்னிடத்தில்தான் உள்ளது. மற்ற வீரர்கள் எல்லாம் உன்னைப் பார்க்குமிடத்து 'அலி' என்றே சொல்லத் தக்கவர்' என இராவணன் கூறுகிறான். இங்கு, கம்பர் 'அலி' என்போர் வீரமற்றவர் என்ற இழிபொருளில் பதிவு செய்திருக்கிறார்.

4.2.6 வரலாற்றுப் பதிவுகளில் திருநங்கையர்

சீனாவின் நட்புத் தூதராக இருந்தவர் ஒரு திருநங்கை. 'பண்டைய நாகரிகங்கள்' எனும் நூலில் எஸ்.எல்.வி. மூர்த்தி இதனைக் குறிப்பிடுகிறார்.

''சீனாவின் நட்புத் தூதராகச் சக்ரவர்த்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஜெங் ஹி (Zheng He) இவர் ஒரு திருநங்கை. அன்றைய சீனாவில் ஏராளமான திருநங்கையர் நிர்வாகத்திலும், ராணுவத்திலும் முக்கிய பதவிகளில் இருந்தார்கள். அவர்களுள் மிக உயர்ந்த பதவியான கப்பற் படைத் தளபதி பதவியைத் தன் முப்பத்தைந்தாவது வயதிலேயே எட்டியவர் இவர். ஹியின் திறமையில் வைத்த முழு நம்பிக்கையால்தான், சக்ரவர்த்தி நாட்டின் நட்புத் தூதராக இவரை நியமித்தார்.''[17]

நம் நாட்டில் மட்டும் அல்ல; அண்டை நாடுகளிலும் அரசு நிர்வாகத்திலும், முக்கியமான பொறுப்புகளிலும் திருநங்கையர் நியமிக்கப்பட்டுள்ளனர். கிளியோபாட்ராவின் அரசியல் வரலாற்றில் திருநங்கையர் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

''போதினெஸ் (Phthinus) என்ற திருநங்கை பன்னிரெண்டாம் தாலமிக்கு மிகவும் நெருக்கமான நண்பர். தேர்ந்த ராஜதந்திரி. எகிப்தின் தலைமைச் செயலாளராகப் பல காலம் பணியாற்றிக் கொண்டிருப்பவர். தாலமியைப் பல தருணங்களில் பல சிக்கல்களில் இருந்து மீட்டெடுத்தவர். குழந்தைப் பருவத்திலிருந்தே கிளியோபாட்ராவைக் கவனித்து வந்தவர்''[18]

என்றும்,

> **‘‘போதினெஸின் தலை வெட்டப்பட்டது. பின்பு அதை அலெக்ஸாண்ட்ரியாவின் அரண்மனைக்கு வெளியே ஓர் ஈட்டியில் செருகி சாட்சிக்கு வைத்திருந்தார்கள் என்கிறது ஒரு குறிப்பு. இவர் ஒரு திருநங்கை. அந்தப்புரங்களில் திருநங்கைகளைக் காவலர்களாக நியமிக்கும் வழக்கம் காலம் காலமாக இருந்து வந்தது. தவிர இளவரசிகள், அரசிகள் செயலாளர்களாகவும் திருநங்கைகள் இருந்து வந்தார்கள்.’’**[19]

என்றும் கூறப்படுகிறது. கிளியோபாட்ராவிற்குப் பணிவிடை செய்தவரும் திருநங்கையே ஆவார்.

> **‘‘கிளியோபாட்ராவுக்கு அதிக காலம் பணிவிடை செய்தவர் மார்டியன். இவர் ஒரு திருநங்கை. கிளியோபாட்ராவின் பால்ய காலம் முதல் நட்புடன் இருந்தவர். அவர்களோடு சேர்ந்து மார்டியனும் கல்வி கற்றதாகக் குறிப்புகள் உள்ளன. நம்பிக்கைக்குரியவர். அவரது ஆலோசகராகவும் செயல்பட்டவர்’’**[20]

இதன் வழி அரசுப் பொறுப்புகளில் மட்டும் அல்லாது அரசிகளுடன் திருநங்கையர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகின்றது.

வரலாற்றில் முக்கிய இடத்தைத் திருநங்கையர்கள் பிடித்ததால்தான் ராகினிசந்திரன் தம் கவிதையில்,

> **‘‘முகலாய சாம்ராஜ்ய**
> **முகவரிகள் ஒட்டச் செய்த**
> **ஒற்றர்கள்’’**[21]

என்று தம் கவிதை அடிகளில் சுட்டுகிறார். 'மாலைகள்' புதினத்திலும் திருநங்கையரின் மறைக்கப்பட்ட வரலாறு குறித்து, அருணிடம் வெற்றிச் செல்வியின் தாய் பின்வருமாறு கூறுகிறாள்.

> **''கி.மு. இருபத்திரண்டாம் நூற்றாண்டுகள்ள சுமேரிய நாகரிகத்தில் அப்போதைய ராஜாங்கங்களில் ராணுவ அதிகாரிகளாக, நீதிமன்ற அதிகாரிகளாக அரச குடும்பங்கள்ள, பெண்கள்ள பாதுகாக்கிற அந்தப்புர அதிகாரிகளா ஏன் . . . கோவில் பூசாரிகளா அரசியல் ஆலோசகர்களாகவும் திருநங்கையர் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்களாக வாழ்ந்திருக்காங்க. காகிதத்த உலகத்துக்கே கண்டுபிடித்து சொன்ன சீன நாட்டு 'காய்லூன்' யார் தெரியுங்களா? . . . திருநங்கைதான் . . . வியட்நாமின் விடுதலைக்கான முதல் சுதந்திர பிரகடனத்தில் கையெழுத்திட்ட அந்த பெருமைக்குரிய 'தோழியர் வங்கியட்' ஒரு திருநங்கைதான். ஆயிரத்து எழுநூற்று தொண்ணுத்தி நாலாவது ஆண்டில் பெர்ஷியாவின் மன்னரும் காஜர் வம்சத்தைத் தோற்றுவித்தவருமான முகமதுகான் காஜரும் எங்களைப் போன்ற திருநங்கைதான். சீன நாட்டின் புகழ்பெற்ற கப்பற்படை தளபதியான 'செங்ஹி' கூட திருநங்கைதான். கிளியோபாட்ராவினுடைய டாலமிப் பேரரசு. ஆசிரிய பேரரசுகள்ல செல்வாக்கு மிக்கவங்களா திருநங்கைகள் முத்திரை பதிச்சிருக்காங்க. வியட்நாம் பேரரசின் ராஜகுடும்பங்கள்ல பல வாரிசுகள் திருநங்கைகள்தான் அருண் . . . ''**[22]

என்று வரலாற்றில் தடம் பதித்த திருநங்கையரின் பட்டியலைப் போந்தூர் கனகசுந்தரம் 'மாலைகள்' புதினத்தில் பதிவு செய்கிறார்.

4.2.7 அரவான் தொன்மம்

மகாபாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றி பெற முப்பத்திரண்டு இலட்சணங்களும் எதிர் ரோமமும் கொண்டவன் பலியிடப்பட வேண்டும் என்று

சகாதேவன் கூறுகிறான். நாகக் கன்னிகை உலூபிக்கும் அர்ஜுனனுக்கும் பிறந்தவன் அரவான்.

> ‘‘சாமுத்திரிகா இலட்சணங்கள் (32) பெற்றவர்கள் மூவர்தான். கண்ணனாகிய நான், அர்ச்சுனன், அரவான். எனவே ‘நீங்கள் போரில் வெற்றி பெற என்னைப் பலியிடுங்கள்’ என்று கண்ணன் நாடகமாட, உடனே தானே முன் வந்து அரவான் பலியாகச் சம்மதிக்கிறான். அரவான் பலியிடப்படுவதற்கு முன்னர் பின்வரும் வரங்களைக் கேட்கிறான்.
>
> 1. பலியிட்ட பின்பும் தலைக்கு உயிர் வேண்டும்.
>
> 2. சாகும் முன் ஒரு பெண்ணை மணம் முடிக்க வேண்டும்.
>
> மேற்கூறிய வரங்களைக் கேட்ட அரவானுக்குக் கண்ணன் வரமளித்தார். தாலி கட்டிய மறுநாளே அரவான் இறப்பான் என அறிந்த அனைவரும் பெண் தர மறுக்க, கண்ணன் பெண்ணுருக் கொண்டு அரவானை மணக்கிறான். யாமள நூலின்படி, கௌரவர்கள் அறியாத வண்ணம் குரு நாட்டிலுள்ள காளிக்கு அமாவாசை முன் தினம், பாண்டவர்கள் அரவானைப் பலியிட்டனர். அரவான் தன் உடல் உறுப்புகளைத் தானே மனமுவந்து அறுத்துக் காளியின்முன் வாழையிலையில் வைத்தான். பின்பு தலை துண்டிக்கப்பட்டு மலர்ந்த முகம் காட்டி நின்றான். பின்பு யானையை பலியிட்டனர்.
>
> கணவன் அரவான் இறந்ததால் பெண்ணுருக் கண்ணன் பூ இழந்து, பொட்டிழந்து, வெள்ளைப் புடவை கட்டி விதவையானான். இதனால் கண்ணன் மறு அவதாரங்களாகத் தங்களை எண்ணிக் கொள்ளும் அரவாணிகள் கூத்தாண்டவரைக் கணவனாக எண்ணித் தாலி கட்டிக் கொள்வதையும் இறந்த பிறகு தாலியறுப்பதையும் களச் சூழலில் நேரடியாகக் காண முடிந்தது’’[23]

என்று பத்மபாரதி 'திருநங்கையர் சமூக வரைவியல்' எனும் நூலில் அரவான் தொன்மம் பற்றிப் பதிவு செய்கிறார்.

ராகினிசந்திரன் தம் கவிதையில்,

"அரவானிப் பூக்கள்

குருஷேத்திரப் போரின்

நடு நாயகர்கள்

பாண்டவர்களின்

துன்பப் புகை போக்கிகள்"[24]

என்று பதிவு செய்கிறார். பாண்டவர்களின் வெற்றிக்காக அரவான் தன்னுயிரைக் கொடுத்ததாலேயே அவர்களால் வெற்றி கொள்ள முடிந்தது. இதனை இக்கவிதை எடுத்துரைக்கின்றது.

4.2.8 பகுச்ராஜீ மாதா தொன்மம்

குஜராத் மோவார் பகுதியை ஆண்ட அரசன் வேட்டைக்குச் செல்லும்போது அவன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஒரு பெண்ணைக் காண்கிறான். அப்பெண்ணின் கூந்தலைக் கண்ட மன்னன் 'கூந்தலே இவ்வளவு அழகு எனில் அவள் முகம் எப்படி இருக்கும்' என எண்ணி நெருங்கிச் சென்று பார்க்கிறான். அவளை அடைய இரவு வருவேன் எனக் கூறிச் செல்கிறான். அவள் எல்லையைக் காக்கும் காளி தேவி. செய்வதறியாது தன் தம்பியிடம் முறையிடுகிறாள். அவள் தம்பி பெண் வேடம் புனைந்து இரவு மன்னனை மகிழ்விக்கிறான். உண்மையை அறிந்த காளிதேவி தனது வாளால் அவனின் ஆணுறுப்பை அறுத்தெறிகிறாள். 'ஆணுக்கு இன்பமளித்த நீ ஆண் அல்லன்' என கூறுகிறாள். பின், 'உன்னைப் போன்ற உணர்வுடையவர்கள் இயற்கையாகப் பிறப்பர். பின் ஆணுறுப்பு களைவர். அவர்கள் உன்னைத் தெய்வமாக

நினைத்து உன் பெயரில் ஆணுறுப்பைக் களைவர். அவர்கள் உன் சந்ததியினர்' என்று கூறுகிறாள்.

> **''இந்தக் கதையின் ஆதாரமான போத்ராஜு மாத்தா ஆலயம் குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் அருகில் போத்ராஜு என்ற சிறு கிராமத்தில் அமைந்துள்ளது''**[25]

என்று திருநங்கை ப்ரியா பாபு பதிவு செய்கிறார்.

> **''சேவல் கூவும் வேளையில் உன் ஆண்குறி அறுத்தெறியப்பட்டுள்ளதால் அந்தச் சேவலையே வாகனமாகக் கொண்டு போத்ராஜு மாத்தா என்ற பெயரில் பூஜிக்கப்படுவாய்''**[26]

என்று கி.அய்யப்பன் பதிவு செய்கிறார். இதனால் திருநங்கையர் 'சேவல் கறி' உண்பதில்லை. பகுச்ராஜீ, போத்திராஜி, பேஜிராஜி, சேவல் மாதா, மூர்கேவாலி மாதா, சந்தோஷிமாதா போன்ற பல பெயர்களில் இத்தெய்வத்தை அழைக்கின்றனர். மாதா தொன்மம் திருநங்கையர்களுடன் இணைத்துக் கூறப்படுகின்றது.

எல்லம்மா தொன்மம்

மகாவிஷ்ணுவின் தச அவதாரங்களில் ஒன்று 'பரசுராமர்' அவதாரம். பரசுராமர் தன் தந்தை 'ஜமதக்னி' முனிவரின் கட்டளைக்கு இணங்க, தன் தாயான ரேணுகாதேவியின் தலையைத் தனது கோடாரியால் துண்டிக்கிறார். இத்தொன்மத்தினைச் சிறு மாறுதலோடு 'பியூஷ் ஸக்சேனா' (Dr.Piyush Saxena) என்ற ஆங்கில ஆசிரியர் தனது 'Life of a Eunuch' எனும் புத்தகத்தில் பதிவு செய்கிறார். ரேணுகாதேவி ஆற்றிற்கு நீர் எடுக்கச் செல்லுகையில் அங்கு நீரில் இளைஞர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்த்தபடி நிற்க, தாமதமாக இல்லம் திரும்புகிறாள். அவள் கற்பின் மீது ஐயம் கொள்ளும் ஜமதக்னி முனிவர், தமது புதல்வர்கள் நால்வரை அழைத்து தாயைக் கொன்று வர கட்டளை இடுகிறார். அவர்கள் மறுக்கின்றனர். பின் ஐந்தாவது மகனான பரசுராமரை அழைத்துக் கட்டளையிட, அவர் தாயைக் கொல்கிறார்.

ஜமதக்னி முனிவர் தன் கட்டளையை ஏற்க மறுத்த முதல் நான்கு புதல்வர்களைப் பாலினம் திரிந்தவர்களாக மாறுமாறு சபிக்கிறார்.

"He ordered his sons oneby one, to kill their mother but four of them refused on one pretext or another Jamadagni cursed them to become eunuchs"[27]

இவ்வாறு பாலினம் மாறுபவர்கள் தனது தாயாக ரேணுகாதேவியை 'எல்லம்மாதேவி' எனும் பெயரில் வழிபடுவதாகத் தன் நூலில் குறிப்பிடுகிறார். எல்லம்மா தேவி வழிபாடு கர்நாடக மாநிலத்தில் மூன்று மாவட்டத்தில் உள்ளதாகக் கூறுகிறார்.

"In the Southern parts of India, Goddess Yellama is known for her abundant strength. Also known by other homer like Jogamma, Renuka, Holiyama etc, her temples are located at Saudathi in Belgum District. Chandraguthi in Shimoga District and Hulgi in Bellary District of Karnataka"[28]

திருநங்கையர்களை நேர்காணல்களுக்குச் சந்தித்தபோது, தாங்கள் வழிபடும் மாதாவை 'எல்லம்மா' என்று கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ரேணுகாதேவியை 'எல்லம்மா' எனும் பெயரில் வழிபடும் தொன்மம் திருநங்கையர் வழிபாட்டுடன் தொடர்பு உடையதாக இருக்கின்றது.

4.2.10 விவிலியத்தில் திருநங்கையர்

கிறிஸ்தவர்களின் மறைநூலான வேத ஆகமத்திலும் திருநங்கையர் குறித்த பதிவுகள் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் 'எசாயா' ஆகமத்தில் 56-ஆவது அதிகாரத்தில்,

"அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும் என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும்

குமாரத்திகளுக்கும் உரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன் என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்''[29]

என்றும் பதிவாகியிருக்கிறது. இதன்வழி அண்ணகர்களாகக் குறிப்பிடப்படும் திருநங்கையருக்கு, 'ஆண், பெண்ணைக் காட்டிலும் உயர்வான இடத்தையும் புகழையும் கொடுப்பேன்' என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின்வழி திருநங்கையர் மேனிலையில் போற்றப்பட்டது பதிவாகியிருக்கிறது.

'திருநங்கையர் வாழ்வியல் இறையியல்' எனும் நூலில் சூ.ம. ஜெயசீலன் திருப்பேரவைக்குள் திருநங்கையருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்கிறார்.

''அம்மோனியர், மோலாபியர், வேசித்தனத்தினால் பிறந்த குழந்தைகள் மற்றும் விதையடிக்கப்பட்டவர், ஆண்குறி அறுக்கப்பட்டவர் ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது''[30]

என்று கூறுகிறார். மேலும்,

''உடலில் குறைபாடுள்ள கூனன், குள்ளன், கண்ணில் பூ விழுந்தவன், சொறி சிரங்கு உடையவன் குருக்களாக வேண்டாம். அண்ணகன் (திருநங்கை) குருவாக வேண்டாம் (லேவி: 21: 20) . . . பலி செலுத்துவதில் இருந்து விலக்கப்பட்ட திருநங்கையர் உடல் ஊனமுற்ற அனைவரும் கடவுளின் தூய அப்பத்தை உண்ணலாம் (லேவி. 21: 22)''[31]

என்ற பதிவிலிருந்து 'புனிதம்' காரணமாகப் புறக்கணிப்புத் தளத்தில் திருநங்கையர் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பினும், 'மனிதம்' காரணமாக, திருநங்கையரை ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்ததையும் அறிய முடிகின்றது. மேலும் இந்நூலில் அந்தப்புரத்திலும், நிதி அமைச்சராகவும், உதவியாளராகவும், பணியாளர்களாகவும் திருநங்கையர் பொறுப்பில் இருந்தார்கள் என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

திருநங்கையர் குறித்த கவிதைகள் சிலவற்றில் தொன்மக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. கவின் மலரின் 'நிராகரிப்பு' எனும் கவிதையில்,

''அனைத்து உயிரினங்களிலும்
ஆணும் பெண்ணுமாய்
ஒரு ஜோடி
நோவாவின் கப்பலில்
நீராலழிந்த புவிக்கோளத்தின்
மீட்டுருவாக்கத்தின் பின்
திகைத்து நிற்கிறான் நோவா
கப்பலில் இடம் மறுக்கப்பட்டும்
பேரழிவுக்குப் பின்னும்
உயிர்த்தெழுந்த
மூன்றாம் பாலினம் நோக்கி''[32]

என்ற இக்கவிதை அடிகளில் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலுள்ள நோவாவின் தோற்றத் தொன்மக் கதை இடம்பெறுகிறது.

மனிதர்களுடைய அக்கிரமமான நடவடிக்கைகளைக் கண்ட பிதா, பூமியில் நீர்ப்பிரளயம் உண்டாக்கிட எண்ணுகிறார். உத்தமனான நோவாவிடம், 'ஒரு பேழை உண்டு பண்ணுமாறு கூறி, நீயும் உன் குடும்பத்தாரும் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களில் ஒவ்வொரு ஜோடியையும் பேழைக்குள் உன்னோடு காத்துக் கொள்' என்று கட்டளையிடுகின்றார். கட்டளையை நிறைவேற்றிய நோவா பல மாதங்களுக்குப்பின் வெளியே வருகிறான். பிதாவின் ஆணைப்படி பேழைக்குள்ளிருந்த அனைத்து உயிரினங்களையும் வெளியே விடுகிறான். இதனை,

''பூமியின் மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல பிராணிகளும், சகல பறவைகளும் ஜாதி ஜாதியாய்ப் பேழையிலிருந்து புறப்பட்டு வந்தன''[33]

என்ற பழைய ஏற்பாட்டு விவிலிய அடிகள் மெய்ப்பிக்கின்றன. இங்கு, பிதாவின் கட்டளைப்படி பேழைக்குள் எல்லா வகை உயிரினங்களுக்கும் இடம் அளித்த நோவா மூன்றாம் பாலினத்தை நிராகரிக்கின்றான். நோவாவால் நிராகரிக்கப்பட்டும் பேழைக்குள் இருந்து எல்லா வகை உயிரினத்தைப் போல மூன்றாம் பாலினரும் மீட்டுருவாக்கத்தின்பின் வெளியே வந்ததாகக் கவின் மலர் குறிப்பிடுவதிலிருந்து, 'திருநங்கையரின் பிறப்பு சாத்தியமுள்ளதே' என்பது பதிவு செய்யப்படுகின்றது.

4.2.11 நபிமொழியில் திருநங்கையர்

இறை தூதராகக் கருதப்படும் நபிகளாரின் பொன்மொழிகளில் திருநங்கையர் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. திருநங்கையர் பற்றி நபியவர்களின் வார்த்தையாக 'புஹாரி' கூறுகின்றது.

''(நபிகளின் துணைவியார்) உம்மு சலமா (ரலி) அவர்கள் கூறியதாவது: என்னிடம் (ஆணுமல்லாத பெண்ணுமல்லாத) 'அலி' ஒருவர் அமர்ந்திருந்த போது நபி (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அந்த 'அலி' (என் சகோதரர்) அப்துல்லாஹ் பின் அபீஉமய்யாவிடம், 'அப்துல்லாஹ்வே! நாளை தாயிஃப் நகர் மீது உங்களுக்கு அல்லாஹ் வெற்றியளித்தால் நீ ஃகய்லானின் மகளை மணந்து கொள். ஏனென்றால் அவள் முன்பக்கம் நாலு (சதை மடிப்புகளு)டனும், பின்பக்கம் எட்டு (சதை மடிப்புகளு)டனும் வருவாள்' என்று சொல்வதை செவியுற்றேன். (இதைக் கேட்ட) நபி (ஸல்) அவர்கள், 'இந்த அலிகள் (பெண்களாகிய) உங்களிடம் ஒருபோதும் வர (அனுமதிக்க)க் கூடாது''[34]

என்று நபி கூறுகிறார். திருநங்கையர் என்று தங்களை அழைக்கும் இவர்கள் ஆண்கள் என்பதால் நபியவர்கள் அவர்களைப் பெண்கள் இருக்கும் இடத்திற்கே வர விடக் கூடாது என்று தடுத்திருக்கின்றார்.

> **''இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார். நபி (ஸல்) அவர்கள் பெண்களைப் போன்று ஒப்பனை செய்து கொள்ளும் ஆண்களையும், ஆண்களைப் போன்று ஒப்பனை செய்து கொள்ளும் பெண்களையும் சபித்தார்கள். மேலும் 'அவர்க(ளில் அலிக)ளை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றுங்கள்' என்றும் சொன்னார்கள். அவ்வாறே நபியவர்கள் இன்னாரை வெளியேற்றினார்கள். உமர் (ரலி) அவர்களும் இன்னாரை வெளியேற்றினார்கள்.''**[35]

என்று புஹாரி மொழிகிறது. நபிகள் கண்ணோட்டத்தில் திருநங்கையர் ஒதுக்குதலுக்கு உரியவர்களாகவே கருதப்பட்டதை மேற்காட்டிய கூற்று மெய்ப்பிக்கின்றது.

4.2.12 இலக்கணங்களில் திருநங்கையர்

தொல்காப்பியம் துவங்கி, நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், பன்னிரு பாட்டியல் முதலிய பல இலக்கண நூல்களில் திருநங்கையர் பற்றிய பதிவுகள் இருக்கின்றன.

4.2.12.1 தொல்காப்பியம்

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் 'பெண், ஆண் போன்றே ஆண்மை திரிந்த பேடியும் தெய்வமும் உயர்திணை' என்கிறது.

> **''பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
> **ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
> **தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
> **இவ்வென அறியுமந் தந்தமக் கிலவே**
> **உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்''**[36]

என்று கூறிய தொல்காப்பியர் பால் நிலை திரிந்தாலும் திருநங்கையரை உயர்திணையாகவே கருதுகின்றார்.

4.2.12.2 நன்னூல்

“பெண்மை விட்டு அவாவுவ பேடு ஆண்பால்

ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால்

இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்”[37]

என்ற நூற்பாவழி, ‘பெண்மைத்தன்மை விட்டு, ஆண் தன்மை விரும்புவது உயர்திணை ஆண்பால்; ஆண் தன்மை விட்டு, பெண் தன்மை விரும்புவது உயர்திணைப் பெண்பால்; இவ்விரு வகையினரும் உயர்திணை மட்டுமன்றி அஃறிணையும் ஆகும்’ என்று கூறப்படுகின்றது. இதன்வழி நன்னூலார் பாலினம் பிறழ்ந்தவர்களை அஃறிணையாக கருதுவது குறிப்பிடத்தகுந்தது.

4.2.12.3 எழுத்துக்களில் மூன்றாம் பாலினம்

வெ.முனிஷ் ‘காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம்’ என்னும் நூலில் இலக்கண நூல்களை ஆய்ந்து பாலின அடிப்படையில் இலக்கண நூல்கள் ‘அலி எழுத்துக்களை’ப் பிரித்துள்ளதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“



இவ்வாறு அலியெழுத்துக்கள் வரையறையில் முரண்பாடுகள் உள்ளன”[38]

என்று குறிப்பிடுகிறார். இதன்வழி அக்காலத்தில் பாலின அடிப்படையில் எழுத்துக்கள் பிரிக்கப்பட்டதை அறியலாம். மேலும், பால் வகை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்தாக வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இதனை வெ.முனிஷ்,

‘‘தமிழ் மொழியில் பால்கள் ஐந்து வகைப்படும் என்பது இலக்கணப் பிழையாகும். ஆறு வகைப்படும் என்பதே சரியாகும்.



என்று பிரித்திருப்பது கவனத்திற்கு உரிய ஒன்றாகும். ஏற்புடையதும் ஆகும். திருநங்கையர் பாலின அடிப்படையில் பிறழ்ந்தவர்கள் ஆயினும், அவர்கள் உயர்திணையே ஆவார் என்ற கருத்தே சரியானது. அவர்களைத் தனிப்பாலாகக் கணக்கில் கொள்ளலாமே தவிர அஃறிணையாகக் கருதுவது தவறாகும்.

4.2.13 சங்க இலக்கியங்களில் திருநங்கையர்

சங்க இலக்கியத்தில் அகநானூற்றில், திருநங்கையர் குறித்த பதிவுகள் இருக்கின்றன.

4.2.13.1 அகநானூற்றில் திருநங்கையர்

சங்க இலக்கியத்தில் திருநங்கையர் குறித்த பதிவுகள் அதிக அளவு இல்லை. அகநானூற்றில் திருநங்கையர் பற்றிய குறிப்பு இருக்கிறது.

''என்னெனப் படுங்கொ தோழி! நன்மகிழப்

பேடி பெண்கொண் டாடுகை கடுப்ப''[40]

என்ற மருதப் பாடலில் 'பேடி' எனும் சொல்லாட்சி பயின்று வருகிறது. உடல் உறுப்புக் குறைபாடு உடையவர்கள் வரிசையில் பால் பிறழ்ந்தவர்களைப் புறநானூறு 'மருள்' என்று பதிவு செய்திருக்கிறது.

4.2.14 நீதி இலக்கியங்களில் திருநங்கையர்

நீதி இலக்கியங்களில் திருநங்கையர் பற்றிய பதிவுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

4.2.14.1 திருக்குறள்

நீதி இலக்கியங்களில் திருநங்கையர் போற்றத்தக்க இடத்தில் இல்லை. திருக்குறளில் 'பேடு' எனும் சொல்லாட்சி 'வீரமற்றவன்' எனும் பொருளில் பயின்று வந்துள்ளது.

''தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை

வாளாண்மை போலக் கெடும்'' (குறள். 614)

எனும் குறளில், 'முயற்சி இல்லாதான் செல்வம் வீரமில்லாதான் கை வாள் போன்று சிறப்பற்றாகிவிடும்' என்று கூறப்படுகின்றது.

''பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்

தஞ்சு மலன்கற்ற நூல்'' (குறள். 729)

எனும் குறள், 'கற்றோரிந்தோர் சபையில் தம் நூல் அறிவை எடுத்துக்கூற அஞ்சுபவனும் போரில் வாட்போர் புரிய அஞ்சுபவனும் ஒன்று' என்று கூறுகிறது. 'பேடி' எனும் சொல் 'கோழை' என்ற பொருளிலேயே வந்திருக்கிறது.

4.2.14.2 நாலடியார்

நாலடியாரில் அலி, பேடி எனும் சொல்லாட்சிகள் பயின்று வந்திருக்கின்றன.

"செம்மையொன் . . .

வலியாற் பிறர்மனைமேல் சென்றாரே யிம்மை

அலியாகி யாடியுண் டார்"[41]

'பிறர் மனைவியை நாடுபவன், மறுபிறவியில் (அலி) திருநங்கையாக உருவெடுப்பான்' என்பது நாலடியார் கருத்தாகும்.

"நுண்ணுணர், வின்மை வறுமை யஃதுடைமை

பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் – எண்ணுங்கால்

பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ

கண்ணவாத் தக்க கலம்"[42]

எனும் நாலடியார், இங்கு அறிவுச் செல்வம் இன்றி பொருட் செல்வம் விரும்புபவன் அணிகலன்கள் அணிந்து தன்னைப் பெண்ணாகக் காட்டும் ஆண் தன்மை இழந்த பேடிக்கு ஒப்பாவான் என்று கூறுகிறது.

நாலடியாரிலும் இழிவுப் பொருளிலேயே பேடி, அலி எனும் சொல்லாட்சிகள் பயின்று வந்திருக்கின்றன.

4.2.15 காப்பியங்களில் திருநங்கையர்

காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, நீலகேசி முதலான பல நூல்களில் திருநங்கையர் குறித்த செய்திகள் பதிவாகி இருக்கின்றன.

4.2.15.1 சிலப்பதிகாரம்

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் திருநங்கையர் குறித்து பதிவு செய்திருக்கிறார். கடலாடு காதையில் மாதவி, பேடி ஆடல் உட்பட, பதினொரு வகை ஆடலை ஆடுகிறாள்.

"ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்

காமன் ஆடிய பேடி ஆடலும்"[43]

என்ற வரிகள் மன்மதன் ஆண் தன்மையிலிருந்து திரிந்து ஆடியதைப் 'பேடி ஆடல்' என்று எடுத்துரைக்கின்றன.

4.2.15.2 மணிமேகலை

மணிமேகலைக் காப்பியத்தில் 'மலர்வனம் புக்க காதையில்' 'பேடி' எனும் சொல்லாட்சி பயின்று வருகின்றது.

".....

ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?

பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்"[44]

எனும் அடிகள் 'மணிமேகலையின் அழகினைக் கண்டு மயங்காத ஆண்கள் பேடித்தன்மை உடையவர்களாகவே இருப்பர்' என்ற கருத்தை மொழிகின்றன.

4.2.16 தனிப்பாடல் திரட்டு

ஔவையார் எழுதிய பாடல் ஒன்றில் மானிடப் பிறவி என்பது அரிதான ஒன்று என்று குறிப்பிடுகிறார்.

"அரிதரிது! மானிட ராத லரிது

மானிடராயினும் கூன் குருடு செவிடு

பேடு நீங்கிப் பிறத்த லரிது"[45]

என்கிறார். இவ்வடிகள் வழி 'பேடி' என்பது 'பால் பிறழ்'வையே குறித்து நிற்கிறது.

4.2.17 சித்தர் பாடல்களில் திருநங்கையர்

'சித்து' என்றால் 'அறிவு'. 'அறிவில் தெளிந்தவர்கள் சித்தர்கள்' எனப்பட்டனர். எட்டு சித்திகள் கைகூடப் பெற்றோர் 'சித்தர்' எனப்படுவர். 'சித்து' என்பதற்கு 'இரசவாதம்' என்ற வேறொரு பொருளும் உண்டு. பதினெண் சித்தர்களை முதலாகக் கூறுகின்றனர் ஆய்வறிஞர்கள். இச்சித்தர் பாடல்களில் 'திருநங்கையர்' குறித்து பதிவாகியிருக்கின்றன.

இறைவன் ஆண், பெண், அலியாகக் காட்சி தருகிறார் எனப் பட்டினத்தார் பாடுகிறார்.

''ஆணாகிப், பெண்ணாய், அலியாகி, வேற்றுருவாய்,

மாணாகிநின்ற வகையறியேன் பூரணமே''[46]

என்று பாடுகிறார். சித்துவிளையாட்டில் கைதேர்ந்தவர்கள் சித்தர்கள்.

''ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் ஆகச் செய்குவோம்''[47]

என்கிறார் பாம்பாட்டிச் சித்தர். 'ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றம் செய்வது சித்தர்களால் இயலும்' என்பது தெரிவிக்கப்படுகின்றது.

இரா. மீனாட்சியின் 'எழுதப்படாத தொன்மம்' எனும் கவிதையில் கடுவெளிச் சித்தரின் சகோதரியாக ஒரு திருநங்கை பற்றிய தொன்மம் பதிவாகி உள்ளது. இளம்பெண் ஒருத்தி தன் கணவனை இழந்த நிலையில் இறையருளால் ஒரே சமயத்தில் நான்கு பெண் மக்களைப் பெற்றெடுக்கிறாள். இதில் மூத்தவள் வள்ளி, தேவரடியாராக மாறுகின்றார். மற்ற மூவரும் தவம் இருந்து முறையே திருநங்கையாக, சித்தராக, படை வீரராக மாறுகின்றனர்.

''மகனாக மாறியவர் மன்னனின் படைவீரரானாள்

அரவாணியாக மாறியவர்

வாசனைத் திரவியங்கள் விற்பவரானார்

உருமாறுபவரே பதினெண் சித்தருள்ளே

கடுவெளிச் சித்தரானார்''[48]

என்று கூறப்படுகிறது.

கடுவெளிச் சித்தரின் தவ உக்கிரத்தால் அவரைச் சுற்றிலும் புற்று ஏற்படுகிறது. நாட்டில் பஞ்சம் ஏற்படுகிறது. படைவீரரும், திருநங்கையும் சித்தரின் தவத்தைக் களைய முற்பட்டு முடியாமல் போக தேவரடியாரான வள்ளி ஆடல் மேற்கொள்கிறாள். புற்று உடைகிறது. வள்ளியின் சலங்கை விழ அதை கடுவெளிச் சித்தர் அவள் காலில் அணிவிக்கிறார். இதை ஊரார் தவறாகப் பேச சிவனை நோக்கி, சித்தர் வினா எழுப்புகிறார். பின் வள்ளி 'நாமெல்லாரும் உடன் பிறந்தவர்கள்' என்பதை இவர்கள் அறிய மாட்டார் எனக்கூறி மன்னிப்புக் கோருகிறாள்.

''ஆணும் பெண்ணும் அலியும் சித்தரும்

ஆகக் கடைசியில்

ஒருதாய் மக்களே''[49]

என்று பால் பேதமில்லா வாழ்வு வாழ வேண்டும் என்ற சமத்துவத்தைக் கவிதை அடிகள் தெரிவிக்கின்றன.

4.3 சடங்குகள்

மனிதன் இறைநம்பிக்கையின் அடிப்படையில் சடங்குகளை மேற்கொள்கிறான். இனத்திற்கு இனம் இச்சடங்கு முறைகள் மாற்றம் பெறுகின்றன.

''வழி வழியாக வரும் பழமரபுகளைக் காத்தல் மனித மனத்தின் ஆழத்தில் வேரூன்றிய செயலாகும். சடங்குகள் இப்பணிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. முன்னோர் செய்த செயல்களை, காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறை''[50]

என்று வாழ்வியற் களஞ்சியம் சடங்கு பற்றிக் கூறுகின்றது.

> **''புனிதத் தன்மை என்னும் பிரம்மையைத் தேற்றுவித்து அதன் மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வில் இரண்டாம் கட்டமாக சடங்குகள் ஏற்பட்டன. இச்சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படும் புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும். சமுதாய வாழ்வில் சடங்குகள் பெரும் பங்காற்றுகின்றன. சமய நிகழ்ச்சிகளின்போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கும் அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது . . . சமயச் சார்புடைய சடங்குகள் தவிர வாழ்வியல் சடங்குகளும் மக்கள் வாழ்வில் நிறைந்துள்ளன''**[57]

என்று சடங்குகளின் தோற்றம் பற்றி, பக்தவத்சல பாரதி குறிப்பிட்டுள்ளார். குடும்பத்திலிருந்து வெளியேறும் திருநங்கையர் கூட்டமாக வாழும் அமைப்பில் வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்கின்றனர். அச்சடங்குகள் யாவும் அவர்களின் வாழ்வியல் முறையோடு நெருங்கிய தொடர்பு உள்ளனவாகக் காணப்படுகின்றன.

4.3.1 தத்துச் சடங்கு

ஒரு திருநங்கை, தான் சார்ந்த சமூகத்தில் ஒருவரைத் தேர்ந்து அவர்களுக்கு மகளாகச் செல்லுதலை சடங்காகச் செய்வர். இதனைத் 'தத்துச் சடங்கு' என்று கூறுவர். இதனை 'ரீத்' என்றும் வழங்குவர். திருநங்கைகள் சேர்ந்து வாழும் ஜமாத்தில் இச்சடங்கினை செய்வது வழக்கம்.

> **''பொதுவான இடத்திலோ, தத்து எடுப்பவர் வீட்டிலோ கூடுவர். இரு பிரிவுகளாக அமர்வர். இவர்கள் அமர்வதற்கு பாய் விரிக்கப்பட்டிருக்கும். இந்தப் பாயை மரியாதையுடன் தொட்டு வணங்கி சட்டாய்க்கு பாம்படத்தி (பாய்க்கு வணக்கம்) என்று கூறிய பின்பே அதில் அமர்வர் . . .''**[52]

பின் வெற்றிலை பாக்குடன் ரூ.5¼ பணம் வைப்பர். (தற்போது பணம் அவர்கள் விருப்பப்படி ரூ.11, ரூ.101 ஆகவும் கூடுதலாக வைக்கப்படுகின்றது). பின் புதிய

திருநங்கை குறித்து விசாரித்து சபையோரிடம் ஒப்புதல் கேட்பர். சம்மதம் தெரிவித்தபின் அந்தப் பணத்தைத் தாம்பளத்தில் இட்டு கைகளைத் தட்டி 'தீன் தீன் தீன்' என்று கூறி தத்துச் சடங்கு நடைபெறுகிறது. தத்தெடுத்தபின் குருசேலா உறவு உருவாகிறது. தத்தெடுக்கும் போது,

> **''தத்தெடுப்பவரின் இடது மார்பில் பாலை ஊற்றி, அந்தப் பாலை தத்துக்குச் செல்பவரை குடிக்கச் செய்வர்''**[53]

என்கிறார் ந. அறிவுராஜ். இதனை 'மடி கட்டுதல்' என்பர். பிறகு அனைவருக்கும் விருந்து கொடுக்கப்படுகின்றது. இத்தத்துச் சடங்கைச் 'சுவிகாரச் சடங்கு' என்றும் கூறுவர்.

மகளுக்கு உரித்தான அனைத்தையும் குருதான் கொடுக்க வேண்டும். இந்நிலையில் குரு கணவனாகவும் கருதப்படுகிறார். குரு இறந்தபின் சேலா தாலி அறுத்து விதவைக் கோலம் பூண வேண்டும். சேலா குருவை மாற்ற வேண்டும் என்றால் மாற்றிக் கொள்ளலாம். அதனை 'ஜமாத்' முன்னிலையில் செய்தல் வேண்டும். இதனை 'ரீத் உடைத்தல்' என்பர். 'ரீத் போடுதல்' குறித்து ஆண்டாள் பிரியதர்ஷினி கீழ்வருமாறு கூறுகின்றார்.

> **''ஐந்து ரூபாய்**
> **ரீத் போட்டு தேடுகிறேன்**
> **திருநங்கை அடையாளம்**
> **ஐந்து கோடி**
> **ரீத் போட்டும்**
> **கிடைக்குமா உனக்கு**
> **மனித அடையாளம்'' (நா.இ.நா. 37)**

என்று தத்து எடுத்திடும் சடங்கு குறித்து பதிவு செய்யப்படுகின்றது.

சடங்குகளை மறுதலித்தல் குறித்து 'குறி அறுத்தேன்' கவிதைத் தொகுப்பில் திருநங்கை கல்கி பதிவு செய்கிறார்.

''சடங்குகளை மூட்டைகட்டி

சாக்கடைக்குள் போட்டபின்

புன்னகை செய்யக் கற்றுக் கொண்டேன்'' (கு.அ. 43)

'சடங்குகள்' திருநங்கையர் சமூகத்தினில் மாற்றத்தைத் தரப்போவதில்லை. இதை உணர்ந்து திருநங்கை கல்கி விமர்சனமாகப் பதிவு செய்கிறார். 'வாடாமல்லி' புதினத்தில் கங்காதேவி சுயம்புவை மகளாகத் தத்தெடுக்கும் நிகழ்ச்சி எடுத்துரைக்கப்படுகின்றது.

''ஒரு பிளேடை எடுத்து கங்காதேவியின் பெருவிரலில் ஒரு கோடு போட்டது. பிறகு அந்த விரலை எடுத்துப் பால் செம்பின் வாய்ப்பக்கம் பிடித்து அழுத்தியது. அந்தத் துளிகள் சொட்டு சொட்டாய், பாலில் விழுந்தன. உடனே எல்லோரும் 'மூர்கேமாதா, மூர்கேமாதா' என்று கன்னங்களில் தப்பளம் போட்டுக் கொண்டனர். மகனைப் போல் சேலை கட்டியிருந்த சடாமுடி கங்காதேவி, தனது ரத்தம் கலந்த அந்தப்பால் செம்பை எடுத்து சுயம்புவின் வாயில் ஊற்றினாள். உடனடியாக புரோகித அலி, சுயம்புவின் கையை எடுத்துக் கங்காதேவியின் கரங்களில் ஒப்படைத்தாள் . . .''[54]

'பூமி வசப்படுமே' என்ற புதினத்தில் மணியைத் தத்தெடுக்கின்றனர்.

''தத்து எடுத்தது மட்டும் இல்லை. வயதுக்கு வந்த சடங்குகளையும் செய்தார்கள். வந்தவர்கள் எல்லாம் சீர் கொடுத்தார்கள்''[55]

சடங்கு நடைபெறும் போது திருநங்கையர் சமூகத்துள் மொய் எழுதும் பழக்கமும் பரிசுப் பொருட்கள் வழங்கும் பழக்கமும் உண்டு. 'தொலைந்த முகம்' என்ற சிறுகதையில்,

''பூ, பழம், இனிப்பு, புதுத்துணிகள், விருந்து என்று அமர்க்களத்துடன் லட்சுமி, நம்மை மகள்களாகத் தத்து எடுத்துக் கொண்டாள்.''[56]

என்று தத்தெடுப்புச் சடங்கு குறித்து கூறப்படுகிறது. தாய், தந்தையை, உறவுகளை விட்டுப் பிரியும் திருநங்கையருக்குத் தாயையும், வேறு பல புதிய உறவுகளையும், திருநங்கையர் சமூகமே வழங்குகிறது. ஆய்வுக்கான ஏனைய சிறுகதைகளில் இச்சடங்கு குறித்த பதிவுகள் காணப்படவில்லை. 'உறையாத நினைவுகள்' என்ற நாடகம் இத் தத்துச் சடங்கு குறித்து பதிவு செய்யப்படுகிறது.

4.3.2 அறுவை மருத்துவச் சடங்கு

தத்தெடுத்தபின் திருநங்கையர் சமூகத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள இருக்கும் திருநங்கைக்கு அதற்கான சடங்கு நடைபெறுகிறது. நாற்பது நாட்களோ, மூன்று செவ்வாய்க் கிழமைகளோ விரதமிருந்து பகுச்ராஜீ மாதாவிற்குப் பூசை செய்கின்றனர். தேங்காய், பழம், வெற்றிலை, பாக்குடன் 5¼ ரூபாயும் முடிந்து வைப்பர். எலுமிச்சம் பழத்தை அவர்களுக்குத் தந்து சுற்றுவர். தேங்காயையும் சுற்றி மாதாவிற்குமுன் உடைப்பர். சரியாக உடையாவிட்டாலோ, அழுகலாகவோ இருப்பின் அவர்களைப் பூசைக்கு அனுப்ப மாட்டார்கள். 5¼ ரூபாய் முடிப்பை அறுவை சிகிச்சைக்குச் செல்லவிருக்கும் திருநங்கையின் இடது கையில் கட்டுவதற்குக் 'காப்புக் கட்டுதல்' என்று பெயர். இதன் பின் 21-ஆம், 31-ஆம் நாட்களில் தண்ணீர் ஊற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

திருநங்கையர் மனத்தளவில் தங்களை முழுவதுமாகப் பெண்ணாக உணரும் காலம் நெருங்கும்போது அவர்களுக்கு ஆணுறுப்பின்மீது வெறுப்பு ஏற்படுகிறது. இதனால் தாயம்மா நிர்வாணம் மூலமோ, மருத்துவ முறையில் அறுவைச் சிகிச்சை மூலமாகவோ ஆணுறுப்பை வெட்டி எடுக்கின்றனர். இந்த அறுவை மருத்துவம் குறித்து ஆய்வுத் தரவுகளில் பதிவாகி இருக்கிறது.

4.3.2.1 தாயம்மா நிர்வாணம்

'தாயம்மா நிர்வாணம்' என்பது மூத்த திருநங்கை ஒருவரால் செய்யப்படுவது ஆகும். நிர்வாணம் செய்விப்பதும் 'தாயம்மா' ஆவார். தாயம்மா நிர்வாணம் வலியாக இருப்பினும் இம்முறையில் நிர்வாணம் மேற்கொண்டால் பெண்மைத்தன்மை அதிகரிக்கும். அழகு கூடும் என்று நம்பப்படுகின்றது. தாயம்மா நிர்வாணமே உயர்வாக மதிக்கப்படுகின்றது. 'தாயம்மா' என்று அழைக்கப்படுபவரும் திருநங்கையே ஆவார்.

முழு நிலவு நாளில் ஒரு தனி அறையிலோ, கடற்கரையிலோ, பூசைகள் செய்து விடிவதற்குள் இச்சடங்கினை நிகழ்த்தி விடுகின்றனர். ஒரு குழி வெட்டப்பட்டு நிர்வாணம் செய்து கொள்பவர் ஆடையின்றி நிறுத்தப்படுகின்றனர். அவர்களின் பிறப்புறுப்பினை விதையோடு சேர்த்து இறுக்கக் கட்டி விடுவர். வலியில் அவர்கள் கத்தாமல் இருக்க வாயில் அவர்களின் தலைமுடியையோ, துணியையோ திணித்து விடுகின்றனர். மாதாவினை மனதார நினைத்து வழிபடக் கூறுகின்றனர். பின் கத்தியால் ஆணுறுப்பை அறுத்து குழிக்குள் இட்டுப் புதைத்து விடுகின்றனர். இதில் உயிர்போகும் நிலைகூட ஏற்படும். அதையும் பொருட்படுத்தாமல் 'தாயம்மா' நிர்வாணத்தை இன்றும்கூட ஒரு சில திருநங்கையர் செய்து கொள்கின்றனர்.

''பிரசவம்

பெத்துப் பிழைப்பது

அரவாணி நிர்வாணம்

செத்துப் பிழைப்பது'' (நா.இ.நா. 38)

பெண்களுக்குப் பிரசவத்தின்போது செத்துப் பிழைத்தாலும் அவர்களைத் 'தாய்' என்று சமூகம் அழைக்கிறது. ஆனால் திருநங்கையர் செத்துப் பிழைத்தாலும் அவர்களை இச்சமூகம் பெண்ணாகக் கருதுவது இல்லை. ஆண் தன்மையை அழிப்பதே திருநங்கையருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதை மேற்சுட்டிய கவிதை அடிகள் உணர்த்துகின்றன. 'வாடாமல்லி' புதினத்தில், இச்சடங்கு பதிவாகி உள்ளது.

> ‘‘அந்த அறையில் ஒரு சுவரில் சுயம்பு சாத்தி வைக்கப்பட்டான். உடல் நிர்வாணப்பட்டு, நிர்க்கதியாய் நின்றான் . . . அவனது நீண்டு வளர்ந்த தலைமுடியே அவன் வாயில் திணிக்கப்பட்டிருக்கிறது . . . உடனே ஏழாவது சத்தத்தில் கீழே இறங்கிய அரிவாள் எட்டாவது சத்தத்தில் செந்நீரோடு மேலே நிமிர்ந்தது. எட்டாவது சத்தம் கேட்பதற்கு முன்பே, பானைக்குள் ஒரு சத்தம். சுயம்பு கீழே கிடப்பது துள்ளுவது போலவே துள்ளினான் . . . சுயம்பு அப்படியே மயங்கி சுவரில் சாய்ந்தான்’’[57]

இவ்வாறு நிர்வாணச் சடங்கு முடிந்தபிறகு காயத்தில் ஆவி பறக்கும் எண்ணெய் ஊற்றப்படுகிறது.

> ‘‘ஒரு அலி ஆவி பறக்கும் எண்ணெய்க்குள், ஒரு ஸ்பூனை மொண்டு சுயம்புவின் காயம்பட்ட இடத்தில் கவிழ்த்தினாள். உடனே வெந்நீர் அலி, அதே மாதிரி சுடுநீரைக் கொட்டினாள்’’[58]

இவ்வாறு தாயம்மா நிர்வாணம் செய்யப்படுகிறது. எஸ்.பாலபாரதியின் ‘அவன் – அது = அவள்’ புதினத்தில் கோமதிக்குத் ‘தாயம்மா நிர்வாணம்’ செய்யப்படுகிறது.

> ‘‘வலது கையில் இருந்த அந்த ஆயுதத்தால் சரசரவென அறுக்கத் தொடங்கினாள், விதையுடன் சேர்ந்து குறியையும். ரத்தம் பீறிட்டடித்தது. கண்கள் சொருகிக் கொண்டு வந்தது. பொடியை அள்ளி வெட்டுக்காயம் பட்ட இடத்தில் அழுத்தினாள். ‘இது மருத்துவப் பொடி அப்படித்தாண்டீ இருக்கும். கொஞ்ச நேரம் அப்படியே பொறுத்துக்க . . .’ சித்ரா எண்ணெய் பாத்திரத்தைத் துணியால் பிடித்து, முன்னுக்குத் தள்ளினாள். ஆவி பறந்து கொண்டிருந்தது. பாத்திரத்தினுள் சின்னதாய் ஒரு குடுவையும் இருந்தது. அதில் எண்ணெயை அள்ளி, பொடி வைத்த இடத்தின் மீது ஊற்றினாள் தாயம்மா . . .’’[59]

மருத்துவ நிர்வாணம் குறித்து 'பூமி வசப்படுமே', 'மூன்றாம் பாலின் முகம்', 'கமலி', 'கனவுகள் கைப்பிடிக்குள்', 'உன்னை விட்டு விலகுவதில்லை' ஆகிய புதினங்களில் பதிவாகியிருக்கின்றது.

'நாயிவாயிச் சீல' சிறுகதையில் அபிராமி, 'தாயம்மா நிர்வாணம்' செய்து கொள்கிறாள்.

''ஒக்கிலிப்பட்டி சாமியாடிக்கிட்டதான் நானும் அவளுங் கூத்துப் படிச்சம். கூத்துப் படிச்சமில்ல அதுக்கும் மிந்தியே அபிராமி தாயம்மாளிண்ட கை போட்டு பச்சச்சீலக்கட்டி போத்திராசி மாதாளுக்குப் பாலுக்கொடம் எடுத்துப்பு வந்துட்டா . . .''[60]

இவ்வாறு 'நாயிவாயிச் சீல' எனும் சிறுகதையில் கூறப்பட்டுள்ளது.

4.3.2.2 மருத்துவ நிர்வாணம்

தற்போது திருநங்கையர் பலரும் அறுவை மருத்துவ முறையில் ஆணுறுப்பினைக் களைகின்றனர். இதுவும் வலி நிறைந்ததாகவே இருக்கிறது. ஆனால் எல்லா மருத்துவமனைகளிலும் இது செய்யப்படுவது இல்லை. தண்டுவடத்தில் ஊசி போட்டு ஆணுறுப்பு வெட்டி எடுக்கப்படுகின்றது. சிகிச்சைக்கான முறையான கவனிப்புகளும் சரிவர திருநங்கையருக்குக் கொடுக்கப்படுவது இல்லை.

''உயிருக்கு உத்திரவாதமில்லை
அறுவை சிகிச்சை
உத்திரவாதம் தருகிறதே
பெண்மை உணர்வுக்கு'' (நா.இ.நா. 28)

பெண்மை உணர்விற்காக உயிரை விடவும் திருநங்கையர் அஞ்சுவதில்லை.

''அதிக வித்தியாசம்
இல்லை

கசாப்புக் கடைக்காரரும்

என்

அறுவை மருத்துவருக்கும்'' (நா.இ.நா. 59)

தாங்க முடியாத வலியினைச் சுமந்து திருநங்கையர் அறுவை மருத்துவத்திற்குப் பிறகு உயிரோடு திரும்புகின்றனர். சிலர் உயிர் விடுவதும் கூட நிகழ்கிறது. திருநங்கை கல்கி, தன்னைப் பெண்ணாக உருமாற்றுவதற்குச் சிந்திய குருதி பற்றி,

''நான்

சிந்திய குருதி

காய்ந்த பின்பு

செதுக்கிய வடுக்கள்

அடையாளங்களாய்

என் யோனியில்

நிலைக்கின்றன'' (கு.அ. 52)

என்று தன்னுடைய ஆணுறுப்பு களைந்தது பற்றிக் கூறுகிறார். அறுவைச் சிகிக்சைக்குப்பின் உணர்வின்றி மரத்துப் போன நிலையினை,

''வேண்டாமென்று

தான் வெறுத்ததை

மருத்துவர்கள்

வெட்டி அகற்றியபின்

வெற்றிடத்தின்

வடுக்களை

தொட்டு தொட்டுப்

பார்க்கிறேன்

இன்னும்

உணர்வுகள்

இல்லை'' (கு.அ. 48)

என்று பதிவு செய்கிறார். அறுவை சிகிச்சையில் உயிர் இழப்பு நேரிடும் என்பதை அறிந்தும்கூட திருநங்கையர் அறுவை மருத்துவம் செய்யத் தவறுவது இல்லை. 'மூன்றாம் பாலின் முகம்' என்ற புதினத்தில் ரமேஷிற்கு அறுவை மருத்துவம் நடைபெறுகிறது.

''அடுத்தடுத்த நாட்களில் பாரதிக்கு மெடிக்கல் டெஸ்ட் முடிந்து அறுவை சிகிச்சை முடிந்தது . . .''[61]

'கமலி' புதினத்தில் பங்காருவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

''பங்காருவை ஆப்ரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றார்கள். மயக்க மருந்து கொடுத்தார்கள். ஆபரேஷன் ஆறு மணி நேரம் தொடர்ந்து நடந்தது. டாக்டர்கள் இயற்கையை எதிர்த்து வீரமுடன் போராடினார்கள். இறுதியில் வெற்றியடைந்தார்கள்.''[62]

பால் மாற்று அறுவை மருத்துவம் என்பது வெளிநாடுகளில் எளிதான ஒன்றாக உள்ளது. இந்தியாவில் அதற்கு சட்டப்பூர்வமாக அங்கீகாரம் இல்லை. ஒரு சில மருத்துவமனையில் பணம் வாங்கிக் கொண்டு தகுந்த வசதியில்லாமல், கவனிப்பு இல்லாமல் செய்கின்றனர். இதில் பாதிப்புக்கு உள்ளாவது திருநங்கையர் சமூகம் மட்டுமே. இதுபற்றி, 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில் கூறப்படுகிறது.

''பேருக்கு ஒரு மயக்க மருந்தைக் கொடுத்து . . . நாங்க சரியா மயங்கிப் போமான்னுக் கூட பார்க்காமல், தொண்டையில் வளர்ந்திருக்கும் சதையை அறுக்கிற மாதிரி எங்க ஆண் உறுப்பை அரை மணி நேரத்துல அறுத்துப் போடுற அவசர அறுவைச் சிகிச்சை அது.''[63]

என்று கல்பனா, கந்தர்வனிடம் கூறுகிறாள். சிறுகதையிலும், மருத்துவ அறுவை மருத்துவம் பற்றிய பதிவுகள் இருக்கின்றன. 'தொலைந்த முகம்' என்ற சிறுகதையில் தீபா என்னும் திருநங்கை, செல்விக்கும் சங்கீதாவிற்கும் ஆசை வார்த்தை காட்டுகிறாள்.

''இங்க இருந்தா பிச்சைதான் எடுக்கணும். உருப்பட முடியாது. என்கூட மும்பை வந்திருங்க. மூணே மாசத்தில உங்களுக்கு ஆப்பரேஷன். பண்ணி முழு பொம்பளையா மாத்திருறேன். நிறைய சம்பாதிக்கலாம்.''[64]

என்று கூறி மும்பை அழைத்துச் செல்கிறாள். பெண்ணாகத் தன்னை மாற்றுவதற்கு மட்டுமன்றி, பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கும் இவ்வாறு அறுவை மருத்துவத்தினைத் திருநங்கையர் சிலர் மேற்கொள்கின்றனர். ஆய்வுக்கான நாடகத் தரவுகளில், 'ரௌத்திரம் பழகு' என்ற நாடகத்தில் தீர்ந்து போன வலியாக ஆணுறுப்பு களைவது பற்றிக் கூறப்படுகிறது.

''திருவை அறுத்தெறிந்து எங்களைத் திருத்தி அமைத்ததில் தீர்ந்து போன வலி!''[65]

என்ற தொடர் அவர்களது வலியினை வெளிப்படுத்துகிறது.

மருத்துவ முறையில் அறுவைச் சிகிச்சை செய்பவர்களைவிட, தாயம்மா நிர்வாணம் செய்து கொண்டவர்களே திருநங்கையர் சமூகத்தில் மேல்தளத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்றனர். இரண்டிலும் ஆபத்துகள் இருக்கின்றன. பெண்மை உணர்வை மீட்டெடுக்கும் ஆர்வத்தில் இரண்டு முறைகளையும் திருநங்கைகள் மேற்கொள்கின்றனர்.

4.3.3 பாலூற்றும் சடங்கு

சமூகத்தில் இறந்தோர்க்கு இரண்டாம் நாள் பாலூற்றும் சடங்கு நடைபெறும். அதுபோல் அறுவைச் சிகிச்சையின்மூலம் ஒரு திருநங்கை நீக்கிய ஆண் உறுப்பை அடக்கம் செய்து அதன்மேல் பால் ஊற்றிச் செய்யப்படும் சடங்குமுறை இதுவாகும். பாலூற்றும் சடங்கினை அந்தத் திருநங்கையின் மாமியார் முன்னின்று நடத்துகிறார்.

இரவு நடைபெறுகிறது. இச்சடங்கின்போது பச்சை நிறத்திலேயே ஆடை அணிகலன்கள் அணிய வேண்டும் என்பது நியதியாகும்.

இச்சடங்கு நடைபெறும் திருநங்கையரை, முக்காடிட்டு அழைத்து வருகின்றனர். மாதாவை வணங்கி பால் குடம் தாங்கி நீர்நிலைக்குச் சென்று ஊற்றுகின்றனர். பின் அந்நீர் நிலைகளில் உள்ள நீரைக் குடத்தில் சுமந்து வருகின்றனர். அறுவைச் சிகிச்சை செய்த இடத்தைக் கடலுக்கும், கருப்பு நாய்க்கும், பச்சை மரத்திற்கும் காட்டுகின்றனர். இதனைச் 'சாட்லா போடுதல்' என்கின்றனர். வீட்டிற்கு வந்தபின் முக்காட்டை நீக்கி அவர் விரும்பும் நபரைப் பார்த்தபின் (மூன்று நபருக்குப் பின்) மாதா மடத்தின் முன், முக்காட்டை முழுமையாக நீக்குகின்றனர். இந்த நாளை நினைவில் வைத்து முதல் வருடமோ மூன்று வருடம் வரையிலோ மாதாவிற்கு நன்றி கூறும் முகமாக பூஜை செய்கின்றனர். இதனை 'ஹல்தி மெஹந்தி சடங்கு' என்றும் அழைப்பர். 'பூப்பு நன்னீராட்டு விழா' என்பதும் இதுவே ஆகும்.

ஆய்வுத் தரவுகளான கவிதைப் படைப்புகளில் இச்சடங்கு பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'நானும் இன்னொரு நானும்' என்ற கவிதைத் தொகுப்பில்,

''ஹல்தி மெஹந்தி

பூப்பு நன்னீராட்டுவிழா

பெண்ணாக

மாறும்போது எனக்கு'' (நா.இ.நா. ப.35)

எனும் கவிதையில் இங்கு பாலூற்றும் சடங்கு கூறப்படுகிறது.

'குறி' என்னும் கவிதையில் பூப்புச் சடங்கு பற்றிக் கூறப்படுகிறது.

''40வது நாளில் அன்புக்குச் சடங்கு வைத்தார்கள்

அன்பு மார்க்கச்சை அணியாமலே

ரவிக்கை அணிந்திருந்தாள்

நளினமும் அடக்கமும் அலங்காரமும் அவளைப்

புதியவளாகக் காட்டியது''[66]

என்று குறிப்பிடப்படுகிறது.

'மூன்றாம் பாலின் முகம்' என்ற புதினத்தில் பாரதிக்குப் பாலூற்றும் சடங்கு நடைபெறுகிறது.

''நாற்பதாம் நாள் பாலூற்றும் சடங்கு பாரதி கேட்டுக் கொண்ட மாதிரியே ரொம்ப சிம்பிளாக நடந்தது''[67]

எனும் தொடர் இச்சடங்கு பற்றிக் கூறுகிறது.

'அவன் - அது = அவள்' என்ற புதினத்தில் கோமதிக்கு 'சாட்லா' என்ற சடங்கு நடைபெறுகிறது.

''கடலைப் பார்த்து நின்ற கோமதியைத் திருப்பி நிறுத்தினார்கள். அப்படியே பின்பக்கமாய் கடலுக்குள் முட்டித் தண்ணீர் வரை கை பிடித்து அழைத்துச் சென்றார்கள். கலத்தில் இருந்த பாலை அப்படியே பின்பக்கமாய் ஊற்றச் சொன்னார்கள். ஊற்றினாள் . . . புடவையை முட்டி வரை தூக்கி முன் பக்கத்தை நீருக்குக் காட்டினாள் . . . கடற்கரையை விட்டு, வீடு திரும்பும் வழியில் இருந்த தென்னங்கன்று முன்னால் கொண்டு போய் இவளை நிறுத்தினார்கள். கடலில் செய்தது போலவே சாட்லா செய்து கை தட்டினாள். பத்தடி தூரம் போயிருப்பார்கள். எதிரில் வந்த கருப்பு நாய் ஒன்றை மடக்கினார்கள். அதன் முன்னாலும் சாட்லா செய்து கையைத் தட்டினாள் கோமதி''[68]

என்று 'அவன் - அது = அவள்' என்ற புதினத்தில் கூறப்படுகிறது.

''கொடத்துல உள்ள பாலை கடல்லயோ அல்லது வேற ஏதாவது நீர்நிலையிலே ஊத்தினப் பொறகு, தங்களோட பொறப்பு உறுப்பை இயற்கைக்குக் காட்ட வேண்டும்.

இப்ப நாங்க ஆண் இல்லை . . . திருநங்கைங்கிறது இயற்கைக்குத் தெரிவிக்கிறது.''[69]

என்று 'உன்னைவிட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில் 'பாலூற்றும் சடங்கு' கூறப்படுகிறது. இப்பூப்பு நன்னீராட்டுச் சடங்கு குறித்து ஆய்வுத் தரவிற்கான சிறுகதை, நாடகங்களில் எந்தப் பதிவுகளும் இல்லை.

4.3.4 தாலி கட்டும் சடங்கு

அரவானை நினைத்துத் தாலி கட்டியபின் அரவான் களபலி ஆனதும் தாலி அறுத்து ஒப்பாரி வைத்திடும் சடங்கு திருநங்கைகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

'குறி அறுத்தேன்' என்ற கவிதைத் தொகுப்பில் இச்சடங்கு பற்றிக் கூறப்படுகிறது.

''கடவுளுக்கு மனைவியாகி
ஒரே நாளில் விதவையான
ஒரு பரிசோதனை கவிதை நான் . . .
என் தாலியின் வாழ்வு
ஒரு நாள் மட்டுமே . . .
அறுத்த என் தாலி
எங்கோ மரத்தில் கட்டப்பட்டு
மக்கிப் போய் மண்ணாயிருக்கும்
அந்தத் தாலி
என் விதியை நிர்ணயிப்பதில்லை
என்பதை அறிந்து கொண்டேன்'' (கு.அ. 41)

இந்தச் சடங்கு தனக்கு வேண்டாம் என்கிறார் திருநங்கை கல்கி. 'புலன் வேட்டை' எனும் கவிதையிலும் இச்சடங்கு பற்றிக் கூறப்படுகின்றது.

‘‘ஆடறுத்து

அரவானைக் களபலி கொடுக்க

தாலியறுத்து

ஒப்பாரி வைப்பார்கள் அலிகள்

மனசுக்குள் அழுவான்

சின்னப்பிள்ளை (அ) வெங்கடேசன்’’[70]

தாலி அறுத்து அவர்கள் பாடும் ஒப்பாரியில் அவர்களுக்குள் உறைந்து கிடக்கும் சோகம் முழுவதுமாய் கரைகிறது. ஆய்வுப் புதினங்களில் ‘வாடாமல்லி’, ‘அவன் - அது = அவள்’, ‘மூன்றாம் பாலின் முகம்’, ‘கமலி’, ‘உன்னை விட்டு விலகுவதில்லை’ ஆகிய புதினங்களில் தாலி கட்டும் சடங்கு குறித்த பதிவுகள் இருக்கின்றன. ‘கமலி’ என்ற புதினத்தில்,

‘‘அரவாண்சாமியை முதல் நாள் மணந்து கொண்டு, மறுநாள் அரவான் சாமி பலியானவுடன் தாலியை இழந்து விதவை ஆனதாகக் கருதப்படுகிறது.’’[71]

‘ஊர்களில் அரவாணி’ என்ற சிறுகதையில் அரவானைக் கணவனாகவே திருநங்கையர் எண்ணி, தாலி கட்டிக் கொள்ளும் செய்தி காணப்படுகிறது.

‘‘நம்ம அரவான்சாமி! இவருதான் நம்ம எல்லாத்துக்கும் புருஷன்! என்றாள் அந்தப் பெண். வா உனக்கும் தாலி கட்டச் சொல்கிறேன் என்றவள் ஆமா தாலி இருக்கா? என்றாள் ‘ஆமாம்’ என்பது போல தலையாட்டி டவுசர் பையிலிருந்து எடுத்தான். தாலி கட்டியவர்கள் வரிசையாய் அரவானை தரிசிக்க சென்றனர்.’’[72]

இங்கு லிங்கம் தாலி கட்டும் நிகழ்வு குறித்துக் கூறப்படுகின்றது. தாலி கட்டும் நிகழ்வு முடிந்த பின் அரவான் களபலி ஆனதும் ஒப்பாரி வைக்கின்றனர்.

''அவர்களின் தாலியை அறுத்து எறிந்து எஞ்சியுள்ள பூக்களைப் பறித்துப் போட, தானாக முட்டிக் கொண்டு வந்தது அழுகை . . . லிங்கமும், கோபாலும் வெள்ளிக்கால் கம்பத்திற்கு வர அங்கு ஒப்பாரி கேட்டுக் கொண்டிருந்தது''[73]

'ஊர்களில் அரவாணி' என்ற சிறுகதையில் தாலி கட்டும் அறுக்கும் சடங்குகள் குறித்து விளக்கமாகக் கூறப்படுகின்றது. நாடகங்களில் 'திருமணச் சடங்கு' குறித்த பதிவுகள் எதுவும் இல்லை.

4.3.5 இறப்புச் சடங்கு

திருநங்கையர் எவரேனும் இறந்து விட்டால் அவர்களை அவர்களின் மதம் சார்ந்த முறையில் அடக்கம் செய்வர். இந்து முறைப்படி இறந்தவர் முகத்தில் மஞ்சள் பூசி, பொட்டு வைத்து மாலையிட்டு தலைமாட்டில் சிறிய விளக்கு ஏற்றி பின் சடலத்தைக் குளிப்பாட்டி மயானத்திற்குக் கொண்டு செல்கின்றனர். இசுலாமிய முறைப்படி எனில், பாத்தியா ஓதி எடுத்துச் செல்வர். இதனை 'மையத்' என்று அழைப்பர். இறந்தவர்களைச் செருப்பால் அடிப்பது வழக்கம் என்று கூறப்படுகிறது. இருப்பினும் தற்போது இது பெரும்பாலும் வழக்கத்தில் பின்பற்றப்படுவது இல்லை. இறப்பு பற்றி, ஆய்வுக்கான தரவுகளில் 'பால்மாறிகள்' என்ற கவிதையில் பதிவு செய்யப்படுகிறது. மாறிய பாலினர் இறந்துபடின் அவர்களின் இறப்புகூட, பொதுச் சமூகத்தின் பார்வைக்கு அப்பாற்பட்டே எடுத்துச் செல்ல வேண்டிய சூழல் உள்ளதை இக்கவிதை எடுத்துரைக்கின்றது.

''அலிகள் பாடும் பாடலில்
நடுத்தெருவில் மயானமென்று
மறைந்து
மறைத்துச் செல்கிறது
அம்மயானத்தில் எரியாத உடல்களை

நாம் சுமந்து திரிகிறோம்''[74]

'இறப்புச் சடங்கு' பற்றி பிற கவிதைத் தரவுகளில் பதிவு செய்யப்படவில்லை. 'கமலி' நூலில்,

''முனிசிபாலிட்டி சவ வண்டி வந்தவுடன் ராஜாத்தியின் சடலம் குளிப்பாட்டப்பட்டது. பொட்டிட்டும் பூ வைத்து புத்தாடை அணிவித்தார்கள். வேறு ஒரு அலி பாடையில் வைக்கப்பட்டிருந்த ராஜாத்தியின் உடலை ஈர விளக்குமாற்றால் மெல்ல அடித்தாள்.''[75]

இவ்வாறாக அடிப்பதற்கான காரணமும் புதினத்தில் விளக்கப்படுகின்றது. உயிரோடு இருக்கும் போது சமூகத்தால் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். அதனால் இறந்த பின்பும் இவ்வாறு அடித்து அனுப்புவது இவர்களின் வழக்கம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 'வாடாமல்லி' புதின ஆசிரியர் சு.சமுத்திரம் இந்நடைமுறையை விரும்பவில்லை என்பதைப் பாத்திரங்கள் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

''எங்க வழக்கப்படி ஒங்க பிரிவு அலிகள் யாராவது செத்த பிறகு அவள தலைகீழாக போட்டு வைச்சு, பிணத்த செருப்பு வைச்சு அடிச்சிக்கிட்டே சுடுகாட்டுக்குப் போறது இந்தக் காலத்துக்குப் பொருந்துமான்னு யோசிச்சு பாருங்க''[76]

இவ்வாறாக மேகலை மற்ற திருநங்கையரிடம் கேள்வியை முன் வைக்கிறாள். 'பூமி வசப்படுமே' என்ற புதினத்தில்,

''இனி இந்தப் பொறப்ப பொறாக்காத பொறப்பியா? எனக் கேட்டு சடலத்தை செருப்பால் அடித்தார்கள்''[77]

என்று பதிவு செய்யப்படுகிறது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்திலும் இப்பழக்கம் பற்றிக் கூறப்படுகிறது.

''வடக்கே உயிரோடு இருக்கிற வரைக்கும் எங்கள நோகடிக்கிறது பத்தாதுன்னு, செத்தபிறகு கூட எங்க பொணத்தை செருப்பால அடிப்பாங்களாம். அப்படி அடிச்சாதான் அடுத்த ஜென்மத்திலேயாவது அரவானியா பொறக்க மாட்டோமாம்.''[78]

ஆய்விற்கான சிறுகதைகளில் 'தொலைத்த முகம்', 'மதி எனும் ஒரு மரணம் குறித்து' எனும் இரண்டில் மட்டும் திருநங்கையர் இறப்பு குறித்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இறப்பிற்கான சடங்குகள் செய்ததாக சிறுகதை, நாடகத் தரவுகளில் பதிவுகள் இல்லை.

4.3.6 ரொட்டிச் சடங்கு

இறப்பு நடந்த முப்பதாம் நாள் இறந்தவருக்கு 'ரொட்டிச் சடங்கு' நடைபெறுகிறது. இதனை 'தீஸ்வா' என்றும் கூறுவர். இதனைத் 'தலைக்கட்டுச் சடங்கு', 'ரவுண்டப்பா சடங்கு' என்றும் கூறுவர்.

ரொட்டிச் சடங்கிற்கான முறைமையினை இறந்த திருநங்கையின் மருமகள் (அ) சேலாக்கள் (மகள்கள்) செய்வர். விதவைக் கோலம் பூண்டு, முப்பதாம் நாள் கருமாதி சடங்கு நடத்தப்படுகிறது. இருபத்து ஒன்பதாம் நாள் இரவுப் படையல் இடல், கல் நடல் ஆகிய நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

''சாணியில் உருண்டை செய்து அதன் முன்பு பழ வகைகள் போன்றவற்றை இலையில் இட்டு படையல் செய்கின்றனர். குரு பின் மருமகள்களையும் உட்கார வைப்பர். பின்பு எதிர் பிரிவினர் புடவை, பணம் போன்றவற்றை அவர்களுக்கு மொய் எழுதுவர்''[79]

என்று இச்சடங்கு குறித்துக் கூறுகிறார் திருநங்கை பிரியா பாபு. இச்சடங்கின்போது புதுப்புடவை அணிந்து கொண்டு நடுக்கூடத்தில் விளக்கேற்றி இறந்தவர் குறித்து ஒப்பாரி பாடுகின்றனர். பின் சூடம் ஏற்றி அவரை வழிபட்டு இச்சடங்கை நிறைவு செய்கின்றனர். பின்னர் விருந்து நடைபெறுகிறது.

‘அவன் - அது = அவள்’ என்ற புதினத்தில் ‘ரொட்டிச் சடங்கு’ பற்றிக் கூறப்படுகிறது.

> **‘‘நம்மள மாதிரி ஒருத்த வாழ்க்கை முழுக்க கஷ்டப்படாம மாதா கூப்பிட்டுக்கிட்டான்னு அறிவிக்கத்தான் இந்த விழா. அதை எல்லோரையும் சொல்லவும் தான் ரொட்டியை கிராண்டா நடத்துறாங்க’’**[80]

என்று ரொட்டிச் சடங்கு பற்றி, கோமதிக்கு சுசீலா எடுத்துக் கூறுகிறாள். ‘உன்னை விட்டு விலகுவதில்லை’ என்ற புதினத்தில் கந்தர்வனுக்கு, கல்பனா,

> **‘‘நாற்பதாம் நாள் ‘தலைக்கட்டு’ சடங்குன்னு நடத்துவோம். அதை ரவுண்டப்பான்னு சொல்லுவாங்க. அது வரைக்கும் விதவைக் கோலத்தில் இருக்கிற எறந்து போன திருநங்கைகளின் மகள்களுக்கு வேற இனத்தைச் சேர்ந்த திருநங்கைகள் மூக்குத்தி போட்டுவிடுவாங்க. காரியத்துக்கு வர்றவங்க புது டிரஸ் எடுத்துக்கிட்டு வர்றது, பணம் கொடுக்கிற மாதிரி தலைக்கட்டுக்கு வர்ற திருநங்கைகள் அவுங்க தகுதிக்கு ஏத்த மாதிரி புடவை எடுத்துக் கொடுப்பாங்க. பணம் கொடுப்பாங்க . . .’’**[81]

என்று விளக்குகிறார்.

இவ்வாறாக நடைபெறும் சடங்குகள் யாவும் பொதுவழிச் சமூகச் சடங்குகள் போலவே இருக்கின்றன. சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படும் திருநங்கையரும் சமூகத்தில் தானும் இச்சமூகத்தில் ஓர் அங்கம்தான் என்பதை இச்சடங்குகள் வழி வெளிப்படுத்துகின்றனர்.

4.4 வழிபாடு

இயற்கையை வழிபட்ட மானுட சமூகம் சிறுதெய்வங்களையும், பெருந்தெய்வங்களையும் இனக்குழுச் சமுதாயத்தில் வழிபடத் தொடங்கியது. பழந் தமிழர்கள் ஐவகை நிலத்தைத் திணைகளாகப் பகுத்து, ஐவகை நிலத்திற்கும் உரிய

கடவுள்களையும் விதித்து வழிபட்டனர். ஏதேனும் இயற்கைப் பேரிடர் நிகழ்ந்திடினும் மனித மனம் இறைவனையே இறுதியில் நாடுகின்றது. ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு மதத்திற்கும்மென கடவுளர்கள் வேறுபடினும், இன்றுவரை மனிதர்களிடம் வழிபாடு மாறவில்லை. எத்தனைக் கடவுளரை வழிபடினும், மக்கள் குலதெய்வ வழிபாட்டினை இன்றுவரை மேற்கொள்ளத் தவறுவதில்லை. அவ்வகையில் திருநங்கையர் எனும் தனித்த இனக்குழுவினர் அவர்களின் குல தெய்வமாக தாயாக போத்திராஜீ மாதாவினையும், கணவனாக அரவானையுமே வழிபடுகின்றனர்.

> **"வட இந்தியாவில் பகுச்சர மாதா (Vahuchara Madha) என்ற தெய்வத்தையும் தென்னிந்தியாவில் கூத்தாண்டவர் என்ற தெய்வத்தையும் இவர்கள் தங்கள் வழிபாட்டுக்குரியவைகளாக வைத்திருக்கிறார்கள். இதற்காகவே அவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை ஒரு புனித பயணம் போல இக்கோயிலில் விழாவில் கலந்து கொள்ள வருகிறார்கள்"**[82]

என்று திருநங்கையரின் வழிபாட்டுத் தெய்வங்கள் குறித்து வ. ஆறுமுகம் 'அரவான் களபலி' தம் நூலில் குறிப்பிடுகிறார்.

4.4.1 போத்திராஜீ மாதா

'போத்ராஜு' மாதா கோவில் குஜராத் மாநிலத்தில் உள்ளது.

> **"போத்திராஜு மாதா ஆலயம் குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் அருகில் போத்ராஜு என்ற சிறு கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தப் போத்திராஜு மாத்தா அரவாணிகளுக்கு மட்டுமல்லாது பிறருக்கும் இப்பகுதியின் குல தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. இதனாலேயே குஜராத் மாநிலத்தில் பெரும்பாலான கடைகளில் 'ஜெய் போத்ராஜு மாத்தாஜீ' என்ற பெயர்ப் பலகைகள் இருப்பதைக் காணலாம். மேலும், இங்கு அரவாணிகளை மாத்தாஜீ என மரியாதையுடன் அழைப்பதுடன், சிறியவர்முதல் பெரியவர்வரை அனைவரும் காலைத் தொட்டு வணங்குவதைக்**

காணலாம். தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தின் அருகில் சிறிய போத்ராஜு மாத்தா கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு திருமதி சேவியர் அம்மாள் என்ற அரவாணி குஜராத் மாநிலத்திலுள்ள போத்ராஜீ ஆலயத்திலிருந்து மண் எடுத்து வந்து அதன்மீது இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது''[83]

என்று திருநங்கை பிரியா பாபு 'அரவானிகள் சமூக வரைவியல்' என்ற நூலில் பதிவு செய்கிறார். ஆய்வுத் தரவுகளில் கவிதை, நாடகங்களில் இம்மாதா வழிபாடு குறித்த பதிவுகள் எதுவும் இல்லை. சிறுகதையிலும், ஆய்வுக்கான புதினங்களிலும் இவ்வழிபாடு இடம்பெற்றிருக்கிறது. திருநங்கையர் சமூகத்துள் நடக்கும் எல்லாவிதமான சடங்கு முறைகளிலும் இம்மாதாவையே நினைத்து வழிபடுகின்றனர். 'வாடாமல்லி' என்ற புதினத்தில் சுயம்புவை மகளாகத் தத்தெடுக்கும் சடங்கில்,

''மூர்கேவாலி மாதாவுக்கு தனிக்களை கெட்டியது. ஆத்தாவின் பெரிய புகைப்படத்தைச் சுற்றி கலர் பல்புகள் மின்னி மின்னிக் காட்டின. அம்மாவின் முன்னால் தேங்காய், மாங்காய், திராட்சைப் படைப்புகள், ஒரு செம்புப்பால், கற்பூரம் ஜோதியாய் தொடர்ந்து எரிந்தது . . .''[84]

திருநங்கையர் சடங்கில் 'மாதா வழிபாடு' என்பது முக்கியமான ஒன்று. தாயம்மா நிர்வாணத்தின்போது இம்மாதா மட்டுமே தங்களுக்கு மறுஜென்மம் கொடுக்கும் என்று நம்புகின்றனர். நிர்வாணத்தின்போது மாதா படத்திற்குப் பூசை போடுவதோடு மாதாவின் பெயரைச் சொல்லி ஆரவாரம் எழுப்புகின்றனர். 'அவன் – அது = அவள்' என்ற புதினத்தில் கோமதிக்குத் 'தாயம்மா நிர்வாணம்' செய்யும் போது, மாதாவை நினைத்து வழிபடுகின்றனர்.

''மூர்கிவாலி ஜே ஹோ!

மூர்கிவாலி ஜே ஹோ!

மூர்கிவாலி ஜே ஹோ!

முர்கிவாலி ஜே ஹோ!''[85]

என்று தொடர்ந்து ஆரவாரங்கள் எழுப்புகின்றனர். மாதாவின் அருள் இருந்தால் மட்டுமே நிர்வாணம் செய்து உயிர் பிழைக்க முடியும் என எண்ணுகின்றனர். 'நாயிவாயிச் சீல' எனும் சிறுகதையில் அபிராமிக்குத் தாயம்மா நிர்வாணம் நடக்கிறது.

''மனசார மாதவ வருந்தடியம்மான்னுப்புட்டு, மாதா . . . மாதான்னு இவ வருந்த வருந்த''[86]

என்று கூறியபடியே 'தாயம்மா நிர்வாணம்' செய்விக்கப்படுகிறது. மாதாவையே உயிர் கொடுக்கும் தெய்வமாகத் திருநங்கையர்கள் கருதுகின்றனர்.

4.4.2 அரவான் வழிபாடு

திருநங்கையர் தங்கள் கணவனாகக் கருதி வழிபடும் தெய்வம் அரவான். விழுப்பும் மாவட்டம் உளுந்தூர் பேட்டை தாலுகாவில் 'கூத்தாண்டவர் கோயில்' அமைந்திருக்கிறது.

''சென்னையிலிருந்து 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தக் கிராமம். விழுப்புரம் மாவட்டத்தில் அடங்கிய இந்தக் கிராமம் உளுந்தூர் பேட்டைக்கு அருகில் உள்ளது. சில நூறு மக்களே வசிக்கும் இந்தச் சின்னஞ்சிறு ஊரில் சித்ரா பவுர்ணமி விழாவின்போது மட்டும் லட்சக்கணக்கான மக்கள் கூடிவிடுகின்றனர்''[87]

என்று பாலு விஜயன் சக்திவேல் குறிப்பிடுகின்றனர். பதினெட்டு நாள்கள் கூத்தாண்டவர் திருவிழா நடத்தப்படுகிறது. திருநங்கையர் வெளிமாநிலங்களில் இருப்பினும், வெளிநாடுகளில் இருப்பினும் தவறாமல் கூத்தாண்டவர் திருவிழாவிற்கு வருகின்றனர். இவ்விழா குறித்து,

''தமிழ் மாதம் சித்திரையில் வரும் பௌர்ணமியை ஒட்டிய வாரத்தின் திங்கட்கிழமையை மையமாக வைத்து அதற்கு முன்பாக 13 நாட்களும் அதற்குப்

பின்பாக நான்கு நாட்களும் ஆக மொத்தம் 18 நாட்களில் நடைபெறும் விழா. கூவாகம் . . . பிள்ளையார் குப்பம் (புதுச்சேரி) ஆகிய ஊர்களில் கொண்டாடப்படுகிறது.''[88]

என்று 'அரவான் களபலி' நூலில் வ.ஆறுமுகம் பதிவு செய்கிறார். கூத்தாண்டவர் வழிபாடு குறித்து, கவிதைத் தரவுகளில் பதிவாகியிருக்கின்றன.

''கூத்தாண்டவருக்கு முன்
எரியும் கற்பூர ஒளியில்
தெரியும்
அவனுக்குள்ளிருக்கும்
அவள் முகம் . . .''[89]

எனும் இக்கவிதையில் 'கூத்தாண்டவர் வழிபாடு' பதிவாகியிருக்கிறது. புதினத் தரவுகளில் 'கனவுகள் கைப்பிடிக்குள்' தவிர பிற புதினங்களில் அரவான் வழிபாடு சுட்டப்பட்டுள்ளன.

''அரவான் சாமியின் மரத்தலை வைக்கப்பட்ட கோயில் தேர், மேள தாளத்துடனும், வாண வேடிக்கையுடனும் வந்து கொண்டிருந்தது. இங்கிருந்த அலிகளைப் போல் பல மடங்கு அலிக்கூட்டம் தேருக்கு முன்னாலும் பின்னாலும் ஆடிப்பாடி வந்தனர்''[90]

என்று 'வாடாமல்லி' புதினத்தில் பதிவாகியிருக்கிறது. திருநங்கையர் தன்னை மறந்து ஆடிப்பாடி மகிழ்ச்சியாக இருக்கும் ஒரே நிகழ்வு கூத்தாண்டவர் திருவிழா மட்டுமே. 'உன்னை விட்டு விலகுவதில்லை' எனும் புதினத்தில் கல்பனா கூத்தாண்டவரின் திருவிழாவிற்குச் சென்று வருகிறாள்.

''கண்டிப்பா கூவாகம் திருவிழாவுக்கு வந்து, மணப்பெண் மாதிரி அலங்கரிச்சுக்கிட்டு எங்கக்கூட அவங்களும் பூசாரி கையினாலே தாலி கட்டிக்குவாங்க.''[91]

என்று கந்தர்வனிடம் கூறுகிறாள். அரவானைக் கணவனாக எண்ணுவதால்தான் அரவான் தலை வெட்டப்பட்ட பிறகு தாலி அறுத்து ஒப்பாரி வைத்து அழுகின்றனர். அரவான் களப்பலி குறித்து,

> **''அரவான் உருவம், பலிக்குத் தயாராக இருப்பதற்கான அடையாளங்களைத் தேரிலிருந்து மாலைகள் நீக்கம் செய்யப்படுவதோடு அரவான் களபலியாதல் குறித்த பாரத வாசிப்பு நிகழ்த்தப்படுகிறது. களபலியான வாசிப்பு முடிந்தவுடன் அலிகள் பிரார்த்தனைக்காரர்களுடன் சேர்ந்து கட்டியிருக்கும் தாலிகளைப் பூசாரிவழி நீக்கிக் கொள்கின்றனர். வளையல்கள் உடைப்பு, தலைகுளித்தல், பொட்டு அழித்தல், கூந்தலை விரித்தல், தலைகுளித்து வெள்ளைப் புடவை அணிதல் போன்ற அம்சங்கள் வழியாக விதவைக் கோலம் கொள்கின்றனர்''**[92]

என்று வ.ஆறுமுகம் பதிவு செய்கிறார். 'ஊர்களில் அரவாணி' என்ற சிறுகதையில் அரவானின் தோற்றம் குறித்து,

> **''பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கம்பத்தின் உள் அரவானின் தேகம் தெரிந்தது. 32 லட்சணங்களும் பொருந்திய, கிருஷ்ண படலம் கொண்ட அரவான் உடம்பு பூக்களுக்குள் மறைந்திருந்தது. பூசாரி அரவான் திரேகத்தைச் சுமந்திருக்கும் தேர்ச் சக்கரத்தை சுற்றி வந்தார் . . . மூட்டை மூட்டையாய் கற்பூரங்களைக் கொட்டிக் கொளுத்த, கருமை படர்ந்த புகை அரவான் சிரசில் போய் படிந்தது''**[93]

என்று கூறப்படுகிறது. கூத்தாண்டவர் திருவிழாவில் லிங்கமும் மற்ற திருநங்கையரும் கூத்தாண்டவரை வழிபடுகின்றனர். மற்ற சிறுகதைகளில் அரவான் வழிபாடு பற்றிக் கூறப்படவில்லை.

நாடகத் தரவுகளில் 'மனசின் அழைப்பு' என்ற நாடகத்தில் கூத்தாண்டவர் கோயிலுக்குச் செல்லத் திருநங்கையர்கள் கடைகளில் காசு கேட்பதாகப் பதிவு செய்யப்படுகிறது.

''அரவாணி: தம்பி வணக்கம். அப்பா இல்லியாப்பா செல்லம்.

கடைக்காரர்: இல்லக்கா.

அரவாணி: கூத்தாண்டவர் கோவில் விசேஷம் போறேன். வருஷா வருஷம் வரோம். ஏதாவது கொடு செல்வம் . . .''[94]

இவ்வாறு ஆண்டு முழுவதும் வாழ்வுக்கும் வயிற்றுக்கும் காசு தேடி அலையும் திருநங்கையர்கள் கூவாகத்தில் ஒரு நாள் தாங்கள் விரும்பியபடி அப்பணத்தைச் செலவழித்து மகிழ்கின்றனர். திருநங்கையர் பிற சிறு தெய்வங்களை ஆங்காங்கே வழிபட்டாலும், அனைவருக்கும் குல தெய்வமாக இருப்பது பகுச்ராஜீ மாதாவும், அரவானுமே ஆவார். இதனையே ஆய்வுத் தரவுகளும் நிரூபிக்கின்றன.

4.5 பாடல்கள்

வாய்மொழி வழக்காறுகளில் 'பாடல்கள்' முக்கிய இடம் பெறுகின்றன. பாடுவோருக்கும் அதனைக் கேட்போருக்கும் மகிழ்ச்சியூட்டுவது பாடல்களே ஆகும். இலக்கியச் சுவை மிகுந்த பாடல்களாயினும் நாட்டார் பாடல்களாயினும் அதில் மாந்தர்களின் மனஉணர்வுகள் இழையோடுகின்றன. திருநங்கையர் பாடும் பாட்டை 'கீத்' என்கின்றனர்.

''இசை ஆர்வம் மிக்கவர்கள் அரவாணியின் இசையை அறிந்து கொண்டால் புதுப்புது ராகங்களை உருவாக்கலாம்''[95]

என்று திருநங்கை பிரியாபாபு குறிப்பிடுவது எண்ணத்தக்கது. திருநங்கையரின் வாழ்வியல் சார்ந்த அவலங்களுக்கு அவர்கள் பாடும் பாடல்கள் வடிகாலாகின்றன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தரவுகளில் திருநங்கையர்களின் பாடல்களும் பதிவாகியிருக்கின்றன.

'வாடாமல்லி' என்ற புதினத்தில் குழந்தை பிறந்ததும் கும்மியடித்துத் திருநங்கையர் பாடும் பாடல் இடம்பெறுகின்றது.

‘‘செய்தாளே கல்யாணம் டிசம்பரில்

பெற்றாளே பிள்ளை செப்டம்பரில்

வந்ததே பிள்ளைக்கு நாலு மாசம்

வளருதே இவள் வயிற்றில் ஒரு மாசம்

போவாளோ மாட்டாளோ அம்மா வீடு

போக்கிரி அம்மாவுக்கு மூணுமாசம்’’[96]

என்று கேலியும் கிண்டலுமாய் பாடும் பாடல் அவர்களின் வாழ்வியல் சோகத்தினை எடுத்துரைக்கின்றனர்.

‘‘காகிதப் பூவுன்னு கண்மூடிப்

போனீரோ – என் ராசவே

வாடாமல்லின்னு போசாமப்

போனீரோ . . . நானும்

அப்பனுக்கு வேப்பங்காய்

அண்ணனுக்கு எட்டிக்காய்

ஊருக்கு திருஷ்டிக்காய்

ஒனக்கு கூட ஊமத்தங்காய்’’[97]

என்று ‘வாடாமல்லி’ என்ற புதினத்தில் சுட்டப்பட்டு இருக்கும் இப்பாடல் ஒப்பாரிப் பாடலாக அமைகின்றது. குடும்பப் புறக்கணிப்பின் குறியீடாகவும் இப்பாடல் அமைகிறது. ‘ஊர்களில் அரவாணி’ என்னும் சிறுகதையில் ஒப்பாரிப் பாடல் பாடப்படுகிறது.

‘‘இரண்டாய் பிறந்தாலே . . .

துண்டுபட்டு நிக்கேனே . . .’’[98]

என்று திருநங்கையரின் ஆற்றாமை உணர்வின் வெளிப்பாடாக இப்பாடல் அமைகிறது. 'கோமதி' என்ற சிறுகதையில் கோமதி என்னும் திருநங்கை தன்னுடைய மன அவலங்களைப் பாடலாக வெளிப்படுத்துகின்றார்.

''கருப்பும் சிகப்புமாய் – நான்
கலந்துடுத்தும் நாளையிலே . . .
நீலமும் பச்சையுமாய் – நான்
நிரந்துடுத்தும் நாளையிலே
கைக்களையன் சேலையை – என்
கழுத்திலிட்டு போனியளே
கைக்களையன் சேலை; எந்தன்
கழுத்தை அறுக்காதோ
ஈழுவன் சேலை; எந்தன்
இடுப்பை முறிக்காதோ''[99]

என்ற இப்பாடல் அடிகள் திருநங்கையரின் வாழ்வில் சோகத்தினை வெளிக்காட்டுகின்றன. தாய் வயிற்றில் பிறந்தாலும் திருநங்கையராய் மாறுவோருக்கு தாயன்பு கானல் நீர் என்பதைத் தாலாட்டுப் பாடல் ஒன்று விளக்குகிறது.

''அடமழை கொட்டி ஊத்த
அஞ்சாம பொறந்தவனே
வாழ்வதற்கு வக்கணையா
வசதியேதும் இங்க இல்ல
செம்பருத்தி பூப்பறிச்சி
மெத்த ஒன்னு தச்சித்தாரேன்
சிறுமலைக் காக்கக் கிள்ளி

விசிறி ஒன்று நெஞ்சிதாரேன்

கந்தல் தொட்டிலிலே

கண்ணுறங்கு சூரியனே

உம் மக்களுக்கு

தங்கமணி தொட்டில்கட்ட

தந்திரம் சொல்லித் தாரேன் . . .

ஆராரோ . . . ஆரிராரோ . . . ”[100]

பெற்ற தாயாலும் அரவணைப்பினைத் தர இயலாத திருநங்கையரின் வாழ்வியல் நிலை படம்பிடித்துக் காட்டப்படுகிறது. நிகழ்த்துக் கலையாக நடக்கும் நாடகத்திற்குப் பாடல்கள் வலு சேர்ப்பனவாக அமையும். ‘மனசின் அழைப்பு’ என்ற நாடகத்தில் திருநங்கையரின் அவல நிலை பாடலாக ஒலிக்கிறது.

‘‘ஆணா இருந்திருந்தா

அம்பெடுப்பேன்

வில்லெடுப்பேன்

ஐவரோட பங்கெடுப்பேன்

பெண்ணா இருந்திருந்தா

பூலோகம் ஆண்டிருப்பேன்

ஆணும் இல்லை; பெண்ணும் இல்ல

அவலநிலை பாருமம்மா”[101]

திருநங்கையரின் இரண்டும் கலந்த பிறப்பினால் உருவாகிடும் அவல நிலையினை இப்பாடல் காட்டுகிறது. திருநங்கையருக்குள்ளே பொழுது போக்கிற்கு ஆடும் கும்மிப் பாடல் ‘உறையாத நினைவுகள்’ என்ற நாடகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

‘‘நானும் நல்ல நானுநல்ல

சடங்காயி தானே – ஆமாம்போ சரிதான்போ

48, 48 நாளாச்சுதே நான் இருக்கும் நான்

இருக்கும் குடிசைக்குள்ள – ஆமாம் போ சரிதான்போ

ஏண்டிவந்தான் ஏண்டிவந்தான் அந்த நல்லரவான்"[102]

திருநங்கையர் கணவராக நினைக்கும் அரவானை நினைத்துப் பாடுவதாக இப்பாடல் அமைகிறது. மு.இராமசுவாமியின் 'வலி அறுப்பு' நாடகத்தில் ஒப்பாரிப் பாடல்கள் பதிவாகியிருக்கின்றன.

"**வானம் வளர்பிறையாய்**

வறுமை எல்லாம் தேய்பிறையாய் – எங்க

வாழ்வு மட்டும் பெருங்குறையாய் . . .

வடிச்சு வச்ச முறையுமென்ன"[103]

எல்லாம் மாறும் இவ்வுலகில் திருநங்கையரின் வாழ்வு மட்டும் மாறாதிருப்பதை இப்பாடல் சுட்டுகின்றது. திருநங்கையர் பாடும் வாய்மொழிப் பாடல்களை ஒன்று திரட்டி ஆவணப்படுத்துவது சமூகத்திற்குப் பயன் மிக்கதாக அமைந்திடும்.

4.6 நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

நம்பிக்கைகள் என்பது மானுட சமூகத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாதவை. முதலில் இயற்கை சார்ந்தும் பிறகு தெய்வம் சார்ந்தும் நம்பிக்கைகள் சமூகத்தில் தோற்றம் பெற்று நிலைபெறுகின்றன.

"**நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் பழக்கங்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட**

செயல்களையே உணராத போதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன"[104]

என்று சு.சக்திவேல் நம்பிக்கைகள் குறித்துக் கூறுகிறார். திருநங்கையர் சமூகத்திலும் நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவர்களிடம் வழிபாடு சார்ந்தும்,. வாழ்வியல் சார்ந்தும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

* அறுவைச் சிகிச்சைக்குமுன் கட்டாயம் மாதாவின் அனுமதி கேட்க பூஜை போட வேண்டும்.

* சாமி பூஜையில் தேங்காய் கோணலாக உடைந்தோ அழுகியோ இருந்தால் அறுவை சிகிச்சைக்குச் செல்லக் கூடாது.

* பூஜைப் பொருட்களில் அன்னாசிப் பழம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

* அறுவை சிகிச்சை முடிந்து பால் ஊற்றும் சடங்கு வரை, சாமி படங்களை வீட்டில் மூடி வைக்க வேண்டும். இறப்பு வீடுகளில் அவ்வாறே செய்ய வேண்டும்.

* பாலூற்றும் சடங்கில் திருநங்கை பச்சை நிற ஆடையே அணிதல் வேண்டும்.

* திருநங்கையர் தாலி அறுத்துக் கட்டிய கம்பத்தின்கீழ் முளைத்த தானியத்தை நிலத்தில் இட்டால் அந்த வருடம் பயிர் செழிப்பாக வளரும்.

* அறுவைச் சிகிச்சை முடிந்தபின் பால், காபி குடிக்கக் கூடாது.

* கூத்தாண்டவர் திருவிழாவில் தாலி கட்டி அறுத்தால் நினைத்தது நடக்கும்.

* அறுவைச் சிகிச்சையின் முன் பக்தியுடன் இவைனை நினைத்தால் மாதாவின் அருள் கிடைக்கும்.

* பாலூற்றும் சடங்கின்போது அவர் கட்டியிருக்கும் பச்சை நிறப் புடவையை நிகழ்ச்சி முடிந்து இளைய திருநங்கைக்கு வழங்கினால் அவருக்கும் விரைவாக அறுவைச் சிகிச்சை நடைபெறும்.

* அறுவைச் சிகிச்சை ஆன திருநங்கை ஒரு முறையேனும் குஜராத் மாநிலம் போத்திராஜீ மாதா கோயிலுக்குச் சென்று வழிபட்டு சேவல் காணிக்கை கொடுத்தால் மாதா அருள் கிடைக்கும்.

* திருநங்கையர் சேவல் கறி உண்ணக் கூடாது. ஏனெனில் அவர்கள் தெய்வமாகிய மாதாவின் வாகனம் சேவல். எனவே அதனை உண்டால் மாதா தண்டித்துவிடும்.

* அறுவைச் சிகிச்சை செய்து கொண்டபின் அந்த இடத்தை யாருக்கும் காட்டக் கூடாது. நாற்பது நாள் ஆண்கள் முகத்தைப் பார்க்கக் கூடாது.

* இறப்புச் சடங்கில் இறந்தவரின் பிறப்பு மதத்தின் முறைப்படியே அடக்கம் செய்திடல் வேண்டும்.

* இறப்புச் சடங்கின்போது மருமகள் (அ) சேலாக்கள் அனைவரும் வெள்ளைப் புடவையில் முப்பது நாட்கள்வரை இருக்க வேண்டும். தவறினால் இறந்தவர்கள் துன்பம் தருவார்கள்.

* இறந்தவரின் மருமகள் முப்பது நாட்களுக்குப்பின் விரதம் மேற்கொண்டு காக்கைக்கு உணவிடல் வேண்டும்.

* இறந்த திருநங்கையர் தலைமாட்டில் செருப்பை வைத்தால் அடுத்த பிறவியில் திருநங்கையாகப் பிறக்க மாட்டார்கள்.

* ஜமாத்தில் திருநங்கையர் கூடும்போது முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும்.

* நல்ல கருத்துக்கள் பேசுகையில் சேவல் கூவுவதையும், தும்முவதையும் நல்ல சகுனமாகக் கருதுகின்றனர்.

* கண்ணாடி உடைவது, குங்குமம் சிந்துவது, பால் தவறுவது ஆகியவற்றைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

மேற்காட்டப்பட்டவை திருநங்கையர் சமூகத்தில் பின்பற்றப்படும் பொதுவான நம்பிக்கையாகும். திருநங்கையரின் நம்பிக்கை பழக்க வழக்கங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

* வழிபாடுசார் நம்பிக்கை

* அறுவை மருத்துவம்சார் நம்பிக்கை

* ஆடைசார் பழக்கவழக்கம்

* உணவுசார் பழக்கவழக்கம்

* மரபுசார் பழக்கவழக்கம்

4.6.1 வழிபாடுசார் நம்பிக்கை

திருநங்கையரின் வழிபாடு சார்ந்த நம்பிக்கைகள் பல.

"கூத்தாண்டவருக்கு நேர்ச்சைப் பொருளாகக் கற்பூரம் கொளுத்தப்படுகிறது. கற்பூரத்தின் வெளிச்சத்தைப் போல தன் வாழ்க்கையும் சிறப்பாக இருக்கும்."[105]

என்று நம்பப்படுகிறது. 'மூன்றாம் பாலின் முகம்' என்ற புதினத்தில் கற்பூரம் ஏற்றுவது பற்றிக் கூறப்படுகிறது. ஜானகி அம்மாள் ரமேஷிடம்,

"ரமேஷ் இந்தா இந்த கற்பூரம், அரவான் பிரசாதம் எப்பவாது உனக்கு மனக்கஷ்டம் ஏற்பட்டா இதுல சிறிய அளவு எடுத்து ஏத்தி அரவான மனசாற நினை. உன் காரியம் கைகூடும்"[106]

என்று கூறுவதிலிருந்த கற்பூரம் ஏற்றி வழிபடுவது திருநங்கையர் வாழ்வில் துன்பங்களைப் போக்கும் என்று நம்பப்படுகிறது.

> **''கூத்தாண்டவர் கோயிலில் தாலி கட்டிக் கொண்டால் தன் துன்பம் நீக்கி நன்மை பிறக்கும்''**[107]

என்னும் நம்பிக்கை நிலவுகிறது. 'பூமி வசப்படுமே' என்ற புதினத்தில் மணி, கூத்தாண்டவரை எண்ணி தாலி கட்டிக் கொள்கிறான்.

> **''கோயில் பூசாரி கையால் தாலி கட்டிக் கொண்டார்கள். மணிக்கு ஏனோ அதில் விருப்பம் இல்லை. ஆனால் ராமு தெய்வ குத்தம் ஆகிவிடும் என பயமுறுத்தி கட்டிக் கொள்ளச் செய்தான்''**[108]

அரவானைக் கணவனாகக் கருதித் தாலி கட்டிக் கொள்வது திருநங்கையரின் நம்பிக்கைகளுள் முக்கியமான ஒன்றாகும். அவ்வாறு தாலி கட்டி இரவு கன்னி கழிவதும் நம்பிக்கை சார்ந்ததாகவே கருதப்படுகிறது. 'ஊர்களின் அரவாணி' என்ற சிறுகதையில்,

> **''அப்ப ஓலும் வாங்கிட்டியா? என்றான் ஆசையாக . . . சரி சரி வா நான் ஏற்பாடு பண்றேன். தாலியோட கன்னி கழியணும். அப்பதான் நம்ம சாமி நல்லது செய்வாரு''**[109]

என்று கோபால் லிங்கத்திடம் கூறுகிறார். திருநங்கையர் சமூகத்தில் இது இன்றளவும் பின்பற்றப்படுவதாக இருக்கிறது. திருநங்கையர் மாதாவை எண்ணி தன்னைக் காயமுறச் செய்வோரைச் சாபம் இட்டால் அது பலிக்கும் என்று நம்பப்படுகிறது. 'வாடாமால்லி' புதினத்தில்,

> **''நீயோ ஒன் வம்சாவழியில யாரோ ஒருத்தரைப் பார்த்து பொட்டையா போன்னு சொன்னால் சொன்னதுதான் நிச்சயம் பலிக்கும்''**[110]

என்று துர்க்கா தேவி திருநங்கையருக்குக் கொடுத்த வரம் பற்றிப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

4.6.2 அறுவை மருத்துவம்சார் நம்பிக்கை

'தாயம்மா நிர்வாணம்' செய்து கொள்வோருக்கு அழகு கூடும் என்பது நம்பப்படுகிறது.

> **''தாயம்மா கையில பண்ணின்னு வையு. அழகு அதிகமாகும், மார் பெரிசாகும், மயிரு மொளைக்கிறது நின்னு போயிரும்''**[111]

என்று 'அவன் - அது = அவள்' என்ற புதினத்தில் மூத்த திருநங்கை கோமதியிடம் கூறுகிறாள். அறுவைச் சிகிச்சைக்குப் போகுமுன் மாதா அனுமதி பெற்ற பின்னரே திருநங்கையர் செல்கின்றனர். 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில் கல்பனா மாதாவை வணங்குகிறாள்.

> **''நிர்வாணத்துக்கு அனுமதி கேக்குறப்பவும் நிர்வாணம் நடக்கிறப்ப மட்டும் நல்லபடியாக நிர்வாணம் நடந்தால் மறுபடியும் பொளச்சு வர வேண்டும் என்பதற்காக மாதாவை கும்பிட்டாள்.''**[112]

என்று கூறுவதிலிருந்து திருநங்கையர் உயிர் பிழைத்து வர மாதாவை வணங்குவதை நம்பிக்கையாகக் கொண்டிருப்பது புலனாகிறது.

4.6.3 ஆடைசார் பழக்க வழக்கம்

திருநங்கையர் அனைவரும் தங்களைப் பெண்ணாக உணர்வதால் பெண்ணுடைகளையே அணிய விரும்புகின்றனர். 'கோத்தி' என்று அழைக்கப்படக்கூடிய ஆணுறுப்பு களையாதவர்கள் மட்டும் லுங்கியும், பனியனும் அணிந்து மேலே தாவணி போல போட்டுக் கொள்கின்றனர். திருநங்கையர் பால் ஊற்றும் சடங்கின்போது பச்சை நிறப் புடவை கட்டுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

“பச்சைப் புடவை

பச்சை ரவிக்கை

பச்சை வளையல்” (நா.இ.நா. 51)

தம் வாழ்வு செழிக்க வேண்டும் என்பதற்காக நம்பிக்கை ரீதியாகவும் பச்சை நிற ஆடையே அன்றிலிருந்து இன்றுவரை உடுத்துகின்றனர் என்பதை ஆண்டாள் பிரியதர்ஷினி தன் கவிதையில் குறிப்பிட்டுகிறார். திருநங்கையர் அணியும் ஆடைகள் பற்றி,

“கொடி முழுக்க ஆடைகள், தோரணங்களாகத் தொங்கிக் கொண்டிருந்தன. ஜீன்ஸ், டீ ஷர்ட், மிடி, மினிஸ்கர்ட், சிலிவ்லெஸ், டாப்ஸ், சுடிதார், புடவை என எல்லாவிதமான பெண்கள் ஆடைகளும் இருந்தன”[113]

என்று ‘அவன் - அது = அவள்’ என்ற புதினத்தில் திருநங்கையர்கள் அணிந்திடும் ஆடைகள் பற்றிப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

4.6.4 உணவுசார் பழக்கவழக்கம்

திருநங்கையர் அறுவைச் சிகிச்சை முடிந்தபின் நாற்பது நாட்கள் பத்தியம் மேற்கொள்கின்றனர். பால் ஊற்றாமல் தேநீர் அருந்துவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

“பால் ஊத்துன பின்னாடிதான், நீ தூத் சாயா குடிக்கணும். அதுவரை உனக்கு ‘காலா சாயாதான்’ என்றாள். கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பால், தயிர், மோர் என்று எதையும் கண்ணில் காட்டவில்லை”[114]

என்று ‘அவன் - அது = அவள்’ என்ற புதினத்தில் கோமதிக்கு நிர்வாணம் நடந்தபின் கொடுக்கும் உணவுகள் குறித்துப் பதிவாகியிருக்கிறது. பெண்கள் பூப்படைந்த நாட்களில் கொடுப்பது போன்று உளுந்தங்களி, முட்டை, நல்லெண்ணெய் சேர்த்தும் கொடுக்கின்றனர்.

4.6.5 மரபுசார் பழக்கவழக்கம்

திருநங்கையர் அன்றிலிருந்து இன்றுவரை பெரியோரைப் போற்றுதலை மரபாகக் கொண்டுள்ளனர். ஆண்டாள் பிரியதர்ஷினி தன் கவிதையில் திருநங்கையர் 'பாம்படுத்தி' என்று பெரியோரை மதித்துக் கூறுவதைப் பதிவு செய்கிறார்.

''டணார் டணார்
என்முகம் புரிகிறது
பாம்படுத்தி
சொல்லும் போது'' (நா.இ.நா. 41)

என்று அவர் குறிப்பிடுகிறார்.

'அவன் - அது = அவள்' என்ற புதினத்தில்,

''மூத்தவங்கள பாத்தா . . . பாம்படுத்தின்னு சொல்லி அவங்க காலத்தொட்டு கும்புடணும். அதுக்கு அவங்க ஜியோன்னு ஆசி கொடுப்பாங்க. அதுதான் நம்ம ரிவாஜ் . . .''[115]

என்று தங்கள் இனப் பழக்க வழக்கத்தினைச் சுசீலா, கோமதிக்கு கற்றுக் கொடுக்கிறாள். 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில்,

''உங்க பொது சமுதாயத்தில் வயசிலப் பெரியவங்களைப் பாத்தா நமஸ்காரம், வணக்கம்னு சொல்லுவீங்கள்லே . . . அதே மாதிரி எங்க சமூகத்தில் வயசுல பெரியவங்ககிட்ட பேசுறப்ப பாம்படுத்தியம்மான்னு சொல்லனும். அது எங்களுக்கான மரியாதைக்குரிய வார்த்தை''[116]

என்று தம் சமூக வழக்கம் குறித்துக் கல்பனா கந்தர்வனிடம் கூறுகிறாள். 'உறையாத நினைவுகள்' என்ற நாடகத்தில்,

''பிரியதர்ஷினி : பாம்படுத்தி குரு பாம்படுத்தி குரு

தேவி : பாம்படுத்தி ஆயா''[117]

என்று மூத்த திருநங்கைக்கு மகளும், பேத்தியும் முறையே மரியாதை தெரிவிக்கின்றனர். இவ்வாறு பெரியோரை மதிக்காவிட்டால் ஜமாத்திலிருந்து விலக்கவும், குருசேலா உறவை முறிக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

4.7 உறவு முறையும் குடும்ப அமைப்பும்

திருநங்கையர் தங்களைப் பெண்ணாக உணர்ந்து அவர்களின் குடும்பத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சூழலில், அவர்களை ஆதரிப்போர் சக திருநங்கையர்களாகவே இருக்கின்றனர். 'இனம் இனத்தோடு சேரும்' என்ற பழமொழிக்கேற்ப தங்களுக்கென்று தனித்த குடும்ப அமைப்பை இவர்கள் உருவாக்கி கொள்கின்றனர். இவர்கள் தங்களை உணரும் பெண் பாலினத்திலேயே உறவுகளை ஏற்படுத்துகின்றனர். பாட்டி, பெரியம்மா, அம்மா, சித்தி, நாத்தனார், மகள், பேத்தி என இவர்களைச் சுற்றி அமையும் உறவுகள் பெண் உறவு முறைகளாகவே இருக்கின்றன. திருநங்கையரின் 'உறவுநிலை' குறித்து,

> **''முதல் நிலையில் தாத குருவையும் (பாட்டியின் தாய்), இரண்டாம் நிலையில் நான குருவையும் (பாட்டி), மூன்றாம் நிலையில் குருவையும் (தாய்), நான்காம் நிலையில் சேலாவையும் (மகள்), ஐந்தாம் நிலையில் நாத்தி சேலாவையும் (பேத்தி), ஆறாம் நிலையில் சந்தி சேலாவையும் (பேத்தியின் மகள்), ஏழாம் நிலையில் சடக்குவையும் (பேத்தி மகளின் மகள்), இப்படியாக ஏழு தலைமுறைகளைக் (பரிவார்) கொண்ட அரவாணியின் சமூகம் தாய்வழிச் சமூகத்தை நினைகூர்கின்றது.''**[118]

என்று பத்ம பாரதி கூறுகின்றார். திருநங்கையரின் சமூகத்தில் ஆண் உறவு முறை சார்ந்த பெயர்கள் வழக்கில் பெரும்பான்மையாக இல்லை. ஆனால் திருநங்கையர் தங்களுக்கு மகனாக ஒரு ஆண் மகனை 'ஜமாத்' முன்னிலையில் தத்தெடுத்துக் கொள்கின்றனர்.

கவிதைத் தரவுகளின் மூல நூல்கள் தவிர நாளிதழ் கவிதைப் பதிவுகளில் உறவுமுறைப் பெயர்கள் பற்றிப் பதிவு செய்யப்படவில்லை.

‘‘உதவுகிறாள்

ஆதரவாக

என் நானி

நான் நீ

என

எப்போது நீ’’ (நா.இ.நா. 38)

‘நானி’ எனும் உறவுமுறைச் சொல் பாட்டியைக் குறிக்கிறது. திருநங்கை கல்கியின் ‘குறி அறுத்தேன்’ என்ற கவிதைத் தொகுப்பில் உறவுப் பெயர்கள் பயின்று வருகின்றன.

‘‘என் குருபாய்

புதிதாய் பரிசளித்த

கொலுசுகள்

என் கால்களில்

சிணுங்கின’’ (கு.அ. 58)

இங்கு ‘குருபாய்’ என்பது அக்காவைச் சுட்டுகின்றது. ‘வாடாமல்லி’ என்ற புதினத்தில்,

‘‘நம்ம ஏரியாவுக்குள்ள மோகினி குரு அலி, சேலா அலிகளை அனுப்பி வைக்காள்’’[119]

என்ற புதினத் தொடரில் குரு சேலா என்பது தாய், மகள் உறவைக் குறிக்கின்றது.

‘அவன் - அது = அவள்’ என்ற புதினத்தில் கோமதியிடம் தனம், தனக்கு வாய்த்த பாட்டி, பணம் பறிப்பவள் என்கிறாள்.

''நானிதான் பணப்பேய்''[120]

என்ற அடியில் 'நானி' என்பது தாய்வழிப் பாட்டி என்ற பொருளில் வருகிறது.

''படிம்மா என்று அழத் தொடங்கினாள் ஊர்மிளா''[121]

என்ற 'அவன் - அது = அவள்' புதின வரிகளில்,

'படிம்மா' என்றால் பெரியம்மா என்ற உறவுப் பெயரைச் சுட்டுவதாகும்.

'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில், கல்பனா கந்தர்வனிடம் கூறுகிறான்.

''என்னோட சோட்டா குரு கோமதி தூக்கு போட்டுகிட்டு செத்துப் போயிட்டாங்க''[122]

இங்கு 'சோட்டா குரு' என்பது சித்தியைக் குறிக்கும்.

''விஜயம்மாவுக்கு நான் சேலா அதாவது மகள், நான் ஒரு திருநங்கையை தத்து எடுத்தா அந்த திருநங்கை எனக்கு மகள். எனது அம்மாவான விஜயாவுக்கு நாத்தி சேலா . . . உனக்கு புரியும்படி சொன்னா பேத்தி . . . விஜயம்மா எனக்கு அடுத்தாப்பலே தத்து எடுத்த திருநங்கைதான் பத்மினி. அவ இப்ப எனக்கு தங்கச்சி மொற . . .''[123]

என்று கந்தர்வனுக்கு, கல்பனா திருநங்கை சமூகத்திற்குள் இருக்கும் உறவுமுறை குறித்து விளக்குகிறாள். பொது சமூகத்தில் ஒரு பெண் ஒரு குழந்தைக்குத் தாயாகக் குறிப்பிட்ட ஆண்டுகள் ஆகும். ஆனால் திருநங்கையர் சமூகத்தில் தன் வயதிற்கு ஓரிரண்டு வயதிற்குக் கீழே உள்ளவர்களைக் கூட சேலாவாக்கிக் (மகளாக்கி) கொள்ளலாம். 'நாயிவாயிச் சீல' எனும் சிறுகதையில் உறவுப் பெயர்கள் இடம்பெறுகின்றன.

''ஆயாமாருங்க எல்லாரும், சேலா மாருங்க எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்து ஒரேத்துருவா கடவீதிக்கு போனாங்க.''[124]

இவ்வடிகளில் 'ஆயா' என்பது அம்மாவின் அம்மாவையும் 'சேலா' என்பது மகள் உறவுமுறையினையும் குறிக்கிறது. 'உறையாத நினைவுகள்' என்னும் நாடகத்தில் பிரியதர்ஷினியிடம், பிரியா பாபு தன் பேத்தியைப் பற்றிக் கேட்கிறாள்.

''பிரியா பாபு: என்ன பேட்டா நல்லா இருக்கியா? என்ன இவ்வளவு தூரம் நீ மட்டுமா வந்த?

பிரியதர்ஷினி: இல்ல குரு, என் சேலா கூட வந்து இருக்கா.

பிரியா பாபு: எங்க என் நாத்து சேலா''[125]

'நாத்து சேலா' என்பது மகளின் மகளை அதாவது பேத்தியைக் குறிக்கிறது. திருநங்கையரை உறவுகள் உதறிவிடுவதால் தங்களுக்குள்ளேயே இம் மாதிரியான உறவுப் பெயர்களை வைத்து அழைத்துக் கொள்கின்றனர்.

4.7.1 குடும்ப அமைப்பு

குடும்பம் எனும் நிறுவனத்தில் வாழும்போதே மனிதன் பக்குவமடைகிறான். பல்வேறு உறவுகளும் அவனுக்கும் குடும்பம் சார்ந்தே அமைகின்றன. திருநங்கையரைப் பொறுத்தமட்டில் அவர்கள் குடும்பத்தாலேயே புறக்கணிக்கப்படுகின்றனர். வேறு வழியின்றி குடும்பத்தை விட்டு விலகும் அவர்கள் சமூக அமைப்பிற்குள்ளும் கேலிப் பொருளாகப் பார்க்கப்படுகின்றனர். இறுதியாக அவர்கள் தஞ்சம் அடைவது திருநங்கையர் குழுமத்தில்தான். திருநங்கையருக்கென்று தனியே குடும்ப அமைப்பு இருக்கிறது. இவர்களுள் சாதி, மத, இனப்பாகுபாடுகள் இல்லை. வர்க்க வேறுபாடுகள் இல்லை. கூட்டுக் குடும்ப அமைப்பு உடைந்து வரும் இன்றைய சூழலில் இவர்களின் ஒருமித்த வாழ்க்கை முறை போற்றத்தக்கது. ஆய்வுத் தரவுகளில் இக்கூட்டுக் குடும்ப அமைப்பு பற்றி, புதினங்களிலும் நாடகங்களிலும் அதிகம் பதிவாகி இருக்கின்றன.

> ‘‘தாய் – மகள், குரு – சேலா என்ற குடும்ப அமைப்பில் அரவாணிகள் வாழ்ந்து வருகின்றனர். தாய், மகள் என்று எடுத்துக் கொண்டால் குடும்பத் தலைமை தாயிடமும், குரு – சேலா என்று எடுத்துக் கொண்டால் குடும்பத் தலைமை குருவிடமும் உள்ளது. இவ்வாறு ஓரிரு உறவுகள் இணைந்து ஒரு குழுவாக 10, 15 பேர் ஒரே வீட்டில் கூடி வாழும் நிலையில் உள்ளனர்’’[126]

என்று பத்ம பாரதி தன் நூலில் திருநங்கையரின் குடும்ப அமைப்பு பற்றிக் கூறுகிறார். சாதி, மதம் கடந்து வாழ்பவர்கள் திருநங்கையர்கள். இதனை,

> ‘‘மதம் மறந்து
> சாதி துறந்து
> மறுக்கப்பட்டவர்கள்
> ஒன்று கூடி
> வாழும் வாழ்க்கையே
> வாழ முடியுமா
> உங்களால்?’’

என்ற திருநங்கை கல்கியின் கவிதை அடிகள் வேறுபாடில்லாத திருநங்கையரின் சமூக அமைப்பை இனம் காட்டுகின்றன. ஆய்விற்கான எட்டுப் புதினங்களில் ‘கனவுகள் கைப்பிடிக்குள்’ என்ற புதினம் தவிர மற்ற ஏழு புதினங்களும் கூட்டமாக, திருநங்கையர் வாழும் முறையைப் பதிவு செய்திருக்கின்றன.

> ‘‘ஒல்லிகாரியான மலையாளத்தா குஞ்சம்மா எப்போதோ பிசைந்து வைத்த சப்பாத்தி மாவை இப்போது சலவைக்கல் மாதிரியான வட்டக்கல்லில் உருட்டிக் கொண்டிருந்தாள். உருளைக் கிழங்குகளை தமிழ்காரி லட்சுமி பொரித்துக் கொண்டிருந்தாள் பாடகி நீலிமா . . . டோலக்கைத் துடைத்து விட்டாள். மார்க்கரெட் நஸிமாவிடம் ஒரு ஓயர் சுருளை நீட்டினாள்’’[127]

குஞ்சம்மா, லட்சுமி, நீலிமா, மார்க்கரேட், நஸிமா இவர்கள் வேறுபட் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்றுபட்டு வாழ்ந்ததை 'வாடாமல்லி' என்ற புதினம் காட்டுகிறது. எங்கிருந்து வந்தாலும் திருநங்கை சமூகத்தில் புதிதாக வரும் திருநங்கையை மகளாகவோ, தங்கையாகவோ பார்க்கும் மனநிலையே இருக்கிறது என்பதை 'அவன் – அது = அவள்' என்ற புதினம் காட்டுகிறது.

> **''மம்மி . . . நான் இவளுக்கு பேரு வைக்கிறேனே என்று ஏக்கத்தோடு கேட்டாள் சுசீலா. அதுக்கு என்ன பேட்டி . . . வச்சுக்கோ . . . அக்காவாச்சு, தங்கச்சியாச்சு . . . என்றபடி கட்டிலில் உட்கார்ந்து விட்டபின் தனம் கோபியைச் சுற்றி வந்து தன் அருகில் வைத்துக் கொண்டு அமர்ந்தாள் சுசீலா. பொறாமையாக வந்தாலும் இப்படி அழகான ஒருத்தி தனக்கு தங்கையாகிப் போன மகிழ்ச்சி முகத்தில் தெரிந்தது . . .''**[128]

திருநங்கையர் பாசத்தில் மிகுந்தவர்கள். அன்பிற்காக ஏங்குபவர்கள். 'மூன்றாம் பாலின் முகம்' என்ற புதினத்தில் ரமேஷின் தாய் திருநங்கையர் வாழும் பகுதிக்கு வருகிறாள்.

> **''அம்மா இது உங்க வீடு மாதிரி. கூச்சப்படாம சாப்பிடுங்க. ஷைலஜா சொன்னாள். எல்லாரும் அரக்க பரக்க ஓடியாடி பார்வதியைக் கவனித்தனர். திண்ணையில் அமர்ந்தனர். உள்ளே சிரிப்பும் கும்மாளமுமாக ப்ரியா, ஷைலஜா கலா, வாணி, ரமேஷ் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்''**[129]

திருநங்கையர் குடும்பத்தாலும் சமூகத்தாலும் அடையும் வேதனைகளை மறைத்து மகிழ்ச்சியோடு இருப்பது அவர்கள் சமூகத்தில்தான். 'பூமி வசப்படுமே' என்ற புதினம் திருநங்கையரின் கூட்டு வாழ்க்கை முறையை மிக ஆழமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

> **''இங்கே, பாட்டி மரகதமணி என்ற மரகதவல்லி, அம்மா 'விஷ்ணுவர்த்தன்' என்ற விஷ்ணு பிரியா, அத்தை 'சுரேஷ்' என்ற 'சுமதி', 'வள்ளிநாயகம்' என்ற வள்ளி அக்கா,**

பானுசந்தர் என்ற பானு அக்கா, 'ராகுல்' என்ற காமாட்சி அக்கா அனைவரும் மணியை பாசத்துடன் நேசத்துடன் பாராட்டினார்கள். கொண்டாடினார்கள்.''[130]

திருநங்கையர் சமூகத்திற்குள் இருக்கும் உறவுகள் அவர்களுக்கு ஆறுதலாகவும் பக்கபலமாகவும் இருக்கின்றது. ஆய்வுச் சிறுகதைகளில் 'மதி' எனும் ஒரு மனிதனின் மரணம் குறித்து' எனும் சிறுகதையில்,

''ஓ . . . நம் மனிதர்கள் எவ்வளவு உன்னதமானவர்கள். நூறு தடவை சண்டைகள் வந்தாலும் . . . எத்தனை பிரச்சனையிருந்தாலும் ஓடோடி வந்து பதறிய அவர்கள் தான் உனது உண்மையான உறவுகள்''[131]

என்று கூறுவதிலிருந்து ஒரு திருநங்கைக்கு உயிரைக் கொடுக்கவும் அவர்கள் சமூகம் முன்வரும் என்பதை அறிய முடிகிறது. 'தொலைந்த முகம்' என்ற சிறுகதையில் ஆதரவுக் கரம் நீட்டும் திருநங்கையர் சமூகம் குறித்துப் பதிவாகி இருக்கிறது.

''மனிதன் கூடி வாழும் இயல்பினன். சுற்றங்கள் இன்றி தனியாக வாழ மனிதனால் இயலாது. இயற்கையின் அச்சுப் பிழைகளான அரவாணிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. உறவுகளை உதறிவிட்டு வந்தவர்கள் ஒன்று கூடி புதிய உறவுகளை உருவாக்கிக் கொள்வதுதான் விந்தை''[132]

சமூகத்தைச் சிந்திக்க வைக்கும் ஒற்றுமை உணர்வு மிகுந்ததாகத் திருநங்கையர்களின் குடும்ப அமைப்பு திகழ்கின்றது. 'ஊர்களில் அரவாணி' என்ற சிறுகதையில்,

''மெல்ல சிரித்து லிங்கத்தை தடவிக் கொடுத்தான் கோபால். அவனும் சிரித்து நின்றாள். என் ராசாத்தி . . . இல்லை . . . என சொல்லால் கொஞ்ச ஊரணியில் குளித்த ஓரிரண்டு ஆட்கள் வேடிக்கை பார்த்தனர்.''[134]

என்ற வரிகள் திருநங்கையருக்குத் திருநங்கையரே ஆதரவு தர முன் வருகின்றனர் என்பதை மெய்ப்பிக்கின்றன. ஆய்வுக்கான நாடகத்தில் குடும்ப அமைப்பு முறையினைக் காண முடிகிறது. 'மனசின் அழைப்பு' என்ற நாடகத்தில் வாடகை வீட்டிற்காகத் திருநங்கைகள் அலைவதை,

''அரவாணி : சரிங்க. கையோட துட்டு கொண்டு வந்திருக்கேன். பிடிங்க 5000. நான் போய் எங்க குருபாயிங்கள கூட்டிட்டு நாளைக்கே வந்துர்றேன்.

நபர் 2 : இந்தா இந்தா . . . எத்தனை பேர்?

அரவாணி : நாலு பேரு இருக்காங்க. என்னையும் சேர்த்து அஞ்சு.''[135]

என்ற உரையாடல் எடுத்துரைக்கின்றது.

திருநங்கையர்கள் ஒன்று கூடி வாழ்ந்தாலும் நல்ல வாழிடங்களில் வாழ்வது இல்லை. சமூகத்தினர் குடியிருப்புகள் தர மறுப்பதால் ஊரின் ஒதுக்குப்புறங்களிலேயே வாழ்கின்றனர். 'மாற்றம்' என்ற நாடகத்தில் திருநங்கையர்கள் குடும்ப அட்டை வழங்க வரும் அதிகாரியிடம் உரையாடுகின்றனர்.

''குடும்ப அட்டை வழங்கும் அதிகாரி : என்னம்மா இது. இந்த வீட்டுல ஆம்பளைங்க யாருமே இல்லையா?

அரவாணி : ஆம்பளைங்க யாருமில்லை. இப்ப நான் சொன்னதெல்லாம் பொம்பளைங்க பேருமில்ல. நாங்க அரவாணிங்க இந்த வீட்டுல குடியிருக்கோம்''[135]

திருநங்கையர்கள் தம்மை நாடி வரும் எவரையும் விரட்டுவதில்லை. அவர்களின் பலம் என்பது அவர்களின் கூட்டு முறை வாழ்க்கையாகும். வயது முதிர்ந்த

திருநங்கையரை வயதில் சிறிய திருநங்கையர் தங்களது வருமானத்தைக் கொண்டு காக்கின்றனர். உடைந்து வரும் கூட்டுக் குடும்பச் சூழல் திருநங்கையர் சமூகத்தில் உடையாது இருப்பதே அவர்களின் பலமாகும். சிறுபான்மைச் சமூகத்தினராக இருப்பினும் இன்று இரண்டிலிருந்து மூன்று சதவீத இட ஒதுக்கீடு கேட்டு அரசிடம் முறையிடுகின்றனர். அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், அவர்களின் இல்வாழ்வியல் சூழல் குலையாதிருக்க அரசும் சமூக மக்களும் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

4.7.2 சமூக அமைப்பு

திருநங்கையரின் குடும்பத்துக்குள் ஏற்படும் எல்லாவிதமான முக்கிய நிகழ்வுகளும் ஜமாத்தின்வழி நடைபெறுகின்றன. ஜமாத்தின் தலைவரை 'நாயக்' என்று அழைக்கின்றனர். குடும்பத் தலைவர்களின் கட்டுப்பாட்டிற்கு அனைவரும் உடன்பட்டு நடக்க வேண்டும்.

> "**1. தத்துப் பஞ்சாயத்து (ரீத் போடுதல்)**
>
> **2. இறப்புப் பஞ்சாயத்து**
>
> **3. சண்டைப் பஞ்சாயத்து**
>
> **4. சுப நிகழ்வுப் பஞ்சாயத்து (ரொட்டி சட்டாய்)**"[136]

என்று பஞ்சாயத்தின் முன்னிலையிலேயே அனைத்து நிகழ்வுகளும் நடப்பதாகத் திருநங்கை பிரியா பாபு கூறுகிறார். பஞ்சாயத்து (ஜமாத்) எடுக்கும் முடிவுகளுக்குப் பெரும்பாலும் திருநங்கையர்கள் கட்டுப்படுகின்றனர். அவ்வாறு கட்டுப்படாதவர்களைத் திருநங்கையர் சமூகத்தில் இருந்து விலக்கியும் வைக்கின்றனர். திருநங்கையரின் 'ஜமாத்' அமைப்பு பற்றி ஆய்வுத் தரவுகளில் பதிவாகி இருக்கின்றன. ஆய்வுக்கான கவிதை, சிறுகதைத் தரவுகளில் 'ஜமாத்' அமைப்பு குறித்து பதிவு செய்யப்படவில்லை. எஸ்.பாலபாரதியின் 'அவன் - அது = அவள்' என்ற புதினத்தில்,

''சுசீலாவுக்கு ஜமாத் விவகாரங்களைச் சொல்லிக் கொடுப்பதோடு, கோமதிக்கும் ஏதாவது நல்லது செய்துவிட வேண்டும் என்று எண்ணியபடியே கட்டிலில் சாய்ந்து படுத்தாள் தனம்''[137]

என்று எடுத்துரைக்கப்படுகின்றது. திருநங்கையர் குழுமத்தைத்தான் 'ஜமாத்' எனக் கூறுகின்றனர். 'உன்னை விட்டு விலகுவதில்லை' என்ற புதினத்தில், தத்தெடுப்புச் சடங்கு 'ஜமாத்' முன்னிலையில் நடைபெறுவது குறித்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும்,.

''பிறகு தண்டுக் காசுன்னு ரூ.101–ம் கொடுக்கணும். பிறகு ஜமாத்தைக் கூட்டி எல்லாருடைய முன்னாலும் தட்டில் கை வைத்து, அதுக்குன்னு இருக்குற வாக்குறுதிகளைச் சொல்லி . . .''[138]

என்னும் உரையாடலில் ஜமாத் அமைப்பு இடம்பெறுகிறது. எந்தவொரு சடங்கும், முக்கிய முடிவுகளும் திருநங்கையர், 'ஜமாத்' முன்னிலையிலேயே எடுக்கின்றனர். 'வலி அறுப்பு' நாடகத்தில் 'ஜமாத்' குறித்துப் பதிவாகியிருக்கிறது.

''தொலைந்ததைத் தேட வெளிச்சத்தைத் தேடினோம். வெளிச்சமாய் அமைந்தது எங்கள் ஜமாத்''[139]

என்ற நாடக உரையாடல் திருநங்கையரின் வாழ்வில் 'ஜமாத்' அமைப்பு முக்கியத்துவம் பெறுவதைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

4.8 மொழி

மனிதர்களின் உள்ளக் கருத்தியலை வெளிக் கொணர்வதற்கு 'மொழி' ஒரு சிறந்த கருவி. சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட திருநங்கையர் தங்களுக்குள் பிறர் அறியா வண்ணம் குழூஉக் குறியாகத் தனிமொழியைப் பேசுகின்றனர். இம்மொழிக்கு 'கவுடி பாஷை' என்றும், 'கவடி பாஷை', 'கவடி பாவீ' என்றும் வழங்கப்படுகின்றது. 'கவடி' என்றால் 'இரகசியம்' என்று பொருள்படுகின்றது. இம்மொழிக்கென்று தனியாக எழுத்து

வடிவம் கிடையாது. திருநங்கையர் குழுமத்திற்கு மட்டுமே புரியும் வகையில் இம்மொழி அவர்களுக்குள் பேசப்பட்டு வருகின்றது.

> **"இவர்கள் பேசக்கூடிய மொழி பெரும்பாலும் இந்தியும் சமஸ்கிருதம் கலந்த மொழியாகும்."**[140]

என்கிறார் ந.அறிவுராஜ். இம்மொழி தோற்றம் பெற்றது குறித்து,

> **"இவைகள் மொகலாயர் காலத்தில்தான் துவங்கியிருக்கலாம்"**[141]

என்று திருநங்கை பிரியா பாபு குறிப்பிடுகின்றார்.

ஆங்கில நாடக ஆசிரியர் மகேஷ் தத்தானி,

> "The term hijra, of cause, is of Urdu origin, & combination of Hindi, Persion and Arabic."[142]

என்று 'ஹிஜிரா' எனும் சொல் உருது மொழிச் சொல்லாயினும், அது ஹிந்தி, பெர்ஷியன், அரபிக் மொழிகளின் கலவை என்கிறார். திருநங்கையர் பேசும் இம்மொழியைக் கலைச் சொற்களாக நுட்பமாக ஆராய்ந்து,

*** சடங்கு முறை சார்ந்த கலைச் சொல்லாக்கம்**

*** பாலியல் சார்ந்த கலைச் சொல்லாக்கம்**

*** பொதுப் பயன்பாடு சார்ந்த கலைச் சொல்லாக்கம்**

எனப் பிரிக்கலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுத் தரவுகளில் பதிவாகி இருக்கும் கலைச்சொற்கள் கீழே தரப்படுகின்றன.

4.8.1 சடங்கு முறை சார்ந்த கலைச் சொல்லாக்கம்

திருநங்கையர் குழுமத்தில் வழங்கப்படும் சடங்குமுறை சார்ந்த கவுடி மொழிச் சொற்கள் திறனாய்வு நூல்களில் பதிவு செய்யப்படுகின்றன. அவை கீழே தரப்படுகின்றன.

ரீத் போடுதல்	–	தத்தெடுத்தல்
ரவுண்ட்டப்	–	அணிகலன்களை மீண்டும் அணிதல்
மறுஜோக்	–	மறு புடவை
நிர்வாணப் பூசை	–	விதைத்தறிப்பு நிகழ்வு
பால் சொம்பு பூசை	–	வயதுக்கு வருதல்
நாம் சடாய்த்தல்	–	பெயர் வைத்தல்
பெண்மடி கட்டுதல்	–	மகளாகத் தத்தெடுத்தல்
ஹல்தி மெகந்தி	–	மருதாணி விழா
வருடி பூசை	–	பிறந்த நாள்
சாட்லா	–	நீர், மரம், நாயிடம் பிறப்புறுப்பைக் காட்டல்

4.8.2 பாலியல் சார்ந்த கலைச் சொல்லாக்கம்

திருநங்கையர் குழுமத்தில் வழங்கப்படும் பாலியல் சார்ந்த கவுடி மொழிச் சொற்கள் திறனாய்வு நூல்களில் பதிவு செய்யப்படுகின்றன. அவை கீழே தரப்படுகின்றன.

காலடி	–	அரவாணியின் ஆசனவாய் வழியாக ஆண் உறுப்பை விட்டு உடலுறவு கொள்ளுதல்
குச்சி / லிங்கம்	–	ஆண் உறுப்பு
சாக்லெட்	–	ஆணுறை
சிதி	–	பெண் உறுப்பு
தந்தா	–	ஆண்களோடு உடலுறவு வைத்துக் கொள்ளுதல் / பாலியல் தொழில்

தாயம்மா கை – அரவாணிகளே முன்நின்று ஆண் உறுப்பை வெட்டியெடுக்கும் செயல்

நிர்மா – விந்து

டாக்டர் கை – அரவாணிகள் ஆண் உறுப்பை மருத்துவர் அறுவைச் சிகிச்சையின் மூலம் நீக்குதல்

காந்தரா – பாலியல் விடுதி

4.8.3 பொதுப் பயன்பாடு சார்ந்த கலைச் சொல்லாக்கம்

திருநங்கையர் குழுமத்தில் வழங்கப்படும் பொதுப் பயன்பாடு சார்ந்த கவுடி மொழிச் சொற்கள் திறனாய்வு நூல்களில் பதிவு செய்யப்படுகின்றன. அவை கீழே தரப்படுகின்றன.

அக்குவா – ஆண் உறுப்பை வெட்டாமல் இருப்பவர்

ஜமாத் – கூட்டம்

கோத்தி – அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாமல் ஆண் உடையிலேயே இருந்து கொண்டு ஒரு சில நேரங்களில் பெண் உடையணிந்து கொள்ளும் பெண் உணர்வு கொண்டவர்கள்.

ஜோக் ஏத்தறது – புத்தாடை அணிதல்

கோடி – போலீஸ்

சீஸ் – அழகு

சோக்கு – ஆடை

பந்தி – ஆண்

மோரி – குளிக்கும் அறை

பீலி – பிரச்சனை

பண்டாயி – கேலி செய்தல்

நாயக் – பஞ்சாயத்துத் தலைவர்

லெச்சா – கருகமணியிலான தாலி

மிஞ்சி – மெட்டி

கவடிபாவீ – திருட்டு மொழி; அரவாணிகளின் மொழி

பதாய் – குழந்தை பிறத்தலை வாழ்த்தும் பிரிவு

ஜியோ – வணக்கம், மன்னிப்பு

டோலக் – மேளம்

தூக்குதாணி – எச்சில் துப்பும் பாத்திரம்

ஜல்தி – சீக்கிரம்

செறுவாரு – கோவணமாகக் கட்டுவது

சாட்லா போடுதல் – சண்டை போட்டு துணி தூக்கி நிற்றல்

சண்டாஸ் – சிறுநீர், மலம் கழித்தல்

முர்கேவாலிமாதா – தெய்வத்தின் பெயர்

கடை கேட்டல் – பிச்சை கேட்டல்

ஜீத்தேரோ – வாழ்த்துதல்

ஆய்வுக்கு உட்படுத்திய கவிதைத் தரவுகளில் மூல நூல்கள் தவிர நாளிதழ் கவிதைப் பதிவுகளில் ‘கவுடி மொழி’ பயன்படுத்தப்படவில்லை. ஆண்டாள்

பிரியதர்ஷினியின் 'நானும் இன்னொரு நானும்' கவிதைத் தொகுப்பில் பாலியல் சார்ந்த சொற்கள் மட்டும் பயன்படுத்தப்படவில்லை.

''நான் கோத்தி

ஆணாகவும் பெண்ணாகவும்

இல்லாமல்

நீ எதில் சேர்த்தி

மனுஷனாகவும் மனுஷியாகவும்

இல்லாமல்'' (நா.இ.நா. 33)

'கோத்தி' என்பது ஆணுடையில் இருக்கும் திருநங்கையைக் குறிக்கும்.

''ஹல்தி மெஹந்தி

பூப்பு நன்னீராட்டு விழா

பெண்ணாக

மாறும் போது எனக்கு . . .'' (நா.இ.நா. 35)

சடங்கு முறை 'ஹல்தி மெஹந்தி'. மருதாணி விழாவினையும், 'பூப்பு நன்னீராட்டு' என்பது பெண் சடங்கினையும் குறிக்கின்றது.

''ஐந்து ரூபாய்

ரீத் போட்டு தேடுகிறேன்

திருநங்கை அடையாளம்'' (நா.இ.நா. 37)

இக்கவிதையில் 'ரீத் போடுதல்' என்பது திருநங்கை தன் மகளாக வேறொரு திருநங்கையைத் தத்தெடுக்கும் சடங்கினைக் குறிக்கும்.

'' . . . . . .

பசுமை அலங்காரம்

சாட்லா சடங்கில் . . .'' (நா.இ.நா. ப. 51)

அறுவைச் சிகிச்சை முடிந்து பால் ஊற்றும் சடங்கின்போது செய்யப்படும் ஒரு சடங்கு முறை 'சாட்லா' ஆகும்.

''கோலம் போடுவியாடி?

தெரியாதே

என்னடி கோத்தி நீ . . .''

''சிரித்தாள் என் குருபாய்'' (கு.அ. 68–70)

இங்கு 'கோத்தி', 'குருபாய்' எனும் சொற்கள் கவிதையில் பயின்று வருகின்றன. 'வாடாமல்லி' என்ற புதினத்தில்,

''ஜமாத் தலைவி சுந்தரம்மா, அவர்கள் கத்தி அடங்கட்டும் என்பது போல் விட்டுப் பிடித்தாள்''[143]

'ஜமாத்' என்பது கூட்டத்தினைக் குறிக்கிறது. எஸ்.பாலபாரதியின் 'அவன் – அது = அவள்' என்ற புதினத்தில் பல இடங்களில் கவுடி மொழிச் சொற்கள் வருகின்றன.

''ஆமாண்டீ நா சொல்றது நேசம். அவனுங்களைப் பொறுத்தளவில் எல்லாப் பொட்டகளுமே சம்டி தந்தா செய்றவளுங்கதான்''[144]

இதில் 'சம்டி தந்தா' என்பது பாலியல் தொழில் ஆகும்.

''டிரஸ் போட்ட அன்னக்கே பந்திக்கு அலையாதே''[145]

'பந்தி' என்பது ஆணைக் குறிக்கும்.

''நீ சக்காவா? என்று கேட்டாள்.''[146]

'சக்கா' என்றால் 'திருநங்கை' என்று பொருள்.

''சண்டாசு பக்கத்துலதான் நான் இருக்கேன்''[147]

'சண்டாசு' என்றால் 'கழிப்பறை' என்பது பொருள்.

''ஆஸிக் கூட கொஞ்சுறதுக்கே நேரம் பத்துதோ பத்தாதோ''[148]

‘ஆஸிக்’ என்றால் ‘காதலன்’ ஆகும்.

‘‘சட்டாய்ல படுக்க வையுங்க’’[149]

‘சட்டாய்’ என்றால் பாய்.

‘‘ஒன்னு சாட்லாவுக்கு, மத்த ரெண்டும் நான் அவளுக்கு கொடுக்கும் பிரசண்ட்.’’[150]

‘சாட்லா’ என்றால் நாற்பதாவது நாள் பால் ஊற்றும் சடங்கு. ‘மூன்றாம் பாலின் முகம்’ என்ற புதினத்தில்,

‘‘அதை தூக்குதானி என்று அவர்கள் கூறுவதை ரமேஷ் கவனித்தான்’’[151]

இங்கு ‘தூக்குதானி’ என்ற பொதுப் பயன்பாட்டுச் சொல் இடம்பெறுகிறது. மேலும் இப்புதினத்தில்,

‘‘ஆயீஷா நாயக் தாவத்துக்கு கூடவர்வீயே’’[152]

என்று கேட்கிறாள். இங்கு ‘தாவத்’ என்பது இறப்புச் சடங்கினைக் குறிக்கிறது.

எஸ்.செல்வ சுந்தரியின் ‘உன்னை விட்டு விலகுவதில்லை’ எனும் புதினத்தில் திருநங்கையின் கவுடி மொழிச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

‘‘ரீத் போட்டபிறகு எனக்கு நிர்வாணம் நடக்கிறதுக்கு காசு வேணுமே’’[153]

‘ரீத்’ என்ற சொல் தத்தெடுக்கும் சடங்கினைக் குறிக்கும்.

‘‘அத பரிவார்னு சொல்வாங்க’’[154]

திருநங்கைகளுக்குள்ளும் நிறப் பிரிவுகள் உண்டு. பிரிவின் பெயர் பரிவார். ஆய்வுக்கான சிறுகதைத் தரவுகளில் ‘நாயிவாயிச்சீல’ எனும் சிறுகதையில் அதிக அளவு கவுடிமொழிச் சொற்கள் கையாளப்பட்டிருக்கின்றன.

‘‘கோத்தியாலே திரிய இன்னும் யெனக்கு விதியா’’[155]

‘‘தந்தாவும் வேண்டாண்டி ஒரு கிந்தாவும் வேண்டாண்டி’’[156]

''தெரட்டி முடிஞ்சதும் பொறப்படலாமுன்னா எங்க முடியுது?''[157]

'தெரட்டி' எனும் சொல் 'பூப்பு' நீராட்டு விழாவினைக் குறிக்கும்.

''இன்னிக்கு விடியறதுக்குள்ள உனக்கு உறுதியா கை போடறம்மின்னுச் சொன்னாங்க''[158]

'கை போடுதல்' என்பது தாயம்மா நிர்வாணத்தைக் குறிக்கிறது.

''கப்புப் போட்டு, சோக்கேத்தி, ஆத்துக்குப் போயி, தீர்த்தம் எடுத்தாந்து..''[159]

இதில் 'ஜோக்கேத்தி' என்பது பாவாடை சேலை முதலான பெண்கள் உடைகளையும், தோடு, மூக்குத்தி, கொலுசு, மெட்டி முதலான ஆபரணங்கள் அணிவித்தலையும் குறிக்கும்.

''மோரியிலக் குந்த வச்சி ஓலத் தண்ணிய மூட்டு மூட்டு காவு மேல அடிச்சிவுடறதோடச்சேரி''[160]

'மோரி' என்பது குளிக்கும் அறையைக் குறிக்கும். ஊர்களில் அரவாணி எனும் சிறுகதையில் லிங்கத்தை மற்ற திருநங்கையரிடம் அறிமுகப்படுத்தும் போது,

''நம்ம குருத்து..''[161]

என்று கோபால் அறிமுகப்படுத்துகிறார். 'குருத்து' என்றால் சிறிய திருநங்கை என்பது பொருளாகும்.

ஆய்விற்கான நாடகத் தரவுகளில், 'ஜமாத்' எனும் கவுடிமொழிச் சொல் வந்துள்ளது. 'உறையாத நினைவுகள்' நாடகத்தில் கவுடி மொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

''அந்த ஜமாத் டான்சு போட்டோ எடுத்திட்டுவா..''[162]

மேலும்,

''ஒரே பீலியா இருக்குதா...''[163]

''ரம்யா சட்டாய் போடு...''[164]

''பிரியா பாபு ரீத் போடுதல்''[165]

''சரி ஆயா, பாம்படத்தி...''[166]

இவ்வடிகளில் கவுடி மொழிச் சொற்கள் கையாளப்பட்டிருக்கின்றன. கவுடி மொழி திருநங்கையர் குழுமத்திற்கே உரித்தான மொழியாகும். அவர்களின் மன உணர்வை அவர்களுக்குள் வெளிப்படுத்தும் ஒரு இரகசிய மொழியாகும். மற்றவர்கள் அதனைப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதானது அன்று. ஆய்வுப் புதினங்களிலேயே அதிக அளவு கவுடிமொழி சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இது சிறுபான்மையினராக இருக்கும் திருநங்கையர் பேசும் மொழியாதலால், பெரும்பான்மையாகப் புற உலகிற்குத் தெரிய வருவது இல்லை. குழூஉக்குறி போன்றே இவர்களின் மொழி அமைந்திருக்கின்றது.

4.9 தொழில்கள்

மானுட உயிர் வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவாகும். பொருளாதார அளவில் தன்னை நிலைப்படுத்த மனிதனுக்குத் தொழில் மிக முக்கியமாகும். திருநங்கையர்களைப் பொறுத்த அளவில் அவர்களின் பொருளாதார நிலைப்பாடு மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. வடநாட்டைக் காட்டிலும் தென்னாட்டுத் திருநங்கையர்களே பொருளாதாரப் பின்னடைவில் முன்நிற்கின்றனர். குடும்பத்திலிருந்து வெளியே வரும் திருநங்கையர்களை ஆட்கொள்ளும் முதல் சிக்கல் வறுமையாகும். அவர்களின் உணவுத் தேவைக்கான பொருளாதாரப் பற்றாக்குறையே அவர்களைக் கடைகேட்டலுக்கும், பாலியல் தொழிலுக்கும் துரத்துகிறது. அன்றாட உணவுக்கும், உடைக்கும் இதரத் தேவைகளுக்கும் வேறு வழியின்றி அவர்கள் இந்நிலையை ஏற்கும் சமூகச் சூழல் உருவாகிறது.

திருநங்கையர்கள் செய்யும் தொழில்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.



4.9.1 முதன்மைத் தொழில்கள்

4.9.1.1 கடை கேட்டலும், பிச்சையெடுத்தலும்

'நான் வித்யா' எனும் நூலில் திருநங்கையரின் கடை கேட்டல் பற்றிப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

> "பிச்சை எடுத்தலை திருநங்கை உலகம் 'கடை கேட்டல்' என்றும் சொல்லும். கடை கடையாக ஏறிப் பிச்சைக் கேட்பது 'கடை கேட்டல்' அல்லது 'பஜார் கேட்டல்' இதுவே டிரெயினில் பிச்சை எடுத்தால், அது 'டிரையின் கேட்டல்', டிராப்ஃக் சிக்னலில் பிச்சைக் கேட்டால், 'டிராபிக் கேட்டல்' ஆக மூன்று விதமான பிச்சைகள் அல்லது கேட்டல்கள்"[167]

என்று திருநங்கை லிவில் ஸ்மைல் வித்யா குறிப்பிடுகிறார். திருநங்கையரின் இத்தகைய நிலையை ஆய்வுத் தரவுகள் வெளிக்கொணர்கின்றன.

> "கடை கேட்கிறேன்
> குடல் பசிக்கு . . ." (நா. இ. நா. ப.33)
>
> "கைதட்டிப் பிச்சை கேட்கிறேன் நான்..." (நா. இ. நா. ப.41)
>
> "டிரெயின் கேட்டல் பஜார் கேட்டல்

டிராபிக் கேட்டல் சுலபம்...'' (ந.இ.நா.ப.42)

போன்ற கவிதை வரிகளில் ஆண்டாள் பிரியதர்ஷினி திருநங்கையர் பிச்சையெடுத்தலைப் பதிவு செய்திருக்கிறார். திருநங்கை கல்கி 'குறி அறுத்தேன்' கவிதைத் தொகுப்பிலும் இந்நிலையைக் கூறுகிறார். 'திருநங்கை அழகி' எனும் கவிதையில் அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருநங்கைகள் மூன்று நாட்களுக்குப்பின், மாறுபடும் அவர்களின் வாழ்க்கை நிலையைக் கீழ்வருமாறு சித்திரிக்கின்றார்.

''மூன்று நாட்கள் கழித்து

மூன்று அழகிகளும்

தெருவில்

எப்போதும் போல

பிச்சைக்கும்

பாலியல் தொழிலுக்கும்'' (கு. அ. ப. 67)

என்று குறிப்பிடுகிறார். நாட்டிலும் ஊடகங்களிலும் அவர்கள் அழகிகளாக வலம் வந்தாலும் இறுதியில் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள இழிவான தொழிலுக்குத் தள்ளப்படுகின்றனர். பொன். இரவீரந்திரன் 'கடை கேட்டல்' குறித்து பதிவு செய்கின்றார்,

''சில நேரங்களில் தனியாக

அவ்வப்போது கூட்டாக

எப்போதோ ஒருமுறை கூட்டமாக . . .

அவர்களாகவே வருவார்கள்

டப்டப் யெனும் கைதட்டலோடு

குரல் கொடுப்பார்கள்

கல்லா முகம் பார்ப்பார்கள்''[168]

என்று திருநங்கையர் கையேந்தும் நிலை எடுத்துரைக்கப்படுகின்றது.

'வேடிக்கை பார்ப்பவர்கள்' எனும் கவிதையில்,

''மின் வண்டிகளில்

உள்ளங்கைகளை இசைத்தபடி சேமிக்கும் நாணயங்களை

திருநங்கைகள் ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார்கள்

சிறு உணவுப் பொதிகளோடு பணிக்குச் செல்பவர்கள்

பார்க்க நேரும்படி . . . ''[169]

என்று ஸ்ரீஷங்கர் திருநங்கையர் புகைவண்டியில் கடை கேட்பதைப் பதிவாக்கியிருக்கிறார்.

ஆய்வுப் புதினங்களிலும் திருநங்கையர் பிச்சையெடுப்பது பற்றிப் பேசப்படுகிறது. 'அவன் – அது = அவள்' புதினத்தில்,

> **''ஒரு நாள் அவ கடை கேட்கத் தயாராகி விட்டாள். கடை கேட்கப் போகும் மற்றவர்களுடன் முதலில் உப்புக்கு சொப்பாய் சும்மா போய் வந்தாள். கைகளைக் குவித்து தட்ட வேண்டியது மட்டும்தான் இவளது வேலை மற்றதை உடனிருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள். மற்றவர்கள் கைநீட்டி காசுக்காக காத்துக்கிடக்கும் போதெல்லாம் மனது கிடந்து அடித்துக் கொள்ளும் இப்படியே ஓடி விடலாம் . . .''**[170]

இங்கு கடை கேட்டலை விரும்பாத கோமதியின் மனநிலை சித்திரிக்கப்படுகின்றது. 'உன்னை விட்டு விலகுவதில்லை' புதினத்தில்,

> **''ரோட்டின் அந்தப்பக்கம் இருந்த கடைகளில் நிறைய திருநங்கைகள் அதிகப்படியான ஒப்பனையுடன் கைநிறைய கண்ணாடி வளையல்கள் அணிந்தபடி, ஒவ்வொரு கடையாக ஏறி அவர்களுக்கென உரிய தனிப்பட்ட முறையில்**

வித்தியாசமான ஒலியில் கைகளை 'ஓ' என்ற வடிவில் வளைத்தபடி தட்டி ஓசை எழுப்பியபடி, அதோடு நடனமும் ஆடியபடி காசுகளை யாசித்து வாங்கிக் கொண்டிருந்தார்கள்''[171]

திருநங்கையர் தன்மானம் இழந்து பிச்சை கேட்டாலும் சமூகம் அவர்களைத் துரத்தி அடிக்கவே செய்கிறது. ஆய்வுச் சிறுகதைகளிலும் பிச்சையெடுத்தல் குறித்த பதிவுகள் இருக்கின்றன. 'தேடல்' சிறுகதையில் 'இரயில் கேட்டல்' கூறப்படுகின்றது.

''அந்த ஸ்டேஷனில் சிலர் ஏறினார். அப்போது கைதட்டும் ஒலி கேட்டது. வேறு யாருமில்லை. ஒரு திருநங்கைதான் அவள் பச்சை நைலக்ஸ் புடவை கட்டியிருந்தாள். வண்டியிலுள்ளவர்களிடம் யாசகம் கேட்டுக் கொண்டே வந்தாள்''[172]

இவ்வாறு பேருந்து நிலையம், இரயில் நிலையம் எனத் திருநங்கையர்கள் வாழ்வியல் போராட்டத்திற்காகப் பிச்சையெடுக்கும் இழிவான செயல் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. 'மாற்றம்' நாடகத்தில் திருநங்கையர் கடை கேட்பது குறித்துப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

''(ஒரு அரவாணி ஆடிக்கொண்டே கையைத் தட்டி காசு கேட்கிறாள்.)

கடைக்காரர்: வாம்மா, வா எங்க நீ மட்டும் தனியா வந்திருக்க.

ஒன் கூட ஒண்ணு வருமே கறுப்பா. அது எங்கே?

அரவாணி: (நாணிக் கொண்டே) ஓ! ஐஸ்வர்யாவா . . . அவளுக்கு ஒடம்பு சரியில்லே அண்ணாச்சி! அதான் நான்மட்டும் தனியா வந்தேன். நீங்க காசு குடுங்க அண்ணாச்சி, நான் அடுத்த கடைக்குப் போகணும்''[173]

'உறையாத நினைவுகள்' நாடகம் திருநங்கையர்கள் கடைகேட்டலால் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்துப் பேசுகிறது.

''எங்கபாடே பெரும்பாடா இருக்குது. இதுல நீ வேற, கடை கடையாய் பிச்சை கேட்டாத்தான் எங்க பொழப்பே நடக்குது. அதுல கூட எத்தன பந்திகளும் நாரன்களும் நம்பள ஒன்பதுன்றா, பொட்டன்றா . . . ''[174]

என்று மூத்த திருநங்கை கூறுகிறாள். திருநங்கையர்கள் காசு கேட்க வந்தாலும் ஆண்களின் பார்வையில் அவர்கள் நுகர்வுப் பொருளாகவே பார்க்கப்படுவது அவலமான போக்காகும்.

4.9.1.2 பாலியல் தொழில்

திருநங்கையர்கள் பாலியல் தொழில் செய்து, தங்கள் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யும் சூழல் ஆய்வுத் தரவுகளில் இடம் பெறுகிறது.

''அரவாணிகள் பாலியல் தொழில் ஈடுபடுவதற்குச் சமுதாயமே காரணமாக அமைகிறது. சமூகத்தளத்தில் எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்புரிமை மறுக்கப்படுவதால் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு வேறு வழியின்றி பாலியல் தொழில் ஈடுபடுகின்ற இழிவான நிலை உருவாகிறது''[175]

என்ற மணிவண்ணனின் கூற்று சிந்திக்கத்தக்கது. 'நானும் இன்னொரு நானும்' கவிதைத் தொகுப்பில் வயிற்று உக்கிரத்திற்குப் பாலியல் தொழிலில் ஈடுபடும் திருநங்கையர் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

''பாலியல் செய்தேனும்
பசி தீர்க்க வேண்டும்
வயிற்று உக்ரம் எனக்கு
உடம்பு வக்ரம் உனக்கு'' (ந.இ.நா. ப. 30)

வயிற்றுக்காக உடலை விற்கும் திருநங்கையர்களைத் தன் உடல் பசிக்காக ஆண்கள் வடிகாலாகக் கொள்கின்றனர். வறுமைப்பிடியில் சிக்கித் தவிக்கும்

திருநங்கையர்கள் வேறு வழி இன்றி, பாலியல் தொழிலுக்குத் தள்ளப்படும் அவலத்தை கீழ்வரும் கவிதை சித்திரிக்கின்றது.

''தேசத் தந்தைக்கு
விலை வைத்த
காகிதத்தாள்களுக்கு ஏங்கி
நெருப்பை வலியோடு
நெஞ்சில் சுமந்து
ஏனடி
வெற்றுடம்பில்
வாழும்
உயிர்ப்பிணமாய்
கிடக்கிறாய்?'' (கு.அ. ப: 28)

என்று திருநங்கை கல்கி பணத்திற்காக வலியைச் சுமந்து வாழும் திருநங்கையர்களின் வாழ்வியல் நிலையினை உருக்கத்தோடு பதிவு செய்கிறார். திருநங்கையிடம் பாலியல் உறவு கொண்ட ஒரு ஆணின் மனப்பதிவினை,

''என் உடலற்ற ஆத்மா சாந்தி கொள்ள
மேலும் இரு ஜீவன்கள்
கண்ணீர் உடுக்க வேண்டும்
உடல் அழுகிய வேசி ஒருத்தி
உடல் காய்த்த அரவாணி ஒருத்தி''[176]

என்ற மகுடேசுவரனின் கவிதை வரிகள் வெளிப்படுத்துகின்றன. பாலியல் தொழிலுக்குத் திருநங்கையர்கள் தள்ளப்பட்டுத் தங்களின் முதுமைக்காலம் வரையிலும் அவதியுறுவதை,

''சிவப்பு விளக்குக்

கடந்தேக

முன்னே விரியுமென்

முதுமையில்''[177]

என்ற 'பிறவிப் பெருங்கடல்' கவிதை வெளிப்படுத்துகிறது. 'அவன் - அது = அவள்' எனும் புதினத்தில் 'அன்பரசன்' பாலியல் தொழில் செய்யும் திருநங்கையரைக் காண்கிறான்.

''தெரு விளக்குகள் எரியாத கொஞ்சம் இருளான பகுதியில், ஒரு மின்கம்பத்தின்கீழ் சில பெண்கள் நிற்பது தெரிந்தது. அவர்கள் அதீத அலங்காரமும் நின்று கொண்டிருந்த ஓய்யாரமும் அவர்கள் பெண்கள் இல்லை என்று எளிமையாக காட்டிக் கொடுத்தது. பாலியல் தொழில் செய்யும் திருநங்கைகள்''[178]

என்று விளக்கப்படுகின்றது. திருநங்கை பிரியா பாபு,

''எங்களுக்கு மட்டும் இப்படி பிச்சை எடுத்து, உடம்பு வித்து பிழைப்பு நடத்தணுமுன்று ஆசையா? என்ன செய்யுறது தலைவிதி. உனக்கு தான் தெரியுமே இங்க வாழ்றதே பெரிய பிரச்சனை. அப்புறம் எப்படி கௌரவமா பொழப்பு நடத்துறது''[179]

என்று 'மூன்றாம் பாலின் முகம்' புதினத்தில் வேறுவழியின்றி பாலியல் தொழிலில் திருநங்கையர் ஈடுபடுவதைக் கூறியுள்ளார்.

வேறு தொழில் செய்ய திருநங்கையர் முன்வரினும் சமூகம் அவர்களுக்கு வேலைதர மறுக்கின்றது. 'தொலைந்த முகம்' சிறுகதையில் திருநங்கை, பாலியல் தொழில் செய்ய நேரிடும் சூழல் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

''நம் ஆசைகள் நிறைவேறினாலும், தேவலோகமாகத் தோன்றிய மும்பை மூன்றே வருடங்களில் வெறுத்துவிட்டது. இயந்திரத்தனமான வாழ்க்கையில், இயந்திரமாய்

இயங்க வேண்டிய நிர்பந்தம் ஆண்களின் வக்கிரமான உணர்ச்சிகளுக்கு வடிகாலாய் மாறிப்போனது வாழ்க்கை''[180]

பொருளாதாரத் தேவைக்குப் பாலியல் தொழிலில் ஈடுபட்டாலும் திருநங்கையர் அத்தொழிலில் ஈடுபட விரும்புவதில்லை. ஆய்வுத் தரவுகளான நாடகங்களில் பாலியல் தொழில் குறித்த பதிவுகள் காணப்படவில்லை.

4.9.2 துணைமைத் தொழில்கள்

4.9.2.1 பாடல்

வடநாட்டில் குழந்தைப் பிறப்பிற்குப் பாடிப் பணம் சம்பாதிக்கும் தொழில் குறித்து க.நா.சு தன் கவிதையில் குறிப்பிடுகிறார்.

''டெல்லியில் யார் வீட்டில்

குழந்தை பிறந்தாலும்

ஒரு பத்து அலிகள்

வந்து குதித்துப் பாடி விட்டுக்

காசு கேட்பார்கள்''[181]

வடமாநிலங்களில் திருநங்கையருக்கு இருக்கும் மதிப்பினை இக்கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

4.9.2.2 நடனம்

பெண்களைப்போல உடல் அசைவுகள் கொண்டிருப்பதால் திருநங்கையர்கள் பெண்களைக் காட்டிலும் சிறப்பான முறையில் நடனம் ஆடுகின்றனர். 'திருநங்கைகளின் நடனம்' எனும் கவிதையில் கமலா தாஸ்,

''நடனமாட திருநங்கைகள் வருவதற்கு முன் வெப்பமாக,

அதிவெப்பமாக இருந்தது.

அகன்ற பாலாடைகள் சுழன்று சுழன்று செல்ல

ஜால்ராக்கள் உரக்க அடித்துக் கொள்ள

கொலுசுகள் சப்தமிட சப்தமிட

செம்பூ குல்மோஹர் மரத்தின் கீழ்

நீண்ட ஜடைகள் பறக்க

கருமையான கண்கள் பளிச்சிட

அவர்கள் ஆடினர் நடனமாடினர்.''[182]

எனத் திருநங்கையர் நடனமாடும் நிலை குறித்துப் பதிவு செய்யப்படுகிறது.

''வயசில் மூத்தவளாய்த் தெரிந்த ஒருத்தி பாட்டின் முதல் வரியை ஆரம்பிக்கிறாள். உடனே ஆட்டம் தொடங்குகிறது. கருத்த பாதங்கள் அளவாக எழுந்து துள்ளுகின்றன. ராகங்களை மாற்றி மாற்றிப் புதுப்பாடல்களைப் பாடுகிறார்கள். அவர்கள் அதற்குத் தகுந்த மாதிரி ஆட்டங்களும் அசைவுகளும் மாறுகின்றன''[183]

இவ்வாறு 'வக்கிரம்' என்னும் சிறுகதை திருநங்கையரின் நடனத்தைப் பற்றிக் கூறுகிறது. இன்றும் கிராமப்புற விழாக்களில் திருநங்கையர்கள் நடனம் ஆடுகின்றனர். தொலைக்காட்சி நடன நிகழ்ச்சிகளிலும் போட்டியாளர்களாகக் கலந்து கொண்டு தங்கள் நடனத் திறனை வெளிப்படுத்துகின்றனர்.

4.9.2.3 நாடகம்

நாடகங்களில் திருநங்கையர்கள் நடிப்பதையும் புதினங்கள் தெரிவிக்கின்றன.

''ரொம்ப வருஷம் சிலப்பதிகாரத்துல இருந்துதான்... நாடகம் போட்டோம். அதுக்கு முன்னால் ராமாயணம் போட்டோம்! நான்தான் ஒருமுறை சமூகத்தை எடுத்துப் போடலாம்னு சொன்னேன்! 'கருணம்மாள் கதை'னு ஒரு நாடகம் தயார் பண்ணினோம்''[184]

இவ்வாறு நாடகத்திலும் திருநங்கையர்கள் ஈடுபாடு காட்டுவதைப் புதினப் பகுதிகள் விவரிக்கின்றன.

4.9.2.4 சமையல்

'கோமதி' சிறுகதையில் கோமதி என்னும் திருநங்கை சமையல் செய்வதில் கைதேர்ந்தவளாக இருக்கிறாள்.

'கோமதி சமையல் உத்தியோகத்துக்குப் பெட்டி படுக்கையுடன் போய்ச் சேர்ந்தாள்.... சாப்பிட்டு முடித்த ரகுபதி நாயக்கர், இந்தப்புது சமையல்காரனை பார்க்க வேண்டுமென்று சொல்லி மாடியிலுள்ள தன் பகுதிக்கு வரவழைத்தார்''[185]

பொதுவாக பெண் உணர்வுகள் திருநங்கையருள் இருப்பதால் இயற்கையாகவே சமையல் செய்வதில் திருநங்கையர் சிறந்து விளங்குகின்றனர்.

4.9.2.5 பூ கட்டுதல்

ஆய்வுத் தரவுகளில் சிறுகதையில் திருநங்கை ஒருவர் பூக்கடை நடத்துவது பற்றிக் கூறப்படுகிறது.

''மலர் அமுதன் என்கிற மலர் அமுதாதான் இவ்வளவு சஞ்சலத்திற்கும் ஆளானவள். அவள் சைதாப்பேட்டை காரணீஸ்வரர் வீதிக்கும் இரயில் நிறுத்தத்திற்குமான ஒரு திருப்பத்தில் பூக்கள் சரம் கட்டி விற்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறாள்''[186]

இவ்வாறு சுயதொழில் செய்வது குறிப்பிடப்படுகிறது. அவர்கள் மாறிய பாலினர் என்று தெரிந்தால் சமூகத்தவர் அவர்களிடம் பொருள்களை வாங்குவதைத் தவிர்த்தே வருகின்றனர்.

4.9.2.6 பல தொழில்

அழகு நிலையம், முதியோர் காப்பகம், தேநீர்க்கடை, நடன வகுப்பு என மாற்றுத் தொழில்களில் ஈடுபடுவதைப் 'பூமி வசப்படுமே' என்ற புதினம் காட்டுகிறது.

''அழகு நிலையம், தேநீர்க் கடை, முதியோர் இல்லம் ஆகிய மூன்றை மட்டுமே இவர்கள் பொறுப்பில் வைத்துக் கொண்டார்கள். பானு நடன வகுப்பை அந்தத் திருநங்கைகளிடமே கொடுத்துவிட்டாள்.''[187]

இவை மட்டுமின்றி, திருநங்கையர்கள் முவுருளி தானியங்கி உந்து (ஆட்டோ) ஓட்டுவதையும் புதினம் தெரிவிக்கிறது.

4.9.3 பிற தொழில்கள்

4.9.3.1 ஆசிரியப்பணி

'மாலைகள்' புதினத்தில் மாலை, பள்ளி ஆசிரியராகப் பணிபுரிகிறாள்.

''ஒரு ஹையர் செகண்டரி ஸ்கூல்ல...

லெவன்த் க்ளாஸ் இங்கிலீஷ் டீச்சர். படிச்சது எம்.ஏ. பி.எட்..''[188]

என்று அவளது தொழிலும், படிப்பும் குறிப்பிடப்படுகிறது. சமூகத்தில் உயர்தளத்தில் இருந்தாலும் 'மாற்றும் பாலினர்' என்பதால் அவர்கள் கீழ்நிலையில் பார்க்கப்படுகின்றனர்.

4.9.3.2 வங்கிப் பணி

'தோழி' எனும் சிறுகதையில் ஷர்மிளா எனும் திருநங்கை வங்கியில் காசாளராகப் (டெல்லர்) பணிபுரிகிறாள்.

''எனது படிப்பாசையைப் புரிந்து கொண்டு திறந்த வெளிப் பயிலரங்கில் படிக்கச் செய்தார். நானும் படித்து எம்.காம் முடித்து பேங்க் எக்ஸாம் எழுதி அதிலும் தேர்ச்சி பெற்றேன்... நான் தமிழகத்தில் பணி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன்''[189]

என்று ஷர்மிளா தனது தோழி காயத்ரியிடம் கூறுகிறாள். நடைமுறையிலும் இன்று திருநங்கையர் பலர் உயர்கல்வித் தகுதியினைப் பெற்று வருகின்றனர்.

4.9.3.3 அரசியல் பணி

'கமலி' புதினத்தில் கமலியும், ராஜியும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுகின்றனர்.

''கமலியும் ராஜியும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியடைந்ததைக் கேட்டு மாற்றுக்கட்சி வேட்பாளர்கள் ஆடிப் போனார்கள். அரசியல் நோக்கர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் வாக்காளர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்''[190]

இவ்வாறு நடைமுறையிலும் அரசியல் பணிக்குத் திருநங்கையர் போட்டியிட்டு வருவதை அறிய முடிகிறது.

4.9.3.4 சமூகப்பணி

'வனம் புகுதல்' சிறுகதையில் அர்ஜுன், ஆணாக இருந்து மாறி அஞ்சுமனாகி, தன் திருநங்கை சமூகத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு போராளியாக உருவெடுக்கிறாள்.

''இப்போதைக்கு நூறு பேர் இந்தத் தொழிற்சாலைல வேலை செய்யப் போறாங்க. அதுல அறுபதுபேர் மட்டுந்தான் மூன்றாம் பாலினத்தவர். மீதி நாற்பது பெண்கள்... அப்புறம் ஒரு பள்ளிக்கூடம்... அப்புறம் ஒரு இருபாலர் முதியோர் இல்லம்''[191]

எனச் சமூகப்பணியிலும் திருநங்கையர் ஈடுபடுவதை இவ்வடிகள் காட்டுகின்றன. வலிகளைச் சுமந்தவர் கைகளில் வாய்ப்புகளை அவர்களது குடும்பமும், இச்சமூகமும் கொடுத்தால் திருநங்கையர் முன்னேற்றம் பெறுவர்.

4.10 தொகுப்புரை

திருநங்கையர் குறித்த தொன்மைப் பதிவுகள் அவர்களை உயர்வாகப் பேசுகின்றன.

வேதஆகமம் திருநங்கையரை நன்னிலையில் வைத்துப் பார்க்காவிடினும், அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது. நபி மொழியில் திருநங்கையர் இழிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திருநங்கையர் உயர்திணையாகக் கருதப்பட்டாலும், நன்னூலில் அஃறிணையாகவும் சுட்டப்படுகின்றனர். இலக்கண நூல்களில் அலி எழுத்துக்கள் என்று சில எழுத்துக்கள் தனியாகச் சுட்டப்படுகின்றன.

சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம் போன்றவற்றிலும் தனிப்பாடல்திரட்டு, சித்தர் பாடல்கள் ஆகியவற்றிலும் அலி, பேடி என்ற சொல்லாட்சி பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

திருநங்கையரின் சடங்கு முறைகள் பொதுவழிச் சமூகச் சடங்கு முறைகளோடு ஒரு சிலவற்றில் ஒன்றுபடினும், பல சடங்குகள் வேறுபட்டிருக்கின்றன.

திருநங்கையர் பகுச்ராஜீ மாதாவையும், அரவானையும் தெய்வங்களாக வழிபடுகின்றனர்.

திருநங்கையருக்கென்று தனியாகக் ‘கவுடி மொழி’ இருக்கிறது. பெண்வழி உறவுகள் மட்டும் திருநங்கைச் சமூகத்தில் காணப்படுகின்றன.

திருநங்கையரின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் இன்றுவரை நடைமுறையில் அவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

திருநங்கையரின் முதன்மைத் தொழிலாகப் பிச்சையெடுத்தலும், பாலியல் தொழிலும் அமைகின்றன. சமையல், நடனம், பூக்கட்டுதல் முதலான பிற தொழில்களும் திருநங்கையரால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆய்வுத் தரவுகளிலும் நடைமுறையிலும் திருநங்கையர் உயர்நிலைப் பதவிகளை வகித்து வருவதைக் காணலாம்.

சான்றெண் விளக்கம்

1. ஞா.ஸ்டீபன், இலக்கிய இனவரைவியல், ப.14.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.117.
3. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.149.
4. பெரு. முருகன், பள்ளியறை ஒடிஸி, பக்.102-103.
5. கிருஷ்ணமாச்சாரியார், அஷ்டா தச புராணங்கள், ப. 598.
6. மேலது., ப. 252.
7. சிவகுருநாதபிள்ளை, சிவவடிவங்கள், ப.177.
8. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.87.
9. துரை இராசாராம். மஹாபாரதம், ப. 171.
10. மேலது., ப.275.
11. மேலது., பக். 51-52.
12. தவசிக் கருப்பசாமி, அழிபசி, ப.16.
13. பிரியாபாபு, வெற்றிப் பாதையில் திருநங்கையர், ப.58.
14. Mahes Dattani, Collected Plays, p.10.
15. ம.மாணிக்கனார், (உ.ஆ.), கம்பராமாயணம் தொகுதி-3, யுத்தகாண்டம், இரணியன் வகைப் படலம், பா.எ. 5. ப.240.
16. மேலது., முதற்போற்புரிப்படலம், பா.எ.22. ப. 378.
17. எஸ்.எல்.வி. மூர்த்தி, பண்டைய நாகரீகங்கள், ப.70.
18. முகில், கிளியோபாட்ரா. ப.35.
19. மேலது., ப. 60.
20. மேலது., ப. 161.
21. த.ராகினி சந்திரன், அரவாணிப் பூக்கள், ப.4.
22. போந்தூர் கனகசுந்தரம், மாலைகள், ப.148.
23. பத்மபாரதி, திருநங்கையர் சமூக வரைவியல், பக்.91-92.
24. த. ராகினி சந்திரன், மு.கூ.நூ., ப. 4.
25. பிரியாபாபு, அரவாணிகள், சமூக வரைவியல், ப.19.
26. கி. அய்யப்பன், அரவாணியம், ப. 165.
27. Dr.Piyush Saxena, Life of a Eunuch, p.23.
28. மேலது., ப. 22.
29. பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, ஏசாயா, அதி. 56: 4-5.
30. சூ.ம. செயசீலன், திருநங்கைகள் வாழ்வியல் இறையியல், ப.62.
31. மேலது., ப. 63.
32. சீனிவாசன். (பதி.ஆ.), சொல்வனம், ப.147.
33. பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, ஆதி ஆகமம், அதி. 8.19.

34. நபிகளாரின் பொன்மொழிகள் ஸஹீஹுல் புகாரி, நான்காம் பாகம், நபிகள் காலத்துப் போலிகள், ஹதீஸ் எண் 43க24, ப. 869.
35. நபிகளாரின் பொன்மொழிகள் ஸஹீஹுல் புகாரி, ஏழாம் பாகம், (குற்றவியல் தண்டனைகள்), ஹதீஸ் எண் 6834, ப. 321
36. தமிழண்ணல், (உ.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூ.487. ப.131.
37. பெ.சுயம்பு (உ.ஆ.), நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல், நூ.264. ப.6.
38. வெ.முனிஷ், காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம், பக்.111-112.
39. மேலது., ப.104.
40. மயிலம், வே. சிவசுப்பிரமணியன், (ப.ஆ.), அகநானூறு, மணிமிடைபவளம், பா.எ.206: 1-2, ப.223.
41. ப.சரவணன், (மீள்.ப.ஆ.), நாலடியார், பிறர்மனை நயவாமை, (அதி), பா.எ.85.ப.101.
42. மேலது., அறிவின்மை (அதி), பா.எ.251. ப. 219.
43. ஆ.மாணிக்கவாசகன், சிலப்பதிகாரம், கடடலாடுகாதை, பா.வ. 26-57, ப. 95.
44. புலியூர் கேசிகன் (உ.ஆ.), மணிமேகலை, மலர்வனம் புக்க காதை, பா.வ.24-25, ப. 40.
45. கா.சுப்பிரமணியப்பிள்ளை. (உ.ஆ.), தனிப்பாடல் திரட்டு, தொகுதி, 1, பா.எ.57. ப. 52.
46. இரா.திருமுருகன், (தொ.ஆ.), சித்தர் பாடல்கள், பட்டினத்தார், (பூரணமாலை), கண்ணி, 50. ப.207.
47. மேலது., பாம்பாட்டிச் சித்தர், (சித்தர் வல்லபம்), பா.வ.29. ப.341.
48. இரா. மீனாட்சி, உதய நகரிலிருந்து, ப. 190.
49. மேலது., ப. 198.
50. நா.பாலுசாமி. (ப.ஆ.), வாழ்வியற் களஞ்சிளம், தொகுதி-8,ப. 300.
51. பக்தவச்சல பாரதி, மு.கூ.நூ., பக். 524-525.
52. பிரியா பாபு, மு.கூ.நூ., பக்.42-43.
53. ந. அறிவுராஜ், ஒரு சமூக இனவரைவியல், ப. 41.
54. சு. சமுத்திரம், வாடாமல்லி, ப. 234.
55. குமாரதேவி, பூமி வசப்படுமே, ப.103.
56. மகராசன் (தொ.ஆ.), அரவாணிகள் உடலியல் உளவியல் வாழ்வியல், ப.242.
57. சு.சமுத்திரம், மு.கூ.நூ.,பக்.221-224.
58. மேலது., ப. 225.
59. எஸ்.பாலபாரதி, அவன் - அது = அவள், ப. 164.
60. மு.ஹரிகிருஷ்ணன், நாய்வாயிச் சீல, ப.
61. பிரியா பாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 103.
62. அழகிரி, விசுவவாதன், கமலி, பக்.71-72.
63. எஸ்.செல்வசுந்தரி, உன்னைவிட்டு விலகுவதில்லை, ப.55.
64. மகராசன். (தொ.ஆ.), மு.கூ.நூ., பக்.243-244.

65. மு. இராமசுவாமி, ரௌத்திரம் பழகு, ப. 56.
66. பிரியாபாபு, மு.கூ.நூ., ப. 103.
67. யோகி, யட்சி, ப. 17.
68. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 173.
69. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 83.
70. கரிகாலன், கரிகாலன் கவிதைகள், ப.23.
71. அழகிரி விசுவநாதன், மு.கூ.நூ., ப. 20.
72. ம. தவசி, ஊர்களில் அரவாணி, ப. 127.
73. மேலது., ப. 157.
74. பழனிவேல், தவளை வீடு, ப. 33.
75. அழகிரி விசுவநாதன், மு.கூ.நூ., ப. 45.
76. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 258.
77. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 358.
78. எஸ். செல்வ சுந்தரி, மு.கூ.நூ., ப. 46.
79. பிரியா பாபு, அரவாணிகள் சமூக வரைவியல், ப. 51.
80. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 145.
81. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 42.
82. வ. ஆறுமுகம், அரவான் களபலி, ப. 154.
83. பிரியா பாபு, மு.கூ.நூ., ப. 19.
84. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 230.
85. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 162.
86. மு.ஹரிகிருஷ்ணன், நாயிவாயிச் சீல, ப.98.
87. பாலுவிஜயன், சக்திவேல், கூவாகம் கூத்தாண்டவர், ப.9.
88. வ.ஆறுமுகம், மு.கூ.நூ., ப. 154.
89. கரிகாலன், மு.கூ.நூ., ப. 23.
90. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப.
91. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 110.
92. வ. ஆறுமுகம், மு.கூ.நூ., ப. 172.
93. ம. தவசி, மு.கூ.நூ., ப. 156.
94. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப. 326.
95. பிரியா பாபு, மு.கூ.நூ., ப. 90.
96. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 203.
97. மேலது., ப. 271.
98. த.தவசி, மு.கூ.நூ., ப. 157.
99. லிவிங் ஸ்மைல் வித்யா, மெல்ல விலகும் பனித்திரை, ப.13.

100. மேலது., ப. 59.
101. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப. 321.
102. மேலது., ப. 334.
103. மு. இராமசுவாமி, மு.கூ.நூ., ப. 103.
104. சு.சக்திவேல், மு.கூ.நூ., பக். 188-189.
105. ந.அறிவுராஜ், மு.கூ.நூ., ப. 54.
106. பிரியா பாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 80.
107. ந.அறிவுராஜ், மு.கூ.நூ., ப. 53.
108. குமாரதேவி, மு.கூ.நூ., ப. 93.
109. ம. தவசி, மு.கூ.நூ., ப. 143.
110, சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 173.
111. எஸ்.பாலபாரதி, மு.கூ.நூ., ப. 146.
112. எஸ்.செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப. 76.
113. எஸ்.பாலபாரதி, மு.கூ.நூ., ப. 97.
114. மேலது., ப. 167.
115. மேலது., ப. 103.
116. எஸ். செல்வ சுந்தரி, மு.கூ.நூ., ப. 100.
117. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப. 341.
118. பத்மபாரதி, (தொ.ஆ.), மு.கூ.நூ., பக். 55-56.
119. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 119.
120. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 99.
121. மேலது., ப. 141.
122. எஸ். செல்வ சுந்தரி, மு.கூ.நூ., ப. 141.
123. மேலது., ப. 81.
124. மு.ஹரிகிருஷ்ணன், மு.கூ.நூ., ப. 97.
125. மகராசன் (தொ.ஆ.), மு.கூ.நூ., பக். 341-342.
126. பத்மபாரதி, மு.கூ.நூ., பக்.63.
127. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப. 211.
128. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப. 61.
129. பிரியாபாபு, மு.கூ.நூ., ப.94.
130. குமாரதேவி, மு.கூ.நூ., ப.97.
131. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப.25.
132. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.242.
133. ம. தவசி, (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.147.
134. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.329.

135. கே.ஏ. குணசேகரன், தொடு, ப.21.
136. பிரியா பாபு, அரவாணிகள் சமூக வரைவியல், ப. 53.
137. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப.54.
138. எஸ். செல்வசுந்தரி, மு.கூ.நூ., ப.120.
139. மு. இராமசுவாமி, மு.கூ.நூ., ப.54.
140. ந. அறிவுராஜ், மு.கூ.நூ., ப.58.
141. பிரியா பாபு, மு.கூ.நூ., ப.22.
142. Mahes Dattani, Collected Plays, p.10.
143. சு. சமுத்திரம், மு.கூ.நூ., ப.263.
144. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப.38.
145. மேலது., ப. 64.
146. மேலது., ப.87.
147. மேலது., ப. 90.
148. மேலது., ப.137.
149. மேலது., ப.165.
150. மேலது., ப. 168.
151. பிரியா பாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 65.
152. மேலது., ப. 66.
153. எஸ். செல்வ சுந்தரி, மு.கூ.நூ., ப.119.
154. மேலது., ப. 120.
155. மு.ஹரிகிருஷ்ணன், மு.கூ.நூ., ப.97.
156. மேலது., ப. 99.
157. மேலது., ப.96.
158. மேலது., ப.66.
159. மேலது., ப.98.
160. மேலது., ப. 98.
161. ம. தவசி, மு.கூ.நூ., ப.147.
162. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.339.
163. மேலது., ப. 341.
164. மேலது., ப. 341.
165. மேலது., ப. 341.
166. மேலது., ப. 341.
167. லிவிங் ஸ்மைல் வித்யா, நான் வித்யா, ப.16.
168. பொன். இரவீந்திரன், காகங்கள் நிறைந்த ஜன்னல், ப. 73.
169. விகடன் தடம் (சிற்றிதழ்) பிப்ரவரி 2017, பக். 26-27.

170. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப.113.
171. எஸ். செல்வ சுந்தரி, மு.கூ.நூ., ப.38.
172. இலக்கிய வேல், பிப்ரவரி, -2017, ப.31.
173. கே. ஏ. குணசேகரன், மு.கூ.நூ., ப.18.
174. மகராசன், (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.18.
175. முகிலை இராசபாண்டியன், முதலானோர், (ப.ஆ.), சமூக வரலாற்றில் அரவாணிகள், 268.
176. மகுடேசுவரன், காமக் கடும்புனல், ப.174.
177. நக்கீரன் கோபால், இனிய உதயம், ஆகஸ்ட்-2006, ப. 128.
178. எஸ். பாலபாரதி, மு.கூ.நூ., ப.122.
179. பிரியாபாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 91.
180. மகராசன். (தொ.ஆ.), மு.கூ.நூ., ப.244.
181. க.நா. சுப்பிரமணியன், க. நா.சு கவிதைகள், ப.122.
182. கல்கி, தீபாவளி மலர் 2017, ப. 216.
183. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., ப. 12.
184. குமாரதேவி, மு.கூ.நூ., ப.389.
185. லிவிங் ஸ்மைல் வித்யா, மு.கூ.நூ., பக்.29-30.
186. ஆசு. நாட்குறிப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், ப. 15.
187. மேலது., ப. 391.
188. பொந்தூர் கனகசுந்தரம், மு.கூ.நூ., ப.22.
189. கு. கார்க்கி, தோழி, ப.130.
190. அழகிரி விசுவநாதன், மு.கூ.நூ., ப.121.
191. எஸ். அர்ஷியா, மரணத்தில் மிதக்கும் சொற்கள், பக். 111-112.

இயல் – 0

ஆய்வு முடிவுரை

மானுட இனம் பரிணாமம் பெற்ற நாள் முதலே மூன்றாம் பாலினத்தவரும் உருவாகி வந்திருக்கின்றனர். இதற்கு அவர்கள் குறித்த தோற்றத் தொன்மங்கள் சிறந்த சான்றுகளாகும். ஒடுக்கப்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள கடைநிலை மக்களில் திருநங்கையர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். அவர்களின் பிறப்பும், இருப்பும் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன. எங்கே உரிமைகள் மறுக்கப்படுகின்றதோ, அங்கே போராட்டங்கள் உருவெடுக்கின்றன. தங்களின் வாழ்வு உரிமைகளுக்காகத் திருநங்கையர்கள் இன்றும் சமூகத்தோடும், அரசோடும் வாதாடியும், போராடியும் வருகின்றனர். மாற்றுப் பாலினத்தவருக்கான அடையாள அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் உரிமை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், வங்கிக் கணக்கு, குடியிருப்பு வீடுகள், மாத உதவித்தொகை, நலவாரியம் என்று அரசு அவர்களுக்கான நலத்திட்டங்களைச் செய்து வருகிறது. இருப்பினும் இது அனைவருக்கும் சென்று சேர்ந்துள்ளதா என்பது கேள்விக்குறியாகும். ஊடகங்களில் வெறும் கேலிப் பொருளாகச் சித்திரிக்கப்பட்டு வந்த திருநங்கையர்களின் நிலைப்பாடுகள் தற்போது சற்றே ஏற்றம் பெற்றிருக்கின்றன. கலை இலக்கியம், அரசுப்பணி, சமயப்பணி, ஊடகத்துறை, அழகுக்கலை, சமையல்கலை எனத் திருநங்கையர் சாதித்து வரும் துறைகள் ஏராளம். திருநங்கையரும் மனிதப் பிறவிகள் திறன் படைத்தவர்கள் என்னும் சிந்தனைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான முன்னேற்றத் தளங்களை இச்சமூகமும் அரசும் உருவாக்கிக் கொடுத்திடல் வேண்டும்.

திருநங்கையர் குறித்த ஆவண மையத்தை தற்போது திருநங்கை எழுத்தாளர் ‘பிரியா பாபு’ செயல்படுத்தி வருகிறார். ஒரு தனி இனம் குறித்து புரிதல்கள் இச்சமூகத்தவர்களுக்கு ஏற்பட அரசு இந்த ஆவண மையத்தை ஏற்றோ

அல்லது நிதியுதவி செய்தோ விரிவுபடுத்த வேண்டும். திருநங்கையருக்கான குடியிருப்புகள், வேலை வாய்ப்புகள், இடஒதுக்கீடு குறித்து அரசு கவனம் செலுத்திடல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எந்தக் குடும்பத்தில் பெற்றோர் திருநங்கை குழந்தைகளை வீட்டை விட்டு வெளியேற்றுகின்றனரோ அவர்களுக்குச் சிறைத் தண்டனை நிச்சயம் வழங்க வேண்டும். திருநங்கையரின் திருமணம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும். திருநங்கையருக்கு முறையான பாலின மாற்று அறுவைச் சிகிச்சைகளை அரசு அனைத்து ஊர்களிலும் இலவசமாகச் செய்ய முன்வருதல் வேண்டும். பொதுப்பயன்பாட்டு இடங்களில் திருநங்கையருக்கென்று தனிப்பிரிவுகளை அரசு ஏற்படுத்த வேண்டும்.

'தமிழ் நவீன இலக்கியங்களில் திருநங்கையர் பதிவுகள்' எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வின்வழி பெறப்பட்ட முடிவுகள் கீழ்வருமாறு தொகுத்துத் தரப்படுகின்றன.

இயல் – 1

* மறுமலர்ச்சிக் காலக் கவிஞர்களின் கவிதைகளில் திருநங்கையர்களைக் குறித்திட அலி, பேடி முதலிய சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. இக்கவிதைகளில் திருநங்கையர்கள் இழிவுநோக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இத்தகைய போக்கு புதுக்கவிஞர்கள் கவிதைகளில் மாற்றம் பெற்றிருக்கின்றன.

* புதுக்கவிதைகள் திருநங்கையரின் மன உணர்வுகளையும், வாழ்வியல் சிக்கல்களையும் வெளிக்கொணர்வதாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றன.

* மரபணு மாற்றமே திருநங்கையரின் பிறப்பிற்குக் காரணம் என்பதைப் புதுக்விதைகள் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றன.

* திருநங்கையருள் எழும் பெண்மை உணர்வுகள் குறித்துப் புதுக்கவிதைகள் முன் மொழிகின்றன.

* திருநங்கையரை இச்சமூகம் அழைக்கும் இழிவுச் சொற்களான ஒன்பது, பொட்டை போன்ற சொற்களும் புதுக்கவிதைகளில் பதிவாகியிருக்கின்றன.

* திருநங்கையருக்குள் இருக்கும் பெண்மைச் சிந்தனைகளும், ஆணுருவை வெறுக்கும் மனநிலைகளும் புதுக்கவிதைகளில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

* திருநங்கையர்களுக்கு ஏற்படும் வாழிடச் சிக்கல்கள், கல்வி மறுப்பு, அரசின் பாராமுகம் குறித்தும் புதுக்கவிதைகளில் பதிவாகியிருக்கின்றன.

* திருநங்கையருக்குள் இயல்பாக எழும் பாலுணர்வு குறித்தும் புதுக்கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

* திருநங்கையர்கள் சாதி, மதம் கடந்தவர்கள் என்பதைப் புதுக்கவிதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

* திருநங்கையர்கள் தன்னம்பிக்கை மிகுந்தவர்கள் என்பதைப் பெரும்பாலான புதுக்கவிதை தரவுகள் நிரூபிக்கின்றன.

* திருநங்கையர்கள் குறித்த மரபான பார்வையினையும், புரிதல்களையும் கட்டுடைக்கும் போக்கில் புதுக்கவிதைகள் திருநங்கைகள் பக்கம் ஆதரவுக் கரம் நீட்டி அரவணைத்திருக்கின்றன.

இயல் – 2

* திருநங்கையர்கள் வாழ்வில் சிக்கல்களை விளக்கமாகத் தமிழ்ப் புதினங்கள் எடுத்துரைக்கின்றன.

* திருநங்கையரின் தாயும், உடன் பிறப்பும் அன்பு செலுத்துவதாக ‘வாடாமல்லி’, ‘கனவுகள் கைப்பிடிக்குள்’, ‘மூன்றாம் பாலின் முகம்’ ஆகிய புதினங்கள் பதிவு செய்திருக்கின்றன.

* திருநங்கையரை எவ்வித எதிர்பார்ப்புகள் இல்லாமல் ஆதரிப்பது அவர்களின் தோழமை வட்டமே. இதனை ஆய்வுப் புதினங்கள் எடுத்துரைக்கின்றன.

* திருநங்கையருக்கு, சமூகத்தவரும் ஆதரவுக்கரம் நீட்டுகின்றனர் என்பதை 'மூன்றாம் பாலின் முகம்', 'கமலி', 'மாலைகள்' ஆகிய புதினத் தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

* திருநங்கையரின் வாழிடச் சிக்கல்கள் குறித்தும், பொதுப் பயன்பாட்டுச் சிக்கல்கள் குறித்தும் ஆய்வுப் புதினங்கள் பதிவு செய்கின்றன.

* திருநங்கையர்கள் திருமணம் பெரும்பாலும் தோல்வி அடைவதை 'அவன் - அது = அவள்' என்ற புதினம் எடுத்துரைக்கிறது. திருநங்கையரால் உடன் பிறந்தவர்களுக்கும் திருமணத்தில் சிக்கல்கள் ஏற்படுவதை 'வாடாமல்லி', 'கனவுகள் கைப்பிடிக்குள்' ஆகிய புதினத் தரவுகள் காட்டுகின்றன.

* திருநங்கையருக்குள் இயல்பாக எழும் பெண்மை உணர்வுகள் காதல் உணர்வுகள் குறித்து அனைத்துப் புதினங்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

* பெண்மை உணர்வின் மாற்றத்தாலும், திருநங்கையரின் காதல், திருமண உறவில் ஏற்படும் ஏமாற்றத்தாலும், தற்கொலைக்கு முற்படுவதைக் 'கனவுகள் கைப்பிடிக்குள்', 'பூமி வசப்படுமே', 'அவன் - அது = அவள்', 'உன்னைவிட்டு விலகுவதில்லை' ஆகிய புதினத் தரவுகள் எடுத்துரைக்கின்றன.

* திருநங்கையர்கள் சமூகப் புறக்கணிப்புகளுக்கும், கேலி கிண்டல்களுக்கும், பாலியல் சீண்டல்களுக்கும், காவலர்களின் வன்கொடுமைகளுக்கும் ஆட்படுவதால் அவர்கள் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

* திருநங்கையர் வாழ்வியல் போராட்டங்களைத் தாண்டி சாதனைகள் படைப்பதைப் 'பூமி வசப்படுமே', 'கமலி', 'உன்னைவிட்டு விலகுவதில்லை' ஆகிய புதினத் தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

* திருநங்கையருக்குப் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பான மருத்துவச் சோதனைபற்றி 'கமலி' புதினத்தில் பதிவு செய்யப்படுகிறது.

* திருநங்கையர் வாழ்வியல் சிக்கல்களைப் பரந்துபட்ட அளவில் தமிழ்ப் புதினங்கள் விரிவான தளங்களில் நின்று ஆராய்கின்றன.

இயல் – 3

* திருநங்கையரின் மனஉணர்வுகள் குறித்தும், அவர்களின் உரிமைகள் குறித்தும் தமிழ்ச் சிறுகதை, நாடகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

* திருநங்கையர்களின் பெண்மை உணர்வுப் போராட்டங்களை 'அகநங்கை', 'வனம் புகுதல்', 'ஊர்களில் அரவாணி', 'ஓட்டம்', 'தொலைந்த முகம், 'கோமதி' ஆகிய சிறுகதைகளிலும், 'மனசின் அழைப்பு', 'வலி அறுப்பு' ஆகிய நாடகங்களிலும் காண முடிகின்றன.

* திருநங்கையரின் பாலின மாற்றம் குறித்து 'நாயிவாயிச்சீல', 'வலி அறுப்பு' ஆகிய சிறுகதைகளிலும், அரவான் தவிர மற்ற நாடகங்களிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

* திருநங்கையருக்குள் எழும் காதல் உணர்வுப் போராட்டம் பற்றி 'அகநங்கை', 'துலாமுள் இச்சை', 'இப்படியும்' ஆகிய சிறுகதைகளில் பதிவாகியிருக்கின்றன. நாடகங்களில் காதலுணர்வுப் பற்றிய பதிவுகள் காணப்படவில்லை.

* திருநங்கையரின் திருமண வாழ்வு பற்றி 'நாயிவாயிச்சீல' சிறுகதையிலும் 'உறையாத நினைவுகள்' நாடகத்திலும் பதிவாகியிருக்கின்றன.

திருநங்கையரின் திருமண வாழ்வு என்பது ஏமாற்றம் நிறைந்ததாகவே பெரும்பாலும் உள்ளது என்பதை ஆய்வுத் தரவுகள் நிரூபிக்கின்றன.

* திருநங்கையருக்குள்ளும் 'தாய்மை உணர்வு' உண்டென்பதை 'ஊமங்காடை', 'பால் ஊனம்' ஆகிய சிறுகதைகள் சுட்டுகின்றன.

* மேலும், திருநங்கையர்கள் வாழிட உரிமை, கல்வி உரிமை, அரசு நலஉரிமை, பொதுப் பயன்பாட்டு உரிமை, சாதிய நிலை உரிமை, இடுகாட்டு உரிமை, வாழ்வுரிமை எனப் பல்வேறு தளங்களில் போராட்டங்களை எதிர்கொள்வதை ஆய்வுத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

* திருநங்கைகள் தங்களது உரிமைகளை மீட்பதற்காகப் போராட்டங்களில் ஈடுபடுவதை ஆய்வுத் தரவுகள் பதிவாக்கியிருக்கின்றன. வடஇந்தியாவில் காணப்படுவது போன்று திருநங்கையர்கள் தென்இந்தியாவில் மதிக்கப்படுவது இல்லை. சமையல், நடனம், பூக்கட்டுதல் போன்ற பிற தொழில்களைத் திருநங்கையர்கள் செய்து வருவதை ஆய்வுத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

* மேலும் ஆசிரியர் பணி, வங்கிப் பணி, அரசியல் பணி எனப் பிற பணிகளில் திருநங்கையர் ஈடுபடுவதையும் ஆய்வுத் தரவுகள் சித்திரிக்கின்றன.

இயல் – 4

* திருநங்கையர்கள் குறித்த இனவரைவியல் கூறுகள் அவர்களின் ஒட்டுமொத்த இனம் குறித்த புரிதல்களைச் சமூகத்தவருக்கு ஏற்படுத்துகின்றன. திருநங்கையர் குறித்த தொன்மப் பதிவுகளின்மூலம் அவர்கள் முந்தைய சமூகத்தில் உயர்ந்த தளத்தில் வைத்துப் பார்க்கப்பட்டிருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. வரலாற்றுப் பதிவுகளின் வழி, திருநங்கையர் அரசியலில் முக்கியப் பதவிகளில் இருந்து வந்ததை அறிய இயலுகிறது.

* வேத ஆகமம் திருநங்கையர்களை 'அண்ணகர்' என்று போற்றுகின்றது. இஸ்லாத்தில் நபிகள் நாயகம் திருநங்கையரை இழிவான நோக்கிலேயே கூறியிருக்கிறார்.

* இலக்கணங்களில் 'அலி எழுத்துக்கள்' என்று தனியே சுட்டப்பட்டிருக்கின்றனர். தொல்காப்பியர் உயர்திணையில் வகைப்படுத்தும் திருநங்கையரை நன்னூலார் அஃறிணையில் வகைப்படுத்தியிருக்கிறார். சங்க இலக்கியம் துவங்கி, நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம் என்பனவற்றில் பரவலாக அலி, பேடி சொல்லாட்சிகளைக் காண இயலுகின்றன.

* திருநங்கையர்களின் சடங்கு முறைகள் பொதுவழிச் சமூகத்தோடு சிலவற்றில் ஒன்றுபடினும் பல சடங்கு முறைகள் தனிப்பட்டதாக அமைகின்றன.

* திருநங்கையர்கள் சாதியால், மதத்தால், இனத்தால் வேறுபட்டிருப்பினும் தாயாக பகுச்ராஜீ மாதாவையும், கணவனாக அரவானையும் ஒருமைப்பாட்டோடு வழிபடுகின்றனர். திருநங்கையர்கள் பாடும் பாடலில் அவர்களின் ஆற்றாமை உணர்வுகள் மிகுதியாக வெளிப்படுகின்றன.

* திருநங்கையர்களின் உறவுமுறைகளில் ஆண் உறவுமுறைகள் கிடையாது. பெண் உறவுகளே காணப்படுகின்றன. ஆணாதிக்கத்தின் மீது கொண்ட வெறுப்பு, அவர்கள் சமூகத்தில் ஆண் உறவுகள் இல்லாமைக்கு காரணமாக அமைகின்றன.

* திருநங்கையரின் 'கவுடி மொழி' சமூகத்தவரால் புரிந்து கொள்ள இயலாத 'குழூக்குறி' மொழியாக இருக்கிறது. உருது, இந்தி, மராத்தி மொழிகளின் கலவையாக இந்தக் கவுடி மொழி அமைகிறது.

* திருநங்கையரின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் ஆய்வுத் தரவுகளில் உள்ளது போன்றே நடைமுறையிலும் பின்பற்றப்படுகின்றது. இறப்புச்

சடங்கில் இறந்தவரை, காலணியாலும், துடைப்பத்தாலும் அடிப்பதான பழக்கம் தற்போது வழக்கத்தில் இல்லை.

* திருநங்கையருக்கென முதன்மைத் தொழிலாகப் பிச்சையெடுத்தலும், பாலியல் தொழிலும் அமைகின்றன. துணைமைத் தொழிலும், பிற தொழில்களும் திருநங்கையரால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஆய்வுத் தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

மேலாய்வுக் களங்கள்

1. தமிழ்ப் புதுக்கவிதைகளில் திருநங்கையர் பதிவுகள்
2. காலந்தோறும் திருநங்கையர் பற்றிய சொல்லாட்சிகள்
3. திருநங்கையரின் வழிபாட்டுத் தளங்கள் பற்றிய ஆய்வு
4. மின்னணு ஊடகங்கள் சித்திரிக்கும் திருநங்கையர்
5. திருநங்கையரும் நீதிமன்ற உரிமைகளும்
6. தமிழ் வார, மாத இதழ்களில் திருநங்கையர் பதிவுகள்
7. திருநங்கையர் மேம்பாட்டில் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு
8. உளவியல் நோக்கில் திருநங்கையர் சித்திரிப்புகள்
9. திரைப்படங்களில் திருநங்கையர் சித்திரிப்புகள்
10. பிறமொழிக் கவிதை இலக்கியங்களில் திருநங்கையர்
11. கட்டுரை இலக்கியங்களில் திருநங்கையர்
12. இலக்கியங்களில் திருநங்கையர்
13. திருநங்கையர் மீது வாய்மொழிப் பாடல்களின் பதிவுகள்

ஆகிய தலைப்புகளில் ஆய்வாளர்கள் மேலாய்வுக் களங்களை அமைத்துக் கொள்ளலாம். திருநங்கையர்மீதான சமூகப் பார்வைகள் மாற்றம் பெறத் துவங்கியிருக்கின்றன. இக்காலத்தில் அவர்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வது திருநங்கையர் சமூகத்தை மேன்மைப்படுத்தும்.

துணைநூற்பட்டியல்

அ) முதன்மை நூல்கள்

1. அர்ஷியா, எஸ்., – **மரணத்தில் மிதக்கும் சொற்கள்,**
புலம் வெளியீடு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
மு.ப. டிசம்பர்-2014.

2. அழகிரி விஸ்வநாதன், – **கமலி,**
அழகுமலைப் பதிப்பகம்,
கீழவாசல்,
தஞ்சாவூர்- 613 001.
மு.ப. அக்டோபர்-2009.

3. ஆசு, – **நாட்குறிப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்,**
இருவாட்சி இலக்கிய துறைமுகம்,
மு.ப. 2015.

4. ஆண்டாள் பிரியதர்ஷினி, – **கனவுகள் கைப்பிடிக்குள்,**
திருவரசு புத்தக நிலையம்,
தியாகராயர் நகர்,
சென்னை- 600 017.
மு.ப. நவம்பர்- 2000.

5. ஆண்டாள் பிரியதர்ஷினி, – **நானும் இன்னொரு நானும்,**
குமரன் பதிப்பகம்,
19, கண்ணதாசன் சலை,
தி.நகர்,
சென்னை - 17.
மு.ப. மே - 2010.

6. இராமகிருஷ்ணன், எஸ்., – **அரவான்,**
உயிர்மை பதிப்பகம்,
சுப்பிரமணியன் தெரு,
அபிராமபுரம்,
சென்னை- 600 018.
மு.ப. அக்டோபர் - 2006.

7. இராமசுவாமி, மு., – **ரௌத்திரம் பழகு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட.,
41. பி. சிட்கோ இன்டஸ்ரியல்
எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 98.
மு.ப. மார்ச் - 2015.

8. கல்கி, – **குறி அறுத்தேன்,**
விகடன் பிரசுரம்,
757, அண்ணா சாலை,
சென்னை- 600 002.
மு.ப. டிசம்பர் - 2014.

9. கனகசுந்தரம் போந்தூர், – **மாலைகள்,**
மேன்மை வெளியீடு,
இராயப்பேட்டை,
சென்னை- 600 014.
மு.ப. - 2016.

10. கார்க்கி, கு., – **தோழி,**
அவனிஷ் பதிப்பகம்,
கண்டாச்சிபுரம், 605 701.
மு.ப. ஆகஸ்ட்- 2016.

11. குணசேகரன், கே.ஏ., – **தொடு,**
தாமரை பப்ளிகேஷன்ஸ்,
அம்பத்தூர்,
சென்னை- 98.
மு.ப. டிசம்பர்-2004.

12. குமாரதேவி, – **பூமி வசப்படுமே,**
செங்கைப் பதிப்பகம்,
349/ 166, அண்ணா சாலை,
செங்கல்பட்டு-603 002.
மு.ப. ஆகஸ்ட்-2011.

13. சமுத்திரம், சு., – **வாடாமல்லி,**
பாவை பிரிண்டர்ஸ்(பி) லிட்.,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
மு.ப. ஜூலை-2009.

14. செல்வ சுந்தரி, எஸ்., – **உன்னை விட்டு விலகுவதில்லை,**
இனிய நந்தவனம் பதிப்பகம்,
17, பாய்க்கார தெரு,
உறையூர்,
திருச்சி- 620 003.
மு.ப. டிசம்பர்-2016.

15. தவசி, ம., – **ஊர்களில் அரவாணி,**
காவ்யா வெளியீடு,
கோடம்பாக்கம்,
சென்னை- 600 024.
மு.ப. டிசம்பர்-2008.

16. பாலபாரதி, எஸ்., – **அவன் – அது = அவள்,**
தோழமை வெளியீடு,
கே.கே. நகர்,
சென்னை- 78.
மு.ப. ஜூலை-2008.

17. பிரியா பாபு, – **மூன்றாம் பாலின் முகம்,**
சந்தியா பதிப்பகம்,
அசோக் நகர்,
சென்னை- 600 083.
மு.ப. - 2008.

18. மகாராசன், (தொ.ஆ.), – **அரவாணிகள் – உடலியல் உளவியல் வாழ்வியல்,**
தோழமை வெளியீடு,
5, பொன்னம்பலம் சாலை,
கே.கே. நகர்,
சென்னை-78.
மு.ப. டிசம்பர் - 2007.

19. ரமேஷ் பிரேம், – **குருவிக்காரச் சீமாட்டி,**
மருதா வெளியீடு,
220, பாரதிசாலை,
இராயப்பேட்டை,
சென்னை-14,
மு.ப. 2006.

20. ராஜ நாராயணன், கி., – **கி.ரா. கதைகள்,**
அகரம் வெளியீடு.
தஞ்சாவூர்.
மு.ப. -2008.

21. லிவிங் ஸ்மைல் வித்யா, – **மெல்ல விலகும் பனித்திரை,**
பாரதி புத்தகாலயம்,
421, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை,
சென்னை- 600 018.
மு.ப. ஆகஸ்ட்-2013.

22. ஹரி கிருஷ்ணன், மு., – **நாயிவாயிச்சீல,**
பாரதி புத்தகாலயம்,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
மு.ப. - 2010.

ஆ) முதன்மை இதழ்கள்

23. இலக்கிய வேல் – **நாள்: பிப்ரவரி, 2017.**

24. தினமலர் (வாரமலர்) – **நாள்: அக்டோபர், 2011.**

25. புதிய கோடாங்கி – **நாள்: செப்டம்பர், 2016.**

26. புதிய தென்றல் – **நாள்: அக்டோபர், 2016.**

27. நேசமித்ரன், கார்த்திகைப் பாண்டியன், (தொ.ஆ.) – **வலசை காலாண்டு இதழ்,**
காலனி,
திண்டுக்கல் - 1,
மு.ப. - 2012.

இ) துணைமை நூல்கள்

28. அப்துல் ரகுமான் கவிக்கோ, (த.மே), – **நபிகளின் பொன்மொழிகள்,**
ஸஹீஹுல் புகாரி,
ரஹ்மத் வெளியீடு,
மயிலாப்பூர்,
சென்னை - 04.
மு.ப. - 1998.

29. அய்யப்பன், கி., – **அரவாணிகள் அன்றும் இன்றும்,**
விசாலாட்சி பதிப்பகம்,
நல்லாப்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்,
மு.ப. அக்டோபர் - 2011.

30. அய்யப்பன், கி., – **அரவாணியம்,**
விசாலாட்சி பதிப்பகம்,
கிழக்குத் தெரு,
கடையம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 701.
மு.ப. - சூன், 2012.

31. அருணாசலம், மு., – **தமிழ் இலக்கியங்களில் அரவாணிகள்,**
அருண் பப்ளிகேஷன்ஸ்,
அய்யலூர் (வழி) திண்டுக்கல்-624 801.
மு.ப. ஜனவரி - 2011.

32. அருணாசலம், மு., – **தமிழ்ச் சிறுகதைகளில் அரவாணிகள்,**
அருண் பதிப்பகம்,
எஸ்.பி. ஐ. காலணி,
திருச்சி- 620 001.
மு.ப. மே - 2013.

33. அவிநா, – **இந்த எறும்புகள்,**
அழகுமலைப் பதிப்பகம்,
கீழவாசல்,
தஞ்சாவூர் - 01.
மு.ப.- 2012.

34. அறிவுராஜ், ந., – **மூன்றாம் பாலினம் ஒரு சமூக இனவரைவியல்,**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
இராயப்பேட்டை,
சென்னை- 600 014.
மு.ப. செப்டம்பர்-2008.

35. அன்னிதாமசு, – **தமிழ் இலக்கியத்தில் ஊனமுற்றோர்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை- 600 113.
மு.ப. - 2004.

36. அன்னிதாமசு, – **தமிழர் சமூகவியல்,**
இண்டர்நேஷனல் இன்ஸ்டியூட்
ஆஃப் தமிழ் ஸ்டடீஸ்,
சி.பி.டி. கேம்பஸ்,
சென்னை- 600 013.
மு.ப. - 2000

37. ஆறுமுகம், வ., – **அரவான் களபலி,**
அனன்யா பதிப்பகம்,
புதுக்கோட்டை சாலை,
தஞ்சாவூர் - 613 005.
நவம்பர் - 2006.

38. இரவீந்திரன். பொன், – **காகங்கள் நிறைந்த ஜன்னல்,**
கற்பகம் புத்தகாலயம்,
சென்னை - 17,
மு.ப. ஏப்ரல் - 2011.

39. இராசபாண்டியன், முகிலை., (பதி.ஆ),– **சமூக வரலாற்றில் அரவாணிகள்,**
விசாலாட்சி பதிப்பகம்,
நல்லாப் பாளையம்,
விழுப்புரம்- 605 701.
மு.ப. 2013.

40. இராசாராம் துரை, (உ.ஆ), – **பதினெண் கீழ்க்கணக்கு,**
முல்லை நிலையம்,
தி.நகர்,
சென்னை - 17.
மு.ப. நவம்பர் - 1996.

41. இராமச்சந்திரன், சி, – **அரவாணிகளின் வாழ்க்கை,**
தமிழ் நிலம்,
சி.ஐ.டி. நகர், நந்தனம்,
மு.ப. சென்னை - 600 035.

42. இராஜாராம், துரை, – **மஹாபாரதம்,**
நர்மதா பதிப்பகம்,
பாண்டி பஜார், தி. நகர்,
சென்னை - 600 017.
முதற்பதிப்பு- டிசம்பர், 2011.

43. இளங்கோ கிருஷ்ணன், – **காயச் சண்டிகை,**
காலச் சுவடு பதிப்பகம்,
நாகர்கோவில்,
மு.ப. - 2007.

44. இன்குலாப், – **காந்தள் நாட்கள்,**
அகரம் வெளியீடு.
தஞ்சாவூர் - 7.
மு.ப. டிசம்பர் - 2012.

45. கண்ணுப்பிள்ளை, வெ., – **சமுதாய மக்களாட்சி வழிமுறைகள்,**
வளரும் சமுதாயம் பதிப்பகம்,
கலைஞர் கருணாநிதி நகர்,
திருச்சி - 21,
மு.ப. மே - 2009.

46. கணேசன், கு., (தொ.ஆ), – **கவிஞர் முருகு சுந்தரம் கவிதைகள்,**
சாக்திய அகாதெமி வெளியீடு.
புதுதில்லி - 110 001.
மு.ப. 2015.

47. கமலா முருகன், (உ.ஆ), – **பாவேந்தர் தமிழச்சியின் கத்தி,**
சாரதா பதிப்பகம்,
சென்னை - 600 014.
மு.ப. - 2013.

48. கரிகாலன், – **கரிகாலன் கவிதைகள்,**
உயிர் எழுத்து பதிப்பகம்,
திருச்சி.
மு.ப. ஜூன் - 2008.

49. காந்தி, ஆ., (ப.ஆ.), – **கண்ணதாசன் கவிதைகள்,**
23, கண்ணதாசன் சாலை,
தி.நகர்,
சென்னை-17.
மு.ப. -2012.

50. காந்தி, கா, – **வள்ளுவர் ஒரு சமூகவியலாளர்,**
கந்தன் பதிப்பகம்,
விழுப்புரம்- 606 107.
மு.ப. மே - 2008.

51. காமராசன், நா, – **கறுப்பு மலர்கள்,**
கவிதா பள்ளிகேஷன்,
8, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார்,தி. நகர்,
சென்னை- 600 017.
மு.ப. - 2015.

52. கானமஞ்சரி, – **அரவாணிகள் வரலாறு,**
சுமதி புத்தகாலயம்,
நியூ பெருங்குளத்தூர்,
சென்னை- 600 048.
மு.ப. - 2003.

53. கிருஷ்ணமாச்சாரியார், – **அஷ்டா தச புராணங்கள் என்னும் பதினெண் புராணங்கள்,**
நர்மதா பதிப்பகம்,
தி. நகர்,
சென்னை- 600 017.
மு.ப. ஜூன் - 2005.

54. கீதா, மு, – **ஒரு கோப்பை மனிதம்,**
கீதம் பப்ளிகேஷன்ஸ்,
திருமலை நகர்,
பெருங்குடி,
சென்னை-96.

55. குமாரசாமி, ஆ., – **நிழல் முகங்கள்,**
முத்தமிழ்ப் பதிப்பகம்,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை- 600 078.
மு.ப. - 2010.

56. கோபால்தாசன், – **புலரி,**
தாமரை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை.
மு.ப. ஏப்ரல் - 2010.

57. சக்திவேல், சு., – **நாட்டுப்புற இயல் ஆய்வு,**
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை - 08.
மு.ப. 1983.

58. சரவணன், ப., (மீள். ப.ஆ), – **நாலடியார்,**
சந்தியா பதிப்பகம்,
அசோக் நகர்,
சென்னை- 600 083.
மு.ப. ஜூன்-2004.

59. சிவகுருநாத பிள்ளை, மா., – **சிவவடிவங்கள்,**
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்- 613 005.

60. சிவசுப்பிரமணியன், வே., (மயிலம்), (ப.ஆ), – **அகநானூறு,**
உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்,
பெசன்ட் நகர்,
சென்னை- 90.
மு.ப. 1990.

61. சீனிவாசன், டி., (பதிப்பாளர்) – **சொல்வனம்,**
விகடன் பிரசுரம்,
சென்னை.
மு.ப. ஜூலை - 2015.

62. சுப்பிரமணியம், க.நா., – **கா.நா.சு கவிதைகள்,**
சந்தியா பதிப்பகம்,
சென்னை
மு.ப. 2002.

63. சுப்பிரமணியப்பிள்ளை, கா., (உ.ஆ), – **தனிப்பாடல் திரட்டு,**
சாந்தா பதிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
மு.ப. ஆகஸ்ட் - 2008.

64. சுமித்ரா, த., – **விழிபேசும் மொழி,**
குருவனம் அச்சகம்,
ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 97.
மு.ப. 2012.

65. சுயம்பு பெ., (உ.ஆ), – **நன்னூல்,**
பாரதி பதிப்பகம்,
இராஜிவு நகர், திசையன்விளை,
நெல்லை மாவட்டம்,
மு.ப. பிப்ரவரி - 2011.

66. சுரா. கவிஞர்., – **கற்பனை வரங்கள்,**
செந்தமிழ் அறக்கட்டளை,
38 ராஜீவ் காந்தி நகர்,
திருவில்லிபுத்தூர் - 626 135.
மு.ப. டிசம்பர் - 2015.

67. செயசீலன், சூ.ம., – **திருநங்கைகள் வாழ்வியல். இறைவியல்,**
வைகறை வெளியீடு,
திண்டுக்கல் - 624 001.
மு.ப. ஏப்ரல் - 2010.

68. தபசி, – **குறுவாளால் எழுதியவன்,**
புதுமைப்பித்தன் பதிப்பகம்,
சென்னை.
மு.ப. டிசம்பர் - 2004.

69.தமிழண்ணல், (உ.ஆ), – **தொல்காப்பியம்,**
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை - 625 001.
மு.ப. ஏப்ரல் - 2008.

70. தவசிக் கருப்பசாமி, – **அழிபசி,**
மணல்விடு பதிப்பகம்,
ஏர்வாடி,
மேட்டூர்,
சேலம், 636 453.
மு.ப. டிசம்பர் - 2014.

71. திருமுருகன், இரா., (தொ.ஆ), – **சித்தர் பாடல்கள்,**
சாகித்திய அகாடெமி பதிப்பு
இரவீந்திரபவன்,
புதுதில்லி - 110 001.
மு.ப. 2012.

72. துர்காதேவி, மு., – **இமை மூடி ஒரு நொடி,**
பி. டயஜிஸ்ட் பதிப்பகம்,
நாகர்கோவில் - 629 001.
மு.ப. - 2014.

73. நாஞ்சில் நாடன், – **மண்ணுள்ளிப் பாம்பு,**
விஜயா பதிப்பகம்,
கோயம்புத்தூர்-1,
மு.ப. ஜூலை- 2001.

74. நாராயண வேலுப்பிள்ளை, வித்துவான், வி., (உ.ஆ), – **பன்னிரு திருமுறைகள்,**
வர்த்தமானன் பதிப்பகம்,
ஏ.ஆர். ஆர். காம்ளெக்ஸ்,
தியாகராயநகர்,
சென்னை-17.
மு.ப. - 1995.

75. நீலகண்டன், வெ., – **ஊர்க் கதைகள்,**
சந்தியா பதிப்பகம்,
அசோக் நகர்,
சென்னை - 600 083.
மு.ப. 2009.

76. நூருல்லா, ஆர்., – **அலிகள் வாழ்க்கை,**
பூங்குழலி அச்சகம்,
58, முத்துதெரு,
சென்னை - 600 014.
மு.ப. மே - 1990.

77. நெடுஞ்செழியன், வே., – **கண்ணாடி உலகம்,**
வம்சி பதிப்பகம்,
திருவண்ணாமலை,
மு.ப. டிசம்பர் - 2009.

78.நெல்லை ஜெயந்தன், – **திணை மயக்கம்,**
குமரன் பதிப்பகம்,
சென்னை-17.
மு.ப. - 2004.

79. நௌஷாத், லி., – **என் மனசுக்குள் எப்படி வந்தாய்,**
மணிமேகலை பிரசுரம்,
தியாகராச சாலை,
சென்னை- 600 017.
மு.ப. - 2009.

80. பக்தவத்சல பாரதி, – **பண்பாட்டு மானிடவியல்,**
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம் - 01.
மு.ப. நவம்பர் - 1990.

81. பத்மபாரதி, – **திருநங்கையர் சமூக வரைவியல,**
விற்பனையகம்,
25., ஏ. ஸ்பென்சர் பிளாஸா,
769, அண்ணாசலை,
சேலவாயல்,
சென்னை - 51.
மு.ப. - 2013.

82. பழனிவேல், – **தவளை வீடு,**
உயிர்மை பதிப்பகம்,
சென்னை.
மு.ப. டிசம்பர் - 2004.

83. பாலன், வி.கே.டி., – **சொல்லத் துடிக்குது மனசு,**
மதுரா வெளியீடு,
11-13 காந்தி இர்வீன் ரோடு,
எழும்பூர்,
சென்னை.
மு.ப. டிசம்பர் - 2008.

84. பாலா, – **முனியமரம்,**
புதிய தரிசனம் பதிப்பகம்,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.
மு.ப. முதற்பதிப்பு - 2015.

85. பாலுவிஜயன்– சக்திவேல், – **கூவாகம், கூத்தாண்டவர்,**
வரம் பதிப்பகம்,
எயீலடம்ஸ் ரோடு,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.
மு.ப. டிசம்பர் - 2007.

86. பிச்சமூர்த்தி, ந., – **பிச்சமூர்த்தி கவிதைகள்,**
க்ரியா வெளியீடு,
சென்னை.
மு.ப. - 1985.

87. பிரியா பாபு, – **அரவாணிகள் சமூக வரலாறு,**
கே.கே. டிக்ஸ் பிரைவேட் லிமிடெட்.,
தி. நகர்,
சென்னை- 600 017.
மு.ப. அக்டோபர்-2007.

88. பிரியா பாபு, – **வெற்றிப் பாதையில் திருநங்கைகள்,**
தாய் திட்டம்,
வாலண்டரி ஹெல்த் சர்விஸ்,
டி.டி.டி. ஐ போஸ்ட், தரமணி,
சென்னை - 600 122.
மு.ப. டிசம்பர் - 2013.

89. புலியூர் கேசிகன், (உ.ஆ), – **மணிமேகலை,**
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை - 600 018.
மு.ப. - 1961.

90. மகுடேசுவரன், – **காமக் கடும்புனல்,**
யுனைடெட் ரைட்டடர்ஸ்,
கோபாலபுரம்,
சென்னை -86.
மு.ப. டிசம்பர் - 2004.

91. மங்கை, அ., – **எதிரொலிக்கும் கரவொலிகள்,**
அரவாணிகளும் மனிதர்களே,
பாரதி புத்தகாலயம்,
7, இளங்கோ சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
இ.ப. - 2009.

92. மாணிக்கனார், ம., (உ.ஆ)., – **கம்பராமாயணம்,**
தமிழ் நிலையம்,
தி. நகர்,
சென்னை - 17.
மு.ப. 2007.

93. மாணிக்கவாசகன், ஞா., (உ.ஆ), – **சிலப்பதிகாரம்,**
உமா பதிப்பகம்,
மண்ணடி,
சென்னை - 600 001.
மு.ப. டிசம்பர் - 1995.

94. மாணிக்கவாசகன், ஞா., – **திருக்குறள்,**
உமா பதிப்பகம்,
மண்ணடி,
சென்னை - 600 001.
மு.ப. ஜூலை - 1991.

95. முருகன், பெரு., – **பள்ளியறை ஓடிஸி,**
புலம் வெளியீடு,
சென்னை.
மு.ப. டிசம்பர் - 2009.

96. யோகியார், ச.து.சு., – **தமிழ்க் குமரி,**
சந்தியா பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு- 2001.

97. லிவிங் ஸ்மைல் வித்யா, – **நான் வித்யா,**
கிழக்கு பதிப்பகம்,
33/15, எல்டம் சாலை,
ஆழ்வார் பேட்டை,
சென்னை- 600 018.
மு.ப. டிசம்பர்- 2007.

98. வேங்கடசாமி நாட்டார், ந.மு., (உ.ஆ),– **நீதி நூல்கள்,**
முல்லை நிலையம்,
தி. நகர்,
சென்னை-17.
மு.ப. 2005.

99. வேலு, ந., – **ஏழைகள் சிரிப்பதெப்போ?**
கவிக்குயில் அச்சகம்,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
மு.ப. - 2010.

100. ஸ்ரீசந்திரன், ஜெ., – **சிகரத்தைத் தொடுவோம்,**
வர்த்தமானன் பதிப்பகம்,
தி. நகர்,
சென்னை- 17.
மு.ப. 2001.

101. ஸ்டீபன், ஞா., – **இலக்கிய இனவரைவியல்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
அம்பத்தூர்,
சென்னை - 98.
மு.ப. அக்டோபர் - 2017.

102. ஷ்யாமா, – **தமிழக கிராமங்களில் பெண் சிசுக் கொலைகள்,**
நந்தன் பதிப்பகம்,
போத்தனூர்,
கோவை - 23.
மு.ப. 2004.

103. ஜெயசீலி, – **நவீன இலக்கியத்தில் மனித உரிமைச் சிந்தனைகள்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
அம்பத்தூர்,
மு.ப. சென்னை - 600 008.

104. . . . . , – **பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்,**
இந்திய வேதாகமச் சங்கம்,
206, மகாத்மா காந்தி சாலை,
பெங்களூர் - 560 001.
மு.ப. - 2010.

ஈ) ஆங்கில நூல்கள்

105.Mahesh Dattani, - **Collected Plays,**
Penguin Publications.
Hariyana - 122 002.
India.
First Edison - 2005.

106.Piyush Saxena, Dr., - **Life of a Eunuch,**
Shanta Publishing House,
5/1202, NRI Complex,
Nerul (W), Navi,
Mumbai - 400 706.
December - 2011.

உ) அகராதி

107. சிங்காரவேலு முதலியார், – **அபிதான சிந்தாமணி,**
சாரதா பதிப்பகம்,
சென்னை- 600 014.
மு.ப. பிப்ரவரி- 2001.

ஊ) வாழ்வியல் களஞ்சியம்

108. பாலுசாமி, நா, – **வாழ்வியல் களஞ்சியம்,**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

எ) இதழ்கள்

109. அறிவழகன், ச., – **அவள் விகடன்,**
757, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
27.12.16.

110. கார்த்திகேயன், கி., – **ஆனந்த விகடன்,**
757, அண்ணா சாலை,
செங்னனை - 02.
20.04.2011.

111. நக்கீரன் கோபால், – **இனிய உதயம்,**
நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்,
இராயப்பேட்டை,
சென்னை-14.
ஆகஸ்ட் - 2006.

112. வெங்கடேஷ், ஆர்., (பொ.ஆ.), – **கல்கி,**
கல்கி பில்டிங்க்ஸ்,
நேரு சாலை,
ஈக்காடு தாங்கல்,
சென்னை - 32.
01.01.2017

113. . . . . , – **கல்கி (தீபாவளி மலர்),**
2017.

114. முகமது இஸ்ரத், – **குங்குமம் தோழி,**
229, கச்சேரி ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை - 04.
16 - 31.12.16.

115. . . . . , – **தங்க மங்கை,**
அண்ணாசாலை,
தேனாம்பேட்டை,
சென்னை - 6,
ஆகஸ்ட் - 2016.

116. . . . . , – **பாடம்,**
டிசம்பர் 2016.

117. அரசு, வீ., (ப.ஆ.), – **மாற்றுவெளி (ஆய்விதழ்),**
பரிசல் புத்தக நிலையம்,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106.
மு.ப. ஜனவரி - 2011.

118. கருணாகரன், – **ஜன்னல்,**
வெள்ளை பிள்ளையார் கோவில்
தெரு,
எஸ்.எஸ்.காலனி,
மதுரை-10,
19-30.11.16.

119. . . . . , – **ஜூனியர் விகடன்,**
03.05.17.

120. கண்ணன், ரா., – **விகடன் தடம்,**
விகடன் குழுமம்,
757, அண்ணா சாலை,
சென்னை - 02.
பிப்ரவரி - 2017.

ஏ) நாளிதழ்கள்

121. தி.இந்து, – **06.03.2016**

122. தி.இந்து, – **17.01.2017**

123. தி.இந்து, – 10.07.2017

124. தி.இந்து, – 31.10.2017

125. தி.இந்து, – 03.10.2018

126. தினகரன், – 10.11.2016

127. தினகரன், – 06.04.2017

128. தினத்தந்தி, – 07.08.2004

129. தினத்தந்தி, – 10.11.2016

130. தினத்தந்தி, – 31.10.2017

131. தினத்தந்தி, – 14.01.2018

132. தினமலர், – 01.02.2016

133. தினமலர், – 02.02.2016

134. தினமலர், – 21.02.2016

135. தினமலர், – 20.06.2016

136. தினமலர், – 21.07.2016

137. தினமலர், – 04.06.2017

138. தமிழ் முரசு, – 10.03.2017

ஐ) இணையத் தளங்கள்

139. www.dailythanthi.com

140. https://eluthu.com

141. http://moonramkonam.com

142. www.orinam.net

143. http://www.vikatan.com

நேர்காணல் அளிப்பவர்கள்: திரு.கமலேஷ்ராவல் **நாள்: 05.12.2017**

திரு. ஹரிஷ் பாண்டே

திரு.குருவன்பாய் பட்டேல்

இடம் : பகுஜ்ராஜீ மாதா கோவில், நேரம்: காலை 11.00 – மாலை 3.00

குஜராத்.

குறிப்பு: (கோவிலில் இருந்த திருநங்கையர்கள் ஆய்வாளர் கேட்ட வினாக்களுக்கு விடையளிக்க விரும்பவில்லை. எனவே அங்குள்ள கோவில் நிர்வாகப் பொறுப்பாளர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டன. ஹிந்தி மொழியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகள் இங்குத் தமிழில் மொழிபெயர்த்து கொடுக்கப்பட்டுள்ளன)

1) **நீங்கள் திருநங்கையர்களை எதிர்கொள்ளும் விதம் யாது?**

திருநங்கையர்களை நாங்கள் நன்னிலையில் வைத்துப் பார்க்கின்றோம். அவர்கள் வாழ்த்துவதும் ஆசீர்வதிப்பதும் பலிக்கும் என நம்புகிறோம்.

2) **பகுஜ்ராஜி மாதா கோவில் யாரால் கட்டப்பட்டது?**

படோதா மாநிலத்தின் மன்னரான மானாஜிராவ் கயாக்குவாரால் இக்கோவில் கட்டப்பட்டது. இந்தக் கோவில் நானூறு ஆண்டிற்கும் மேலான பழைமை வாய்ந்தது. பாலதிரிபுரசுந்தரி குழந்தை ரூபத்தில் இந்தக் கோவிலில் உள்ளார். இந்தக் கோவிலில் யார் எது வேண்டினாலும் அது நடக்கும்.

3) **வட இந்தியத் திருநங்கைகள் பொருளாதார அடிப்படையில் உயர்நிலையில் உள்ளனரா?**

நிச்சயமாக உயர்நிலையில் உள்ளனர். அவர்கள் இக்கோவிலில் வரும் யாத்ரீகர்களுக்கு ஆசீர்வாதம் வழங்குகிறார்கள். சங்கு ஊதுவார்கள். யாத்ரீகர்கள் அவர்களுக்கு விரும்பி கொடுக்கும் 500ரூ 1000ரூ பணத்தைப் பெற்று வாழ்கின்றனர். புதுவீடு கட்டினாலும் குழந்தை பிறந்தாலும் இவர்களை அழைத்து வந்து ஆசீர்வாதம் வாங்குவோம். எனவே பொருளாதார நிலையில் உயர்வானவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர்.

4) **இங்குள்ள திருநங்கையர்களுக்கு அரசு ஏதேனும் உதவிகள் செய்துள்ளதா?**

அரசு பெரும்பாலும் உதவுவதாகத் தெரியவில்லை. அவர்கள் உழைக்கிறார்கள், மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

5) திருநங்கையர்கள் வாக்கு பலிதம் ஆகுமென நம்புகிறீர்களா?

ஆம். எல்லோரும் நம்புகிறோம். அவர்களைத் தெய்வத்திற்கு நிகராக எண்ணுகின்றோம். அவர்கள் வாழ்த்தினாலும், சபித்தாலும் அது நடக்கும் என நம்புகிறோம். அவர்கள் சாபத்தைப் பெறுவதற்கு அஞ்சுகிறோம்.

நேர்காணல் அளிப்பவர்கள் கையொப்பம்

நேர்காணல் அளிப்பவர்கள்: ஏ.வி.கிருபா **நாள்: 20.11.2017**

வி.சாதனா

இடம் : தா (THAA) **அமைப்பு,** **நேரம்: மாலை 04.15 மணி**

(Tamilnadu Aravanigal Association) **சென்னை.**

1. உங்கள் 'தா' அமைப்பு பற்றிக் கூறுங்கள்?

என் பேரு கிருபா.நா தமிழ்நாடு அரவாணிகள் அசோசியேசனோட செயலாளரா இருக்கேன். இந்தத் தமிழ்நாடு அரவாணிகள் அசோசியேசனை 1998-வது வருஷம் ரிஜிஸ்டர் செய்தோம். மூணு வருஷம் நடத்தி வந்தோம். அரசிடமிருந்து நிதி உதவி வர ஆரம்பித்தது. 2000-ஆம் ஆண்டிலிருந்து அரசு நிதி உதவி தரத் துவங்கியது. இந்த அமைப்பின் குறிக்கோள் என்ன என்றால் எச்.ஐ.வி.-ஆல் பாதிப்படைந்தவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை கொடுக்கிறோம். அது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றோம். சிகிச்சைக்குப்பின் அவர்கள் விரும்பினால் அவர்களை அவர்களுடைய சொந்த ஊருக்கு அனுப்பி விடுவோம். இல்லை என்றால் தாம்பரத்தில் உள்ள பெருங்குளத்தூரில் ஒரு ஹோம் இருக்கு. அங்கு அவர்களை அனுப்புவோம். அங்கு இப்போது பதினைந்து பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு மற்றும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம். TACS (Tamilnadu Aids Control Society) அமைப்பிலிருந்து நிதி உதவி பெற்றோம். CCC Community Cure Centre மூலம் ப்ராஜெக்ட் (Project) செய்தோம். தற்போது அந்த அமைப்பு அரசு மருத்துவமனையுடன் சேர்க்கப்பட்டு விட்டது. 'தா' அமைப்பில் 9 பேர் உறுப்பினர்களாக உள்ளோம். இதனைத் துவங்கியவர் 'நண்டம்மாள்'. நான் நண்டம்மாளின் மகள். தற்போது இந்த அமைப்பின் தலைவர் கௌசல்யா.

2. நீங்கள் அரசிடமிருந்து பெற்ற உதவிகள் பற்றியும், பிற திருநங்கையருக்கு உங்கள் 'தா' அமைப்பு செய்த உதவிகள் பற்றியும் கூறுங்கள்?

(சாதனா தொடர்கிறார்)

இந்த அமைப்பே அரசின் கீழ்தான் இயங்கி வருகின்றது. அரசு உதவிகள் செய்து வருகிறது. இருப்பினும் நூறு சதவீதத்தில் எண்பது சதவீத உதவிகளையே நாங்கள்

பெறுகின்றோம். அரசு வீடு கட்டிக் கொடுத்தது. காசிமேட்டில் எர்ணா ஊரில் ‘243’ பேருக்குத் தனித்தனியாக வீடுக் கொடுத்திருக்கிறார்கள். அது அடுக்குமாடிக் குடியிருப்பு. வசதியாக உள்ளது. ஆனால், இன்னும் தேவைகள் இருக்கின்றன. எங்கள் அமைப்பு மூலமாகத் திருநங்கையருக்கு நிறைய உதவிகள் செய்து இருக்கிறோம். திருநங்கையருக்கான அடையாள அட்டை, ஆதார் அட்டை, ரேஷன் அட்டை, வாக்காளர் அட்டை, பான்கார்டு (Pan Card) பெற்றுக் கொடுத்தல், வங்கிக் கணக்கெடுப்பு துவக்கிக் கொடுத்திருக்கிறேன். மற்றச் சலுகைகளையும் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். சென்னையில் சுமார் 3000 திருநங்கையர் இருப்பார்கள். தென் சென்னை, வட சென்னை இரு பகுதிகளிலும் நம் அலுவலகங்கள் உள்ளன. நாங்கள் இங்கு பல திருநங்கையர் கடை கேட்பதையும், பாலியல் தொழிலையும் செய்கிறார்கள். ஆனால் அது இரண்டாம் நிலைதான். இது தவிர்த்து வேலை செய்ய முயன்றாலும் இந்தச் சமூகம் வேலை கொடுப்பற்குத் தயாராக இல்லை. அப்படியே கொடுக்க முன்வந்தாலும், பாலியல் தொந்தரவுகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் அஞ்சி திருநங்கையரே வேலைக்குச் செல்வதைத் தவிர்க்கின்றனர்.

நேர்காணல் அளிப்பவர்கள் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: முனைவர் வெ.முனிஷ் நாள்: 24.12.2017
(திறனாய்வாளர்)

இடம் : மதுரை நேரம்: மாலை 07.05 மணி

1. திருநங்கையர் குறித்த படைப்புகளைப் படைப்பதற்கு உங்களைத் தூண்டிய சூழல் யாது?

எனக்கு நன்கு நினைவிருக்கிறது. 2001-ல் மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இரவு ஒன்பது மணி இருக்கும். நான் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது என் அருகில் லுங்கி சட்டையணிந்த ஒருவர் நின்று கொண்டிருந்தார். பேருந்து நிலையத்திலிருந்த பெரும்பாலானவர்கள் அவரையே உற்று நோக்கினார்கள். ஏன் இவரை எல்லோரும் இப்படி பார்க்கிறார்கள் என்று எனக்குப் புரியவே இல்லை. சற்று நேரம் கழித்து அவரைக் கேலி, கிண்டல் செய்ய ஆரம்பித்தனர் சிலர். ஒம்பது, பொட்டை, அஜக்கு என்று கிண்டல் செய்து சிரித்தார்கள். அவர் அவமானம் தாங்காமல் வெட்கப்பட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்து சென்றார். அங்கிருந்த சிலர் அவரை 'போகலாமா' என்று அழைத்தார்கள். இந்த நிகழ்வுக்குப் பின் அன்று இரவு எனக்கு தூக்கம் வரவே இல்லை. மீண்டும் மீண்டும் அந்த நிகழ்வுகளே நினைவில் வந்து போயின. மறுநாள் கல்லூரிக்குச் சென்று எனது பேராசிரியரிடம் நடந்தவற்றைக் கூறினேன். அவர் பொறுமையாகக் கேட்டறிந்துவிட்டு, என்னிடம் சொன்னார். அவர்கள் 'அலி'. ஆணுமில்லாமலும் பெண்ணுமில்லாமலும் இருப்பார்கள் என்றார். அன்று முதல் அலிகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். முதன் முதலில் 'பின் நவீனத்துவப் பார்வையில் அரவாணிகள்' என்கின்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வாசித்தேன். அதனைத் தொடர்ந்து அரவாணிகளைப் பற்றிய ஆய்வைத் தொடர்ச்சியாக மேற்கொண்டேன். கவிதைகள் படைக்க ஆரம்பித்தேன்.

2. திருநங்கையர் குறித்த உங்களின் புரிதல்கள் யாவை?

மனிதன் என்று தோன்றினானோ, அன்றே பாலினம் திரிந்த அரவாணிகளும் தோன்றிவிட்டனர். ஆண், பெண் போன்றே அரவாணிகளும் சம பாலினத்தவரே.

எல்லோரையும் போன்றே அரவாணிகளும் சக மனிதர்களே. வரலாற்றில் மறைக்கப்பட்ட பாலினத்தவர். அரவாணியர் பாலின சமத்துவத்தின் குறியீடு. ஏனைய பாலினத்தவரைக் காட்டிலும் அன்பு, இரக்கம், பாசம், உதவும் குணம், ஆளுமை, நிர்வாகத்திறன் கொண்டவர்கள் அரவாணியர். மானிட வர்க்கத்திற்குக் கிடைத்த மகத்தானவர்கள். எவற்றிலும் சளைத்தவர்களோ, இளைத்தவர்களோ இல்லை.

3. சமூகத்தில் உங்களது படைப்புகள் ஏற்படுத்திய தாக்கம் யாது?

என்னுடைய 'தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள்', அரவாணிகளின் பன்முக அடையாளங்கள், காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம் ஆகிய மூன்று நூல்களும் அரவாணியர் குறித்த விவாதங்களை உருவாக்கியிருக்கின்றன. தமிழ் இலக்கியத்திலிருந்து ஆதாரங்களைத் திரட்டி அரவாணியர் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்திருக்கிறேன். அரவாணியர் தங்களுடைய வரலாற்றை என்னுடைய நூல்கள்வழி அறிந்து பல தளங்களில் உரக்கச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழகத்தில் பல்வேறு கல்லூரி, பல்கலைக் கழகங்களிலுள்ள ஆய்வாளர்களை ஆய்வு செய்யத் தூண்டியிருக்கிறது. என்னுடைய நூல்களைப் படித்துவிட்டு, பலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நான் அரவாணிகளைப் பற்றி வேறு விதமாக நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் நூலைப் படித்தபின் நான் என்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். அரவாணியரைப் பொதுவிடங்களில் பார்த்தால் சகஜமாகப் பேசுகிறேன். அவர்களுக்கு என்னால் முடிந்த பணத்தைக் கொடுக்கிறேன் என்று கூறியுள்ளனர். எழுத்தாளர் நாஞ்சில் நாடன், 'காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம்' என்கின்ற நூலைப் படித்துவிட்டு, இந்த நூலில் சொல்லப்பட்டுள்ள பல கருத்துக்கள் புதுமையாக இருப்பதோடு, என்னைச் சிந்திக்க வைக்கின்றன என்று அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் பேசினார். அரவாணியர் பலர் தொடர்பு கொண்டு எங்களைப் பற்றி மிகவும் நன்றாக எழுதியிருக்கிறீர்கள்.

எங்களுக்காகக் குரல் கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் இனம் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வருவதை உங்கள் நூல் மூலமாகத்தான் தெரிந்து கொண்டோம் என்று பேசியுள்ளனர். திரைப்பட இயக்குநர்கள் சிலர் தொடர்பு கொண்டு அரவாணியர் பற்றி, திரைப்படம் எடுக்க வேண்டும், உங்கள் நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாமா என்று கேட்டிருக்கிறார்கள்.

4. படைப்பிலக்கியம் தாண்டி திருநங்கையர் பற்றி நல்ல புரிதல்களை இச்சமூகத்தவருக்கு ஏற்படுத்தும் வழிமுறைகள் யாவை?

ஊடகங்களில் அரவாணியர்களை நல்ல விதமாகக் காட்ட வேண்டும். அரசு அரவாணியர் விஷயத்தில் அக்கறை கொள்ள வேண்டும். அரசுத் துறைகளில் அரவாணியருக்கு முன்னுரிமையளிக்க வேண்டும். அரவாணியர் சுய மரியாதையோடு வாழ வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். ஆண், பெண் பாலினத்தவருக்குக் கிடைக்கும் எல்லா உரிமைகளும் சலுகைகளும் அரவாணியருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அரவாணியர்களை அவர்களது பெற்றோர்கள் ஏற்கச் செய்துவிட்டால் போதும், சமூகம் தானாகப் புரிந்து கொள்ளும்.

5. ஒரு சில திருநங்கையரின் இழிவான நடவடிக்கைகள் குறித்து உங்களின் கண்ணோட்டம் யாது?

நீங்கள் வினாவிலேயே கூறிவிட்டீர்கள், ஒரு சில திருநங்கைகள் என்று. பெரும்பாலான திருநங்கைகள் நல்ல வழிகளில்தான் வாழ்ந்து வருகிறார்கள். இழிவான செயல்களில் ஈடுபடுவோர் ஆண் பாலினத்தவர்களில் இல்லையா? அல்லது பெண் பாலினத்தவர்களில்தான் இல்லையா? ஏன் இந்த கேள்வி அரவாணியர்களை மட்டும் நோக்கி வருகிறது? எல்லாம் இருப்பவர்களே இச்சமூகத்தில் இழிவான செயல்களில் ஈடுபடுகின்றனர். எதுவுமே இல்லாத அரவாணியர்களிடம் தவறு காண்பது தவறு. பெற்றவர்களே ஏற்றுக்

கொள்வதில்லை. வாழ்வதற்கு வாழ்வாதாரமில்லை; வேலையில்லை; மறுக்கப்படுகிறது. அரவாணியர் என்கின்ற அடையாளம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை; அருவருக்கப்படுகிறது. பொதுவிடங்களில் சக மனிதர்களாக நடமாட முடியவில்லை. ஆண் – பெண் பாலினத்தவர்களின் கேலி கிண்டல். சமூக விரோதிகள், ரௌடிகளின் பாலியல் தொல்லை. பொதுவிடம், பேருந்து, திரையரங்கு, கழிப்பிடம் போன்றவற்றில் அரவாணியருக்கான இடம் இல்லை. இப்படி இன்னும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். அடிப்படையாக ஒரு மனிதனுக்குக் கிடைக்க வேண்டியதே அரவாணியருக்குக் கிடைப்பதில்லை. மறுக்கப்படுகிறது. கொடுக்க வேண்டியதைக் கொடுங்கள். இழிவான செயல்கள் பற்றிப் பின்னர் பேசிக் கொள்ளலாம்.

6. உங்கள் நினைவுகளில் என்றுமே நிழலாடக்கூடிய திருநங்கையர் எவரேனும் உள்ளனரா?

ஆம். நிறைய அரவாணியர் உள்ளனர். ப்ரியா பாபு, நர்த்தகி நடராஜ், ரேவதி, கல்கி, வித்யா, பாரதி கண்ணம்மா, ரோஸ், ப்ரித்திகா யாசினி.

7. திருநங்கையருக்கான இட ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து யாது?

மனித சமூகத்தில் எல்லா நிலைகளிலும் விளிம்புக்கும் விளிம்பாக இருப்பவர்கள் அரவாணியர். அவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். அப்பொழுதுதான் மனித சமத்துவம் ஏற்படும்.

8. திருநங்கையருக்கான தனி ஆய்வு இருக்கை, மாற்றுப் பாலினத்தவருக்கான ஆய்வுப் பட்டப்படிப்பு ஏற்படுத்துவதற்கான சில ஆலோசனைகளைக் கூறுங்கள்?

தமிழ் மொழியிலுள்ள இலக்கண, இலக்கிய நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், சிற்பங்கள், செப்பேடுகள் போன்றவற்றில் அரவாணியர் பற்றிய குறிப்புகள் ஏராளம் இருக்கின்றன. இந்தியாவில் பல மொழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் உள்ள இலக்கண, இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், ஆவணங்கள், புராண இதிகாசங்கள்

போன்றவற்றில் அரவாணியர் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. இதுபோல் உலகிலுள்ள பிற மொழி இலக்கியங்களிலும் இருக்க வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறுள்ள அரவாணியர் பற்றிய குறிப்புகளை ஆய்வுகள்மூலமே வெளிக்கொணர முடியும். அவை கைகூட வேண்டுமாயின், இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அரவாணியர் ஆய்யு இருக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். உலகளவிலுள்ள பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்பட்டால் இன்னும் சிறப்பு. ஆண் - பெண் பாலினத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட பாலினமாக அரவாணியர் இருப்பதால் அவர்கள் அங்கீகரிக்க ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்டு வருகின்றனர். அரவாணியர்களைப் புரிந்து கொள்ள, ஏற்றுக் கொள்ள பட்டயப் படிப்பு ஏற்படுத்த வேண்டும். கல்வியாளர்கள் இதனை அரசுக்கு முன்மொழிய வேண்டும்.

9. தலித் இலக்கியம் போன்று திருநங்கை இலக்கியம் வளருமா?

நிச்சயம் வளரும். அதற்கான சூழல் ஏற்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாறு வருடங்களில் அரவாணியர் பற்றிய ஆய்வுகளும், படைப்புகளும், விமர்சனங்களும் பெருகி வருகின்றன. நான் 2005 - 2006-ல் 'தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள்' என்கின்ற ஆய்வு நூல் மூலமாக 'அரவாணியம்' என்கின்ற சொல்லைப் பிரகடனப்படுத்தியுள்ளேன். இரண்டாயிர வருட கால இலக்கிய ஆதாரங்களைத் திரட்டி ஆதாரப்பூர்வமாக தலித்தியம், பெண்ணியம், பெரியாரியம், மார்க்சீயம் போன்று 'அரவாணியம்' முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறேன். படைப்பாளர்களும், ஆய்வாளர்களும், சமூக ஆர்வலர்களும், மனிதநேய வாதிகளும் முன்னெடுக்க வேண்டும். அரவாணியம் வளர்ந்தால் அரவாணிய இலக்கியங்களும் வளரும்.

10. ஒரு திறனாய்வாளராக நீங்கள் திருநங்கையர் சமூகத்திற்கு என்ன கூறுகிறீர்கள்?

நீங்கள் உங்கள் வரலாற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வரலாறு இன்று நேற்றல்ல. மனிதன் தோன்றும்போது அரவாணியர் பாலினம் தோன்றியுள்ளது.

அதற்கான ஆதாரம் நிறைய இருக்கின்றன. உங்கள் வரலாற்றைச் சொல்லி மீண்டெழுங்கள். எல்லா தளங்களிலும் ஏதாவது ஒரு விதத்தில் உங்கள் இருப்பைக் காட்டிக் கொண்டிருங்கள். தொடர்ந்து போராடுங்கள். உரிமைகளை வென்றெடுக்கும் வரை ஓயாதீர்கள்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: முனைவர் மு.அருணாசலம் நாள்: 10.02.2018
(திறனாய்வாளர்)
இடம் : திருச்சி நேரம்: மாலை 06.40 மணி

1) திருநங்கையர் குறித்த படைப்புகளைப் படைப்பதற்கு உங்களைத் தூண்டிய சூழல் யாது?

விளிம்புநிலை மக்கள் மீது கொண்ட ஈர்ப்பும், ஆர்வமும் காரணம் ஆகும். திருநங்கையர் பற்றிய எனது கவிதைத் தொகுப்பு 'அரவாணியம்' திருநங்கை ப்ரியா பாபுவால் இத்தொகுப்பு பாராட்டப் பெற்றது.

2) திருநங்கையர் குறித்த உங்களின் புரிதல்கள் யாவை?

திருநங்கையர்கள் விளிம்புநிலை மக்கள்; சமூகத்தால் புறந்தள்ளப்பட்டவர்கள், மதம், சாதி ஆகியவை கடந்து ஒட்டுமொத்த சமூகமும் அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக வெறுத்து ஒதுக்கி வருகின்றது. அவர்களும் சக மனிதர்களே என்ற சமூகப்பார்வையும், மனிதநேயமும் அவர்கள் குறித்து உருவாகிடல் வேண்டும்.

3) சமூகத்தில் உங்களது படைப்புகள் ஏற்படுத்திய தாக்கம் யாது?

என்னுடைய ஆய்வுகளும், படைப்புகளும் திருநங்கை இலக்கியத்தில் மேற்கொண்டு ஆய்வுகள் நடத்துவதற்கு ஊக்கியாகவும், முன்னோடியாகவும் அமைகின்றன. வருங்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றன.

4) படைப்பிலக்கியம் தாண்டி திருநங்கையர் பற்றி நல்ல புரிதல்களை இச்சமூகத்தவருக்கு ஏற்படுத்தும் வழிமுறைகள் யாவை?

திருநங்கையர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு பணியிடங்களில் இட ஒதுக்கீடு வழங்கிடல் வேண்டும். திருநங்கையர்களின் திருமணங்கள் சட்டப்பூர்வமாக அங்கீகாரம் பெறல் வேண்டும். சமூகத்தின் பொதுப்புத்தியில் திருநங்கையர்கள் குறித்து உறைந்திருக்கும் மனப்போக்கு மாற்றம் பெறுதல் வேண்டும். ஊடகங்கள்

திருநங்கையர்கள் பற்றிய பார்வைகளை நல்ல முறையில் உருவாக்கிடல் முக்கியமாகும்.

5) ஒரு சில திருநங்கையரின் இழிவான நடவடிக்கைகள் குறித்து உங்களின் கண்ணோட்டம் யாது?

ஒரு சில திருநங்கையர்கள் விதி விலக்குகள். குற்றச் செயல்களில் ஈடுபடும் திருநங்கையர்கள் தண்டிக்கவும், கண்டிக்கவும்பட வேண்டியவர்கள். சமூகத்தின் புறக்கணிப்புகள் அவர்களை இழிவான செயல்களைச் செய்திட தூண்டியிருக்கலாம்.

6) உங்கள் நினைவுகளில் என்றுமே நிழலாடக்கூடிய திருநங்கையர் எவரேனும் உள்ளனரா?

சிலர் உண்டு. குறிப்பாக திருநங்கை போராளி பிரியா பாபு, திருச்சி – சென்னை சோழன் விரைவு புகைவண்டியில் கைதட்டி இன்றும் பிச்சையெடுத்து வரும் திருநங்கை தோழி ஒருவர்.

7) திருநங்கையருக்கான இட ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து யாது?

கண்டிப்பாக இடஒதுக்கீடு மட்டுமே அவர்களின் சமூக வாழ்வில் வெளிச்சத்தை ஏற்றும். வாழ்க்கையை மாற்றும்.

8) திருநங்கையருக்கான தனிஆய்வு இருக்கை, மாற்றுப் பாலினத்தவருக்கான ஆய்வுப் பட்டப்படிப்பு ஏற்படுத்துவதற்கான சில ஆலோசனைகளைக் கூறுங்கள்.

பல்கலைக்கழக மானியக்குழு இது குறித்த நடைமுறைகளை, ஆய்வு அறிக்கைகளை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் கொடுத்திடும் போது சாத்தியம் ஏற்படலாம். திருநங்கையர்கள் குறித்த ஆய்வு இருக்கைகள் தொடங்குவதற்கு மாநில அரசுகளும், சமூக ஆர்வலர்களும், தொழில் அதிபர்களும் முன்முயற்சி திட்டங்களை மேற்கொள்ளலாம்.

9. தலித் இலக்கியம் போன்று திருநங்கை இலக்கியம் வளருமா?

தலித் இலக்கியத்தில் இருந்து வேறுபட்டது திருநங்கையர் இலக்கியம். தலித் மக்களிலே திருநங்கையர்களாக பிறந்தவர்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். தமிழ்ப்பித்தனின் 'ஆச்சி முத்து' என்னும் சிறுகதை இப்பிரச்சனையைப் பதிவு செய்துள்ளது. திருநங்கையர் குறித்த படைப்புகள் அதிகம் வெளிவரும்போது திருநங்கை இலக்கியம் உருவெடுப்பதற்கு வாய்ப்புகள் உண்டு.

10. ஒரு திறனாய்வாளராக நீங்கள் திருநங்கையர் சமூகத்திற்கு என்ன கூறுகிறீர்கள்?

திருநங்கையர்கள் சமூகத்தின் ஓர் அங்கமே என்னும் விழிப்புணர்வு பரவல் வேண்டும். இயற்கையின் குரோமோசோம் செய்த பிழையினால் அவர்களின் வாழ்க்கையைத் துண்டாடுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. உரிமையும், நலன்களும் சார்ந்த வாழ்வியலை அவர்கள் பெறல் வேண்டும்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: திருநங்கை பிரியா பாபு (எழுத்தாளர்) **நாள்: 24.12.2017**

இடம் : மதுரை **நேரம்: நண்பகல் 01.00 மணி**

1. திருநங்கையருக்குக் கேரளாவில் தனிப்பள்ளி உருவாகி உள்ளது பற்றி உங்கள் கருத்து யாது?

எனக்கு அதில் மகிழ்ச்சி இருப்பினும் தனிப்பள்ளி என்பதில் உடன்பாடு இல்லை. வருங்காலத்தில் எல்லாமே தனி, தனி என்றாகிவிடும். உதாரணமாக, தலித் காலனி உருவாகியது. அதனால் பொது மக்களோடு அவர்கள் ஒட்டாத நிலை உருவாகிவிட்டது. அதனால் தான் சமத்துவபுரம் உருவாக்கப்பட்டது. எனவே ஆண், பெண் குழந்தைகளோடு திருநங்கையர் கலந்து பயிலும் போது ஒரு ஒருங்கிணைந்த நிலை உருவாகும்.

2. சமூகத்தில் திருநங்கையர் மீட்டெடுக்க வேண்டியவை எவை?

பெண்களை முதன்மையாக வைத்துப் போற்றிய சமூகம் நம் தமிழ்ச் சமூகம். வரலாற்றில் பெண்களுடைய வீரம் தனித்துவம் எப்படி மறைக்கப்பட்டதோ, மறக்கப்பட்டதோ அதுபோலத் திருநங்கையருடைய தனித்துவமும் மறைக்கப்பட்டிருக்கிறது. எனவே திருநங்கையருக்கான பழம்பெருமையை மீட்டெடுப்பதை எங்கள் முக்கியக் கடமையாக நான் கருதுகின்றேன். திருநங்கையர் பலர் காலங்காலமாகக் கடை கேட்பதும், பாலியல் தொழிலுமே செய்து வருகின்றனர். தனக்கான ஒரு அடையாளத்தைத் தனித்துவத்தை இன்று பல திருநங்கையர் உருவாக்கியிருக்கின்றனர். அதுபோல அனைவரும் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. இதுவே எங்கள் சமூகத்தின் மாற்றத்திற்கான முதல்படியாக இருக்கும்.

3. படைப்பிலக்கியம் தாண்டி திருநங்கையர் பற்றிய நல்ல புரிதல்களை இச்சமுதாயத்தவருக்கு ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகள் எவை?

திருநங்கையர் குறித்து அரசுச் சட்டங்கள், அங்கீகாரங்கள் ரீதியாகக் கொண்டு வர முடியும். விழிப்புணர்வு நாடகங்கள் நடிக்கின்றோம். கல்லூரிகளில் வகுப்பு

எடுக்கின்றோம். திருநங்கையர் பற்றிய புரிதல்களை உண்டாக்கப் பொது மக்களோடு இணைந்து கூட்டங்கள் நடத்துகின்றோம். திருநங்கையரை எங்கெல்லாம் பணி அமர்த்த முடியுமோ அந்த இடங்களைக் கண்டறிகின்றோம். உதாரணமாக மருத்துவத்துறை, நாடகத்துறை முதலிய பல்வேறு துறைகளில் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது சமூக நல்லிணக்கத்திற்கு உதவியாக இருக்கும்.

4. **ஒரு சில திருநங்கையரின் இழிவான நடவடிக்கை (சாபமிடுதல் போன்றன) குறித்து உங்கள் கருத்து யாது?**

இது தவறு. மற்றவர்களை அச்சுறுத்தி வாழ்வது தவறு. ஆனால் ஏன் இந்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அது முக்கியம். அதன் பின்னணி என்ன என்பதை அறிய வேண்டும். குடும்பம், சமூகம் என்ற கட்டமைப்பு அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் கட்டமைப்பிற்குள் அவர்களால் வர இயலவில்லை. குடும்பத்தோடு அவர்கள் வாழும் போது இந்நிலை மாறும் என்பது என் கருத்து.

5. **திருநங்கையருக்கான இட ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து யாது?**

காலங் காலமாக அழுத்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அவசியம். பெண்களுக்கு, சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு இருக்கிறது. இசுலாமியப் பெண்களுக்கு இருக்கிறது. இரண்டு சதவீதம் மூன்று சதவீதம் இடஒதுக்கீடு திருநங்கையருக்கு வழங்கப்பட வேண்டும். அதற்குத் திருநங்கையர் குறித்த கணக்கெடுப்பினை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். 2011, 2013-க்குப் பிறகு கணக்கெடுப்பு செய்யவில்லை. இது அரசினுடைய மெத்தனம். அரவாணிகளின் நலவாரியம் செயல்பாடும் சரிவர அமையவில்லை.

6. **திருநங்கையாக மாறும் ஒருவருக்கு, திருநங்கையர் சமூகம் பாதுகாப்பானதா? இல்லை அவர்கள் குடும்பம் பாதுகாப்பனதா?**

இதற்கு அந்தத் திருநங்கைதான் பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் திருநங்கையர் வீட்டைவிட்டு வெளியேறும்போது அவர்கள் சமூகத்துடனேயே இணைகின்றனர். திருநங்கையர் பலர் வீட்டோடு இருக்கிறார்கள். பெற்றோர்கள்தான் இதற்கு முக்கியக் காரணம். ஒரு ஆண், பெண்ணாவது ஒன்றும் குற்றம் இல்லையே. உடல் ஊனமாகும்போது இதை ஏற்றுக் கொள்ளும் குடும்பம், பாலியல் மாறுபாட்டையும் ஏற்றுக் கொள்ளும்போது, திருநங்கையர் சமூகத்தோடு அவர்கள் இணைய வேண்டிய நிலை ஏற்படாது.

7. உங்கள் திருநங்கையர் ஆவணக் காப்பகம் பற்றிக் கூறுங்கள்?

நான் சென்னையில் இருந்தபோது எழுத்து மேல் ஆர்வம் இருந்தது. திருநங்கையாக மாறியதும் எழுதுவதற்கு வாய்ப்புக் கிட்டியது. சு.சமுத்திரம் அய்யா, நூருல்லா; போன்ற நண்பர்கள் கிடைத்தார்கள். திருநங்கையர் குறித்து முன்பு வெளிவந்த சில திரைப்படங்கள், நூல்களில் திருநங்கையர் குறித்து புனைவாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உண்மைக்கும் அச்செய்திக்கும் இடைவெளி இருந்தது. இதைப் போக்குவதற்குத் திருநங்கையர் சம்பந்தமான ஆவணத்தை நாம் உருவாக்க வேண்டும் என்று எண்ணினேன். கடந்த ஏழு, எட்டு வருடமாகத் திருநங்கையர் பற்றிய நாளிதழ் செய்திகள், புத்தகங்கள் முதலியவற்றைச் சேகரிக்கத் துவங்கினேன். இன்று ஓரளவு சேகரிக்கப்பட்டுள்ளது. 'ஆவணம்' என்பது ஒரு சமூகத்தின் அடையாளம். பல வருடங்கள் கழித்துத் திருநங்கையர் சமூகம் எப்படி இருந்தது? என்ற கேள்விக்கு நம் ஆவணக் காப்பகம் பதில் சொல்லும். ஆய்வு மாணவர்கள், குறும்படம் எடுப்போர் என்று பலர் பயன்படுத்துகின்றனர். வருங்காலத் தலைமுறையினருக்குத் திருநங்கையர் பற்றிய நல்ல புரிதல்களை இக்காப்பகம் ஏற்படுத்தும்.

8. நீங்கள் உங்கள் திருநங்கையர் சமூகத்தில் சடங்குமுறைகளை வரவேற்பவரா? பின்பற்றுகிறீர்களா?

நிச்சயம் வரவேற்கிறேன். ஒவ்வொரு இனத்தின் அடையாளம் சடங்குகள். முன்பு நான் கூவாகம் செல்வேன். யாரேனும் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் சென்று பார்ப்பேன். இதில் மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. இதை முழுவதுமாகப் பின்பற்ற தற்போதைய சூழல் ஒத்துழைக்கவில்லை.

9. திருநங்கையர் இன்னும் பெற வேண்டிய சமூக உரிமைகள் குறித்து உங்கள் கருத்து யாது?

திருநங்கையரை மாற்றுப் பாலினமாக அங்கீகரிப்பது முக்கியமான ஒன்று. நம் சமூகத்தில் ஆண், பெண் பாலினம் மட்டும் அல்ல; மாற்றுப் பாலினத்தையும் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். திருநங்கையருக்கான உரிமைகள் முற்றிலும் கிடைக்கப் பெறவில்லை. 'ஆராதனா' என்ற திருநங்கையின் சான்றிதழ் ஆண் பெயரில் உள்ளது. அதைத் திருநங்கையாக மாற்ற 7 மாதம் வரை போராட வேண்டி உள்ளது. வளர்ந்த பிறகு உள்ள திருநங்கையரைப் பேசுகிறோம். ஆனால் பதினெட்டு வயதிற்குக்கீழ் திருநங்கையாக மாறும் குழந்தைகள் பற்றிப் பேசப்படவில்லை. அறுவைச் சிகிச்சை முறையாக செய்யவில்லை. தமிழ்நாட்டில் எங்காவது ஓரிரு இடத்தில் இருந்தால் போதுமா? அறுவைச் சிகிச்சை என்றால் பாலின உறுப்பு நீக்கம் மட்டும் அல்ல. ஹார்மோன் தெரபி, லேசர் ட்ரீட்மெண்ட், மார்பக வளர்ச்சி, வாய்ஸ் தெரபி இப்படியான முழுமையான சிகிச்சைமுறை செய்யப்படவில்லை. பயணங்களில் எந்த இருக்கையில் நாங்கள் அமர்வோம்? கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு என்பது போன்ற கேள்விகள் பல உள்ளன.

10. ஊடகங்களின் பார்வையில் திருநங்கையர் எவ்வாறு பார்க்கப்படுகின்றனர்?

முன் உள்ள நிலைமை தற்போது மாறி உள்ளது. அருவி, வீரப்பன் போன்ற படங்களில் முழுமையான கதாபாத்திரங்களாக வலம் வருகின்றனர். சின்னத் திரையில் அங்கீகாரம் இருப்பினும், இன்னும் கொச்சைப்படுத்தும் நிலையும் உள்ளது. இவை முற்றிலும் மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

11. ஒரு திருநங்கை படைப்பாளராக நீங்கள் சமூகத்திற்கும், உங்கள் சமூகத்திற்கும் கூற வருவன யாவை?

'எல்லோரும் மனிதர்கள்' என்ற எண்ணம் நம் அனைவருக்கும் வேண்டும். சக மனிதனைச் சமமாக நோக்க வேண்டும். குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ள வேண்டும். பயணங்களில் அருகில் அமரத் தயங்குவார்கள். இதை நானே அனுபவித்துள்ளேன். திருநங்கைகள் வேலை செய்தால் என்ன? என்று கேட்கும் சமூகம் வேலை கொடுக்கத் தயாராக இல்லை. இன்றும் வீடு கொடுப்பதற்குத் தயங்குகின்றனர். இந்நிலை மாற வேண்டும். திருநங்கையரிடம் சொல்ல வருவது மாற்றுப் பாலினம் என்பது குறை அல்ல; எல்லா திறமைகளும் நமக்கும் உள்ளன. அதை நாம் செயல்படுத்த வேண்டும். யாருக்காகவும் நாம் நம்மை விட்டுக் கொடுக்கக் கூடாது. நாம் நாமாக இருக்க வேண்டும்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: திருநங்கை நர்த்தகி நடராஜ் நாள்: 04.11.2017
(நடனக் கலைஞர்)
இடம் : திருநெல்வேலி நேரம்: இரவு 07.57 மணி

1. உங்களுடைய வாழ்க்கை வரலாறு, தன் வராற்று நூலாக நூலாக்கம் பெறுவது எப்போது?

நிச்சயமாக, அதை நான் கண்டிப்பாக விரைவில் பதிவு செய்யப் போகிறேன். என்னைப் பொறுத்த அளவில் ஒரு நடனக் கலைஞராக என்னுடைய வாழ்க்கைப் பயணம் அமைந்துள்ளது. அதில் என் பெண்மையோடு இழைத்து என் நடனக்கலை பற்றிய அழகான பின்னலாக அந்தப் பதிவை நான் விரைவில் வெளிக் கொணர்வேன். 'கடவுளின் காதலி' என்ற பெயரில் வெளியிடுவதற்கான எழுத்து வேலைகளைதான் தற்போது செய்து வருகின்றேன்.

2. திருநங்கையர் ஈடுபடக்கூடிய பணிகள் குறித்து உங்கள் கருத்து யாது?

திருநங்கை என்கிற அடையாளத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றதே அவர்கள் பெற்றோர்கள்தான். சமூகத்தில் போராடுவது அவசியம். சமூகத்தில் நாங்களும் ஓர் அங்கம்தான் என்று சொல்வதற்கு நாங்கள் போராடுகிறோம். சமூகத்தால் விலக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட இழிநிலை வேலைகளான பிச்சையெடுத்தல், பாலியல் தொழில் செய்தல் போன்றவற்றை ஆண், பெண் செய்வது தவறு என்றால் திருநங்கையர் செய்வதும் தவறே. யாரையும் சார்ந்து வாழக்கூடாது. திருநங்கையர் முயற்சி செய்து மேல்நிலைக்கு வர வேண்டும்.

3. இன்றைய சூழலில் குடும்ப அமைப்பில் திருநங்கையருடைய நிலைப்பாடு பற்றி உங்கள் கருத்து யாது?

திருநங்கையர் பாரமானவர்கள் என்று குடும்பத்தவர் எண்ணுகின்றனர். திருநங்கைகள் குடும்பத்தினருடைய அங்கீகரிப்பிற்காக ஏங்கக் கூடியவர்கள். திருநங்கையாக மாறும் ஒரு குழந்தையைக் குடும்பம் ஏற்றுக் கொள்ளாத சூழலில், ஆண்டுகள் கழிந்து அந்தத் திருநங்கையர் சம்பாதிக்கும் பணத்தை மட்டும் பெறக்கூடிய குடும்பங்களும் உள்ளன. மீண்டும் ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா?

இழந்த குழந்தைப் பருவம் மீண்டும் கிடைக்கப் போகிறதா? எதற்காகப் பணம் கொடுக்கிறார்கள்? ஏதாவது ஒரு இணைப்பின்மூலமாகத் தன் பந்தங்களோடு இருக்கின்றோம் என்ற மனஉணர்வு. இனி வருங்கால கட்டங்களில் இந்நிலை மாறும். திருநங்கையரை அவர்கள் குடும்பமும் இச்சமூகமும் ஏற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

4. உங்களுடைய குரு நடனக் கலைஞர் கிட்டப்பா குறித்துக் கூறுங்கள்?

கிட்டப்பாப்பிள்ளை அவர்கள் ஒரு சித்த புருஷர். எனக்குக் கடவுளாகப் பார்த்து ஒரு தோழியை சக்திய அனுப்பினாரோ என் குருவையும் எனக்குக் கடவுள்தான் காட்டினார். என் வாழ்வில் மிக உயர்ந்த நிலை அடைய பதினைந்து வருட குருகுல வாழ்க்கையில் அவர் என்னை அழகாகப் பதப்படுத்தினார். திட்டமிட்டுச் செய்தல், கட்டுக் கோப்பு, பதற்றமின்மை இவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தது அவர் தான். அவர் என் திறமையை மட்டும் பார்த்தவர். பாலின வேறுபாட்டைப் பார்க்காதவர். அதைப் பெரிதுபடுத்தவில்லை. அங்கு என்னை அதிசயப் பொருளாகவே பார்த்தார்கள். ஏனைய புறச் சிந்தனைகள் என்னைச் சூழாத காலம் அது.

5. திருநங்கையரின் திருமண வாழ்வு குறித்து உங்கள் கருத்து யாது?

திருநங்கையருடைய அன்பு மிகப் புனிதமானது. மிக அழுத்தமானது. அப்பழுக்கல்லாதது. என்னைப் பொறுத்தமட்டில் தோல்வி என்பது எனக்கில்லை. ஆனால் தோல்வி என்று நான் யோசித்தால் அது திருமண வாழ்க்கையாகத்தான் இருக்கும். அது என்னோட தோல்வி அல்ல. ஏற்றுக் கொள்ள மனம் இல்லாத அந்த ஆணின் தோல்வி.

6. நீங்கள் திருநங்கையாக மாறியபோது எதிர்கொண்ட சிக்கல்கள் யாவை?

எனக்கு இயல்பாக எங்களை நிலைநிறுத்துவதற்கான போராட்டங்கள்தான் இருந்தது. 'திருநங்கை' என்பது எனது ஆன்மாவிற்கான ஒரு அடையாளம். அது எனக்கான ஒரு தளம், கனம். நான் அதில் பயணித்து மகிழ்கிறேன். நான்

திருநங்கையாக இருப்பதில் எனக்குச் சிக்கல் இல்லை. உங்களுக்குத்தான் சிக்கல். நான் விரும்பி இதை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அவ்வாறு இருக்க கேலி, கிண்டல் இவைகளைத்தான் நாங்கள் இன்றுவரை கடக்க வேண்டியுள்ளது.

7. **திருநங்கையர் சமூகத்தில் நடக்கின்ற சடங்கு முறைகள் குறித்து உங்கள் கருத்து யாது? அவற்றில் உங்களுக்கு உடன்பாடு உள்ளதா?**

எனக்கு அதைப்பற்றி முழுமையாகத் தெரியாது. நான் அந்த அமைப்பில் இணையவில்லை. ஆனால் எல்லோருடனும் கலந்து கொள்வேன். அந்தச் சடங்கு முறைகளை முழுமையாகப் பின்பற்றவில்லை. அதற்கான சூழலும் இல்லை. ஆனால் எனக்கு உடன்பாடு உண்டு. எல்லாச் சமூகத்துக்கும் உள்ள சடங்குகள் போலத்தான் எங்களது சமூகச் சடங்குகளும் உள்ளன. நிழல் மாதிரியான வாழ்க்கையில் தனக்குக் கணவன் இருப்பதாகவும், அவன் இறப்பதாகவும் நினைத்துத் தாலி அறுக்கின்றனர். திருநங்கையர் நித்ய சுமங்கலிகள். களங்கப்படுத்த முடியாதவர்கள். புனிதமானவர்கள்.

8. **பொருளாதார ரீதியாக, பணி ரீதியாக உயர் தளத்தில் இருக்கும் திருநங்கையர் மீதான சமூகப் பார்வை மாறியிருக்கின்றதா? இல்லையா?**

மாறவில்லை. காலைமுதல் இரவுவரை அவரவர் சூழலுக்கு ஏற்ற சிக்கல்களைத் திருநங்கையர் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இது மாறணும். இவர்களும் நம்மைப் போன்ற ஒரு உயிர் என்று நினைத்தால் மாறும்.

9. **கேரளாவில் உள்ள திருநங்கையருக்கான தனிப்பள்ளி குறித்து உங்கள் கருத்து என்ன? ஆதரிக்கிறீர்களா?**

இப்போது நடந்த, நடக்கிற அவலங்களுக்கு இடையில் இப்படி ஒரு சூழல் உருவாகியிருப்பது வரவேற்கக் கூடியதுதான். மாற்றுத் திறனாளிகள் பள்ளிக்கூடம் இருக்கின்றதே அதுபோல் இதை எடுத்துக் கொள்ளலாம். நான் அதை வரவேற்கின்றேன்.

10. **ஊடகங்களில் திருநங்கையரைச் சித்திரிக்கும் போக்கு குறித்து உங்கள் கருத்து யாது?**

என்னுடைய வெற்றியில் ஊடகங்களின் பங்களிப்பு நிறைய இருக்கு. ஊடகங்களுக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான செயல்கள் தெரியவரின் ஊடகங்கள் பார்வையில் நாம் விபரீதமாக வருவதற்கு வாய்ப்பில்லை. எனக்கு அதுதான் அனுபவம்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: திருநங்கை பத்மினி பிரகாஷ் நாள்: 20.01.2018
(செய்தி வாசிப்பாளர்)

இடம் : கோயம்புத்தூர் நேரம்: மாலை 03.45 மணி

1. உங்கள் குடும்பம் பற்றிக் கூறுங்கள்.

எட்டு வயதில் என் பெண்மையை உணர்ந்தேன். பதின்மூன்று வயதில் என் தாயாரை இழந்துவிட்டேன். எனக்கு தாய்தான் சகலமும் நினச்சுட்டு இருந்த உலகத்துல என் தாய் இல்லாதத என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியல. என்னால வீட்டுல இருக்கவும் முடியல. எனக்கான உலகம். எனக்கான சமூகம் தேடி என் தோழி ஐஸ்வர்யாவுடன் பாம்பே போனேன். என்னுடைய பதினெட்டு வயதில் என் உடல் ரீதியா மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அறுவை சிகிச்சை மூலம் ஆணுறுப்பை முழு பொண்ணாக மாறினேன்.

2. ஊடகத் துறையில் தங்கள் பணி அனுபவம் குறித்து கூறுங்கள்.

இந்தியாவில் முதல் திருநங்கை செய்தி வாசிப்பாளராக, மட்டுமல்லாமல் உலகின் முதல் திருநங்கை செய்திவாசிப்பாளர் என அடையாளப்படுத்தப்பட்டேன். உலக நாடுகளும் பகிரங்கமாக அதை அறிவித்தது. பிழையில்லாம தமிழ் மொழி வாசிக்க சிறுவயதிலே பழகிக் கொண்டேன். பணி இடத்தில் முதலில் ஏகோபித்த வரவேற்பு கிடைக்கல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்னைப் பற்றிய புரிதல் இல்லை. அந்த இடத்தில் என்னை உணர்த்த வேண்டிய கட்டாயம் இருந்தது. செய்தி வாசிப்பாளராகி ஐந்து ஆண்டுகள் நிறைவாகிறது. இன்று நா இல்லாம அவர்கள் வீட்டு விசேஷங்கள் இல்ல எனும் அளவிற்கு ஒரு நிலை மாறி இருக்கு.

3. திருநங்கையருடைய திருமண வாழ்வு பற்றிய கருத்து குறித்தும், உங்கள் திருமண வாழ்க்கை குறித்தும் கூறுங்கள்.

பொதுவாகவே திருமண வாழ்க்கையில் திருநங்கையர் ஆண்களிடம் ஏமாந்துதான் போயிருக்கிறார்கள். தன்னைப் பெண்ணாக எண்ணும்போது எதிர்ப்பாலினமான ஆண் பாலினத்தைத்தான் தேடுவார்கள். சூழ்நிலைக்குத் தக்கவாறு திருநங்கையரைப் பயன்படுத்தித்தான் ஆண்கள் வாழ்கிறார்கள்.

ஆனால் அதில் நான் கொடுத்து வைத்தவள் என்றுதான் சொல்ல வேண்டும். என்னுடைய திருமணம் எத்தனையோ போராட்டங்களுக்கு மத்தியில்தான் நடைபெற்றது. அவர்களின் குடும்பமோ, என் குடும்பமோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும், எல்லா பிரச்சனைகளையும் தாண்டி எங்களாலயும் வாழ்ந்து சாதித்துக காட்ட முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்க்கையைத் துவங்கினோம். பத்மினிக்குப் பின்னாடி பிரகாஷ்தான் இருக்கிறார். திருமணம் ஆகிய பதின்மூன்று வருடம் ஆகிவிட்டது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் அர்த்தமே அடுத்த சந்ததியினை உருவாக்குவதுதான். தாய் தந்தை ஆக வேண்டும், ஒரு 'குடும்பம்' என்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு ஆண் குழந்தையைத் தத்தெடுத்துள்ளோம். எங்கள் குழந்தையா வளர்க்கிறோம். குழந்தைக்கு ஐந்து வயது ஆகப் போகிறது. என்னை என் குடும்பம் வெறுத்து ஒதுக்யீகியயதுது. இன்றைக்கு நானே ஒரு குடும்பத்தை சிருஷ்டித்துள்ளேன்.

4. **திருநங்கையாக மாறிய பின் உங்களைக் குடும்பமும் சமூகமும் எதிர்கொள்ளும் விதம் பற்றிக் கூறுங்கள்.**

குடும்பம், சமூகம் என இரண்டு பக்கங்களிலும் இன்னுமே அந்தப் புரிதல் இல்லை. என் உணர்வுகளையும் என் பாலினத்தையும் நான் தான் அடையாளப்படுத்த வேண்டும். நீங்க பெண். உங்கள நான் ஆண் என்றால் உங்கள் மனது எவ்வளவு வலிக்குமோ, அதை ஏற்றுக் கொள்ள மறுக்குமோ அதுபோல் தான் எங்களுக்கும். சமூகத்தில் உருவத்திற்குக் கொடுக்கிற மதிப்ப உணர்வுகளுக்குக் கொடுங்க என்றுதான் கேட்கின்றோம்.

5. **உங்கள் திருநங்கையர் சமூகத்தின் சடங்கு முறைகளை நீங்கள் வரவேற்கிறீர்களா? பின்பற்றுகிறீர்களா?**

பொதுவாக சடங்கு, சம்பிரதாயங்கள் என்பது மனிதர்களை ஒருங்கிணைப்பதற்கான ஒன்றாக நினைக்கின்றேன். நான் அதை

வரவேற்கின்றேன். இதில் கலந்து கொள்ளும் போது மகிழ்ச்சி கிடைக்கிறது. நானும் கலந்து கொள்வேன். ஏனென்றால் ஒரு சேர திருநங்கைகளை அங்குதான் பார்க்க முடியும். எங்கள் சமூகத்துக்குள் இருக்கிற பிரச்சனைகள் பற்றிப் பேச முடியும். அதற்கான தீர்வுகளை எடுக்க முடியும். வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் நான் எங்கள் சமூகம் சார்ந்த சடங்குகளில் கலந்து கொள்வேன். என்னோட அம்மா (குரு) பேரு நளினி. அம்மா என் கணவர கூட அவங்க தம்பியா தத்து எடுத்துருக்காங்க.

6. நீங்கள் சமூகத்திற்குக் கூற வரும் கருத்துக்கள் யாது?

கடந்தவைகள் கடந்தவைகளாகவே இருக்கட்டும். நடப்பவைகள் நல்லவைகளாகவே இருக்கட்டும். திருநங்கையரை இச்சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. திருநங்கையர் சமூகத்திற்கு முழுமையான கல்வியறிவு கொடுக்க வேண்டும். அவர்கள் யார் என்ற விழிப்புணர்வை அரசு இச்சமூகத்திற்கு வழங்க வேண்டும். திருநங்கையருக்கு வேலை வாய்ப்பு என்பதும் பூஜ்ஜியமாகத்தான் இருக்கு. இந்தச் சமூகத்தில் பிச்சையெடுப்பதும், பாலியல் தொழில் செய்வதும் எங்களுக்கான கேவலம் என்று சொல்ல முடியாது. இது இந்த சமூகத்திற்கான, அரசிற்கான கேவலம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வர எங்களை இந்தச் சமூகம் அனுமதிப்பதே இல்லையே. பிறகு எப்படி எங்களுக்கான வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்க முடியும். எங்களாலும் இந்தச் சமூகத்தில் வாழ முடியும். நல்ல மனிதர்களாக வலம் வர முடியும். அந்த வாய்ப்பை இந்தச் சமூகம்தான் எங்களுக்கு வழங்க வேண்டும்.

7. உங்கள் திருநங்கையர் சமூகத்திற்கு நீங்கள் செய்துள்ள தொண்டுகள் பற்றிக் கூறுங்கள்.

தொண்டு என்பதைவிட அத நான் என் கடமையா கருதறேன். நிறைய திருநங்கைகள் படிக்கறதுக்கு உத்வேகமா அதற்கான வழிகாட்டுதல செய்கிறேன். படித்த திருநங்கையருக்கு வேலை வாய்ப்பிற்கு முயற்சி செய்கிறேன். எங்க

திருநங்கை சமூகத்திற்கு முதல்ல வீடு கூட கொடுக்க முன்வர மாட்டார்கள். அந்நிலையில் நான் சென்று கேட்டு வாங்கிக் கொடுத்திருக்கின்றேன்.

8. **திருநங்கையர் ஈடுபடக்கூடிய மாற்றுத் தொழில்கள் பற்றி உங்கள் கருத்து யாது?**

மாற்றுத் தொழில்கள் வழங்க இந்தச் சமூகமும், அரசும் முன்வர வேண்டும். பத்திரிக்கைகள்ல வேலைக்கு ஆண் பெண் தேவைன்னு கொடுக்கறாங்க. ஏன் டி.ஜி. (டிரான்ஸ் ஜென்டர்) தேவைன்னு கொடுக்கலாமே? ஏன் கொடுக்கிறது இல்ல. திருநங்கையருக்கான திறமையின் அடிப்படையில், அவர்கள் கல்வியின் அடிப்படையில் சமூகம் வேலைவாய்ப்பை வழங்கும் போது அதில் பல திருநங்கையர் சாதிப்பார்கள், தங்கள் திறமைகளை வெளிக்காட்ட திருநங்கையர் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்க இச்சமூகம் தயாரா?

9. **ஒரு சில திருநங்கையருடைய இழிவான (சாபமிடுதல்) நடவடிக்கைகள் குறித்து உங்கள் கருத்து யாது?**

சிறைச்சாலையில் ஆண்கள் தான் தண்டனைக் கைதிகளாக அதிகம் உள்ளனர். அதற்காக ஒட்டுமொத்த ஆண்களைத் தவறாகக் கூற முடியுமா? ஒரு பெண் தான் பெற்ற குழந்தையை எரித்துக் கொன்றாள் என்று செய்தி வாசித்தேன். அதற்காக ஒட்டு மொத்தப் பெண்குலத்தையே தவறாகக் கூற முடியுமா? இத்தன பேருககு மத்தியில தனக்கான வாழ்வாதாரத்தைத் தேடுவதிலும் வயிற்றுக்கும் வாய்க்கும் நடக்கற போராட்டத்துல, நடக்கற சண்டைய நாம பெரிசு பண்றோம்.

அதற்கான வாய்ப்புகள நாம அவங்களுக்கு கொடுத்துவிட்டு இந்த மாதிரி அவங்க பண்றாங்கன்னு சொன்ன அது நியாயம். எந்த வாய்ப்பும் தர மாட்டோம், உங்களுக்கு வீடு தர மாட்டோம், கல்வி தர மாட்டோம், வேல தர மாட்டோம், நீங்க ரோடுல நடந்தா கிண்டல் பண்ணுவோம், எல்லாம் நாங்க பண்ணுவோம். ஆனா நீங்க எதுவுமே பேசக் கூடாதுன்னா, நாங்க ஒண்ணும் செத்த சவம் இல்லையே!

10. உங்களைப் பற்றிய தன் வரலாற்று நூல் எப்போது வெளிவரும்? உங்களுடைய எதிர்காலக் குறிக்கோள் என்ன?

நிச்சயமா, பாதி எழுதியிருக்கேன். இன்னும் எழுத வேண்டும். அந்தக் காலம் வெகு தொலைவில் இல்ல; கூடிய விரைவில் நூலராக வெளிவரும். இத்தனை வருட காலம் தொட்டு நான் பயணித்த வாழ்க்கையில் ஒரு நாட்டிய தாரகையா, ஒரு வீணை ஆசிரியரா, ஒரு நடன ஆசிரியரா, அட்வகேசி டிரெய்னரா, 2007-இல் அழகுராணி பட்டம் பெற்றவளாக, 2009-இல் திருநங்கை அழகியாக 'மிஸ் இந்தியா விருது' வாங்கியவளா பரிணமித்திருக்கிறேன். கர்ப்பப்பை புற்று நோய், ஆசவனவாய் புற்று நோய், மார்பக புற்றுநோய் குறித்துப் பெண்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கொடுத்திருக்கிறேன். இப்போ 'பொதிகை' தொலைக்காட்சியிலேயும் பணிபுரிகிறேன். ஒரு குழந்தைக்கு நல்ல தாயா இருககேன். என் எதிர்காலக் குறிக்கோள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எங்கள் இனத்தை முன்னேற்றுவதற்கான ஒரு கட்டமைப்பை எனக்குள்ளே நான் உருவாக்கிக்கணும். அதற்கான உத்வேகத்தோட, ஊக்கத்தோட சவால்கள எதிர்கொள்ளணும். அதுதான் எனக்கான தலையாய கடமை. இன்னொன்று என் குழந்தையை ஒரு நல்ல குடிமகனான, சரியான அடையாளத்தோட, ஒரு அங்கீகாரத்தோட கொண்டு வரணும். ஒரு திருநங்கை வளர்த்த குழந்தை இந்த சமூகத்துல ஒரு நல்ல மனுஷனா மிளிரணும். இதுதான் என்னுடைய குறிக்கோளா நான் கருதுகிறேன்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்



நேர்காணல் அளிப்பவர்: திருநங்கை ப்ரீத்தி நாள்: 14.11.2017

இடம் : திருநெல்வேலி நேரம்: இரவு 08.50 மணி

1. **உங்களைப் பற்றிக் கூறுங்கள்.**

   என் பேரு ப்ரீத்தி. அப்பா வச்ச பேரு 'பீட்டர் அந்தோணி'. 1-ஆம் வகுப்பு தான் படிச்சேன். என் 13 வயசுல வீட்டு விட்டு வெளியே வந்தேன்.

2. **உங்கள் தொழில் பற்றிக் கூறுங்கள்.**

   கடை கேட்பேன். டான்ஸ் போவேன். ராஜா ராணி ஆட்டம், கணியான் ஆட்டம் ஆடுவேன். துஷ்டி வீட்டுக்கு ஒப்பாரிக்கு அழைத்தால் போவேன். பாலியல் தொழில் முன்னாடி செஞ்சேன். இப்போ போறது இல்ல.

3. **நீங்கள் சுய தொழில் செய்ய நினைத்தது உண்டா?**

   கைத்தொழில் பண்ணணும்னு ஆசதான். ஏதாவது கட கேட்டா குடிகாரப் பசங்க வந்து தொந்தரவு கொடுப்பாங்க. நாங்க ஏதாவது பொருள் வித்தா யாருங்க வாங்கறாங்க. தப்பா நினைக்காதீங்க. எங்கள பத்தி ஆய்வு பண்ணலன்னா நீங்க எங்களைத் தப்பாதான பாத்துருப்பீங்க. ஹோட்டல்லகூட வேலை பார்த்தேன். அங்க தப்பாதான் பாத்தாங்க. பிடிக்கல. நின்னுட்டேன்.

4. **நீங்கள் திருமணம் ஆனவரா? திருமணம் பற்றி உங்கள் கருத்து யாது?**

   ஆமா. எனக்கு ஒரு பந்தி இருக்காரு. அவருனா எனக்கு உசுரு. அவர் திருமணம் ஆனவர்தான். அவருக்குக் குடும்பம் குழந்தைங்க இருக்கு. நாங்க மனதளவுல புருஷன் பொண்டாட்டியா 14 வருஷமா வாழறோம். மத்தபடி நிறைய ஆண்கள் எங்கள மாதிரி ஆளுகள ஏமாத்தத்தான் செய்றாங்க.

5. **நீங்கள் நிர்வாணம் செய்து உள்ளவரா? பாலின மாற்றத்தை எப்பொழுது உணர்ந்தீர்கள்?**

13 வயசுல முழுசா உணர்ந்தேன். நான் தாயம்மா நிர்வாணம் செஞ்சுக்கிட்டேன். என் தோழிக்குச் செய்யப் போன இடத்துல மாதா அருள் வந்து மதினி ரோஜா எனக்கு கைபோட்டா (நிர்வாணம் செய்வது)

6. உங்கள் சடங்கு முறைகள் பற்றியும் 'ஜமாத்' பற்றியும் கூறுங்கள்?

நாங்க சந்தோஷமா இருக்கறது இந்த மாதிரி சடங்குகள் கொண்டாடும் போது தான். தத்துச்சடங்கு, பாலூத்தும் சடங்குன்னு நிறைய இருக்கு. அப்போலேர்ந்து இப்ப வரை எங்க சமூகக் கட்டுப்பாடுகள மீறனும்னு நாங்க நினைப்பது இல்ல. அப்படி மீறினா எங்க ஜமாத்லேர்ந்து எங்கள விலக்கி வச்சுருவாங்க. எனக்குக் குரு இருக்காங்க, பேரு ஜெயாம்மா. எனக்கு மூணு சேலா இருக்காங்க.

7. உங்கள் குடும்பத்துடன் வாழ்வது மகிழ்ச்சியா? உங்கள் திருநங்கையர் சமூகத்துடன் வாழ்வது மகிழ்ச்சியா?

எங்கள எங்க குடும்பம் ஏத்துக்கல. எங்க உணர்வுகள புரிஞ்சுக்கல. பொய்யா வாழ வேண்டாம்னுதான் வீட்டவிட்டு வெளிய வந்து எங்க சமூகத்தோடு சேர்ந்தேன். அதுனால எங்க மக்களோட இருக்கறதுதான் எனக்கு சந்தோஷம்.

8. நீங்கள் அரசிடமிருந்து உதவிகள் பெற்றுள்ளீர்களா?

ஆமா. அரசு உதவிகள் செய்யுது. இன்னும் கூட தனிய ரேஷன் கார்டு வாங்கறது போராட்டமாத்தான் இருக்கு. இங்க நரசிங்கநல்லூர்ல 29 வீடுகள் கட்டித் தந்து இருக்காங்க. 30, 40 பேர் இருக்கோம். எங்க கோரிக்கையத் தீர்க்கறதுக்கு மாவட்ட கலெக்டர் மீட்டிங்-லாம் நடத்துறது கண் துடைப்புக்குன்னுதான் நான் சொல்லுவேன்.

9. நீங்கள் அரசிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன?

எங்க சமூகத்துக்கு எல்லா வகையிலும் நல்லது செய்யணும் இந்தக் கவர்ன்மென்ட். அப்படிச் செய்யற எல்லா நல்ல விஷயங்களும் எங்க மக்கள் எல்லாருக்கும் போய்ச் சேரணும். நாங்களும் கௌரவமா வாழ ஏதாவது வேலயும் குடுக்கணும்.

10. நீங்கள் இந்தச் சமூக மக்களிடம் எதிர்பார்ப்பது என்ன?

நாங்களும் உங்கள மாதிரி உணர்வுள்ள ஜீவனுங்கதான்னு நீங்க எங்கள ஏத்துக்கணும். பத்து வயசு பையன்கூட எங்களக் கேலி பண்ணறான். இந்த நில மாறணும். இந்த நில மாறணும்னா, முதல்ல இந்தச் சமூகம் மாறணும்.

நேர்காணல் அளிப்பவர்: திருநங்கை இரகசியா நாள்: 11.02.2018
(நடனக் கலைஞர்)
இடம் : திருச்செந்தூர் நேரம்: காலை 11.00 மணி

1) உங்களைப் பற்றி கூறுங்கள்?

என் பேரு இரகசியா. முன்னாடி உள்ள பேரு இராமலிங்கம். ஏழாம் வகுப்புதான் படிச்சிருக்கேன்.

2) உங்கள் தொழில் பற்றிக் கூறுங்கள்.

கோவில் கொடை விழாக்கள், மற்ற விழாக்களில் நடனம் ஆடுவேன். சமையல் வேலைக்குப் போவேன். கடைல வசூலுக்குப் போவேன். பாலியல் தொழிலும் செய்வேன். விருப்பத்திற்காக போகல, பொருளாதாரத் தேவைக்காக போறேன்.

3) நீங்கள் சுயதொழில் செய்ய நினைத்தது உண்டா?

சுயதொழில் செய்ய விருப்பம்தான். நான் நல்ல மேக்கப் போடுவேன். கொஞ்சநாள் பார்லர்ல வேல பார்த்தேன். தனியா துவங்குவதற்கு முறையா படிக்கல. சான்றிதழ் இல்ல. இந்தக் காரணங்களால என்னால சுயதொழில் செய்ய முடியல.

4) நீங்கள் திருமணம் ஆனவரா? திருமணம் பற்றி உங்கள் கருத்து யாது?

நான் ஒரு பையன விரும்பி காதலிச்சு திருமணம் செஞ்சேன். என் வீட்லேயும் அவங்க வீட்லேயும் ஒத்துக்கல. திருமணம் செஞ்சு ஏழு வருஷம் வாழ்ந்தோம். நிறைய பிரச்சனை போலீஸ் ஸ்டேசன்லாம் போனோம். ஊர்க்கூட்டம் கூட போட்டாங்க. நான் யோசிச்சேன். என்னால அவருக்கு எந்த வித பிரயோஜனமும் இல்ல. சந்தோஷமா வைக்க முடியுமே தவிர குழந்தைப் பெத்துக்கொடுக்க முடியாது. என் தலைமுறை என்னோட போகட்டும். அவரு தலைமுறை அப்படி போகக்கூடாது. அதுனால அவரவிட்டுப் பிரிஞ்சுட்டேன். இப்போ அவரு ஒரு நல்ல பொண்ண கல்யாணம் பண்ணி வாழறாரு. குழந்தை கூட இருக்கு. மற்றபடி திருநங்கையர் திருமணம் பெரும்பாலும் நிலச்சு நிக்கறது இல்ல.

5) நீங்கள் நிர்வாணம் செய்து உள்ளவரா? பாலின மாற்றத்தை எப்பொழுது உணர்ந்தீர்கள்.

ஆறாம் வகுப்பு படிக்கறப்பவே கொலுசு கேட்டு அடி வாங்கினேன். கொலுசு போட்டுகிட்டு போயி ஸ்கூல்லயும் திட்டு வாங்கினேன். 2004- இல் மருத்துவமனைல நிர்வாணம் செஞ்சுகிட்டேன்.

6) திருநங்கையாக பிறந்தது குறித்து வருந்தி உள்ளீர்களா?

முன்னாடி வருந்திருக்கேன். இப்போ என் குடும்பத்துல, அக்கம்பக்கத்துல என்ன ஏத்துக்கறாங்க. எல்லா விஷேசத்துக்கும் நான் வரணும்னு ஆசபடறாங்க. அடுத்தப்பிறவி இருந்தா அதுலயும் திருநங்கையா பொறக்கத்தான் நான் ஆசப்படறேன்.

7) உங்கள் குடும்பத்துடன் வாழ்வது மகிழச்சியா? உங்கள் திருநங்கையர் சமூகத்துடன் வாழ்வது மகிழ்ச்சியா?

எங்க திருநங்கையர் சமூகத்தோடு வாழறதுதான் மகிழ்ச்சி. ஏன்னா, எங்கள எங்கக் குடும்பம் ஏத்துக்கல. அப்படி ஏத்துருந்தா நாங்க வீட்ட விட்டுவெளியே வந்து பிச்சை எடுத்துருக்க மாட்டோம். இப்போ பேசறாங்க. நான் நிறைய உதவிகள் செய்வேன். பண அடிப்படைலதான் பேசறாங்க. பாசம் இருந்திருந்தா என்ன விரட்டியிருக்க மாட்டாங்களே.

8) நீங்கள் அரசிடமிருந்து உதவிகள் பெற்றுள்ளீர்களா?

ஆமா, வாங்கிருக்கேன். குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, அடையாள அட்டை வாங்கிருக்கேன். பேங்கல அக்கவுண்ட் இருக்கு. நான் நடனக் கலைஞர்; அதுனால என்னைப்போல உள்ளவங்களுக்கு அரசு நலவாரியம் மூலமா திருநங்கையருக்கான ஓய்வு ஊதியத் தொகையாக மாசம் ஆயிரம் ரூபாய் வாங்கறேன்.

9) உங்களை இந்தச் சமூகம் எதிர்கொள்ளும் விதம் யாது?

பத்து வருஷத்துக்கு முன்னாடி நிறைய அவமானங்கள சந்திச்சு இருக்கேன். இப்போவும் கேலி கிண்டல்கள் இருக்கு. ஆனா குறஞ்சு போயிருக்கு. ஆசீர்வாதம் வாங்கறாங்க. காசு கொடுக்கறாங்க. உங்கள மாதிரி எல்லோரும்

எங்கள ஏத்துக்கணும். புரிஞ்சுக்கணும்னு நான் ஆசப்படறேன். ஏத்துப்பாங்கன்னு நம்பறேன்.

10) திருநங்கையர் குடும்பத்திற்கும், இந்தச் சமூகத்திற்கும் நீங்கள் கூறவருவன யாவை?

உங்கக் குடும்பத்துல ஒரு திருநங்கை இருக்காங்கன்னா, அவங்கள வெளியே விரட்டாதீங்க. அவர்களும் உங்க வயத்துல பொறந்தவங்கதான். இப்படி பொறந்தது அவங்க தப்பு இல்ல. சமூகத்துல உள்ள மக்களும் உங்ககூட பொறந்தவங்களா எங்கள பாருங்க. அதுவே போதும். வேலைவாய்ப்பு எதுனாலும் கொடுங்க நாங்க செய்யக் காத்துகிட்டு இருக்கோம்.

நேர்காணல் அளிப்பவர் கையொப்பம்